ராபின் ஷர்மா

The MONK Who Sold His FERRARI

NOW IN TAMIL

தனது பொக்கிஷத்தை விற்ற துறவி

உங்கள் கனவுகளை நனவாக்குவது மற்றும்
தலைவிதியை எட்டுவது பற்றிய ஒரு கற்பனைக் கதை



'தனது பொக்கிஷத்தை விற்ற துறவிக்கான பாராட்டுகள்

"கற்றுத்தரும்போதே மகிழ்வூட்டுகிற ஒரு மனம் கவரும் கதை."

- பாலோ கொய்லோ, நூலாசிரியர், *தி ஆல்மெிஸ்ட்*

"பரபரப்பானதன்றி வேறில்லை - இந்நூல் உங்களது வாழ்வை ஆசீர்வதிக்கும்."

- மார்க் விக்டர் ஹான்சென் இணை நூலாசிரியர். சிக்கன் துப் ஃபார் தி சோல்,

"ஒரு எளிமையான வாழ்க்கைத் தத்துவத்தினுள், மாற்றத்திற்கான சிறப்பான கருவிகளை உள்ளடக்கியுள்ள ஒரு மனங்கவரும் கதையை ராபின் ஷர்மா உருவாக்கியுள்ளார். உங்கள் வாழ்வை மாற்றக் கூடிய ஒரு அற்புதமான நூல்."

- எலேய்ன் செயின்ட் ஜேம்ஸ், நூலாசிரியர்,*சிம்பி ஃபை யுவர் லைஃப் மற்றும் அகவுரிமை*

"சுய மேம்பாடு, சுயத் திறன் வளர்த்தல் மற்றும் தனிநபர் மகிழ்ச்சி ஆகிய பகுதிகளில் நிகழும் ஒரு வேடிக்கையான, வியப்பூட்டும் கற்பனையான வீரக்காதை இதுவாகும். ஒவ்வொரு தனிநபரின் வாழ்க்கையையும் செழிப்பூட்டி மேம்படுத்தவல்ல ஞானக் கருவூலங்களை இது உள்ளடக்கியுள்ளது."

- ப்ரையன் ட்ரேஸி, நூலாசிரியர், *மாக்ஸிமம் அச்சீவ்மென்ட்.*

ராபின் எஸ் ஷர்மா, நமது வாழ்வை மாற்றவல்ல ஒரு முக்கிய செய்தியை நம் அனைவருக்கா கவும் கொடுத்துள்ளார். அவசரகதியில் ஓடிக்கொண்டிருக்கும் இக்காலத்தில், தனிநபர் மன நிறைவுக்கான இணையற்ற ஒரு கையேட்டை அவர் எழுதியுள்ளார்."

- ஸ்காட் டிகார்மோ, முன்னாள் பதிப்பாளர்,*சக்ஸெஸ் மாகசீன்.*

"...வாழ்வின் பெரிய கேள்விகளின் மீது ஒளியைப் பாய்ச்சுகிறது."

- தி எட்மண்டன் ஜர்னல்.

"*தி மாங்க் ஹூ சோல்டு ஹிஸ் ஃபெராரி* என்ற இந்நூல் தெளிவானது, பயனுள்ளது, நிச்சயமாக வாசிக்கத் தகுந்தது... வாசகல்கள் இந்த எலி ப்பந்தயத்தைச் சமாளிப்பதற்கு இது உண்மையி லேயே உதவும்."

- தி கிங்ஸ்டன் விக் - ஸ்டான்டர்டு

"ஒரு அதியற்புதமான நூல். ராபின் எஸ். ஷர்மா அடுத்த ஒக் மண்டினோ ஆவார்."

டாட்டி வால்டர்ஸ், நூலாசிரியர், *ஸ்பீக் அண்டு க்ரோ ரிச்*

"...எவரும் பயன்பெறக் கூடிய எளிமையான ஞானம்,"

- தி கால்காரி ஹெரல்டு

"தனி நபர் முன்னேற்றத்தின் "செல்வந்தனான நாவிதன்" என்று இந்நூல் வகைப்படுத்தப்பட லாம். மேலும் அதிகமான சமநிலை, கட்டுப்பாடு மற்றும் செயல்திறன் இவற்றை நமது அன்றாட வாழ்க்கையில் கொண்டுவர உதவும் மையக் கருத்துகள் பற்றிய உட்பார்வையுள்ள செய்தி கள் (இதில் அடங்கியுள்ளன)."

-இன்வெஸ்ட்மென்ட் எக்ஸிக்யூடிவ்

"...ஒரு பொக்கிஷம் - உண்மையான வெற்றி மற்றும் மகிழ்ச்சிக்கான ஒரு நேர்த்தியான, சக் திவாய்ந்த விதிமுறை. ராபின் எஸ். ஷர்மா, புராதனகாலத்து அறிவைத் தன் கையகப்படுத்தி இன்றைய குழப்பமான கால கட்டத்திற்கு ஏற்றவாறு வடிவமைத்துள்ளார். என்னால் இந்த நாலைக் கீழே வைக்கவே முடியவில்லை."

- ஜோ ட்டை, நூலாசிரியர், *நெவர் ஃபியர், நெவர் க்விட்*

"..ஒருவருக்குள் மறைந்துள்ள, இன்னமும் பயன்படுத்தப்படாத மட்டத்தை எட்டுவதற்கான எளிய விதிகள்."

- தி ஹாலிஃபாக்ஸ் டெய்லி நியூஸ்

"உங்கள் வாழ்வைச் செழிப்படையச் செய்யும் பாடங்களைப் பகிர்ந்து கொள்ளும் ஒரு அற்புத மான கதை."

- கென் வெ காட்ஸ்கி, நூலாசிரியர், *தி அல்டிமேட் பவர்*

"எவரது வாழ்வின் தரத்தையும் மேம்படுத்தும் எளிமையான ஆனால் வியத்தகுவகையில் சக்தி வாய்ந்த கருத்துகளை வெளிப்படுத்தும் ஒரு அற்புதமாக வடிவமைக்கப்பட்டுள்ள ஒரு நீதிக்கதை. அரிய மணி போன்ற இந்நூலை எனது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சிபாரிசு செய்து வருகிறேன்."

- ஜார்ஜ் வில்லியம்ஸ், தலைவர், *காரட் கன்சல்டிங் இன்டர்நாஷனல்*

"ராபின் ஷர்மா, ஆன்மீக நெடுஞ்சாலையின் வழியாக, தனிநபர் மனநிறைவுக்கு வழி தருகி றார்."

- தி ஒட்டாவா சிட்டிசன்

"கடந்த காலம் மற்றும் நிகழ்காலத்தின் புலமை அறிவை வாசிப்பவருக்கு இணக்கமான வகையில் ராபின் சுருக்கியுள்ளார். நீங்களே சுயமாகச் செய்யலாம் என்று வழி காட்டும் கையேடுகள், தனி நபர் சாதனையை அதிகப்படுத்துமாறு படிப்படியான செய்முறைகளை அட்டவணைப் படுத்தித் தருகின்றன. வெற்றியின் ரகசியங்களுள், உடல் நலன் மற்றும் உள அமைதி ஆகியவையும் உள்ளடங்கியுள்ளன. ராபினின் செய்தி ஒரு லேசர் கதிரைப் போல சக்தி வாய்ந்ததாக உள்ளது. அவரது சொற்கள் மந்திரசக்தி படைத்தவை."

-இந்து பத்திரிகை

ராபின் ஷர்மாவின் கருத்துப் பரிமாறும் உயர் திறன்கள், தொழில் மற்றும் வாழ்க்கைக்கான தலைமைத்துவம் பற்றிய, உலகிலேயே மிகவும் வெற்றிகரமான, முதன்மைச் சிந்தனையாளர் களில் ஒருவராக அவரை ஆக்கியுள்ளன.

- தி டைம்ஸ் ஆஃப் இந்தியா

"ஒவ்வொருவரும் ஒரு தலைவர்... பணியிடத்தில் புதிய தலைமைத்துவத்தை வெளிக்காட் டுவதால், உங்களுக்கு அதிகமான மரியாதையும், பணியைச் செய்வதில் ஒரு அதிக நேர்ம றையான அனுபவத்தையும் தரும். வாழ்வின் ஒவ்வொரு மையப் பகுதியிலும் சமநிலையைப் பெறுவதில் ராபின் நம்பிக்கை வைத்துள்ளார். அவரது நூல்கள் முன்னணி லீக் விளையாட்டு வீரர்களாலும், பல ஹாலிவுட் பிரபலங்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன."

- தி எகனாமிக்ஸ் டைம்ஸ்.

"அவரது கருத்தரங்குககள், நிர்வாக இயக்குநர்களிலிருந்து திரை உலக நட்சத்திரங்கள், இயக்குநர்கள் மற்றும் அதிகாரிகள் எனப் பரந்துபட்ட பலதரப்பட்ட மக்களையும் கவர்ந்துள் ளன. தீபக் சோப்ரா ஒரு ஆன்மீக எழுத்தாளராவார். ஆனால், ராபின் மிகவும் நடைமுறைக் கேற்றவர். தத்துவத்தை எளிமைப்படுத்த அவர் முயற்சி செய்கிறார்."

- தி இந்தியன் எக்ஸ்பிரஸ்

ராபின் ஷர்மா இன்று அகில உலகத் தரம் வாய்ந்த மிக அதிகமாக விற்பனையாகும் நூல் களை எழுதும் ஒரு எழுத்தாளர்.

- சிட்டி இந்தியன் எக்ஸ்கிரஸ்

இனிய குணங்கள், புன்னகை தவழும் முகம் மற்றும் தனிப்பட்ட உறவுத் தொடர்புகளை உருவாக்கும் திறன் இவற்றுடன் இருக்கும் ராபின், எவ்வாறு ஒரு பயிற்சியளிக்கும் குருவாக வெற்றி பெற்றார் என்று கண்டு கொள்வது ஒன்றும் சிரமம் இல்லை. ஆனால், குரு என்ற அடைமொழியைத் தான் அவர் ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்.

- ஃப்ரீ பிரஸ் ஜர்னல்

"இந்த நூல் ஒரு வெற்றிகரமான வக்கீல், மேலும், அதிக நிறைவளிக்கும் வாழ்வைத்தான் வாழ்வதற்கென எல்லாவற்றையும் தூக்கியெறிந்து விடுவதைப் பற்றிய ஒரு எளிமையான ஆனால் உத்வேகமூட்டும் கதையாகும். மேலும், அதிகமான அர்த்தம், மகிழ்ச்சி மற்றும் நிறைவுக்கான ஒரு ஆழமான ஏக்கம் இதில் உள்ளது."

-DNA

"ராபின், தனது நூல்களில் பேசப்படுகிற அதே நேர்மறைச் சக்தியை வெளிப்படுத்துகிறார். தொழில் மற்றும் சுய உதவி பற்றி அவர் பேரார்வம் கொண்டுள்ளார். தனது அனுபவங்கள் பலருக்கும் உதவியாக இருந்துள்ளன என்று அவர் உண்மையிலேயே நம்புகிறார் குறிப்பாக அவர் தனது நிறுவன அமர்வுகளை நிகழ்த்தும்போது, இவ்வாறு எண்ணுகிறார்."

- தி ஏஷியன் ஏஜ்

"ராபினைச் சந்தித்த பின்னர், இவர் ஒரு உண்மையான மனிதர் என்ற உணர்வு இல்லாமல் ஒருவரால் திரும்ப வர முடியாது".

- டெக்கான் ஹெரால்டு

"பிரபல சுய உதவி குரு, ராபின் ஷர்மாவின் நூல்களை முன்னாள் இஸ்ரேலி முதல்வரும், நோபல் பரிசை வென்றவருமாகிய சைமன் மியர்ஸ், பிஷெல் இயோ மற்றும் ரிக்கி மார்டின் ஆகியோர் ஏற்றுப் பின்பற்றுகின்றனர்."

- விஜய் டைம்ஸ்

"ராபின் தனது வாசகர்களை, ஞானத்தெளிவை நோக்கி நடத்திச் செல்கிறார்."

- தி க்ரானிகல் ஹெரால்டு

"ஊக்கம் தரும் பேச்சாளர்கள் வரிசையில் இவர் ஒரு அதிகம் பேசப்படும் பெயர். ஆனால், ஒரு குரு என்று தான் அழைக்கப்படுவதை இவர் விரும்புவதில்லை. இதுவும் பொருள்ளதாகத் தான் இருக்கிறது. ஏனெனில் ஒரு உலகத் தரம் வாய்ந்த நிறுவனத்தை உருவாக்குவதற்கான இவரது தொலைநோக்கு மற்றும் திறன் இவற்றுக்காக, இந்தியத் தலைவர்களிலே ஒரு தொழில் நிறுவனப் பயிற்சியாளராக இவர் முன்னணியில் இருக்கிறார்."

- தி நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்.

"தனது பொக்கிஷத்தை விற்ற துறவிலிருந்து கிடைக்கும் தலைமைத்துவ அறிவுக்கான பாராட்டுகள்

"இந்த ஆண்டின் மிகச் சிறந்த தொழில் வணிக நூல்களில் ஒன்று."

- ப்ராஃபிட் பத்திரிகை

"தகவல்கள் நிறைந்தது, வாசிக்க எளியது, மிக மிக உதவிகரமானது. எங்கள் நிர்வாகக் குழு மற்றும் கடைப்பணியாளர்கள் அனைவருக்கும் நகல்களை வழங்கி உள்ளோம். நூல் பற்றிய அவர்களது கருத்துகள் வெகு நன்றாக உள்ளன."

- டேவிட் ப்ளூம, CEO, ஷாப்பர்ஸ் ட்ரக் மார்ட்

"இன்றைய வெகு சிக்கலான தலைமைத்துவப் பிரச்சினைகளுக்கான தனது சக்தி வாய்ந்த தீர்வு களைத் தெரிவிப்பதில் ராபின் ஷர்மாவின் பாணி வெகு நேர்த்தியாகவும், நடைமுறைப்படுத்ததாக வும் உள்ளது. தொழில் வல்லுநர்கள் பெருவாரியான புரியாத புதிர் போன்ற பாணியிலான விவரங் களை எதிர்கொள்ள வேண்டியுள்ள இக்காலத்தில், இது மிகவும் புத்துணர்வூட்டுவதாக உள்ளது"

- இயான் டர்னர், நிர்வாகி, செலஸ்டிகா லெர்னிங் சென்டர்.

"இந்நூல், ஞானம் மற்றும் பொது அறிவின் தங்கச் சுரங்கமாக உள்ளது."

- டீன் லாரி டாப், ரிச்சர்டு ஐவி ஸ்கூல் ஆஃப் பிஸினஸ், வெஸ்டர்ன் ஒன்டாரியோ பல்கலைக் கழகம்.

"எந்த ஒரு தொழில் சார்ந்த நபரும் மேலும் திறம்பட வாழவும், பிறருக்கு வழிகாட்டவும் உதவும் ஒரு பிரமாதமான நூல்."

- ஜிம் ஓ'நீல், செயல்பாட்டு நிர்வாகி, மாவட்ட விற்பனைப் பிரிவு, லண்டன் லைஃப்.

"துறவி, தொழிலில் சமநிலையை எட்டுவதற்கான வழியைக் காட்டுகிறார்... இந்நூல், நன்கு செயல் படுகிறது..."

- தி டொரான்டோ ஸ்டார்

"தனது ஃபெராரியை விற்ற துறவியில் காணப்படும் தலைமைத்துவ ஞானம், என்ற இந்நூல் மிக அதிகமாக விற்பனையாகும் நூல்களின் பட்டியலில் முதலிடத்தைப் பெறுவதற்கான பாதையில் சென்று கொண்டுள்ளது."

-இன்வெஸ்ட்மென்ட் எக்ஸிக்யூடிவ்

"ஷர்மாவின் பணி, வாசகர் ஒரு தொலைநோக்குள்ள தலைவராவதற்கான உள்பார்வையை அவருக்கு வழங்குவதாகும். இதன் மூலம் மாற்றங்களின் காலமாகிய இன்று செழித்து வாழும் ஒரு நிறுவனமாக தனதுத் தொழிலை மாற்றுவதற்கு அது உதவுகிறது."

- சேல்ஸ் ப்ரோமோஷன் மாகசீன்.

"மேலை மற்றும் கீழை நாடுகளின் மகத்தான தத்துவஞானிகளின் அறிவை இணைத்து, தொழில் உலகிற்கு ஏற்றவாறு ஷர்மா அமைக்கிறார்."

- தி லிபரல்

"கடந்த கால ஆசான்களின் பாடங்களைப் பயன்படுத்தி ஷர்மா, விரைவாக மாறிக் கொண்டுள்ள உயர்தொழில்நுட்ப உலகின் அழுத்தங்களை நாம் எவ்விதமாக சமாளிக்கலாம் என்று விளக்குகிறார்."

- தி ரெட்டியர் அட்வகேட்.

தனது
பொக்கிஷத்தை
விற்ற துறவி

உங்கள் கனவுகளை நனவாக்குவது மற்றும்
தலைவிதியை எட்டுவது பற்றிய ஒரு கற்பனைக் கதை

The MONK Who Sold His FERRARI

NOW IN
TAMIL

ராபின் ஷர்மா

ஜெய்கோ பதிப்பகம்

மும்பை டில்லி பெங்களூரு புவனேஷ்வர் கொல்கத்தா
ஹைதராபாத் சென்னை அஹமதாபாத் லக்னோ போபால்

பதிப்பாளர்:
ஜெய்கோ பப்ளிஷிங் ஹவுஸ்
A-2, ஜாஷ் சேம்பர்ஸ், 7அ சர் ஃபிரோஷா மேத்தா சாலை,
போர்ட், மும்பை - 400 001
jaicopub@jaicobooks.com
www.jaicobooks.com

© ராபின் ஷர்மா

கூட்டமைப்புடன் வெளியிடுவோர்
ஹார்பர்கோலின்ஸ் *பப்ளிஷர்ஸ் லிட்.*
டொராான்டோ, கனடா.

THE MONK WHO SOLD HIS FERRARI
தனது பொக்கிஷத்தை விற்ற துறவி
ISBN 978-81-7992-608-6

First Jaico Impression: 2007
Eighteenth Jaico Impression: 2014

இந்த புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு அல்லது நகல் எடுப்பது, ஒலிப்பதிவு செய்வது அல்லது எந்த தகவலையும் சேமிப்பு மற்றும் திரும்பப் பெறும் முறையில் பயன் படுத்துவதோ கூடாது.

இவ்வுலகில் உள்ள நல்லவை எல்லாவற்றையும் எனக்கு அன்றாடம் நினைவூட்டுபவனாக இருக்கின்ற எனது மகன், கோல்பிக்கு இந்நூல் சமர்ப்பணம்.

வாழ்க்கை என்பது எனக்கு சிறிய மெழுகுவர்த்தியல்ல. இப்போதைய பொழுதில் நான் பிடித்துள்ள ஒரு அற்புதமான தீப்பந்தம் போன்றதாகும். அது எதிர்காலச் சந்ததியினரிடம் அதைக் கையளிப்பதற்கு முன்னர், அதை எத்துணைப் பிரகாசமாக எளிய வைக்க முடியுமோ அத்துணைப் பிரகாசமாக எரியச் செய்ய நான் விரும்புகிறேன்.

- ஜார்ஜ் பெர்னாட்ஷா.

உள்ளடக்கம்

1. விழிப்புக் கொள்ள ஒரு விளிப்பு
2. மர்மமான விருந்தினர்
3. ஜூலியன் மான்டிலின் அற்புத மாற்றம்
4. சிவானா முனிவர்களுடன் ஒரு மந்திரச் சந்திப்பு
5. முனிவர்களின் ஆன்மீகச் சீடன்
6. தனிநபர் மாற்றத்தின் ஞானம்
7. வெகு அசாதாரணமான ஒரு தோட்டம்
8. உனது அகத் தீயைத் தூண்டி விடுதல்
9. சுய தலைமைத்துவம் - ஒரு புராதனக் கலை
10. ஒழுங்குமுறைக் கட்டுப்பாட்டின் சக்தி
11. உனது மிக அரிய கைப்பொருள்
12. வாழ்வின் இறுதி இலட்சியம்
13. வாழ்நாள் முழுவதும் நிலைக்கும் மகிழ்ச்சிக்கான ஒரு இறவா இரகசியம்

1

விழிப்புக் கொள்ள ஒரு விளிப்பு!

கூட்டம் நெரித்துக் கொண்டிருந்த அந்த நீதிமன்றத்தின் நடுவிலே அவர் திடீரென்று மயங்கிச் சரிந்தார். இந்நாட்டின் மிகப் பிரபலமான வழக்கறிஞர்களில் ஒருவராக அவர் திகழ்ந்திருந்தவர். வரிசையாக அணிவகுத்து நின்ற அவரது சட்ட வெற்றிகளைப் போலவே, அவரது ஊட்டமான உடலைத் தழுவியிருந்த மூவாயிரம் டாலர் இத்தாலிய சூட்டுகளுக்கும் கூட, அவர் பிரபலமானவராக இருந்தார். அங்குக் கண்ட காட்சியால் அதிர்ந்து போன நான், அசைய முடியாமல் ஸ்தம்பித்து நின்றேன். மாபெரும் ஜூலியன் மான்ட்டில் இன்று பலியாகி, ஒரு கைக்குழந்தையைப் போலத் தரையில் விழுந்திருந்தார். ஒரு பித்தனைப் போல நடுநடுங்கிக் கொண்டு வியர்வை வெள்ளமாய் ஓட அவர் கிடந்தார்.

அக்கணத்திலிருந்து எல்லாமே வெகு வெகு மெதுவாக அசைவது போலத் தோன்றியது. "கடவுளே! ஜூலியனுக்கு ஏதோ பிரச்சினை!" என்று அவரது பெண் உதவியாளர் அலறினாள். அந்த அலறல், நடந்து கொண்டிருந்த விஷயத்தை சுற்றியிருந்த எங்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக இருந்தது. நீதிபதி பயத்தால் வெளிறிப் போனார். அவசரமான நெருக்கடி சமயங்களுக்கென தான் பிரத்தியேமாக அமைத்திருந்த தொலைபேசியில் வேகமாக ஏதோ முணுமுணுத்தார். என்னைப் பொருத்தவரையில், பெரும் குழப்பத்தில் உறைந்து போய் சும்மா நிற்கமட்டுமே என்னால் முடிந்தது.

'ஐயோ, முட்டாளே! தயவு செய்து செத்துவிடாதே! கணக்கை முடித்துக் கொண்டு போவதற்கு உனக்கு இன்னும் நிறையக் காலம் இருக்கிறது. நீ இந்த மாதிரி செத்துப் போக வேண்டியவன் அல்ல!' என்று என் உள்ளம் கூவியது.

நீதிமன்றத்துச் சிப்பந்தி, நின்ற நிலையிலேயே சவ அடக்கம் செய்யப்பட்டது போலிருந்தவன், திடீரென்று குதித்தெழுந்தான். ஓடிவந்து, கீழே விழுந்து கிடந்த சட்ட நாயகனுக்கு அவசர முதலுதவிகளைச் செய்யத் துவங்கினான். அவனுக்கு அருகில், ஜூலியனின் உதவியாளர் வந்தமர்ந்தாள். அவள் குனிந்து ஆறுதல் வார்த்தைகளைக் கூறியபோது அவளது தங்கநிறக் கூந்தல் கற்றைகள் ஜூலியனின் சிவந்து போயிருந்த முகத்தை மெல்ல வருடின. அவளது வார்த்தைகளைச் செவிமடுக்கும் நிலையில் அவர் இல்லை என்பது மட்டும் தெள்ளத் தெளிவாக இருந்தது.

எனக்கு ஜூலியனைப் பதினேழு ஆண்டுகளாகத் தெரியும். நான் ஒரு இளம் சட்ட மாணவனாக இருந்தபோது ஜூலியனின் சக வழக்கறிஞர் ஒருவர், கோடை ஆய்வுக்கு பயிற்சியாளனாக என்னைப் பணியில் அமர்த்தியிருந்தார். அப்போது தான் நான் அவரைச் சந்தித்தேன். அந்நாட்களில் அவர் உச்சகட்டத்தில் இருந்தார். புத்திக் கூர்மையுடன், ஒரு அழகுமிக்க அச்சமற்ற வழக்கறிஞராக, மகத்தான கனவுகளுடன் அவர் இருந்தார். அந்த சட்ட நிறுவனத்தின் இளம் தாரகையாக, எதிர்காலத்தில் அற்புதங்களை உருவாக்கும் வல்லமையை உள்ளடக்கியவாறு அவர் இருந்தார். ஒரு நாள் இரவு தாமதமாக வேலை செய்து கொண்டிருந்தபோது அவரது கம்பீரமான அலுவலகத்தை கடந்து செல்ல நேர்ந்தது. அப்போது எவருமறியாவண்ணம் சற்றே உள்ளே எட்டிப் பார்த்தேன். பிரம்மாண்டமான அவரது மேசை மீது உட்கார்ந்திருந்த சட்டமிடப்பட்ட வாக்கியங்களைக் கண்டேன். அது வின்ஸ்டன் சர்ச்சிலின் கூற்று. ஜூலியன் எப்படிப்பட்ட ஒரு மனிதராக இருந்தார் என்பது பற்றி அக்கூற்று ஒரு காவியமே எடுத்துச் சொல்லியது.

'நாம் இன்று நமது தலைவிதியின் தலைவர்களாக இருக்கிறோம் என்பது பற்றியும், நம்மை எதிர் நோக்கியுள்ள பணி நமது சக்திக்கு மீறியது அல்ல என்பது பற்றியும், நான் உறுதியுடன் இருக்கிறேன். அப்பணியின் துன்பங்களும், கடின முயற்சியும், எனது சகிப்புத் தன்மைக்கு அப்பாற்பட்டது அல்ல என்பதையும் நான் நிச்சயமாக அறிவேன். நமது சொந்த நோக்கத்தில் நம்பிக்கையும், வெற்றி பெற வேண்டும் என்ற தோல்விடையாத மனவுறுதியும் நம்மிடம் உள்ள வரையில், வெற்றி என்பது நமக்கு மறுக்கப்படாது.'

ஜூலியன், தான் பேசியதையே நடைமுறைப்படுத்தவும் செய்தார். தனது தவிர்க்க முடியாத தலைவிதி என்று அவர் நம்பிய வெற்றியை எட்டுவதற்காக ஒரு நாளைக்குப் பதினெட்டு மணி நேரம் உழைக்கவும் அவர் தயாராக இருந்தார். கடினமாகவும், அயராதும் உழைப்பதற்கு அஞ்சாதவராகவும் அவர் இருந்தார். அவரது தாத்தா ஒரு பிரதான செனட்டராகவும், தந்தை ஒரு மதிப்பு வாய்ந்த ஃபெடரல் கோர்ட் நீதிபதியாகவும் இருந்தனர் என்று நான் பணியிடத்தில் கேள்விப்பட்டதுண்டு. செல்வ வளமிக்கதொரு குடும்பத்தில் அவர் பிறந்திருந்தார் என்பதும் அவரது ஆர்மானி உடையணிந்திருந்த தோள்களின் மீது பிரம்மாண்டமான எதிர்பார்ப்புகள் கனமாக உட்கார்ந்திருந்தன என்பதும் வெகு தெளிவாகவே புலப்பட்டன. எனினும், ஒரு விஷயத்தை நான் ஒப்புக் கொள்வேன். அவர் தனது சொந்தப் பந்தயத்திலே, ஓடிக் கொண்டிருந்தார். தனக்கே உரிய வழிகளில் செயல்களை செய்வது என்பதில் அவர் உறுதியாக இருந்தார். மேலும், பிறர் கண்டு மெச்சுவதற்காகவே விஷயங்களை வெளிக்காட்டிக் கொள்வதை அவர் பெரிதும் விரும்பினார்.

நீதிமன்றங்களில் ஜூலியனின் அட்டகாசமான மிகைப்படுத்தப்பட்ட செயல்பாடுகள், செய்தித்தாள்களின் முதல் பக்கங்களில் வழக்கமாக இடம் பிடித்து வந்தன. ஒரு வன்முறையின் சாயல் தோய்ந்த முதல் தரமான சட்ட நிபுணர் தேவை எனும் போது, பணமும், புகழும் படைத்தவர்கள் அவரைத் தான் நாடி வந்தனர். அவரது ஓய்வு நேரச் செயல்பாடுகளும் அனைவரும் அறிந்தவையாகத்தான் இருந்தன.

கவர்ச்சிக் கன்னிகளுடன், நகரத்தின் மிகச் சிறந்த உணவு விடுதிகளுக்கு இரவு நேரங்களில் வருகை தருதல், அல்லது, அவர் **“உடைத்தெறியும் குழு”** என்று வர்ணித்த ரவுடிகளுடன் குடித்துக் கும்மாளமிடுதல் போன்ற நடவடிக்கைகள், நிறுவனத்தில் புராணங்களாக உலா வந்தன.

அந்த முதல் கோடையின் போது ஒரு பரபரப்பான கொலை வழக்கில் அவர் வாதிடவிருந்தது. அந்த வழக்கில், தன்னுடன் பணிபுரிய என்னைப் போய் ஏன் அவர் தேர்ந்தெடுத்தார் என்பது எனக்கு இன்னமும் புரியாத புதிராகத் தான் உள்ளது. அவரது பழைய கல்லூரியான ஹார்வர்டு சட்டப் பள்ளியில் தான் நானும் படித்துப் பட்டம் பெற்றிருந்தேன். இருந்தும், அந்த நிறுவனத்தின் மிகவும் கெட்டிக்காரப் பயிற்சியாளன் நிச்சயம் நானில்லை. எனது குடும்பத்தின் பரம்பரையில் அரச ரத்தமும் ஓடவில்லை. கொஞ்சகாலம் கடற்படையில் பணிபுரிந்த பின்னர், எனது தந்தை ஒரு சிறிய வங்கியின் காவலாளியாகத் தனது முழு வாழ்க்கையையும் கழித்தார். எனது தாயோ எந்த ஒரு டாம்பீகமும் இன்றி ப்ரான்ஸில் பிறந்து வளர்ந்திருந்தார்.

இருந்தும், அவர் என்னைத் தேர்ந்தெடுத்தார். “கொலைக்குற்ற வழக்கு விசாரணைகளின் அன்னை” என்று பிரபலமாக அழைக்கப்பட்ட அந்த வழக்கில், அவரோடு கூடப் பணிபுரியும் பெருமைக்காக நிறுவனத்தில் இருந்த பலரும் அவரிடம் மௌனமாக மனு அனுப்பிக் கொண்டிருந்தனர். அத்தனை பேரையும் ஒதுக்கிவிட்டு அவர் என்னைத் தேர்ந்தெடுத்தார். எனது “பசி” அவருக்குப் பிடித்திருந்ததாக அவர் கூறினார். நிச்சயமாக நாங்கள் தான் வெற்றி பெற்றோம். தனது மனைவியைக் கொடூரமாகக் கொலை செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டிருந்த அந்தத் தொழிலதிபர் இன்று ஒரு சுதந்திர நபர். அதாவது, அவரது ஒழுங்கற்ற மனச்சாட்சியால் அனுமதிக்கப்படுமளவு சுதந்திரமாக அவர் இருந்தார் எனலாம்.

அந்தக் கோடையில் நான் பெற்ற கல்வி வெகு செழிப்பானது. எந்த ஒரு சந்தேகமும் இல்லாத இடத்தில் ஒரு ஏற்கத்தக்க சந்தேகத்தை எவ்வாறு உருவாக்குவது என்பது பற்றிய ஒரு பாடத்தை விடவும் மிக அதிகமான ஒரு படிப்பினையாக அது அமைந்திருந்தது. அவ்வாறு ஒரு சந்தேகத்தை உருவாக்க ஒரு சாதாரண வழக்கறிஞராலும் இயலும். இதுவே வெற்றி அடைவதன் உளவியலில் ஒரு பாடமாக இருந்தது. ஒரு தலைசிறந்த கலைஞன் செயல்படும்போது அருகிலிருந்து கவனிப்பதற்கான ஒரு அரிய வாய்ப்பாகவும் இது இருந்தது. ஒரு உலர்ந்துபோன கடற்பாசியைப் போல அதை நான் உள்ளே உறிஞ்சிக் கொண்டேன்.

ஜூலியனின் அழைப்பை ஏற்று, அச்சட்ட நிறுவனத்தின் துணை வழக்கறிஞனாக நான் தொடர்ந்து பணியாற்றினேன். வெகு விரைவிலேயே ஒரு நிலையான நட்பு எங்களிடையே முளைத்துத் தழைத்தது. அவருடன் இணைந்து பணிபுரிவது என்னவோ அத்தனை சுலபமல்ல என்று நான் ஒப்புக் கொள்வேன். அவருக்குக் கீழே உதவியாளனாகப் பணிபுரிவது என்பது ஒரு அதிருப்தியூட்டும் கசப்பான அனுபவமாகத் தான் இருந்தது. பல இரவுகள் நாங்கள் உரக்கக் கத்தி சண்டையிட்டதுண்டு. உண்மையிலேயே அவர் செல்லும் பாதையில் தான் ஒருவர் சென்றாக வேண்டும்.

இல்லாவிட்டால் வெளியே, சாலையை நோக்கிச் செல்ல வேண்டியது தான். இந்த மனிதரால் தவறு என்பதைச் செய்யவே முடியாது. எனினும் அவரது கரடு முரடான வெளித்தோற்றத்துக்கு அடியில், மனிதர்கள் மேல் அக்கறை காட்டும் ஒரு மனிதன் இருந்தது தெளிவு.

வேலையில் எவ்வளவு மும்முரமாக இருந்தபோதிலும் ஜென்னியைப் பற்றி எப்போதும் நலன் விசாரிப்பார். ஜென்னியும் நானும், நான் சட்டக் கல்லூரிக்குச் செல்வதற்கு முன்னரே திருமணம் செய்து கொண்டிருந்தோம். ஆனால், இன்னமும் நான் அவளை "என் மணப்பெண்" என்று தான் குறிப்பிடுகிறேன். மற்றொரு பயிற்சியாளன் மூலம், நான் பணநெருக்கடியில் இருந்ததை ஜூலியன் அறிந்து கொண்டார். உடனே ஒரு தாராளமான உதவித் தொகையை நான் பெறுமாறு ஏற்பாடு செய்தார். மிகச் சிறந்த நபர்களைக் கூட அவர் கடுமையாக நடத்துவார். கேளிக்கைகளில் விருப்பமதிகம் கொண்டிருந்தார். ஆனால், தனது நண்பர்களை அவர் ஒரு போதும் அலட்சியம் செய்ததில்லை. உண்மையான பிரச்சினை என்னவென்றால் ஜூலியன் வேலையின் மீது அதீதப் பற்றுக்கொண்டிருந்தது தான்.

முதல் சில ஆண்டுகள், தான் ஒரு நாளில் நெடுநேரம் உழைத்தது, ‘நிறுவனத்தின் நலனைக் கருதி மட்டுமே’ என்று அவர் நியாயப்படுத்தினார். ‘அடுத்த பனிக்காலத்தில், நிச்சயம் ஒரு மாத ஓய்வு எடுத்துக் கொண்டு, கேமன்ஸிக்கு விடுமுறைக்குச் செல்லத் திட்டமிட்டிருப்பதாக அவர் சொல்லிக் கொண்டிருந்தார். காலம் செல்லச் செல்ல, ஜூலியனின் திறமை பற்றிய விஷயம் பிரபலமானது. இதன் காரணமாக, அவரது வேலைப் பளுவும் தொடர்ந்து அதிகரித்தது. அவரைத் தேடி வந்த வழக்குகள் மேலும் பெரியவையாகவும், உயர்வானவையாகவும் இருந்தன. ஜூலியனும், எந்த ஒரு நல்ல சவாலிலிருந்தும் பின்வாங்கும் குணம் கொண்டவரல்ல. எனவே, அவர் தொடர்ந்து மேலும் மேலும் கடினமாக உழைக்குமாறு தன்னையே வருத்திக் கொள்ளத் துணிந்தார்.

எப்போதோ அபூர்வமாகத் தோன்றும் தனது அமைதியான நேரங்களில், தன்னால் இரண்டு மணிநேரத்துக்கு மேல் நிம்மதியாக உறங்க முடியவில்லை என்றும், உறங்கும்போதும், ஏதேனும் ஒரு வழக்கைப் பற்றிய விவரங்களைப் படிக்காமலிருக்கிறோமே என்ற குற்ற உணர்வின்றி எழாமல் இருக்க முடியவில்லை என்றும், என்னிடம் கூறியதுண்டு. மேலும், அதிகமாக வேண்டும், கூடுதல் மதிப்பு, கூடுதல் மகிமை மற்றும் மேலும் அதிகமான பணம் என்ற ஒரு தீவிர வேட்கை, பசி, அவரை முழுமையான ஆட்கொண்டிருந்தது என்ற உண்மை எனக்கு விரைவில் தெளிவாயிற்று.

எதிர்பார்த்தபடியே, ஜூலியன் மிகவும் வெற்றிகரமான ஒரு நபரானார். பலரும் விரும்பக் கூடிய எல்லாவற்றையும் அவர் சாதித்தார். பெற்றார். ஏழு இலக்கு வருமானம் தரும் ஒரு விண்வியக்கும் தொழில் திறன், பிரபலங்கள் விரும்பி வசித்த குடியிருப்புப் பகுதியில் ஒரு கவின்மிகு மாளிகை, தனி விமானம், ஒரு தீவின் நடுவில் அமைந்திருந்த கோடை வாசஸ்தலம் மற்றும் அவராலேயே மிக உயர்வாக மதிக்கப்பட்ட ஒரு பொக்கிஷம், ஒரு சொத்து, இல்லத்தின் வாசலில், நடுமையத்தில்

நிறுத்தப்பட்டிருந்த பளபளவென்று கண்ணைப் பறிக்கும் ஒரு சிகப்பழகு ஃபெராரி வண்டி!

எனினும், மேற்பார்வைக்குத் தோன்றுவது போல நிலைமை என்னவோ அவ்வளவு மகிழ்ச்சிகரமாக, அமைதியாக, அழகாக இருக்கவில்லை என்பது எனக்குத் தெரியும். வரவிருக்கும் பேராபத்திற்கான அறிகுறிகளை நான் கவனித்துக் கொண்டு தான் இருந்தேன். நிறுவனத்தில் இருந்த பிறரைக் காட்டிலும் எனக்குக் கூடுதல் தெரிஉணர்வு இருந்ததால் இல்லை. ஜூலியனுடன் அதிக நேரம் நான் செலவிட நேர்ந்ததாலேயே இவ்விஷயங்கள் எனக்குப் புலப்படத் தொடங்கின. எப்போதுமே வேலை செய்து கொண்டிருந்ததால், நாங்கள் எப்போதுமே ஒன்றாகவே இருந்தோம். வேலை ஒரு போதும் குறைந்ததே கிடையாது. நடந்து முடிந்த முந்தைய வழக்கைக் காட்டிலும் பெரியதான மற்றொரு வழக்கு எப்போதுமே அடுத்து அணிவகுத்து நின்று கொண்டிருந்தது. ஒரு வழக்கு பற்றி எவ்வளவு தான் விஷயங்களைச் சேகரித்துத் தயார் செய்தபோதும், ஜூலியனைப் பொறுத்த அளவில், அது போதாது என்பதே அவர் கருத்து.

நீதிபதி, 'இந்த' அல்லது 'அந்தக் கேள்வியைக் கேட்டால்? அப்போது என்னாகும்? கடவுளே! அவ்வாறு நேரக்கூடாது. எங்கள் ஆய்வு மிகச் சரியானதாக இல்லாவிட்டால்? கூட்டம் நிறைந்து வழியும் ஒரு நீதிமன்ற அறையில், எதிர்பாராத விதமான கேள்வி ஒன்றை அவர் எதிர் கொள்ள நேர்ந்தால்? காட்டு வழியில் ஜீப்பின் முன்விளக்கின் கண்கூசச் செய்யும் ஒளியில் மாட்டிக் கொண்ட மான் போல அவர் தடுமாற நேர்ந்தால்? எனவே, நாங்கள் எல்லை கடந்த வேலைப் பளுவை ஏற்றுக் கொண்டோம். அவரது பணியை மையமாகக் கொண்ட சின்னஞ்சிறு உலகினுள் நானும் இழுத்துச் செல்லப்பட்டேன். அங்கே காலம் காட்டும் கருவியான கடிகாரத்தின் அடிமைகளாக, எஃகும் கண்ணாடியும் இணைந்து உருவாக்கிய ஒரு இராட்சதக் கட்டிடத்தின் 64-வது மாடியில் அயராது உழைத்துக் கொண்டிருந்தோம். அந்த நேரத்தில் புத்தி பிசகாத பிறரோ, தமது இல்லங்களில், குடும்பத்தினருடன் தமது நேரத்தைக் கழித்துக் கொண்டிருந்தனர். நாங்களோ, வெற்றி என்னும் மாய ஒளியால் குருடாக்கப்பட்டு, ஏதோ, உலகத்தின் வால் எங்கள் கைப்பிடியில் உள்ளது என்று கருதிக் கொண்டிருந்தோம்.

நான் ஜூலியனுடன் எவ்வளவு அதிக நேரம் செலவிட்டேனோ அவ்வளவு தெளிவாக அவர் தன்னைத் தானே தரையில் அழுத்திக் கொண்டிருந்தார் என்பதை என்னால் பார்க்க முடிந்தது. ஏதோ ஒரு மரண விழைவு அவரிடம் இருந்தது போலத் தோன்றியது. எதுவுமே அவருக்குத் திருப்தியளிக்கவில்லை. இறுதியில் அவரது திருமணம் முறிந்தது. தனது தந்தையுடன் பேசுவது நின்று போனது. எவரும் விரும்பக்கூடிய செல்வச் செழிப்பும், பொருள் வளமும் அவரிடம் இருந்தபோதிலும், அவர் தேடிக் கொண்டிருந்தது எதுவோ, அதை அவர் இன்னமும் கண்டு பிடிக்கவில்லை. இவ்வுண்மை, உணர்வு ரீதியாகவும், உடல் ரீதியாகவும், ஆன்ம ரீதியாகவும் வெளித் தெரியலாயிற்று.

53 வயதான ஜூலியன், எழுபதுகளின் இறுதிக் கட்டத்தில் இருந்தது போலத் தோன்றினார். அவரது முகத்தில் சுருக்கங்கள் நிறைந்து காணப்பட்டன. வாழ்வில் பொதுவாக, **‘எவரையும் சிறைப் பிடிக்கலாகாது’** என்ற அவரது அணுகுமுறைக்கு இச்சுருக்கங்கள் ஒரு எளிய பாராட்டாக அமைந்திருந்தன. மேலும், சமநிலையற்ற ஒரு வாழ்க்கை முறையின் மகத்தான இறுக்கத்தின் விளைவாகவும் இவை குறிப்பாகத் தோற்றமளித்தன. விலையுயர்ந்த ஃபிரான்சு உணவு விடுதிகளில் பின்னிரவு வேளை விருந்துகளும், கனமான க்யூபன் சிகார்களைப் புகைத்தலும், ஒன்றன் பின் ஒன்றாக கோன்யாக் மதுவைத் தொடர்ந்து அருந்துதலுமாக, இவை எல்லாம் சேர்ந்து அவரே சங்கடப்படுமளவு பருமனுள்ளவராக ஆக்கியிருந்தன. உடல் நலமின்றி அயர்வுடன் இருப்பது பற்றித் தான் சலிப்புற்று இருப்பதாக அவர் இடைவிடாமல் குறை சொல்லிக் கொண்டே இருந்தார். நகைச்சுவை உணர்வை இழந்துவிட்டவராக இப்போதெல்லாம் அவர் ஒருபோதும் சிரிப்பதே இல்லை என்பது போலத் தோன்றியது. ஒரு காலத்தில் உற்சாகமான ஜூலியனின் இயல்பு, இப்போது ஒரு மோசமான மந்தத் தன்மையும், தீவிரத்தன்மையும் கொண்டதாக மாறிவிட்டிருந்தது. தனிப்பட்ட முறையில் சொல்வதானால், அவரது வாழ்க்கை, எல்லா நோக்கங்களையும் இழந்து விட்டிருந்தது என்றே நான் எண்ணுகிறேன்.

இதில் மிகமிக வருத்தம் தரக்கூடிய விஷயம் என்னவென்றால், நீதிமன்றத்தில், தனது கூர்மையான தெளிவை அவர் இழந்து விட்டது தான். முன்னர், அங்கிருந்த அனைவரையும் தனது சரளமான மொழியிலான இறுக்கமான முடிவு வாதத்தால் திணறவைத்தது வழக்கமாயிருந்தது. ஆனால், இப்போதோ, தற்பொழுதைய வழக்குக்குச் சற்றும் தொடர்பற்ற பிற தெளிவற்ற வழக்குகளைப் பற்றி மணிக்கணக்கில் தொடர்ந்து சளசளக்கத் தொடங்கியிருந்தார். எதிர்த்தரப்பு வக்கீலின் மறுப்புகளை முன்னர் இனிமையான கண்ணியத்துடன் எதிர்கொண்டிருந்தவர், இப்போதோ கடும் கசப்பான கிண்டலுடன் பேசி, கோபத்தை வெளிக்காட்டினார். முன்பு அவரை சட்ட மேதை என்று மரியாதையுடன் நோக்கி வந்த நீதிபதிகளையும் கூட இது வெகு தீவிரமாக பொறுமையிழக்க வைத்தது. சுருங்கச் சொன்னால், ஜூலியனின் உயிர் ஒளி தன் சுடர் மங்கித் தடுமாறத் தொடங்கியிருந்தது.

அவரது வேலையின் அசுரகதியும், அதன் விளைவாக ஏற்பட்ட இறுக்கமும் மட்டுமே அவரை இவ்வளவு விரைவில் மரணத்திற்கு அருகே இட்டுச் சென்றது என்று கூற முடியாது. அதற்கான காரணம் இதைவிடவும் ஆழமான ஒன்று என்பதை என்னால் உணர முடிந்தது. அது ஒரு ஆன்மரீதியான விஷயம் என்று தோன்றியது. தான் செய்து கொண்டிருந்த வேலைமீது தனக்கு ஆழமான, ஆத்மார்த்தமான ஈடுபாடு எதையும் தான் உணரவில்லை என்று இவர் என்னிடம் கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் கூறியதுண்டு. தன்னைச் சுற்றி ஒரு காலியான, வெறுமை படர்ந்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டதுண்டு. தான் ஒரு இளம் வழக்குரைஞராக இருந்தபோது, சட்டத்தை, அத்துறையை, தான் உண்மையிலேயே மிகவும் விரும்பியதாக அவர் கூறினார். தனது குடும்பத்தினரின் சமூக அந்தஸ்த்துக்கான ஒரு விழைவின் காரணமாக அவர் அத்துறையினுள் வலுவில் திணிக்கப்பட்டிருந்த போதிலும் அவருக்கு அது பிடித்தமானதாகவே இருந்தது. சட்டநுணுக்கங்களின்

சிக்கல்கள் மற்றும் அறிவுரீதியான சவால்கள் அவரை மயக்கி, கட்டுண்டு நிற்கச் செய்தன. அவரை மென்மேலும் உத்வேகம் கொள்ளச் செய்தன. சமூக மாற்றங்களைக் கொண்டு வருவதில் சட்டத்தின் வலிமை அவருக்கு புத்துணர்வூட்டி முன் செல்லும்படி உந்தித் தள்ளியது. அக்கால கட்டத்தில், கனெக்டிகட் மாநிலத்திலிருந்து வந்திருந்த ஒரு சாதாரண பணக்காரச் சிறுவனாக மட்டுமே அவர் இருக்கவில்லை. தன்னிடம் தெளிவாகத் தென்பட்ட திறமைகளை பிறருக்கு உதவுவதற்கெனப் பயன்படுத்தக்கூடிய, சமூக முன்னேற்றத்திற்கான ஒரு நல்ல சக்தியாகவும், பயனுற்ற கருவியாகவுமே அவர் தன்னைக் கண்டார். அந்தத் தொலைநோக்கு அவரது வாழ்க்கைக்கு ஒரு பொருளைத் தந்தது. அவருக்கு அது ஒரு குறிக்கோளைக் கொடுத்து, அவரது நம்பிக்கைகளை ஒளிவிடச் செய்யும் எரிவாயுவாகச் செயல்பட்டது.

ஜூலியனின் வீழ்ச்சிக்கு அவரது வேலையுடன் இருந்த ஒரு உளுத்துப் போன தொடர்பு மட்டுமே காரணமாக இருக்கவில்லை. அதைவிடவும் பெரிய காரணம் வேறு ஒன்று இருந்தது. நான் அந்தச் சட்ட நிறுவனத்தில் சேருவதற்கு முன்னதாக, ஏதோ ஒரு மாபெரும் துயரச் சம்பவம் அவரைத் தாக்கியிருந்தது. வெளியில் வாய்திறந்து பேசப்பட முடியாத ஏதோ ஒரு இழப்பு அவருக்கு நேர்ந்திருந்தது. இதைப்பற்றி நிறுவனத்தின் மூத்த பங்குதாரர்களில் ஒருவர் குறிப்பிட்டிருந்தார். ஆனால், இதைப் பற்றி எவருமே வெளிப்படையாக எதுவும் கூற மறுத்தனர். நான் கேட்டும் கூட, நிறுவனத்தின் நிர்வாகப் பங்குதாரராகிய, வயதான ஹார்டிங் கூட இதுபற்றித் தான் எதுவும் பேச இயலாதவாறு இரகசியம் காப்பதாக வாக்குக் கொடுத்திருப்பதாகக் கூறிவிட்டார். தனது பிரம்மாண்டமான அலுவல் அறையில் செலவிட்டதைக் காட்டிலும் கூடுதலான நேரத்தை ரிட்ஸ் கார்ல்டனின் மதுவருந்தும் அறையில் தான் அவர் செலவிடுவதுண்டு!

மேலும், ஒரு சரியான ஓட்டை வாய் என்ற அவப்பெயரையும் அவர் கொண்டிருந்தார். அவர்கூட, இவ்விஷயம் பற்றி மௌனம் சாதித்தார். இந்த ஆழமான, இருண்டிருந்த இரகசியம் எதுவாயிருப்பினும், ஜூலியனின் சரிவுக்கு ஏதோ ஒரு வகையில் இதுவும் ஒரு காரணமாக இருந்து வந்தது என்று நான் சந்தேகம் கொண்டிருந்தேன். இதுபற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஒரு ஆர்வம் எனக்கு இருக்கத் தான் செய்தது. ஆனால், அதையும் விட அதிகமாக, அவருக்கு உதவ வேண்டும் என்று நான் விரும்பினேன். அவர் எனது வழிகாட்டியாக மட்டுமல்ல, எனது மிகச் சிறந்த நண்பராகவும் இருந்தார்.

அப்போது தான் அது நடந்தது. வெற்றி வானில் உயரப்பறந்து கொண்டிருந்த அதி புத்திசாலியான புத்திசாலியான ஜூலியன் மான்டிலைத் தரைக்கு இறக்கி, **'இறந்து போகக்கூடும்'** என்கிற மானுட பலவீனத்துடன் மறுபடியும் அவருக்கு ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொடுத்த இந்த பெரிய மாரடைப்பு வந்து அவரைத் தாக்கியது. ஏழாம் நம்பர் கோர்ட்டில், கொலைக் குற்ற வழக்குகளுக்கெல்லாம் தாய் என்று அழைக்கப்பட்ட வழக்கில் நாங்கள் எங்கு வெற்றி பெற்றோமோ, அதே கோர்ட்டில், அவரது இதயம், நோயால் தாக்குண்டது.

2

மர்மமான விருந்தினர்

சட்ட நிறுவனத்தின் அனைத்து உறுப்பினர்களும் அழைக்கப்பட்டிருந்த ஒரு அவசரக் கூட்டம் அது. பிரதானமான அந்தப் பெரிய போர்டு அறையினுள் நாங்கள் நெருக்கியடித்துக் கொண்டு நுழைந்தபோதே, ஏதோ ஒரு மோசமான பிரச்சனை எழுந்துள்ளது என்பதை என்னால் உணர முடிந்தது. கூடியிருந்தவர்களை நோக்கி, முதியவர் ஹார்டிங் தான் முதலில் பேசினார்.

"உங்களிடம் ஒரு மிக மோசமான செய்தியை நான் சொல்ல வேண்டியுள்ளது. நேற்று கோர்ட்டில் ஓர் அட்லாண்டிக் வழக்கு பற்றி விவாதித்துக் கொண்டிருந்தபோது, ஜூலியன் ஒரு மிகவும் கடுமையான மாரடைப்புக்கு உள்ளானார். தற்பொழுது அவர் இன்டென்ஸிவ் கேர் யூனிட்டில் இருக்கிறார். அவரது நிலை இப்போது சமன்பட்டுள்ளது என்றும், விரைவில் குணமடைந்து விடுவார் என்றும் அவரது மருத்துவர்கள் என்னிடம் தெரிவித்துள்ளனர். எனினும் ஜூலியன் ஒரு முடிவு எடுத்துள்ளார். அந்த முடிவைப் பற்றி நீங்கள் அனைவரும் தெரிந்து கொள்ள வேண்டும் என்று நான் நினைக்கிறேன். அவர் நமது குடும்பத்தை, இந்நிறுவனத்தை விட்டு விலகுவதாகவும், சட்டப் பணியைக் கைவிடுவதாகவும் தீர்மானித்துள்ளார். அவர் மறுபடியும் இந்த நிறுவனத்திற்கு வரப் போவதில்லை", என்றார் அவர்.

நான் இதைக் கேட்டுப் பெரும் அதிர்ச்சிக்குள்ளானேன். ஜூலியனுக்கு நிறையப் பிரச்சனைகள் இருந்தன என்பதை நான் அறிவேன். ஆனால், வேலையை விட்டு நின்று விடுவார் என்று நான் ஒரு போதும் கருதியதில்லை. மேலும், நாங்கள் இருவரும் சேர்ந்து எத்தனையோ நெருக்கமாகப் பணியாற்றியிருந்ததால், இதைப்பற்றி என்னிடம் தனிப்பட்ட முறையில் அவர் பேசியிருக்க வேண்டும் என்றும், அதுவே சரியான, மரியாதையான செயலாகும் என்றும், நான் எண்ணினேன். அவரை மருத்துவமனையில் சென்று பார்க்கக் கூட அவர் என்னை அனுமதிக்கவில்லை. ஒவ்வொரு முறை நான் மருத்துவமனைக்குச் சென்றபோதும், அவர் தூங்கிக் கொண்டிருந்ததாகவும், தொந்தரவு செய்யப்படக்கூடாது என்றும் என்னிடம் கூறுமாறு செவிலியர்கள் பணிக்கப்பட்டிருந்தனர். எனது தொலைபேசி அழைப்புகளைக் கூட அவர் ஏற்க மறுத்தார். ஒருக்கால், அவர் மறக்க விரும்பிய அந்த வாழ்க்கையைப் பற்றி நான் நினைவூட்டினேனோ? யாருக்குத் தெரியும்? ஆனால், உங்களிடம் நான் ஒன்று மட்டும் சொல்வேன். எனக்கு அது நிறைய வருத்தமூட்டியது.

இதெல்லாம் நடந்து முடிந்து ஏறத்தாழ மூன்று ஆண்டுகள் ஆகின்றன. கடைசியாக நான் கேள்விப்பட்டது ஜூலியன் இந்தியாவிற்கு ஏதோ ஒரு புனிதப் பயணம் போலக் கிளம்பிச் சென்றுள்ளார் என்பது தான். தனது வாழ்க்கை முறையை எளிமையாக்கிக் கொள்ள விரும்பியதாகவும், சில பதில்கள் தனக்குத் தேவையாக இருந்ததாகவும் நிறுவனத்தின் பங்குதாரர் ஒருவரிடம் கூறியிருந்தார். அந்த பதில்களை அந்த புனிதமான ஆன்ம பூமியில் கண்டறியலாம் என்று தான் நம்புவதாகவும் அவர் கூறியிருந்தார். தனது மாளிகை, விமானம் மற்றும் தனிச்சொத்தான தீவையும் அவர் விற்றுவிட்டுருந்தார். தனது ஃபெராரியைக் கூட அவர் விற்றுவிட்டார்.

ஜூலியன் மான்டில், ஒரு இந்திய யோகி! உண்மையில் சட்டம் வெகு மர்மமான முறையில் வேலை செய்கிறது என்று நான் எண்ணமிட்டேன்.

அந்த மூன்று ஆண்டுகள் கடந்து சென்ற காலகட்டத்தில், கடுமையாக உழைத்துக் கொண்டிருந்த ஒரு இளம் வழக்குரைஞனாக இருந்ததிலிருந்து மாறி, நான் ஒரு களைத்துப்போன நம்பிக்கையிழந்த, சற்றே வயது கூடிப்போன ஒரு வழக்குரைஞனாக ஆகியிருந்தேன். எனது மனைவிக்கும் எனக்கும் அப்போது பிள்ளைகள் இருந்தனர். நாங்கள் ஒரு குடும்பமாகியிருந்தோம். காலம் செல்லச் செல்ல, நானும் வாழ்க்கைக்கான பொருள் பற்றிய எனது சுய தேடலைத் தொடங்கினேன். ஒருவேளை நான் குழந்தைகள் பெற்றிருந்ததால் அது உருவாகியிருக்கக்கூடும். உலகத்தையும், அதில் நான் ஆற்றவேண்டிய பங்கை பற்றியும் எனது கண்ணோட்டத்தை அவர்கள் தலைகீழாக மாற்றிவிட்டனர். "ஜான், உனது மரணப்படுக்கையில் இருக்கும்போது, அலுவலகத்தில் மேலும் அதிக நேரம் செலவிட்டிருக்க வேண்டும் என்று நீ ஒரு போதும் நினைக்கமாட்டாய்," என்று எனது தந்தை கூறினார். அவர் சொன்னது மிக மிகச் சரி.

எனவே, நான் வீட்டில் மேலும் கொஞ்சநேரம் அதிகமாகச் செலவிடத் தொடங்கினேன். ஒரு நல்ல சிறப்பான, ஆனால், சாதாரணமான ஒரு வாழ்க்கை முறைக்குள் நான் அமுந்திப் போனேன். ரோடரி க்ளப்பில் சேர்ந்தேன். சனிக்கிழமைகளில், எனது சக பங்குதாரர்களையும், வாடிக்கையாளர்களையும் மகிழ்ச்சியாக இருக்கச் செய்ய, கோல்ஃப் விளையாடினேன். ஆனால், ஒன்றை உங்களிடம் நிச்சயம் சொல்லவேண்டும். எனது அமைதியான தருணங்களில் நான் அடிக்கடி ஜூலியனைப் பற்றி எண்ணமிட்டேன். நாங்கள் எதிர்பாராத விதமாகப் பிரிய நேர்ந்த பின்னர் கடந்து சென்றுள்ள ஆண்டுகளில் அவர் என்னவானாரோ என்று சிந்தித்தேன்.

ஒரு வேளை அவர் இந்தியாவிலேயே தங்கியிருக்கலாம். இந்தியா ஒரு பலதரப்பட்ட கலாசாரங்களையும் வேறுபாடுகளையும் கொண்ட நாடு. அவரைப் போன்ற அமைதியற்ற ஆன்மாக்கள் கூட அதைத் தமது தங்குமிடமாக ஆக்கிக் கொள்ள முடியும். அல்லது ஒருக்கால் அவர் நேபாளத்தில் சுற்றுப் பயணமாக நடந்து சென்று கொண்டிருக்கிறாரோ? அல்லது கேமன்ஸின் அருகில் ஆழ்கடலில் மூழ்கி ஸ்கூபா டைவிங் செய்து கொண்டிருக்கிறாரோ? ஒன்று மட்டும் நிச்சயம் அவர் மறுபடி சட்டத்

தொழிலுக்கு வரவில்லை. சட்டப்பணியிலிருந்து விடுபட்டு, தன்னைத்தானே நாடுகடத்திக் கொண்டு அவர் சென்றுவிட்ட பின்னர், அவரிடமிருந்து ஒரு அஞ்சல் அட்டை கூட யாருக்கும் வரவில்லை.

இரண்டு மாதங்களுக்கு முன், எனது வாசல் கதவு தட்டப்பட்டது. இது எனது கேள்விகளில் சிலவற்றிற்கான முதல் பதில்களைத் தந்தது. ஒரு மிகக் கடுமையான வேலைப் பளுமிக்க நாளின் இறுதியில் எனது கடைசிக் கட்சிக்காரருடன் நான் அப்போது தான் பேசி முடித்திருந்தேன். எனது புத்திசாலியான சட்ட உதவியாளரான ஜெனவீவ் எனது சிறிய, நன்கு அலங்கரிக்கப்பட்டிருந்த அலுவலகத்திற்குள் தனது தலையை நீட்டினாள்.

“ஜான், உங்களைப் பார்க்க யாரோ வந்திருக்கிறார். விஷயம் அவசரம் என்றும், உங்களுடன் பேசாமல் தான் திரும்பிப் போகப் போவதில்லை என்றும் அவர் சொல்கிறார்”, என்றாள் அவள். “நான் வெளியே கிளம்பிக் கொண்டிருக்கிறேன்”, என்று நான் பொறுமையற்றுப் பதிலளித்தேன். “ஹாமில்டன் வழக்கின் குறிப்புகளை முடிப்பதற்கு முன் நான் ஏதாவது கொறித்தாக வேண்டும். யாரையும் பார்ப்பதற்கு இப்போது எனக்கு நேரமில்லை. எல்லோரையும் போல, சந்திப்பதற்கு ஒரு நாளைக் குறிக்கச் சொல் அவர் மேற்கொண்டு ஏதாவது உனக்குச் சிரமம் கொடுத்தால், காவலாளிகளைக் கூப்பிடு”.

“ஆனால், உங்களைப் பார்ப்பது உண்மையில் அவருக்கு மிக அவசியம் என்று அவர் கூறுகிறார். எனது மறுப்பை ஏற்றுக் கொள்ள மறுக்கிறார்”.

ஒருகணம், நானே காவலாளர்களை அழைக்கலாமா என்று சிந்தித்தேன். ஆனால், ஒரு வேளை இந்த மனிதர் ஏதேனும் முக்கியமான பிரச்சனையில் இருக்கக் கூடும் என்று கருதி, மன்னித்துவிட்டு விடலாம் என்று முடிவு செய்தேன். “சரி, அவரை உள்ளே வர விடு. ஒரு வேளை இந்தப் பணி எனக்குப் பயன்படக் கூடும்”, என்று சொல்லிவிட்டு மறுபடி உள்ளே திரும்பினேன்.

எனது அலுவலகத்தின் வாசல் கதவு மெல்லத் திறந்தது. அது முழுவதுமாகத் திறந்து புன்னகை புரியும் ஒரு நபரை வெளிக்காட்டியது. அவருக்கு முப்பது, முப்பத்தி ஐந்து வயதிருக்கலாம். உயரமாகவும், ஒல்லியாகவும், கட்டுமஸ்தான உடலுடன் இருந்த அவரிடமிருந்து மிக அதிகமான சக்தியும், உயிர்த்துடிப்பும் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. மிகச் சிறப்பான குடும்பங்களிலிருந்து வந்த மிகச் சிறப்பான சிறுவர்களை, என்னுடன் சட்டக் கல்லூரியில் படித்த சிறுவர்களை, அவர் எனக்கு நினைவூட்டினார். அவர்கள் மிகச் சரியான வீடுகள், மிகச் சரியான கார்கள் மற்றும் முக அழகு, தோல் அழகு இவற்றைக் கொண்டிருந்தனர். ஆனால், என்னைப் பார்க்க வந்தவர் வெறும் இளமையழகுடன் மட்டும் தோன்றவில்லை. அதற்கும் கீழே, அடி ஆழத்தில், அவரிடம் ஒரு அமைதி குடிகொண்டிருந்தது. இதனால், அவரிடம் ஒரு தெய்வீகத் தன்மை கொலுவிருந்தது போலவே தோன்றியது. அவரது கண்கள்!

ஆஹா! ஒரு சின்னஞ்சிறு இளைஞன் தனது முகத்தை முதன் முதலில் சவரம் செய்யும்போது அவனது மென்மையான தசையைச் சந்திக்கும் ஒரு புத்தம் புதிய சவரக் கத்தியைப் போல் அந்த குத்தித் தாக்கும் நீல விழிகள் என்னை மொத்தமாய்க் கிழித்து வெளியேறின.

'எனது வேலையை வெடி வைத்துத் தகர்க்க வந்துள்ள இன்னுமொரு சூடான வக்கீல்' என்று நான் எனக்குள்ளே எண்ணமிட்டேன். 'கடவுளே! ஏன் அவன் அங்கேயே நின்று கொண்டு என்னைப் பார்த்துக் கொண்டிருக்கிறான்? சென்ற வாரம் நான் வென்ற பெரிய விவாகரத்து வழக்கில் நான் வாதாடியது இவனது மனைவியின் சார்பிலோ? அடடா, அப்படி எதுவும் இருக்கக்கூடாது! ஒரு வேளை, காவலாளர்களை அழைக்கலாம் என்று நினைத்தது ஒன்றும் அவ்வளவு முட்டாள் தனமான எண்ணம் இல்லையோ?' இவ்வாறு எனது சிந்தனை ஓடியது.

வந்த இளைஞனோ என்னைத் தொடர்ந்து பார்த்த வண்ணம் இருந்தான். புன்னகை தவழும் முகத்துடன், புத்தபிரான் தனது மனதுக்குகந்த மாணவன் ஒருவனை அன்புடன் பார்ப்பது போல அது இருந்தது. ஒரு நீண்ட நெடிய, சங்கடமான மௌனத்திற்குப் பின், அவர் பேசினார். அவரது குரல், வியப்புக்குரிய வகையில் கம்பீரத்துடன் ஒலித்தது.

"உனது பார்வையாளர்கள் எல்லோரையும் நீ இப்படித் தான் நடத்துவாயா ஜான்? ஒரு நீதிமன்றத்தில் வெற்றி பெறும் வித்தையில் உனக்குத் தெரிந்துள்ளதையெல்லாம் உனக்குக் கற்றுக் கொடுத்தவர்களுக்கும் இதே கதிதானா? எனது தொழில் இரகசியங்களை நான் என்னுடனேயே வைத்துக் கொண்டிருந்திருக்க வேண்டும்." இதழ்கள் ஒரு பெரிய புன்னகையில் விரிய, அவர் கூறினார்.

எனது அடிவயிற்றில் ஒரு இனந்தெரியாத உணர்வு கிச்சுக்கிச்சு மூட்டியது. அந்தக் கரகரப்பான, தேனின் இனிமை தோய்ந்த குரலை நான் உடனடியாக அடையாளம் கண்டு கொண்டேன். என் இதயம் வேகமாகவும், கனமாகவும் அடித்துக் கொள்ளத் துவங்கியது.

"ஜூலியன்? நீங்களா? என்னால் இதை நம்ப முடியவில்லை! உண்மையில் இது நீங்கள் தானா?"

வந்தவரின் அதிர் சிரிப்பு எனது சந்தேகத்தை முற்றிலுமாகத் தெளிய வைத்தது. என் முன்னால் நின்று கொண்டிருந்த இளைஞர் இந்தியாவில், வெகு காலத்துக்கு முன்னர் காணாமல் போயிருந்த யோகியைத் தவிர வேறு யாருமில்லை. ஜூலியன் மான்டில்! நம்பமுடியாத அவரது மாற்றத்தைக் கண்டு நான் திகைத்துப் போனேன். எனது முந்நாள் சக பணியாளரின் சவக்களை சிந்தும் முகத்தோற்றம், திணற வைக்கும் இருமல் மற்றும் உயிரற்ற கண்கள் எல்லாமே எங்கோ போய்விட்டிருந்தன.

அவரது பொதுவான அடையாளமாகிப் போயிருந்த அந்த வயது முதிர்ந்த தோற்றமும், மரணக்களையும் முற்றிலுமாக மறைந்தே போயிருந்தன. இவற்றுக்குப் பதிலாக, எனக்கு முன்னால் நின்று கொண்டிருந்தவர் உடல்நலத்தின் உச்சக்கட்டத்தில்

இருந்தார். அவரது சுருக்கமற்ற முகம் ஒளிவிட்டுக் கொண்டிருந்தது. கண்கள் மிகுந்த பிரகாசத்துடன், அசாதாரணமான அவரது சக்தியை வெளிக்காட்டுகின்ற வகையில் ஒரு சாளரத்தைப் போல இருந்தன. இவை எல்லாவற்றையும் விட மிகுந்த வியப்பூட்டும் ஒன்று, ஜூலியனிடமிருந்து வெகு தெளிவாக வெளிவந்துக் கொண்டிருந்த அமைதியாகும். அவர் முன் உட்கார்ந்து அவரையே பார்த்துக் கொண்டிருந்த நான் முற்றிலும் அமைதியாக உணர்ந்தேன். ஒரு தலைசிறந்த, முன்னணியில் இருந்த சட்ட நிறுவனத்தின் கவலை நிறைந்துள்ள முதலாம் தர மூத்த பங்குதாரராக அவர் இப்போது இல்லை. மாறாக, எனக்கு முன்னால் இருந்த மனிதர் இளமை நிறைந்த உயிர்த்துடிப்புள்ள, புன்சிரிப்பு நிறைந்த, மாற்றத்தின் ஒரு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்.

3

ஜூலியன் மான்டிலின் அற்புத மாற்றம்

புதிய, பெரும் முன்னேற்றமடைந்துள்ள ஜூலியன் மான்டிலைக் கண்டு நான் பெரும் வியப்புக்குள்ளானேன்.

'ஒன்றிரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு களைத்துப் போன முதியவர் போலத் தோற்றமளித்த ஒருவர் இப்போது எப்படி இவ்வளவு சக்தியுடனும், உயிர்த்துடிப்புடனும் காணப்படமுடியும்?' என்று நான் எனக்குள்ளே ஓசையில்லாமல் கேள்வி எழுப்பிக் கொண்டேன். 'இளமையின் ஊற்றிலிருந்து அவர் பருகிய ஏதேனும் ஒரு மாய மருந்தா? இந்த அசாதாரணமான திருப்பத்திற்கு என்ன காரணம்?' இவ்வாறு என் சிந்தனை ஓடியது.

ஜூலியன் தான் முதலில் மௌனத்தைக் கலைத்தார். சட்ட உலகின் அதீதமான போட்டிகள் அவரை வெகுவாகப் பாதித்ததாக அவர் கூறினார். அந்தப் பாதிப்பு, உடல்ரீதியானதாகவும், உணர்வுரீதியானதாகவும் மட்டுமின்றி, ஆன்மீக ரீதியாகவும் இருந்தது என்றார் அவர். அந்த உலகின் வெகு வேகமான ஓட்டமும், முடிவற்ற நெருக்கடிகளும் அவரைக் களைப்படையச் செய்து வலுவிழக்கச் செய்துவிட்டன. தனது உடல் கணுக்கணுவாக விட்டுப் போனதாகவும், மனம் ஒளியிழந்து விட்டதாகவும் அவர் ஒப்புக் கொண்டார்.

அவரைத் தாக்கிய இதய நோய், மேலும் ஆழமான ஒரு பிரச்சனையின் ஒரே ஒரு அறிகுறியாகத் தான் இருந்தது. உலகத்தரம் வாய்ந்த ஒரு வழக்கறிஞருக்கே உரித்தான இடைவிடாத அழுத்தமும், அயரவைக்கும் செயல்திட்டங்களும் அவரது மிக முக்கியமான, மேலும், மிக மனிதத் தன்மையான சொத்தையே அழித்துவிட்டிருந்தன. அது தான் அவரது ஆன்மத்துடிப்பு, உயிர்த்துள்ளல், அவரது மருத்துவர் தனது இறுதி முடிவாக - ஒன்று, அவர் சட்டத் தொழிலை விட்டுவிடவேண்டும் இல்லாவிட்டால், தனது வாழ்வையே விட்டுவிட வேண்டிவரும் என்று கூறியபோது, தனது இளமைப் பருவத்தில் முன்னர் எப்போதோ உணர்ந்திருந்த அந்த உன்னதத்தீயை மீண்டும் பற்றியெழச் செய்வதற்கான ஒரு பொன்னான வாய்ப்பைத் தான் கண்டதாக அவர் என்னிடம் கூறினார். சட்டத்தொழிலானது ஒரு இன்பமான செயல்பாடாக இல்லாமல், ஒரு வெறும் பணம் ஈட்டும் தொழிலாக மாறிவிட்டபோது, அந்தத்தீ அணைந்துபோனது என்றும் அவர் கூறினார்.

தான் எவ்வாறு தனது சொத்துக்களையெல்லாம், உடைமைகளையெல்லாம் விற்றுவிட்டு இந்தியாவை நோக்கிச் சென்றார் என்று விளக்கும்போது, ஜூலியன் பெரிதும் உணர்ச்சி வசப்பட்டார். இந்தியா - அந்த நாட்டின் புராதனக் கலாசாரமும், ஆன்மீகப் பாரம்பரியமும் அவரை எப்போதுமே வெகுவாகக் கவர்ந்து வந்திருந்தன. ஒரு சின்னஞ்சிறு கிராமத்திலிருந்து அதை அடுத்திருந்த கிராமம் என்று அவர் சில சமயங்களில் கால்நடையாகவும், சில சமயங்களில் ரயில் மூலமாகவும் பயணித்துச் சென்றார். புதிய பழக்கங்களைக் கற்றுக் கொண்டு, காலங் காலமாய் மாற்றமறியாத காட்சிகளைக் கண்டு கொண்டு, கொஞ்சம் கொஞ்சமாக, இந்தியர்களை நேசிக்கத் துவங்கியவண்ணம் அவர் சென்றார். நட்பின் இதமான கதகதப்பு, அன்பு, பரிவு, இவற்றுடன், வாழ்க்கையின் உண்மையான பொருள் பற்றிய ஒரு புத்திளம் கண்ணோட்டத்தையும் அவர்கள் கொண்டிருந்ததை அவர் உணர்ந்தார். வெகு குறைவான உடைமைகளையே கொண்டிருந்தவர்கள் கூட, தமது இல்லங்களை ஏன், இதயங்களையும் இந்த மேலைநாட்டின், வெகுவாக அடிபட்டு நொந்து போயிருந்த பயணியின்பால் திறந்தனர்.

நாட்கள் வாரங்களாகக் கரைந்து மறைய மறைய இந்தியாவின் மயக்கும் சுற்றுச்சூழலில் ஜூலியன் மெல்ல மெல்ல மறுபடியும் தான் உயிர்த்துடிப்பை உணர்வதையும், முழுமை பெறுவதையும் கண்டார். இளம் சிறுவனாக இருந்தபோது உணர்ந்ததை, வெகுகாலம் கழித்து, இப்போது தான் மறுபடியும் முதல்முதலாக உணரக் கண்டார். அவருக்கே இயல்பான கண்டுகொள்ளும் உணர்வும், உருவாக்கும் சுடரும் மறுபடி அவருக்குள் எழுந்தன. அவற்றோடு கூட, உயிர் வாழ்வதற்கான அவரது உற்சாகமும் சக்தியும் கூடத் திரும்ப வந்தன. மேலும் மகிழ்ச்சியையும் கூடுதல் அமைதியையும் அவர் உணர்ந்தார். எல்லாவற்றுக்கும்மேலாக, அவர் மறுபடியும் வாய்விட்டுச் சிரிக்கத் தொடங்கினார்.

இந்த தொலைதூர நாட்டில் தான் செலவிட்ட ஒவ்வொரு கணத்தையும் அவர் வெகுவாக நெஞ்சுக்குள் அணைத்து ஏற்றுக் கொண்டபோதிலும், இந்தியாவிற்குச் சென்றதன் காரணம், அதிகம் உழைத்துக் களைத்துப் போன ஒரு மூளையை ஆறுதல்படுத்துவதற்கான வெறும் விடுமுறை மட்டுமல்ல என்று ஜூலியன் கூறினார். இந்த தூரதேசத்தில் தான் பயணித்திருந்த காலம், 'தான் என்பதன் ஒரு சொந்த, தனிப்பட்ட ஒடிசி - மகாபயணம்' என்று அவர் வர்ணித்தார். தான் உண்மையிலேயே யார் என்றும், தனது வாழ்க்கையின் பொருள் என்ன என்றும், அதிகத் தாமதமாவதற்கு முன்னரே கண்டுகொண்டாக வேண்டும் என்று தான் உறுதி பூண்டதாகவும் அவர் என்னிடம் அந்தரங்கமாகக் கூறினார். இதைச் செய்வதற்கு அவர் முதலில் செய்ய வேண்டிய பணி, ஒரு பலன்தரும், நிறைவூட்டும், ஞானத்தெளிவுடன் கூடிய வாழ்க்கையை வாழ்வது பற்றிய, இந்தியக் கலாசாரத்திற்கே உரிய பரந்துவிரிந்த புராதன அறிவின் சேமிப்புடன் ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதாக இருந்தது.

"ஏதோ முறையற்றுப்போய், மரபுமாறிப் பேசுவது போலத் தோன்ற வேண்டும் என நான் எண்ணவில்லை. ஆனால், எனக்குள்ளே இருந்து ஒரு கட்டளையை, உத்தரவை, நான் பெற்றது போல அது இருந்தது. முன்னர் தொலைத்துவிட்ட சுடரை

மீண்டும் தூண்டுவதற்கான ஒரு ஆன்மீகப் பயணத்தை நான் தொடங்கப் போகிறேன் என்று ஒரு உள்ளார்ந்த கட்டளையைப் போல அது இருந்தது,'' என்றார் ஜூலியன். ''எனக்கு ஒரு பெரும் விடுதலையைக் கொடுத்த காலமாக அது இருந்தது,'' என்றும் அவர் கூறினார்.

மேலும் அதிகமாக அவர் தேடத்தேட, நூறு ஆண்டுக்கும் அதிகமான காலம் உயிர் வாழ்ந்திருந்த இந்தியத் துறவிகளைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டார். அத்துறவிகள், வயது முதிர்ந்தபோதிலும், இளமையும், சக்தியும், உயிர்த்துடிப்பும் கொண்ட வாழ்க்கையை நிலைநிறுத்திக் கொண்டிருந்ததையும் அவர் அறிந்தார். எவ்வளவு தொலைவு அவர் பயணம் செய்தாரோ அவ்வளவு அதிகமாக, மனதைக் கட்டுப்படுத்தி ஆன்மீக விழிப்புணர்வைப் பெறும் கலையைக் கற்றிருந்த, காலத்தை வென்ற யோகிகளைப் பற்றி அவர் அறிந்து கொண்டார். இவற்றைக் காணக் காண, இந்த மனித இயல்பின் அற்புதங்களின் பின்னால் இருந்த அற்புதச் செயல்பாடுகளின் இரகசியங்களைப் புரிந்து கொள்ளத் துடித்தார். இவர்களது தத்துவங்களைத் தனது வாழ்விலும் புகுத்திப் பயன்பெறலாம் என்று நம்பினார்.

தனது பயணத்தின் தொடக்கக் கட்டங்களில், பல பிரபலமான, அதிக உயர்வாக மதிக்கப்பட்ட ஆசான்களை ஜூலியன் தேடிச் சென்றார். அவர்களில் ஒவ்வொருவரும், தன்னை விரிந்த கரங்களுடனும், திறந்த இதயங்களுடனும் வரவேற்றனர் என்றும், தமது உயிர் வாழ்தல் பற்றிய உயர்வான விஷயங்களைப் பற்றித் தமது வாழ்நாள் முழுவதும் அமைதியான சிந்தனையில் அமர்ந்து, தாம் உணர்ந்து கொண்டிருந்த ஞானத்தின் அருமணிகளைத் தன்னுடன் வெகுதாராளமாகப் பகிர்ந்து கொண்டனர் என்றும் ஜூலியன் என்னிடம் கூறினார். மேலும், இந்தியாவின் ஆன்மீக திருநாட்டின் பரப்பெங்கிலும் சிதறிக் கிடந்த புராதனக் கோவில்களின் வர்ணிக்கவியலாத எழிலையும் அவர் விளக்கிக் கூற முயன்றார். அக்கோவில்கள், காலங்காலமாய் அம்மண்ணில் வளர்ந்து செழித்த ஞானக் கருவூலத்தைப் போற்றிப் பாதுகாக்கும் காவலாளிகளாக விண்ணை உரசி நின்று கொண்டிருந்தன. அந்தச் சுற்றுச்சூழலின் புனிதத்துவம் அவரைப் பெரிதும் நெகிழச் செய்தது என்று அவர் கூறினார்.

''ஜான், எனது வாழ்வின் ஒரு மிக மிக மந்திர சக்தி வாய்ந்த அற்புதமான காலகட்டமாக அது இருந்தது. இதோ நான் ஒரு ஓடிக் களைத்துப் போன வழக்குரைஞர் எனது உடைமைகள் முழுவதையும் - பந்தயக் குதிரையிலிருந்து கைக்கடிகாரமாகிய ரோலக்ஸ் வரையில் - விற்றுத் தொலைத்துவிட்டு, எஞ்சியிருந்த பொருள்களை ஒரு பையில் போட்டுக் கட்டிக் கொண்டு கிளம்பியிருந்தேன். எனது பயணம், கீழை நாடுகளின் காலத்தால் அழியாத பாரம்பரியங்களை நோக்கியதாக இருந்தது. அந்தப் பயணத்தின் போது, அந்தப் பை மட்டுமே என்னை விட்டகலாத ஒரே துணைவனாக இருந்தது.''

''இதையெல்லாம் விட்டுச் செல்வது கஷ்டமாக இருந்ததா?'' என்றேன் நான்.

“எனது தொழிலையும், உலக ரீதியான உடைமைகள் அனைத்தையும் விட்டுவிட்டு செல்வதான முடிவு வெகு இயல்பானதாகத் தோன்றியது. ‘எதிர்காலத்துக்கான உண்மையான தாராளச் செயல்பாடு என்பது, இப்போது நிகழ்காலத்தில் உள்ளது எதுவோ அதற்கு எல்லாவற்றையும் கொடுப்பதில் தான் உள்ளது, என்று ஆல்பர்ட் தாமஸ் முன்னர் கூறியுள்ளார். ஆம், நான் அதைத் தான் செய்தேன். நான் மாறியாக வேண்டும் என்பது எனக்குத் தெரிந்தது. எனவே, எனது இதயத்தின் குரலுக்குச் செவிகொடுத்து, அதை மிகவும் தடாலடியான வகையில் செய்யலாம் என்று முடிவெடுத்தேன். எனது கடந்த காலத்தின் மூட்டைகளை பின்னால் விட்டு விட்டுச் சென்றபோது, எனது வாழ்க்கை வெகு எளிமையானதாகவும், மேலும் அதிகப் பொருள் உள்ளதாகவும் ஆனது. வாழ்வின் பெரிய இன்பங்களை விரட்டிக் கொண்டு போவதில் நிறைய நேரம் செலவழிப்பதை நிறுத்தியவுடனேயே, சின்னச் சின்னச் சந்தோஷங்களை ரசித்து அனுபவிக்கத் தொடங்கினேன். நிலாக்காயும் வானத்தில் மின்னி மினுக்குகின்ற நட்சத்திரங்களைப் பார்த்துக் கொண்டிருப்பது, அல்லது ஒரு அருமையான வேனிற்காலக் காலைநேரத்தில், சூரியனின் ஒளிக்கற்றைகளில் ஊறித் திளைப்பது போன்றவை அவை. மேலும், இந்தியா, அறிவு ரீதியாக வெகு உணர்வூட்டும் இடமாக இருந்ததால், நான் இங்கு விட்டுச் சென்றவற்றைப் பற்றி வெகு அபூர்வமாகத் தான் சிந்தித்துப் பார்த்தேன்.”

அந்தத் தொலைதூரக் கலாசாரத்தின் கல்விமான்களையும், அறிவாளிகளையும் தொடக்கத்தில் கண்டு பேசிய சந்திப்புகள், ஆர்வமூட்டுவனவாக இருந்தன. எனினும், ஜூலியன் ஆவலுடன் தேடிக் கொண்டிருந்த அறிவை அவை நல்கவில்லை. அவர் விரும்பிய ஞானமும், தனது வாழ்வின் தரத்தை மாற்றிடக்கூடும் என்று அவர் நம்பிய நடைமுறைச் செயல்பாடுகளும், அவரது பயணத்தின் தொடக்க நாட்களில் அவர் கைகளில் சிக்காமல் எட்டி எட்டிப் போக்குக் காட்டின. இந்தியாவில் ஏழு மாதங்கள் கழித்த பின்னரே, அவருக்கு வேண்டிய தொடர்பு முதல் முறையாகக் கிடைத்தது.

இமயமலையின் அடிவாரத்தில் மயங்கிய தூக்கக் கிறக்கத்தில் உட்கார்ந்திருக்கும் ஒரு புராதன, ஆன்மீகச் செறிவு கொண்ட காஷ்மீரில் அவர் இருந்த போது தான் யோகி கிருஷ்ணன் என்ற பெயர் கொண்ட நபரைச் சந்திக்கும் பேறு அவருக்குக் கிடைத்தது. ஒல்லியான உருவத்துடன், சுத்தமாக மழிக்கப்பட்ட தலையுடன் காணப்பட்ட அவர், ‘தனது பூர்வஜென்மம்’ என்று அவரே சிரிப்புடன் விளையாட்டாகக் குறிப்பிட்ட காலத்தில், ஒரு வழக்குரைஞராக இருந்தவர் தான். நவீன புதுடில்லியின் அடையாளமாக விளங்குகின்ற அசுர வேகத்தில் வெறுப்புக் கொண்டு, அவரும் தனது உடைமைகளைத் துறந்துவிட்டு, மேலும் எளிமையான ஒரு உலகத்துக்குள் தன்னை நுழைத்துக் கொண்டிருந்தார். ஒரு கிராமக் கோவிலைக் கவனித்துக் கொள்ளும் பொறுப்பை ஏற்றுக் கொண்டவர், தன்னைத் தானே அறிந்து கொண்டதாகவும், வாழ்வின் பெரிய திட்டத்தில் தனது நோக்கத்தைப் புரிந்து கொண்டதாகவும் கிருஷ்ணன் கூறினார்.

“ஒரு நீண்ட விமானத் தாக்குதலுக்கான தயாரிப்பைப் போல எனது வாழ்க்கையை வாழ்வது எனக்கு அலுத்துவிட்டது. எனது வாழ்க்கைப் பணி பிறருக்குச்

சேவை செய்வது தான் என்பதையும், எப்படியாவது இந்த உலகை மேலும் சிறப்பானதாகச் செய்வதில் எனது பங்கை ஆற்ற வேண்டும் என்பதையும் நான் உணர்ந்து கொண்டேன். இப்போது நான் கொடுப்பதற்காக வாழ்கிறேன்'' என்று அவர் ஜூலியனிடம் கூறினார்.

“எனது பகல் மற்றும் இரவுகளை நான் இந்தக் கோவிலில் கழிக்கிறேன். ஒரு கடுமையான, எளிமையான ஆனால் நிறைவூட்டும் வாழ்வை வாழ்கிறேன். நான் உணர்ந்து கொண்டுள்ள விஷயங்களை இங்கு வழிபட வருகின்ற அனைவருடனும் பகிர்ந்து கொள்கிறேன். தேவையில் இருப்பவர்களுக்கு உதவுகிறேன். நான் ஒரு பூசாரி அல்ல. தனது ஆன்மாவைக் கண்டுகொண்டுவிட்ட ஒரு சாதாரண மனிதன்.''

ஒரு வழக்குரைஞராக இருந்து யோகியாக மாறியுள்ள இந்த நபரிடம் ஜூலியன் தனது சொந்தக் கதையைக் கூறினார். வெகு முன்னணியில் இருந்த வசதி வாய்ப்புகள் நிறைந்த தனது பழைய வாழ்க்கையைப் பற்றி விளக்கினார். யோகி கிருஷ்ணனிடம், தனது பணத்தாசை பற்றியும், வேலை மீதிருந்த வெறியைப் பற்றியும் எடுத்துச் சொன்னார். சமநிலையற்ற வாழ்க்கை முறையின் வெகுவேகக் காற்றுகளினால் தனது வாழ்வின் சுடரே அலை பாயத் தொடங்கியபோது, முன்னர் ஒளிவிட்டுப் பிரகாசித்த அச்சுடர் மங்குவது போலத் தோன்றிய பொழுது, அவர் அனுபவித்த ஆன்மாவின் பேராபத்தைப் பற்றியும், அதன் காரணமாக அவருக்குள் எழுந்த பெருங்குழப்பத்தைப் பற்றியும் உணர்ச்சி வசப்பட்டு அவரிடம் வெளிப்படுத்தினார்.

“என் நண்பா! இதே பாதையில் நானும் நடந்து வந்துள்ளேன். நீங்கள் உணர்ந்துள்ள அதே வேதனையை, வலியை, நானும் அனுபவித்துள்ளேன். இருந்தும், எல்லாமே ஒரு காரணத்துக்காகத் தான் நடைபெறுகிறது என்பதை நான் கற்றுக் கொண்டுள்ளேன்,'' என்று யோகி கிருஷ்ணன் வெகு அனுதாபத்துடன் கூறினார்.

“ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒரு காரணம் உள்ளது. ஒவ்வொரு பின்னடைவும் தனக்கே உரிய பாடத்தைக் கொண்டுள்ளது. தோல்வி என்பது, அது தனிப்பட்ட முறையிலானதாலும் சரி, தொழில் பற்றிய தானாலும் சரி, அல்லது ஆன்மீக ரீதியிலானதாலும் சரி, ஒருவரது சொந்த வளர்ச்சிக்கு மிகவும் அத்தியாவசியமானதாகும். உள்ளார்ந்த வளர்ச்சியையும், மிக அதிகமான உளரீதியிலான பலன்களையும் அது கொண்டு வருகிறது. உங்கள் கடந்த காலத்தைப் பற்றி ஒருபோதும் வருத்தம் கொள்ளாதீர்கள். மாறாக, அதை ஒரு ஆசானாக ஏற்று அரவணைத்துக் கொள்ளுங்கள் ஏனெனில், ஒரு ஆசானாகத் தான் அது இருக்கிறது.''

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் தான் பெரும் உவகை கொண்டதாக ஜூலியன் என்னிடம் சொன்னார். ஒருக்கால், தான் இது நாள் வரையில் தேடிக் கொண்டிருந்த வழிகாட்டியை அவர் யோகி கிருஷ்ணனின் வடிவில் கண்டு கொண்டிருக்கக் கூடும். அதிகச் சமநிலையும், கவர்ச்சியையும், மகிழ்ச்சியையும் கொண்ட ஒரு வாழ்க்கையை உருவாக்குவதற்கான இரகசியங்களைத் தனக்குக் கற்றுக் கொடுக்க அவரைக் காட்டிலும் மேலான ஒரு ஆசிரியர் யாராக இருக்கக் கூடும்.

ஏனெனில், அவரும் தன்னைப் போலவே ஒரு துடிப்பான வழக்கறிஞராக இருந்து, தனது சொந்த ஆன்மீகப் பயணத்தின் வாயிலாக, மேலான வாழ்க்கை முறையைக் கண்டுகொண்டுள்ளவர் தானே!

''கிருஷ்ணன், உங்களது உதவி எனக்குத் தேவை. ஒரு செழிப்பான, மேலும் முழுமையான வாழ்க்கையை எவ்வாறு கட்டியெழுப்புவது என்பதை நான் கற்றுக் கொள்ள வேண்டும்.'' ''என்னால் இயன்ற வகையில் உங்களுக்கு உதவுவதில் நான் பெருமைப்படுகிறேன்,'' என்றார் யோகி. ''ஆனால், நான் உங்களுக்கு ஒரு ஆலோசனை சொல்லலாமா?''

''நிச்சயமாக!''

''இந்தச் சிறிய கிராமத்தின் கோவிலைப் பராமரித்து வந்துள்ள காலம் முழுவதும், இமயமலையின் உயரமான பகுதிகளில் வசித்து வருகின்ற ஒரு துறவிகளின் கூட்டம் பற்றி சிலர் பேசக் கேட்டுள்ளேன். எவருடைய வாழ்க்கைத் தரத்தையும் வெகு தீவிரமாக மாற்றி மேலடையச் செய்யும் ஏதோ ஒரு அமைப்பை அவர்கள் கண்டுபிடித்துள்ளனர் என்று புராதனக் கதைகள் கூறுகின்றன. இது வெறும் உடல்ரீதியான மேம்பாடு மட்டுமல்ல. ஒரு முற்றிலும் முழுமையான ஒருங்கிணைத்து அமைக்கப்பட்ட, என்றென்றும் புதியதாக உள்ள கொள்கைகளையும், காலத்தைத் தாண்டிய செய்முறைகளையும் அது கொண்டுள்ளது என்றும், அது மனம், உடல் மற்றும் ஆன்மா ஆகியவற்றின் உள்ளார்ந்த சக்திகளை விடுவித்து, வெளிக் கொணரவல்லது என்றும் சொல்லப்படுகின்றது.''

ஜூலியன் இதைக் கேட்டுப் பெரிதும் ஆர்வம் கொண்டார். இது தனக்கு மிகவும் பொருத்தமான ஒன்றாக இருப்பதாக அவருக்குத் தோன்றியது.

''இத்துறவிகள் எங்கே வசிக்கிறார்கள்?''

''அது யாருக்கும் தெரியாது. அவர்களைத் தேடிச் செல்வதற்கு எனக்கு வயது அதிகமாகிவிட்டது. ஆனால், நண்பரே, நான் ஒன்று மட்டும் உங்களுக்குச் சொல்வேன். பலரும் அவர்களைக் கண்டுபிடிக்க முயன்று தோல்வியடைந்துள்ளனர். வெகு சோகமான முடிவுகளைச் சந்தித்துள்ளனர். இமயமலையின் உயர்பகுதிகள் ஒப்பிட்டுப் பார்க்க முடியாத அளவு ஆபத்தானவை. வெகு திறமைசாலியான மலையேறிகள் கூட அவற்றின் இயற்கையான பேராபத்துக்களின் முன்னால் உதவியற்றுப் போவார்கள். ஆனால், ஒளிவிடும் உடல்நலன், நிலைத்து நிற்கும் மகிழ்ச்சி மற்றும் உள்ளார்ந்த நிறைவு இவற்றுக்கான பொற்சாவிகளை நீங்கள் தேடிக் கொண்டிருந்தால் நீங்கள் தேடும் அந்த ஞானம் என்னிடத்தில் இல்லை. அவர்களிடம் உள்ளது.''

ஜூலியன் எதையுமே வெகு சுலபமாகக் கைவிட்டு விடுபவரல்ல. எனவே, அவர் யோகிகிருஷ்ணனை மேலும் வற்புறுத்தி விசாரித்தார். ''அவர்கள் எங்கு வசிக்கிறார்கள் என்று உங்களுக்கு நிச்சயமாகத் தெரியாதா?''

“என்னால் உங்களுக்குச் சொல்ல முடிந்ததெல்லாம், இக்கிராமத்து மக்கள் அவர்களை சிவானாவின் மகத்தான முனிவர்கள் என்று அழைக்கிறார்கள் என்பது தான். அவர்களது புராணப் பழங்கதைகளின் படி, சிவானா என்றால் ‘ஞானத்தின் பாலைவனச் சோலை’ என்று பொருள். இத்துறவிகள், அவர்களது உடல் அமைப்பாலும், தாக்கத்தினாலும் தெய்வீகமானவர்கள் என்று போற்றி மதிக்கப்படுகிறார்கள். அவர்களை எங்கே கண்டறிவது என்று எனக்குத் தெரிந்திருந்தால், அதை உங்களிடம் சொல்ல நான் கடமைப்பட்டுள்ளேன். ஆனால், சத்தியமாக, எனக்குத் தெரியாது. இன்னும் சொல்வதானால், எவருக்குமே தெரியாது,” என்று முடித்தார் யோகி.

மறுநாள் காலை, இந்தியச் சூரியனின் முதல் கதிர்கள் தொடுவானத்தின் வர்ணஜாலங்களிலே நர்த்தனமாடிக் கொண்டிருந்தபொழுது, காணமற்போயிருந்த சிவானா பிரதேசத்தைத் தேடித் தனது நடைப் பயணத்தைத் தொடங்கினார். முதலில் மலையேறுவதற்குத் தனக்கு உதவியாக ஒரு ஷெர்ப்பா வழிகாட்டியை அமர்த்திக் கொள்ளலாம் என்று அவர் நினைத்தார். ஆனால், ஏதோ ஒரு வினோதமான காரணத்தினால், இந்த ஒரு பயணத்தைத் தான் தனியாகத் தான் மேற்கொள்ள வேண்டியிருக்கும் என்று அவரது உள்ளுணர்வு கூறியது. எனவே, அதற்குப் பதிலாக, தனது வாழ்விலேயே முதன் முறையாக பகுத்தறிவு என்ற தனது தளைகளைக் களைந்துவிட்டு, தனது உள்ளுணர்வின் மீது நம்பிக்கை வைத்தார். தான் பாதுகாப்பாக இருப்போம் என்று அவர் உணர்ந்தார். தான் தேடிக் கொண்டிருந்ததை கண்டுபிடித்து விடுவோம் என்பதை அவர் எப்படியோ தெரிந்திருந்தார். எனவே, புனிதப் பயணம் செல்லும் ஒரு உத்வேகத்துடன் அவர் மலையேறத் துவங்கினார்.

முதல் சில நாட்கள் சுலபமாகவே இருந்தன. சில சமயங்களில், செதுக்குவதற்குச் சரியான மரத்துண்டைத் தேடியோ அல்லது இவ்வளவு உயரம் ஏறத் துணிந்த எல்லோருக்கும் இந்த கற்பனைக் காட்சி போன்ற இடம் கொடுக்கக்கூடிய ஒரு அமைதியான சரணாலயத்தை நாடியோ சென்றுக் கொண்டிருந்த ஒரு உற்சாகமான கிராமவாசியை அவர் தான் செல்லும் வழியில் சந்தித்ததுண்டு. பிற சமயங்களில் அவர் தன்னந்தனியே நடந்து சென்றார். அந்தத் தனிமையை, தான் இவ்வளவு காலம் கடந்து வந்திருந்த வாழ்க்கையைப் பற்றியும், இப்போது தான் எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்பது பற்றியும் அமைதியாகச் சிந்திப்பதற்கு அவர் பயன்படுத்தினார்.

வெகு விரைவிலேயே, மலையடிவாரத்திலிருந்த கிராமம் ஒரு சிறு புள்ளியாகத் தோன்ற ஆரம்பித்தது. இயற்கையின் எழிலான காட்சி பரந்து விரிந்து தோன்றியது. இமயத்தின் பனிபடர்ந்த உச்சிகளின் கம்பீரத் தோற்றத்தைக் கண்டபோது அவரது இதயம் வேகமாகத் துடிக்கலாயிற்று. ஒரு நீண்டநெடும் தருணம், மூச்சு விடவும் மறந்தவராய் அவர் ஸ்தம்பித்துப் போய் நின்றுவிட்டார். சுற்றுச்சூழலின் எழிலார்ந்த பின்னணியில் தாமும் இயற்கையுடன் இரண்டறக் கலந்து ஒன்றுபட்டுப் போனது போன்ற உணர்வு அவரை நிறைத்தது. ஏதோ பல ஆண்டுகாலம் உளம் கலந்து பேசிப் பழகி வெகு அந்தரங்கமான விஷயங்களைக் கூடப் பகிர்ந்து கொண்டு,

ஒருவரையொருவர் எள்ளி நகையாடிக் களித்திருந்த பழைய நண்பர்களின் நட்பைப் போன்ற ஒரு அன்னியோன்னியத்தை அவர் அங்கு உணர்ந்தார். புத்துணர்வூட்டும் மலைக்காற்று அவரது மனதைத் தெளிவுபடுத்தி உடலுக்கு உற்சாகத்தை ஊட்டியது. உலகின் பல பகுதிகளிலும் பலமுறை பயணம் செய்து பழக்கப்பட்டிருந்த ஜூலியன் இனிமேல் தான் பார்ப்பதற்கு ஒன்றும் இல்லை என்று தான் நினைத்திருந்தார். ஆனால், இதுபோன்ற எழிலை அவர் இதுவரையில் எங்குமே பார்த்தது கிடையாது. அந்த அற்புதமான மந்திர நேரத்தில் அவர் பருகித் திளைத்த அழகுக் கோலங்கள், இயற்கையின் வண்ணமிகு காவியங்களாகத் திகழ்ந்தன. ஒரே சமயத்தில் மகிழ்ச்சிப் பெருக்குடன், உற்சாகத்தின் சிகரத்தை எட்டியவராய் கவலையற்ற சுதந்திரப் பறவை போல அவர் உணர்ந்தார். மனிதகுலம் வெகு கீழே பின்னின்றுவிட, எல்லாவற்றையும் தாண்டியதொரு உச்சத்தில் ஜூலியன், இதுவரை தான் இருந்து வந்த ஒரு கூட்டுக்குள்ளிருந்து வெளிவந்து, சாதாரணத்தைத் தாண்டிய ஒரு அசாதாரண உலகை கண்டு கொள்ளத் தலைப்பட்டார்.

"அந்த உயரத்தில் இருந்தபோது, எனது மனதில் ஓடிக்கொண்டிருந்த எண்ணங்களை இன்னும் என்னால் நினைத்துப் பார்க்க முடிகிறது," என்றார் ஜூலியன். "இறுதியில் வாழ்க்கை என்பது முற்றிலும் ஒருவரது தேர்வுகளைப் பொறுத்தது. ஒருவர் எடுக்கும் முடிவுகளைப் பொறுத்து அவரது தேர்வுகளைப் பொறுத்து தான் அவரது தலைவிதி படிப்படியாக உருவாகிறது. இப்போது, நான் எடுத்துள்ள முடிவு சரியானது என்று நான் உறுதியாக உணர்ந்தேன். எனது வாழ்க்கை, ஒருபோதும் முன்னதைப் போல் இருக்காது என்பதையும் நான் அறிந்தேன். எனக்கு ஏதோ ஒரு மகத்தான விஷயம், அற்புதமான விஷயம் நடக்கப்போகிறது என்பது போல உணர்ந்தேன். அது ஒரு வியப்பூட்டும் விழிப்பாக, தெளிவாக இருந்தது."

இமயமலையின் மேலும் உயரமான பகுதிகளுக்கு ஜூலியன் ஏறிச் சென்றுக் கொண்டிருந்தபோது, தான் ஒரு பதற்றத்தை உணர்ந்ததாகவும் அவர் என்னிடம் சொன்னார்.

"ஆனால், அது ஒரு மிக நல்லவிதமான கவலை. அதாவது, ஒரு பெரிய விழாவில் பங்கேற்கு முன்னர், அல்லது ஒரு முக்கியமான வழக்கில் ஆஜராகு முன்னர், செய்தியாளர்கள் என்னைத் துரத்திக் கொண்டு நீதிமன்றப் படிகளில் பின்னால் வருவது போன்ற ஒரு பதற்ற உணர்வு அது! என்னுடன் வழிகாட்டியோ, வரைபடமோ இல்லாதபோது கூட, நான் சென்ற பாதை தெளிவானதாகவே இருந்தது. ஒரு மெல்லிய ஒற்றையடிப் பாதை, என்னை மலைகளினூடே உயர உயர இட்டுச் சென்றது. ஏதோ ஒரு உள்ளார்ந்த திசைமானி என்னிடம் இருந்தது போலவும் நான் சென்று சேர வேண்டிய இடத்தை நோக்கி அது என்னை மெல்ல மெல்ல உந்தித் தள்ளிச் செல்வது போலவும் தோன்றியது. மலையேறுவதை நிறுத்திவிட வேண்டும் என்று நானே விரும்பியிருந்தாலும் கூட என்னால் அது முடிந்திருக்காது என்றே நான் நினைக்கிறேன்."

ஜூலியன் வெகுவாக உணர்ச்சி வசப்பட்டுப் பேசினார். அவரது சொற்கள், கடும் மழைக்கு பின்னர் மலையிலிருந்து கொட்டும் காட்டாற்று வீழ்ச்சிபோலப் பொங்கிப் பெருகி ஒன்றன் மீது ஒன்று உருண்டோடி வந்தன.

தன்னைச் சிவானாவிற்கு இட்டுச் செல்லும் என்று அவர் நம்பியிருந்த பாதையில் மேலும் இரண்டு நாட்கள் அவர் பயணித்துச் சென்றுகொண்டிருந்தபோது ஜூலியனின் எண்ணங்கள் தனது பழைய வாழ்க்கையை நோக்கித் திரும்பின. தனது முந்தைய வாழ்வின் இறுக்கங்களிலிருந்தும், அழுத்தங்களிருந்தும் முற்றிலும் விடுபட்டது போல அவர் உணர்ந்தார். இருந்தும், தனது மீதமுள்ள வாழ்நாள் முழுவதையும், தனது சட்டத் தொழில் தனக்கு அளித்து வந்த அறிவுரீதியான சவால்கள் இல்லாமல் தன்னால் உண்மையிலேயே கழிக்க இயலுமா என்று அவர் சந்தேகப் படத்தான் செய்தார். ஏனெனில், ஹார்வர்டு சட்டக்கல்லூரியை விட்டு வெளிவந்த காலம் தொடங்கி, அவரது சட்டத் தொழில் அத்தகைய சவால்களை அவர் முன் வைத்து வந்திருந்தது. நகரின் முக்கியப் பகுதியில் இருந்த விண்ணை முட்டும் அடுக்குமாடிக் கட்டிடடத்தில் இருந்த அலுவலக அறையை, ஓக் மரத்தால் இழைத்து அலங்கரிக்கப்பட்ட பளீரிடும் அறையை நோக்கி, தான் ஒரு மிக மிகக் குறைவான விலைக்கு விற்றுவிட்டு வந்திருந்த எழிலான இல்லத்தை நோக்கி, அவரது எண்ணங்கள் திரும்பின. நகரின் செழிப்பான பகுதிகளில் இருந்த செல்வந்தர்கள் மட்டுமே செல்லக் கூடிய விலையுயர்ந்த உணவு விடுதிகளுக்குத் தன்னோடு உணவருந்த வந்த தனது பழைய நண்பர்களை நோக்கியும் அவரது எண்ணங்கள் ஓடின. எல்லாவற்றையும் விட அதிகமாக, என்ஜினைக் கிளப்பியதும் புயல் வேகத்தில் உறுமிக் கொண்டு சீற்றத்துடன் விரைந்து செல்லும் ஃபெராரியைப் பற்றியும், அதைக் கிளப்பும்போது அவரது இதயம் எவ்வளவு எழுச்சியுறும், பெருமிதம் கொள்ளும் என்பதையும் பற்றி அவர் எண்ணமிட்டார்.

அந்த ஆன்ம எழில் மிக்க மலைப்பகுதியில் மேலும், மேலும் உள்ளே புகுந்து செல்லத் தலைப்பட்டபோது அத்தருணத்தின் அழகானது கடந்தகால சிந்தனை ஓட்டத்தைத் தடுத்து அவரை நிகழ்காலத்திற்கு இழுத்து வந்தது. இயற்கை எழிலைப் பருகியவண்ணம் அதன் எல்லையற்ற சாமர்த்தியங்களைக் கண்ட வியந்து கொண்டிருக்கும்போது தான் அந்தத் திடுக்கிடும் சம்பவம் நிகழ்ந்தது. அவரது கண்பார்வையின் கோடியில் ஏதோ ஒரு அசைவை உணர்ந்தவராய்த் திரும்பியபோது, அந்த வினோதமான உருவத்தை அவர் கண்டார். நீண்ட, தொளதொளவென்று தொங்கும் சிவப்பு நிற ஆடையை அணிந்தவண்ணம் தலையில் ஒரு கருநீல நிறத் தொப்பியுடன் அந்த உருவம், பாதையின் சற்றுத் தொலைவில் வேகவேகமாகச் சென்று கொண்டிருந்தது.

ஜூலியனோ பெரும் வியப்புக்குள்ளானார். யாருமற்ற இந்த மனிதவாடையே படாத மலைப்பகுதியை எட்டுவதற்கு அவருக்கு ஆபத்து மிகுந்த ஏழு நாட்கள் செலவழிந்திருந்தன. மனித இருப்பிடத்திலிருந்து பல கல் தொலைவில் அவர் இருந்தார். மேலும், தனது இறுதி இலக்கான சிவானாவை எங்கே கண்டறிவது

என்பது பற்றி ஒரு நிச்சயமான கருத்தும் அவருக்கு கிடையாது. இந்நிலையில், அந்த சக பயணியை நோக்கி அவர் குரலெழுப்பினார்.

அவ்வுருவமோ, அவரது விளிப்புக்குச் செவி கொடுக்காமல், தனது நடையைத் துரிதப்படுத்தியது. ஒரு மரியாதைக்கேனும் கூட ஜூலியனை அது திரும்பிப் பார்க்கவில்லை. சற்று நேரத்தில், வேகத்தைக் கூட்டிக்கொண்ட அந்த மர்மமான பயணி, ஓடவே தொடங்கிவிட்டார். அவரது சிவப்பு அங்கி, அவருக்குப் பின்னால் காற்றில் படபடத்து அலைபாய்ந்தது. கொடியில் காய்ந்து கொண்டிருந்த படுக்கை விரிப்புகள் மாலைக் காற்றில் அசைவது போல அது தோன்றியது.

“நண்பரே, தயவு செய்யுங்கள். சிவானாவைக் கண்டு பிடிப்பதற்கு உங்கள் உதவி எனக்குத் தேவை,” என்று கூவினார் ஜூலியன்.

“ஏழு தினங்களாக, வெகு குறைவான உணவுடனும், குடிநீருடனும் நான் பயணம் செய்து கொண்டுள்ளேன். நான் காணாமல் போய்விட்டேன் என்று நினைக்கிறேன்,” என்றார்.

இதைக்கேட்ட அவ்வுருவம், சட்டென நின்றது. ஜூலியனும், வெகு கவனத்துடன் அதனருகில் சென்றார். அந்தப் பயணி மிகவும் குறிப்பிடத்தக்க வகையில், அசைவற்று, அமைதியாக நின்றார். அவரது தலையோ, கரங்களோ, கால்களோ சற்றுக் கூட அசையவில்லை. தலையில் இருந்த தலையணி கவிழ்ந்து மறைத்ததால் அவரது முகத்தை ஜூலியனால் பார்க்கமுடியவில்லை. ஆனால், அவர் கையில் வைத்திருந்த சிறு கூடையில் இருந்த பொருள் ஜூலியனின் கவனத்தைக் கவர்ந்தது. அதனுள், ஜூலியன் முன்னெப்போதும் கண்டிராத அளவு எழிலும், மென்மையும் கொண்ட மலர்கள் இருந்தன. ஜூலியன் அருகில் நெருங்கி வருகையில், அந்த உருவம், தன் கையில் இருந்த கூடையை மேலும் இறுக்கமாகப் பற்றிக் பிடித்துக் கொண்டது. தனது கைப்பொருள் அரியது, விருப்பத்துக்குரியது என்றும், தன்னருகில் வந்த உயரமான மேலைநாட்டு மனிதரைத் தன்னால் நம்பலாகாது என்றும் சுட்டிக்காட்டுவது போல அவரது செய்கை இருந்தது. ஒரு மேலை நாட்டவர் இப்பகுதியில் காணப்படுவது என்பது, பாலைவனத்தில் பனித்துளி ஒன்றைக் காண்பது போல வெகு அரிதான விஷயமாகும்.

ஜூலியன் அந்தப் பயணியை வெகு தீவிரமான ஆர்வத்துடன் உற்று நோக்கினார். மேகமூட்டத்திலிருந்து சட்டென்று வெளிவந்த சூரிய ஒளிக்கற்றை ஒன்று, மறைந்து தோன்றிய முகம் ஒரு ஆணுடையது என்பதைக் காட்டியது.

ஆனால், ஜூலியன், இவரைப் போன்ற ஒரு மனிதரை இதற்கு முன்னர் கண்டதேயில்லை. தன்னை ஒத்த வயதுடையவராகத் தோன்றிய போதும் அவரது முக அமைப்பு ஜூலியனை மதிமயங்கச் செய்தது. வெகு நேரம் நின்று அவரையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது போல ஜூலியன் உணர்ந்தார். அவரது கண்கள் ஒரு பூனையின் கண்களைப் போல இருந்தன. அவை ஜூலியனைக் குத்தி விடுவது போலப் பார்த்ததால் சற்றே சங்கடம் கொண்ட ஜூலியன், தனது

பார்வையை விலக்கிக் கொண்டார். அவரது தோல் பழுப்பு நிறத்தில் மென்மையாகவும், சுருக்கங்களின்றி மழ மழப்பாகவும் இருந்தது. அவரது உடல் வலிமையுடனும், சக்தியுடனும் தோன்றியது. அவரது கரங்கள் அவர் ஒன்றும் அத்தனை இளமையானவர் அல்ல என்பதை வெளிக்காட்டிவிட்ட போதிலும், அவரிடமிருந்து வெளிப்பட்ட இளமைத் துடிப்பும், சக்தியும் ஜூலியனை வியப்படையச் செய்தன. ஒரு சிறுவன், மந்திரவித்தை ஒன்றை முதன் முதலில் பார்ப்பது போல, பிரமை பிடித்தவர் போல ஜூலியன் அவர் முன்பு நின்றார்.

'இவர் தான் சிவானாவின் மகத்தான முனிவர்களில் ஒருவராக இருக்க வேண்டும்' என்று ஜூலியன் தனக்குள் எண்ணிக் கொண்டார். தனது கண்டுபிடிப்பால் ஏற்பட்ட மகிழ்ச்சியை அவரால் கட்டுப்படுத்திக் கொள்ளவே முடியவில்லை.

"என் பெயர் ஜூலியன் மான்டில். சிவானாவின் முனிவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள நான் வந்திருக்கிறேன். நான் அவர்களை எங்கே பார்க்கலாம் என்று உங்களுக்குத் தெரியுமா?" என்று ஜூலியன் கேட்டார்.

மேலை நாட்டிலிருந்து வந்து, இப்போது வெகுவாகக் களைத்துப் போய்த் தோன்றிய ஜூலியனை, அந்த மனிதர் சிந்தனையோடு பார்த்தார். அவரது அமைதியும், சாந்தமும், அவரை ஒரு வானத்தூதன் போல், ஞானம் பெற்றவராகக் காட்டியது.

மெல்லிய, கிசுகிசுக்கும் குரலில் அவர் கேட்டார், "இந்த முனிவர்களைக் காண நீங்கள் ஏன் விரும்புகிறீர்கள், நண்பரே?"

தனக்கு முன்பு தேடி வந்த பலருக்கும் கிடைக்காமல் தப்பிச் சென்ற முனிவர்களில் ஒருவரைத் தான் கண்டுபிடித்துவிட்டோம் என்பதை ஜூலியன் உணர்ந்து கொண்டார். எனவே, அவர் மனம் திறந்து தனது நெடும் பயணத்தைப் பற்றி அப்பயணியிடம் கூறத் தொடங்கினார். தனது பழைய வாழ்க்கையைப் பற்றியும், தான் எவ்வாறு ஆன்மீக ஆபத்தில் சிக்குண்டு தவித்துக் கொண்டிருந்தார் என்பது பற்றியும், அவரிடம் விளக்கினார். தனது சட்டத் தொழில் கொண்டு வந்த மறைந்து போகக் கூடிய தற்காலிகமான பரிசுகளுக்காகத் தனது உடல் நலனையும், சக்தியையும் எவ்வாறு செலவழித்தார் என்பதையும் கூறினார். ஒரு கனமான வங்கிக் கணக்குக்காகத் தனது ஆன்மாவையும் அதன் அழிவற்ற செல்வங்களையும் விற்றுவிடத் துணிந்து, 'வேகமாக வாழ்ந்து, இளமையிலேயே இறந்து போவது' என்ற வாழ்க்கை முறையின் மாயையான திருப்தியைத் தேடி அலைந்த கதையைச் சொன்னார்.

மேலும், பின்னர் இந்தியாவில் தான் செய்த பயணங்கள் பற்றியும், இறுதியில் யோகி கிருஷ்ணனைச் சந்தித்தது பற்றியும் கூறினார். யோகியும் ஒரு முன்னாள் வழக்கறிஞர் என்றும், புதுடில்லியில் இருந்த தனது பணியைத் துறந்துவிட்டு, இன்று உள்ளார்ந்த இணக்கத்தையும், நிலையான அமைதியையும் தேடி வந்துள்ளார் என்றும் கூறினார்.

ஜூலியன் பேசி முடிக்கும் வரையில், அந்தப் பயணி அமைதியாகவும், அசைவற்றும் நின்று கொண்டிருந்தார். ஞானத் தெளிவுடன் வாழ்வது பற்றிய புராதனக் கொள்கைகளைத் தான் அறிந்து கொள்ள வேண்டுமென்ற தனது தணியாத வெறி போன்ற வேட்கையைப் பற்றி ஜூலியன் குறிப்பிட்டபோது தான் அந்த மனிதன் மறுபடியும் பேசினார். ஜூலியனின் தோள்மீது தனது கரத்தை வைத்து அவர் மென்மையான குரலில் பேசினார்.

''மேலான முறையில் வாழ்வது பற்றிய அறிவைப் பெறுவதற்கு உனக்கு உண்மையிலேயே இதய பூர்வமான விருப்பம் இருக்கிறதென்றால், உனக்கு உதவுவது எனது கடமையாகும். நீ இவ்வளவு தூரம் தேடி வந்துள்ள அந்த முனிவர்களில் நானும் ஒருவன் தான். பல்லாண்டுக் காலத்தில், எங்களைக் கண்டு பிடித்துள்ள முதல் நபர் நீ தான். எனது பாராட்டுக்கள். உனது விடாப்பிடியான மனஉறுதியை நான் மெச்சுகிறேன். உண்மையில் நீ ஒரு வெகு சிறப்பான வழக்குரைஞராக இருந்திருக்க வேண்டும்.''

பின்னர் சற்று தயங்கி விட்டு, தொடர்ந்து பேசினார். அடுத்து என்ன செய்வது என்று தெளிவாகத் தெரியாத நிலையில் அவர் இருந்தது போலத் தோன்றியது.

''உனக்கு விருப்பமானால், எனது விருந்தாளியாக எங்கள் கோவிலுக்கு வரலாம். இந்த மலைப்பகுதியின் மறைவான ஒரு இடத்தில் அது அமைந்துள்ளது. இந்த இடத்திலிருந்து மேலும் பல மணிநேரம் தொலைவில் அது உள்ளது. எனது சகோதரர்களும், சகோதரிகளும் உன்னைக் கரம் விரித்து வரவேற்பார்கள். பல காலமாக எமது முதாதையர் எமக்கு வழிவழியாகக் கற்றுக் கொடுத்துச் சென்றுள்ள புராதனக் கொள்கைகளையும், வழிமுறைகளையும் உனக்கு நாங்கள் ஒன்று சேர்ந்து கற்றுக் கொடுப்போம்.

''எங்களது தனிப்பட்ட உலகிற்குள் உன்னை அழைத்துச் சென்று, உனது வாழ்வை மேலும் மகிழ்ச்சியாலும், சக்தியாலும், உயர்நோக்கத்தாலும் நிரப்புவதற்கான, எமது சேமித்து வைக்கப்பட்டுள்ள அறிவை உன்னுடன் பகிர்ந்து கொள்வதற்கு முன்னதாக ஒரு வாக்குறுதி தருமாறு நான் உன்னிடம் கேட்டுக் கொள்ள வேண்டும்,'' என்றார் முனிவர்.

''காலத்தால் அழியாத இவ்வுண்மைகளைக் கற்றுக் கொண்ட பின்னர், உனது இருப்பிடத்திற்குத் திரும்பச் சென்று, மேலை நாடான அங்குள்ளவர்களுடன், இதைப் பற்றிக் கேட்க வேண்டும் என்ற அவசியம் உள்ளவர்களிடம் இந்த ஞானத்தை நீ பகிர்ந்து கொள்ள வேண்டும். நாங்கள் இந்த அற்புதமான மலைப்பகுதியில் உலகை விட்டு ஒதுங்கி வாழ்ந்த போதிலும், உங்கள் உலகம் எவ்வளவு குழப்பத்தில் ஆழ்ந்துள்ளது என்பதை நாங்கள் நன்கு அறிவோம். நல்ல மனிதர்கள் அங்கே தமது வழியைத் தொலைத்து விட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு உரிய நம்பிக்கையை நீ அவர்களுக்குக் கொடுத்தாக வேண்டும். அதை விடவும் முக்கியமாக, அவர்களது

கனவுகளை நிறைவேற்றுவதற்கான கருவிகளை நீ அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். இது தான் நான் வேண்டுவதெல்லாம்.''

ஜூலியன் முனிவர் கேட்டதற்கு உடனடியாக ஒப்புக் கொண்டார். அவர் விரும்பியபடியே அவர்களது அற்புத செய்தியை, மேலை நாட்டிற்கு நிச்சயம் எடுத்துச் செல்வதாகவும் உறுதியளித்தார்.

இரண்டு பேரும் மறைந்து போன கிராமமாகிய சிவானாவிற்குப் போகும் மலைப்பாதையில் மேலும் உயர ஏறிச் செல்லும்போது, இந்தியச் சூரியன் மேற்கே மறையத் தொடங்கியிருந்தது. ஒரு நீண்ட நெடிய தினத்தை முடித்துக் கொண்டு, அந்தச் சிவப்புப் பந்து போன்ற நெருப்புக் கோளம் தனது மென்மையான உறக்கத்தை நோக்கி நழுவியது. அந்த குறிப்பிட்ட தருணத்தின் மகத்தான அற்புத உணர்வைத் தான் ஒரு போதும் மறக்கவில்லை என்று ஜூலியன் என்னிடம் கூறினார். ஒரு இந்தியத் துறவியுடன் நடந்து சென்ற அத்தருணம், வெகு மர்மமான முறையில் அவருடன் ஒரு சகோதர பாசத்தை உணர்ந்து கொண்ட, தருணம், தான் காண விரும்பிய, அற்புதங்களும். நிறைய மர்மங்களும் அடங்கிய தலத்தை நோக்கிப் பயணித்துச் சென்ற தருணம்.

''எனது வாழ்விலேயே மிக மிக நினைவில் வைத்துப் போற்றத் தக்கதொரு தருணம், நிச்சயமாக இது தான்,'' என்று அவர் என்னிடம் கூறினார். வாழ்க்கையானது எப்போதுமே ஒரு சில மிக முக்கியமான தருணங்களால் குறிக்கப்பட்டு வருகிறது என்பது ஜூலியனின் நம்பிக்கையும், கருத்துமாகும். இது அத்தகைய தருணங்களில் ஒன்று. தனது ஆன்மாவின் அடி ஆழத்தில் தனது வருங்கால, மீதமுள்ள வாழ்வின் முதல் தருணம் இது தான் என்பதை அவர் எவ்வாறோ உணர்ந்து கொண்டுவிட்டார். மேலும் அந்த வாழ்வு, முன்னெப்போதும் இருந்ததைக் காட்டிலும் மிக மிக மேலான, உயர்வான ஒன்றாக இருக்கப் போகிறது என்பதையும் அவர் கண்டு கொண்டார்.

4

சிவானா முனிவர்களுடன் ஒரு மந்திரச் சந்திப்பு!

வெகு சிக்கலான பாதைகள், புல் அடர்ந்த வழிகள் வாயிலாகப் பல மணி நேரம் நடந்து சென்ற பின்னர், இரண்டு பயணிகளும் ஒரு செழிப்பான பச்சைப் பசிய பள்ளத்தாக்கை வந்தடைந்தனர். பள்ளத்தாக்கின் ஒருபுறம், பனிபோர்த்திய இமயமலைத் தொடர் பாதுகாப்பாக நின்றது. தமது தளபதிகள் ஓய்வெடுத்துக் கொண்டிருந்த பகுதியைக் காவல் காக்கும் வீரர்கள் போல அம்மலைகள் தோற்றமளித்தன. மற்றொரு புறம், ஊசியிலை மரங்கள் நெருக்கமாக அடர்ந்திருந்த காடு ஒன்று அரணாக அமைந்திருந்தது. ஒரு புத்துணர்வூட்டும் கற்பனாலோகத்திற்கு இயற்கை அளித்த பரிசுகள் போல அவை இருந்தன. முனிவர் ஜூலியனை நோக்கி மென்முறுவல் பூத்தார்.

“சிவானாவின் நிர்வானாவிற்கு நல்வரவு!” என்றார்.

பின்னர் இருவரும் மற்றொரு அதிகம் பயன்படுத்தப்படாத பாதையில் இறங்கிச் சென்று காட்டினுள் நுழைந்தனர். அக்காடு, பள்ளத்தாக்கின் அடிப்பகுதியில் அமைந்திருந்தது. குளிர்ந்த சுத்தமான மலைக்காற்றில் ஊசியிலை மரங்கள் மற்றும் சந்தன மரங்களின் வாசம் மெல்லத் தவழ்ந்து வந்தது. ஜூலியன், வலியெடுக்கும் தன் பாதங்களுக்கு ஓய்வு கொடுக்க வேண்டி, தமது காலணிகளைக் கழற்றிவிட்டார். அவரது பாதங்கள் ஈரமான பாசிப் படர்வுகளைச் சில்லென்று உணர்ந்தன. மரங்களின் ஊடே வண்ண வண்ண ஆர்க்கிட் மலர்களும் வேறு பல மலர்களும் தலையாட்டிக் கொண்டிருந்ததை அவர் வியப்புடன் கவனித்தார். சொர்க்கத்தின் ஒரு சின்னஞ்சிறு துணுக்கு போலத் தோன்றிய அவ்விடத்தின் மகோன்னதமான எழிலை அவையும் கூட ரசித்து அனுபவித்துக் கொண்டிருந்தது போலத் தோன்றியது.

தொலைவில், காதுக்கு அமைதியூட்டும் மென்குரல்களின் ஒலியை ஜூலியனால் கேட்க முடிந்தது. ஓசையெழுப்பாமல், அவர் முனிவரைப் பின்தொடர்ந்து சென்றார். மேலும் ஒரு பதினைந்து நிமிடங்கள் நடந்து சென்ற பின்னர், இருவரும் ஒரு திறந்த வெளியை அடைந்தனர். அவருடைய கண்முன்னே விரிந்த காட்சி, உலகில் நன்கு அனுபவப்பட்டவரும், வெகு எளிதில் எதையும் கண்டு வியப்படையாதவருமான ஜூலியன் மான்டில் கூட கற்பனை செய்து பார்க்க முடியாததாக இருந்தது. முற்றிலும் ரோஜா மலர்களால் கட்டப்பட்டது போலத் தோன்றிய ஒரு சின்னஞ்சிறு கிராமம். அக்கிராமத்தின் நட்ட நடுவில் ஒரு சின்னஞ்சிறு கோவில். அத்தகைய கோவில்களை

ஜூலியன், தாய்லாந்து மற்றும் நேபாளத்திற்குச் சென்றிருந்த போது கண்டிருக்கிறார். ஆனால், இந்தக் கோவிலோ, சிவப்பு, வெள்ளை மற்றும் ரோஜா மலர்களைக் கொண்டு செய்யப்பட்டிருந்தது. அம்மலர்கள், பல நிறம் கொண்ட நூல்கள் மற்றும் குச்சிகளால் கோர்த்து இணைக்கப்பட்டிருந்தன. எஞ்சியிருந்த பகுதியில் ஆங்காங்கே அள்ளித் தெளித்தாற்போலக் காணப்பட்ட சிறு குடில்கள், முனிவர்களின் எளிமையான இல்லங்கள் போலத் தோன்றின. இவையும் கூட, ரோஜா மலர்களால் செய்யப்பட்டிருந்தன. ஜூலியன் பேச்சிழந்து நின்றார்.

இக்கிராமத்தில் குடியிருந்த துறவிகள், அவரால் பார்க்க முடிந்த வரையில், ஜூலியனின் சகபயணியைப் போலவே தோற்றமளித்தனர். அவர் தனது பெயர் யோகி இராமன் என்று அறிவித்தார். சிவானாவின் முதிய துறவியும், கூட்டத்தின் தலைவரும் தானே என்றும் அவர் விளக்கினார். கனவுலகம் போலத் தோன்றிய அந்தக் குடியிருப்பின் மக்கள் வியக்கத்தக்க வகையில் இளமையுடன் தோற்றமளித்தனர். ஒருவித நிதானத்துடனும், செயல் நோக்கத்துடனும் அவர்கள் இங்குமங்கும் நடமாடிக் கொண்டிருந்தனர். ஒருவர் கூடப் பேசவில்லை. அப்பகுதியின் அமைதியை மதித்துக் காப்பது போல, அவர்கள் தத்தம் பணிகளில் மௌனமாக ஈடுபட்டிருந்தனர்.

ஆண்கள் சுமார் பத்துப் பேர் இருந்திருக்கலாம். யோகி இராமனைப் போன்றே சிவப்பு நிற அங்கிகளை அணிந்திருந்த அவர்கள் ஜூலியன் அவர்களது கிராமத்திற்குள் நுழைந்தபோது, அவரை நோக்கிச் சாந்தமாகப் புன்னகைத்தனர். அவர்கள் ஒவ்வொருவரும் அமைதியுடனும், ஆரோக்கியத்துடனும், ஆழமாகத் திருப்தி கொண்டிருப்பது போலவும் தோற்றமளித்தனர். நமது நவநாகரிக உலகில் நம்மில் பலபேரைப் பிடித்தாட்டும் இறுக்கங்கள் அனைத்தும், இந்த அமைதிப் பள்ளத்தாக்கில் தமக்கு வரவேற்புக் கிடைக்காது என்று உணர்ந்து கொண்டு, தாம் விரும்பி வரவேற்கப்படக் கூடிய வேறு இடங்களைத் தேடி ஒதுங்கிச் சென்றுவிட்டது போல அது தோன்றியது. அவர்களிடையே ஒரு புதிய முகம் தென்பட்டுப் பல ஆண்டுகள் ஆகிவிட்டிருந்தன. இருந்த போதிலும் இவர்கள் தமது வரவேற்பை ஒரு எளிய தலைகுனிவால் தெரிவித்து, தம்மைக் கண்டுபிடிக்க வெகு தொலைவு தேடி வந்துள்ள இந்த விருந்தாளியை வரவேற்றனர்.

அங்கிருந்த பெண்களும் கூட வெகு சிறப்பாகத் தோற்றமளித்தனர். ரோஜா நிறப்பட்டுச் சேலைகள் அவர்கள் மீது இழைந்திருக்க, கருநிறக் கூந்தலில் வெள்ளைத் தாமரை மலர்களை அணிந்து கிராமத்தில் இங்குமங்கும் அவர்கள் சுறுசுறுப்புடன் திரிந்து கொண்டிருந்தனர். இந்தச் சுறுசுறுப்பு. நமது சமூகத்தில் உள்ளவர்களின் வாழ்க்கையில் தென்படுகின்ற அதீத வேக, அவசரச் சுறுசுறுப்பு அல்ல. மாறாக அது இலகுவானதாகவும், எழிலான நளினத்துடனும் இருந்தது. ஜென் போன்ற ஆழ்ந்த கவனத்துடன் சிலர் கோவிலில் உள்ளே வேலை செய்து கொண்டிருந்தனர். ஒரு திருவிழாவிற்குத் தயார் செய்து கொண்டிருந்தது போலத் தோன்றியது. வேறு சிலர், விறகுக் கட்டைகளையும், நன்கு பூவேலை செய்யப்பட்டிருந்த துணிகளையும் எடுத்துச் சென்றனர். எல்லோருமே ஏதோ ஒரு பயனுள்ள பணியில் ஈடுபட்டிருந்தனர். அனைவரும் மகிழ்வுடன் தோன்றினர்.

இறுதியாக சிவானா முனிவர்களின் முகங்கள் அவர்களது வாழ்க்கை முறையின் வலிமையை வெளிப்படுத்தின. அவர்கள் முழுமையாக வளர்ந்திருந்த பெரியவர்களாக இருந்தபோதிலும், அவர்களில் ஒவ்வொருவரும் ஒரு குழந்தை போன்ற தன்மையைப் பிரதிபலித்தனர். அவர்களது கண்கள் இளமையின் உயிர்த்துடிப்புடன் பளிச்சென்று ஒளிவிட்டுக் கொண்டிருந்தன. ஒருவர் முகத்தில் கூட சுருக்கங்கள் தென்படவில்லை. எவருக்கும் நரைமுடியில்லை. யாருமே முதுமைத் தோற்றத்துடன் காணப்படவில்லை.

ஜூலியனால், தான் கண்டு அனுபவித்துக் கொண்டிருந்ததைச் சற்றும் நம்பமுடியவில்லை. விரைவில் அவருக்கு உணவளிக்கப்பட்டது. உணவில் புத்திளம் பழங்களும், அசாதாரணமான காய்கறிகளும் இருந்தன. இந்த முனிவர்களின் மிகச் சிறப்பான உடல்நலன் என்னும் பொக்கிஷத்தின் திறவுகோல்களில் ஒன்று இந்த உணவு வகை என்று அவர் பின்னாட்களில் தெரிந்து கொண்டார். உணவுக்குப் பின்னர், யோகி இராமன் ஜூலியனை அவரது தங்குமிடத்திற்கு அழைத்துச் சென்றார். பூக்கள் நிரம்பிய ஒரு சிறுகுடில் அங்கே ஒரு சிறிய படுக்கையும், அதன் மீது ஒரு எழுதும் புத்தகமும் வைக்கப்பட்டிருந்தன. வரப்போகும் நாட்களில் இதுவே அவரது இல்லமாக அமையவிருந்தது.

ஜூலியன், இதற்கு முன்னர், சிவானாவின் மாய உலகைப் போன்ற வேறு எதையும் கண்டதேயில்லை. எனினும், தனக்கு முன்னர் எப்போதோ நெடுங்காலத்திற்கு முன்னால் தெரிந்திருந்த ஒரு சொர்க்கத்திற்கு அவர் திரும்ப வந்து விட்டது போலவும், வீடு வந்து சேர்ந்துவிட்டது போலவும் அவர் உணர்ந்தார். ஏதோ ஒரு விதத்தில் இந்த ரோஜா மலர் கிராமம் அவருக்கு அன்னியமாகத் தோன்றவில்லை. தான் இங்கே தான் சொந்தம் கொண்டிருப்பதாக அவரது உள்ளுணர்வு கூறியது - அது மிகக் குறைவான காலமாக இருப்பினும்! சட்டத் தொழில் அவரது ஆன்மாவைத் திருடிக் கொண்டு போவதற்கு முன்னால், அவர் அறிந்திருந்த வாழ்க்கைக்கான சுடரை மீண்டும் தூண்டி விடுவதற்குச் சரியான இடம் இது தான். இங்கே தான் உடைந்து போயிருந்த அவரது உயிர் உரு கொஞ்சம் கொஞ்சமாகக் குணம் அடையப் போகிறது. ஆக, சிவானா முனிவர்களிடையிலான ஜூலியனின் வாழ்க்கை, எளிமையும், சாந்தமும், நல்லிணக்கமும் நிறைந்த வாழ்க்கை, இவ்வாறு தான் தொடங்கியது. மேலும், சிறப்பான விஷயங்கள் விரைவில் வரவிருந்தன.

5

முனிவர்களின் ஆன்மீகச் சீடன்

மாபெரும் கனவுகாண்பவர்களின் கனவுகள் ஒருபோதும் அப்படியே நிறைவேற்றப்படுவதில்லை. அவை எப்போதுமே அவற்றையும் தாண்டி அப்பால் கொண்டு செல்லப்படுகின்றன.

- ஆல்ஃபிரட் லார்டு ஒயிட்ஹெட்

மணி இப்போது இரவு எட்டாகியிருந்தது. மறுநாள் நீதிமன்றம் சென்று வழக்காடுவதற்கு நான் தயார் செய்ய வேண்டியிருந்தது. இருந்தும், இந்த முன்னாள் சட்ட வீரரின் அனுபவத்தைக் கேட்டுப் பெரும் வியப்பில் ஆழ்ந்து போயிருந்தேன். இந்தியாவின் அற்புத முனிவர்களைச் சந்தித்து அவர்களுக்குக் கீழே பாடம் கற்றுக் கொண்ட பின்னர், அவர் தனது வாழ்க்கையை முற்றிலுமாக மாற்றியமைத்துக் கொண்டிருந்தார். இது எவ்வளவு வியக்கத் தக்கது! என்னவிதமான அசாதாரணமானதொரு மாற்றம், என்று நான் எண்ணினேன். அந்தத் தொலைதூர மலைப்பகுதியின் மறைவிடத்தில் ஜூலியன் கற்றுக் கொண்ட இரகசியங்கள் எனது வாழ்க்கையின் தரத்தையும் மேம்படுத்தக் கூடுமோ என்று நான் எனக்குள் இரகசியமாக நினைத்துப் பார்த்தேன். நாம் வாழும் இவ்வுலகின் அற்புதங்களைப் பற்றிய எனது ஆச்சரிய உணர்வை இவை மீண்டும் நிறைவு செய்யுமா? ஜூலியன் பேசுவதைக் கேட்கக் கேட்க, எனது சொந்த ஆன்மாவும் கூடத் துருப்பிடித்துப் போய்க் கிடக்கிறது என்ற உண்மையை நான் உணரத் தலைப்பட்டேன்.

இளைஞனாக இருந்தபோது எதைச் செய்தாலும் அத்தனை ஆர்வத்துடன் செய்வேனே, அந்த அசாதாரணமான ஆர்வம் இப்போது எங்கு போயிற்று? என்னவானது? அந்நாட்களில், மிகச் சாதாரணமான விஷயங்கள் கூட என்னை மகிழ்ச்சியில் திளைக்கச் செய்தன. ஒருக்கால், எனது தலைவிதியை மறுபடி கண்டுபிடிப்பதற்கான நேரம் எனக்கு வந்துவிட்டது போலும்.

தனது நெடும் பயணத்தைப் பற்றி என்னிடம் தென்பட்ட வியப்புணர்வையும், முனிவர்கள் தனக்குக் கற்றுக் கொடுத்த வாழ்க்கை முறையைக் கற்றுக் கொள்வதில் எனக்கிருந்த ஆர்வத்தையும் உணர்ந்து கொண்ட ஜூலியன் தனது கதையை மேலும் வேகமாகச் சொல்லலானார். அவரது அறிவுத்தாகமும், பல ஆண்டுகள் நீதிமன்றத்தில் வாதாடி கூர்மைப்படுத்திக் கொண்ட மதியும் சேர்ந்து சிவானா மக்களிடையே அவரை ஒரு விரும்பத்தக்கவராக ஆக்கியிருந்தது. ஜூலியன் மீது அவர்கள் கொண்ட அன்பின்

அடையாளமாக, அத்துறவிகள் தமது கூட்டத்தில் ஒரு கௌரவ அங்கத்தினராக அவரைச் சேர்த்துக் கொண்டனர். தமது பரந்து விரிந்த குடும்பத்தில் ஒருவராக அவரை நடத்தினர்.

மனம், உடல் மற்றும் ஆன்மா இவற்றின் செயல்பாடுகள் பற்றிய தனது அறிவை விரிவடையச் செய்யவும், தன்னைத் தானே அடக்கியாள்வதைச் சாதிக்கவும் மிகுந்த ஆர்வம் கொண்டவராய், ஜூலியன் விழித்திருந்த காலம் எல்லாம் யோகி இராமனின் கற்பித்தலின் கீழ் செலவழித்தார். ஒரு ஆசிரியராக இருப்பதைவிட அந்த முனிவர், ஜூலியனுக்கு ஒரு தந்தையைப் போலவே ஆகிவிட்டார். இருந்தபோதிலும், அவர்களுக்கிடையே இருந்த வயது வேறுபாடு என்னவோ, ஒருசில ஆண்டுகள் மட்டுமே. பல பிறவிகளின் ஒன்று கூடிய ஞானம் முனிவரிடம் இருந்தது என்பது வெகு தெளிவாகப் புலப்பட்டது. மேலும், இதில் மிகவும் மகிழ்ச்சி தரும் விஷயம், அந்த அறிவை அவர் ஜூலியனுடன் பகிர்ந்து கொள்ள விருப்பத்துடன் இருந்தது தான்.

காலையில் சூரிய உதயத்திற்கு முன்பாகவே, யோகி இராமன் தனது உற்சாகமிக்க மாணவனுடன் அமர்ந்து, வாழ்க்கையின் பொருள் பற்றிய தீர்க்கமான உட்பார்வைகளால் அவரது சிந்தையை நிரப்புவார். மேலும், அதிகமான சக்தி, உருவாக்கும் திறன் மற்றும் மனநிறைவுடன் வாழ்வதற்காகத் தான் கற்றுக் கொண்டுள்ள ஆனால், பிறருக்கு அதிகம் தெரியாத செய்முறைகளையும் அவருக்கு விளக்குவார். நீண்ட காலம் உயிர் வாழ்ந்திருக்கவும், இளமையுடன் இருக்கவும், மேலும் அதிக மகிழ்ச்சியுடன் இருப்பதற்குமான புராதனக் கொள்கைகளை யார் வேண்டுமானாலும் பயன்படுத்தி மேற்கண்ட விளைவுகளைப் பெறலாம் என்று அவர் ஜூலியனிடம் கூறினார். அந்த கொள்கைகளையும், விதிமுறைகளையும் அவர் ஜூலியனுக்குக் கற்றுக் கொடுத்தார். சுயகட்டுப்பாடு மற்றும் சுய பொறுப்புணர்வு ஆகிய இரட்டை ஒழுக்கங்கள், மேலைநாட்டில் அவரது வாழ்க்கையின் அங்கங்களாக விளங்கிய குழப்பம் மற்றும் ஆபத்து இவற்றுக்குத் திரும்பச் செல்லாதவாறு அவரைக் காப்பாற்றக் கூடும் என்பதையும் ஜூலியன் கற்றுக் கொண்டார். வாரங்கள், மாதங்களாக உருண்டோடிச் சென்றன. ஜூலியனும், உயர் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுவதற்கென விழிப்படைவதற்குக் காத்துக் கொண்டு அவருக்குள் உறங்கிக் கிடந்த உள்ளார்ந்த சக்தியின் கருவூலத்தை மெல்ல மெல்லப் புரிந்து கொள்ளத் தலைப்பட்டார். சில சமயங்களில், ஆசானும், மாணவனும் சும்மா உட்கார்ந்து இந்தியாவின் ஒளிரும் ஆதவன் கீழேயுள்ள மலை அடிவாரத்தின் பசிய புல்வெளிகளிலிருந்து மேலே கிளம்பி வருவதைக் கவனிப்பதுண்டு. வேறு சில சமயங்களில், அமைதியான தியானத்தில் அமர்ந்தவண்ணம் மௌனம் கொண்டு வரும் பரிசுகளை ருசித்த வண்ணம் இருப்பதுண்டு. பின்னும் வேறு சமயங்களில், இருவரும் ஊசியிலைக் காட்டினூடே நடந்து சென்ற வண்ணம், தத்துவக் கருத்துக்களைப் பற்றி விவாதித்துக் கொண்டும், தமது அருகாமையையும், நட்பையும் ரசித்துக் கொண்டும் இருப்பதுண்டு.

தனது தனிப்பட்ட ஆன்மீக விரிவாக்கத்தின் முதல் அறிகுறிகள், அவர் சிவானாவில் மூன்று வாரங்கள் தங்கியிருந்த போதே புலப்படத் தொடங்கிவிட்டன

என்று ஜுலியன் கூறினார். வெகு அற்பமான விஷயங்களிலும், ஒரு எழிலை அவர் கண்டு கொள்ளத் தொடங்கினார். விண்மீன்கள் மின்னும் இரவின் கரிய வானப்பரப்பாகட்டும், மழையில் நனைந்து வைரமாய் ஜொலிக்கும் ஒரு சிலந்தி வலையாகட்டும், எதுவானாலும் அதை ஜுலியன் உள்வாங்கிக் கொண்டார். மேலும், அவரது புதிய வாழ்க்கை முறையும், அதனுடன் தொடர்பு கொண்ட புதிய பழக்கங்களும் அவரது அக உலகத்தின் மீது ஆழமான தாக்கங்களை ஏற்படுத்தத் தொடங்கின. மேலை நாட்டில் வாழ்ந்திருந்த அத்தனை ஆண்டுக் காலமும் அவரது பிடியில் சிக்காமல் போக்குக் காட்டிய ஆழமான அமைதியையும். உள்ளார்ந்த சாந்தத்தையும், முனிவர்களின் கொள்கைகளையும், செயல்முறைகளையும் பயன்படுத்தத் தொடங்கிய ஒரு மாத காலத்திற்குள்ளாகவே தான் வளர்த்துக் கொள்ளத் தொடங்கியதாக அவர் என்னிடம் கூறினார். மேலும், அதிக மகிழ்ச்சி நிரம்பியவராகவும், இயல்பாகச் செயல்படுவராகவும், அவர் மாறினார். கடந்து செல்லும் ஒவ்வொரு நாளும், அதிகச் சக்தியுடனும், கூடுதல் உருவாக்கும் திறனுடனும் இருக்கலானார்.

ஜுலியனின் கண்ணோட்டத்தில் ஏற்பட்ட மாற்றங்களைத் தொடர்ந்து உடல் சக்தியும் ஆன்மீக வலிமையும் அவருள் தொடர்ந்து வந்தன. முன்னர் ஊளைச் சதையுடன் இருந்த வடிவம், வலிமையுற்று, இளைத்து, தசைப்பிடிப்புடன் இறுகத் தோன்றியது. முன்னர் வெளிறியிருந்த முகம் இப்போது நல்ல வண்ணம் கூடி ஒளியுடன் திகழ்ந்தது. தன்னால் எதையும் செய்ய முடியும், தன்னால் என்னவாகவும் இருக்கமுடியும் என்று அவர் உண்மையிலேயே உணர்ந்தார். நம் ஒவ்வொருவருக்குள்ளும் இருக்கிறதாக அவர் உணர்ந்திருந்த அளவற்ற ஆக்க சக்தியைத் தன்னால் திறக்க முடியும் என்று கருதினார். வாழ்க்கையைப் போற்றிப் பேணத் தொடங்கினார். அதன் ஒவ்வொரு அம்சத்திலும் தெய்வீகத்தைப் பார்க்கத் தொடங்கினார். அந்த ஆன்மீகத் துறவிகளின் கூட்டத்தின் புராதன செயல்முறை தனது மந்திரச் செயலைச் செய்யத் துவங்கியிருந்தது.

தனது கதையைத் தன்னாலேயே நம்பமுடியவில்லை என்பதை உணர்த்துமாறு, ஜுலியன் பேசுவதைச் சற்று நிறுத்தினார். பின்னர், தத்துவ ரீதியாகப் பேசத் தொடங்கினார்.

“ஜான், மிக முக்கியமான ஒரு விஷயத்தை நான் உணர்ந்து கொண்டுள்ளேன். இந்த உலகம் – அதனுள் எனக்குள்ளே இருக்கின்ற தனிப்பட்ட உலகமும் அடங்கும் – அவர்களைப் பற்றிக் கிண்டலாக ஒரு மிகவும் தனிச்சிறப்பான இடம். உனக்குள்ளே வெற்றி என்பது இல்லை என்றால், வெளி உலகில் பெறும் வெற்றி பொருளற்றதாகி விடுகிறது என்பதையும் என்னால் பார்க்க இயலுகிறது. நலமாக இருப்பதற்கும், செல்வச் செழிப்புடன் இருப்பதற்கும் இடையில் ஒரு மாபெரும் வித்தியாசம் உள்ளது. நான் ஒரு முன்னணி வழக்குரைஞராக இருந்தபொழுது, தமது உள் மற்றும் வெளி வாழ்க்கைகளை மேம்படுத்திக் கொள்வதில் முனைந்திருந்தவர்களைக் கண்டு எள்ளி நகையாடியதுண்டு. ‘அடே, வெற்றி பெறப்பாருங்களடா!’ என்று நான் அவர்களைப் பற்றிக் கிண்டலாக எண்ணியதுண்டு. ஆனால், தன்னையே வெற்றி கொள்வதும்,

ஒருவரது மனம், உடல் மற்றும் ஆன்மாவைத் தொடர்ந்து நன்கு பராமரிப்பதும் ஒருவரது உயர் தன்னுருவைக் கண்டு கொள்வதற்கும், ஒருவர் கனவு காணும் வாழ்க்கையை வாழ்வதற்கும் இன்றியமையாதவையாகும். உன்னால் உன்னையே பராமரித்துக் கொள்ளக் கூட முடியவில்லை என்றால், பிறரை எவ்வாறு கவனித்துக் கொள்ள முடியும்? நீ நலமாக உணரவில்லையென்றால், எவ்வாறு பிறருக்கு நல்லது செய்ய முடியும்? நான் என்னையே நேசிக்கவில்லை என்றால் உன்னையும் என்னால் நேசிக்க முடியாது.'' என்றார் ஜூலியன். திடீரென்று அவர் படபடப்புக் கொண்டவராய், சற்றே சங்கடத்துடன் காணப்பட்டார்.

''இது வரையில் நான் யாருக்கும் இவ்வாறு எனது இதயத்தைத் திறந்து காட்டியதில்லை. இதற்காக நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன், ஜான். அந்த மலைப்பகுதியில் நான் அத்தகையதொரு உணர்ச்சிப் பிரவாகம் உடைத்துக் கொண்டு பெருக்கெடுத்ததை உணர்ந்தேன். பிரபஞ்சத்தின் சக்திகளைப் பற்றிய ஒரு ஆன்மீக விழித்தெழுதலை உணர்ந்தேன். நான் அறிந்து கொண்டவற்றைப் பற்றி மற்றவர்களும் அறிந்துகொள்வது அவசியம் என்று நினைக்கிறேன்.''

மிகவும் தாமதமாகி விட்டதைக் கவனித்தவராக தான் என்னிடம் விடைபெற்றுக் கொண்டு போகப் போவதாக ஜூலியன் அவசரமாகச் சொன்னார்.

''இப்போது நீங்கள் போகமுடியாது, ஜூலியன்!'' என்றேன் நான் பதற்றத்துடன் ''இமயமலையில் நீங்கள் கற்றுக் கொண்ட ஞானத்தைப் பற்றிக் கேட்டதில் நான் மிகவும் உத்வேகம் கொண்டுள்ளேன். மேலை நாட்டுக்குத் திரும்பக் கொண்டு வருவதாக உங்கள் ஆசான்களிடம் வாக்குக் கொடுத்துள்ள செய்தி பற்றி ஆர்வமாக உள்ளேன். என்னை இவ்வாறு மர்மத்தில் ஆழ்த்தி விட்டு நீங்கள் போகலாகாது. என்னால் அதைத் தாங்கிக் கொள்ள முடியாது என்பது உங்களுக்குத் தெரியும்!''

''நான் நிச்சயமாகத் திரும்பி வருவேன். கவலைப்படாதே நண்பா! என்னைப் பற்றி உனக்குத் தெரியும். ஒரு நல்ல கதையைச் சொல்லத் தொடங்கிவிட்டால், என்னால் நிறுத்த முடியாது. ஆனால், உனக்கு வேலை இருக்கிறது. எனக்கும் கவனிப்பதற்கு சில சொந்த விஷயங்கள் உள்ளன.''

''ஒன்று மட்டும் எனக்குச் சொல்லுங்கள். நீங்கள் சிவானாவில் கற்றுக் கொண்ட முறைகள் எனக்குப் பயன்படுமா?''

''மாணவன் தயாராக இருக்கும் பொழுது, ஆசான் அவன் முன் தோன்றுவார்,'' என்ற பதில் விரைவாக வந்தது. ''நீயும், நமது சமுதாயத்தில் உள்ள மிகப் பலரும், நான் இப்போது வைத்துக் கொண்டிருக்கும் அறிவைப் பெறுவதற்குத் தயாராக இருக்கிறீர்கள். நம்மில் ஒவ்வொருவரும், துறவிகளின் தத்துவத்தைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். நம்மில் ஒவ்வொருவரும் அதனால் பயன்பெற முடியும். மிகச் சரியாக இருத்தல் என்பது நமது இயல்பு நிலை என்பதை நம்மில் ஒவ்வொருவரும் புரிந்து கொள்ள வேண்டும். அவர்களது புராதன அறிவை உன்னுடன் பகிர்ந்து

கொள்வேன் என்று நான் உறுதியளிக்கிறேன். பொறுமை கொள். நாளை இரவு நான் மறுபடியும் உன்னைச் சந்திப்பேன். இம்முறை, உனது இல்லத்தில். அப்போது, உனது வாழ்க்கையில் மேலும் அதிக வாழ்தலைக் கொண்டு வருவதற்கு உனக்குத் தெரிய வேண்டிய அனைத்தையும் பற்றி நான் உன்னிடம் சொல்கிறேன். சரியா?'' என்றார்.

''சரி, இத்தனை ஆண்டுக்காலம் அது இல்லாமல் நான் வாழ முடிந்துள்ளது என்றால், இன்னும் ஒரு 24 மணி நேரம் காத்திருப்பதால், நான் ஒன்றும் செத்துப் போகப் போவதில்லை,'' என்றேன் நான் ஏமாற்றத்துடன்.

அத்துடன், தெளிவு பெற்ற ஞானியாகிய அந்த முன்னாள் வழக்கறிஞர், எனது மனம் நிறைய பதிலளிக்கப்படாத கேள்விகளுடனும், முடிவடையாத எண்ணங்களுடனும் என்னை விட்டு விட்டுச் சென்றார்.

எனது அலுவலகத்தில் நான் மௌனமாக அமர்ந்திருந்தபோது, நமது உலகம் உண்மையில் எத்துணை சிறியது என்பதை நான் உணர்ந்து கொண்டேன். எனது விரல்களைக் கூட நான் இன்னும் நனைக்காமல் இருக்கின்ற மிகப் பிரம்மாண்டமான அறிவின் தேக்கத்தைப் பற்றி எண்ணமிட்டேன். வாழ்க்கை பற்றிய எனது சொந்த உத்வேகத்தை மறுபடி பெற்றால், எப்படி இருக்கும் என்று சிந்தித்தேன். இளமைக் காலத்தில் என்னிடம் இருந்த 'தெரிந்து கொள்ள வேண்டும்' என்ற ஆர்வத்தைப் பற்றிச் சிந்தித்தேன். மேலும், அதிக உயிர்த் துடிப்புடன் இருப்பதையும், எனது நாட்களுக்குள் கட்டுக் கடங்காத சக்தியைக் கொண்டு வருவதையும் நான் பெரிதும் விரும்பினேன். ஒருவேளை நானும் எனது சட்டத் தொழிலை விட்டுவிடக் கூடும். ஒருக்கால் எனக்கும் கூட ஒரு உயர் அழைத்தல் இருக்கக்கூடும். இந்தத் தீவிரமான எண்ணங்களை என் மனதில் சுமந்தவண்ணம், விளக்குகளை அணைத்துவிட்டு, எனது அலுவலக அறையைப் பூட்டிக் கொண்டு அந்த வேனிற்கால இரவின் கனமான வெப்பத்தில் வெளியே நடந்தேன்.

6

தனிநபர் மாற்றத்தின் ஞானம்

"நான் வாழ்வதில் ஒரு கலைஞன் - எனது கலைப்பொருள் என் வாழ்க்கையாகும்"

– *சுஸுகி*

தான் கொடுத்த வாக்குப்படியே, மறுநாள் மாலை ஜுலியன் எனது வீட்டிற்கு வந்தார். சுமார் 7.15 மணிக்கு எனது வீட்டின் முன் கதவு நான்கு முறை வேகமாகத் தட்டப்பட்டதைக் கேட்டேன். எனது வீடு, கேப் காட் டிசைனில், ரோஜா நிறத்திலான சகிக்க முடியாத சன்னல் கதவுகளுடன் இருந்தது. எனது மனைவி, அது "ஆர்க்கிடெக்சுரல் டைஜஸ்ட்" என்ற பத்திரிக்கையிலிருந்து எடுக்கப்பட்டது போலத் தோற்றமளித்தது என்று கருதினாள். ஜுலியன் முந்தைய தினத்தைக் காட்டிலும் முற்றிலும் மாறுபட்ட தோற்றத்தில் இருந்தார். ஒளிவிடும் உடல் நலனுடன் ஒரு அற்புதமான அமைதியை வெளிப்படுத்துபவராக அவர் தோன்றினார். அவர் அணிந்து கொண்டிருந்த உடை தான் என்னைச் சற்றே சங்கடப்பட வைத்தது.

அவரது மெல்லிய, நன்கு வடிவமைத்த உடலை ஒரு நீளமான சிவப்பு அங்கி அலங்கரித்தது. தலையில், ஒரு அழகிய பூவேலை செய்யப்பட்ட ஊதாநிறத் தலையணி இருந்தது. அது ஒரு ஜுலை மாத வியர்வை நசநசக்கும் இரவாக இருந்தபோதிலும், அவரது தலை மூடப்பட்டிருந்தது.

"வாழ்த்துக்கள், நண்பரே!" என்றார் ஜுலியன் உற்சாகத்துடன்...

"வாழ்த்துக்கள்," என்றேன் நான் சுரத்தின்றி.

"அப்படிக் கலவரமுற்றுப் பார்க்காதே, நான் என்ன அணிந்திருப்பேன் என்று எதிர்பார்த்தாய் – ஆர்மானி?"

நாங்கள் இருவரும் சிரிக்கத் தொடங்கினோம். மென்மையாகத் தொடங்கிய அந்த நகைப்பு விரைவில் வெடிச் சிரிப்பாக மாறியது. வெகு காலத்திற்கு முன்னர் என்னைப் பெரிதும் உற்சாகத்தில் ஆழ்த்திய அந்தப் பொல்லாத நகைச்சுவை உணர்வை ஜுலியன் நிச்சயமாக இழந்துவிடவில்லை.

பொருள்கள் அடைந்து கிடந்த ஆனால் வசதியான எனது முன்னறையில் நாங்கள் அமர்ந்து கொண்டபோது, அவரது கழுத்தில் தொங்கிய வேலைப்பாடமைந்த மரத்தாலான ஜபமாலையைக் கவனிக்காமல் இருக்க என்னால் முடியவில்லை.

“அது என்ன? அந்த மணிகள் உண்மையிலேயே வெகு அழகாக உள்ளன,” என்றேன்.

“இவற்றைப் பற்றிப் பின்னர் சொல்கிறேன். இன்றிரவு நாம் பேச வேண்டியவை நிறைய உள்ளன” என்றார் அவர். மணிகளைத் தனது விரல்களால் நெருடியவராக.

“தொடங்கலாம், இன்று என்னால் எந்த வேலையும் செய்ய முடியவில்லை. நமது சந்திப்பைப் பற்றி நான் மிகவும் உற்சாகத்துடன் இருந்தேன்.”

இதைக் கேட்டவுடன், தனது தனிப்பட்ட மாற்றம் பற்றியும், அது எவ்வளவு சுலபமாக செய்யப்பட்டது என்பது பற்றியும் அவர் மேலும் அதிக விவரங்களை வெளியாக்கத் தொடங்கினார். மனதைக் கட்டுப்படுத்துவதற்கும், நமது சிக்கலான சமுதாயத்தில் உள்ள பலரையும் பற்றிப் பிடித்திருந்த கவலைப்படுகின்ற பழக்கத்தைப் போக்குவதற்குமாகத் தான் கற்றுக் கொண்டிருந்த புராதனச் செய்முறைகளைப் பற்றி அவர் என்னிடம் கூறினார். ஒரு அதிக நோக்கத்துடன் கூடிய, நிறைவளிக்கும் வாழ்க்கையை வாழ்வதற்கான, யோகி இராமன் மற்றும் பிற துறவிகள் தன்னுடன் பகிர்ந்து கொண்ட ஞானத்தைப் பற்றியும் பேசினார். நம் ஒவ்வொருவருக்குள்ளும் அடி ஆழத்தில் உறங்கிக் கிடந்த இளமைத் தன்மை மற்றும் சக்தி இவற்றின் ஊற்றைக் கட்டவிழ்த்து விடுவதற்கான செய்முறைகள் பற்றியும் பேசினார்.

அவர் பேசிய நம்பிக்கையூட்டும் விதம் தெளிவாக இருந்த போதிலும் நான் அவற்றைப் பற்றி சந்தேகப் படத் தொடங்கினேன். ஏதோ ஒரு விளையாட்டின் பலியாடாகிறேனோ நான்? என்ன இருந்தாலும், ஹார்வர்டில் பயிற்சி பெற்ற இந்த வழக்கறிஞர் தனது கிண்டல் ஜோக்குகளுக்காக எங்கள் சட்ட நிறுவனத்தில் பரவலாகப் பெயர் பெற்றவராக ஒரு காலத்தில் இருந்தது உண்மை. மேலும், அவரது கதையும், மிகவும் அதீதக் கற்பனை வளத்துடன், எளிதில் நம்பமுடியாததாக இருந்தது. எண்ணிப் பாருங்கள், நாட்டின் தலைச்சிறந்த பிரபல வழக்கறிஞர்களில் ஒருவர் தோல்வியை ஒப்புக் கொண்டு, பின் வாங்கி தனது உடைமைகள் எல்லாவற்றையும் விற்றுவிட்டு, ஒரு ஆன்மீகப் பயணமாக இந்தியா நோக்கிச் செல்கிறார். பின்னர், இமயமலையிலிருந்து ஒரு அறிவுமிக்க தீர்க்கதரிசியாகத் திரும்புகிறார். இது நிச்சயம் உண்மையாக இருக்க முடியாது.

“சரி தான், ஜூலியன். என் காலை வாருவதை நிறுத்துங்கள். இந்த மொத்தக் கதையும் உங்களது ஜோக்குகளில் ஒன்றைப் போலவே இருக்கிறது. இந்த உடையை, எனது அலுவலகத்திற்கு எதிரில் இருக்கும் மாறுவேடி உடைக் கடையிலிருந்து நீங்கள் வாடகைக்கு எடுத்திருக்கிறீர்கள் என்று நான் பந்தயம் கட்டுகிறேன்!” என்றேன் நான், இளித்தபடி.

ஜூலியனோ, எனது அவநம்பிக்கை அவர் எதிர்பார்த்த ஒன்று என்பதுபோல, உடனடியாக பதில் அளித்தார். "நீதிமன்றத்தில் நீ எவ்வாறு உனது வாதத்தை நிரூபிப்பாய்?"

"நம்பத்தகுந்த சாட்சியங்களின் வாயிலாக."

"மிகச் சரி. நான் உனக்கு முன் வைத்துள்ள சாட்சியத்தைப் பார். எனது மழமழப்பான, சுருக்கங்களற்ற முகத்தைப் பார். எனது உடலமைப்பைப் பார். என்னிடம் உள்ள அதிகமான சக்தியை உன்னால் உணர முடியவில்லையா? என்னிடம் உள்ள அமைதியைப் பார். நிச்சயமாக, நான் மாறிவிட்டிருக்கிறேன் என்பதை உன்னால் பார்க்க முடிகிறதல்லவா?"

அவர் சொன்னதென்னவோ உண்மை தான். ஒரு சில ஆண்டுகளுக்கு முன்னர், இதை விடவும் பல பத்தாண்டுகள் முதிய தோற்றத்தைத் தான் இவர் கொண்டிருந்தார்.

"நீங்கள் ஒன்றும் ஒரு பிளாஸ்டிக் சர்ஜனிடம் போகவில்லையே?"

"இல்லை!" அவர் புன்சிரித்தார். "அவர்கள் வெளித்தோற்றத்தில் மட்டும் தான் கவனம் செலுத்துகிறார்கள். எனக்கு உள்ளிருந்து ஆற்றப்படுதல் தேவையாக இருந்தது. எனது சமநிலையற்ற, குழப்பமான வாழ்க்கை முறை என்னைப் பெரும் துயரத்தில் தள்ளிவிட்டிருந்தது. என்னைத் தாக்கியது வெறும் இதய நோய் மட்டுமல்ல. என் உண்மையுமே உடைபட்டிருந்தது."

"ஆனால், உங்கள் கதை... அது மிகவும் மர்மமானதாகவும், அசாதாரணமானதாகவும் உள்ளது."

எனது பிடிவாதத்தின் முன்னால், ஜூலியன் அமைதியாகவும், பொறுமையாகவும் இருந்தார். அவருக்கருகில் மேசையின் மீது நான் வைத்திருந்த தேநீர் கெட்டிலைக் கண்ணுற்றுவிட்டு, அதை எடுத்து, தேநீரை எனது கோப்பையினுள் ஊற்றத் தொடங்கினார். அது நிறையும் வரை ஊற்றிவிட்டுப் பின்னர் தொடர்ந்து ஊற்றிக் கொண்டே இருந்தார். தேநீர் கோப்பையின் விளிம்புவரை வந்து, அதற்கு மேல் நிறைந்து வழியத் தொடங்கியது. கோப்பையின் கீழே இருந்த தட்டில் வழிந்து, அதிலும் நிறைந்து ஓடி, என் மனைவி வெகுவாக மதித்துப் பாதுகாத்து வந்த பாரசீகக் கம்பளத்தின் மீது விழுந்தது. முதலில் நான் மௌனமாகக் கவனித்துக் கொண்டிருந்தேன். ஆனால், தேநீர், தரைவிரிப்பின் மீது கொட்டத் துவங்கியதும் என்னால் அதற்குமேல் பொறுத்துக் கொள்ள இயலவில்லை.

"ஜூலியன், என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? எனது கோப்பை நிறைந்து வழிகிறது. நீங்கள் எவ்வளவு தான் முயன்றாலும், அதற்கு மேல் அதில் எதுவும் கொள்ளாது!" என்று நான் பொறுமையிழந்து கத்தினேன்.

அவர் என்னை ஒரு நெடிய தருணம் உற்றுப் பார்த்தார். "தயவு செய்து இதைத் தவறாகப் புரிந்து கொள்ளாதே. நான் உன்னை உண்மையில் மதிக்கிறேன் ஜான். எப்போதும் மதித்துள்ளேன். எனினும், இந்தக் கோப்பையைப் போலவே நீயும் உனது சொந்தக் கருத்துகளால் நிறைந்து காணப்படுகிறாய். எனவே, அதற்கு மேலும் எப்படி வேறு எதுவும் உள்ளே போக இயலும்? உனது கோப்பையை நீ காலி செய்யும் வரையில்?"

அவரது சொற்களில் இருந்த உண்மை என்னைத் தாக்கியது. அவர் சொன்னது சரி. பழைமைக் கருத்துக்கள் நிறைந்த சட்ட உலகில் நான் கண்டிருந்த, முன் செய்த விஷயங்களையே (தினந்தோறும் அதே எண்ணங்களையே எண்ணிக் கொண்டிருந்த) பழகிய பழைய மனிதர்களுடனேயே பலமுறைகள் தினந்தோறும் திரும்பத் திரும்பச் செய்து வந்ததால், எனது கோப்பை விளிம்பு வரையில் நிரம்பிவிட்டிருந்தது. புதிய மனிதர்களை நாங்கள் சந்திக்க வேண்டும் என்றும், புதிய செயல்களை செய்து பார்க்க வேண்டும் என்றும் எனது மனைவி ஜென்னி எப்போதுமே சொல்லிக் கொண்டிருப்பாள். "நீங்கள் இன்னும் கொஞ்சம் துணிச்சல்காரராக புதிய விஷயங்களில் ஈடுபடுபவராக இருக்கலாமே என்று நான் விரும்புகிறேன் ஜான்," என்பாள் அவள்.

சட்டத்துடன் தொடர்பு கொண்டிராத ஒரு புத்தகத்தை நான் இறுதியாக எப்போது வாசித்தேன் என்று எனக்கு நினைவு இல்லை. எனது தொழில் எனது வாழ்க்கையாக இருந்தது. எனக்குப் பழக்கமாகிவிட்டிருந்த அந்த வெகு மந்தமான உலகம், எனது உருவாக்கும் திறனை மங்கச் செய்து, எனது பார்வைப் பரப்பைக் குறைத்து விட்டிருந்தது என்பதை நான் உணர்ந்து கொள்ளத் தலைப்பட்டேன்.

"சரி, உங்கள் கருத்தை என்னால் பார்க்க முடிகிறது," என்று நான் ஒப்புக் கொண்டேன். "ஒருக்கால் இத்தனை ஆண்டுகளாக ஒரு வழக்கறிஞராக இருந்ததால் நான் ஒரு இறுகிப் போன சந்தேகப் பிராணி ஆகிவிட்டேன் போலும். எனது அலுவலகத்தில், நேற்று உங்களை கண்ட நிமிடத்திலிருந்து. உங்களது மாற்றம் உண்மையானது தான் என்று எனக்குள்ளிருந்த ஏதோ ஒன்று சொல்லியது. அதில் எனக்கும் ஒரு பாடம் இருக்கிறது என்றும் எனக்குத் தோன்றியது. ஒருவேளை, நான் அதை நம்புவதற்கு விரும்பவில்லை போலும்!"

"ஜான், இன்று இரவு தான் உனது புதிய வாழ்வின் முதல் இரவு. நான் உன்னிடம் கேட்பதெல்லாம் இது தான். உன்னுடன் நான் பகிர்ந்து கொள்ளவிருக்கும் அறிவு மற்றும் செயல்முறைகளைப் பற்றி ஆழமாக யோசி. பின்னர், நம்பிக்கையுடன் அவற்றை ஒரு மாத காலம் பின்பற்று. அந்தச் செயல்முறைகள் பயனுள்ளதாக இருக்கும் என்ற ஒரு ஆழமான நம்பிக்கையுடன் அவற்றை ஏற்றுக் கொள். ஓராயிரம் ஆண்டுகள் அவை நிலைத்துள்ளன என்றால் அதற்கு ஒரு காரணம் உள்ளது. ஏனெனில், அவை வேலை செய்கின்றன."

"ஒரு மாதம் என்பது ஒரு நீண்ட காலமாகத் தோன்றுகிறது."

“உனது மீதமிருக்கும் வாழ்நாளின் ஒவ்வொரு நிமிடத்தையும் வெகு தீவிரமாகவும், தீர்க்கமாகவும் மேம்படுத்துவதற்கு, அறுநூற்று எழுபத்தியிரண்டு மணிநேரம் உள்மனதில் வேலை செய்வது என்பது ஒரு நல்ல பேரமாக உனக்குத் தோன்றவில்லையா? உனக்குள்ளே முதலீடு செய்வது தான் நீ செய்யப்போகும் மிக முக்கியமான முதலீடு ஆகும். அது உனது வாழ்க்கையை மட்டும் மேம்படுத்தாது, உன்னைச் சுற்றியுள்ள எல்லோரின் வாழ்க்கையையும் அது மேம்படுத்தும்.”

“அது எவ்வாறு?”

“உன்னையே நீ நேசிக்கும் கலையை நன்கு கற்றுத் தேர்ந்த பின்னர் தான் உன்னால் பிறரை உண்மையிலேயே நேசிக்க முடியும். உனது இதயத்தைத் திறந்த பின்னர் தான் உன்னால் பிறரது இதயங்களைத் தொட முடியும். நீ மையம் கொண்டும், உயிர்ப்புடனும் உணரும்போது, ஒரு மேலான நபராக இருக்கக் கூடிய நிலையில் நீ இருக்கிறாய்.”

“ஒரு மாத காலத்தை உருவாக்குகின்ற அந்த அறுநூற்று எழுபத்திரண்டு மணி நேரத்தில் என்ன நிகழும் என்று நான் எதிர்பார்க்கலாம்?” என்று நான் ஆர்வத்துடன் கேட்டேன்.

“உன்னையே வியப்பில் ஆழத்தும் வகையில், உன் மனம், உடல், ஏன் ஆன்மாவிலும் கூட இருக்கின்ற செயல்பாடுகளில், மாற்றங்களை நீ உணர்வாய். உன்னிடம் கூடுதல் சக்தி, உற்சாகம் மற்றும் உள்ளார்ந்த இணக்கம் ஆகியவை, உனது வாழ்நாள் முழுவதிலும் முன்னர் எப்போதும் இருந்ததை விடவும் அதிகமான அளவு இருப்பதைக் காண்பாய். நீ மேலும் இளமையாகவும், அதிக மகிழ்ச்சியுடனும் இருப்பதாகப் பிறர் உன்னிடம் சொல்லத் தொடங்குவார்கள். நிலைத்திருக்கின்ற ஒரு சுகமும், சமநிலையும் கொண்ட உணர்வு உன் வாழ்வில் விரைவில் திரும்ப வரும். சிவானன் செயல்முறையில் நற்பலன்களில் இவை வெகு சிலவே ஆகும்.”

“வாவ், அற்புதம்”.

“இன்றிரவு நீ கேட்கப் போகும் எல்லா விஷயங்களும் உனது வாழ்க்கையை – வெறும் சொந்த வாழ்க்கை, தொழில் வாழ்க்கை என்று மட்டுமல்லாது, ஆன்மீக ரீதியாகவும் மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டவை ஆகும். முனிவர்களின் அறிவுரை, ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாக எத்துணைப் பொருத்தமானதாக இருந்ததோ அதே அளவு இன்றைய நாளிலும் காலத்துக்குப் பொருந்துவதாகவே உள்ளது. அது உனது உள்ளார்ந்த வாழ்க்கையை மட்டும் செழிப்படையச் செய்யாது. மாறாக, உனது வெளியுலக வாழ்க்கையையும் மேம்படச் செய்து, நீ செய்கிற அனைத்துக் காரியங்களிலும் உன்னை மிக மிக அதிகமான செயலூக்கம் உள்ளவனாகச் செய்யும். இந்த அறிவானது, உண்மையிலேயே நான் இதுவரை சந்தித்துள்ளவற்றில் எல்லாம் சக்திவாய்ந்த ஒரு விஷயமாகும். வெகு எளிமையானதாகவும், தெளிவானதாகவும், நடைமுறைப்படுத்தக் கூடியதாகவும் உள்ள

இச்செயல்பாடு, வாழ்க்கை எனும் ஆய்வுக் கூடத்தில் பல நூற்றாண்டுகளாகச் சோதிக்கப்பட்டு வந்துள்ளது. இதில் மிகவும் முக்கியமான ஒன்று என்னவென்றால் இது யாருக்கு வேண்டுமானாலும் பயன்படும், பலன் தரும். ஆனால், இந்த அறிவை உன்னுடன் பகிர்ந்து கொள்ளும் முன், நான் உன்னிடம் ஒரு வாக்குறுதி கேட்க வேண்டும்.''

இதில் இதுபோல ஏதாவது ஒரு சிக்கல் இருக்கும் என்பது நான் அறிந்தது தான். 'ஓசிச்சாப்பாடு' என்று எதுவுமே கிடையாது என்று என் அன்பு அம்மா சொல்வது வழக்கம்.

''சிவானாவின் முனிவர்கள் எனக்குக் காட்டியுள்ள செய்முறைகள் மற்றும் திறன்கள் இவற்றின் சக்தியை நீ கண்டு கொண்ட பின்னர், உனது வாழ்வில் அவை கொண்டுவரக் கூடிய மகத்தான, அட்டகாசமான விளைவுகளைப் புரிந்து கொண்டு விட்ட பின்னர், இந்த அறிவினால் பயனடையக் கூடிய பிறருக்கு இதைக் கற்றுக் கொடுப்பதை நீ உன்னுடைய வாழ்வின் தலையாய நோக்கமாக ஏற்றுக் கொள்ள வேண்டும். நான் உன்னைக் கேட்பதெல்லாம் இது தான். இதற்கு ஒப்புக் கொள்வதன் மூலம் நான், யோகி இராமனுடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்தை நிறைவேற்றுவதற்கு நீ எனக்கு உதவுவாய்,'' என்றார் ஜூலியன்.

அவர் கேட்டுக் கொண்டதற்கு எவ்விதத் தயக்கமும் இன்றி நான் ஒப்புக் கொண்டேன். மிகப் புனிதமானது என்று அவர் கருதிய அந்தச் செய்முறையை ஜூலியன் எனக்குக் கற்றுத் தரத் தொடங்கினார். ஜூலியன் சிவானாவில் தங்கியிருந்தபோது கற்றுத் தேர்ந்த செய்முறைகள் பல்வேறு வகைப்பட்டவை. எனினும், சிவானா முறையின் மையமாக, ஏழு அடிப்படை நற்குணங்கள் இருந்தன. இந்த ஏழு அடிப்படைக் கொள்கைகளும், சுய தலைமைத்துவம், சுய பொறுப்பு மற்றும் ஆன்மீகத் தெளிவு இவற்றுக்கான திறவு கோல்களாக அமைந்திருந்தன.

ஜூலியன், சிவானாவில் ஒரு சில மாதங்கள் தங்கியிருந்த பின்னர், யோகி இராமன் தான் முதன் முதலில் அவரிடம் இந்த ஏழு நற்பண்புகளைப் பற்றிக் கூறினார் என்று என்னிடம் கூறினார். ஒரு நாளிரவு, சிவானாவில் இருந்த எல்லோரும் உறக்கத்தில் ஆழ்ந்திருந்த போது, இராமன் வந்து ஜூலியனின் குடிலின் கதவை ஓசையெழுப்பாமல் தட்டினார். ஒரு மென்மையான வழிகாட்டியின் குரலில் அவர் தனது எண்ணத்தை வெளிப்படுத்தினார்.

''நான் பல தினங்களாக உன்னைக் கூர்ந்து கவனித்து வந்துள்ளேன், ஜூலியன். நீ ஒரு நல்ல மனிதன் என்றும், நல்ல விஷயங்களால் உனது வாழ்வை நிரப்பிக் கொள்ள வெகு தீர்க்கமாக விரும்புகிறாய் என்றும் நான் நம்புகிறேன். நீ இங்கு வந்து சேர்ந்ததிலிருந்து, எமது பாரம்பரியங்களை மனந்திறந்து ஏற்றுக் கொண்டது மட்டுமின்றி, அவற்றையே உனது சொந்தக் கொள்கைகளாகவும் உள்வாங்கிக் கொண்டுள்ளாய். எங்களது அன்றாடப் பழக்க வழக்கங்களில் பலவற்றையும் நீ கற்றுக் கொண்டுள்ளாய். அவற்றின் மிகவும் மேலான பலன்களையும் நீயே கண்டுள்ளாய். எமது வழிகளை நீ மதித்துள்ளாய். இந்த எளிமையான, அமைதியான

வாழ்க்கையை எமது மக்கள் எண்ணற்ற காலம் வாழ்ந்துள்ளனர். எமது வழிமுறைகள் ஒரு சிலருக்கு மட்டுமே தெரிந்துள்ளன. தெளிவு பெற்ற வாழ்க்கை முறை பற்றிய எமது தத்துவத்தைப் பற்றி உலகம் அறிந்து கொள்ள வேண்டும். இன்றிரவு, சிவானாவில் உனது மூன்றாவது மாதம் துவங்கவுள்ளது. இப்போது, எங்கள் செய்முறையின் உள் செயல்பாடுகளைப் பற்றி நான் உன்னுடன் பகிர்ந்து கொள்ளத் துவங்கப்போகிறேன். இது உனது நன்மைக்காக மட்டுமல்ல, உலகின் உனது பகுதியில் உள்ள அனைவரின் நலனுக்காகவும் கூடத்தான். எனது மகன் சிறுவனாக இருந்தபோது எப்படி நான் அவனுடன் தினந்தோறும் அமர்ந்து அவனுக்குக் கற்றுக் கொடுத்தேனோ, அதேபோல நான் உன்னுடன் அமரப் போகிறேன். வருந்தத்தக்க வகையில் அவன் சில ஆண்டுகளுக்கு முன்னால் இறந்து போனான். அவன் போக வேண்டிய நேரம் வந்துவிட்டது. அவனது இறப்பைப் பற்றி நான் கேள்வி எழுப்பவில்லை. நாங்கள் இருவரும் ஒன்றாக இருந்த காலத்தை நான் மகிழ்ச்சியாக ரசித்து அனுபவித்தேன். அந்த நினைவுகளைப் பொக்கிஷம் போலப் போற்றுகிறேன். இப்போது, உன்னை எனது மகனாகக் காண்கிறேன். பல ஆண்டுகாலமாக, மௌனமான தியானத்தில் நான் கற்றுக் கொண்டவையெல்லாமே இனி உனக்குள் தொடர்ந்து வாழப் போகிறது என்பது பற்றி நான் நன்றியுணர்வு கொள்கிறேன்."

நான் ஜூலியனைக் கூர்ந்து கவனித்தேன். அறிவு என்னும் அருளாசியை அவர்மீது மழைபோல் பொழிந்த அந்த அற்புதக் கற்பனாலோகத்திற்குத் திரும்பச் சென்றுவிட்டவரைப் போல இப்போது அவரது விழிகள் மூடியிருந்தன. அவர் தொடர்ந்து பேசலானார் :

"உள்ளார்ந்த அமைதி, இன்பம் மற்றும் ஆன்மீகச் செல்வம் ஆகியவை பொங்கித் ததும்பி வழிகின்ற ஒரு வாழ்க்கைக்குத் தேவையான ஏழு மேன்மை நற்பண்புகளும், ஒரு ஆன்மரீதியான கதையினுள் பொருந்தியிருந்தன என்று யோகி இராமன் என்னிடம் கூறினார். இந்தக் கதையே அதன் மொத்த சாராம்சமும் ஆகும். நான் இப்போது செய்துள்ளது போல, எனது கண்களை மூடிக் கொள்ளும்படி அவர் கூறினார். பின்னர், பின் வருகின்ற காட்சியை எனது மனக் கண்ணில் சித்தரித்துக் கொள்ளுமாறு அவர் கூறினார்.

"ஒரு பெரிய, செழுமையான அற்புதமான தோட்டத்தின் நடுவில் நீ அமர்ந்திருக்கிறாய். நீ எப்போதுமே கண்டிராத மிக அழகிய கண்ணைக் கவரும் மலர்களால் அத்தோட்டம் நிறைந்துள்ளது. அங்குள்ள சுற்றுச்சூழல் வெகு அமைதியாகவும், நிசப்தமாகவும் உள்ளது. இத்தோட்டத்தில் புலப்படும் உணர்வுகளை, அவற்றை ரசித்து மகிழத் தேவையான காலமெல்லாம் உன்னிடம் இருப்பது போல, நீ அவற்றை அனுபவித்து மகிழ். உன்னைச் சுற்றிலும் உள்ள காட்சிகளைக் காணும்பொழுது தோட்டத்தின் நடு மையத்தில், ஆறு அடுக்குகள் கொண்ட, சிவப்பு நிற கலங்கரை விளக்கம் ஒன்றை நீ பார்க்கிறாய். திடீரென்று கலங்கரை விளக்கத்தின் கீழ்ப்பகுதியில் உள்ள கதவு, அத்தோட்டத்தில் சூழ்ந்திருந்த அமைதியைக் கலைத்துக் கொண்டு ஒலியெழுப்பியவண்ணம் திறக்கிறது. அதிலிருந்து ஒன்பதடி

உயரமும், தொண்ணூறு பவுண்டு எடையும் கொண்டுள்ள ஜப்பானிய சுமோ மல்யுத்த வீரன் ஒருவன் வெளியே வந்து, தோட்டத்தின் நடுவில் மெல்ல நடந்து வருகிறான்.

"கதை மேலும் சுவாரஸ்யமாகிறது" என்று சிரித்தார் ஜூலியன். "அந்த ஜப்பானிய சுமோ வீரன் கிட்டத்தட்ட முழு நிர்வாணமாக இருக்கிறான். அவனது பிறப்பு உறுப்புகளை ஒரு இளஞ்சிவப்பு நிற ஒயர் கம்பி மூடியுள்ளது."

"அந்த சுமோ வீரன் தோட்டத்தில் இங்குமங்கும் உலா வந்து கொண்டிருந்தபோது, பல ஆண்டுகளுக்கு முன்னர், யாரோ அங்கு விட்டுச் சென்றிருந்த தங்கநிற நிறுத்து கடிகாரத்தை அவன் கண்டெடுக்கிறான். அதை மாட்டிக் கொண்ட மாத்திரத்தில் தடாலென்று மண்ணில் சாய்கிறான். மயக்கமுற்றவனாக, சத்தமின்றி அசைவின்றி அவன் கீழே விழுந்து கிடக்கிறான். ஒரு வேளை அவன் செத்துப் போய் விட்டானோ என்று நீ எண்ணுகிற அதே நேரத்தில், வீரன் கண் விழித்துப் பார்க்கிறான். ஒருக்கால் அருகில் மலர்ந்திருந்த மஞ்சள் நிற ரோஜா மலர்களின் மணம் அவனை உசுப்பியிருக்கக்கூடும். சக்தி பெற்றவனாய், வீரன் துள்ளி எழுகிறான். ஏதோ ஒரு உள்ளுணர்வினால் உந்தப்பட்டவனாக, தனது இடது புறம் திரும்பிப் பார்க்கிறான். அங்கு அவன் கண்ட காட்சியால் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகிறான். தோட்டத்தின் ஓரத்தில் இருக்கும் புதர்களின் வழியாக ஒரு நீண்ட பாதை வளைந்து நெளிந்து செல்வதைக் காண்கிறான். அந்தப் பாதையெங்கும் ஒளிவிடும் வைரக் கற்கள் சிதறிக் கிடக்கின்றன. அந்தப் பாதையில் செல்லும்படி ஏதோ ஒன்று அவனுக்குள் சொல்கிறது. அவனும், அதற்குச் செவி கொடுத்தவனாய் அதில் நுழைகிறான். அந்தப் பாதை, என்றும் நிலைத்திருக்கும் மகிழ்ச்சி மற்றும் இறவாத பேரின்பமாகிய சாலைக்கு அவனை இட்டுச் செல்கிறது."

இமயமலையில் உயரத்தில், நேரடியாக ஆன்மஞானத்தைப் பெற்று விளக்கம் கண்டுள்ள ஒரு துறவியின் அருகில் அமர்ந்து கொண்டு, இந்த வினோதமான கதையைக் கேட்ட ஜூலியன், ஏமாற்றம் அடைந்தார். ஏதோ உலகை அசைத்து ஆட்டக்கூடிய விஷயத்தை, தன்னைச் செயலூக்கம் கொள்ளச் செய்யும் விளக்கத்தை, ஏன், கண்களில் நீர் வரும் அளவிற்கு நெகிழ வைக்கக் கூடிய கதை ஒன்றைத் தான் கேட்கப் போகிறோம் என்று தான் அவர் உண்மையில் நினைத்திருந்தார். மாறாக, அவர் கேட்டதெல்லாம், ஒரு சுமோ மல்யுத்த வீரனையும், ஒரு கலங்கரை விளக்கத்தையும் பற்றிய ஒரு வெகு முட்டாள்தனமான கதையை மட்டுமே.

யோகி இராமன் அவரது ஏமாற்றத்தைப் புரிந்து கொண்டார். **"எளிமையின் சக்தியை ஒருபோதும் அலட்சியம் செய்யாதே"** என்று ஜூலியனுக்குச் சொல்லப்பட்டது.

"நீ எதிர்பார்த்திருந்த வெகு நாகரிகமான ஒரு சொற்பொழிவாக இந்தக் கதை இல்லாமல் இருக்கலாம். ஆனால், அது சுட்டிக்காட்டும் செய்தியில் ஒரு பிரபஞ்சத்தின் அளவிலான உணர்தலும், புரிதலும் உள்ளது. அதன் நோக்கத்தில், ஒரு தூய்மை உள்ளது. நீ இங்கு வந்து சேர்ந்த நாள் முதல், இந்த அறிவை உன்னுடன் எவ்வாறு

பகிர்ந்து கொள்வது என்று நான் நீண்ட நேரம் தீவிரமாகச் சிந்தித்துள்ளேன். முதலில், ஒரு சில மாதங்கள் தொடர்ந்து உனக்குச் சில சொற்பொழிவுகளை ஆற்றலாம் என்று நினைத்தேன். ஆனால், கற்பிப்பதற்கான இந்தப் பாரம்பரியமான அணுகுமுறை, நீ இப்போது பெறவிருக்கும் ஞானத்தின் அற்புதமான மந்திரம் போன்ற இயல்புக்குப் பொருத்தமற்றதாக இருக்கும் என்பதை உணர்ந்தேன். அதன் பின்னர், எனது சகோதர, சகோதரிகள் அனைவரையும் உன்னுடன் தினமும் கொஞ்சநேரம் செலவிட்டு, எங்கள் தத்துவத்தைப் பற்றி உனக்குக் கற்றுக் கொடுக்கும்படிக் கேட்கலாம் என்று எண்ணினேன். இருந்தாலும், நாங்கள் சொல்லவேண்டியவற்றை நீ கற்றுக் கொள்வதற்கு இதுவும் மிகச் சிறப்பான வழி இல்லை என்று தெரிந்தது. இறுதியில், சிவானாவின் மொத்தச் செய்முறையையும், அதன் ஏழு நன்னெறிகளையும் உள்ளிட்டு, வெளிப்படுத்துவதற்கான ஒரு புத்தம் புதிய மற்றும் வெகு சிறப்பான முறையை நான் கண்டறிந்தேன். அது தான் இந்த ஆன்மீகப் புனிதத்துவம் நிறைந்த கதை,'' என்று யோகி கூறி முடித்தார்.

மேலும், தொடர்ந்து, ''முதலில் இது வெகு அற்பமானதாகவும், சிறுபிள்ளைத் தனமானதாகவும் கூடத் தோன்றலாம். ஆனால், இக்கதையின் ஒவ்வொரு அம்சமும், ஒளி சிந்தும் வகையில் சிறப்புற வாழ்வதற்கான, காலத்திற்கு அப்பாற்பட்ட நெறி ஒன்றை உருவகப்படுத்துகிறது. அதில் மிக ஆழமான பொருள் பொதித்துள்ளது. அந்தத் தோட்டம், கலங்கரை விளக்கம், சுமோ வீரன், இளஞ்சிவப்பு நிற ஒயர்கம்பி, நிறுத்து கடிகாரம், ரோஜா மலர்கள், மற்றும் வைரங்கள் சிதறிக் கிடக்கின்ற, வளைந்து நெளிந்து செல்கின்ற காட்டுப் பாதை எல்லாமே, ஞான விளக்கம் பெற்ற வாழ்விற்கான ஏழு முடிவற்ற நன்னெறிகளின் அடையாளங்கள் ஆகும். இந்தச் சின்னஞ்சிறு கதையையும், அது தெரிவிக்கும் அடிப்படை உண்மைகளையும் நீ நினைவில் இருத்திக் கொண்டால், உனது வாழ்வை அதன் உச்சகட்ட உயர்மட்டத்திற்கு எடுத்துச் செல்ல வேண்டி, உனக்குத் தெரிந்திருக்க வேண்டிய அனைத்தையும் உனக்குள்ளே எப்போதுமே எடுத்துச் செல்வது உறுதி என்று நான் உனக்குச் சொல்கிறேன். உனது சொந்த வாழ்வின் தரத்தையும், நீ தொடர்பு கொள்ளக் கூடிய ஒவ்வொருவரின் வாழ்வின் தரத்தையும் வெகு ஆழமாகப் பாதிக்கக் கூடிய செய்திகள் மற்றும் செய்முறைகள் பற்றிய எல்லாமும் உனக்குக் கிடைக்கும். இந்த ஞானத்தை, தினசரி வாழ்வில் நீ பயன்படுத்தினால், உளரீதியாகவும், உணர்வு ரீதியாகவும், உடல்ரீதியாகவும் ஆன்மரீதியாகவும் மாற்றமடைவாய். இந்தக் கதையை உனது மனதின் அடி ஆழத்தில் எழுதி வை. அதை உன் இதயத்திலே வைத்து எடுத்துச் செல். எந்தவிதமான சந்தேகமோ, தயக்கமோ இன்றி நீ அதை முழுமனதுடன் ஏற்றுக் கொண்டால் மட்டுமே அது உன்னில் மகத்தான மாற்றங்களை விளைவிக்கும்.''

''நல்ல காலம் ஜான், அதிர்ஷ்டவசமாக, நான் அதை முழுமனதோடு ஏற்றுக் கொண்டு, பின்பற்றினேன்,'' என்றார் ஜூலியன். ''உனது இதயத்துக்குள்ளே பார்க்கும் பொழுது மட்டுமே உனது உயர் நோக்கமும், உன் பார்வையும் தெளிவாகும். ***'வெளியிலே பார்க்கிறவன், கனவு காண்கிறான். உள்ளே பார்க்கிறவனோ, விழிப்படைகிறான்'*** என்று **கார்ல் யூங்** ஒருமுறை சொல்லியிருக்கிறார். அந்த வெகு

முக்கியமான இரவிலே, நான் இதயத்துக்குள்ளே ஆழமாக ஊடுருவிச் சென்று பார்த்தேன். அவ்வாறு பார்த்து, மனதைச் செழிப்படையச் செய்வதற்கும், உடலைப் பேணிப் பாதுகாத்து வளர்ப்பதற்கும், ஆன்மாவை சக்திபெறச் செய்வதற்குமான காலங்காலமாகப் பயன்பட்டு வந்துள்ள இரகசியங்களைப் பற்றிய விழிப்புணர்வைப் பெற்றேன். இப்போது அதை உன்னுடன் பகிர்ந்து கொள்வதற்கு இது என்னுடைய முறையாகும்,'' என்று அவர் கூறி முடித்தார்.

7

வெகு அசாதாரணமான ஒரு தோட்டம்

'தங்களுக்குள்ளே வளர்ச்சியுறுவதற்கெனத் தயாராக, ஆனால், மறைந்து கிடக்கின்ற சக்திகளின் ஒரு மிகக் குறுகிய, தடைசெய்யப்பட்ட வட்டத்திற்குள்ளே தான் பெரும்பாலான மனிதர்கள் வாழ்கிறார்கள். அது உடல் ரீதியாகவோ, அறிவு ரீதியாகவோ அல்லது ஒழுக்க ரீதயாகவோ இருக்கலாம். நம்மால் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில் அளப்பரிய சேமிப்புச் சக்திகள் அனைவரிடமும் உள்ளன. அவற்றைப் பற்றி நாம் கனவு கூடக் காண்பதில்லை'

- வில்லியம் ஜேம்ஸ்

"அந்தக் கதையில், தோட்டமானது மனதைக் குறிக்கிறது" என்றார் ஜூலியன். "உனது மனதைப் பற்றி அக்கறை கொண்டு, ஒரு செழிப்பான, வளமான தோட்டத்தைப் போல அதைப் பண்படுத்தி, முறைப்படி வளர்த்தால், உனது எதிர்பார்ப்புகள் எல்லாவற்றுக்கும் அப்பாற்பட்டு அது மலரும். ஆனால், களைகள் வேரூன்றுவதற்கு நீ இடம் கொடுத்துவிட்டால், நிலையான மன அமைதியும், ஆழமான உள்ளார்ந்த நல்லிணக்கமும் எப்போதுமே உனது கைக்கு எட்டாமல் நழுவிச் சென்று கொண்டே இருக்கும்".

"ஜான், நான் உன்னிடம் ஒரு வெகு சாதாரணமான கேள்வியைக் கேட்கிறேன். உனது வீட்டிற்குப் பின்னால் உள்ள தோட்டத்தைப் பற்றி என்னிடம் நிறையச் சொல்லியிருக்கிறாய். நான் அங்குச் சென்று, நீ போற்றிப் பாதுகாக்கும் பெடூனியாப் பூக்களின் மேல் நச்சுத்தன்மை கொண்ட கழிவை வீசினால், நீ ஒன்றும் களிப்படையமாட்டாய், அல்லவா?"

"கண்டிப்பாக மாட்டேன்."

"உண்மையில், பெரும்பாலான தோட்டக்காரர்கள் தமது தோட்டங்களை போர் வீரர்களைப் போலக் காக்கிறார்கள். அதற்குள் எந்தவிதமான நச்சுத்தன்மையோ, மாசோ ஒருபோதும் புகுந்து விடாமல் உறுதியாகப் பார்த்துக் கொள்கிறார்கள். ஆனால், ஒவ்வொரு நாளும், தமது மனம் என்னும் செழிப்பான தோட்டத்தினுள் மனிதர்கள் போடுகின்ற நச்சுக்கழிவுகளைப் பார். கவலைகள், பயங்கள், கடந்த காலத்தைப் பற்றிப் பெருமை காட்டிக் கொள்ளுதல், எதிர்காலத்தைப் பற்றிக் கவலை கொள்ளுதல், என அவர்களது உள்ளார்ந்த உலகத்தை நாசம் செய்கின்ற, தாமே உருவாக்கிக் கொள்கிற அச்சங்கள்...

பல்லாயிரக் கணக்காக இருந்து வருகின்ற மொழியாகிய சிவானா துறவிகளின் மொழியில், கவலை என்ற சொல்லுக்கு எழுத்தில் எழுதப்படும் வடிவமானது மயானத்தீயைக் குறிக்கும் வடிவத்தோடு வெகு வியக்கத்தக்க வகையில் ஒத்துள்ளது. இது வெறும் தற்செயலான பொருத்தம் அல்ல என்று யோகி இராமன் என்னிடம் கூறினார். கவலையானது மனதின் பெருமளவு சக்தியை விரயம் செய்து விடுகிறது. மேலும், காலப்போக்கில் அது ஆன்மாவையே காயப்படுத்திவிடுகிறது.

"வாழ்க்கையை முழுமையாக வாழவேண்டுமானால், நீ உனது தோட்டத்தின் வாசலில் காவல் நிற்க வேண்டும். வெகு சிறப்பான விவரங்கள் மட்டுமே உள்ளே நுழைவதற்கு அனுமதிக்க வேண்டும். ஒரு எதிர்மறையான எண்ணம், ஒரே ஒரு எதிர்மறையான எண்ணத்தைக் கொள்ளுவது கூட உனக்கு உண்மையில் கட்டுப்படியாகாத ஒரு விஷயமாகும். உலகில் மிகவும் மகிழ்ச்சியாகவும், செயலூக்கத்துடனும், மனத் திருப்தியுடனும் இருக்கின்ற மனிதர்கள், தமது அமைப்பால் உன்னையும் என்னையும் விட மாறுபட்டவர்கள் இல்லை. நாம் எல்லோருமே எலும்பாலும், தசையாலும் ஆனவர்கள் தான். நாம் அனைவருமே ஒரே பிரபஞ்ச ஆதாரத்திலிருந்து வந்தவர்கள் தான். இருந்த போதிலும், சும்மா உயிருடன் இருப்பதைக் காட்டிலும் அதிகமாகச் செய்கின்றவர்கள், தமது மனித சாத்தியப்பாடுகளின் தீயை விசிறி வீசிப் பெரிதாக்குகிறவர்கள், வாழ்வின் மந்திர நடனத்தை உண்மையிலே ரசித்து அனுபவிப்பவர்கள். சாதாரணமாக வாழ்ந்து கொண்டிருப்பவர்களைக் காட்டிலும் மாறுபட்ட விஷயங்களைச் செய்கிறார்கள். அவர்கள் செய்கிற விஷயங்களில் முதன்மையானது என்னவென்றால், தமது உலகத்தையும், அதில் இருக்கின்ற எல்லாவற்றையும் பற்றிய ஒரு நேர்மறையான வடிவமைப்பை ஏற்றுக் கொள்வது தான்."

ஜூலியன் மேலும் கூறினார். "ஒரு சராசரி மனிதன், ஒரு சராசரி நாளில் தனது மனதில் சுமார் அறுபதாயிரம் எண்ணங்களை ஓட விடுகிறான் என்று துறவிகள் எனக்குக் கற்றுக் கொடுத்தார்கள். இதில் என்னை உண்மையில் வியப்படைய வைத்தது என்னவென்றால், அந்த எண்ணங்களில் தொண்ணூற்றி ஐந்து சதவிகிதம், முந்தைய தினம் எண்ணமிட்ட அதே எண்ணங்கள் தான்!"

"நீங்கள் நிஜமாகத் தான் சொல்கிறீர்களா?" என்று நான் கேட்டேன். "நிச்சயமாக! இது தான் **வறிய நிலைச் சிந்தனையின் கொடுங்கோன்மை.** அதே எண்ணங்களைத் தினமும் எண்ணிக் கொண்டிருப்பவர்கள் - அவற்றிலும் பெரும்பான்மையானவை எதிர்மறைச் சிந்தனைகள் - மோசமான சிந்திக்கும் பழக்கங்களுக்குள் விழுந்து விட்டிருக்கிறார்கள். தமது வாழ்வில் இருக்கின்ற நல்ல விஷயங்கள் அனைத்திலும் தமது கவனத்தைச் செலுத்தி, அவற்றை எவ்வாறு மேலும் சிறப்புறச் செய்யலாம் என்று சிந்திப்பதற்குப் பதிலாக, அவர்கள் தமது இறந்த காலத்திற்குள்ளே சிறைப்பட்டு உள்ளனர். சிலபேர், முறிந்து போன உறவுகளைப் பற்றியோ, பொருளாதாரப் பிரச்சினைகளைப் பற்றியோ கவலை கொள்கின்றனர். வேறு சிலரோ, சரியாக அமையாமல் போன சிக்கல்கள் நிறைந்த தமது

இளம்பருவத்தைப் பற்றி எண்ணி எண்ணி மனக்கலக்கம் கொள்கின்றனர். மற்றும் சிலர் வெகு அற்பமான விஷயங்களை மனதில் இருத்திக் கொண்டு அவற்றைப் பற்றித் தொடர்ந்து சிந்தனை செய்தவண்ணம் உள்ளனர். அதாவது ஒரு கடைச்சிப்பந்தி தம்மைச் சரியாகக் கவனிக்காதது, ஒரு சக ஊழியரின் விஷம் தோய்ந்த விமர்சனம், இன்ன பிற, தமது மனதில் இத்தகைய எண்ண ஓட்டங்களைக் கொண்டுள்ள நபர்கள், கவலையானது தமது உயிர்ச் சக்தியைக் கொள்ளையடித்துச் செல்லும்படி விட்டு விடுகிறார்கள். மந்திரம் போட்டது போல, உணர்வு பூர்வமாக, உடல்ரீதியாக, ஆம் ஆன்மீக ரீதியாகவும் கூட, தாம் எண்ணிவற்றை எண்ணியவாறு எய்துவதற்காகத் தமக்குப் பயன்படக்கூடிய, மனதின் அளப்பரிய, மறைந்து கிடைக்கும் சக்தியை அவர்கள் தடைசெய்து விடுகிறார்கள். வாழ்க்கையை நிர்வாகம் செய்வதன் அடிப்படைச் சாராம்சமே மனதை, எண்ணங்களை நிர்வாகம் செய்வது தான் என்ற உண்மையை இவர்கள் உணர்ந்து கொள்வதேயில்லை.''

'ஒருவர் சிந்தனை செய்யும் விதமானது, வெகு எளிமையாகவும், மிகச் சரியாகவும், அவரது பழக்கத்திலிருந்து மட்டுமே எழுகிறது – அமைகிறது' என்றார் ஜூலியன் வெகு திடமாக!

''பெரும்பாலானோர் தமது மனதின் மாபெரும் சக்தியைப் பற்றி சற்றும் உணர்வதில்லை. வெகு நன்றாகச் சிந்திக்குமாறு பயிற்சி பெற்றுள்ள சிந்தனையாளர்கள் கூட தமது மனோசக்திச் சேமிப்பில் ஒரு சதவிகிதத்தில் நூறில் ஒரு பங்கை மட்டுமே பயன்படுத்திக் கொண்டுள்ளனர். சிவானாவின் துறவிகள் தமது மனதில் இன்னமும் பயன்படுத்தாமல் விட்டு வைக்கப்பட்டுள்ள சக்தியைப் பற்றித் தெரிந்து கொள்ள, ஒரு ஒழுங்கான முறையில் முயற்சி செய்யத் துணிந்தனர். இம்முயற்சியின் விளைவுகள் பெரும் வியப்பூட்டுபவையாக இருந்தன. யோகி இராமன், ஒழுங்கான மற்றும் கட்டுப்பாடான பயிற்சியின் வாயிலாக, தான் விரும்பியவண்ணம் தமது இதயத் துடிப்பின் வேகத்தை மட்டுப்படுத்த தனது மனதைப் பழக்கியுள்ளார். பல வார காலம் உறங்காமலே செயல்படுவதற்குக் கூட அவர் தன்னைப் பயிற்றுவித்துக் கொண்டுள்ளார். இவை, நீ முயன்று பார்க்க வேண்டிய இலக்குகள் என்று நான் ஒரு போதும் சொல்ல மாட்டேன். எனினும், உனது மனதின் உண்மையான சக்தியை இயற்கையின் மிகவும் மகத்தான அந்த வரப்பிரசாதத்தை அது உள்ளவாறே நீ பார்க்கத் தொடங்க வேண்டும் என்று தான் நான் கூறுகிறேன்.'' என்றார் ஜூலியன்.

''இந்த 'மனதின் சக்தியை' வெளிக் கொணர்வதற்காக நான் செய்யக் கூடிய பயிற்சிகள் ஏதேனும் உள்ளதா? எனது இதயத் துடிப்பை மட்டுப்படுத்துவதால், நமது காக்டெயில் பார்ட்டிகளில் நான் நிச்சயமாகப் பெரும் பரபரப்பை ஏற்படுத்திப் புகழ் பெற முடியும்!'' என்றேன் நான், குறும்புடன்.

''அதைப்பற்றி நீ இப்போது கவலைப்படாதே ஜான். இந்தப் புராதனச் செய்நுட்பத்தின் சக்தியை உனக்குக் காட்டவல்ல சில நடைமுறைப் பயிற்சிகளை உனக்குத் தருகிறேன். நீ அவற்றைப் பின்னர் முயற்சி செய்து பார்க்கலாம்.

இப்போதைக்கு முக்கியமான விஷயம் என்னவென்றால் மனதைக் கட்டுப்படுத்தி வெற்றி கொள்வது என்பது வெறும் பயிற்சி மற்றும் பழக்கத்தால் அதைப் பதப்படுத்துவதால் மட்டுமே வருகிறது, வேறு எதனாலும் இல்லை என்பதை நீ புரிந்து கொள்ளவேண்டும் என்பது தான்.

பிறந்தவுடன், நமது முதல் மூச்சுக் காற்றை உள்வாங்கிய கணம் முதல், நாம் அனைவருமே ஒரே மாதிரியான மூலப் பொருள்களைத் தான் நம் வசம் வைத்துள்ளோம். பிறரைக் காட்டிலும் அதிகமாகச் சாதிக்கும் மனிதர்களை அல்லது அதிக மகிழ்ச்சியுடன் உள்ள மனிதர்களை, வேறுபடுத்திக் காட்டுவது என்னவென்றால், இந்த மூலப் பொருள்களை அவர்கள் பயன்படுத்துகிற சீர் செய்கிற விதம் மட்டுமே. உனது அக உலகத்தை மாற்றுவதில் நீ உன்னையே அர்ப்பணித்துக் கொள்ளும்போது, உனது வெளி வாழ்க்கையும் சராசரி, சாதாரணம் என்பதிலிருந்து, அசாதாரணம், அற்புதம் என்ற மட்டத்திற்கு விரைவாக மாறிச் செல்கிறது.''

எனது ஆசான், நிமிடத்திற்கு நிமிடம் வெகு அதிகமாக உணர்ச்சி வசப்படத் தொடங்கினார். மனதின் மந்திரச் சக்தியையும் அது கொண்டு வரக்கூடிய செழிப்பான நன்மைகளைப் பற்றிப் பேசுகையில் அவரது கண்கள் ஒளிவிட்டு மின்னின.

''உனக்குத் தெரியுமா, ஜான்? சொல்ல வேண்டியதையெல்லாம் சொல்லி முடித்த பின்னர், நமது ஆளுகைக்குள் அடங்கியிருக்கிற ஒரே விஷயம் ஒன்று மட்டும் தான் உள்ளது.''

''நமது குழந்தைகள்.'' என்றேன் நான் மெல்லப் புன்னகைத்தபடி.

''இல்லை, நண்பா! நமது மனங்கள்! இயற்கையின் தட்பவெப்ப நிலையையோ, வண்டிகளின் போக்குவரத்தையோ, நம்மைச் சுற்றிலும் உள்ள பிறரது மனநிலைகளையோ நம்மால் கட்டுப்படுத்த முடியாமல் போகலாம். ஆனால், மேற்கண்டவையைப் பொறுத்த நமது கண்ணோட்டத்தை நம்மால் நிச்சயமாகக் கட்டுப்படுத்த முடியும். எந்தவொரு குறிப்பிட்ட தருணத்திலும், நாம் எதைப் பற்றிச் சிந்திக்கிறோம் என்பதைத் தீர்மானிக்கும் சக்தி நம் அனைவருக்கும் உள்ளது. இந்தத் திறமை தான் நாம் மனிதர்களாக இருப்பதன் ஒரு அங்கமாக உள்ளது. கீழை நாடுகளில் பயணம் செய்ததில் நான் கற்றுக் கொண்ட உலக ஞான நல் மணிகளில் ஒன்று வெகு எளிமையான ஒன்றும் கூட.''

ஏதோ ஒரு விலை மதிப்பற்ற பரிசை எம்முன் வரவழைப்பது போல, ஜூலியன் தனது உரையைச் சற்று நிறுத்தினார்.

''அது என்னவாக இருக்கக்கூடும்?''

''நமக்கு வெளியே உள்ள உண்மை, அல்லது 'உண்மையான உலகம்' என்று எதுவுமே கிடையாது. அவ்வாறு முற்றாக, முழுமையாக உள்ளது எதுவுமில்லை. உனது மிகப் பெரிய எதிரியின் முகமே, எனது மிகச்சிறந்த நண்பனின் முகமாக இருக்கக் கூடும். ஒருவருக்கு பேரிடராகத் தென்படும் ஒரு சம்பவம், வேறு ஒருவருக்கு

எண்ணற்ற வாய்ப்புகளின் விதைகளை வெளிக்காட்டக்கூடும். வழக்கமாக நல்லவற்றை எதிர்பார்த்தவாறு, எப்போதுமே உற்சாகத்துடன் இருப்பவர்களை இடைவிடாத துயரத்தில் இருப்பவர்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுவது என்னவென்றால் வாழ்வின் சந்தர்ப்பங்கள் எவ்வாறு பொருள் கொள்ளப்பட்டு, பின்னர் செயல்படுத்தப் படுகின்றன என்பது தான்."

"ஜூலியன், ஒரு பேரழிவு அல்லது துயரச் சம்பவம் எங்கனம் வேறு ஒன்றாக இருக்க முடியும்?"

"இதோ ஒரு சுருக்கமான எடுத்துக்காட்டு. நான் கொல்கத்தாவில் பயணித்துக் கொண்டிருந்தபோது, மல்லிகா சந்த் என்ற ஒரு பள்ளி ஆசிரியையைச் சந்தித்தேன். அவருக்கு கற்பிப்பது என்றால் பெருவிருப்பம் நமது மாணவர்களைச் சொந்தப் பிள்ளைகள் போலவே நடத்துவார். அவர்களது உள்ளார்ந்த திறமைகளை மிகுந்த பரிவுடன் வளர்ப்பார். அவரது கொள்கை என்னவென்றால், 'உனது அறிவுத் திறனை விடவும், உன்னால் முடியும் என்ற எண்ணமே அதிக முக்கியத்துவம் வாய்ந்தது' என்பதேயாகும். அவரது பகுதியில், 'பிறருக்குக் கொடுப்பதற்கென்றே வாழ்ந்து கொண்டிருந்தவர், தேவையில் இருக்கும் எவருக்கும் தன்னலமின்றி உதவுபவர் என்று தான் அனைவரும் அவரை அறிந்திருந்தனர். துயரமூட்டும் வகையில், அவரது அன்புக்குப் பாத்திரமான அந்தப் பள்ளி, பல தலைமுறைகளாகக் குழந்தைகளின் இனிய வளர்ச்சிக்கு ஒரு மௌன சாட்சியமாக இருந்து வந்த அந்தப் பள்ளி, ஓரிரவு வன்முறையாளன் ஒருவனால் தீக்கிரையாக்கப்பட்டது. அப்பகுதி மக்கள் அனைவரும் இதையொரு பெரிய இழப்பாகக் கருதினர். ஆனால், காலம் செல்ல செல்ல, அவர்களது கோபம், அக்கறையின்மையாக மாறியது. தமது பிள்ளைகள் இனிமேல் பள்ளி என்ற ஒன்று இல்லாமலே இருப்பார்கள் என்ற நிலையை அவர்கள் செயலற்று ஏற்றுக் கொண்டனர்."

"மல்லிகா என்ன செய்தார்?"

"அவர் வித்தியாசமானவராக இருந்தார். எப்போதுமே நல்ல பக்கத்தையே பார்ப்பவராக இருந்தார். அவரைச் சுற்றியிருந்த பிறரைப்போல அல்லாமல், நடந்த சம்பவத்தில் ஒரு புதிய வாய்ப்பை அவர் கண்டார். ஒவ்வொரு பின்னடைவும், நாம் தேடுவதற்காக நேரம் ஒதுக்கினால், அதற்குச் சமமான ஒரு நன்மையைக் கொண்டு வருகிறது என்று பெற்றோர்கள் அனைவரிடமும் அவர் கூறினார். இந்தச் சம்பவம், உண்மையில் மாறுவேடத்தில் வந்துள்ள ஒரு வரப்பிரசாதம். எரிந்து தரைமட்டமாகிப் போன பள்ளி பழையது, சிதிலமடைந்தது. அதன் மேற்கூரை ஒழுகிக் கொண்டிருந்தது. தரையோ, பல்லாயிரக் கணக்கான சின்னஞ்சிறு பாதங்கள் ஓடியாடியதில் அழுந்திப் போகியிருந்தது. அதை விடவும் மேலான ஒரு பள்ளிக் கட்டடத்தை, இணைந்து கட்டுவதற்கென அவர்கள் காத்துக் கொண்டிருந்த வாய்ப்பு இதுவே. அந்தச் சிறப்பான பள்ளி, வரப்போகும் ஆண்டுகளில் மேலும் அதிகப் பிள்ளைகளுக்குக் கல்வியளிப்பதாக விளங்கும் என்று சுட்டிக்காட்டினார். எனவே, இந்த அறுபத்தி நான்கு வயதான டைனமோ அவர்களைப் பின்னால் நின்று உந்தித்தள்ள, அவர்கள் தமது ஒட்டுமொத்த

சக்தியையும், ஆதாரங்களையும் செலுத்தி, ஒரு புத்தம் புதிய பள்ளியைக் கட்டுவதற்குப் போதுமான நிதியைத் திரட்டினர். அப்பள்ளி, துன்பமயமான எதிர்ப்பையும் எதிர் நின்று வெல்லும் ஒரு கனவின் சக்திக்கான ஒளிவிடும் எடுத்துக் காட்டாகத் திகழ்ந்தது.''

''ஆகா, ஒரு கோப்பையை, அது பாதிகாலியாக உள்ளது என்று பார்ப்பதை விட, பாதி நிறைந்து உள்ளது என்று பார்ப்பது பற்றிய பழமொழியைப் போன்றது. இது இல்லையா?''

"அப்படியும் கூறலாம். உனது வாழ்வில் என்ன நிகழ்ந்தபோதிலும், அதற்கான உனது பதிலைத் தேர்ந்தெடுக்கும் திறன் உன்னிடம் மட்டுமே உள்ளது. ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், நேர்மறையானதையே தேடுகின்ற பழக்கத்தை நீ உருவாக்கிக் கொண்டால், உனது வாழ்க்கை தனது உயர்மட்டங்களுக்குள் செல்லும் இயற்கையின் விதிமுறைகளிலெல்லாம் மகத்தான ஒன்று இது தான்.''

''நமது மனதை மேலும் திறம்படப் பயன்படுத்துவதன் மூலம் இதெல்லாம் தொடங்குகிறதா?''

''நிச்சயமாக! ஜான்! வாழ்வின் வெற்றிகள் எல்லாமே அவை பொருள் சார்ந்ததாயினும், ஆன்மீகம் சார்ந்ததாயினும், உனது தோள்களுக்கிடையில் அமர்ந்து கொண்டிருக்கும் அந்த பனிரெண்டு பவுண்டு எடையுள்ள திடப்பொருளிலிருந்து தான் தொடங்குகிறது. மேலும், குறிப்பாகச் சொல்வதானால், உனது மனதினுள், ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு நிமிடத்தின் ஒவ்வொரு வினாடியிலும் நீ செலுத்துகின்ற எண்ணங்களில் அது தொடங்குகிறது. உனது புற உலகம் உனது அக உலகத்தின் நிலையைப் பிரதிபலிக்கிறது. நீ எண்ணுகிற எண்ணங்களைக் கட்டுப்படுத்துவதன் வாயிலாகவும். உனது வாழ்வில் நிகழும் சம்பவங்களைப் பற்றி நீ பதில் செயல்படும் விதத்தினாலும், உனது தலைவிதியை நீ கட்டுப்படுத்த தொடங்குகிறாய்.''

''இது மிகவும் பொருள் வாய்ந்ததாக உள்ளது ஜூலியன். எனது வாழ்க்கை மிகவும் வேலைப்பளு நிறைந்ததாகவும், அதிகச் சிக்கலானதாகவும் ஆகிவிட்டதால், இந்த விஷயங்களைப் பற்றிச் சிந்திக்க எனக்கு நேரம் கிடைக்கவில்லை என்று நான் கருதுகிறேன். நான் சட்டக் கல்லூரியில் இருந்தபோது எனது மிக நெருங்கிய நண்பன் அலெக்ஸ், உத்வேகமூட்டும் நூல்களை வாசிப்பதில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தான். எங்களை அழுத்தி நசுக்கிய வேலைப் பளுவை எதிர்கொள்வதற்கான சக்தியையும், உள ஊக்கத்தையும் அவை தனக்கு அளித்தாக அவன் சொல்வதுண்டு. சீனமொழியில், 'நெருக்கடி' என்ற சொல்லுக்கான இரு சக எழுத்துக்களில் ஒன்று 'ஆபத்து' என்றும், மற்றது 'வாய்ப்பு' என்றும் தனித் தனியே பொருள்படும் என்று அவன் கூறியது எனக்கு நினைவுக்கு வருகிறது. ஒரு இருண்ட சூழ்நிலைக்கு மறுபக்கமாக ஒரு ஒளியுள்ள பக்கம் உள்ளது. அதைத் தேடுவதற்கான துணிவு உங்களிடம் இருந்தால் – என்பதை, புராதனச் சீனர்கள் கூட அறிந்திருந்தார்கள் போலும்.''

“யோகி இராமன் இவ்வாறு கூறுவார். வாழ்க்கையில் தவறுகள் என்று எதுவுமே இல்லை - பாடங்கள் மட்டுமே உள்ளன. எதிர்மறை அனுபவம் என்று ஒன்றுமே கிடையாது. வளரவும், கற்றுக் கொள்ளவும், சுய கட்டுப்பாடு, தன்னறிவு ஆகியவற்றுக்கான பாதையில் முன்னேறிச் செல்லவுமான வாய்ப்புகள் மட்டுமே அங்கு உண்டு. போராட்டத்திலிருந்து வலிமை கிடைக்கிறது. ஒவ்வொரு வலியும், வேதனையும் ஒரு அற்புதமான ஆசானாக அமையக் கூடும்.”

“வலியும் வேதனையுமா?”

“முழுமையாக! நிச்சயமாக! வலியைத் தாண்டி அப்பால் செல்ல வேண்டுமானால், நீ முதலில் அதை அனுபவித்து உணர வேண்டும். வேறு விதமாகச் சொல்வதானால், ஒரு பள்ளத்தாக்கின் அடி ஆழத்தை முதலில் கண்டுணர்ந்து கொள்ளாமல், ஒரு மலையுச்சியில் நிற்பதன் பேரானந்தத்தை நீ எவ்வாறு உண்மையில் தெரிந்து கொள்ள முடியும்? எனது கருத்து புரிகிறதா?”

“நல்லதை ரசிக்க வேண்டுமானால், ஒருவர் முதலில் தீயதை அறிந்து கொள்ள வேண்டும் என்பதா அதன் பொருள்?”

“ஆமாம், ஆனால், சம்பவங்களை நேர்மறையானவை, எதிர்மறையானவை என்று தரம் பிரித்துப் பார்ப்பதை நீ நிறுத்த வேண்டும் என்று நான் சொல்கிறேன். மாறாக இவற்றை வெறுமனே அனுபவித்து உணர்ந்து கொள். அவற்றைக் கொண்டாடி ஏற்றுக் கொண்டு அவற்றிலிருந்து கற்றுக் கொள். ஒவ்வொரு நிகழ்ச்சியும் உனக்கு ஒரு பாடத்தைத் தருகிறது. இந்தச் சின்னச் சின்னப் பாடங்கள், உனது உள் மற்றும் வெளி வளர்ச்சிகளுக்கு சக்தியூட்டுகின்றன. அவை இல்லாவிட்டால், நீ ஒரு சமதளமான பீடபூமியில் மாட்டிக் கொண்டு விடுவாய். உனது சொந்த வாழ்க்கையையே சற்று எண்ணிப் பார். பெரும்பாலானவர்கள் தமக்கு மிகவும் அதிகமாகச் சவால்விட்ட அனுபவங்களிலிருந்து தான் மிகவும் அதிகமான வளர்ச்சியை பெற்றுள்ளார்கள். ஒருவேளை, எதிர்பாராத விளைவுகளை சந்திக்க நேர்ந்து, கொஞ்சம் ஏமாற்றமடைந்தால், இயற்கையின் விதிகள், எப்போதுமே, ஒரு கதவு மூடும்பொழுது, மற்றொன்று திறப்பதை நிச்சயமாக நடைபெறச் செய்கின்றன என்பதை மட்டும் மறக்காமல் நினைவில் கொள்.”

உணர்ச்சி வேகத்தில், ஒரு தென்அமெரிக்க மதப்பிரசங்கி செய்வது போல, ஜூலியன் தனது கைகளை உயரத் தூக்கினார். “இந்த விதியை உனது தினசரி வாழ்வில் நீ இடைவிடாமல், தொடர்ந்து பயன்படுத்த தொடங்கிவிட்டால், ஒவ்வொரு நிகழ்ச்சியையும், ஒரு நேர்மறையான, வலிமையும், தன்னம்பிக்கையும் ஊட்டும் சம்பவமாக பொருள்படுத்திக் கொள்ள உனது மனதைப் பக்குவப்படுத்திக் கொள்ளத் தொடங்கிவிட்டால், நீ கவலையை மொத்தமாக விரட்டியடித்து விடுவாய். கடந்த காலத்தின் கைதியாக இருப்பதை நிறுத்தி விடுவாய். அதற்குப் பதிலாக உனது எதிர்காலத்தை உருவாக்கும் சிற்பியாகிவிடுவாய்.”

“சரி, இந்தக் கருத்து எனக்குப் புரிகிறது. ஒவ்வொரு அனுபவமும், மிகமிக மோசமானதும் கூட, எனக்கு ஒரு பாடத்தைக் கற்பிக்கிறது. எனவே, ஒவ்வொரு நிகழ்விலும் உள்ள பாடத்தை நான் மனம் திறந்து ஏற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதால், நான் மேலும் அதிக வலிமை கொண்டவனாகவும், மகிழ்ச்சியுள்ளவனாகவும் ஆகிவிடுவேன். விஷயங்களை மேலானதாக்க, ஒரு எளிமையான, நடுத்தர வர்க்கத்து வழக்குரைஞரால் வேறு என்ன செய்யக்கூடும்?”

“முதலாவதாக, உனது நினைவுகளிலிருந்து அல்லாமல், உனது கற்பனையின் பெருமிதமான மகிமையிலிருந்து வாழத் துவங்கு.”

“எங்கே, அதை மற்றொரு முறை எனக்குத் திரும்பச் சொல்லுங்கள்?”

“நான் சொல்லிக் கொண்டிருப்பதெல்லாம். உனது மனம், உடல் மற்றும் ஆன்மாவில் இன்னமும் வெளிப்படாமல், பயன்படுத்தப்படாமல் மறைந்து கிடக்கும் சக்தியை விடுபடச் செய்ய வேண்டுமானால், நீ உனது கற்பனையை முதலில் விரிவடையச் செய்ய வேண்டும் என்பது தான். இதோ பார், இருக்கின்றவை எல்லாமே இருமுறை உருவாக்கப்படுகின்றன. முதலில், மனம் என்கிற பட்டரையில். பின்னர், அதற்குப் பின்னர் மட்டும், உண்மையாக உருவாக்கப்படுகின்றன. இந்தச் செய்முறையை, நான் **‘வரைபடம் வரைதல்’** என்று அழைக்கிறேன். ஏனெனில், உனது புற உலகில் நீ உருவாக்குகின்ற எதுவுமே, உனது அக உலகில், உனது மனம் எனும் விசித்திரமான வெள்ளித்திரையில், முதன் முதலில் ஒரு எளிய வரைபடமாகத் துவங்கியது தான். உனது எண்ணங்களை முறைப்படுத்தி உனது கட்டுக்குள் கொண்டுவரக் கற்றுக் கொண்டு இந்த உலக வாழ்வில் நீ விரும்புவதையெல்லாம் ஒரு முழுமையான எதிர்பார்ப்பு நிலையில், மிகத் தெளிவாகக் கற்பனை செய்யும் பொழுது உனக்குள் உறங்கிக் கிடக்கின்ற சக்திகள் விழிப்படையும். நீ பெறத் தகுதியானது என்று நான் நம்புகிற ஒரு அற்புதமான வாழ்வை உருவாக்குவதற்கான உனது மனதின் உண்மையான மறைந்து கிடக்கும் சக்தியை நீ வெளியே திறந்துவிடத் தொடங்குவாய். இன்றிரவு முதல், கடந்த காலத்தை மறந்துவிடு. உனது இன்றையச் சூழல்களின் ஒட்டுமொத்த விளைவுகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவன் நீ என்று கனவு காணத் துணிவு கொள். மிகச் சிறந்ததையே எதிர்பார்த்திரு. விளைவுகளைக் கண்டு நீ பெருத்த வியப்புக் கொள்வாய்.

“ஜான், உனக்குத் தெரியுமா? சட்டத் தொழில் ஈடுபட்டிருந்த அத்தனை ஆண்டுக் காலமும், எனக்கு எவ்வளவோ தெரியும் என்று நான் எண்ணிக் கொண்டிருந்தேன். மிகச் சிறந்த பள்ளிகளிலே கல்வி கற்பதிலும், எனது கைக்கு அகப்படக்கூடிய சட்ட நூல்கள் அனைத்தையும் வாசிப்பதிலும், மிகச் சிறந்த எடுத்துக்காட்டுகளான எனது தொழிலில் இருந்த வழக்கறிஞர்களுடன் சேர்ந்து பணிபுரிவதிலும் நான் பல ஆண்டுகள் செலவிட்டேன். சட்டம் என்ற விளையாட்டில், நான் நிச்சயமாக ஒரு வெற்றியாளன் தான். இருந்தும், வாழ்க்கை எனும் விளையாட்டில், நான் தோற்றுக் கொண்டிருந்தேன் என்பதை இப்போது உணர்கிறேன். வாழ்வின் பெரிய இன்பங்களை விரட்டிக் கொண்டு செல்வதில் நான் மும்முரமாக ஈடுபட்டு இருந்தேன். இதனால், சின்னஞ்சிறு

இன்பங்களை நான் தவற விட்டு விட்டேன். எனது தந்தை என்னை வாசிக்கும்படிச் சொன்ன அந்த மகத்தான நூல்களை நான் வாசிக்கவேயில்லை. எந்தவொரு மகத்தான நட்புகளையும் நான் வளர்த்துக் கொள்ளவேயில்லை. இதைச் சொல்லியான பின்பு, அதிர்ஷ்டசாலிகளில் நானும் ஒருவன் என்று நான் உண்மையிலேயே கருதுகிறேன். எனது இதய நோய் எனது வரையறுக்கும் தருணமாக, என்னை விழித்துக் கொள்ளச் சொல்லும் விளியாக இருந்தது என்று வைத்துக் கொள்ளலாம். நீ நம்பினாலும், நம்பாவிடினும் ஒரு அதிகச் செழிப்பான, உயர் ஊக்கம் நிறைந்த வாழ்க்கையை வாழ்வதற்கான இரண்டாவது வாய்ப்பொன்றை அது எனக்குத் தந்தது. மல்லிகா சந்தைப் போலவே, வேதனை நிறைந்த எனது அனுபவத்தில், வாய்ப்புக்கான விதைகளை நான் கண்டேன். அதை விடவும் முக்கியமாக, அவற்றைப் பேணிப் பாதுகாப்பதற்கான துணிவையும் நான் கொண்டிருந்தேன்.''

ஜூலியன் வெளிப்பார்வைக்கு மிகவும் இளமையாக மாறியிருந்த போதிலும், உள்ளே மிக அதிகமான ஞானத்தைக் கொண்டிருப்பதை என்னால் காண முடிந்தது. அன்றைய மாலை ஒரு பழைய நண்பனுடன் சும்மா ஆர்வத்துடன் அளவளாவிக் கொண்டிருப்பதைக் காட்டிலும் அதிக மதிப்புக் கொண்ட ஒன்று என்பதை நான் உணர்ந்து கொண்டேன். இன்றிரவு, எனக்கும் ஒரு வரையறுக்கும் தருணமாகவும் ஒரு புதிய துவக்கத்திற்கான தெளிவானதொரு வாய்ப்பாகவும் அமையக்கூடும் என்பதையும் நான் உணர்ந்து கொண்டேன். எனது சொந்த வாழ்விலே தவறுதலாகப் போய்க் கொண்டிருந்த எல்லாவற்றையும் பற்றி எனது மனம் எண்ணிப் பார்க்கத் தொடங்கியது ஒரு மிக நல்ல, அருமையான குடும்பமும், ஒரு பெயர்பெற்ற வழக்கறிஞராக நிலையான பணியும் எனக்கு இருந்தது என்னவோ உண்மை தான். இருந்தும் எனது அமைதியான தருணங்களில் இதைவிடவும் அதிகமான ஏதோ ஒன்று வாழ்வில் இருக்க வேண்டும் எனக்கும் தெரிந்திருந்தது. எனது வாழ்வைச் சூழத் தொடங்கியிருந்த அந்த வெற்றிடத்தை நான் நிரப்ப வேண்டியிருந்தது.

சிறுவனாக இருந்தபோது எவ்வளவோ மகத்தான கனவுகளை நான் கண்டேன். ஒரு விளையாட்டு வீரனாகவோ, தொழில் அதிபராகவோ என்னையே கற்பனை செய்து கொண்டேன். என்ன விரும்பினேனோ அதுவாக இருக்க முடியும், அதைச் செய்ய முடியும், அதைப் பெறமுடியும் என்று நான் உண்மையிலேயே நம்பினேன். சூரியனின் ஒளி சிதறிக் கிடந்த மேற்குக் கடற்கரைப் பகுதியில் வளர்ந்து கொண்டிருந்தபோது, ஒரு இளம் சிறுவனாக நான் எவ்வாறு உணர்ந்தேன் என்பதையும் நினைவு படுத்திப் பார்த்தேன். மகிழ்ச்சி என்பது, வெகு எளிய இன்பங்களால் ஏற்பட்டது. கேளிக்கை என்பது கடல் அலைகளில் ஆடையின்றித் திளைப்பதாகவோ, காடுகளினூடே எனது சைக்கிளை ஓட்டிச் செல்வதாகவோ இருந்தது. வாழ்க்கையைப் பற்றிய ஒரு ஆர்வமும், அறிந்து கொள்ள வேண்டும் என்ற குறுகுறுப்பும் என்னிடம் இருந்தது. அசாதாரணமான ஆபத்தான வேலைகளில் ஈடுபடக் கூடிய துணிவுள்ள ஒருவனாக நான் இருந்தேன். எனது எதிர்காலம் எடுத்து வரக்கூடியவற்றுக்கு எந்தவொரு எல்லையும் அப்போது இருக்கவில்லை. அந்தவிதமான சுதந்திரத்தையும், மகிழ்ச்சியையும், சென்ற பதினைந்து ஆண்டுகளாக

உணர்ந்திருப்பதாக நான் உண்மையிலேயே நினைக்கவில்லை. இடையில் என்னவாயிற்று?

ஒரு வேளை, நான் பெரியவனாகி விட்ட பின்னர், எனது கனவுகளைக் காணாமற் போக்கியிருக்கலாம். பெரியவர்கள் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டதோ அப்படி நடந்து கொள்வது என்று எண்ணி அடங்கிப் போயிருக்கலாம். ஒருவேளை, சட்டக்கல்லூரிக்குச் சென்று, வழக்கறிஞர்கள் எப்படிப் பேசவேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டதோ அதுபோல் பேசத் தொடங்கியபோது அவற்றைக் காணாமற் போட்டிருக்கலாம். எது எப்படியானாலும், அந்த மாலைப் பொழுதில், ஜூலியன் என்னருகில் அமர்ந்து கொண்டு, ஒரு கோப்பை சில்லிட்டுப்போன தேநீரைப் பருகிய வண்ணம் தனது மனதைத் திறந்து கொட்டியபோது, நான் ஒரு முடிவுக்கு வந்தேன். அதாவது, பணம் சம்பாதிப்பதற்காக இவ்வளவு நேரம் செலவிடுவதை நிறுத்திவிட்டு, ஒரு வாழ்க்கையை உருவாக்குவதற்காக மேலும் அதிக நேரத்தைச் செலவிடுவது என்பது தான் அந்த முடிவு.

"உனது வாழ்வைப் பற்றியும் உன்னைச் சிந்திக்க வைத்துவிட்டேன் என்று தோன்றுகிறது," என்றார் ஜூலியன். "ஒரு மாறுதலுக்காக, நீ ஒரு சிறுவனாக இருந்தபோது செய்ததைப் போலவே, உனது கனவுகளைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கு. 'நான் இனிய கனவுகளைக் கண்டிருக்கிறேன் - பயங்கரமான கனவுகளையும் கண்டிருக்கிறேன். எனது இனிய கனவுகளின் காரணமாக, கெட்ட கனவுகளை நான் வெற்றி கண்டுள்ளேன்" என்று சொன்னபோது, ஜோனாஸ் ஸ்டாக், மிகச் சரியாகச் சொன்னார். உனது கனவுகளைத் தூசி தட்டும் துணிவைக் கொள் ஜான். வாழ்க்கையை மறுபடி மதிக்கத் தொடங்கு. அதன் அற்புதங்கள் அனைத்தையும் போற்றிக் கொண்டாடு. செயல்களை நடந்தேறச் செய்வதற்கான உனது சொந்த மனதின் சக்தியைப் பற்றி விழிப்புக் கொள். நீ அதைச் செய்துவிட்டால், உனது வாழ்வில் அற்புதத்தை ஏற்படுத்துவதற்கு, இந்தப் பிரபஞ்சமே உன்னோடு சேர்ந்து திட்டமிடும்."

இவ்வாறு பேசி முடித்த பின்னர், ஜூலியன் தனது அங்கியுள் கைவிட்டு ஒரு சிறிய அட்டையை எடுத்தார். அது பல மாத காலம் தொடர்ந்து கையாளப்பட்டு வந்தது போல, ஓரங்கள் கிழிந்து போய்க் காணப்பட்டது.

"ஒரு நாள், யோகி இராமனும் நானும் ஒரு அமைதியான மலைப்பாதையில் நடந்து சென்று கொண்டிருந்தபோது, அவருக்கு மிகவும் பிடித்த தத்துவஞானி யார் என்று அவரிடம் கேட்டேன். தனது வாழ்வில் பலரும் பாதிப்புகளை ஏற்படுத்தியிருந்ததாகவும், தனது ஊக்கத்திற்கு ஏதேனும் ஒரு தனிப்பட்ட ஆதாரத்தை தனிப்படுத்திக் காட்டுவது சிரமம் என்றும் அவர் சொன்னார். எனினும், தனது இதயத்திற்குள்ளே ஆழமாக வைத்திருந்த ஒரு மேற்கோள் இருக்கத் தான் செய்தது. அமைதியான ஆழ் சிந்தனையில் செலவிட்ட, ஒரு வாழ்நாள் முழுவதும் தான் போற்றிப் பேணத் தொடங்கியிருந்த எல்லா மதிப்பீடுகளையும் ஒருங்கிணைத்துச்

சுருக்கியது போன்ற ஒரு மேற்கோள் - ஆழ நடுக்காட்டிலே, அந்த மகோன்னதமான இடத்திலே கீழைநாட்டின் கல்விமானாகிய இந்தத் துறவி அதை என்னுடன் பகிர்ந்து கொண்டார். நானும் அதை என் இதயத்திலே பதித்து வைத்துக் கொண்டேன். நாம் என்னவாக இருக்கிறோமோ இருக்கக்கூடுமோ, அவை எல்லாவற்றின் ஒரு தினசரி நினைவூட்டியாக அச்சொற்றொடர் உள்ளது. பதஞ்சலி என்ற ஒரு மிகச் சிறந்த இந்தியத் தத்துவஞானியிடமிருந்து அச்சொற்கள் வந்திருந்தன. தியானம் செய்ய அமரும் முன்பு, ஒவ்வொரு நாள் காலையிலும் அவற்றை உச்சரிப்பது என்பது எனது நாட்களின் ஓட்டத்தில் ஒரு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. வார்த்தைகள் தான் சக்தியின் சொல் ஒலி வடிவ வெளிப்பாடு என்பதை நினைவில் கொள் ஜான்!"

ஜூலியன் அந்த அட்டையை என்னிடம் காட்டினார் அதிலிருந்த மேற்கோள் பின்வருமாறு :

'ஒரு மகத்தான நோக்கத்தால், அசாதாரணமான திட்டத்தால் நீ உயர் ஊக்கம் கொண்டுள்ளபோது, உனது எண்ணங்கள் அனைத்தும் தமது கட்டுகளை உடைத்துவிடுகின்றன. உனது மனம், எல்லைகளைத் தாண்டி அப்பால் செல்கிறது. உனது உணர்வு நிலை, எல்லாத் திசைகளிலும் விரிவடைகிறது. ஒரு முற்றிலும் புதிய மகத்தான அற்புத உலகில் நீ இருப்பதைக் காண்கிறாய். உறங்கிக் கிடக்கும் சக்திகள், திறமைகள் மற்றும் திறன்கள் விழிப்படைகின்றன. நீ எப்போதுமே கனவு கண்டிருந்ததையும் விடவும் ஒரு மேலான, உயர்வான நபராக நீ இருப்பதைக் கண்டறிவாய்.'

அந்தத் தருணத்தில் உடலின் சக்திக்கும், மனதின் செயல்துடிப்புக்கும் இடையே உள்ள தொடர்பை நான் கண்டேன். நாங்கள் முதன் முதலில் சந்தித்தபோது இருந்ததைக் காட்டிலும் பல ஆண்டுகள் இளமையானவராகவும், மிகவும் சிறப்பான உடல் நலனுடனும் ஜூலியன் இருந்தார். உயிர்த் துடிப்பு அவருக்குள் நிறைந்து ததும்பி, வழிந்து கொண்டிருந்தது. அவரது சக்தி, உற்சாகம் மற்றும் நல்லதையே எதிர்பார்க்கும் தன்மை ஆகியவற்றுக்கு எல்லைகளே இல்லை என்பது போலத் தோன்றியது. தனது பழைய வாழ்க்கை முறையில் பலமாற்றங்களை அவர் செய்திருந்தார் என்பதை என்னால் பார்க்க முடிந்தது. ஆனால் அவரது மகோன்னதமான மாற்றத்தின் துவக்கப் புள்ளி உளரீதியான நலன் என்பது தெளிவாகத் தெரிந்தது புறவெற்றியானது, உண்மையில் அக வெற்றியில் தான் துவங்குகிறது. தனது எண்ணங்களை மாற்றியதன் வாயிலாக, ஜூலியன் மான்டில் தனது வாழ்வையே மாற்றியமைத்துள்ளார்.

"இத்தகைய சாந்தமான, நேர்மறையான, உயர் ஊக்கம் கொண்டுள்ள கண்ணோட்டத்தை நான் எவ்வாறு வளர்த்துக் கொள்ள முடியும், ஜூலியன்? ஒரு வழக்கமான வாழ்க்கை முறையில் இத்தனை ஆண்டுகளைக் கழித்துவிட்டபின், எனது மனதின் தசைகள் கொஞ்சம் கொழுப்பேறிக் கொழகொழவென்று ஆகிவிட்டன என்று நினைக்கிறேன். இதைப் பற்றி யோசித்துப் பார்த்தால், எனது மனமெனும்

தோட்டத்தில் மிதந்து கொண்டிருக்கும் எண்ணங்களின் மீது எனக்கு வெகுக் குறைவான கட்டுப்பாடு தான் உள்ளது,'' என்றேன் நான் மிக உண்மையுடன்.

''மனம் என்பது ஒரு நல்ல அற்புதமான பணியாள், ஆனால், மிக மோசமான எஜமான். உனது மனதைப் பற்றி அக்கறை காட்டாமல், அதை நல்ல விஷயங்களை மையம் கொண்டிருக்குமாறு, பயிற்றுவிக்காததால் தான் நீ ஒரு எதிர்மறை சிந்தனையாளனாக ஆகிவிட்டிருக்கிறாய். 'மகத்தான குணாம்சத்திற்கான விலை, உங்கள் எண்ணங்கள் ஒவ்வொன்றைப் பற்றியும் பொறுப்புடன் இருப்பதாகும்' என்று **வின்ஸ்டன் சர்ச்சில்** கூறியுள்ளார். தேடிக் கொண்டிருக்கும் உயிர்த்துடிப்புள்ள மனோ அமைப்பை உன்னால் அமைக்கவியலும் மனம் என்பது உடலில் உள்ள வேறு எந்தத் தசையையும் போன்றதே என்பதை நினைவில் வைத்துக் கொள். பயன்படுத்து, இல்லையேல் அதை இழந்துவிடு,'' என்றார் ஜூலியன்.

''நான் எனது மனதிற்குப் பயிற்சி அளிக்காவிட்டால் அது பலவீனமாகிவிடும் என்றா நீங்கள் சொல்கிறீர்கள்?''

''ஆம், இவ்வாறு யோசித்துப் பார். உனது கரத்தின் தசைகளை வலுப்படுத்த வேண்டுமென்று விரும்பினால், நீ அவற்றுக்குப் பயிற்சி அளிக்க வேண்டும், உனது கால் தசைகளை கெட்டிப்படுத்த வேண்டும் என்று விரும்பினால், அவற்றுக்கு நீ வேலை கொடுக்க வேண்டும். அதேபோல, நீ உன் மனதை மட்டும் அனுமதித்தால் அது உனக்கு அற்புதமான விளைவுகளை ஏற்படுத்திக் கொடுக்கும். அதை எவ்வாறு திறம்படச் செயல்படுத்துவது என்று மட்டும் நீ கற்றுக் கொண்டுவிட்டால், நீ விரும்புகின்ற அனைத்தையும் அது உன் வாழ்வினுள் ஈர்த்துக் கொண்டு வந்து சேர்க்கும். அதை நன்றாகக் கவனித்துக் கொண்டால், மிகச் சரியான உடல் நலனை அது உருவாக்கிக் கொடுக்கும். மேலும், இது தான் வேண்டுமென்று கேட்கக் கூடிய தொலைநோக்கு உன்னிடம் இருக்குமானால், தனது இயல்பு நிலையாகிய அமைதி மற்றும் சாந்தத்திற்கு திரும்பச் சென்றுவிடும். சிவானாவின் துறவிகளிடம் ஒரு தனிச் சிறப்பான பழமொழி உள்ளது. 'உங்கள் வாழ்வின் எல்லைகள் தான் என்பதன் வெறும் உருவாக்கங்கள் மட்டுமே!'''

''எனக்கு அது புரியவில்லை என்று நான் நினைக்கிறேன், ஜூலியன்.''

''ஞானத் தெளிவு பெற்ற சிந்தனையாளர்கள், தமது எண்ணங்கள் தான் தமது உலகத்தை உருவாக்குகின்றன என்பதையும், ஒருவரது வாழ்வின் தரமானது அவரது எண்ணங்களின் செழுமையிலிருந்து வருகிறது என்பதையும் அறிந்திருக்கிறார்கள். மேலும், அதிக அமைதியான பொருளுள்ள வாழ்க்கை நீ வாழ விரும்பினால், மேலும் அமைதியான பொருளுள்ள எண்ணங்களை நீ எண்ண வேண்டும்.''

''எனக்கு ஒரு உடனடி சிகிச்சையைத் தாருங்கள், ஜூலியன்.''

''நீ என்ன சொல்கிறாய்?'' என்றார் ஜூலியன். அவரது பழுப்பு நிற விரல்கள், அவரது பளிச்சென்ற அங்கியின் முன் புறத்தைத் தடவிக் கொண்டிருந்தன.

“நீங்கள் கூறுவது பற்றி நான் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளேன். ஆனால், நான் ஒரு பொறுமையற்ற மனிதன். நான் எனது மனதைப் பயன்படுத்தும் விதத்தை மாற்றியமைக்கவென்று இப்போதே, இதோ இங்கே எனது முன்னறையிலேயே பயன்படுத்தக் கூடிய ஏதேனும் ஒரு பயிற்சியோ அல்லது செய்முறையோ உங்களிடம் இல்லையா?”

“அவசர சிகிச்சைகள் ஒரு போதும் பலனளிப்பதில்லை. நிலைத்து நிற்கக் கூடிய அகமாற்றத்திற்கு காலமும், முயற்சியும் தேவை. விடாமுயற்சிதான் தனி நபர் மாற்றத்தின் காரணகர்த்தா - தாய் எனலாம். உனது வாழ்வில் தீர்க்கமான மாற்றங்களை ஏற்படுத்துவதற்குப் பல ஆண்டுகள் ஆகும் என்று நான் சொல்லவில்லை. நான் உன்னோடு பகிர்ந்து கொள்கின்ற செய்முறைகளை, ஒரே ஒரு மாதத்திற்கு, தினந்தோறும் கவனமாகப் பயன்படுத்தினால், அதன் விளைவுகளைக் கண்டு நீ பெரும் வியப்படைவாய். உனது சொந்தத் திறன்களின் உயர்மட்டங்களை நீ பயன்படுத்தத் தொடங்கி விடுவாய். மேலும், அதன் பின்னர், அற்புதங்களின் மண்டலத்திற்குள் நீ நுழைந்துவிடுவாய். ஆனால், இந்த இலக்கை எட்டுவதற்கு, நீ விளைவுகளின் பால் வெகுவாக ஈடுபாடு கொள்ளக் கூடாது. மாறாக, தனிப்பட்ட சொந்த விரிவடைதலையும், உணர்ச்சியையும் உள்ளிட்ட செயல்பாட்டை ரசித்து மகிழ்வதைச் செய். மேலும், எதிர்பார்ப்பதற்கு நேர் மாறாக, இறுதி விளைவின் மீது நீ எத்தனை குறைவாகக் கவனம் செலுத்துகிறாயோ, அத்தனை விரைவாக, அந்த விளைவு உன்னை வந்தடையும்.”

“அது எப்படி?”

“ஒரு மகத்தான ஆசானிடம் பாடம் கற்க வேண்டி, தனது வீட்டிலிருந்து வெகு தொலைவு பயணம் செய்த ஒரு இளைஞனின் கதையைப் போன்றது இது! அந்த முதிய ஞானியைச் சந்தித்த உடனேயே, அவனது முதல் கேள்வி ‘உங்களைப் போல அறிவாளியாக நான் ஆவதற்கு எனக்கு எவ்வளவு காலம் பிடிக்கும்?’ என்பது தான்.

அதற்கான பதிலும் உடனடியாக வந்தது. ‘ஐந்து ஆண்டுகள்’.

‘அது மிகவும் நீண்ட காலமாக இருக்கிறதே!’ என்றான் இளைஞன். ‘நான் இரண்டு மடங்கு கடினமாக உழைத்தால்?’

‘அப்போது பத்தாண்டுகள் பிடிக்கும்’ என்றார் ஆசான்.

‘பத்தா! அதுவும் மிக மிக நீண்ட காலமே, நான் ஒவ்வொரு நாளும் பகல் முழுவதும் படித்துவிட்டு, தினமும் இரவில் வெகு நேரம் படித்தால்?’

‘பதினைந்து ஆண்டுகள்,’ என்றார் துறவி.

‘எனக்கு இது புரியவில்லை,’ என்றான் இளைஞன். ‘ஒவ்வொரு முறை நான் எனது இலக்குக்கென கூடுதல் சக்தியைக் கொடுக்கிறேன் என்று

சொல்லும்பொழுதெல்லாம் அதை அடைவதற்கு அதிகக் காலம் எடுக்கும் என்று நீங்கள் சொல்கிறீர்கள் ஏன்?'

'இதற்கான பதில் வெகு எளிமையானது. ஒரு கண் இலக்கின் மீது நிலைத்து இருக்கும் பொழுது, பயணத்தில் உன்னை வழி நடத்துவதற்கு ஒரே ஒரு கண் மட்டுமே உன்னிடம் மீதமுள்ளது என்றார் துறவி," என்று ஜூலியன் கூறி முடித்தார்.

"உங்கள் கருத்தை நான் முழுமையாக ஏற்றுக் கொள்கிறேன். ஆலோசகரே! என்னுடைய வாழ்க்கைக் கதையை போலவே இது இருக்கிறது," என்று நான் கண்ணியமாக ஒப்புக் கொண்டேன்.

"பொறுமையுடன் இருந்து, நீ தேடிக் கொண்டிருப்பவை எல்லாமே, அவற்றுக்காக நீ முன்னேற்பாடு செய்து எதிர்பார்த்தவண்ணம் இருந்தால், நிச்சயமாக வந்து சேரும் என்ற அறிவுடன் வாழ்."

"ஆனால், நான் எப்போதுமே அதிர்ஷ்டமற்றவன் ஜூலியன். நான் பெற்றுள்ள எல்லாமே வெறும் விடாமுயற்சியால் வந்துள்ளவை தான்."

"அதிர்ஷ்டம் என்பது தான் என்ன, நண்பா?" என்று ஜூலியன், கனிவுடன் கேட்டார். "தயார் செய்தல் மற்றும் வாய்ப்பு அவற்றின் இணைப்பைத் தவிர அது வேறு ஒன்றும் இல்லை."

அவர் மேலும் மென் குரலில் தொடர்ந்து பேசலானார்.

"சிவானாவின் முனிவர்களால் எனக்குத் தரப்பட்டுள்ள சரியான முறைகளை உனக்குக் கொடுக்கும் முன்னர், ஒரு சில முக்கியக் கொள்கைகளை நான் உன்னுடன் பகிர்ந்து கொண்டாக வேண்டும். முதலில், மனதை வெற்றி கொள்வதற்கான ஆணிவேராக மனதை ஒரு முனைப்படுத்துதல் அமைந்துள்ளது என்பதை நினைவில் கொள்."

"உண்மையாகவா?"

"எனக்குத் தெரியும். இது என்னையும் ஆச்சரியப்பட வைத்தது. ஆனால், அது தான் உண்மை. மனதால் வெகு அசாதாரணமான நிகழ்ச்சிகளையும் சாதிக்க முடியும். இதை நீ கற்றுள்ளாய். ஒரு கனவு அல்லது ஆசை உன்னிடம் இருக்கிறது என்றால், அதற்கேற்ற திறமையும் உன்னிடம் இருக்கிறது என்று தான் அதற்குப் பொருள். சிவானாவின் துறவிகளுக்குத் தெரிந்துள்ள மகத்தான பிரபஞ்ச உண்மைகளில் இது ஒன்றாகும். எனினும், மனதின் சக்தியை வெளிப்படுத்த வேண்டுமானால், நீ அதை முதலில் கட்டுக்கடங்கும்படிச் செய்து, கையில் உள்ள செயல்பாட்டில் மட்டும் அதன் கவனம் முழுவதையும் ஒருமுனைப்படுமாறு செலுத்த வேண்டும். ஒரு தனி நோக்கத்தின் மீது, உன் மனதின் கவனத்தை ஒருமுனைப்படுத்திய தருணத்தில், வெகு அசாதாரணமான பரிசுகள் உனது வாழ்வினுள் தோன்றும்."

“ஒரு முனைப்படுத்தப்பட்ட மனதைக் கொண்டிருப்பது ஏன் அவ்வளவு முக்கியமான விஷயமாக உள்ளது?”

“உனது கேள்விக்கு நன்றாகப் பதிலளிக்கக் கூடிய ஒரு விடுகதையை நான் சொல்கிறேன் கேள். பனிக்காலத்தின் நடுவில் நீ காட்டிற்குள் காணாமல் போய்விடுகிறாய் என்று வைத்துக் கொள்வோம். கதகதப்பாக இருக்க வேண்டியது உனக்கு மிகவும் அவசியமாக உள்ளது. உனது தோள்பையில் இருப்பதெல்லாம், உனது மிக நெருங்கிய நண்பன் அனுப்பியுள்ள ஒரு கடிதம், ஒரு டின் மீன் உணவு, மற்றும் மங்கிப் போன உனது பார்வைக்கு உதவுவதற்கென ஒரு சிறிய பூதக்கண்ணாடி ஆகியவை மட்டுமே. அதிர்ஷ்டவசமாக, கொஞ்சம் உலர்ந்த கட்டைகளை நீ சேகரித்து விடுகிறாய். ஆனால், உன்னிடம் தீப்பெட்டி எதுவும் இல்லை. நீ எவ்வாறு தீயை மூட்டுவாய்?”

அடத் தொல்லையே! ஜூலியன் என்னைச் சிக்கவைத்துவிட்டார். பதில் என்ன என்பது எனக்குத் தெரியவில்லை.

“எனக்குத் தெரியவில்லை.”

“இது மிக எளிது! உலர்ந்த கட்டைகளிடையே கடிதத்தை வைத்து, பூதக் கண்ணாடியை அதன் மீது பிடி. சூரியனின் கதிர்கள் அதன் மீது குவிந்து ஒரு சில வினாடிகளில் தீயைப் பற்றவைத்து விடும்.”

“அந்த டின் மீன் உணவை என்ன செய்வது?”

‘ஓ, உன்னைச் சும்மா குழப்பி விடுவதற்காக நான் அதைச் சேர்த்தேன்,’ என்றார் ஜூலியன் சிரித்துக் கொண்டே. “ஆனால், இந்த உதாரணத்தின் சாராம்சம் இது தான். கடிதத்தை, உலர்ந்த கட்டையின் மீது வைப்பதால், எதுவும் நிகழாது. ஆனால், பூதக் கண்ணாடியைப் பயன்படுத்தி, சூரியனின் பரந்துபட்ட ஒளிக் கற்றைகளைக் காகிதத்தின் மீது குவியச் செய்தால் அடுத்த நிமிடமே அது பற்றிக் கொள்ளும். இந்த உவமை மனதிற்கும் பொருந்தும். அதன் மாபெரும் சக்தியை ஒரு தெளிவான, வரையறுக்கப்பட்ட அர்த்தமுள்ள நோக்கத்தின் மீது ஒரு முனைப்படுத்தினால். உனது சொந்த, மறைந்துள்ள சக்தியின் சுடர்களை விரைவில் கொளுத்தி, வியப்பூட்டும் விளைவுகளைப் பெறலாம்.”

‘எது போன்ற விளைவுகள்?’ என்று நான் கேட்டேன்.

“இந்தக் கேள்விக்கு நீதான் பதில் சொல்ல வேண்டும். நீ தேடிக் கொண்டிருப்பது என்ன? ஒரு மேலான தந்தையாக இருந்து, மேலும் அதிகச் சமநிலையுள்ள, திருப்தியளிக்கும் வாழ்க்கையை வாழ விரும்புகிறாயா? அதிகமான ஆன்மீக நிறைவை விரும்புகிறாயா? உன்னிடம் குறைவாக உள்ளவை உற்சாக மூட்டுகின்ற, ஆபத்தான, சிலிர்க்க வைக்கும் கேளிக்கைகளா? இதைப்பற்றிச் சிறிது சிந்தி.”

“எல்லையற்ற இன்பம் என்ற இலக்கு எப்படி இருக்கிறது?”

“பெரிதாகச் சாதி அல்லது வீட்டோடு கிட,” ஜூலியன் மெல்ல நகைத்தார். “சிறிய இலக்குகளை நோக்கித் துவங்குவது போல வேறு எதுவும் கிடையாது. சரி, நீ அதையும் பெற முடியும்.”

“எப்படி?”

“சிவானாவின் துறவிகள், மகிழ்ச்சியின் இரகசியத்தைப் பற்றி ஐயாயிரம் ஆண்டுகளுக்கும் மேலாக அறிந்து வைத்துள்ளனர். நல்ல காலமாக, இந்தப் பரிசை என்னுடன் பகிர்ந்து கொள்ள அவர்கள் விருப்பத்துடன் இருந்தார்கள். நீ அதைக் கேட்க விரும்புகிறாயா?”

“உம்? இல்லை. நான் ஒரு இடைவேளை எடுத்துக் கொண்டு போய் கார் நிறுத்துமிடத்தின் சுவர்களுக்கு, முதலில் காகிதம் ஒட்டலாம் என்று நினைத்தேன்,” என்று நான் கிண்டலாகக் கூறினேன்.

“என்ன?” என்றார் ஜூலியன் சற்றே திகைப்புடன், எனது கிண்டலை அவர் புரிந்து கொள்ளவில்லை போலும்.

“ஜூலியன், நிச்சயமாக, எல்லையற்ற இன்பத்தைப் பற்றிய இரகசியத்தைப் பற்றிக் கேட்க நான் விரும்புகிறேன். இறுதியில், எல்லோரும் தேடிக் கொண்டிருப்பது அது தானே?”

“உண்மை தான். இது தான் அது.... எனக்கு மற்றொரு கோப்பை தேநீர் வேண்டியுள்ளது - ஜான், உன்னை, நான் தொந்தரவு செய்யலாமா?” என்றார் ஜூலியன், வேண்டுமென்றே என்னைத் துண்டிவிடும் நோக்கத்துடன்.

“ஐயோ, ஜூலியன்! அதைப்பற்றிப் பேசுவதைத் தள்ளிப் போடுவதை நிறுத்துங்கள்”

“சரி, மகிழ்ச்சிக்கான இரகசியம் வெகு எளிமையானது. நீ உண்மையில் என்ன செய்வதை மிகமிக விரும்புகிறாய் என்பதைக் கண்டுபிடி. பின்னர், அதைச் செய்வதற்கென உனது சக்தி முழுவதையும் அதனுள் செலுத்து, நமது உலகின் மிகவும் மகிழ்ச்சியான, ஆரோக்கியமான, மிகவும் திருப்தி கொண்டுள்ள மனிதர்களைக் கவனித்துப் பார்த்தால், அவர்களில் ஒவ்வொருவரும் வாழ்வில் முதலில் தமது பேரார்வத்தைக் கண்டு கொண்டுள்ளனர். பின்னர், அதைத் தொடர்ந்து பின் செல்வதில் தமது நாட்களைச் செலவிட்டுள்ளனர். இந்த வாழ்க்கை நோக்கமானது, எப்போதுமே ஏதேனும் ஒரு வகையில், பிறருக்குச் சேவை செய்வதாகும். உனக்கு உண்மையிலேயே மிக விருப்பமான ஒன்றினைப் பின்பற்றிச் செல்வதில் உனது மனோசக்தியை ஒருமுனைப் படுத்தினால், அபரிமிதமான அளப்பரிய வளமை உன்

வாழ்வினுள் நிறைந்து வழிகிறது. உன் விருப்பங்கள், ஆசைகள் எல்லாமே வெகு சுலபமாகவும், நளினமாகவும் நிறைவுவேற்றப்படுகின்றன.”

“ஆக, நமக்கு உற்சாகமூட்டுவது எது என்பதைக் கண்டறிந்து, அதைச் செய்வதா?”

“அது ஒரு தகுதியான செயலாக இருக்கும் பட்சத்தில்,” என்று ஜூலியன் பதிலளித்தார்.

“தகுதியானது என்பதை எவ்வாறு வரையறுக்கலாம்?”

“ஜான், நான் கூறியபடியே, உனது பேரார்வம், ஏதேனும் ஒரு வகையில் பிறருடைய வாழ்க்கையை மேம்படுத்துவதாகவோ அல்லது அவர்களுக்குச் சேவை செய்வதாகவோ இருக்க வேண்டும். இதை என்னால் எடுத்துச் சொல்ல முடிந்ததை விட மிகவும் மேலான வகையில் **விக்டர் ஃபிராங்கிள்** விளக்கியுள்ளார். ‘வெற்றியானது மகிழ்ச்சியைப் போலவே, பின்தொடர்ந்து விரட்டிச் செல்லப்பட முடியாத ஒன்று. அது தானாக விளைய வேண்டும், தன்னை விடவும் உயர்வான ஒரு நோக்கத்திற்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிற செயலின் ஒரு எதிர்பார்க்கப்படாத, திட்டமிடப்படாத பக்க விளைவாக மட்டுமே அது விளைகிறது’. உனது வாழ்க்கையின் பணி என்னவென்று கண்டு கொண்டால், உனது உலகம் உயிர் பெற்று எழுந்து விடும். ஒவ்வொரு தினமும் காலையில் அளவற்ற சக்தி மற்றும் உற்சாகத்தின் சேமிப்புடனே நீ விழித்தெழுவாய் உனது எண்ணங்கள் யாவும் உனது வரையறுக்கப்பட்ட தெளிவான நோக்கத்தின் மீது மையம் கொண்டிருக்கும். விரயம் செய்வதற்கு உனக்கு நேரமே இருக்காது. எனவே விலைமதிக்கப்படமுடியாத மனோசக்தியானது, அற்பமான சிந்தனைகளிலே வீணடிக்கப்படமாட்டாது. கவலை எனும் பழக்கத்தை, இயல்பாகவே நீ ஒழித்து விடுவாய். மேலும், அதிகமான திறனுடனும், உருவாக்கும் சக்தியுடனும் நீ செயல்படுவாய். இதில் மேலும் சுவராஸ்யமான விஷயம் என்னவென்றால், உனது வாழ்க்கை நோக்கத்தை நிறைவேற்றுவதற்கென ஏதோ ஒரு வகையில் வழி நடத்திச் செல்லப்படுவதைப் போல ஒரு ஆழமான உள்ளார்ந்த இணக்கத்தையும் நீ கொண்டிருப்பாய். அது ஒரு மிக அற்புதமான உணர்வு - நான் அதைப் பெரிதும் விரும்பி நேசிக்கிறேன்,” என்றார் ஜூலியன் களிப்புடன்.

“பிரமாதம்! காலையில் எழும்போது நலமாக உணர்வது பற்றி நீங்கள் கூறியதை நான் பெரிதும் விரும்புகிறேன். உங்களிடம் உண்மையாகச் சொல்ல வேண்டுமானால், பெரும்பாலான நாட்களில், எனக்குப் போர்வையை விட்டு வெளியே வரவே பிடிப்பதில்லை. போக்குவரத்து நெரிசல், சினமுற்ற வாடிக்கையாளர்கள் போர்க்குணம் கொண்ட எதிரிகள் மற்றும் இடையறாது வந்து கொண்டே இருக்கும் எதிர்மறைத் தாக்கங்கள், இவற்றையெல்லாம் எதிர்கொள்வதை விடவும் அதுவே மிக மேலானது என்று தோன்றுகிறது. இதெல்லாம், என்னை மிகவும் களைத்துப் போக வைக்கின்றன.”

“மனிதர்கள் ஏன் இவ்வளவு அதிகமாக உறங்குகிறார்கள் என்று உனக்குத் தெரியுமா?”

“ஏன்?”

“ஏனெனில், அவர்களுக்குச் செய்வதற்கு வேறு ஒன்றுமில்லை. காலையில் சூரியனோடு எழுகின்றவர்கள் எல்லோருக்கும் பொதுவான ஒரு விஷயம் இருக்கிறது.”

“பைத்தியம்?”

“ரொம்ப நல்ல ஜோக்! இல்லை, அவர்கள் எல்லோருமே தமது உள்ளார்ந்த, மறைந்து கிடக்கும் சக்தியைத் தூண்டி சுடர்விடச் செய்யக் கூடிய ஒரு நோக்கத்தைக் கொண்டுள்ளார்கள். அவர்கள் தமது முதன்மைத் தேவைகளினால் செலுத்தப்பட்ட வண்ணம் உள்ளனர். ஆனால், இவ்வாறு அவர்கள் இருப்பதானது ஆரோக்கியமற்றதோ, வெறித்தனமானதோ இல்லை. அதைவிடவும் மென்மையான, கடும் முயற்சியற்ற விதமாக அது உள்ளது. மேலும், தமது வாழ்வில் செய்து கொண்டுள்ள வேலையின் பால் அவர்களுக்கு இருக்கும் ஆர்வம் மற்றும் விருப்பம் இவற்றின் காரணமாக, இத்தகைய நபர்கள் அந்தத் தருணத்திலேயே வாழ்கின்றனர். கையில் உள்ள பணியின்மீது அவர்களது கவனம் மிக முழுமையாக, முற்றிலுமாக செலுத்தப்பட்டுள்ளது. எனவே, சக்தியானது வெளியில் ஒழுகி விரயமாவதில்லை. நீ எப்போதுமே சந்தித்திராத அளவில் இவர்கள் வெகு உயிர்த்துடிப்புடனும் சக்தியுடனும் இருப்பார்கள். இவர்களைச் சந்திப்பதே நீ செய்த பாக்கியம் எனலாம்.”

“சக்தி ஒழுகல்? இது ஏதோ ஒரு புதிய உலகத்தைச் சேர்ந்த கருத்தைப் போல இருக்கிறதே, ஜூலியன். நிச்சயமாக நீங்கள் இதை ஹார்வர்டு சட்டக் கல்லூரியில் கற்றுக் கொள்ளவில்லை, அல்லவா?”

“உண்மை தான். சிவானாவின் துறவிகள் அந்தக் கருத்தை முதன் முதலில் உருவாக்கி முன் வைத்தனர். இது பல நூற்றாண்டு காலம் பழைமையானதல்ல என்றாலும், அது முதலில் உருவாக்கப்பட்டபோது போலவே இன்னும் அக்கருத்தின் பயன்பாடு பொருத்தமானதாகத் தான் இருக்கிறது. நம்மில் மிகப் பலரும் தேவையில்லாத, முடிவற்ற கவலையால் அரித்து எடுக்கப்படுகிறோம். இது நமது இயல்பான சக்தியையும், வலிமையையும் குறையச் செய்கிறது. ஒரு சைக்கிள் டயரின் உள்ளே உள்ள குழாயை நீ கண்டதுண்டா?”

“கண்டிப்பாக.”

“அது முழுமையாகக் காற்றால் நிரப்பப்பட்டுள்ளபோது, சைக்கிளால் உன்னை போகவேண்டிய இடத்திற்குக் கொண்டு செல்ல முடியும். ஆனால், அக்குழாயில் ஓட்டைகள் இருந்தால், அது விரைவில் சப்பையாகிவிடும். உனது பயணமும் தடாலென்று முடிவடைந்து விடுகிறது. உனது மனமும், இதே போலத் தான் வேலை செய்கிறது. கவலையானது, உன் மனதின் சக்தியையும், உள்ளார்ந்த திறன்களையும்,

சைக்கிள் குழாயில் உள்ள காற்று வெளியே ஒழுகிச் சென்று விடுவதைப் போல ஒழுகிச் செல்ல விட்டு விடுகின்றது. வெகு விரைவில் உன்னிடம் சக்தியே மீதமிருப்பதில்லை. உனது உருவாக்கும் திறன், நல்லவற்றையே எதிர்பார்க்கும் மனப்பாங்கு மற்றும் செயல்படவேண்டும் என்ற ஊக்கம் இவை எல்லாமே வடிந்து சென்று விடுகின்றன. நீயும் வெகு அயர்வுடன், களைப்புடன் உணர்கிறாய்.''

''இந்த உணர்வை நான் அறிவேன். நெருக்கடி நிலையினால் ஏற்படும் குழப்பத்தில் நான் அடிக்கடி எனது நாட்களைச் செலவிடுகிறேன். ஒரே சமயத்தில் எல்லா இடங்களிலும் நான் இருக்க வேண்டியுள்ளது. எவரையும் திருப்திப்படுத்த என்னால் முடிவதில்லை. அந்த நாட்களில், வெகு குறைவான பணிகளையே நான் செய்திருந்த போதிலும், எனது கவலைகள் மட்டுமே அந்த நாளின் கடைசியில் என்னைச் சக்தியிழக்கச் செய்து முற்றிலும் களைப்படைந்தவனாகச் செய்து விடுகின்றன. வீட்டிற்குத் திரும்பியவுடன் என்னால் செய்ய இயலுவதெல்லாம், ஒரு ஸ்காட்ச் விஸ்கியைக் கையில் எடுத்துக் கொண்டு தொலைக் காட்சியின் ரிமோட் கண்ட்ரோலுடன் உட்கார்ந்து விடுவது மட்டுமே.''

''அதே தான்! வெகு அதிகமான அழுத்தம் உன்னை இவ்வாறு ஆக்கிவிடுகிறது. எனினும் உனது நோக்கத்தை நீ கண்டு கொண்டுவிட்டால், வாழ்க்கை மேலும் சுலபமானதாகவும், வெகு அதிகமான பலன்களை அளிப்பதாகவும் ஆகிவிடுகிறது. உனது பிரதான இலக்கு அல்லது தலைவிதி உண்மையில் எது என்று நீ கண்டுகொள்ளும் பொழுது, மேலும், ஒரு நாள் கூட நீ வேலை செய்ய வேண்டியிராது.''

''முன்னதான ஓய்வு பெறுதல்?''

''இல்லை.'' என்றார் ஜூலியன். ஒரு புகழ்பெற்ற வழக்கறிஞராகத் தான் இருந்த காலங்களில் கற்றுத் தேர்ந்திருந்த கடுமையான 'முட்டாள்தனம் வேண்டாம்' என்ற குரலில். ''உனது வேலையே, விளையாட்டுப் போல ஆகிவிடும்,'' என்றார்.

''எனது முக்கியப் பேரார்வம் மற்றும் நோக்கம் இவற்றைக் கண்டுபிடிப்பதற்கென எனது வேலையை விட்டுவிடுவது என்பது சற்றே ஆபத்தானதாக இருக்காதோ? அதாவது, எனக்குக் குடும்பமும், உண்மையான கடமைகளும் உள்ளன என்மீது நான்கு பேர் சார்ந்திருக்கிறார்கள்''

''நாளைக்கே உனது சட்டத் தொழிலை விட்டுவிட வேண்டும் என்று நான் கூறவில்லை. ஆனாலும், நீ சில ஆபத்தான முடிவுகளை எடுக்கத் தான் வேண்டும். உனது வாழ்க்கையை சற்றே குலுக்கிக் கிளறி விடு. ஒட்டடைகளை அடித்துச் சுத்தம் செய்துவிடு. யாரும் அதிகம் பயணிக்காத பாதையிலே செல். பெரும்பாலானவர்கள், தமக்கு வசதியாகப் பழகிப் போன ஒரு வட்டத்திற்குள் தான் வாழ்கிறார்கள். உனக்காகவே நீ செய்து கொள்ளக்கூடிய மிகச் சிறப்பான வேலை என்னவென்றால், அந்த வட்டத்தைத் தாண்டி அதற்கப்பாலும் செல்வதை வழக்கமாக்கிக் கொள்வது தான்

என்று எனக்கு விளக்கிக் கூறிய முதல் நபர் யோகி இராமன் ஆவார். இதுவே நிலையான ஒரு சொந்த வெற்றிக்கான வழியாகும். உனது மனித வளங்களின் உண்மையான செயல்பாட்டை முழுவதுமாகப் பயன்படுத்துவதற்கான வழியும் இதுவே.''

''அந்த வளங்கள் தாம் என்ன?''

''உனது மனம், உனது உடல் மற்றும் உனது ஆன்மா.''

''என்ன அபாயங்களை நான் எதிர்கொள்ள வேண்டும்?''

''இவ்வளவு சாதாரணமாக, சராசரியாக, நடைமுறைக்கேற்ப இருப்பதை நிறுத்து, நீ எப்போதுமே செய்ய விரும்பியுள்ளவற்றைச் செய்யத் தொடங்கு. தமது சட்டத் தொழிலை விட்டுவிட்டு நாடக நடிகர்களாகியுள்ள வழக்கறிஞர்களை நான் அறிவேன். கணக்கெழுதும் வேலையை விட்டுவிட்டு, ஜாஸ் இசைக் கலைஞர்களாகி உள்ளவர்களையும் நான் அறிவேன். அவ்வாறு மாறியதில், வெகுகாலமாக அவர்கள் கைக்கெட்டாமல் விலகிச் சென்று கொண்டிருந்த அந்த ஆழமான ஆனந்தத்தை அவர்கள் கண்டு கொண்டனர். ஒரு ஆண்டில் இரண்டு விடுமுறைகளுக்குப் போகவும், தேமன்ஸில் ஒரு ஆடம்பரமான கோடை வாசஸ்தலத்தை வைத்துக் கொள்ளவும் அவர்களுக்குக் கட்டுப்பாடியாகாமல் போகலாம். அதனால் என்ன? திட்டமிட்டு, அபாயங்களைச் சந்திப்பதால் பெரும் லாபங்களைப் பெறலாம். ஒரு காலை இரண்டாவது பேஸில் *(Base-Baseball)* வைத்துக் கொண்டிருந்தால் நீ எப்படி மூன்றாவது பேஸுக்குச் செல்வாய்?''

''உங்கள் கருத்து எனக்குப் புரிகிறது.''

''எனவே, சிந்திப்பதற்கு அவகாசம் எடுத்துக் கொள். இங்கே இருப்பதற்கான உனது உண்மையான காரணத்தைக் கண்டுபிடி. பின்னர் அது பற்றிச் செயல்படுவதற்கான துணிவைக் கைக் கொள்.''

''நீங்கள் சொல்வதை உளமார மதிக்கிறேன். ஆனால், ஜூலியன், ஏற்கனவே, நான் செய்வதெல்லாமே சிந்திப்பது தான். உண்மையைச் சொல்லப் போனால், எனது பிரச்சினையின் ஒரு பகுதியே நான் மிக அதிகமாகச் சிந்திக்கிறேன் என்பது தான். எனது மனம் ஒரு போதும் சிந்திப்பதை நிறுத்துவதேயில்லை. 'சளசள' வென்று ஓயாமல் பேசிக் கொண்டே இருக்கிறது - அது சில சமயம் என்னைப் பித்தனாக்கி விடுகிறது.''

''நான் குறிப்பிடுவது வேறு. சிவானாவின் முனிவர்கள் அனைவரும் தினந்தோறும் அமைதியாகச் சிந்திப்பதற்கென நேரம் ஒதுக்கினார்கள். தாம் எங்கே இருக்கிறோம் என்பது பற்றி மட்டுமல்லாமல், எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்பது பற்றியும் அவர்கள் சிந்தித்தார்கள். தமது நோக்கத்தைப் பற்றியும் ஒவ்வொரு நாளும் தமது வாழ்க்கையை எவ்வாறு வாழ்ந்து கொண்டிருந்தார்கள் என்பது பற்றியும்

எண்ணமிட்டனர். எல்லாவற்றுக்கும் மேலாக, மறுநாள் பொழுதை எவ்வாறு மேம்படுத்துவது என்பது பற்றி ஆழமாகவும், உண்மையாகவும் சிந்தித்தனர். ஒவ்வொரு நாளும் சின்னச் சின்ன மேம்பாடுகளைச் செய்வதால் நிலையான விளைவுகள் ஏற்படும். இவை வெகு நேர்மறையான மாற்றங்களுக்கு இட்டுச் செல்லும்.''

''எனவே, எனது வாழ்க்கையைப் பற்றிச் சிந்திப்பதற்கு நான் ஒழுங்காக நேரம் ஒதுக்க வேண்டுமா?''

''ஆம், நாளொன்றுக்குப் பத்து நிமிடங்கள் மனம் ஒருமுனைப்பட்டு சிந்திப்பதால் உனது வாழ்வின் தரத்தில் ஒரு ஆழமான பாதிப்பு ஏற்படும்.''

''நீங்கள் எதை மனதில் வைத்துக் கொண்டு பேசுகிறீர்கள் என்பது எனக்கு புரிகிறது ஜூலியன். பிரச்சினை என்னவென்றால், எனது நாள் ஒன்று துவங்கிவிட்டால், மதிய உணவை உண்ணுவதற்கென்று ஒரு பத்து நிமிட நேரத்தைக் கூட என்னால் எடுத்துக் கொள்ள முடிவதில்லை.''

''எனது நண்பா! உனது எண்ணங்களையும், வாழ்க்கையையும் மேம்படுத்துவதற்குத் தேவையான நேரம் கூட உனக்குக் கிடைக்காது என்று சொல்வது, நீ கார் ஓட்டிக் கொண்டு சென்று கொண்டிருப்பதால், பெட்ரோல் போடுவதற்கு உனக்கு நேரமில்லை என்று சொல்வது போல உள்ளது. நாளாவட்டத்தில் பிரச்சினை உன்னை வந்து எட்டிவிடும்.''

''ஆமாம் எனக்குத் தெரியும். ஜூலியன் நீங்கள் ஏதோ சில செய்முறைகளை என்னுடன் பகிர்ந்து கொள்வதாகச் சொன்னீர்களே!''

அவர் கூறிக்கொண்டிருந்த ஞானத்தைப் பயன்படுத்துவதற்கான நடைமுறை வழிகளைக் கற்கலாமே என்ற நம்பிக்கையில் நான் கேட்டேன்.

''மனதை வெற்றி கொள்வதற்கு, பிற எல்லாச் செய்முறைகளையும் விட வெகு சிறப்பான வழி ஒன்று உள்ளது. இது சிவானா முனிவர்களுக்கு மிகவும் பிடித்தமான ஒன்றாகும். மிகுந்த நம்பிக்கையுடனும், விசுவாசத்துடனும் அவர்கள் அதை எனக்குக் கற்றுக் கொடுத்தனர். இருபத்தியொரு நாட்கள் மட்டுமே அதைப் பயிற்சி செய்த பின்னர், நான் மிக அதிகமான சக்தியுடனும், உற்சாகத்துடனும், உயிர்த்துடிப்புடனும் உணர்ந்தேன். பல ஆண்டுகாலமாக நான் இவ்வாறு உணர்ந்ததேயில்லை. இப்பயிற்சி நாலாயிரம் ஆண்டுகளுக்கும் அதிகமாகப் பழைமையானது. அதன் பெயர் **ரோஜாவின் இதயம்**.''

''மேலே சொல்லுங்கள்.''

''இதைப் பயிற்சி செய்வதற்கு உனக்குத் தேவையானதெல்லாம், ஒரு புத்தம்புது ரோஜா மலரும், ஒரு அமைதியான இடமும் மட்டுமே. இயற்கையான சுற்றுச்சூழல் சிறப்பானது. ஆனால் ஒரு அமைதியான அறை கூடப் போதுமானதே. ரோஜாவின்

மையப்பகுதியை, அதன் இதயத்தை, உற்றுப் பார்ப்பதில் தொடங்கு. ரோஜாவானது வாழ்க்கையை மிகவும் ஒத்துள்ளது என்று யோகி இராமன் கூறினார். வழியில் நீ முட்களைச் சந்திப்பாய், ஆனால் நம்பிக்கை கொண்டு, உனது கனவுகளில் விசுவாசம் செலுத்தினால், இறுதியில் முட்களைத் தாண்டிச் சென்று மலரின் மகோன்னதத்திற்குள் நுழைந்து கொள்வாய். ரோஜாவைத் தொடர்ந்து உற்றுப்பார். அதன் வண்ணம், மென்மை மற்றும் அமைப்பு இவற்றைக் கவனி. அதன் நறுமணத்தை ரசித்து அனுபவித்து, உனக்கு முன்னால் உள்ள இந்த அருமையான பொருளைப் பற்றி மட்டுமே சிந்தனை செய். முதலில், பிற எண்ணங்கள் உனது மனதில் புகுந்து ரோஜாவின் இதயத்திலிருந்து உன்னைத் திசைத் திருப்பும். பயிற்சி பெறாத ஒரு மனதின் அடையாளம் இது தான். ஆனால், நீ கவலைக் கொள்ளத் தேவையில்லை. முன்னேற்றம் விரைவாகவே வரும். வெறுமனே உனது கவனத்தை மீண்டும் நீ கவனம் செலுத்தும் பொருளின் பால் திருப்பு. விரைவில் உனது மனம் உறுதியானதாகவும், ஒழுங்கும் கட்டுப்பாடும் கொண்டதாகவும் வளரும்.''

''இவ்வளவு தானா இதில் உள்ள விஷயம்? இது மிகச் சுலபமானதாகத் தோன்றுகிறது.''

''அது தான் அதில் உள்ள அழகு ஜான்.'' என்றார் ஜூலியன். ''எனினும், திறனுடையதாக இருக்க வேண்டுமானால், இச்சடங்கு தினசரி செய்யப்படவேண்டும். முதல் சில நாட்கள், இந்தப் பயிற்சியில் ஐந்து நிமிடங்கள் கூடத் தொடர்ந்து ஈடுபட்டிருத்தல் கடினமான செயல் என்று நீ காண்பாய். நம்மில் பெரும்பாலோரும் வெகு வேகமாக வாழ்ந்து கொண்டிருப்பதால், உண்மையான அசைவற்ற நிலையும், அமைதியும், வெகு அன்னியமானதாகவும், அசௌகரியமானதாகவும் இருப்பது போலத் தோன்றும். எனது சொற்களைக் கேட்கின்ற பெருவாரி நபர்கள், உட்கார்ந்து ஒரு மலரை முறைத்துப் பார்ப்பதற்குத் தங்களுக்கு நேரம் கிடையாது என்று கூறுவார்கள். இதே மனிதர்கள் தான், குழந்தைகளின் சிரிப்பொலியைக் கேட்டு ரசிப்பதற்கும், மழையில் வெறுங்காலுடன் நடந்து திரிவதற்கும், தமக்கு நேரமில்லை என்று சொல்வார்கள். இத்தகைய விஷயங்களைச் செய்வதற்கு இயலாதவாறு தாம் மிகவும் மும்முரமாக இருப்பதாகச் சொல்வார்கள். நட்புகளை வளர்த்துக் கொள்ளக் கூட அவர்களுக்கு நேரமில்லை. ஏனெனில், நட்புகளுக்கும் நேரம் வேண்டியிருக்கிறது.''

''அத்தகைய நபர்களைப் பற்றி உங்களுக்கு நிறையத் தெரிந்திருக்கிறது.''

''நானும் அவர்களில் ஒருவனாக இருந்தேன்,'' என்றார் ஜூலியன். பின்னர் பேசுவதை நிறுத்திவிட்டு, அசைவின்றி, அமர்ந்திருந்தார். அவரது தீர்க்கமான பார்வை, அங்கிருந்த பாட்டனார் கடிகாரத்தின் மீது நிலைத்திருந்தது. அந்தக் கடிகாரத்தை எனது பாட்டி புதுமனைப் புகு விழாவிற்கான பரிசாக என் மனைவி ஜென்னிக்குக் கொடுத்திருந்தார்.

''இவ்வாறு வாழ்ந்திருக்கும் மனிதர்களைப் பற்றி எண்ணும்போது, எனது தந்தைக்கு மிகவும் பிடித்திருந்த ஒரு பழைய ஆங்கில நாவலாசிரியரின் சொற்கள் என்

நினைவுக்கு வருகின்றன. 'வாழ்வின் ஒவ்வொரு தருணமும் ஒரு அற்புதம், ஒரு மர்மம் என்ற உண்மையைக் காண முடியாமல், கடிகாரமும், நாள் காட்டியும் தனது கண்களைக் குருடாக்குமாறு ஒருவர் விட்டுவிடக் கூடாது'.

"விடாப்பிடியாக முயற்சி செய்து, ரோஜாவின் இதயத்தை ரசித்தபடி மேலும், மேலும் அதிக நேரத்தைச் செலவிடு," என்றார் ஜூலியன், தனது கரகரத்த குரலில். "ஒன்றிரண்டு வாரங்களுக்குப் பின்னர், உனது மனம் பிற விஷயங்களின் பால் செல்லாதவாறு ஒரு இருபது நிமிடம் இருக்கச் செய்ய உன்னால் முடியும். உனது மனம் என்னும் கோட்டையின் மீதான அதிகாரத்தை நீ மறுபடி உன்னுடைய கைக்குள் எடுத்துக் கொண்டிருக்கிறாய் என்பதற்கு இதுவே முதல் அடையாளமாகும். இதற்குப் பின்னர், நீ எதன் மீது கவனம் செலுத்தும்படிக் கட்டளையிடுகிறாயோ, அதன் மீது மட்டுமே உன் மனம் கவனம் செலுத்தும். அப்போது, உனக்காக வெகு அசாதாரணமான செயல்களைச் செய்யவல்ல ஒரு அற்புதமான பணியாளாக அது இருக்கும். இதை மறவாமல் நினைவில் வை. ஒன்று நீ உனது மனதைக் கட்டுப்படுத்துகிறாய், அல்லது உன் மனம் உன்னைக் கட்டுப்படுத்துகிறது.

"நடைமுறையின்படி பார்த்தால், நீ முன்னை விடவும் மிக அமைதியாக உணர்வதைக் கவனிப்பாய். மக்களில் பலரையும் வருத்துகின்ற கவலைப் பழக்கத்தை ஒழித்து விடுவதற்கான முதல் படியை, முக்கியமான அடியை எடுத்து வைத்திருப்பாய். மிக அதிகமான சக்தி மற்றும் நல்லதையே எதிர்பார்க்கும் குணத்தை நீ கொண்டிருப்பாய். மிக மிக முக்கியமாக, உனது வாழ்வில் ஒரு மகிழ்ச்சிகரமான தன்மை உருவாகியிருப்பதையும், உன்னைச் சுற்றியுள்ள பல நல்ல பரிசுகளைக் கண்டு அவற்றை மதித்து இன்புறுவதற்கான குணம் ஏற்பட்டிருப்பதையும் காண்பாய். நீ எவ்வளவு தான் மும்முரமாக இருந்தாலும், எத்தனை சவால்களை எதிர் கொள்ள நேரிடினும், ஒவ்வொரு தினமும் ரோஜாவின் இதயத்திற்குத் திரும்ப வா. அது உனது பாலைவனச் சோலையாகும். அதுவே உனது அமைதிப் பூங்காவாகும். சாந்தத்தின் தனித்தீவாகும் அமைதி மற்றும் அசைவற்ற நிலையிலே அளவற்ற சக்தி உள்ளது என்பதை ஒரு போதும் மறவாதே. அசைவற்ற தன்மை தான், ஒவ்வொரு உயிருள்ள பிராணியின் ஊடே துடித்துக் கொண்டிருக்கும் அறிவின் பிரபஞ்ச ஆதாரத்துடன் இணைப்புத் தருகின்ற பாலம் ஆகும்."

நான் கேள்விப்பட்டது என்னைப் பிரமிப்பில் ஆழ்த்தியது. இத்தகையதொரு மிக எளிமையான செய்முறையின் வாயிலாக, எனது வாழ்க்கையின் தரத்தை இவ்வளவு ஆழமாக மேம்படுத்துவது என்பது உண்மையிலேயே சாத்தியமா?

"நான் உங்களிடம் பார்க்கிற தடாலடி மாற்றங்களுக்கு, ரோஜாவின் இதயத்தைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்த காரணங்கள் இருந்தாக வேண்டும்," என்று நான் உரக்கவே சிந்தித்தேன்."

"ஆம், அது உண்மை தான். உண்மையில், எனது மாற்றமானது, வெகு அதிகமான திறன் வாய்ந்த சில பல செயல்முறைகளை ஒருங்கிணைத்துப்

பயன்படுத்தியதால் விளைந்தது தான். கவலைப்படாதே, அவையெல்லாமே நான் இப்போது உன்னுடன் பகிர்ந்து கொண்டுள்ள பயிற்சியைப் போலவே மிகவும் எளிமையானவை தான். அதே அளவு சக்தி வாய்ந்தவையும் கூட. ஜான், இங்கு உனக்கு முக்கியமான செய்தி, மிகச் செழிப்பான சாத்தியப்பாடுகள் கொண்ட ஒரு வாழ்க்கையை வாழ்வதற்கென உன்னுள் இன்னமும் பயன்படுத்தப்படாமல் கிடக்கும் சக்தியைப் பற்றித் திறந்த மனதுடன் இருப்பது தான்.''

அறிவின் வற்றாத ஊற்றாக இருந்த ஜூலியன், தான் சிவானாவில் கற்றுக் கொண்ட விஷயங்களைத் தொடர்ந்து வெளிப்படுத்தினார். "கவலை மற்றும் பிற எதிர்மறையான, வாழ்வின் சக்தியை வடியச் செய்து விடுகிற பாதிப்புகளை மனதிலிருந்து வெளியேற்றி விடுவதற்கான மற்றொரு மிகச் சிறப்பான செய்முறையானது. **எதிர்க்கட்சிச் சிந்தனை** என்று யோகி இராமன் குறிப்பிடுகின்ற ஒன்றாகும். இயற்கையின் மகத்தான விதிமுறைகளின்படி, மனமானது எந்த ஒரு குறிப்பிட்ட சமயத்திலும் ஒரே ஒரு எண்ணத்தைத் தான் தனக்குள் கொண்டிருக்க முடியும் என்பதை நான் கற்றுக் கொண்டேன். நீயே அதை முயன்று பார் ஜான், அது உண்மை என்பதை உணர்வாய்.''

நானும் அதை முயன்று பார்த்தேன். அது உண்மை தான்.

"வெகு குறைவாகவே வெளியில் தெரிந்துள்ள இந்தத் தகவலைப் பயன்படுத்து, யாராலும் ஒரு நேர்மறையான, உருவாக்கும் திறன் கொண்ட மன அமைப்பை, வெகு குறுகிய காலத்திலே சுலபமாக ஏற்படுத்திக் கொள்ள முடியும். இந்தச் செய்முறை வெகு எளிமையானது. ஒரு விரும்பத் தகாத எண்ணம் உன் மனதின் மையப் புள்ளியில் இடம் கொண்டிருக்கும் போது உடனடியாக ஒரு உயர்வு தரும் எண்ணத்தைக் கொண்டு அதை மாற்றியமைத்து விடு. உனது மனம் ஒரு இராட்சத படம் காட்டும் எந்திரம் போலவும். ஒவ்வொரு எண்ணமும் ஒரு படத்தைப் போலவும், இருப்பதாக இது உள்ளது. எப்பொழுதெல்லாம் ஒரு எதிர்மறையான படம் திரையில் வருகிறதோ, அப்பொழுதெல்லாம் விரைவாகச் செயல்பட்டு ஒரு நேர்மறைப் படத்தைக் கொண்டு அதை மாற்றி விடு.''

"இங்கு தான், என் கழுத்தில் உள்ள ஜபமாலை வருகிறது,'' என்றார் ஜூலியன், பெருகி வரும் உற்சாகத்துடன். "ஒவ்வொரு முறை ஒரு எதிர்மறைச் சிந்தனை என் மனதில் நுழையும் பொழுதெல்லாம், இந்த மாலையைக் கழற்றி, ஒரு மணியை எடுத்துவிடுவேன். எனது பையில் உள்ள ஒரு கோப்பைக்குள் இந்தக் கவலை மணிகள் போடப்படும். அவற்றை ஒரு சேரப் பார்க்கும் பொழுது, மனதை வெற்றி கொள்வதற்கான பாதையில் நான் இன்னும் வெகுதூரம் செல்ல வேண்டியுள்ளது என்பதற்கான மென்மையான நினைவுச் சின்னங்களாக அவை உள்ளன. மேலும், எனது மனதை நிரப்புகின்ற எண்ணங்கள் பற்றிய பொறுப்பைப் பற்றியும் அவை எனக்கு நினைவூட்டுகின்றன.''

“ஆஹா, இது பிரமாதம். இது தான் உண்மையிலேயே நடைமுறைப்படுத்தக் கூடிய விஷயம். இதுபோன்ற ஒரு **‘எதிர்க் கட்சிச் சிந்தனை’** என்ற இந்தத் தத்துவத்தை பற்றி இன்னும் கொஞ்சம் சொல்லுங்கள்.”

“இதோ, ஒரு உண்மைச் சம்பவம் - உதாரணமாக ஒருநாள், கோர்ட்டில் மிக மோசமான அனுபவத்தைக் கொண்டுள்ளாய் என்று வைத்துக் கொள்வோம். சட்டத்தைப் பற்றி நீ கொடுத்த விளக்கத்தை நீதிபதி ஒப்புக் கொள்ளவில்லை. உனக்கு எதிராக இருந்த வாதி, ஒரு மிருகக் கூண்டுக்குள் இருந்திருக்க வேண்டும். உனது கட்சிக்காரரோ, நீ கேஸை நடத்திச் சென்ற விதம் பற்றிக் கோபத்துடன் இருந்தார். நீ வீட்டிற்கு வந்து மிகுந்த மனச்சோர்வுடன் உனது விருப்பமான நாற்காலியில் தொப்பென்று விழுகிறாய்.

இங்கு முதல் கட்டம், இந்த துணிவிழக்கச் செய்யும் எண்ணங்களை நீ சிந்தித்துக் கொண்டிருக்கிறாய் என்று முதலில் உணர்ந்து கொள்வது தான். சுய அறிவு தான் சுய கட்டுப்பாட்டுக்கான படிக்கல்.

இரண்டாவது கட்டம் என்பது இந்த இருண்ட எண்ணங்களை உனது மனதினுள் எவ்வளவு சுலபமாக நுழைய விட்டாயோ, அதே போல, உற்சாகமான எண்ணங்களை அவற்றுக்குப் பதிலாக உன்னால் வைக்க முடியும்.

எனவே! இருளடைந்த துயரத்திற்கு எதிரான உணர்வைப் பற்றி சிந்தி. உற்சாகத்துடனும், சக்தியுடனும் இருப்பதில் மனதை ஒருமுகப்படுத்து. நீ மகிழ்ச்சியாக இருப்பதாக உணர். ஒருக்கால் நீ புன்னகைக்கக் கூடத் தொடங்கலாம். மகிழ்ச்சியோடும், உற்சாகத்துடனும் இருக்கும்பொழுது, உனது உடலை எவ்வாறு அசைப்பாயோ அதைப்போல அசை. நன்றாக நிமிர்ந்து உட்கார். ஆழமாக மூச்சு விட்டு உனது மனதை நேர்மறை எண்ணங்களை நோக்கித் திருப்பு. ஒரு சில நிமிடங்களிலேயே, உனது உணர்வு நிலையில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றத்தை காண்பாய் அதை விடவும் முக்கியமாக, எதிர்ப்பு சிந்தனை எனும் பயிற்சியைத் தொடர்ந்து செய்து கொண்டிருந்தால், உனது மனதினுள் வழக்கமாக எழுகின்ற ஒவ்வொரு எதிர்மறைச் சிந்தனைக்கும் எதிராக அதைப் பயன்படுத்திய வண்ணம் இருந்தால், ஒரு சில வாரங்களிலேயே அவை உன் மீது எந்த ஆதிக்கத்தையும் கொண்டிருக்கவில்லை என்பதை நீ காண்பாய். நான் என்ன சொல்ல வருகிறேன் என்பதை உன்னால் பார்க்க முடிகிறதா?”

ஜூலியன் தனது விளக்கத்தைத் தொடர்ந்தார். “எண்ணங்கள் மிக முக்கியமானவை, உயிருள்ளவை. சின்னஞ்சிறு சக்திப் பொட்டலங்கள் என்று அவற்றைக் கூறலாம். பெருவாரி மனிதர்கள் தமது எண்ணங்களின் இயல்பைப் பற்றி எதுவும் சிந்திப்பதே கிடையாது. நாம் நீந்துகிற ஏரியையும், நடந்து செல்லும் பாதையையும் போலவே, எண்ணங்களும் பொருள் சார்ந்த உலகத்தின் ஒரு அங்கமாகத்தான் இருக்கின்றன. பலவீனமான மனங்கள் பலவீனமான செயல்களுக்குக் காரணமாகின்றன. ஒரு உறுதியான, ஒழுங்காகக் கட்டுப்படுத்தப்பட்ட மனதை

தினசரிப் பயிற்சியின் வாயிலாக எவரும் உருவாக்கலாம். அப்படிப்பட்ட மனம் தான் அற்புதங்களை விளைவிக்கிறது. வாழ்க்கையை முழுமையாக வாழ நீ விரும்பினால், வெகு மதிப்புள்ள உடைமை ஒன்றைப் போற்றிப் பேணுவது போல உனது எண்ணங்களையும் கவனி. கடுமையாக உழைத்து அகக் குழப்பங்கள், அலைபாய்தல்கள் இவற்றையெல்லாம் நீக்கிவிடு. அதன் பலன் அபரிமிதமானதாக, அற்றதாக இருக்கும்.''

''எண்ணங்கள், உயிருள்ளவை என்று நான் ஒருபோதும் கருதியதில்லை, ஜூலியன்.'' என்றேன் நான். இந்தக் கண்டுபிடிப்பினால் பெரும் வியப்பில் ஆழ்ந்து போனேன். ''ஆனால், எனது உலகின் ஒவ்வொரு அம்சத்தையும் அவை எவ்வாறு பாதிக்கின்றன என்பதை என்னால் பார்க்க முடிகிறது.''

''ஒருவர் சாத்வீகமாக அல்லது தூய்மையான எண்ணங்களை மட்டுமே எண்ண வேண்டும் என்று சிவானா முனிவர்கள் திடமாக நம்பினர். நான் சற்று முன்னர் உன்னுடன் பகிர்ந்து கொண்ட செய்முறைகளின் மூலமாகவும், இயற்கை உணவு, நேர்மறைச் சொற்றொடர்கள் அல்லது மந்திரங்களை மீண்டும் மீண்டும் உச்சரித்தல், அறிவு நிறைந்த நூல்களை வாசித்தல் மற்றும் தாம் உடன் பழகி வரும் குழுவினர் அறிவுத் தெளிவு பெற்றவர்களாக இருத்தலை உறுதி செய்து கொள்ளல், போன்ற பிற பழக்கங்களைப் பின்பற்றுவதாலும் அத்தகைய ஒரு சுத்தமான, உயரிய எண்ணங்களை எண்ணும் நிலையை அவர்கள் எட்டினர். அவர்களது மனமாகிய கோவிலுக்குள் ஒரே ஒரு அசுத்தமான எண்ணம் நுழைந்துவிட்டால் கூட அவர்கள் தம்மைத் தாமே தண்டித்துக் கொள்வர். பல கல் தொலைவில் உள்ள ஒரு பெரிய நீர்வீழ்ச்சிக்கு நடந்தே சென்று அதன் சில்லிடும் பனிப் பிரவாகத்தில் குலை நடுநடுங்க நிற்பார்கள்.''

''இந்த முனிவர்கள் பெரும் ஞானிகள் என்று நீங்கள் சொல்லியதாகத் தான் நான் நினைத்தேன். ஒரு சிறிய எதிர்மறை எண்ணத்தை எண்ணியதற்காக, இமயமலையின் நடுங்கும் குளிரில், உறைய வைக்கும் நீர்வீழ்ச்சியின் அடியில் நிற்பது என்பது வெகு தீவிரமான, அசாதாரணமான செயலாக எனக்குத் தோன்றுகிறது.''

ஜூலியனின் பதில் மின்னலடித்தது போல வெட்டியது. பல ஆண்டுகளாக, உலகத்தரம் வாய்ந்த ஒரு வழக்குரைஞராக அவர் பெற்றிருந்த பயிற்சியின் விளைவு அது.

''ஜான், நான் வெளிப்படையாகவே பேசுகிறேன். ஒரே ஒரு எதிர்மறைச் சிந்தனையைக் கூட மனதில் கொள்வது உனக்குக் கட்டுப்படியாகாது என்பது தான் நிஜம்.''

''உண்மையாகவா?''

''உண்மையாகத் தான். ஒரு கவலையூட்டும் எண்ணம், ஒரு கருவைப் போன்றது. அது தொடங்கும் போது மிகச் சிறியதாக இருக்கும். ஆனால் காலப் போக்கில்

வளர்ந்து கொண்டே போகும். விரைவில் அது தனக்கென ஒரு வாழ்க்கையைப் பெற்று விடும்.''

சற்று நிறுத்திவிட்டு. ஜூலியன் புன்னகை செய்தார். "ஏதோ ஒரு பிரசங்கியைப் போல் நான் இது பற்றிப் பேசுவது போலத் தோன்றக் கூடும். என்னை மன்னித்து விடு. எனது பயணத்தில் நான் கற்றுக் கொண்ட தத்துவம் இது. பலரின் வாழ்க்கையையும் மேம்படுத்தவல்ல கருவிகளை நான் கண்டு கொண்டுள்ளேன். இந்த மனிதர்கள் நிறைவின்றி, உற்சாகமின்றி, சோகத்துடன் இருப்பதாக உணர்கின்றனர். தமது தினசரி பழக்க வழக்கங்களில் சில மாற்றங்களைச் செய்து, ரோஜாவின் இதயம் என்ற செய்முறையைப் பின்பற்றுவதாலும், எதிர்ப்புச் சிந்தனை என்ற செய்முறையை இடைவிடாது பயன்படுத்துவதாலும், தாம் விரும்பிய வாழ்க்கையை அவர்கள் பெறுவார்கள். இவ்விஷயம் அவர்களுக்குத் தெரிய வருவது தகுதியானது என்று நான் நினைக்கிறேன்.

"யோகி இராமனின் கதையில். தோட்டத்திலிருந்து அடுத்த அம்சத்திற்கு நான் செல்வதற்குள், உனது சொந்த வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியாக இருக்கக்கூடிய மற்றுமொரு இரகசியத்தை நான் உனக்குத் தெரியப்படுத்த வேண்டும். இந்த இரகசியம், எல்லாமே இரண்டு முறை உருவாக்கப்படுகிறது என்பதாகும். இது, முதலில் மனதில், இரண்டாவதாக உண்மையில் என்ற ஒரு புராதனக் கொள்கையின் அடிப்படையிலானது. எண்ணங்கள் என்பன பொருள்கள், நமது பொருள் சார்ந்த உலகின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதற்கென நாம் வெளியே அனுப்புகிற தூதர்கள் என்று நான் முன்னரே சொல்லியிருக்கிறேன். உனது புற உலகில் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமானால், முதலில் உள்ளே தொடங்கி உனது எண்ணங்களின் தரத்தை மாற்றியாக வேண்டும் என்றும் நான் தெரிவித்துள்ளேன்.

"சிவானாவின் முனிவர்கள் தமது எண்ணங்கள் தூய்மையானதாகவும், ஆரோக்கியமானதாகவும் இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்ள ஒரு அற்புதமான வழியைக் கொண்டிருந்தனர். அவர்களது ஆசைகள், எவ்வளவு எளிமையானவையாக இருந்த போதிலும், அவற்றை நனவாக்கிக் கொள்வதற்கும் இந்த வழிமுறை மிகவும் திறன் வாய்ந்ததாக இருந்தது. இந்த முறை யாருக்கு வேண்டுமானாலும் பயன்படும். அதிகமான வருமானத்தை எதிர்பார்க்கும் ஒரு இளம் வழக்குரைஞர். மேலான குடும்ப வாழ்வைத் தேடிக் கொண்டிருக்கும் ஒரு தாய், அதிக விற்பனையைச் செய்ய விரும்பும் ஒரு விற்பனையாளன் என்று யாருக்கும் இது உதவும். இந்த முறை ஏரியின் இரகசியம் என்று முனிவர்களால் அறியப்பட்டிருந்தது. அதைப் பயன்படுத்த வேண்டுமானால் இந்த ஆசான்கள் அதிகாலை 4 மணிக்கு எழ வேண்டியிருந்தது. ஏனெனில், தாம் பயனுறும் வகையிலான மந்திரத் தன்மைகளை அந்த அதிகாலை விடியல் நேரம் கொண்டிருந்தது என்று அவர்கள் கருதினர். அப்போது, முனிவர்கள், செங்குத்தான, குறுகலான மலைப்பாதைகளில் நடந்து சென்று, அவர்கள் சேர வேண்டிய தங்குமிடமாகிய தாழ்வான பகுதிகளைச் சென்றடைந்தனர். அவ்விடம் சென்று சேர்ந்தவுடன், எளிதில் கண்ணுக்குப் புலப்படாத பைன் மரங்கள் நெருக்கமாக வளர்ந்திருந்த, மலர்கள் நிறைந்த பாதை ஒன்றின் வழியாக நடந்து சென்று ஒரு

வெற்றிடத்தை அடைவர். அந்த இடத்தின் ஒரு ஓரத்தில் ஆயிரக் கணக்கான சிறிய வெண் தாமரை மலர்கள் நிறைந்து காணப்பட்ட ஏரி ஒன்று இருந்தது. உண்மையில் அது ஒரு அற்புதக் காட்சியாக இருந்தது. தமது மூதாதையருக்கு, பன்னெடுங்காலமாக இந்த ஏரி ஒரு நண்பனாக இருந்து வந்துள்ளது என்று முனிவர்கள் என்னிடம் கூறினார்கள்.''

"ஏரியின் இரகசியம் தான் என்ன?" என்றேன் நான் பொறுமையிழந்தவனாய்...

முனிவர்கள் அந்தச் சலனமற்ற ஏரியின் பளிங்கு போன்ற நீரினுள் பார்வையைச் செலுத்தி, தமது கனவுகள் நனவாக ஆவதைக் கற்பனை செய்து காண்பார்கள். தமது வாழ்வில் வளர்த்துக் கொள்ள விரும்பிய ஒரு நற்குணமாக அவர்கள் கனவு இருப்பின், தாம் அதிகாலையில் எழுவது போலவும், தமது கடுமையான உடற்பயிற்சியைத் தவறாது மேற்கொண்டு, தமது மன உறுதியை மேம்படுத்த வேண்டி, பல நாட்கள் மௌனமாக இருப்பதைத் தமது மனக் கண்ணில் கற்பனை செய்து பார்ப்பார்கள். மேலும் அதிக மகிழ்ச்சியை அவர்கள் தேடிக் கொண்டிருந்தால், அந்த ஏரிக்குள்ளே பார்த்து, கட்டுக்கடங்காமல் சிரித்துக் கொண்டும். ஒவ்வொரு முறை தமது நண்பர்களைச் சந்திக்கும் போது புன்னகைத்துக் கொண்டும் இருப்பது போலக் கற்பனை செய்து கொள்வார்கள். தாம் விரும்பியது துணிவாக இருந்தால், நெருக்கடிகள் மற்றும் சவால்கள் நிறைந்துள்ள வேளைகளில் தாம் துணிவுடனும், மனஉறுதியுடனும் செயல்படுவதாகக் கற்பனை செய்து கொள்வார்கள்.

"யோகி இராமன் தான் சிறுவனாக இருந்தபோது பிற சிறுவர்களை விடவும் உருவத்தில் சிறியவனாக இருந்ததால், தனக்குத் தன்னம்பிக்கை குறைவாக இருந்ததாகக் குறிப்பிட்டார். தமது சுற்றுச் சூழலின் காரணமாக அவர்கள் அவர்பால் கனிவுடனும், மென்மையுடனும் நடந்து கொண்ட போதிலும், அவரோ பாதுகாப்பு உணர்வின்றி, கூச்ச சுபாவத்துடன் இருக்கத் தொடங்கினார். இந்த பலவீனத்தைக் குணப்படுத்த, யோகி இராமன் இந்த இனிமையான, சொர்க்கம் போன்ற இடத்திற்குச் சென்று, ஏரியை ஒரு திரை போலப் பயன்படுத்தி, தான் எத்தகையதொரு நபராக இருக்க விரும்பினாரோ அது போன்ற உருவகங்களைக் கற்பனை செய்து பார்த்துக் கொள்வார். சில தினங்கள், தன்னை ஒரு வலிமை மிக்க தலைவராகக் கற்பனை செய்து கொள்வார். மக்கள் மத்தியில் கம்பீரமாக நின்ற வண்ணம், சக்தி வாய்ந்த கட்டளையிடும் குரலில் பேசுவது போலத் தன்னைக் காண்பார். பிற தினங்களில், தான் வயது முதிர்ந்த பின் எவ்வாறு இருக்க வேண்டும் என்று விரும்பினாரோ – மகத்தான அகசக்தியும், மேன்மைக் குணங்களும் நிரம்பிய ஒரு ஞானம் மிக்க மகானாக – அவ்வாறு கற்பனை செய்து பார்த்துக் கொள்வார். தனது வாழ்வில் தான் கொண்டிருக்க வேண்டும் என்று விரும்பிய அனைத்து நற்குணங்களையும் அவர் முதலில் ஏரியின் நீர்ப்பரப்பில் தான் கண்டார்.

"ஒரு சில மாதங்களுக்குள்ளாகவே, தான் யாராக இருப்பதாக மனக்கண்ணால் கண்டாரோ அந்த நபராகவே யோகி இராமன் ஆகிவிட்டார். ஜான், இதோ பார் – மனமானது, காட்சிகளின் வாயிலாகத் தான் வேலை செய்கிறது. காட்சிகள் உனது

சுய உருவத்தைப் பாதிக்கின்றன. உனது சுய உருவம், நீ எவ்வாறு உணர்கிறாய், செயல்படுகிறாய். சாதிக்கிறாய் என்பதைப் பாதிக்கிறது. உனது சுய உருவம், ஒரு வெற்றிகரமான வழக்கறிஞராகும் அளவு உனக்கு வயதாகவில்லை. நீ மிகவும் இளமையாக இருக்கிறாய் என்றோ, அல்லது உனது பழக்க வழக்கங்களை உன்னால் மாற்றிக் கொள்ள முடியாது, ஏனெனில் உனக்கு வயதாகிவிட்டது என்றோ உன்னிடம் சொன்னால், உனது இந்த இலக்குகளை நீ ஒருபோதும் எட்டமாட்டாய். உயர் நோக்கங்கள், உன்னத உடல் நலன் மற்றும் மகிழ்ச்சி ஆகியன, வேறு பிற பின்னணிகளிலிருந்து வரும் நபர்களுக்கு மட்டுமே உரியவை, உனது பின்னணியிலிருந்து வருபவர்களுக்கு அவை கிடைக்கமாட்டா என்று உனது சுயஉருவம் சொன்னால், அந்தத் தீர்க்க தரிசனமே இறுதியில் உனது உண்மை நிலையாக ஆகிவிடும்.

"ஆனால், உற்சாகமூட்டும், கற்பனை வளம் மிக்க காட்சிகளை உனது மனம் என்னும் திரைச்சீலையில் ஓட்டினால், உனது வாழ்வில் அற்புதமான விஷயங்கள் நடைபெறத் தொடங்குகின்றன. **'கற்பனையானது அறிவை விடவும் கூடுதல் முக்கியத்துவம் கொண்டது' என்று ஐன்ஸ்டைன் கூறினார்**. தினந்தோறும் சிறிது நேரத்தை - அது ஒரு சில நிமிடங்களேயானாலும் கூட - புதியதாக உருவாக்கிக் காட்சிகள் காண்பதில் நீ செலவிட வேண்டும். நீ என்னவாக இருக்க வேண்டும் என்று நீ விரும்புகிறாயோ, அவ்வாறு இருப்பதுபோல உன்னைப் பார். இது ஒரு பெரிய நீதிபதியாக வேலை செய்வதாகவோ, ஒரு நல்ல சிறப்பான தந்தையாகவோ, அல்லது உனது பகுதியில் ஒரு முக்கியமான குடிமகனாகவோ இருப்பதாகவும் இருக்கலாம்."

"ஏரியின் இரகசியத்தைப் பயிற்சி செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட ஏரியை நான் கண்டுபிடிக்க வேண்டுமா?" என்று நான் ஒன்றுமறியாதவனாகக் கேட்டேன்.

"இல்லை, ***ஏரியின் இரகசியம்*** என்பது, மனதைப் பண்படுத்துவற்கு நேர்மறைக்காட்சிகளை பயன்படுத்தும் இந்தப் பழமையான கால எல்லையற்றச் செய்முறைக்கு முனிவர்கள் கொடுத்திருந்த பெயர் மட்டுமே. நீ விரும்பினால் உனது வீட்டின் முன்னறையிலோ, அலுவலகத்திலோ கூட நீ இந்தச் செய்முறையைப் பயிற்சி செய்யலாம். கதவை மூடி விட்டு வாயில் மணி, தொலைபேசி என எந்த அழைப்பையும் ஏற்காமல் நிறுத்திவிட்டு, கண்களை மூடிக்கொள். ஒரு சில முறை ஆழமாக இழுத்து சுவாசி. இரண்டு மூன்று நிமிடங்களில் நீயே மிகவும் தளர்வாகவும், ஓய்வாகவும் இருக்கத் தொடங்குவதை உணர்வாய். அடுத்ததாக, நீ என்னவாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறாயோ அவ்வாறு இருப்பதான காட்சிகளை உனது மனக்கண்ணில் உருவாக்கிப்பார். உன் வாழ்வில் பெற விரும்புகின்ற, சாதிக்க விழைகின்ற அனைத்தையும் பார். உலகிலேயே மிகச் சிறந்த தந்தையாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறாயா? உனது குழந்தைகளுடன் சிரித்து விளையாடுவது போலக் கற்பனை செய்து கொள். அவர்களது கேள்விகளுக்கெல்லாம் திறந்த மனதுடன் பதில் சொல்வது போலக் காட்சிகளை உருவாக்கு. ஒரு இறுக்கமான

சூழ்நிலையில், நிதானமாகவும், அன்புடனும் செயல்படுவது போலக் கற்பனை செய்து கொள். அதே போன்ற சம்பவம் ஒன்று உண்மையிலேயே நிகழும்போது உனது செயல்களை எவ்வாறு கட்டுப்படுத்துவாய் என்று மனதிற்குள்ளேயே ஒத்திகை பார்த்துக் கொள்.

“மனக் கண்ணில் காட்சிகள் காண்பது என்ற மந்திர வித்தையை எத்தனையோ சூழ்நிலைகளுக்கு ஏற்ப பயன்படுத்திக் கொள்ளலாம். நீதிமன்றத்தில் மேலும் அதிகச் செயல் திறனுடன் இருக்கவும், உனது மனித உறவுகளை மேம்படுத்திக் கொள்ளவும், ஆன்மீக ரீதியில் உன்னையே வளர்ச்சி பெறச் செய்யவும் எனப் பல வகைகளில் இது உதவும். இந்தச் செய்முறையைத் தவறாமல் பயன்படுத்துவதால், செல்வச் செழிப்பும், பொருளாதார லாபங்களும் உன்னிடம் வந்து சேரும் – இவை உனக்கு பிரதானமானவையாக இருந்தால்! நீ விரும்புவது எல்லாவற்றையும் உனது வாழ்வினுள் ஈர்த்துக் கொண்டு வருவதற்கான காந்தவிசை உனது மனதில் உள்ளது என்பதை நன்றாகப் புரிந்து கொள். உனது வாழ்வில் ஏதேனும் குறை இருந்தால், அதற்குக் காரணம் உனது எண்ணங்களில் இருக்கும் ஒரு குறை தான். உனது மனதில் அற்புதமான காட்சிகளைப் படம் பிடித்து வைத்துக் கொள். ஒரே ஒரு எதிர்மறைச் சித்திரம் கூட உனது மனோ அமைப்பிற்கு நஞ்சு போன்றதாகும். இந்தப் புராதனச் செய்முறையால் விளையக்கூடிய இன்பத்தை அனுபவிக்கத் தொடங்கிவிட்டாய் என்றால், உனது மனதின் எல்லையற்ற சக்தியை உணர்ந்து கொள்வாய். பின்னர் உனக்குள்ளே உறங்கிக் கொண்டு இருக்கின்ற திறன், சக்தி இவற்றை விடுதலை செய்து வெளிக் கொண்டு வரத் தொடங்கி விடுவாய்.”

ஜூலியன் ஏதோ ஒரு அன்னிய மொழியில் பேசிக் கொண்டிருந்தது போல எனக்குத் தோன்றியது. பொருள் சார்ந்த மற்றும் ஆன்மீகச் செல்வத்தை ஈர்த்து வரவழைக்கக் கூடிய மனதின் காந்தசக்தியைப் பற்றி யாரும் பேசி நான் கேட்டதேயில்லை. அதே போல, காட்சிகளை உருவாக்குவதும், ஒருவரின் உலகத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் அது உருவாக்கக் கூடிய ஆழமான தாக்கங்கள் பற்றியும் எவரும் பேசிக் கேட்டதேயில்லை. எனினும், எனக்குள், ஜூலியன் சொல்லிக் கொண்டிருந்தவற்றைப் பற்றி நம்பிக்கை கொண்டிருந்தேன். இவரது மதிப்பிடும் திறனும், புத்திக் கூர்மையும் ஒரு குறையும் இல்லாதவை. தனது சட்ட நிபுணத்துவத்திற்கென, பன்னாட்டு அளவில் மதிக்கப்பட்டவர் இவர். இப்போது நான் பயணித்துச் சென்று கொண்டுள்ள பாதையில் முன்னர் நடந்து சென்ற மனிதர் இவர். கீழை நாடுகளுக்குச் சென்றிருந்த பயணத்தின் போது ஜூலியன் எதையோ கண்டு கொண்டு விட்டார். இது ஒன்று மட்டும் தெளிவாக இருந்தது. அவரது உடலின் வலிமை, அமைதி மற்றும் மாற்றத்தைக் கண்டிருந்த நான், அவரது அறிவுரைக்குச் செவி கொடுப்பது நல்லது என்றே எண்ணினேன்.

நான் கேட்டுக் கொண்டிருந்தவற்றைப் பற்றி எவ்வளவு அதிகமாக நான் சிந்தித்தேனோ, அந்தளவு பொருள் உள்ளதாகத் தான் அது தோன்றியது. நாம் இப்போது பயன்படுத்திக் கொண்டிருப்பதை விட, மிகவும் அதிகமான அளவு ஆற்றலை மனம் கொண்டிருக்கத் தான் வேண்டும்.

தமது குழந்தைகள் அடியில் மாட்டிக் கொண்டு அழுது கொண்டிருந்தபோது, அசைக்கவும் முடியாத கார்களை தாய்மார்களால் எவ்வாறு உயரத் தூக்க முடியும்?

போர் முறைகளைக் கற்றுள்ள கராத்தே வீரர்கள் எவ்வாறு ஒரே கையால் பல அடுக்கு செங்கற்களை உடைத்துத் தகர்க்க முடியும்?

கீழை நாட்டு யோகிகளால் எவ்வாறு தமது இதயத் துடிப்பை விரும்பிய வண்ணம் மட்டுப்படுத்தவும், மிகவும் அதிகமான வலியை கண்ணிமைக்காமல் தாங்கிக் கொள்ளவும் முடியும்?

ஒருவேளை, உண்மையான பிரச்சனை எனக்குள்ளே இருக்கக் கூடும். ஒவ்வொரு நபரிடமும் உள்ள திறமைகள் பற்றிய எனது அவநம்பிக்கையில் இருக்கக்கூடும். ஒருவேளை, முன்னர் ஒரு கோடீஸ்வர வழக்கறிஞராக இருந்து இப்பொழுது துறவியாக மாறிவிட்டிருந்தவருடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த இந்த மாலைப்பொழுது, எனது வாழ்வைச் சிறப்பாக அமைத்துக் கொள்வதற்கென எனக்கு விடுக்கப்பட்டிருந்த விழித்து கொள்ள வைக்கும் அறைகூவலாகக் கூட இருக்கலாம்.

“ஆனால், அலுவலகத்தில் அமர்ந்து பயிற்சிகளைச் செய்வதா? ஜூலியன். எனது சக பங்காளர்கள், ஏற்கனவே நான் சற்று வினோதமானவன் என்று நினைக்கிறார்கள்,” என்றேன் நான்.

“யோகி இராமனும் அவர் உடன் வாழ்ந்த அனைத்து முனிவர்களும் ஒரு பழமொழியை அடிக்கடி பயன்படுத்துண்டு. அது பல தலைமுறைகளாக அவர்களிடையே வழங்கி வருவதாகும். நம்மிருவருக்குமே இன்று முக்கியமான விஷயமாக ஆகி விட்டுள்ள இதுபற்றி, இன்று உன்னிடம் கூறுவது எனது பேறு ஆகும். இப்பழமொழி பின்வருமாறு, ‘வேறு எவரோ ஒருவரை விடவும் உயர்வானவனாக இருப்பதில் எந்தவித மேன்மையும் கிடையாது. உண்மையான மேன்மையானது உனது பழைய உருவைவிடவும் உயர்வானவனாக இருப்பதில் தான் உள்ளது’. நான் இங்கு விளக்க விரும்புவதெல்லாம் இது தான். உனது வாழ்வை மேம்படுத்திக் கொள்ளவும், நீ பெற வேண்டியதை யெல்லாம் பெற்று வாழவும் விரும்பினால், நீ உனது சொந்தப் பத்தயத்தை ஓட்ட வேண்டும். பிறர் உன்னைப்பற்றி என்ன சொன்னாலும் அது ஒன்றும் பொருட்டல்ல. நீ உன்னைப் பற்றி உன்னிடமே என்ன சொல்லிக் கொள்கிறாயோ அது தான் முக்கியமானது. நீ செய்து கொண்டிருப்பது சரி என்று உனக்குத் தெரிந்திருக்கும் வரையில், பிறரது மதிப்பீடுகளைப் பற்றிக் கவலைப் படாதே. உனது மனச்சாட்சி மற்றும் இதயத்தைப் பொறுத்தவரையில் சரி என்று படுமானால், நீ என்ன செய்ய விரும்புகிறாயோ அதை நீ செய்யலாம். சரியானதைச் செய்வதற்கு ஒரு போதும் வெட்கப்படாதே. நீ எதை நல்லது என்று நினைக்கிறாய் என்பதைத் தீர்மானித்துக் கொள். பிறரது மதிப்பை வைத்து உனது சுய மதிப்பை ஒப்பிட்டு அளவிடுகின்ற அற்பமான பழக்கத்திற்குள் தயவுசெய்து இறங்கி விடாதே. யோகி இராமன் உபதேசித்தபடி பிறரது கனவுகளைப் பற்றி எண்ணமிட்டுக் கொண்டிருப்பதில் நீ செலவிடும் ஒவ்வொரு கணமும் உனது சொந்தக் கனவுகளிலிருந்து நேரத்தைக் குறைத்துக் கொண்டிருக்கிறாய்.”

இப்போது நேரம் நள்ளிரவு தாண்டி ஏழு நிமிடங்களாகியிருந்தது. வியத்தகு விதமாக, நான் சற்றும் களைப்பாக உணரவில்லை. இதைப்பற்றி நான் ஜூலியனிடம் கூறிய பொழுது, அவர் மறுபடியும் புன்னகைத்தார்.

"ஞானத் தெளிவு பெற்ற வாழ்வின் மற்றொரு கொள்கையை நீ உணர்ந்து கொண்டிருக்கிறாய். பெரும்பாலும், களைப்பு என்பது மனதின் உருவாக்கம் தான். கனவுகளோ, அவற்றை எட்டுவதற்கான சரியான வழிகளோ இல்லாமல் வாழ்ந்து கொண்டிருப்பவர்களை களைப்பானது ஆட்டிப் படைக்கிறது. நான் உனக்கு ஒரு எடுத்துக் காட்டு தருகிறேன். அலுவலகத்தில், மதிய வேளையில் உட்கார்ந்து உப்புச் சப்பற்ற வழக்கு விவரங்களை வாசித்துக் கொண்டிருக்கும்போது, உனது மனம் அவற்றிலிருந்து விலகிச் செல்வதையும், உறக்கம் வருவதுபோல் உணர்ந்ததையும் அறிந்திருக்கிறாயா?"

"சில சமயங்களில்," என்றேன் நான். இது தான் நான் வழக்கமாகச் செயல்படும் விதம் என்பதை வெளிக்காட்டிக் கொள்ள நான் விரும்பவில்லை. "நிச்சயமாக! நம்மில் பலரும் வேலை நேரத்தில் உறக்கம் கொள்வது போல உணர்வது வழக்கமான ஒன்று தானே."

"ஆனால், ஒரு நண்பன் உன்னைத் தொலைபேசியில் அழைத்து ஒரு கால்பந்தாட்டத்திற்குப் போகலாமா என்றாலோ, தனது கோல்ஃப் ஆட்டத்தைப் பற்றி உன்னிடம் அறிவுரை கேட்டாலோ, நீ நிச்சயமாக முழு விழிப்புடன் குதித்தெழுவாய் என்பதில் எனக்குச் சற்றும் ஐயமில்லை. உனது களைப்பு மொத்தமும் பறந்தே போய்விடும். நான் சொல்வது சரிதானே?"

"சரிதான் ஆலோசகரே!"

ஜூலியன் தொடர்ந்து கூறலானார்.... 'ஆக உனது களைப்பும், அயர்வும் உளரீதியிலான ஒரு உருவாக்கம் மட்டுமே ஒரு சலிப்பூட்டும் வேலையைச் செய்யும்போது தாங்கு கட்டை போலச் செயல்படுவதற்காக மனம் உருவாக்கியுள்ள ஒரு கெட்ட பழக்கம். இன்று எனது கதையில் நீ வெகு ஈடுபாட்டுடன் இருக்கிறாய். எனக்கு வெளிப்படுத்தப்பட்டுள்ள ஞானத்தைக் கற்றுக் கொள்வதற்கு மிகுந்த அக்கறையுடன் இருக்கிறாய். உனது ஆர்வமும், மனதின் கவனமும் உனக்கு சக்தியளிக்கின்றன. இன்று மாலை, உனது மனம் இறந்த காலத்திலும் இருக்கவில்லை, எதிர்காலத்திலும் இருக்கவில்லை. வெகு திடமாக, நிகழ்காலத்தில் நமது உரையாடலில் மையம் கொண்டு அது இருந்துள்ளது. உனது மனதைத் தொடர்ந்து நிகழ்காலத்தில் இருக்கும்படிச் செலுத்தியவண்ணம் இருந்தால் எப்போதுமே எல்லையற்ற சக்தியை நீ உன் வசம் கொண்டிருப்பாய் உன்னிடம் இருக்கும் கடிகாரம் எந்த நேரத்தைக் காட்டினாலும்."

நான் தலையை அசைத்து அவர் சொன்னதை ஒப்புக் கொண்டேன். ஜூலியனின் ஞானம், வெகு வெளிப்படையானதாக இருந்தது - இருந்தும் அது

என்னவோ இதுவரையில் எனக்குத் தோன்றவேயில்லை. பகுத்தறிவு என்பது ஒன்றும் அத்தனை சாதாரணமாகத் தென்படுகிற ஒன்று இல்லை போலும். நான் சிறுவனாக இருந்தபோது என் தந்தை என்னிடம் சொன்ன ஒன்று என் நினைவுக்கு வந்தது. **‘தேடுபவர்கள் மட்டுமே கண்டடைவார்கள்’**, அவர் என்னோடு இப்போது இருந்திருக்கலாமே என்று நான் விரும்பினேன்.

அத்தியாயம் 7 - செயல்பாட்டுச் சுருக்கம்
இரத்தினச் சுருக்கமாக ஜூலியனின் ஞானம்

குறியீடு

நற்பண்பு

- ❖ உனது மனதை வெற்றி கொள்

ஞானம்

- ❖ உனது மனதை வளர்த்தெடு – உன் எதிர்பார்ப்புகளுக்கு அப்பாலும் அது செழித்து மலரும்

- ❖ உனது வாழ்க்கையின் தரம் – உனது எண்ணங்களின் தரத்தால் நிர்ணயிக்கப்படுகிறது.

- ❖ தவறுகள் என்று எதுவுமே இல்லை – பாடங்கள் மட்டுமே உள்ளன. பின்னடைவுகளை தனிப்பட்ட விரிவாக்கம் மற்றும் ஆன்மீக வளர்ச்சி இவற்றுக்கான வாய்ப்புகளாகப் பார்.

செய்முறைகள்

- ரோஜாவின் இதயம்
- எதிர்ப்புச் சிந்தனை
- ஏரியின் இரகசியம்

மேற்கோள்

மகிழ்ச்சியின் இரகசியம் வெகு எளிமையானது. நீ உண்மையில் என்ன செய்ய விரும்புகிறாய் என்பதைக் கண்டுபிடித்து, அதைச் செய்வதில் உன் சக்தி முழுவதையும் செலுத்து. இதைச் செய்துவிட்டால், அபரிமிதம் உன் வாழ்வில் பெருகியோடும். உனது ஆசைகள் எல்லாமே சுலபமாகவும், நளினமாகவும் நிறைவேற்றப்படும்.

8

உங்கள் அகத்தீயைத் தூண்டி விடுதல்

உங்கள் மீதே நம்பிக்கை கொள்ளுங்கள். வாழ்நாள் முழுவதும் மகிழ்ச்சியுடன் வாழக்கூடிய ஒரு வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ளுங்கள். சாத்தியப் பாட்டுக்கான சின்னஞ்சிறிய அகப்பொறிகளை விசிறிவிட்டு சாதனை என்னும் பெருநெருப்பாக்கி உங்களது மிக உயர்வான மட்டத்தை எட்டுங்கள்.

- ஃபாஸ்டர் மேக்லெலன்

“இமயமலையின் உயரப் பகுதியில், யோகி இராமன் தனது ஆன்மீகச் சிறுகதையை என்னுடன் பகிர்ந்து கொண்ட அந்நாள், பல விதங்களிலும் இன்றைய தினத்தை உண்மையில் ஒத்திருந்தது” என்றார் ஜூலியன்.

“நிஜமாகவா?”

“எங்களது சந்திப்பு மாலையில் தொடங்கி இரவு வெகு நேரம் வரையில் தொடர்ந்தது. எங்களுக்கிடையில் ஒரு சிலிர்க்க வைக்கும் வேதியல் தொடர்பு இருந்தது. சுற்றியிருந்த காற்றுக் கூட மின் சக்தியால் சுருசுருவென்றது போல் தோன்றியது. நான் உன்னிடம் முன்பே கூறியது போல, நான் இராமனை முதன் முதலில் சந்தித்ததிலிருந்து, அவர் எனது சகோதரர் என்பது போலத்தான் நான் உணர்ந்தேன். எனக்குச் சகோதரர்களே கிடையாது. இன்றிரவு, இங்கு உன்னுடன் அமர்ந்து, உனது முகத்தில் தோன்றியுள்ள குழப்பத்தைப் பார்த்து ரசித்துக் கொண்டுள்ளபோது அதே போன்ற சக்தியையும், பிணைப்பையும் நான் உணர்கிறேன். மேலும், உன்னை எப்போதுமே எனது சின்னத்தம்பியாகத் தான் கருதி வந்திருக்கிறேன் என்பதையும் நான் உன்னிடம் சொல்லியாக வேண்டும். உண்மையாகச் சொல்வதானால், உன்னில் நான் நிறையவே என்னைப் பார்த்தேன்.”

“நீங்கள் ஒரு வியத்தகு வழக்கறிஞராக இருந்தீர்கள் ஜூலியன். உங்களது திறமையை என்னால் மறக்கவே முடியாது.”

தனது இறந்த காலத்தின் அருங்காட்சியகத்தைச் சுற்றிப் பார்ப்பதில் அவருக்கு ஈடுபாடு இல்லை என்பது தெளிவாகத் தெரிந்தது.

“ஜான், யோகி இராமனின் கதையின் அம்சங்களைப் பற்றித் தொடர்ந்து உன்னுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். ஆனால், அதைச் செய்வதற்கு

முன்னால், ஒன்றை நான் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும். தனிப்பட்ட, சொந்த மாற்றத்திற்கான, மிகவும் திறன் வாய்ந்த செய்முறைகளை நீ ஏற்கனவே கற்றுக் கொண்டுள்ளாய். அவற்றை தொடர்ச்சியாக விடாமல் பயன்படுத்தினால், அவை உனக்கு அற்புதங்களை விளைவித்துத் தரும். இன்றிரவு, நான் எனது இதயத்தைத் திறந்து, எனக்குத் தெரிந்த எல்லாவற்றையும் உனக்குச் சொல்கிறேன். அது எனது கடமையும் கூட ஆனால், நீ உனது கடமையாக, இந்த ஞானத்தை, இத்தகைய வழிகாட்டுதலைத் தேடிக் கொண்டிருக்கும் எல்லோருக்கும் கொடுப்பது எவ்வளவு முக்கியம் என்பதை முழுமையாகப் புரிந்து கொள்வதை நிச்சயப்படுத்திக் கொள்ள விரும்புகிறேன். நாம் இப்பொழுது மிகவும் கலவரப்பட்டுள்ள, கவலையில் ஆழ்ந்துள்ள உலகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எதிர்மறைச் சிந்தனை எல்லாவிடங்களிலும் பரவி, ஊடுருவியுள்ளது. நமது சமூகத்தில் உள்ள பலரும், சுக்கான் (கப்பல் திருப்பும் கருவி) இல்லாத கப்பல்களைப் போல மிதத்து கொண்டுள்ளனர். பாறைகள் நிறைந்துள்ள கடற்கரையில் மோதிச் சிதறி விடாமல் தம்மைப் பாதுகாக்கக்கூடிய ஒரு கலங்கரை விளக்கத்தைத் தேடிக் கொண்டிருக்கும், களைத்துப் போன ஆன்மாக்களாக அவர்கள் இருக்கிறார்கள். நீ ஒரு மாலுமியைப் போலச் செயல்பட வேண்டும்.

"சிவானா முனிவர்களின் செய்தியை, அது வேண்டியிருப்போர் எல்லோருக்கும் கொண்டு போய்க் கொடுப்பதற்கு, உன்மேல் நான் நம்பிக்கை வைக்கிறேன்."

இது பற்றி சிந்தனை செய்த பின்னர், இந்தப் பணியை ஏற்றுக் கொள்வதாக நான் ஜூலியனிடம் நம்பிக்கையுடன் உறுதியளித்தேன். அதன் பின்னர், அவர் உத்வேகத்துடன் தொடர்ந்து பேசலானார்.

"இந்தப் பயிற்சியின் எழில் என்னவென்றால், பிறரது வாழ்க்கையை மேம்படுத்துவதற்காக நீ உழைத்துக் கொண்டிருக்கும்போதே, உனது சொந்த வாழ்க்கை, அதன் அதி உயர பரிமாணங்களுக்கு உயர்த்தப்படும். அசாதாரணமாக வாழ்வதற்கான ஒரு புராதனத் திட்டத்தின் பேரில் இந்த உண்மை அமைந்துள்ளது."

"நான் கேட்கக் காத்துக் கொண்டிருக்கிறேன்".

"அடிப்படையில் இமயமலையின் முனிவர்கள், ஒரு எளிய விதியால் தமது வாழ்க்கைக்கு வழிகாட்டிக் கொண்டனர். யார் மிக அதிகமாகச் சேவை செய்கிறானோ அவனே மிக அதிகமாகப் பலனைப் பெறுகிறான். உணர்வு உடல், மனம் மற்றும் ஆன்மீக ரீதியில் அக அமைதி மற்றும் புற நிறைவு இவற்றைப் பெறுவதற்கான பாதை இது தான்."

பிறரைப் படிப்பவர்கள் அறிவாளிகள் ஆனால் தம்மைத் தாமே படிப்பவர்கள் ஞானம் பெற்றவர்கள் என்று எங்கேயோ நான் வாசித்திருந்தேன். இங்கு, முதல் முறையாக, தன்னைத் தானே உண்மையில் அறிந்திருந்த ஒரு மனிதனை, தனது உயர் உயிருருவை உணர்ந்திருந்த ஒரு மனிதனை நான் கண்டேன். தனது எளிமையான உடைகளில், இளம் புத்தரின் ஒரு பாதிப் புன்முறுவல் மென்மையாய் இதழ்களில் குடியிருக்க ஜூலியன் மான்டில் எல்லாச் சம்பத்துகளையும் பெற்றிருப்பவராகத்

தோன்றினார். மிகச் சரியான உடல் நலன், மகிழ்ச்சி மற்றும் எல்லாவற்றுக்கும் மேலாக, பிரபஞ்சத்தில் அவரது பங்கு பற்றிய ஒரு தெளிவான உணர்வுநிலை ஆகியவை அவரிடம், இருந்தும் அவருக்குச் சொந்தமானது என்று எதுவுமே இல்லை.

"இப்போது, **கலங்கரை விளக்கம்** பற்றிக் கவனிக்கலாம்," என்றார் ஜூலியன், காரியத்தில் குறியாக.

"யோகி இராமனின் கதையில் அது எப்படிப் பொருந்துகிறது என்று தான் நான் யோசித்துக் கொண்டிருந்தேன்."

"நான் விளக்க முயற்சிக்கிறேன்," என்றார் ஜூலியன். இன்ப உலகைத் துறந்து விட்ட ஒரு வழக்கறிஞரைப் போல அல்லாமல், நன்கு பயிற்சி பெற்ற ஒரு பேராசிரியரைப் போல அவர் பேசினார். "மனம், ஒரு செழிப்பான தோட்டம் போன்றது என்பதை நீ இப்போது கற்றுக் கொண்டுள்ளாய். அது நன்கு வளர வேண்டுமானால், நீ அதைத் தினமும் நன்கு பேண வேண்டும். தூய்மையற்ற எண்ணங்கள் மற்றும் செயல்களாகிய களைகள் உனது மனமெனும் தோட்டத்திலே வேரூன்றுமாறு ஒரு போதும் விட்டு விடாதே, உனது மனதின் வாசலிலே காவல் நில். அதை ஆரோக்கியத்துடனும், வலிமையுடனும் வைத்துக் கொள். அதை மட்டும் செயல்பட நீ அனுமதித்தால், உன் வாழ்வில் அற்புதங்களை அது விளைவிக்கும்."

தோட்டத்தின் நடுவில் ஒரு அற்புதமான கலங்கரை விளக்கம் நின்று கொண்டிருந்தது உனக்கு நினைவிருக்கும்.

"ஞானத்தெளிவு பெற்ற வாழ்க்கையின் மற்றொரு பழைமையான விதியை இந்தக் குறியீடு நினைவூட்டும். வாழ்க்கையின் நோக்கம் என்பது, நோக்கமுள்ள ஒரு வாழ்க்கை. உண்மையிலேயே தெளிவு பெற்ற மனிதர்கள், வாழ்க்கையிலிருந்து, உணர்வு, பொருள், உடல், மற்றும் ஆன்மரீதியாக தமக்கு என்ன வேண்டும் என்று அறிந்திருக்கிறார்கள், உன் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்துக்கும், தெளிவாக வரையறுக்கப்பட்ட முதன்மைத் தேவைகள் மற்றும் இலக்குகள், ஒரு கலங்கரை விளக்கத்தைப்போல பயன்படும். கடல் அலைகள் சீறிப்பாயும்போது அவை உனக்கு வழிகாட்டுதலையும் பாதுகாப்பையும் கொடுக்கும். தாம் சென்றுகொண்டிருக்கும் பாதையைப் புரட்சிகரமாக மாற்றி அமைத்துக் கொண்டால் எவராலும் தமது வாழ்க்கையையும் மாற்றி அமைத்துக் கொள்ள முடியும் என்பதைக் கண்டு கொள். ஆனால், எங்கே போய்க் கொண்டிருக்கிறோம் என்பது கூட உனக்குத் தெரியவில்லையென்றால் அங்கே போய்ச் சேர்ந்துவிட்டோம் என்பது உனக்கு எப்படித் தெரியும்?"

யோகி இராமன் இந்தக் கொள்கையைத் தன்னுடன் பரிசீலனை செய்து பார்த்த காலத்திற்கு ஜூலியன் என்னை இட்டுச் சென்றார். முனிவர் சொன்ன அதே வார்த்தைகளை அவர் நினைவு படுத்திக்கொண்டார்.

‘வாழ்க்கை வேடிக்கையானது’ என்றார் யோகி இராமன். ‘ஒருவர் எவ்வளவு குறைவாக வேலை செய்கிறாரோ, அவ்வளவு அதிகமாக மகிழ்ச்சியை அனுபவிப்பதற்கான வாய்ப்பைப் பெறுவார் என்று நாம் நினைக்கலாம். ஆனால், மகிழ்ச்சியின் உண்மையான ஆதாரம் ஒரே ஒரு வார்த்தையில் அடங்கிவிடும். சாதனை தான் நிரந்தரமான மகிழ்ச்சி, உனது இலக்குகளை எட்டுவதற்காக நிதானமாக வேலை செய்வதிலும், உனது வாக்கையின் நோக்கம் இருக்கும் திசையில் தன்னம்பிக்கையுடன் முன்னே செல்வதிலும் அது இருந்து வருகிறது. உனக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் அகத்தீயை தூண்டுவதன் இரகசியம் இது தான். சாதனையையும், சாதிப்பதையுமே குறிக்கோளாகக் கொண்டுள்ள உனது சமூகத்திலிருந்து பல்லாயிரக்கணக்கான மைல் தொலைவு பயணித்து வந்துள்ளாய். இமயமலையின் உயர்ந்த பகுதிகளில் வாழ்ந்து வருகின்ற ஒரு சிறு குழுவாக உள்ள துறவிகளுடன் பேசுவதற்காகவே வந்துள்ளாய். இவ்வளவு தூரம் வந்துவிட்டு. மகிழ்ச்சியின் மற்றொரு மறையாத இரகசியம், சாதனையில் கண்டுகொள்ளப்படலாம் என்று தெரிந்து கொள்கிறாய். இது சற்றே முரண்பாடாகத் தோன்றும் என்பது எனக்கு நன்றாகவே புரிகிறது. ஆனால், இது தான் உண்மை என்று யோகி இராமன் சொன்னதை ஜூலியன் எனக்குச் சொன்னார்.

“வேலைக்கு அடிமையாகியுள்ள துறவிகளா?”

“அதற்கு நேர்மாறானவர்கள். இந்த முனிவர்கள் வெகு அதிகமாக உருவாக்கும் திறன் கொண்டவர்களாக இருந்தபோதிலும், அதில் அவர்கள் வெறித்தனமான ஈடுபாட்டைக் கொண்டிருக்கவில்லை. மாறாக, அவர்கள் பணி செய்யும் பாங்கு, ஒருவித ஜென் முறையில், அமைதியானதும், நன்கு கவனம் செலுத்தி அதிலேயே மையம் கொண்டு இருப்பதாகவும் இருந்தது.”

“அது எப்படி?”

“அவர்கள் செய்த ஒவ்வொரு பணியிலும் ஒரு நோக்கம் இருந்தது. நவீன உலகிலிருந்து விலகி, வெகு உயர்வான ஆன்மீக வாழ்க்கையை அவர்கள் வாழ்ந்த போதிலும், வெகு திறமைசாலிகளாகவே இருந்தனர். சிலர், தத்துவக் கட்டுரைகளைச் சரிபார்த்து மேம்படுத்துவதில் தமது நாட்களைச் செலவிட்டனர். வேறு சிலரோ, வெகு அற்புதமான கவிதைகளை எழுதினர். அக்கவிதைகள் அவர்கள் அறிவுத் திறனுக்குச் சவாலாக அமைந்து உருவாக்கும் திறனைப் புதுப்பித்தன. மற்றும் சிலரோ, முழுமையான தியானத்தின் மௌனத்திலே தமது நேரத்தைக் கழித்தனர். அவ்வாறு தியானத்தில் ஆழ்ந்திருந்த போது, பத்மாசனத்தில் வீற்றிருக்கும் பண்டைய சிலைகளைப் போல ஒளியுடன் தோற்றமளித்தனர். சிவானாவின் முனிவர்கள் தமது நேரத்தை வீணடிப்பதில்லை. அவர்களது ஒட்டுமொத்த உணர்வு நிலையானது. அவர்களது வாழ்க்கைக்கு ஒரு நோக்கமும், நிறைவேற்றுவதற்கான கடமையும் இருந்தது என்று தெரியப்படுத்தியிருந்தது.

“இது தான் யோகி இராமன் என்னிடம் சொன்னது. ‘இங்கு சிவானாவில், நேரம் அசைவற்று நின்று கொண்டிருப்பது போலத் தோன்றுகிறது. உடைமைகள் ஏதுமற்ற எளிய துறவிகளின் ஒரு சிறு குழுவிற்கு எதைத்தான் சாதிப்பதற்கான தேவையோ, எதிர்பார்ப்போ இருக்கக் கூடும் என்று நீ யோசிக்கலாம். ஆனால், சாதனை என்பது பொருள்சார்ந்த ஒன்றாகத் தான் இருக்க வேண்டும் என்பதில்லை. என்னைப் பொறுத்தளவில், எனது இலக்குகள், மனஅமைதி, சுய ஆளுமை மற்றும் ஞானம் பெறுதல் என்பவைதான். எனது வாழ்வின் இறுதிக்குள் இந்த இலக்குகளை எட்டுவதற்கு நான் தவறிவிட்டால், நிச்சயமாக, நிறைவடையாமலும், அதிருப்தியுடனும் தான் நான் மரணமடைவேன் என்று நான் கூறுகிறேன்.”

தனது சிவானா ஆசான்களில் ஒருவர், தனது சொந்த மரணத்தைப் பற்றிப் பேசுவதைக் கேட்பது அது தான் முதல் முறை என்று ஜூலியன் என்னிடம் கூறினார்.

“மேலும், யோகி இராமன், இதை எனது முகபாவத்திலிருந்து புரிந்து கொண்டார். ‘நீ கவலைகொள்ளத் தேவையில்லை, நண்பா! நான் ஏற்கனவே நூறு ஆண்டுகளைக் கடந்துவிட்டேன். சீக்கிரம் சாகவேண்டும் என்பது எனது திட்டமல்ல. நான் சொல்ல வந்ததெல்லாம், உனது வாழ்வின் பாதையில் என்ன இலக்குகளை எட்டுவதற்கு விரும்புகிறாய் என்பது உனக்குத் தெளிவாகத் தெரிந்திருந்தால், அவை பொருள் சார்ந்தவையோ, உணர்வு, உடல் அல்லது ஆன்ம ரீதியானவையோ, அவை எதுவாக இருந்தாலும், அவற்றைச் சாதிப்பதில் உனது நாட்களைச் செலவிட்டால் எல்லையற்ற இன்பத்தை நீ இறுதியில் பெறுவாய் என்பது தான். உனது வாழ்க்கை என்னுடையதைப் போலவே வெகு இன்பகரமாக இருக்கும். ஒரு மகோன்னதமான உண்மை நிலையை, நிதர்சனத்தை நீ தெரிந்து கொள்வாய். ஆனால், உனது வாழ்வின் நோக்கம் உனக்குத் தெரிந்திருக்க வேண்டும். பின்னர் அந்நோக்கத்தை, தொடர்ந்து வரும் பொருத்தமான செயல்பாட்டின் வாயிலாக நிஜமாக்க வேண்டும். முனிவர்களாகிய நாங்கள் இதை **‘தர்மா’** என்று அழைக்கிறோம். இது, ‘வாழ்க்கையின் நோக்கம்’ என்பதற்கான சமஸ்கிருதச் சொல் ஆகும்.”

“எனது தர்மாவை நிறைவேற்றுவதால், வாழ்வு முழுவதற்குமான திருப்தி ஏற்படுமா?” என்று நான் கேட்டேன்.

“வெகு நிச்சயமாக! தர்மாவிலிருந்து, அக நல்லிணக்கமும், நிலைத்த திருப்தியும் எழுகின்றன. நம்மில் ஒவ்வொருவரும் இப்பூவுலகில் நடமாடும் பொழுது ஒரு மகத்தான காவிய நாயகனுடையதைப் போன்ற கடமை நமக்கு உள்ளது என்ற பண்டைய கருத்தின் அடிப்படையில் தர்மா என்பது அமைந்துள்ளது. இந்த வாழ்க்கைப் பணியைச் செய்து முடிப்பதற்குத் தேவையான திறன்கள். தனித்தன்மை வாய்ந்த திறமைகள் ஆகியன நமக்குத் தரப்பட்டுள்ளன. இதில் முக்கிய விஷயம், மையக் கருத்து என்னவென்றால், அவற்றைக் கண்டு கொள்வது தான். திறன்களை இனம் கண்டு கொள்வதன் வாயிலாக, உன் வாழ்வின் பிரதான நோக்கத்தைக் கண்டு கொள்வது நிகழும்.”

“அதாவது, முன்னர் நீங்கள் குறிப்பிட்ட, அபாயத்தை துணிவுடன் எதிர்கொள்வதைப் போல இது உள்ளது,” என்று நான் குறுக்கிட்டுச் சொன்னேன்.

“அப்படியும் இருக்கலாம், அப்படி இல்லாமலும் இருக்கலாம்.”

“எனக்குப் புரியவில்லை.”

“ஆம், உன்னால் எதை மிகச் சிறப்பாகச் செய்ய முடியும் என்று கண்டு கொள்ளும் முயற்சியில், ஒரு சில அபாயங்களை எதிர்கொள்ளும்படி நீ தள்ளப்படுவது போலத் தோன்றக் கூடும். அதன் வாயிலாக, உனது வாழ்வின் நோக்கத்தின் சாராம்சத்தையும் அறிய வேண்டிவரும். தாம் உயிர் வாழ்வதற்கான உண்மையான நோக்கத்தைக் கண்டுபிடித்துவிட்ட மாத்திரத்தில், பலரும் தமது முன்னேற்றத்தைத் தடை செய்து வந்த வேலைகளை விட்டு விலகியுள்ளனர். சுய பரிசீலனை மற்றும் ஆன்மத் தேடல் இவற்றோடு கூடவே வருகிற ஒரு அபாயம் எப்போதுமே உள்ளது. ஆனால், உன்னையும், உனது வாழ்வின் உயர் நோக்கத்தையும் கண்டு கொள்வதில் ஒருபோதும் எந்தவிதமான அபாயமும் கிடையாது. சுய அறிவு என்பது தான் சுயதெளிவின் அடிப்படை மரபணுவாகும். உண்மையில் அது ஒரு மிகவும் நல்ல முக்கியமான விஷயம் ஆகும்.”

“உங்களது தர்மா என்ன, ஜூலியன்?” என்று நான் எனது கொழுந்து விட்டெரியும் ஆர்வத்தை மறைத்துக் கொண்டு, வெகு சாதாரணமாகக் கேட்டேன்.

“என்னுடையது வெகு எளிமையானது! பிறருக்குத் தன்னலமின்றி சேவை செய்தல். உனது நேரத்தை, ஒரு சோம்பேறியைப் போல உறங்குவதிலோ, ஓய்வு எடுப்பதிலோ செலவழிப்பதால் உண்மையான மகிழ்ச்சியை ஒரு போதும் கண்டு கொள்ளமாட்டாய் என்பதை நினைவில் கொள். **பெஞ்சமின் டிஸ்ரேலி** சொன்னது போல, ‘வெற்றியின் இரகசியம், நோக்கத்தின் இடைவிடாத தன்மையில் உள்ளது. நீ சாதிக்க வேண்டும் என்று உன்னையே அர்ப்பணித்துக் கொண்டுள்ள, தகுதியான இலக்குகளைப் பற்றி சிந்திப்பதிலும். பின்னர், அவற்றை நிறைவேற்றுவதற்கான செயல்களில் இறங்குவதன் வாயிலாகவும் தான் நீ தேடிக் கொண்டிருக்கும் மகிழ்ச்சி வரும்’. அதாவது, மிகவும் அதிகமான முக்கியமான விஷயங்களை, முக்கியத்துவமே இல்லாதவற்றுக்காகத் தியாகம் செய்வது என்பது ஒருபோதும் செய்யப்படக் கூடாது என்று கூறுகின்ற தத்துவத்தின் நேரடியான பயன்பாடு இது தான். யோகி இராமனின் கதையில் உள்ள கலங்கரை விளக்கம், தெளிவாக வரையறுக்கப்பட்ட, உயர்நோக்கம் கொண்ட இலக்குகளை அமைப்பதன் சக்தியைப் பற்றி உனக்கு எப்போதுமே நினைவூட்டிய வண்ணம் இருக்கும். அதைவிடவும் முக்கியமாக, அந்த இலக்குகளை நோக்கிச் செயல்படுவதற்கான குணாம்சங்களின் சக்தியையும் அது உனக்கு நினைவூட்டும்.”

அடுத்து வந்த சில மணி நேரத்தில் மிகவும் நன்றாக முன்னேறியுள்ள, தமது திறன்களை முழுமையாகப் பயன்படுத்தி வருகிற நபர்கள் அனைவருமே தமது

திறன்களை ஆய்வு செய்வதிலும், தமது தனிப்பட்ட நோக்கத்தை வெளிக் கொணர்வதிலும், பின்னர் தமது வாழ்க்கையின் நோக்கத்தை அடையும் திசையில் தமது மனிதத் திறன்களைப் பயன்படுத்துவதிலும் உள்ள முக்கியத்துவத்தைப் பற்றி முழுமையாக உணர்ந்து கொண்டவர்களே என்பதை நான் ஜூலியனிடமிருந்து கற்றுக் கொண்டேன். சிலர், மனித குலத்திற்கு மருத்துவர்களாக இருந்து தன்னலமற்ற சேவை செய்தனர். வேறு சிலரோ, அதையே கலைஞர்களாக இருந்து செய்தனர். சில பேர், தம்மால் வெகு சிறப்பாகப் பேசவோ, எழுதவோ முடியும் என்று கண்டு கொள்கின்றனர். இவர்கள், அற்புதமான ஆசான்களாக ஆகின்றனர். பின்னும் சிலரோ தாம் உலகிற்கு விட்டுச் செல்லக் கூடிய சொத்து, தொழில் அல்லது அறிவியல் துறைகளிலான புதிய கண்டு பிடிப்புகள் தாம் என்பதை உணர்ந்து கொள்கின்றனர். இங்கு முக்கியமான மையக் கருத்து என்னவென்றால், உனக்கே உரிய காவியத் தலைவனின் தன்மை கொண்ட வாழ்க்கைத் தொழிலைக் கண்டு கொள்வதற்கான தொலைநோக்கையும், ஒழுங்குக் கட்டுப்பாட்டையும் கொண்டிருப்பது தான். மேலும், அதை நீங்கள் நிறைவேற்றும் பொழுது பிறருக்கும் அது சேவை செய்வதாக இருப்பதை உறுதிப்படுத்திக் கொள்வதும் முக்கியமாகும்."

"இது ஒரு விதமான, இலக்கு நிர்ணயித்தலா?"

"இலக்கு நிர்ணயித்தல் தான் இதன் துவக்கப்புள்ளி. உனது நோக்கங்களையும் இலக்குகளையும் வரைபடமிட்டுத் தெளிவுபடுத்துவதால், உருவாக்கும் சக்திகள் ஊற்றெடுத்து வெளிப்படுகின்றன. அவை, உன்னை உனது நோக்கத்திற்கான பாதையில் கொண்டு சேர்க்கின்றன. நீ இதை நம்பினால் நம்பு, நம்பாவிட்டால் விடு. ஆனால், யோகி இராமனும் மற்ற முனிவர்களும் இலக்குகள் பற்றி வெகு தெளிவாக இருந்தனர்."

"நீங்கள் விளையாட்டுக்குச் சொல்கிறீர்கள். வெகுவாகச் செயல்திறன் கொண்ட முனிவர்கள் இமயமலையின் உயரப்பகுதிகளின் ஆழத்தில் மறைந்து வாழ்ந்து கொண்டு, இரவெல்லாம் தியானம் செய்து கொண்டும், பகலெல்லாம் இலக்குகள் நிர்ணயித்துக் கொண்டும் உள்ளனர். ஆஹா, இது எனக்குப் பிடித்திருக்கிறது!" என்றேன் நான், கிண்டலாக.

"ஜான், எப்போதுமே எதையும் விளைவுகளைக் கொண்டே மதிப்பீடு செய்! என்னைப் பார்! சில சமயங்களில் கண்ணாடியில் பார்க்கும் போது, என்னையே என்னால் அடையாளம் கண்டுகொள்ளக் கூட முடிவதில்லை. ஒரு காலத்தில் நிறைவளிக்காத எனது வாழ்க்கை இன்று புதிய, மர்மமான, உற்சாகமும் உணர்ச்சியும் ஊட்டுகிறது. ஒரு செழிப்பான வாழ்வாக மாறியுள்ளது. நான் மறுபடி இளமையுடன் இருக்கிறேன். துடிப்பான உடல் நலனை ரசித்து அனுபவித்துக் கொண்டுள்ளேன். நான் உண்மையில் மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். இன்று உன்னுடன் பகிர்ந்து கொண்டுள்ள ஞானமானது மிகவும் சக்தியுள்ளது, முக்கியமானது, உயிரூட்டுவது. எனவே, நீ அதைத் திறந்த மனதுடன் பார்த்தாக வேண்டும்"

“நான் திறந்த மனதுடன் தான் இருக்கிறேன். ஜூலியன், உண்மையிலே இருக்கிறேன். நீங்கள் கூறிய எல்லாமே மிகச் சரியாக உள்ளன. மிகவும் அர்த்தமுள்ளவையாக இருக்கின்றன. இருந்தபோதிலும், அந்தச் செய்முறைகளில் ஒரு சில சற்றே வினோதமாகத் தான் உள்ளது போலத் தோன்றுகின்றன. ஆனால், அவற்றை முயற்சி செய்து பார்ப்பதாக நான் வாக்களித்துள்ளேன். அவ்வாறே செய்வேன். இந்தத் தகவல் மிகுந்த சக்தியுள்ளதாக இருக்கிறது என்பதை நான் ஒப்புக் கொள்கிறேன்”

“பிறரைக் காட்டிலும் அதிக தூரம் நான் கண்டுள்ளேன் என்றால், மாபெரும் ஆசான்களின் தோள்களின் மீது நான் ஏறி நின்றிருக்கிறேன் என்பதால் தான்,” என்றார் ஜூலியன், மிகுந்த பணிவுடன். “இதோ மற்றுமொரு எடுத்துக்காட்டு. யோகி இராமன் ஒரு கைதேர்ந்த வில்வித்தை வீரர். அம்பு விடுவதில் உண்மையிலேயே கைதேர்ந்தவர், தெளிவாக, வரையறுக்கப்பட்ட இலக்குகளை, வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திற்கும் நிர்ணயிப்பதன் முக்கியத்துவம் பற்றிய தனது தத்துவத்தை விளக்க, ஒரு செயல் முறை விளக்கத்தைச் செய்து காட்டினார். அதை என்னால் ஒருக்காலும் மறக்கவே முடியாது.

“நாங்கள் உட்கார்ந்து கொண்டிருந்த இடத்துக்கு அருகில் ஒரு பிரம்மாண்டமான ஓக் மரம் இருந்தது. முனிவர், தான் வழக்கமாக அணிந்து கொண்டிருந்த ரோஜா மாலையிலிருந்து ஒரு மலரை எடுத்து, மரத்தின் தண்டுப் பகுதியின் நடுவில் செருகினார். பின்னர் தான் தூரத்து மலைப்பகுதிகளுக்குச் செல்லும் போது எப்போதும் கூட எடுத்துச் செல்லும் பெரிய பையிலிருந்து மூன்று பொருள்களை வெளியில் எடுத்தார். அன்றைய தினம் நாங்கள் ஒரு மலை மீது ஏறி வெகுதூரம் சென்றிருந்தோம். அவர் முதலில் வெளியே எடுத்த பொருள் அவருக்குப் பிடித்தமான, வில் – அது நறுமணமிக்க, கெட்டியான சந்தனக் கட்டையால் செய்யப்பட்டிருந்தது. இரண்டாவது பொருள் ஒரு அம்பு. மூன்றாவது பொருள் ஒரு தூய வெண்ணிற கைக்குட்டை ஒரு காலத்தில் நீதிபதிகளையும், ஜூரிக்களையும் என்மீது மதிப்பு கொள்ளச் செய்ய இது போன்ற கைக்குட்டைகளை எனது விலையுயர்ந்த சூட்டுகளின் பாக்கெட்டில் செருகி வைத்துக் கொள்வதுண்டு,” என்றார் ஜூலியன் மன்னிப்புக் கோரும் தோரணையில்.

பின்னர் யோகி இராமன் ஜூலியனிடம், அந்தக் கைக்குட்டையால் தனது கண்களைக் கட்டிவிடச் சொன்னார்.

“அந்த ரோஜாவிலிருந்து நான் எவ்வளவு தூரத்தில் இருக்கிறேன்?” என்று யோகி இராமன் தனது மாணவனிடம் கேட்டார்.

“ஒரு நூறு அடி தூரம் இருக்கும்,” என்று ஜூலியன் சொன்னார்.

“நான் இந்தப் புராதனக் கலையாகிய வில்வித்தையைத் தினமும் பயிற்சி செய்வதை எப்போதாவது பார்த்திருக்கிறாயா?” என்றார் யோகி. என்ன பதில் வரக்கூடும் என்று அவருக்கு நன்றாகவே தெரியும்.

“சுமார் முன்னூறு அடி தூரத்தில் இருந்து கொண்டு கூட மிகச் சரியாக மையத்தைக் குறிவைத்து நீங்கள் அடிப்பதை நான் பார்த்திருக்கிறேன். இந்தத் துரத்தில் ஒருமுறை கூட நீங்கள் குறிதவறக் கண்டதில்லை” என்றார் ஜூலியன், பொறுப்பாக.

பின்னர், கண்கள் கட்டப்பட்ட நிலையிலேயே, கால்களைத் திடமாகப் பூமியில் ஊன்றியபடி, தனது சக்தி முழுவதையும் திரட்டி ஆசான் வில்லை வளைத்து ரோஜாவைக் குறிவைத்து அம்பைவிட்டார். அம்பும் ஓக் மரத்தில் “தட்” டென்ற ஒலியுடன் குத்தி நின்றது. ரோஜாவிலிருந்து வெகு தொலைவிலே தான் அது தாக்கியிருந்தது.

“உங்களது மந்திரசக்தி வாய்ந்த திறமைகளை வெளிக்காட்டப் போகிறீர்கள் என்று நான் நினைத்தேன். என்னாயிற்று, யோகி இராமன்?”

“ஒரே ஒரு காரணத்திற்காகத் தான் நாம் இந்தத் தனியிடத்திற்குப் பயணித்து வந்துள்ளோம். எனது உலக ஞானம் எல்லாவற்றையும் உன்னிடம் வெளிப்படுத்த நான் ஒப்புக் கொண்டுள்ளேன். இன்றைய செய்முறை விளக்கத்தின் நோக்கம், உனது வாழ்வில் தெளிவாக வரையறை செய்யப்பட்ட குறிக்கோள்களை நிர்ணயித்துக் கொள்வதன் முக்கியத்துவம் பற்றியும், நீ எங்கே போய்க் கொண்டிருக்கிறாய் என்பதை மிகச் சரியாகத் தெரிந்து கொள்ள வேண்டியது பற்றியுமான எனது அறிவுரையை மேலும், வலியுறுத்துவது தான். நீ இப்போது பார்த்தது, தமது இலக்குகளை எட்டவேண்டும் என்றும், தமது வாழ்வின் நோக்கத்தை நிறைவேறச் செய்ய வேண்டும் என்றும் விரும்பும் எவருக்கும் மிக முக்கியமான கொள்கை ஒன்றை உறுதிப்படுத்துகிறது. உன்னால் பார்க்க முடியாத ஒரு இலக்கை உன்னால் ஒரு போதும் தாக்க முடியாது. மேலும், அதிக மகிழ்ச்சியுடன் இருப்பது பற்றியும், கூடுதல் உயிர்சக்தியுடன் வாழ்வது பற்றியும், வெகு அதிகமாக உணர்ச்சி வேகத்தைக் கொண்டிருப்பது பற்றியும் கனவு காண்பதில் மனிதர்கள் தமது வாழ்க்கை முழுவதையும் செலவிடுகின்றனர். இருந்தும், மாதத்திற்கு ஒருமுறை பத்து நிமிட நேரம், ஒதுக்கி வைத்து தமது இலக்குகளை எழுதி வைப்பது, மற்றும் தமது வாழ்வின் பொருள் பற்றி, தமது தர்மாவைப் பற்றி ஆழமாகச் சிந்திப்பது இவற்றின் முக்கியத்துவத்தைக் கவனிப்பதில்லை. இலக்கு நிர்ணயிப்பது என்பது உன் வாழ்க்கையை மகோன்னதமாகச் செய்யும். உனது உலகம் மேலும் செழிப்பானதாகவும், அதிக மகிழ்ச்சியுடையதாகவும் அதிக அற்புதமானதாகவும் ஆகிவிடும்.”

“நமது மனோ, உடல் மற்றும் ஆன்ம உலகில் நாம் விரும்புகிற விஷயங்களுக்காக தெளிவாக வரையறுக்கப்பட்ட இலக்குகளை நிர்ணயிப்பது என்பது அவற்றை உண்மையில் பெறுவதற்கு மிகவும் முக்கியம் என்று நமது முன்னோர்கள் நமக்குத் கற்பித்துள்ளனர். நீ வாழ்ந்து வந்துள்ள உலகில், மக்கள் பணம் மற்றும்

பொருள் சார்ந்த இலக்குகளை அமைக்கின்றனர். இதைத் தான் நீங்கள் மதிக்கிறீர்கள் என்றால், இதில் தவறு ஏதுமில்லை. எனினும், சுய ஆளுமை மற்றும் அகத் தெளிவு இவற்றைப் பெறுவதற்கு, வாழ்வின் பிற பகுதிகளில் கூட திடமான இலக்குகளை அமைக்க வேண்டும். இப்போது நான் விரும்புகிற மன அமைதி, ஒவ்வொரு நாளுக்குள்ளும் நான் கொண்டு வருகிற சக்தி, என்னைச் சுற்றிலும் உள்ளவர்களுக்கெல்லாம் நான் அள்ளி வழங்கும் அன்பு இவை பற்றியெல்லாம், திடமான வரையறை செய்யப்பட்ட குறிக்கோள்களை நான் வைத்துள்ளேன் என்றால் உனக்கு வியப்பாக இருக்குமா? இலக்கு நிர்ணயிப்பது என்பது, பொருள் சார்ந்த கவர்ச்சிகளால் நிறைந்துள்ள உலகில் வாழ்கின்ற உன் போன்ற பிரபலமான வழக்கறிஞர்களுக்கு மட்டும் உள்ளது அல்ல. தமது அக மற்றும் புற உலகங்களின் தரத்தை மேம்படுத்திக் கொள்ள விரும்பும் எவரும், ஒரு காகிதத்தை எடுத்துத் தமது வாழ்க்கை இலக்குகளை எழுதுவது நலம். இக்காரியம் செய்து முடிக்கப்பட்ட அதே தருணத்தில் இயற்கைச் சக்திகள் செயல்படத் தொடங்கி அக்கனவுகளை நனவாக மாற்றத் தொடங்குகின்றன.''

நான் கேட்டுக் கொண்டிருந்தவை என்னைப் பெரு வியப்பிலாழ்த்தின. உயர்நிலைப் பள்ளியில் ஒரு கால் பந்தாட்டக் காரனாக நான் இருந்த போது, ஒவ்வொரு ஆட்டத்திலிருந்தும் நாங்கள் பெற விரும்பியது என்பதை அறிந்திருப்பதன் முக்கியத்துவம் பற்றி எங்கள் பயிற்சியாளர் இடைவிடாது பேசியிருக்கிறார். 'உங்களது விளைவைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள்,' என்பதே அவரது வேதவாக்காக இருந்தது. எங்களை வெற்றிக்கு இட்டுச் செல்லவல்ல ஒரு தெளிவான விளையாட்டுத் திட்டம் இல்லாமல் விளையாட்டுத் திடலுக்குள் நுழைவது பற்றி எங்கள் குழு கனவு கூடக் காணாது! ஆனால், நான் பெரியவனாக வளர்ந்த பின்னர், எனது சொந்த வாழ்க்கைக்கான ஒரு விளையாட்டுத் திட்டத்தை ஏற்படுத்த நான் ஏன் நேரம் ஒதுக்கவில்லை என்று நான் இப்போது நினைத்துப் பார்த்தேன். ஒரு வேளை ஜூலியனும், யோகி இராமனும் சொல்வதில் ஏதேனும் விஷயம் இருக்கக் கூடும்.

"ஒரு காகிதத்தை எடுத்து அதில் நமது குறிக்கோள்களை எழுதுவதில் என்ன முக்கியத்துவம் இருக்கிறது? இத்தகைய ஒரு சாதாரண செயலால் எவ்வாறு இவ்வளவு பெரிய வேறுபாட்டை ஏற்படுத்த முடியும்?" என்று நான் கேட்டேன்.

ஜூலியன் பெரு மகிழ்ச்சி கொண்டார். "நீ காட்டும் ஆர்வம் எனக்கு உற்சாகமூட்டுகிறது ஜான்!. வெற்றிகரமான வாழ்க்கைக்கு உற்சாகம் என்பது முக்கியமான உட்பொருள்களில் ஒன்றாகும். உன்னிடம் உற்சாகம் குறையாமல் இருப்பதைக் கண்டு நான் மகிழ்கிறேன். ஒரு சாராசரி நாளில் நாம் ஒவ்வொருவரும் சுமார் 60,000 எண்ணங்களை எண்ணுகிறோம் என்று நான் உனக்கு முன்னரே கற்றுக் கொடுத்திருக்கிறேன்.

''உனது ஆசைகள் மற்றும் குறிக்கோள்களை ஒரு காகிதத்தில் எழுதுவதன் மூலம், உனது ஆழ்மனதிற்கு ஒரு சிவப்புக் கொடியைக் காட்டுகிறீர்கள். அதாவது, மீதமுள்ள 59,999 எண்ணங்களை விடவும், இந்த எண்ணங்கள் முக்கியமானவை என்று அதற்கு

உணர்த்துகிறீர்கள். அதன் பின்னர், உங்களது தலைவிதியை உண்மையாக்குவதற்குத் தேவையான அனைத்து வாய்ப்புகளையும் ஒரு செலுத்தப்பட்ட ஏவுகணை போலத் தேடிக் கண்டடைய உங்கள் மனம் தொடங்கிவிடும்."

"இது உண்மையில் ஒரு அறிவியல் ரீதியான செயல்பாடு. நம்மில் பெரும்பாலோருக்கு இது பற்றி தெரிவதே இல்லை."

"எனது சக பணியாளர்களில் சிலர் இலக்கு நிர்ணயிப்பதில் பெயர் பெற்றவர்கள். இதைப் பற்றிச் சிந்திக்கும்போது, எனக்குத் தெரிந்தளவில், பணவிஷயத்தில் மிக வெற்றிகரமானவர்கள் அவர்கள். ஆனால், அவர்கள் அதிக சமநிலை கொண்டுள்ளவர்கள் என்று நான் கருதவில்லை," என்றேன் நான்.

"ஒருவேளை அவர்கள் சரியான இலக்குகளை அமைக்காதிருக்கலாம். ஒன்று பார், ஜான். வாழ்க்கை, ஏறத்தாழ அதனிடமிருந்து நீ என்ன கேட்கிறாயோ அதைத் தான் உனக்குத் தருகிறது. பெரும்பாலானோர், மேலும், நலமாக உணரவும், அதிக சக்தியைக் கொண்டிருக்கவும், அதிக திருப்தியுடன் வாழவும் விரும்புகிறார்கள். இருந்தும், அவர்களுக்குக் குறிப்பாக என்னவேண்டும் என்று கேட்டால் அவர்களிடம் பதில் ஏதும் இருப்பதில்லை. உனது இலக்குகளை அமைத்துக் கொண்டு உனது தர்மாவைத் தேடத் தொடங்குகிற கணத்திலே உனது வாழ்க்கையை நீ மாற்றிக் கொள்கிறாய்." ஜூலியனின் விழிகள் அவரது சொற்களில் இருந்த உண்மையின் ஒளியால் பிரகாசித்தன.

"ஒரு அசாதாரணமான பெயரைக் கொண்ட எவரையேனும் நீ சந்தித்ததுண்டா? அவ்வாறு சந்தித்த பிறகு அந்தப் பெயர் எங்கு பார்த்தாலும் - செய்தித்தாள்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் அல்லது அலுவலகத்தில் தென்படுவதைக் கவனித்ததுண்டா? அல்லது, ஏதேனும் ஒரு புதிய விஷயத்தில் ஈடுபாடு கொண்ட பின்னர், எங்குச் சென்றாலும் அதன் அற்புதங்களைப் பற்றியே எல்லோரும் பேசக் கேட்டதுண்டா! யோகி இராமன் **"ஜோரிகி"** என்று அழைக்கும் ஒரு விதிமுறையின் ஒரே ஒரு விளக்கம் தான் இது. ஜோரிகி என்றால், ஒரு முனைப் படுத்தப்பட்ட மனம் என்று பொருள் என்று பின்னர் தெரிந்து கொண்டேன். உனது மனச் சக்தியின் ஒவ்வொரு துளியையும் உன்னையே கண்டு கொள்வதில் ஒருமுனைப்படுத்து. எதில் நீ சிறந்து விளங்குகிறாய், எது உன்னைச் சந்தோஷப்படுத்துகிறது என்பதைக் கண்டுபிடி. ஒருவேளை நீ சட்டத்தைத் தொழிலாகக் கொண்டிருக்கலாம். ஆனால், உண்மையிலேயே ஒரு பள்ளி ஆசிரியராக நீ இருந்திருக்க வேண்டியிருக்கலாம். ஏனெனில் உன்னிடம் பொறுமையும் கற்றுக் கொடுப்பதற்கான விருப்பமும் உள்ளது. ஒருவேளை, நீ ஒரு நிராசை கொண்டுள்ள ஓவியனாகவோ இருக்கக் கூடும். அது என்னவாக இருந்தாலும், உனது பேரார்வம் என்ன என்பதைக் கண்டுபிடித்து அதைப் பின்பற்று."

"இப்போது இது பற்றி உண்மையிலேயே சிந்தித்துப் பார்க்கும் பொழுது எனக்குள் மறைந்து கிடக்கும் சக்தியை வெளிப்படுத்துவதோடு பிறருக்கும் உதவி

செய்யக் கூடிய வகையிலான ஒரு சிறப்பான திறன் என்னிடம் உள்ளது என்பதைக் கண்டு கொள்ளாமல், வாழ்வின் முடிவை எட்டுவது மிகவும் வருந்தத்தக்க ஒரு விஷயமாகும். அந்தச் செயல், எத்தனை அற்பமானதாக இருந்தபோதிலும்!"

"ஆம், அது தான் சரி. எனவே, இக்கணம் தொடங்கி வாழ்வில் உனது நோக்கத்தைப் பற்றி வெகு தெளிவான உணர்வுடன் இரு. உன்னைச் சுற்றிலும் உள்ள அபரிமிதமான சாத்தியப்பாடுகள் பற்றி உன் மனதை விழிப்புணர்வு கொள்ளச் செய். மேலும், அதிகமான உற்சாகத்துடன் வாழத் தொடங்கு. மனித மனமானது உலகின் மிகப் பெரிய வடிகட்டும் கருவியாகும். அது சரியாகப் பயன்படுத்தப்பட்டால், எதை நீ முக்கியமற்றவை என்று கருதுகிறாயோ அதையெல்லாம் வடிகட்டி நீக்கிவிட்டு அந்தச் சமயத்தில் நீ தேடிக் கொண்டிருக்கும் தகவல்களை மட்டும் அது உனக்குக் கொடுக்கும். இப்பொழுது கூட உனது வீட்டின் முன்னறையில் நாம் அமர்ந்து கொண்டிருக்கும் பொழுது நாம் கவனம் செலுத்தாமல் விட்டு விடுகின்ற நூற்றுக் கணக்கான, ஏன், ஆயிரக்கணக்கான நிகழ்ச்சிகள் நம்மைச் சுற்றிலும் நடந்து கொண்டு தான் உள்ளன. வெளியில் நடைபாதையில் நடந்து சென்று கொண்டிருக்கும் காதலர்களின் கிளுக்கும் சிரிப்பு ஒலி, உனக்கு பின்னால் உள்ள மீன் தொட்டியில் நீந்தும் மீன்கள், குளிர் சாதனப் பெட்டியிலிருந்து வீசிக் கொண்டிருக்கும் குளிர்ந்த காற்று, எனது இதயம் துடித்துக் கொண்டிருக்கும் ஓசை. எனது இதயத் துடிப்பின் மீது எனது கவனத்தைச் செலுத்த நான் முடிவெடுத்தவுடனேயே, அதன் காலத்தையும், தன்மைகளையும் கவனிக்கத் தொடங்குகிறேன். அதேபோல, உனது வாழ்வின் முக்கிய இலக்குகள் மீது கவனத்தை ஒரு முனைப்படுத்தத் தொடங்குவது என்று நீ தீர்மானித்தவுடனேயே, முக்கியமற்ற விஷயங்களை உனது மனம் வடிகட்டிவிட்டு, முக்கியமானவை மீது மட்டும் கவனம் செலுத்தத் தொடங்குகிறது."

"உங்களிடம் உண்மையைச் சொல்வதானால், எனது நோக்கத்தைக் கண்டறிவதற்கான நேரம் வந்துவிட்டது என்று நான் நினைக்கிறேன்," என்றேன் நான். "என்னைத் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம் - எனது வாழ்வில் மகத்தானவை என்று நிறைய விஷயங்கள் உள்ளன. ஆனால், நான் எதிர்பார்க்குமளவு அவை அத்தனை திருப்திகரமாக, பயனளிப்பவையாக இருக்கவில்லை. இன்றைய தினம் நான் இவ்வுலகை விட்டுச் சென்றுவிட்டேன் என்றால், பெரிய மாறுபாட்டை உருவாக்குமளவு நான் எதையும் செய்துள்ளேன் என்று என்னால் உண்மையில் சொல்ல முடியாது."

"அவ்வாறு இருப்பதால் நீ என்ன உணர்கிறாய்?".

"மனச் சோர்வு" என்றேன் நான். வெகு உண்மையாக, "என்னிடம் திறமைகள் உள்ளன என்பது எனக்குத் தெரியும். இளவயதில் நான் ஒரு நல்ல ஓவியனாக இருந்தேன். அதாவது ஒரு நல்ல நிலையான வாழ்வைத் தருகிற வாக்குறுதியோடு சட்டத் தொழில் என்னை அழைக்கும் வரையில், அவவாறு இருந்தேன்."

“ஓவியம் வரைவதை உனது தொழிலாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று நீ எப்போதாவது விரும்பியதுண்டா?”

“உண்மையில் அதைப்பற்றி நான் அதிகம் சிந்தித்ததில்லை. ஆனால், நான் ஒன்று மட்டும் சொல்வேன். நான் ஓவியம் தீட்டிக் கொண்டிருந்த போது, சொர்க்கத்திலே இருப்பது போல உணர்ந்தேன்.”

“அது உண்மையில் உனக்கு உத்வேக மூட்டியது! இல்லையா?”

“முழுமையாக, எனது வரையும் அறையில் ஓவியம் தீட்டிக் கொண்டிருந்த பொழுது காலம் போவதே எனக்குத் தெரியாது. எனது ஓவியத்திரைக்குள்ளே நான் காணாமல் போய் விடுவேன். எனக்கு ஒரு உண்மையான விடுதலையாக அது இருந்தது. காலத்தைத் தாண்டி அப்பால் சென்று வேறு ஒரு பரிமாணத்திற்குள் நான் நுழைந்துவிட்டது போல அது இருந்தது.”

“நீ விரும்பி நேசிக்கின்ற ஒரு விஷயத்தில் உனது மனதை ஒருமுனைப்படுத்துவதன் சக்தி இது தான் ஜான். ‘நாம் எதை விரும்புகிறோமோ அதனால் நாம் வடிவமைக்கப்பட்டு உருவாக்கப்படுகிறோம்’ என்று **கெதே** சொன்னார். ஒருவேளை, அழகான ஓவியக் காட்சிகளால் உலகத்துக்கு ஒளியூட்டுவது தான் உனது தர்மாவாக இருக்கக்கூடும். தினமும் கொஞ்ச நேரமாவது ஓவியம் வரைவதில் செலவிடு – இதைச் செய்வதைத் தொடங்கவாவது செய்!”.

“எனது வாழ்வை மாற்றியமைப்பதை விடவும் சற்றே சாமான்யமான விஷயங்களுக்கு இந்தத் தத்துவத்தைப் பயன்படுத்துவது எவ்வாறு?” என்றேன் நான், சிரித்தபடி.

“அதுவும் ஒரு நல்ல காரியம் தான். உதாரணமாக எதைச் சொல்வாய்?” என்றார் ஜூலியன்.

“உதாரணமாக, எனது இடுப்பில் உள்ள உபரி சதையைக் குறைக்க வேண்டும் என்பது எனது இலக்குகளில் ஒன்று என்று வைத்துக் கொள்வோம். அது ஒரு மிகச் சிறிய இலக்கு தான். இதை எட்டுவதற்கு நான் எங்கே தொடங்கவேண்டும்?”

“அதைப் பற்றி வெட்கப் படாதே! இலக்குகளை நிர்ணயிப்பதையும் அவற்றை எட்டுவதையும் கற்றுத் தேர்வது எவ்வாறு எனில், வெகு சிறிய அளவில் தொடங்குவதன் மூலமாகத் தான்.”

“ஓராயிரம் மைல் தொலைவுள்ள பயணம், ஒரு சிறிய காலடியை எடுத்து வைப்பதில் தொடங்குகிறதா?” என்றேன் நான், எனது உள்ளுணர்வைப் பின்பற்றி.

“கனகச்சிதமாக! சிறிய விஷயங்களைச் சாதிப்பதில் திறமை பெறுவதன் மூலம் பெரிய விஷயங்களைச் சாதிப்பதற்கான தயார் நிலையை நீ எட்டுகிறாய். ஆக,

உனது கேள்விக்குச் சரியாகப் பதிலளிக்க வேண்டுமென்றால், உனது பெரிய இலக்குகளைத் திட்டமிடுகின்ற செயல்பாட்டின் போது, ஒரு பெரிய வரிசையாக அமைந்துள்ள சிறிய இலக்குகளைத் தீட்டுவதில் தவறு ஒன்றுமில்லை.”

தமது குறிக்கோள்களை எட்டுவதற்கும், தமது வாழ்வின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்கும், சிவானா முனிவர்கள் ஒரு ஐந்து கட்ட செய்முறையை உருவாக்கியிருந்ததாக ஜூலியன் என்னிடம் கூறினார். அது எளிமையானது நடைமுறைப்படுத்தப்படக் கூடியது. மேலும், அது நிச்சயமான விளைவுகளை உருவாக்கியது. முதல் கட்டம், இறுதி விளைவைப் பற்றிய ஒரு தெளிவான மனக் காட்சியை உருவாக்கிக் கொள்வதாகும். நான் எடை குறைய வேண்டுமானால், ஒவ்வொரு நாள் காலையிலும், கண்விழித்து எழுந்தவுடனே, நான் ஒரு ஒல்லியான, கட்டுடல் கொண்ட, சக்தி மிகுந்த நபராக இருப்பதாக என்னையே உருவகப்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த மனக் காட்சியானது எவ்வளவு தெளிவாக இருக்கிறதோ, அவ்வளவு திறனுள்ளதாக அந்தச் செயல்பாடு இருக்கும் என்று ஜூலியன் கூறினார். மனம் என்பது, சக்தியின் ஒரு இருப்பிடம் என்றும், எனது இலக்கை ‘காட்சிப்படுத்திக்’ கொள்வதான ஒரு எளிய செயல். இந்த ஆசையை நனவாக்குவதற்கான கதவுகளை அகலத் திறக்கும் என்று அவர் மேலும் விளக்கினார். இரண்டாவது கட்டம், என்மீது ஒரு நேர்மறையான அழுத்தத்தை உருவாக்கிக் கொள்வதாகும்.

“தாம் எடுக்கும் தீர்மானங்களைப் பின் தொடர்ந்து செயல்படாமல் விட்டு விடுவதற்கான பிரதான காரணம், தமது பழைய பழக்க வழக்கங்களுக்குள்ளே மீண்டும் நழுவிச் சென்று விடுவதை வெகு சுலபமானதாக ஆக்கிவிடுவது தான். அழுத்தமும், இறுக்கமும் எப்போதுமே மோசமானவையல்ல. மகத்தான விளைவுகளைச் சாதிப்பதற்காக, அழுத்தமானது உங்களுக்கு உத்வேகமூட்டக் கூடும். பின் வாங்கிச் செல்வதற்கு வழியேதும் இல்லாமல், சுவரோடு சுவராகத் தள்ளப்பட்டிருக்கும் நிலையில் தான் மனிதர்கள் பொதுவாக மகத்தான செயல்களைச் சாதிக்கின்றனர். அப்போது தான், தமக்குள் மறைந்து கிடக்கின்ற மனிதச் சக்தியின் ஊற்றிலிருந்து உற்சாகத்தை எடுத்துக் கொள்ளத் தள்ளப்படுகிறார்கள்.”

“இந்த ‘நேர்மறை அழுத்தத்தை’ எவ்வாறு என்மீது உருவாக்கிக் கொள்ள முடியும்?” என்று நான் கேட்டேன். காலையில் முன்னதாக எழுவதிலிருந்து, ஒரு நல்ல, கூடுதல் பொறுமையுள்ள தந்தையாக இருத்தல் வரையில் எல்லாவற்றையும் இந்த முறையைப் பயன்படுத்துவதற்கான சாத்தியப்பாடுகள் பற்றி நான் இப்பொழுது சிந்தித்துக் கொண்டிருந்தேன்.

“இதைச் செய்வதற்கு நிறைய வழிகள் உள்ளன. அவற்றுள் மிகச் சிறந்த வழி, பொது வாக்குறுதியாகும். உனக்குத் தெரிந்தவர்கள் எல்லோரிடமும், கூடுதல் சதையைக் குறைக்கப்போவதாகவோ, அந்தப் புதினத்தை எழுதப் போவதாகவோ, அல்லது நீ செய்யப் போவது என்னவோ அதைச் செய்ய போவதாகச் சொல். உனது இலக்கை உலகுக்குத் தெரியப்படுத்தியவுடனே, அதை நிறைவேற்றுவதற்கான அழுத்தம் உன்மீது உடனடியாகச் செயல்படத் தொடங்கும். ஏனெனில் எவருமே தாம் ஒரு

தோல்வியாகத் தென்படுவதை விரும்புவதில்லை. நான் குறிப்பிடுகின்ற இந்த நேர்மறை அழுத்தத்தை உருவாக்க சிவானாவில் உள்ள எனது ஆசான்கள் மிகவும் அட்டகாசமான வழிகளைப் பின்பற்றுவதுண்டு. தமது தீர்மானங்களைச் செயல்படுத்தத் தவறினால் - ஒருவார காலம் உணவருந்தாமல் விரதம் இருப்பதோ, அல்லது காலை 4 மணிக்கு எழுந்து தியானம் செய்வதோ, எதுவானாலும் - தாம் பனிநீர்வீழ்ச்சிக்குச் சென்று, தமது கை, கால்கள் உறையும் வரையில் அதனடியில் நிற்பதாக ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்வார்கள். நல்ல பழக்கங்களை ஏற்படுத்திக் கொள்ளவும், இலக்குகளை எட்டுவதற்கும், அழுத்தத்திற்கு இருக்கும் சக்தியின் ஒரு அதீத உதாரணமாகும் இது.''

''அதீதம் என்பது அதைக் குறைவாக மதிப்பிடுவதாகும் ஜூலியன். என்ன ஒரு வினோதமான சடங்கு.''

''ஆனால், இது வெகு அதீதமாகத் திறன் கொண்டது ஆகும். இது வெகு எளிமையான கருத்து - அதாவது நல்ல பழக்கங்களுடன் இன்பத்தையும், தீய பழக்கங்களுடன் கடுமையான தண்டனைகளையும் தொடர்பு படுத்திப் பார்ப்பதற்கு உன் மனதைப் பயிற்றுவிப்பதாகும். அவ்வாறு செய்யும்போது உனது பலவீனங்கள் வெகு விரைவில் பாதையோரத்தில் விழுந்து விலகிவிடும்.''

''எனது ஆசைகள், கனவுகள், நனவாக வேண்டுமானால், ஐந்து கட்டங்களைப் பின்பற்ற வேண்டும் என்று நீங்கள் சொன்னீர்கள். மீதமுள்ள மூன்று என்னென்ன?'' என்று நான் பொறுமையின்றி கேட்டேன்.

''ஆம், ஜான். முதல் கட்டம், உனது இறுதி விளைவு பற்றிய ஒரு தெளிவான மனக்காட்சியைக் கொண்டிருத்தல். இரண்டாவது கட்டம், உன்னைத் தொடர்ந்து ஊக்கப்படுத்திய வண்ணம் வைப்பதற்கு ஒரு நேர்மறையான அழுத்தத்தை உருவாக்கல், மூன்றாவது கட்டம் வெகு எளிமையானது.''

ஒரு காலவரையறையை நிர்ணயிக்காமல் ஒருபோதும் ஒரு இலக்கை அமைக்க வேண்டாம். ஒரு இலக்குக்கு உயிரூட்ட வேண்டுமானால், ஒரு மிகச் சரியான காலக்கெடுவை நீ அதனுடன் இணைக்க வேண்டும். நீதிமன்றத்திற்கென ஒரு வழக்கை நீ தயார் செய்யும்போது, எந்த வழக்குகள் மறுநாள் விசாரிக்கப்படவுள்ளனவோ, அவற்றின் மீது நான் நீ உனது கவனத்தை ஒருமுனைப்படுத்துவாய். நீதிமன்றத்தில் நாள் குறிக்கப்படாத வழக்குகள் மீது உடனடி கவனத்தைச் செலுத்தமாட்டாய்.

''ஓ, இன்னொரு விஷயம்,'' என்று தொடர்ந்தார் ஜூலியன். ''ஒரு காகிதத்தில் எழுதப்படாத இலக்கு ஒரு இலக்கே இல்லை. போய் ஒரு நாட்குறிப்புப் புத்தகத்தை வாங்கி வா - ஒரு சாதாரண மலிவு விலை நோட்டுப் புத்தகமே போதுமானது. இதை உனது கனவுப் புத்தகம் என்று பெயரிட்டு அழை. அதில் உனது ஆசைகள், குறிக்கோள்கள் மற்றும் கனவுகளை எழுதி நிரப்பு. நீ யார் என்பதையும் என்னவெல்லாம் செய்து கொண்டிருக்கிறாய் என்பதையும் பற்றித் தெரிந்து கொள்.''

“என்னைப் பற்றி ஏற்கெனவே எனக்குத் தெரியாதா?”

“பெரும்பாலானவர்களுக்குத் தெரிவதில்லை. தமது பலங்கள், பலவீனங்கள், எதிர்பார்ப்புகள், கனவுகள் இவற்றைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு அவர்கள் நேரம் ஒதுக்குவதேயில்லை.” சீனர்கள், உருவங்களைப் பின்வருமாறு வரையறை செய்கின்றனர். ஒரு மனிதனின் பிரதிபிம்பத்தை உருவாக்கும் மூன்று கண்ணாடிகள் உள்ளன. முதல் கண்ணாடி, நீ உன்னையே எவ்வாறு பார்க்கிறாய் என்பதாகும். இரண்டாவது, பிறர் உன்னை எப்படிப் பார்க்கிறார்கள் என்பதாகும். மூன்றாவது, உண்மையைப் பிரதிபலிக்கிறது. உன்னையே தெரிந்து கொள். ஜான் உண்மையைத் தெரிந்து கொள்.

உனது கனவுப் புத்தகத்தை, உனது வாழ்வின் பல பகுதிகளுடன் தொடர்புள்ள இலக்குகளுக்கென தனித்தனிப் பிரிவுகளாகப் பிரித்துக் கொள். உதாரணமாக, உனது உடல் நலன் பற்றிய இலக்குகள், நிதி சார்ந்த இலக்குகள், சொந்த ஊக்கமூட்டும் இலக்குகள், பிறருடனான உறவுகள் மற்றும் சமூகத் தொடர்பான இலக்குகள் மற்றும் எல்லாவற்றையும் விட முக்கியமான, உனது ஆன்மீக இலக்குகள் எனப் பலவாறான இலக்குகளுக்கென பிரிவுகளை ஏற்படுத்திக் கொள்ளலாம்.”

“ஓ, இது மிக நல்ல விளையாட்டுப் போல உள்ளது. எனக்காக இவ்வளவு புதியதாக உருவாக்கும் வகையில் ஏதேனும் செய்வது பற்றி நான் ஒரு போதும் எண்ணிக் கூடப் பார்த்ததில்லை. உண்மையில் நான் எனக்கே இன்னும் அதிகமாகச் சவால் விட்டுக் கொள்ள வேண்டும்.”

“நான் இதை ஒப்புக் கொள்கிறேன். நான் கற்றுக் கொண்ட மற்றொரு சிறப்பான திறன் படைத்த செய்முறை, உனது கனவுப் புத்தகத்தை நீ விரும்பும் பொருள்கள். நீ பின்பற்ற விரும்பும் குணாம்சங்களையும், திறமைகளையும், தன்மைகளையும் வளர்த்துக் கொண்டுள்ள நபர்கள் ஆகியவற்றின் படங்களால் நிரப்புவதாகும். உனது ‘தொப்பை’க்குத் திரும்புவதானால், உனது எடையைக் குறைத்து, ஒரு சிறப்பான உடலமைப்பைப் பெற நீ விரும்பினால், ஒரு ஓட்டப்பந்தய வீரர் அல்லது உயர்தர விளையாட்டுவீரர் ஒருவரின் படத்தை உனது கனவுப் புத்தகத்தில் ஒட்டிவை. உலகின் மிகச் சிறந்த கணவனாக இருக்க நீ விரும்பினால், இந்தத் தன்மையைப் பிரதிபலிக்கும் ஒருவரது படத்தை - அது உனது தந்தையாகக் கூட இருக்கலாம் - உனது புத்தகத்தில் உறவுகள் பகுதியில் ஒட்டி வை. கடலுக்கு அருகில் உள்ள மாளிகை அல்லது ஸ்போர்ட்ஸ் கார் ஒன்றைப் பற்றி நீ கனவு கண்டு கொண்டிருந்தால், இந்தப் பொருள்கள் கொண்ட உற்சாக மூட்டும் படங்களைக் கண்டுபிடித்து அவற்றை உனது கனவுப் புத்தகத்தில் பயன்படுத்து. பின் தினமும், இந்தப் புத்தகத்தைப் புரட்டிப் பார் - ஒரு சில நிமிடங்களேனும்! அதை உனது நண்பனாக்கிக் கொள். இதன் விளைவுகள் உன்னைத் திடுக்கிடச் செய்யும்.”

“இது உண்மையிலேயே மிகவும் புரட்சிகரமான விஷயம், ஜூலியன். இந்தக் கருத்துகள் பல நூற்றாண்டுகளாகத் தெரிய வந்திருந்தபோதிலும், இவற்றில் ஒரு

சிலவற்றைப் பயன்படுத்தினாலும் கூட, இன்று எனக்குத் தெரிந்துள்ள பலரும் தமது அன்றாட வாழ்வின் தரத்தைப் பெருமளவு உயர்த்திக் கொள்ள முடியும். எனது மனைவி, ஒரு கனவுப் புத்தகத்தைப் பெறுவதைப் பெரிதும் விரும்புவாள். ஒருவேளை, எனது பேர் போன தொப்பை இல்லாத எனது படங்களால் அவள் அதை நிரப்பக்கூடும்.''

''அது ஒன்றும் அவ்வளவு பெரியதாக இல்லை,'' என்றார் ஜூலியன் ஆறுதலளிக்கும் குரலில்.

''அப்படியென்றால், ஜென்னி ஏன் என்னை ''மிஸ்டர் டோநட்'' என்று அழைக்கிறாள்?'' என்றேன் நான் அகலமாய்ப் புன்னகைத்தவாறு, ஜூலியன் சிரிக்கத் தொடங்கிவிட்டார். நானும் அவருடன் சேர்ந்து கொண்டேன். விரைவில் நாங்கள் இருவரும் தரையில் உருண்டு புரண்டு சிரித்துக் கொண்டிருந்தோம்.

''நம்மைக் கண்டு நம்மால் சிரிக்க முடியவில்லை என்றால், யாரைக் கண்டு தான் நம்மால் சிரிக்க முடியும்?'' என்றேன் நான், இன்னும் சிரிப்பு அடங்காமல்.

''உண்மைதான், நண்பா! எனது முந்தைய வாழ்க்கைமுறையுடன் சங்கிலியால் பிணைக்கப்பட்டதுபோல் கண்டுண்டு இருந்தபோது, எனது பிரதான பிரச்சினைகளுள் ஒன்று நான் வாழ்க்கையை வெகு தீவிரமாக எடுத்துக் கொண்டது தான். இப்போது நான் ஒரு சிறுபிள்ளையைப் போல, விளையாட்டுத் தனமாக இருக்கிறேன். வாழ்வின் எல்லாப் பிரிவுகளையும் அவை எவ்வளவு தான் அற்பமானவையாக இருந்தாலும் நன்கு ரசித்து அனுபவிக்கிறேன்.''

ஆனால், நான் விஷயத்திலிருந்து விலகிச் சென்று கொண்டிருக்கிறேன்! உன்னிடம் சொல்வதற்கு என்னிடம் நிறைய விஷயங்கள் உள்ளன. எனக்குள்ளிருந்து அவை ஒரே சமயத்தில் வெளியே ஊற்றெடுத்துப் பெருக்கெடுத்துக் கொண்டுள்ளன. உனது குறிக்கோள்களை நிறைவேற்றவும் இலக்குகளை எட்டவும் ஆன ஐந்து கட்ட முறைகளுக்குத் திரும்புவோம். உனது இறுதி விளைவைப் பற்றிய ஒரு தெளிவான மனக்காட்சியை உருவாக்கிவிட்டு, அதற்கென ஒரு காலக்கெடுவை நிர்ணயித்து, காகிதத்தில் அதை எழுதிய பின்னர் அடுத்த கட்டம் என்னவென்றால், யோகி இராமன், 21ன் மந்திர விதிமுறை என்று அழைக்கும் கட்டத்தைச் செயல்படுத்துவது தான். அவரது உலகில் உள்ள கல்விமான்களாகிய ஆண்களும், பெண்களும் ஒரு புதிய நடத்தையானது ஒரு பழக்கமாக வடிவெடுத்து நிலைபெற வேண்டுமென்றால், அந்தப் புதிய செயலை ஒருவர் தொடர்ந்து இருபத்தியொரு நாட்கள் விடாமல் செய்ய வேண்டும் என்று நம்பினார்கள்.''

''இருபத்தியொரு நாட்களின் தனிச்சிறப்பு என்ன?''

''தமது வாழ்வின் நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்கென மேலும் பலனளிக்க வல்ல புதிய பழக்கங்களை உருவாக்குவதில் முனிவர்கள் முழுமையான வல்லமை பெற்றவர்களாக இருந்தனர். ஒருமுறை உருவாக்கப்பட்டுவிட்ட ஒரு தீய பழக்கமானது

ஒருபோதும் அழிக்கப்பட முடியாது என்று யோகி இராமன் என்னிடம் ஒருமுறை கூறினார்."

"ஆனால், இன்று மாலை முழுவதும், நான் எனது வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருக்கும் முறையை மாற்றியமைப்பதற்கு நீங்கள் என்னை ஊக்குவித்துக் கொண்டு இருக்கிறீர்கள். எனது தீய பழக்கங்களை என்னால் ஒருபோதும் அழிக்க முடியாது என்றால், என்னால் இதை எப்படிச் செய்ய முடியும்?"

"தீய பழக்கங்களை ஒருபோதும் அழிக்க முடியாது என்று நான் சொன்னேன். ஆனால், எதிர்மறைப் பழக்கங்களை வேறு பழக்கங்களால் மாற்றி வைக்க முடியாது என்று நான் சொல்லவில்லை," என்றார் ஜூலியன் வெகு தெளிவாக.

"ஜூலியன், நீங்கள் எப்போதுமே வார்த்தை விளையாட்டின் மன்னன். ஆனால், என்னால், நீங்கள் சொல்லும் கருத்தைப் புரிந்து கொள்ள முடிகிறது."

"ஒரு புதிய பழக்கத்தை நிலை நிறுத்துவதற்கு ஒரே ஒரு வழி தான் இருக்கிறது. அதன் பால் வெகு அதிகமான சக்தியைத் திருப்பிவிடுவதால், பழைய பழக்கமானது வரவேற்பு இல்லாத விருந்தாளியைப் போல சொல்லாமல் கொள்ளாமல் நழுவி விடும். புதிய பழக்கத்தை நிலை நிறுத்துதல் பொதுவாக இருபத்தியொரு நாட்களில் முடிவடைந்துவிடும். ஒரு புதிய நரம்பணுப் பாதையை உருவாக்குவதற்குத் தேவைப்படும் காலம் இது தான்."

"மேலும் அமைதியான முறையில் வாழவேண்டி எனது கவலைப்படும் பழக்கத்தை மாற்றுவதற்காக ரோஜாவின் இதயத்தைப் பயிற்சி செய்ய நான் விரும்புகிறேன் என்று வைத்துக் கொள்வோம். ஒவ்வொரு நாளும் அதை நான் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் செய்ய வேண்டுமா?"

"நல்ல கேள்வி. உனக்கு நான் சொல்கின்ற முதல் விஷயம், நீ ஒன்றுமே செய்ய வேண்டியதில்லை என்பது தான். இன்றிரவு உன்னுடன் பகிர்ந்து கொள்கிற எல்லா விஷயங்களுமே, உனது வளர்ச்சியிலும், முன்னேற்றத்திலும் உண்மையான அக்கறை கொண்டுள்ள ஒரு நண்பனாகத்தான் உன் முன் வைத்துள்ளேன்."

ஒவ்வொரு செய்முறையும், கருவியும் அவற்றின் திறன் மற்றும் அளவிடக் கூடிய விளைவுகளுக்கென பல காலமாகச் சோதிக்கப்பட்டுள்ளன. இதை நான் உனக்கு உறுதிப்படுத்துகிறேன். முனிவர்களின் செய்முறைகள் எல்லாவற்றையுமே முயற்சி செய்து பார் என்று உன்னிடம் கோரவேண்டுமென்று எனது இதயம் கூறினாலும், எனது மனச்சாட்சி என்னவோ இந்த அறிவை உன்னுடன் பகிர்ந்து கொள்வதான எனது கடமையைச் செய்துவிட்டு அதைப் பின்பற்றுவதை உனது கையில் விட்டுவிடவேண்டும் என்று சொல்கிறது. நான் சொல்ல வருவது இது தான். நீ செய்தாக வேண்டும் என்பதற்காக எதையும் செய்யவே செய்யாதே. ஒரு செயலைச்

செய்வதற்கான ஒரே காரணம், நீ அதைச் செய்ய விரும்புவதாலும், நீ செய்வதற்கான சரியான செயல் அது தான் என்று நீ அறிந்திருப்பதாலும் மட்டுமே.''

''நீங்கள் சொல்வது சரியாகத் தான் தோன்றுகிறது. ஜூலியன், கவலைப் படாதீர்கள். ஒரு கணம் கூட, நீங்கள் இந்தத் தகவல்களை என்மீது வற்புறுத்தித் திணித்ததாக நான் உணரவில்லை. எது எப்படியாயினும், இப்போதெல்லாம் எனக்குள் திணிக்கப்படக் கூடியவை. ஒரு டப்பா டோநட்டுகள் தான். அதைச் செய்வது ஒன்றும் அவ்வளவு சிரமமானதாக இருக்காது,'' என்றேன் நான் விளையாட்டாக.

ஜூலியன் மெல்லப் புன்னகைத்தார். ''நன்றி நண்பா! இப்பொழுது உன் கேள்விக்கான பதிலைச் சொல்வதானால் - எனது பரிந்துரை இது தான். 'ரோஜாவின் இதயம்' முறையை தினந்தோறும் ஒரே நேரத்தில், ஒரே இடத்தில் பயிற்சி செய். ஒரு சடங்காகச் செய்வதில் எதற்கும் மிகப் பெரிய அளவிலான சக்தி உள்ளது. ஒரு பெரிய முக்கியமான விளையாட்டுப் போட்டிக்கு முன்னதாக ஒரே விதமான உணவை உண்பதாலும், ஒரு குறிப்பிட்ட விதத்தில் தமது காலணிக் கயிறுகளைக் கட்டுவதாலும், விளையாட்டு வீரர்கள் சடங்கின் சக்தியைப் பெறுகிறார்கள் ஒரு சர்ச்சின் உறுப்பினர்கள், ஒரே விதமான மதச் சடங்குகளைச் செய்வதாலும், ஒரே விதமான அங்கிகளை அணிவதாலும், சடங்கின் சக்தியைப் பயன்படுத்துகின்றனர். தொழிலதிபர்கள் கூட ஒரு பெரிய அறிமுக உரையை நிகழ்த்து முன்னர் ஒரே விதமாகப் பேசுவதாலும், ஒரே ஒரு பாதையில் செல்வதாலும் சடங்கின் சக்தியைப் பின்பற்றுகின்றனர். ஒரு செயலை ஒரே விதமாக, ஒரே சமயத்தில் ஒவ்வொரு நாளும் செய்து உங்கள் அன்றாட நிகழ்ச்சியில் அதைப் புகுத்துவதன் மூலம் அச்செயல் வெகு விரைவாக ஒரு பழக்கமாக நிலை பெற்று விடுகிறது.

''உதாரணமாக, பெரும்பாலான மனிதர்கள், தாம் என்ன செய்கிறோம் என்பது பற்றி எந்தவித சிந்தனையுமின்றி விழித்தெழுந்தவுடன் செய்ததையே திரும்பத் திரும்ப ஒவ்வொரு தினமும் செய்வார்கள். கண்களைத் திறந்து, படுக்கையிலிருந்து வெளிவந்து குளியலறைக்குள் புகுந்து, தமது பற்களை தேய்க்கத் தொடங்குவர். எனவே, உனது இலக்குடன் இடைவிடாமல் தொடர்ந்து இருபத்தியொரு தினங்கள் இருந்து, புதிய செயலை அந்த நாட்களில் ஒவ்வொரு தினமும் அதே நேரத்தில் செய்வதால், அச்செயல் உனது அன்றாட நடவடிக்கைகளில் நுழைந்து விடும். விரைவில், அந்தப் புதிய பழக்கத்தை - அது தியானமோ, காலையில் முன்னதாக எழுவதோ அல்லது தினமும் ஒரு மணி நேரம் புத்தகம் படிப்பதோ, எதுவாயினும் பற்களைத் துலக்குவது போன்ற அதே லகுவில், சிரமமின்றி நீ செய்யத் தொடங்கிவிடுவாய்.''

"இலக்குகளை எட்டுவதற்கும், குறிக்கோளுக்கான பாதையில் முன்னேறிச் செல்வதற்குமான இறுதிக் கட்டம் என்ன?''

''உனது வாழ்க்கைப் பாதையில் நீ முன்னேறிச் செல்லும் போது இதே போலப் பயன்படுத்தக் கூடியது தான் முனிவர்களின் முறையில் உள்ள இறுதிக் கட்டம்.''

“எனது கோப்பை இன்னமும் காலியாகவே உள்ளது,” என்றேன் நான் மரியாதையுடன்.

“செயல்முறையை ரசித்து அனுபவி. சிவானாவின் முனிவர்கள் அடிக்கடி இந்தத் தத்துவத்தைப் பற்றிப் பேசியுள்ளனர். சிரிப்பு இல்லாத ஒரு நாளோ, அல்லது அன்பு இல்லாத ஒரு நாளோ, உயிரே இல்லாத நாள் என்று அவர்கள் உண்மையிலேயே நம்பினார்கள்.”

“எனக்கு இது புரியவில்லை என்று நினைக்கிறேன்”.

“உனது இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள் இவற்றின் பாதையில் செல்லும்போது, அந்தப் பாதையை ரசித்து அனுபவித்து மகிழ்வதை உறுதிப்படுத்திக் கொள் என்பது தான் நான் சொல்வதெல்லாம். கட்டுக் கடங்காத உற்சாகக் களிப்புடன் வாழவேண்டியதன் முக்கியத்துவத்தை மட்டும் ஒரு போதும் மறந்து விடாதே. எல்லா உயிருள்ளவற்றிலும் அற்புதமான எழிலைப் பார்க்க ஒருபோதும் தவறாதே. நீயும் நானும் பகிர்ந்து கொள்கின்ற இன்று, இந்தத் தருணம், ஒரு பரிசு - வரப்பிரசாதமாகும். எப்போதுமே உற்சாகத்துடனும், மகிழ்ச்சிக் களிப்புடனும், அறிந்து கொள்ளும் ஆர்வத்துடனும் இரு. உனது வாழ்க்கைத் தொழில் மீதும், பிறருக்குத் தன்னலமற்ற சேவையைத் தருவதிலும் கவனமாக இரு. மற்ற எல்லாவற்றையும் பிரபஞ்சம் கவனித்துக் கொள்ளும். இது தான் இயற்கையின், மிக உண்மையான விதிமுறைகளில் ஒன்றாகும்.”

“கடந்த காலத்தில் நடந்தவற்றைப் பற்றி ஒருபோதும் வருத்தப்படக் கூடாது.”

“மிகச் சரி! பிரபஞ்சத்தில் குழப்பம் என்பதே கிடையாது. இது வரையில் உனக்கு நிகழ்ந்துள்ள எல்லாவற்றுக்கும், இனிமேல் நடக்க போகிறவற்றுக்கும் ஒரு காரணம் உண்டு. நான் உன்னிடம் கூறியுள்ளவற்றை நினைவில் வைத்துக் கொள் ஜான். ஒவ்வொரு அனுபவமும் ஒரு பாடத்தைத் தருகிறது. எனவே, சிறிய விஷயங்களைப் பற்றிப் பெரிதுபடுத்துவதை நிறுத்து. உனது வாழ்க்கையை ரசித்து அனுபவி.”

“அவ்வளவு தானா?”

“உன்னிடம் பகிர்ந்து கொள்ள மிக அதிகமான ஞானம் என்னிடம் இன்னும் உள்ளது. உனக்குக் களைப்பாக உள்ளதா?”

“கொஞ்சம் கூட இல்லை. உண்மையில் நான் வெகு உற்சாகமாக உணர்கிறேன். நீங்கள் நன்றாக ஊக்கப்படுத்துகிறீர்கள், ஜூலியன், பொது அறிவுப் பேச்சாளராக ஆவது பற்றி எப்போதாவது நினைத்துப் பார்த்ததுண்டா?” என்றேன் நான் குறும்பாக.

“எனக்குப் புரியவில்லை.” என்றார் அவர் மென்மையாக.

“பரவாயில்லை விடுங்கள். சும்மா விளையாட்டுக்காகச் சொன்னேன். ஏதோ நகைச்சுவை என்று எனக்கு நினைவு.”

“சரி. யோகி இராமனின் கதையைத் தொடர்வதற்கு முன்னால், உனது இலக்குகள் மற்றும் கனவுகளை எட்டுவது, பற்றி உன்னிடம் நான் வலியுறுத்த விரும்பும் ஒரு இறுதிக்கருத்து உள்ளது.

“சொல்லுங்கள்.”

“முனிவர்கள் மிகவும் மரியாதையுடன் குறிப்பிட்ட ஒரு சொல் உள்ளது.”

“தயவு செய்து கூறுங்கள்.”

“இந்த எளிய சொல், அவர்களைப் பொறுத்தமட்டில் வெகு ஆழமான பொருளைக் கொண்டிருந்தது போலத் தோன்றுகிறது. அவர்களது அன்றாட உரையாடலில் அது அடிக்கடி தென்பட்டது. நான் இங்குக் குறிப்பிடும் சொல். **“பேரார்வம்”** *(Passion)* என்பதாகும். உனது இலக்குகளை எட்ட உனது பணியைச் செய்யும் போது உன் மனதின் முன்னணியில் இடைவிடாமல் நிலைநிறுத்த வேண்டியது இந்தச் சொல்லாகும். உனது கனவுகளுக்கான வெகு சக்தி வாய்ந்த எரிபொருள் ஒரு பற்றியெரியும் பேரார்வ உணர்வாகும். இங்கே நமது சமுதாயத்தில், நமது பேரார்வத்தை நாம் காணாமல் போட்டுவிட்டோம். செயல்களைச் செய்யப் பெரிதும் விரும்பி நேசிப்பதால் நாம் அவற்றைச் செய்வதில்லை. மாறாக, அவற்றைச் செய்தாக வேண்டும் என்று நினைப்பதால் செய்கிறோம். இது தான் துயரத்துக்கான செய்குறிப்பு. காதல் தொடர்பான பேரார்வம் பற்றி நான் பேசவில்லை. அதுவும் கூட வெற்றிகரமான உயர் ஊக்கம் கொண்ட வாழ்தலின் மற்றொரு உள்பொருளாக உள்ளது. நான் குறிப்பிடுவது வாழ்வதற்கான பேரார்வம்.

“ஒவ்வொரு நாள் காலையிலும் சக்தியும் உற்சாகமும் பொங்கித் ததும்பக் கண்விழிப்பதன் மகிழ்ச்சியைத் திரும்பப் பெற்றுக் கொள். நீ செய்கிற எல்லாவற்றிலும் பேரார்வம் எனும் தீயை உயிர்மூச்சாகக் கொள். வெகு விரைவில் நீ மகத்தான பொருள் மற்றும் ஆன்மீகம் சார்ந்த பயன்களைப் பெறுவாய்.”

“இவையெல்லாம் மிகச் சுலபமாக இருப்பது போல நீங்கள் பேசுகிறீர்கள்.”

“சுலபம் தான். இன்றிரவு தொடங்கி, உனது வாழ்வை முழுமையாக உனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவா. இறுதி முடிவாக, உனது தலைவிதியின் தலைவனாக இருப்பேன் என்று தீர்மானித்துக் கொள். உனது சொந்தப் பந்தயத்தை நடத்து. உனது வாழ்க்கைப் பணி என்ன என்பதைக் கண்டுபிடி. பின்னர், உயர் ஊக்கம் உடைய வாழ்வின் உச்சப் பேரின்பத்தை உணர்ந்து கொள்ளத் தொடங்குவாய். கடைசியாக, உனக்குள் இருப்பதுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது, உனக்குப் பின்னால் இருப்பதும் உனக்கு முன்னால் இருப்பதும் ஒன்றுமேயில்லை என்பதை எப்போதுமே நினைவில் வைத்துக் கொள்.”

“நன்றி ஜூலியன். இதைக் கேட்பது எனக்கு மிகவும் தேவையாக இருந்தது. இன்றிரவு வரையில் எனது வாழ்வில் என்னவெல்லாம் குறைவாக இருந்தன என்பதை

நான் உணர்ந்து கொள்ளவே இல்லை. ஒரு உண்மையான நோக்கமில்லாமல், ஒரு இலக்கின்றி நான் வாழ்க்கையினுள் அலைந்து திரிந்து கொண்டிருந்தேன். நிலைமை நிச்சயம் மாறப்போகிறது. நான் உங்களுக்கு உறுதி கூறுகிறேன். இதற்காக நான் நன்றியுடன் உணர்கிறேன்.''

''*பரவாயில்லை, நண்பா! நான் வெறுமனே எனது நோக்கத்தை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறேன்.''*

அத்தியாயம் 8 - செயல்பாட்டுச் சுருக்கம்
இரத்தினச் சுருக்கமாக ஜூலியனின் ஞானம்

குறியீடு

கம்பீரமான கலங்கரை விளக்கம்

நற்பண்பு

- உன் நோக்கத்தைப் பின் தொடர்ந்து செல்

ஞானம்

- வாழ்க்கையின் நோக்கம், நோக்கமுள்ள ஒரு வாழ்க்கை.
- உனது வாழ்க்கைப் பணியை கண்டுபிடித்து அதை நிறைவேற்றுவது நிலையான மனநிறைவைத் தருகிறது.
- தெளிவாக வரையறுக்கப்பட்ட சொந்த, தொழில், சார்ந்த மற்றும் ஆன்மீக இலக்குகளை நிர்ணயித்துக் கொள். பின்னர், அவை பற்றிச் செயல்படுவதற்கான துணிவைக் கொள்.

செய்முறைகள்

- *சுய பரிசோதனையின் சக்தி.*
- *இலக்குகளை எட்டுவதற்கான, 5 கட்ட செய்முறை.*

மேற்கோள்

கட்டுக்கடங்காத உற்சாகக் களிப்புடன் வாழவேண்டியதன் முக்கியத்துவத்தை மட்டும் ஒரு போதும் மறந்துவிடாதே. எல்லா உயிரினங்களிலும் உள்ள அற்புதமான எழிலைப் பார்க்க ஒருபோதும் தவறாதே. இன்றும், இத்தருணமும், ஒரு பரிசு. உனது நோக்கத்தின் மீது கவனமாக இரு பிற எல்லாவற்றையும் பிரபஞ்சம் கவனித்துக் கொள்ளும்.

9

சுய தலைமைத்துவம் - ஒரு புராதனக் கலை

நல்ல மனிதர்கள் இடைவிடாமல் தம்மை வலிமைப்படுத்திக் கொள்கின்றனர்.

- கன்ஃபூஷியஸ்

"நேரம் வேகமாகக் கடந்து சென்று கொண்டுள்ளது," என்றார் ஜூலியன். பின்னர் தனக்கு மற்றுமொரு கோப்பைத் தேநீரை ஊற்றிக் கொண்டார். "வெகு விரைவில் காலை வந்து விடும். நான் தொடர்ந்து பேச வேண்டும் என்று விரும்புகிறாயா, அல்லது ஒரு இரவுக்கு இது உனக்குப் போதுமா?"

தனது கைப்பிடியினுள் இத்தகைய அறிவு நல்மணிகளை வைத்துக் கொண்டிருந்த இவர் தனது கதையை முடிக்காமல் நான் விடவே போவதில்லை. முதலில் அவரது கதை ஒரு கற்பனைக் கதை போல, நம்ப முடியாததாகத் தோன்றியது. ஆனால், நான் தொடர்ந்து கேட்கக் கேட்க, அவரிடம் தரப்பட்டிருந்த, காலத்தால் அழியாத தத்துவத்தை எனக்குள் ஈர்த்துக் கொள்ளக் கொள்ள, அவர் சொல்லிக் கொண்டிருந்தவற்றை நான் ஆழமாக நம்பத் தொடங்கினேன். ஏதோ ஒரு அரைகுறை பித்தலாட்டக்காரனின், சுயநலமான மேலோட்டமான சிந்தனை ஓட்டங்கள் அல்ல இவை. ஜூலியன் உண்மையானவர். தான் பேசியவற்றை அவர் தனது நடைமுறையில் பின்பற்றினார் என்பது தெளிவு. அவரது செய்தியும் உண்மையின் தொனியைக் கொண்டிருந்தது. நான் அவரை நம்பினேன்.

"தயவு செய்து தொடர்ந்து பேசுங்கள், ஜூலியன். எனக்கு நேரம் உலகளவு உள்ளது. எனது குழந்தைகள் இன்று தமது பாட்டி - தாத்தா வீட்டில் உறங்குகின்றனர். மேலும், ஜென்னி இன்னும் பல மணி நேரம் விழித்துக் கொள்ளமாட்டாள்."

எனது நேர்மையான விருப்பத்தை உணர்ந்து கொண்டவராய் யோகி இராமன் தன்னிடம் கூறியிருந்த கதையை ஜூலியன் தொடர்ந்து கூறலானார். ஒரு மேலும் செழிப்பான, மேலும் பிரகாசமான வாழ்க்கையை வளர்த்துக் கொள்வதற்கான அவரது ஞானத்தை விளக்குவதாக அக் கதை அமைந்திருந்தது.

"அந்தத் தோட்டம், உனது செழிப்பான மனம் என்னும் தோட்டத்தைக் குறிக்கிறது என்று நான் உன்னிடம் கூறியுள்ளேன். அத்தோட்டத்தில், அற்புதமான

பொக்கிஷங்களும், அளவற்ற செல்வமும் நிறைந்துள்ளன. கலங்கரை விளக்கத்தைப் பற்றியும், அது எவ்வாறு இலக்குகளின் சக்தியை உருவகப்படுத்துகிறது என்பதையும் உனது வாழ்க்கைப் பணியைக் கண்டு கொள்வதன் முக்கியத்துவத்தைப் பற்றியும் நான் சொல்லியிருக்கிறேன். கதை தொடர்ந்து மேலே போகும்பொழுது, கலங்கரை விளக்கத்தின் கதவு மெல்லத் திறக்கிறது என்பதையும், அதிலிருந்து ஒரு ஒன்பதடி உயரம், தொண்ணூறு பவுண்டு எடை கொண்ட ஜப்பானிய சுமோ மல்வீரன் வெளியே வருகிறான் என்பதையும் நினைவு படுத்திக் கொள்ளலாம்.''

''ஒரு மோசமான காட்ஸில்லா படம்போல இது உள்ளது.''

''நான் சிறுவனாக இருந்தபோது அவற்றை மிகவும் விரும்பியுள்ளேன்.''

''நானும் தான். ஆனால், உங்களைத் திசை திருப்ப என்னை அனுமதிக்காதீர்கள்'' என்றேன் நான்.

''சிவானா முனிவர்களின் வாழ்வை மாற்றும் செயல்முறையில் சுமோவீரன் ஒரு மிக முக்கியமான அம்சத்தைக் குறிக்கின்றான். பல நூற்றாண்டுகளுக்கு முன், புராதனக் கீழை நாட்டில், மகத்தான ஆசான்கள், **கைஜென்** என்று அழைக்கப்பட்ட ஒரு தத்துவத்தை உருவாக்கிச் சுத்திகரித்து, மேம்படுத்தினர் என்று யோகி இராமன் என்னிடம் கூறினார். இந்த ஜப்பானியச் சொல்லுக்கு இடைவிடாத என்றும் முடிவுறாத மேம்படுத்தல் என்று பொருள். ஒரு உயரப் பறந்து கொண்டிருக்கும், முழுமையான விழிப்புணர்வுடன் கூடிய வாழ்வை வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு ஆண் மற்றும் பெண்ணின் சொந்த அடையாளமாக இது உள்ளது.''

''கைஜென் என்ற கருத்து எவ்வாறு முனிவர்களின் வாழ்வைச் செழுமையடையச் செய்தது?'' என்று நான் கேட்டேன்.

''ஜான், நான் முன்னரே சொன்னபடி, புறவெற்றியானது அகவெற்றியுடன் தொடங்குகிறது. உனது வெளி உலகத்தை மேம்படுத்த வேண்டும் என்று நீ உண்மையிலேயே விரும்பினால் - இது உனது உடல்நலன், பிறருடனான உறவுகள் அல்லது உனது நிதி நிலைமையாக இருக்கலாம். முதலில் நீ உனது அக உலகை மேம்படுத்த வேண்டும். இதைச் செய்வதற்கான மிகத் திறனுள்ள வழியானது இடைவிடாத சுயமேம்பாட்டைப் பயிற்சி செய்வதாகும். சுயவெற்றி தான் வாழ்க்கை வெற்றியின் மரபணு ஆகும்.''

''நான் இதைச் சொல்வதால் வருத்தப்படமாட்டீர்கள் என்று நம்புகிறேன் ஜூலியன். ஆனால், ஒருவரது 'அக உலகம்' பற்றிய பேச்செல்லாம், ஏதோ மறைபொருள் போல எனக்குத் தோன்றுகிறது. மரங்களடைந்த புறநகர்ப் பகுதியிலிருந்து வந்துள்ள ஒரு நடுத்தர வர்க்கத்து வழக்கறிஞர், ஒரு சிறிய மினிவான் தனது வாசலிலும் புல்வெட்டும் லான்-பாய் தனது கராஜிலும் கொண்டுள்ள ஒரு சாதாரண வழக்கறிஞர் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

“இதோ பாருங்கள். இதுவரையில் நீங்கள் என்னிடம் கூறியுள்ளவை எல்லாமே பொருள் உள்ளவையாகத் தான் உள்ளன. ‘உண்மையாகச் சொல்வதானால், என்னுடன் நீங்கள் பகிர்ந்து கொண்டுள்ளவற்றில் பெருமளவு சாதாரண நடைமுறைக்கு ஏற்றவையாகத் தான் தோன்றுகின்றன. எனினும், இந்தக் காலத்தில் நடைமுறைக்கேற்றவையெல்லாம் சாமான்யமானவை அல்ல என்பதை நான் அறிவேன். இருந்தும், இந்த கைஜென் என்ற கருத்தையும் எனது அக உலகை மேம்படுத்துவது பற்றியும் புரிந்து கொள்வது எனக்குக் கடினமாக உள்ளது என்பதை நான் உங்களிடம் சொல்லியாக வேண்டும். இங்கே நாம் எதைப்பற்றித் தான் பேசிக் கொண்டிருக்கிறோம்?”

ஜூலியனின் பதில் பட்டென்று வந்தது.

“நமது சமுதாயத்தில், அறியாமையில் உள்ளவர்களை பலவீனமானவர்கள் என்று வெகு சுலபமாக முத்திரை குத்தி விடுகிறோம். இருந்தபோதிலும், தமக்குத் தெரியவில்லை என்பதை வெளிப்படுத்தி, அறிவுரை தேடுபவர்கள் தான் பிறரைக் காட்டிலும் முன்னதாக, ஞானத்திற்கான பாதையைக் கண்டடைகிறார்கள். உனது கேள்விகள் உண்மையானவை. புதிய கருத்துகள் பற்றித் திறந்த மனதுடன் நீ இருக்கிறாய் என்பதை அவை காட்டுகின்றன. நமது சமுதாயத்தில் இன்று மிகவும் வலிமையாக உள்ள சக்தி மாற்றமாகும். பெரும்பாலோர் அதைக் கண்டு அஞ்சுகிறார்கள். அறிவாளிகள் அதை வரவேற்று ஏற்றுக் கொள்கின்றனர். எந்த ஒரு துறையிலும் புதிதாக இறங்குபவனின் மனதைப் பற்றி ஜென் பின்வருமாறு கூறுகிறது: புதிய கருத்துகள் பற்றித் தமது மனதைத் திறந்து வைத்துக் கொண்டிருப்பவர்கள் - அதாவது தமது கோப்பைகள் எப்போதுமே காலியாகக் கொண்டிருப்பவர்கள் சாதனைகளின் உயர்மட்டங்களை எட்டுபவர்களாக இருக்கிறார்கள். எனவே, மிகவும் அடிப்படையான கேள்விகளைக் கூடக் கேட்க ஒரு போதும் தயக்கம் கொள்ளதே. அறிவைப் பெறுவதற்கான மிகத் திறமையான வழி கேள்விகள் கேட்பது தான்.”

“நன்றி. ஆனால் கைஜென் பற்றி இன்னமும் எனக்குப் புரியவில்லை.”

“உனது அக உலகை மேம்படுத்துவது பற்றி நான் குறிப்பிடும்போது, சுய மேம்பாடு மற்றும் தன்விரிவாக்கம் இவை பற்றித்தான் பேசுகிறேன். உனக்காகவே நீ செய்யக்கூடிய மிகச் சிறப்பானது இது தான். உன்னையே மேம்படுத்திக் கொள்ளப் போதுமான நேரம் உனக்குக் கிடையாது என்றும், நீ மிகவும் மும்முரமாக வேலை செய்து கொண்டிருப்பதாகவும் நீ நினைக்கலாம். ஆனால், அவ்வாறு நினைப்பது ஒரு மிகப் பெரிய தவறாகும். ஒழுக்கம், கட்டுப்பாடு, சக்தி, வேகம் மற்றும் நல்லதையே எதிர்பார்க்கும் மனப்பாங்கு இவற்றைக் கொண்ட ஒரு வலுவான குணாம்சத்தை உருவாக்குவதற்காக நேரம் செலவழித்த பின்னர், உனது புற உலகில், என்ன விரும்பினாலும் அதைச் செய்யலாம், பெறலாம். உனது திறமைகள் பற்றிய ஒரு தீர்க்கமான நம்பிக்கையையும், தோல்வியே காணாத ஒரு கண்ணோட்டத்தையும் வளர்த்துக் கொண்டுவிட்டால், உனது முயற்சிகளில் வெற்றி பெறுவதைத் தடுக்க எதனாலும் முடியாது. நீ மகத்தான பலன்களைப் பெறுவதையும் யாரும் தடுத்து

நிறுத்த முடியாது. உனது மனதை வெற்றி கொள்ளவும், உடலைப் பேணவும், ஆன்மாவிற்கு வலுவூட்டவும் நேரம் செலவழிப்பதன் மூலம், உனது வாழ்வில் மேலும் செழுமையையும், உயிர்த்துடிப்பையும் உன்னால் வளர்த்துக் கொள்ள முடியும். பல ஆண்டுகளுக்கு முன், ***எபிக்டெடஸ்*** *கூறியது போல, 'தன்னைத் தானே' ஆளத் தெரியாத ஒருவன் சுதந்திரமானவனே அல்ல."*

"ஆக, கைஜென் ஒரு மிகவும் நடைமுறைக்கேற்ற கருத்து."

"மிக மிக! ஜான், அதைப் பற்றி நினைத்துப் பார்.

ஒருவனால் தன்னைத் தானே வழிநடத்திச் செய்ய முடியவில்லையானால், ஒரு பெரும் வணிக நிறுவனத்தை அவனால் எவ்வாறு வழி நடத்திச் செல்ல முடியும்?

உன்னையே பேணிப் பாதுகாத்துக் கொள்ள நீ கற்றுக் கொள்ளவில்லையென்றால், ஒரு குடும்பத்தை எவ்விதம் உன்னால் பேணிப் பாதுகாக்க முடியும்?

நீயே நலமாக உணரவில்லையென்றால் உன்னால் எப்படி நன்மை செய்ய முடியும்?

நான் கூறுவதன் பொருளை உன்னால் பார்க்க முடிகிறதா?"

நான் முழுமையாக ஒப்புக் கொண்டு தலையாட்டினேன். என்னையே மேம்படுத்திக் கொள்வதன் முக்கியத்துவம் பற்றித் தீவிரமாகச் சிந்திப்பது எனக்கு இது தான் முதல் முறை. பாதாள ரயிலில், ***"நேர்மறைச் சிந்தனையின் சக்தி"*** *(The Power of Positive Thinking) அல்லது,* ***"மகா வாழ்க்கை"*** *(Mega Living) போன்ற நூல்களை வாசித்துக் கொண்டிருப்பவர்களைக் காணும் போதெல்லாம், வழி தவறிச் சென்று விட்டு, மீண்டும் சரியான வழிக்குத் திருப்புவதற்காகத் தத்தளித்துக் கொண்டுள்ள தடம் மாறிய ஆன்மாக்கள் அவர்கள் என்று தான் நான் எண்ணியுள்ளேன். இப்போதோ, தம்மை வலிமைப்படுத்திக் கொள்ள நேரம் எடுத்துக் கொண்டவர்கள் தான் மிக வலிமையானவர்கள் என்றும், தன்னைத் தானே மேம்படுத்திக் கொள்வதன் வாயிலாகத் தான் ஒருவர் பிறரை மேம்படுத்தலாம் என்று எதிர்பார்க்க முடியும் என்றும் நான் உணர்ந்து கொண்டேன். பின்னர், என்னால் மேம்படுத்திக் கொள்ளக் கூடிய எல்லா விஷயங்களையும் பற்றி நான் சிந்திக்கத் தொடங்கினேன். உடற்பயிற்சி செய்வதால் வரக்கூடிய கூடுதல் சக்தி மற்றும் நல்லாரோக்கியம் நிச்சயமாக எனக்கு உதவும். எனது மோசமான முன் கோபம் மற்றும் பிறர் பேசிக் கொண்டிருக்கும் போது குறுக்கிடுவது ஆகியவற்றை விட்டொழித்துவிட்டால், எனது மனைவி மற்றும் குழந்தைகளுடனான உறவு சிறப்புறும். கவலைப்படும் குணத்தை மாற்றிக் கொண்டால், நான் தேடிக் கொண்டுள்ள மன அமைதியும், ஆழமான மகிழ்ச்சியும் எனக்குக் கிடைக்கும். இவ்வாறு நான் சிந்திக்கச் சிந்திக்க, செய்யக்கூடிய மேம்பாடுகளை என்னால் பார்க்க முடிந்தது.*

நல்ல பழக்கங்களை வளர்த்துக் கொள்வதன் மூலம் எனது வாழ்வில் பெருக்கெடுக்கக் கூடிய நேர்மறையானவற்றைப் பற்றிக் காணத் தொடங்கியவுடன் நான் உற்சாகம் கொண்டேன். ஆனால், தினசரி உடற்பயிற்சி, ஊட்ட சக்தியுள்ள உணவுப் பழக்கம் மற்றும் சமநிலையான வாழ்க்கை முறை இவற்றை விடவும் கூடுதலான ஒன்றைப் பற்றி ஜூலியன் பேசிக் கொண்டிருந்தார் என்பதையும் நான் உணர்ந்து கொண்டேன். அவர் இமயமலையில் கற்றுக் கொண்டிருந்தது இவற்றை விடவும் ஆழமானதும், அதிக அர்த்தம் கொண்டதும் ஆகும். மேன்மைக் குணங்களின் வலிமையை வளர்த்துக் கொள்வது பற்றியும், மனஉறுதி பெறுவது பற்றியும், துணிவுடன் வாழ்வது பற்றியும் அவர் கூறிக் கொண்டிருந்தார். மேற்கண்ட மூன்று குணாம்சங்களும், ஒருவரை நேர்மைநெறி கொண்ட வாழ்க்கைக்கு மட்டும் அல்லாது, சாதனைகளும், திருப்தியும், அக அமைதியும் நிறைந்த ஒரு வாழ்க்கைக்கு இட்டுச் செல்லும் என்று அவர் என்னிடம் கூறினார். துணிவு என்பது ஒவ்வொருவரும் வளர்த்துக் கொள்ளக் கூடிய குணமாகும். மேலும், வரும் காலத்தில் அது மிகப் பெரிய பலன்களை அளிக்க வல்லதாகும் என்றும் அவர் சொன்னார்.

“சுய தலைமைத்துவம் மற்றும் சொந்த முன்னேற்றத்திற்கும் துணிவுக்கும் என்ன தொடர்பு?” என்று நான் உரக்கவே சிந்தித்தேன்.

“துணிவானது, உனது சொந்தப் பந்தயத்தை ஓட்டும்படி செய்கிறது. உனக்குச் சரியென்று படுவதைச் செய்ய, அது அனுமதிக்கிறது. பிறர் தோல்வி கண்ட இடங்களிலும் தொடர்ந்து விடாமல் போராடுவதற்கான சுயகட்டுப்பாட்டைத் துணிவு கொடுக்கிறது. இறுதியாக நீ எந்த அளவு நிறைவைப் பெறுகிறாய் என்பதை எந்த அளவு துணிவுடன் நீ வாழ்கிறாய் என்பது நிர்ணயிக்கிறது. உனது வாழ்க்கை எனும் மகாகாவியத்தில் அற்புதமானவை அத்தனையையும் உண்மையிலேயே பெறுமாறு அது செய்கிறது. மேலும், தம்மைத் தாமே வெல்பவர்கள், வெகு அதிகமான துணிவைக் கொண்டிருக்கிறார்கள்.”

“சரி, என்னை மேம்படுத்திக் கொள்வதன் சக்தியை நான் புரிந்து கொள்ளத் துவங்கியுள்ளேன். எங்கே நான் தொடங்குவது?”

மலைகளின் உயரத்திலே ஒரு குறிப்பிடத்தக்க எழிலான, விண்மீன்கள் கண்சிமிட்டும் இரவில், யோகி இராமனுடன் தான் நடத்திய உரையாடலுக்கு ஜூலியன் திரும்பினார்.

“தொடக்கத்தில், சுயமேம்பாடு பற்றி நானும் சந்தேகம் கொண்டேன். என்ன இருந்தாலும், நான் ஒரு ஹார்வார்டில் பயின்ற, கடினமான, சட்ட வல்லுநர். தாறுமாறாக வெட்டப்பட்ட தலைமுடியுடன், விமான நிலையங்களில் திரிந்து கொண்டிருந்தவர்களால் என்மீது திணிக்கப்பட்ட புதுயுகத் தத்துவங்களுக்கு செவி கொடுக்க எனக்கு நேரமில்லை என்று தான் நான் நினைத்தேன். என் கருத்துத் தவறு. இத்தனை ஆண்டுக் காலமும், இந்த மூடிய மனம் என்ற அம்சம் தான் எனது வாழ்க்கையை முன்னேற விடாமல் தடுத்துக் கொண்டிருந்தது. யோகி இராமன்

கூறியதைக் கேட்கக் கேட்க, எனது முந்தைய உலகின் வேதனைகள் துன்பங்கள் பற்றி நான் சிந்திக்கலானேன். அவ்வாறு சிந்திக்கச் சிந்திக்க கைஜென் தத்துவமாகிய மனம், உடல், ஆன்மா இவற்றின் இடைவிடாத வளர்ச்சியை எனது புதிய வாழ்வில் வரவேற்றேன்'' என்று ஜூலியன் உறுதியளித்தார்.

“இப்போதெல்லாம், நான் ஏன் இந்த **‘மனம், உடல், ஆன்மா’** பற்றி இவ்வளவு அதிகமாகக் கேள்விப்படுகிறேன்? தொலைக்காட்சிப் பெட்டியைத் திறந்தாலே, யாராவது ஒருவர் இது பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறார்கள்!”

“உனது மனிதத் திறன்களின் மும்முனைகள் இவை தான். உனது உடல்திறன்களை வளர்த்துக் கொள்ளாமல், மனதை மேம்படுத்திக் கொள்வது என்பது ஒரு குறைபாடுள்ள வெற்றியாகத் தான் இருக்கும். உனது ஆன்மாவுக்கு ஊட்டமளிக்காமல், மனதையும், உடலையும் அவற்றின் உச்சகட்ட வளர்ச்சிக்குக் கொண்டு செல்வதால், ஒரு நிறைவற்ற வெறுமையை நீ உணர்வாய். ஆனால், உனது மனிதத் திறன்கள் மூன்றின் மொத்த சக்தியையும் திறந்து விடுவதில் உனது சக்தியை அர்ப்பணிக்கும் பொழுது, ஒரு ஞானம் பெற்ற வாழ்வின் தெய்வீகப் பேரின்பத்தை நீ ருசிப்பாய்.”

“நண்பரே, என்னை மிகவும் உணர்ச்சி வசப்படச் செய்கிறீர்கள்.”

“எங்கே தொடங்குவது என்ற உன் கேள்வியைப் பொறுத்தமட்டில், சற்று நேரத்தில், மிகவும் புராதனமான ஆனால் சக்தி வாய்ந்த செய்முறைகளை நான் உனக்குத் தருவேன் என்று உறுதியளிக்கிறேன். ஆனால், முதலில் ஒரு சாதாரண விளக்கத்தை உன்னுடன் பகிர்ந்து கொண்டாக வேண்டும். **தண்டால் செய்யும் நிலையில் படு.**”

‘கடவுளே, ஜூலியன் ஒரு டிரில் மாஸ்டர் ஆகிவிட்டார்’ என்று உள்ளுக்குள் நினைத்துக் கொண்டேன். எனினும், மேலும், தெரிந்து கொள்ள வேண்டும் என்ற ஆசையினாலும், எனது கோப்பையைக் காலியாக வைத்துக் கொள்ள வேண்டும் என்பதாலும், அவர் சொன்னபடி செய்தேன்.

“உன்னால் எத்தனை முறை தண்டால் செய்ய முடியுமோ செய். இதற்கு மேல் முடியாது எனும் நிலை வரும் வரை நிறுத்தாதே.”

நானும் அந்தப் பயிற்சியைக் கடும் சிரமத்துடன் செய்தேன். எனது குழந்தைகளுடன், அருகில் உள்ள மெக்டானல்டுக்குச் செல்வது அல்லது எனது சக சட்டத் துணைவர்களுடன் ஒரு சுற்று கோல்ஃப் ஆடுவது இவற்றை விடவும் கூடுதல் உடல்பயிற்சிக்கு எனது இருநூற்றுப்பதினைந்து பவுண்டு உடல் பழக்கப்பட்டதல்ல. முதல் பதினைந்து தண்டால்கள் பெரும் வேதனையாக இருந்தன. கோடைக் காலத்து மாலையின் வெப்பம் என்னை மேலும் அவதிக் குள்ளாக்கியது. என் உடல் வியர்வையால் நனைந்து போயிற்று. எனினும், பலவீனத்திற்கான அறிகுறி எதையும் காட்டிக் கொள்ளாமல், நான் தொடர்ந்தேன். விரைவில் எனது கரங்களும்,

தற்பெருமையும் ஒரு சேரக் களைத்துப் போயின. இருபத்திமூன்று முடிந்தவுடன் நான் நிறுத்திவிட்டேன்.

“இதற்கு மேல் முடியாது, ஜூலியன். இது என்னைக் கொல்லுகிறது. நீங்கள் என்ன செய்யப் பார்க்கிறீர்கள்?”

“இதற்குமேல் செய்ய முடியாது என்று உனக்கு நிச்சயமாகத் தெரியுமா?”

“நிச்சயமாக! என்னை விட்டு விடுங்கள்! இதிலிருந்து நான் கற்றுக் கொள்ளக் கூடிய ஒரே பாடம், மாரடைப்பு வருவதற்கு என்ன செய்ய வேண்டும் என்பது தான்!”

“இன்னும், ஒரு பத்து செய். அப்புறம் ஓய்வெடுக்கலாம்” என்று உத்தரவிட்டார் ஜூலியன்.

“என்ன விளையாடுகிறீர்களா?" என்று கேட்டுவிட்டு, தொடர்ந்து செய்தேன். ஒன்று, இரண்டு, ஐந்து, எட்டு இறுதியில் பத்து. முழுமையாகக் களைத்துப் போய் தரையில் விழுந்தேன்.

“தனது கதையை என்னிடம் யோகி இராமன் கூறிய அந்த இரவில் நானும் இதே அனுபவத்துக்குள்ளானேன். வலி தான் மகத்தான ஆசான் என்று அவர் என்னிடம் கூறினார்” என்றார் ஜூலியன்.

“இப்படிப்பட்ட ஒரு அனுபவத்திலிருந்து ஒருவர் என்ன தான் கற்றுக் கொள்ள முடியும்?” என்றேன் நான் மூச்சு வாங்க.

“மனிதர்கள், தெரியாது என்ற பகுதிக்குள் நுழையும் போது தான் மிக அதிகமாக வளர்கிறார்கள் என்று யோகி இராமனும், சொல்லப்போனால், சிவானாவின் அனைத்து முனிவர்களும் நம்புகிறார்கள்.”

“சரி! ஆனால் இதற்கும், என்னை இத்தனை தண்டால்கள் செய்ய வைத்தற்கும் என்ன தொடர்பு?”

“இருபத்தி மூன்று செய்தவுடன், அதற்கு மேல் உன்னால் செய்ய முடியாது என்று நீ சொன்னாய். இது தான் உன்னால் மிக அதிகமாகச் செய்யக்கூடிய அளவு என்றாய். இருந்தும், கூடக் கொஞ்சம் செய்யும்படி நான் உனக்குச் சவால் விட்டவுடன், மேலும் பத்து தண்டால்களை நீ செய்தாய். உனக்குள் மேலும் அதிகமாகச் செய்வதற்கான சக்தி இருந்தது. அந்தக் சக்திச் சேமிப்பை நீ நாடியபோது, உனக்கு அதிக சக்தி கிடைத்தது. நான் அவரது மாணவனாக இருந்தபோது யோகி இராமன் என்னிடம் ஒரு அடிப்படை உண்மையை விளக்கிச் சொன்னார்.

“உனது வாழ்க்கைக்கான எல்லைகள் என்பன நீ உனக்கே வரைந்து கொள்பவை மட்டுமே. உனது சுகவாசத்தின் வட்டத்தை விட்டு வெளியே வந்து, முன்னர் அறிந்திராததைக் கண்டறியத் துணியும்போது, உனது உண்மையான மனிதத்

திறனை விடுவிக்கத் தொடங்குகிறாய். தன்னையே வெற்றி கொள்வதும், உனது வாழ்வின் பிற எல்லாச் சூழ்நிலைகளையும் வெற்றி கொள்வதற்குமான முதல் படி இது தான். உனது எல்லைகளைத் தாண்டிச் செல்லுமாறு உன்னையே வற்புறுத்தித் தள்ளும்பொழுது, இந்தச் சிறிய செய்து காட்டலில் நீ செய்தது போலவே, உன்னிடம் இருப்பதாக நீ இதுவரையில் உணராத மனோ மற்றும் உடல் சக்திகளின் சேமிப்பை நீ திறந்து விடுகிறாய்.''

'வியக்க வைப்பதாக உள்ளது என்று நான் நினைத்தேன். இதைப் பற்றிச் சிந்திக்கும் பொழுது, ஏதோ ஒரு புத்தகத்தில் நான் சமீபத்தில் வாசித்திருந்த விஷயம் என் நினைவுக்கு வந்தது அதாவது, ஒரு சராசரி மனிதன், தனது மனிதத் திறமைகளில் வெகு சிறிய அளவையே பயன்படுத்துகிறான் என்பது தான் அது நமது திறமைகளின் மீதமுள்ள சேமிப்புகளைப் பயன்படுத்தத் தொடங்கினால் நம்மால் என்னவெல்லாம் செய்ய முடியும் என்று நான் எண்ணமிட்டேன்.

நான் அவரது கருத்துகளை ஏற்றுக் கொள்ளத் துவங்கிவிட்டேன் என்று ஜூலியன் புரிந்து கொண்டார்.

''தினமும் உன்னையே வற்புறுத்தி முன் தள்ளிச் செல்வதன் மூலம் நீ கைஜென் கலையைப் பயில வேண்டும். உனது மனதையும், உடலையும் மேம்படுத்திக் கொள்ளக் கடினமாக உழை. உனது ஆன்மாவுக்கு ஊட்டமளி. நீ அச்சப்படும் செயல்களைச் செய். கட்டுக்கடங்காத சக்தியுடனும், எல்லையற்ற உற்சாகத்துடனும் வாழத் தொடங்கு. சூரியன் உதயமாவதைப் பார். மழையின் சாரலில் நடனமிடு. நீ கனவு கண்டு கொண்டிருக்கும் நபராக இரு. எப்போதுமே செய்ய வேண்டுமென்று விரும்பி ஆனால் அதைச் செய்வதற்கு உனக்கு வயது போதாது அல்லது அதிக வயதாகிவிட்டது. பணம் இல்லை அல்லது அதிகப் பணம் உள்ளது என்றெல்லாம் சாக்குப் போக்குச் சொல்லி உன்னையே ஏமாற்றிக் கொண்டிருந்த அத்தனை விஷயங்களையும் செய். ஒரு உயரப் பறக்கின்ற, முழுமையான உயிர்த்துடிப்புள்ள வாழ்க்கையை வாழ ஏற்பாடு செய்து கொள். தயாராக உள்ள மனதுக்கு அதிர்ஷ்டம் உதவி செய்கிறது என்று கீழை நாடுகளில் சொல்கிறார்கள். ஆனால் தயாராக உள்ள மனதுக்கு வாழ்க்கை உதவி செய்கிறது என்று நான் நம்புகிறேன்.''

ஜூலியன் தனது உணர்ச்சிப் பெருக்கான பேச்சைத் தொடர்ந்தார்.

''உன்னைப் பின்னால் இழுக்கும் விஷயங்களைக் கண்டுபிடி.

நீ பேசுவதற்கு பயப்படுகிறாயா?

உனது மனித உறவுகளில் உனக்குப் பிரச்சினைகள் உள்ளனவா?

உன்னிடம் நேர்மறைக் கண்ணோட்டம் இல்லையா?

அல்லது உனக்குக் கூடுதல் சக்தி தேவைப்படுகிறதா?

உனது பலவீனங்கள் பற்றிப் பட்டியல் ஒன்றை எழுது. திருப்தியுள்ளவர்கள் எப்போதும் பிறரை விடவும் அதிகமாகச் சிந்தனை செய்பவர்களே. நீ உண்மையில் விரும்பும் வாழ்க்கையிலிருந்து உன்னை விலக்கி வைக்கும் விஷயங்கள் என்ன என்று எண்ணிப் பார்ப்பதற்கென நேரம் ஒதுக்கு. ஒருமுறை உனது பலவீனங்களை நீ கண்டு கொண்டுவிட்டால், அடுத்த கட்டம், அவற்றை நேருக்கு நேர் எதிர் கொண்டு உனது அச்சங்களைத் தாக்குவது தான். மேடையில் பேசுவது உனக்கு அச்சமென்றால், இருபது உரைகளை நிகழ்த்துவதற்குத் ஒப்புக் கொள். ஒரு புதிய தொழிலைத் தொடங்குவதற்கோ, அல்லது திருப்தி தராத ஒரு உறவை விட்டு விலகுவதற்கோ பயமென்றால், உனது உள்ளார்ந்த சக்திகள் எல்லாவற்றையும் ஒன்று திரட்டி அதைச் செய். பல ஆண்டுகளாக, நீ அனுபவித்திராத உண்மையான விடுதலையின் முதல் ருசி இதுவாகத் தான் இருக்கக்கூடும். அச்சம் என்பது நீயே உருவாக்கியுள்ள ஒரு மனோரீதியான பூதம். ஒரு எதிர்மறை உணர்வு நிலையின்றி இது வேறு எதுவும் இல்லை.''

''பயம் என்பது ஒரு எதிர்மறை உணர்வுநிலை மட்டுமா? எனக்கு இது பிடித்திருக்கிறது. எனது அச்சங்கள் எல்லாமே, கடந்த ஆண்டுகளில் எனது மனதுக்குள் மெல்ல மெல்லப் புகுந்து விட்டுள்ள, கற்பனைக் குட்டிச் சாத்தான்கள் தான் என்றா சொல்கிறீர்கள்?''

''மிகச் சரி. ஜான். ஒவ்வொரு முறையும், ஏதேனும், செய்வதிலிருந்து அவை உன்னைத் தடுத்துவிட்ட போதும், அவற்றின் நெருப்புக்கு நீ மேலும் எரிபொருளைக் கொடுத்துள்ளாய். ஆனால், உனது அச்சங்களை வென்று விட்டால், உனது வாழ்க்கையையும் நீ வெற்றி கொண்டு விடுகிறாய்.''

''எனக்கு ஒரு எடுத்துக்காட்டு தேவை.''

''கண்டிப்பாக! மேடைப் பேச்சை எடுத்துக் கொள்வோம். பலரும் இதைக் கண்டு மரணத்தைக் காட்டிலும் அஞ்சுகிறார்கள். நான் ஒரு வழக்குரைஞரான இருந்தபோது, நீதிமன்றத்துக்குள் நுழையவே பயப்பட்ட பல வழக்குரைஞர்களை நான் கண்டேன். கூட்டம் நிறைந்த ஒரு நீதிமன்றத்திற்குள் நுழைகின்ற வேதனையைத் தவிர்ப்பதற்காக அவர்கள் என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருந்தனர். தமது மதிப்புமிக்க வாடிக்கையாளர்களின் முக்கியமான வழக்குகளை, நீதிமன்றத்திற்கு வெளியே தீர்த்துக் கொள்ளவும் அவர்கள் தயங்கியதில்லை.''

''நானும் அவர்களைப் பார்த்ததுண்டு.''

''அவர்கள் இந்த அச்சத்துடனே பிறந்தவர்கள் என்றா நீ நினைக்கிறாய்?''

''அப்படி இல்லை என்று தான் நான் நம்புகிறேன்.''

''ஒரு குழந்தையைப் பார். அதற்கு எந்தவிதமான கட்டுகளும் இல்லை. அதன் மனம் சாத்தியப்பாடுகள் நிறைந்த ஒரு செழுமையான பகுதி. சரியாக

வளர்க்கப்பட்டால், அது அக்குழந்தையைப் பிரமாதமாக ஆக்கும். எதிர்மறையால் நிரப்பப்பட்டால், அது அக்குழந்தையை சரசரியாக, சாமானிய நபராக ஆக்கிவிடும். நான் சொல்வது இது தான். எந்த ஒரு அனுபவமும், மேடையிலே பேசுவதோ, உனது முதலாளியிடம் சம்பள உயர்வு கேட்பதோ, வெயில் பட்ட ஏரி நீரில் நீச்சலடிப்பதோ, வெண்ணிலவு காயும் இரவில் கடற்கரையில் உலாச் செல்வதோ எதுவுமே, தானாகவே இனிமையானதுமல்ல, வேதனை மிக்கதுமல்ல. அதை அவ்வாறு ஆக்குவது உனது சிந்தனை மட்டுமே."

"சுவராஸ்யம் தான்."

"ஒரு மகோன்னதமான, வெயில் ஒளிரும் பகலை மனச்சோர்வு உண்டாக்க வல்லது என்று பார்க்குமாறு ஒரு குழந்தை பயிற்றுவிக்கப்படலாம். ஒரு நாய்க்குட்டி கொடூரமான விலங்கு என்று கருதும்படி ஒரு சிறுவனோ, சிறுமியோ பயிற்றுவிக்கப்படலாம். போதை மருந்து ஒரு இனிமையான விடுதலை தரும் கருவி என்று எண்ணுமாறு ஒருவர் பயிற்றுவிக்கப்படலாம். இவையெல்லாமே பக்குவப்படுத்தப்படலின் பொருள் தான் இல்லையா?"

"கண்டிப்பாக."

"இதே தான் பயத்துக்கும் பொருந்தும். பயம் என்பது ஒரு பக்குவப்படுத்தப்பட்ட எதிர்ச்செயல். கவனமாக இல்லாவிட்டால், உனது சக்தி, புதிதாய் உருவாக்கும் திறன் மற்றும் உயிர்த்துடிப்பு இவற்றை உறிஞ்சி அழித்துவிடக் கூடிய ஒரு பழக்கம். பயம் தனது அருவருப்பான தலையைத் தூக்கும் பொழுது, அதை விரைவாகக் கீழே அடித்துத் தள்ளிவிடு. அவ்வாறு தள்ளுவதற்கு மிகச் சிறந்த வழி, நீ அச்சப்படும் செயல்களைச் செய்வது தான். அச்சத்தின் அமைப்பைப் புரிந்து கொள். அது உனது சொந்த உருவாக்கம். வேறு எந்த உருவாக்கத்தையும் போல, அதை உருவாக்குவது எவ்வளவு எளிதோ, அதை உடைத்தெறிவதும், அவ்வளவு எளிதே. உனது மனமெனும் கோட்டைக்குள்ளே இரகசியமாகப் புகுந்து கொண்டுள்ள ஒவ்வொரு பயத்தையும் முறையாகத் தேடிப் பிடித்து அழித்துவிடு. அது ஒன்று மட்டுமே உனக்கு அளவற்ற தன்னம்பிக்கையையும் மகிழ்ச்சியையும், மன அமைதியையும் தரும்."

"ஒருவரின் மனம் உண்மையிலேயே முழுமையாக பயமற்று இருக்க முடியுமா?" நான் கேட்டேன்.

"மகத்தான கேள்வி. இதற்கான பதில், சந்தேகமற்ற, வெகு நிச்சயமான 'ஆமாம்' என்பது தான். சிவானாவின் முனிவர்கள் ஒவ்வொருவரும் முற்றிலும் அச்சமற்றவர்கள். அவர்கள் நடந்து சென்ற விதத்திலே அதை நீ காணலாம். அவர்கள் பேசிய விதத்திலே அதை நீ பார்க்கலாம். அவர்களது கண்களுக்குள்ளே ஆழமாக நோக்கும் பொழுது அதை நீ பார்க்கலாம். நான் உன்னிடம் வேறு ஒன்றையும் சொல்ல விரும்புகிறேன், ஜான்."

“என்ன அது?” என்றேன் நான். அவர் சொன்ன விஷயங்கள் என்னை வியப்பில் ஆழ்த்தி வெகுவாகக் கவர்ந்தன.

“நானும் கூட அச்சமற்று இருக்கிறேன். என்னை நானே தெரிந்து கொண்டுள்ளேன். எனது இயல்பான நிலை, வெல்ல முடியாத சக்தியும், எல்லையில்லாத சாத்தியப் பாடுகளும் என்று நான் கண்டுகொண்டுவிட்டேன். எத்தனையோ ஆண்டுகளின் சுய அலட்சியம் மற்றும் சமநிலையற்ற சிந்தனைப் போக்கினால் நான் தடை செய்யப்பட்டு வந்துள்ளேன் என்பது தான் நிஜம். உனக்கு நான் மற்றொரு விஷயமும் சொல்கிறேன். பயத்தை உன் மனதிலிருந்து அழித்துவிட்டால் நீ மேலும் இளமையுடன் தோற்றமளிக்கிறாய். மேலும் உனது உடல் நலனும் வெகு திடமாக ஆகி விடுகிறது.”

“ஆஹா, அந்தப் பழைய மன - உடல் தொடர்பு” என்றேன் நான், எனது அறியாமையை மறைக்கும் முயற்சியில்.

“ஆம், கீழை நாட்டு முனிவர்களுக்கு இது சுமார் ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தெரிந்துள்ளது. இதை ‘புதிய காலம்’ என்று சொல்ல முடியாது” என்றார். அவர், முகத்தில் ஒரு விரிந்த புன்னகை விகசித்தவண்ணம்.

“முனிவர்கள் என்னுடன் மற்றொரு சக்தி வாய்ந்த விதியைப் பற்றியும் பகிர்ந்து கொண்டனர். அதைப் பற்றி நான் அடிக்கடி நினைப்பதுண்டு. சுய தலைமைத்துவம் மற்றும் தன்னை வெல்கின்ற பாதையில் நீ நடந்து செல்லும்போது அது உனக்கு விலைமதிப்பற்றதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். விஷயங்களை லேசாக எடுத்துக் கொள்ளலாமே என்ற சபலம் எனக்குள் எழும்போதெல்லாம் அது எனக்கு ஒரு உத்வேகத்தைத் தந்துள்ளது. அந்தத் தத்துவம் வெகு ரத்தினச் சுருக்கமாய், நறுக்கென்று சொல்லப்பட்டுவிடலாம். உற்சாகமான உயிர்த்துடிப்புள்ள வாழ்க்கையை வாழாதவர்களிடமிருந்து, முழுமையான நிறைவு பெற்றவர்களைப் பிரித்துக் காட்டுவது எதுவென்றால், அவர்கள், குறைவான வளர்ச்சி பெற்றுள்ளவர்கள் செய்ய விரும்பாத பணிகளையும் கூடச் செய்கிறார்கள் என்பது தான். அவற்றைச் செய்வதற்குப் பிடிக்காத போதும் கூட அவர்கள் அவற்றைச் செய்து முடிப்பார்கள்.

“உண்மையிலேயே ஞானத் தெளிவு பெற்றவர்கள், தினமும் ஆழமான மகிழ்ச்சியை உணர்ந்து அனுபவிப்பவர்கள், நீண்ட கால நிறைவுக்காக, குறுகிய கால மகிழ்ச்சியைத் தள்ளிப்போடத் தயாராக இருப்பவர்கள். எனவே, தமது பலவீனங்களையும், பயங்களையும் அவர்கள் நேருக்கு நேர் எதிர் கொள்கின்றனர். இதனால், தாம் முன்னர் அறிந்திராத பகுதிக்குள் நுழைய நேரிட்டாலும், அதன் காரணமாக, ஓரளவு அச்சத்தை அனுபவிக்க நேரிட்டாலும், அவர்கள் அதற்காக தயங்குவதில்லை. கைஜெனின் ஞானத்தைக் கொண்டு வாழ்வதென்று அவர்கள் தீர்மானிக்கின்றனர். தம்மைப் பற்றிய ஒவ்வொரு அம்சத்தையும், இடைவிடாமல், தொடர்ந்து முன்னேற்றிய வண்ணம் உள்ளனர். காலப் போக்கில், முன்னர் சிரமமானவையாக இருந்தவை சுலபமாக ஆகிவிடுகின்றன. அவர்களுக்குத் தகுதியான

மகிழ்ச்சி, உடல் நலன் மற்றும் சுபிட்சம் இவற்றையெல்லாம் அவர்களுக்கு தடை செய்து கிடைக்காதவாறு செய்த அச்சங்கள் யாவும், சூறாவளியால் ஒடிந்துவிழும் குச்சிகள் போல பாதையோரம் பலமற்று வீழ்ந்து விடுகின்றன.''

''எனவே, எனது வாழ்க்கையை மாற்றுவதற்கு முன், நான் என்னையே மாற்றிக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறீர்களா?''

''ஆம், நான் சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது எனக்கு மிக விருப்பமான பேராசிரியர் சொன்ன பழைய கதையைப் போன்றது இது. ஒருநாள், ஒரு தந்தை அலுவலகத்தில் நாள் முழுவதும் வேலை செய்துவிட்டு வந்த களைப்பில், செய்தித் தாளை வாசித்தவாறு ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார். அவருடன் விளையாட விரும்பிய மகன் அவரை நச்சரித்த வண்ணம் இருந்தான். இறுதியில், தொல்லை தாங்க முடியாத தந்தை, செய்தித்தாளில் இருந்த உலகப் படத்தைக் கிழித்து எடுத்தார். அதைப் பல சிறு சிறு துண்டுகளாகக் கிழித்து, தன் மகனிடம் கொடுத்து, ''இதோ பார், இதை மறுபடி ஒரே படமாக ஒன்றாக்கு,'' என்று சொன்னார். தான் செய்தித்தாளைப் படித்து முடிக்கும் வரையில் இது சிறுவனின் கவனத்தை ஈர்த்திருக்கும் என்பது அவரது நம்பிக்கை. ஆனால், அவரே வியப்புறுமாறு, ஒரே நிமிடத்தில் உலகப் படத்தை முழுதாக அமைத்துவிட்டான் மகன். திடுக்குற்ற தந்தை, அதை எப்படி இவ்வளவு விரைவாகச் செய்து முடித்தான் என்று கேட்க, மகனோ 'அப்பா உலகப் படத்தின் பின்புறம் ஒரு ஆளின் படம் இருந்தது. அதை ஒழுங்காக அமைத்துவிட்டதும், உலகமும் சரியாக அமைந்துவிட்டது என்றான்'.

''இது ஒரு அற்புதமான கதை.''

''இதோ பார், ஜான், சிவானாவின் முனிவர்கள் தொடங்கி எனது ஹார்வர்டு சட்டக் கல்லூரி பேராசிரியர்கள் வரையில், நானறிந்த அறிவாளிகள் எல்லோருமே மகிழ்ச்சிக்கான அடிப்படை இலக்கணத்தைத் தெரிந்து வைத்திருப்பது போலத் தோன்றுகிறது.''

''மேலே சொல்லுங்கள்,'' என்றேன் நான், சற்றே பொறுமையிழந்தவனாய்.

''இது நான் முன்னரே சொன்னது தான்! மகிழ்ச்சி என்பது ஒரு தகுதியான நோக்கத்தை முன்னோக்கிச் சென்று சாதிப்பதன் வாயிலாக வருகிறது. நீ உண்மையிலேயே செய்ய விரும்புவதைச் செய்யும் பொழுது, நிச்சயமாக ஆழமான திருப்தியை உணர்வாய்.''

''தாங்கள் செய்ய விரும்பும் பணியைச் செய்கின்ற ஒவ்வொருவருக்கும் மகிழ்ச்சி கிடைக்கிறது என்றால், ஏன் இத்தனை பேர் துயரத்தில் இருக்கிறார்கள்?''

''நல்ல கேள்வி, ஜான். ஒருவர் செய்ய விரும்புகிற செயலைச் செய்வதற்கு அபாரமான துணிவு வேண்டும். இப்போது செய்து கொண்டிருக்கும் பணியை விட்டு விட்டு ஒரு நடிகனாகவோ அல்லது முக்கியமற்ற விஷயங்களில் நேரத்தைச்

செலவிடுவதைக் குறைத்துக் கொள்வதன் வாயிலாக, பொருள் உள்ள வேறு பணிகளுக்கென அதிக நேரத்தை ஒதுக்குவதாகவோ இது இருக்கலாம். இதனால், உனது வசதியான பழகிய பகுதியை விட்டு நீ வெளியே வர வேண்டியிருக்கும். மேலும் மாற்றம் என்பது எப்போதுமே தொடக்கத்தில் கொஞ்சம் சிரமமமாகத் தான் தோன்றும். தவிரவும், மாற்றம் சற்றே அபாயகரமானதும் கூட. இதையெல்லாம் எடுத்துச் சொன்ன பிறகும் கூட, ஒருவர் மேலும் அதிக மகிழ்ச்சியான வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கு இதுவே மிகவும் நிச்சயமான ஒரு வழியாகும்.''

"துணிவை வளர்த்துக் கொள்வது எவ்வாறு?"

''அந்த படம் பற்றிய கதையைப் போன்றது தான், இதுவும். உன்னையே நீ சரிவர அமைத்துக் கொண்டுவிட்டால், உனது உலகமும் சரியாகப் பொருந்திவிடும். உனது மனம் உடல் மற்றும் குணாதிசயங்களை நீ வெற்றி கண்டுவிட்டால், மகிழ்ச்சியும், அளப்பரிய வளமும், மந்திரம் போட்டது போல உனது வாழ்வினுள் பொங்கிப் பெருகி வரும். ஆனால், நீ தினமும் சற்று நேரத்தை உன்னையே மேம்படுத்திக் கொள்வதில் செலவிட வேண்டும். ஒரு பத்துப் பதினைந்து நிமிடம் மட்டுமே என்றாலும் கூட.''

''யோகி இராமனின் கதையில், ஒன்பதடி உயர, தொண்ணூறு பவுண்டு எடையுள்ள சுமோ மல்வீரன் எதைக் குறிக்கிறான்?''

''நமது குண்டு நண்பன், கைஜென் சக்தியை உனக்கு எப்போதுமே நினைவூட்டியவண்ணம் இருப்பான். கைஜென் என்பது, இடைவிடாத சுயவிரிவாக்கம் மற்றும் முன்னேற்றத்திற்கான ஜப்பானியச் சொல் ஆகும்.''

ஒரு சில மணி நேரத்துக்குள்ளாக, ஜூலியன் ஒரு மிகச் சக்தி வாய்ந்த, மிக வியப்பூட்டுகின்ற, என் வாழ்நாளிலே முன்னர் எப்போதுமே கேட்டறியாத விவரத்தை என்னிடம் தெரிவித்துள்ளார். எனது மனதின் மந்திர சக்தி பற்றியும், அதன் உள்ளார்ந்த சாத்தியப்பாடுகள் என்ற கருவூலத்தைப் பற்றியும் நான் அறிந்து கொண்டேன். எனது மனதை அமைதிப்படுத்தி, அதன் சக்தியை எனது ஆசைகள் மற்றும் கனவுகளின் மீது ஒருநிலைப்படுத்துவதற்கான மிகவும் நடைமுறைப்படுத்தக் கூடிய செய்முறைகள் சிலவற்றையும் கற்றுக் கொண்டேன். வாழ்க்கையில் ஒரு தெளிவான நோக்கத்தையும் தனிப்பட்ட, தொழில் மற்றும் ஆன்மீகம் சார்ந்த ஒவ்வொரு அம்சத்தைப் பற்றியும் தெளிவான, வரையறுக்கப்பட்ட இலக்குகளையும் கொண்டிருப்பதன் முக்கியத்துவத்தைப் பற்றியும் கற்றுக் கொண்டேன். இப்போது சுய முன்னேற்றம், ஆளுமை பற்றிய புராதன விதியாகிய கைஜென் பற்றியும் அறிந்து கொண்டுள்ளேன்.

"கைஜென் கலையை நான் எவ்வாறு பயில்வது?"

''சுய கட்டுப்பாட்டுக்கான பாதையில் உன்னை வெகுதூரம் இட்டுச் செல்லவல்ல பத்து புராதன, மிகவும் திறன்வாய்ந்த சடங்குகளை நான் உனக்குத் தருகிறேன்.

அவற்றை தினசரி நீ நம்பிக்கையுடன் பயன்படுத்தினால், இன்றிலிருந்து ஒரே மாதத்தில் குறிப்பிடத்தக்க விளைவுகளைக் காண்பாய். தொடர்ந்து அவற்றைப் பயன்படுத்தி, அந்தச் செய்முறைகளை உனது தினசரி நடவடிக்கைகளில் புகுத்தி, ஒரு பழக்கமாகவே அவற்றை ஆக்கிக் கொண்டால், சிறப்பான உடல்நலன், அளவற்ற சக்தி, நிலையான மகிழ்ச்சி மற்றும் மன அமைதியை உன்னால் நிச்சயமாகப் பெற முடியும். இறுதியில் நீ உனது தெய்வீக இறுதி நோக்கத்தை எட்டுவாய். ஏனெனில், இதுவே உனது பிறப்புரிமை.

''பத்து சடங்குகளின் அற்புதத் தன்மை பற்றிய ஆழமான நம்பிக்கையுடன் யோகி இராமன் அவற்றை எனக்குத் தந்தார். அவற்றின் சக்திக்கான உயிருள்ள சாட்சியமாக நான் இருக்கிறேன் என்பதை நீ ஒப்புக் கொள்வாய் என்று நினைக்கிறேன். நான் சொல்வதைக் கேட்டுவிட்டு விளைவுகளை நீயே பார்த்து தீர்மானித்துக் கொள் என்று மட்டுமே நான் உன்னிடம் கேட்டுக் கொள்கிறேன்.''

''முப்பது தினங்களில் வாழ்க்கையையே மாற்றி அமைக்கும் விளைவுகளா?'' என்றேன் நான் அவநம்பிக்கையுடன்.

''ஆம். இங்கு நீ செய்ய வேண்டியது என்னவென்றால், தொடர்ந்து முப்பது நாட்களுக்கு தினந்தோறும் குறைந்தபட்சம் ஒரு மணி நேரம் ஒதுக்கிவைத்து நான் தருகிற செய்முறைகளைப் பயிற்சி செய்ய வேண்டும் என்பது தான். உனக்குள் நீ செய்கின்ற இந்த முதலீடு தான் தேவையானதெல்லாம், தயவு செய்து, உனக்கு நேரமில்லை என்று மட்டும் சொல்லாதே.''

''ஆனால், உண்மையிலேயே எனக்கு நேரமில்லை,'' என்றேன் நான். ''எனது தொழில் வெகு நன்றாக வளர்ந்துள்ளது. எனக்கெனச் செலவிட ஒரு மணி நேரம் என்ன, ஒரு பத்து நிமிடம் கூட எனக்குக் கிடையாது, ஜூலியன்.''

''நான் சொன்னபடி, உன்னையே மேம்படுத்திக் கொள்ள - உனது மனதை மேம்படுத்திக் கொள்வதோ அல்லது ஆன்மாவை வலுப்படுத்திக் கொள்வதோ - உனக்கு நேரமில்லை என்று சொல்வது, நீ வெகு அவசரமாகப் போய்க் கொண்டிருப்பதால், காருக்குப் பெட்ரோல் போட நேரமில்லை என்று சொல்வது போல உள்ளது. வெகு விரைவில் அதன் பலனை நீ அனுபவிப்பாய்.''

''உண்மையாகவா?''

''உண்மையாக.''

''எப்படி அது?''

''இப்படிச் சொல்லலாம். பல மில்லியன் டாலர் மதிப்புள்ள, உயர்தரம் வாய்ந்த ஒரு பந்தயக்கார் போல நீ இருக்கிறாய். நன்கு எண்ணெயிடப்பட்ட வெகு நவீனமான எந்திரம்.''

“ஓ, நன்றி ஜூலியன்.”

“பிரபஞ்சத்திலேயே மிகவும் மகத்தான அற்புதம் உனது மனம் தான். உன்னையே வியப்படைய வைக்கும் செயல்களைச் செய்யும் திறன் உனது உடலுக்கு உள்ளது.”

“ஒப்புக் கொள்கிறேன்.”

“இந்த பல மில்லியன் டாலர் விலையுள்ள, தரமான எந்திரத்தின் மதிப்பை உணர்ந்து கொண்டுள்ள பின்னரும், அதன் மோட்டார் சூடு ஆறுவதற்கு வாய்ப்பளிக்காமல், ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நிமிடமும் அதை நிறுத்தாமல் ஓட்டுவது புத்திசாலித்தனமாகுமா?”

“நிச்சயமாக ஆகாது.”

“சரி, அப்படியானால்,

உனக்கே ஓய்வு அளித்துக் கொள்ளாமல், தினமும் சற்று நேரம் ஒதுக்காமல் ஏன் இருக்கிறாய்?

உனது மனம் எனும் உயர்செயல்திறன் கொண்ட எந்திரம் சூடு குறைவதற்கு ஏன் நேரம் கொடுக்காமல் இருக்கிறாய்?

நான் சொல்வது உனக்குப் புரிகிறதா?

நீ செய்யக் கூடிய மிக முக்கியமான விஷயமே உன்னை நீயே புதுப்பித்துக் கொள்வதற்கென நேரம் ஒதுக்குவது தான். இதில் வேடிக்கை என்னவென்றால், உனது மிகவும் மும்முரமான வேலைகளில் இடையேயும், சுய மேம்பாடு மற்றும் சொந்த உயர்வடைதல் இவற்றுக்காக நேரம் ஒதுக்குவதால், அந்த வேலை முடிந்து உனது பணிக்கு நீ திரும்பும் பொழுது உனது செயல்திறன் வெகுவாக அதிகரித்திருப்பதைக் காண்பாய்.”

“இதற்கு வேண்டியதெல்லாம், முப்பது நாட்களுக்கு, தினசரி ஒரு மணிநேரம் மட்டும் தானா?”

“நான் எப்போதுமே தேடிக் கொண்டிருந்த மந்திர ஜபம் இது தான். எனது பழைய மகோன்னதமான நாட்களில் இதற்காக நான் ஒன்றிரண்டு மில்லியன் டாலர்கள் கூடக் கொடுத்திருப்பேன் – அதாவது இதன் முக்கியத்துவத்தை நான் புரிந்து கொண்டிருந்தால் எல்லா விலை மதிப்பற்ற தகவலையும் போலவே இதுவும் இலவசமானது என்பதை நான் கொஞ்சமும் அறியவில்லை. இதையெல்லாம் சொன்னபிறகு, மேலும் ஒன்றையும் நான் சொல்ல வேண்டும். இந்தப் பயிற்சியின் மீது முழுமையான நம்பிக்கை வைத்து, இதன் செயல்முறைகளை நீ ஒழுங்காகப் பின்பற்ற வேண்டும். இது ஒன்றும் உடனடியாக வேலை செய்யக் கூடிய ஒரு

விஷயமல்ல. ஒருமுறை இதற்குள் இறங்கிவிட்டால், நீ நிறையக் காலம் இதில் செலவழிக்க வேண்டிவரும்.''

''நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?''

''உன்னையே கவனித்துக் கொள்ள தினசரி ஒரு மணிநேரம் செலவிடுவதால், ஒரு மாதத்தில் அட்டகாசமான விளைவுகள் உனக்குக் கிடைக்கும் - நீ சரியானவற்றைச் செய்தால், ஒரு புதிய பழக்கத்தை நிலைநிறுத்த சுமார் ஒரு மாத காலம் தேவைப்படுகிறது. இந்தக் காலத்திற்குப் பின்னர், நீ கற்றுக் கொள்ளும் செய்முறைகளும், வழிமுறைகளும் இரண்டாவது தோலைப் போல உன்னுடன் பொருந்திக் கொள்ளும். தொடர்ந்து விளைவுகளை நீ பார்க்க வேண்டுமானால், நீ இவற்றைத் தொடர்ந்து தினமும் பயிற்சி செய்தாக வேண்டும்.''

''நியாயம் தானே!'' என்றேன் நான்.

ஜூலியன், தனது சொந்த வாழ்க்கையில், சக்தி மற்றும் உள்ளார்ந்த அமைதிக்கான ஒரு இறவாத ஊற்றுக் கண்ணைத் திறந்துள்ளார். உண்மையில், ஒரு நோய்வாய்ப்பட்ட, முதிய வழக்கறிஞரிலிருந்து, ஒளிவிடும், சக்திமிக்க தத்துவஞானியாக அவர் கண்டிருந்த பெரும் மாற்றமானது வியத்தகு அற்புதம் எனலாம். எனவே, நான் இப்போது கேட்கவிருந்த கொள்கை மற்றும் செய்முறைகளைப் பின்பற்ற தினசரி ஒரு மணிநேரம் ஒதுக்குவது என்று நான் அப்போதே தீர்மானித்துவிட்டேன். நான் முன்னர் செய்து வந்தது போல, பிறரை மாற்ற முயல்வதற்கு முன்பு என்னையே மேம்படுத்திக் கொள்ள முனைவது என்று நான் முடிவு செய்தேன். ஒருக்கால் நானும் கூட, 'மான்டிலைப் போன்ற' மாற்றத்திற்கு உள்ளாகக் கூடும். இது நிச்சயமாக முயற்சி செய்து பார்க்க வேண்டிய ஒன்று தான்.

அன்றிரவு, எனது அடைசலான முன்னறையின் தரையில் அமர்ந்தபடி, ஜூலியன் **'ஒளிரும் வாழ்க்கைக்கான பத்து சடங்குகள்'** என்று அழைத்தவற்றைப் பற்றிக் கற்றுக் கொண்டேன். அவற்றில் சிலவற்றுக்கு எனது சார்பில் சற்றே தீர்க்கமான முயற்சி தேவைப்பட்டது. வேறு சில, எளிதாகச் செய்யச் கூடியவையே. எல்லாமே புதிரானவையாகவும், வெகு அசாதாரணமான பலன்களை உருவாக்க வல்லன என்ற உறுதிமொழியுடனும் செழுமையாகத் தோற்றமளித்தன.

''முதல் செய்முறை, முனிவர்களால் **'தனிமையின் சடங்கு'** என்று குறிப்பிடப்பட்டது. உனது தினசரி நடவடிக்கைகளில் கட்டாயமாக அமைதிக்கான ஒரு குறிப்பிட்ட நேரம் ஒதுக்கப்படவேண்டும் என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதைத்தவிர வேறு ஒன்றும் இதில் இல்லை.''

''அமைதிக்கான நேரம் என்பது என்ன?''

''சுமார் பதினைந்து நிமிடமோ, அல்லது அதிகபட்சமாக ஐம்பது நிமிடமோ கொண்ட ஒரு காலம், மௌனத்தின் குணமளிக்கும் சக்தியை நீ கண்டு கொள்ளவும்,

பின்னர் நீயே உண்மையில் யார் என்பதைத் தெரிந்து கொள்ளவும் செய்வதற்கான காலம் இது'' என்று ஜூலியன் விளக்கினார்.

"எனது சூடேறிய எந்திரத்துக்கான ஒரு வித ஓய்வு இடைவேளையா?" என்றேன் நான் மெல்லச் சிரித்தபடி.

"மிகவும் சரியான கணிப்பு! உனது குடும்பத்தினருடன் எங்காவது தொலைதூரம் சாலைப்பயணம் செய்ததுண்டா?"

"நிச்சயமாக, ஒவ்வொரு கோடை விடுமுறையின் போதும், நாங்கள் தீவுகளுக்குச் சென்று ஜென்னியின் பெற்றோருடன் ஓரிரு வாரங்கள் தங்குவதுண்டு."

"சரி, செல்லும் வழியில் அங்கங்கே வண்டியை நிறுத்துவதுண்டா?"

"ஆம் உணவுக்காக அல்லது, எனக்கு உறக்கம் வருவது போலத் தோன்றினால், ஒரு குட்டித்தூக்கம் போடுவதற்காக, ஆறு மணி நேரம், எனது குழந்தைகள் பின் சீட்டில் சண்டை போட்டுக் கொண்டிருப்பதைக் கேட்டுக் கொண்டிருந்த பின்னர்...."

"நல்லது, தனிமைக்கான சடங்கை, ஆன்மாவிற்கான ஓய்வெடுக்கும் நிறுத்தல் என்று நினைத்துக் கொள். அதன் குறிக்கோள், சுய புதுப்பித்தல் ஆகும். மௌனத்தின் அழகிய போர்வைக்குள் பொதிந்தவாறு, தனிமையில் நேரம் கழிப்பதால் இதைச் செய்ய முடியும்."

"மௌனத்தின் தனிச்சிறப்பு என்ன?"

"நல்ல கேள்வி. தனிமையும், மௌனமும், உன்னை உனது புதிதாக உருவாக்கும் ஆதாரத்துடன் இணைக்கின்றன. பிரபஞ்சத்தின் அளவற்ற அறிவை அவை திறந்து விடுகின்றன, ஜான், இதோ கவனி – மனம் என்பது ஒரு ஏரியைப் போல. நமது குழப்பமும் கூச்சலும் நிறைந்த உலகில், பெரும்பாலான மனிதர்களின் மனம் அசைவற்று நிலையாக இருப்பதில்லை. நமக்குள்ளே நிறையப் பிரளயங்கள் உள்ளன. எனினும், தினமும் அசைவற்று, மௌனமாக இருப்பதற்காக நேரம் எடுத்துக் கொள்வதன் மூலம், மனம் என்னும் ஏரி ஒரு கண்ணாடித் தகடு போல மழமழவென்று ஆகிவிடுகிறது. இந்த உள்ளார்ந்த அமைதி தன்னோடு கூடவே ஒரு ஆழமான நல்லுணர்வு உள் அமைதி மற்றும் எல்லையற்ற சக்தி உள்ளிட்ட பல நலன்களைக் கொண்டுவருகிறது. உனது அன்றாடச் செயல்களில் ஒரு சமநிலையையும் புத்துணர்வையும் உணர்வதோடு, நன்றாகத் தூங்கவும் செய்வாய்."

"இந்த அமைதியின் காலத்தைச் செலவிட நான் எங்கே போக வேண்டும்?"

"பொதுவாகச் சொல்வதானால், நீ அதை எங்கு வேண்டுமானாலும் செய்யலாம். உனது படுக்கையறையிலோ அல்லது அலுவலகத்திலோ. இங்கு முக்கியமான விஷயம், உண்மையிலேயே அமைதியானதும், அழகானதுமான ஒரு இடத்தைக் கண்டறிவது தான்."

“இதில் அழகு எங்கே நுழைகிறது?”

“அழகான வடிவங்கள், அமைதியற்ற ஆன்மாவுக்கு ஆறுதலளிக்கின்றன” என்றார் ஜூலியன் ஒரு ஆழமான பெருமூச்சுடன். “ஒரு ரோஜாமலர்க் கொத்து அல்லது ஒரு ஒற்றை டாஃபோடில் உனது புலன்களுக்கு நல்லதொரு உணர்வை ஊட்டி, உனது இறுக்கங்களைப் போக்கித் தளர்வடையச் செய்யும். மிகவும் சரியாகச் செய்வதானால் உனது சொந்தச் சரணாலயமாக அமையக்கூடிய ஒரு இடத்தில் நீ அத்தகைய எழிலை சேர்ந்து அனுபவிக்க வேண்டும்.”

“அது என்ன?”

“அடிப்படையில், அது உனது மனோ மற்றும் ஆன்மீக விரிவாக்கத்துக்கான ஒரு இரகசிய இடமாக இருக்கும். இந்த இடம் உனது வீட்டில் உள்ள ஒரு அறையாகவோ, அல்லது ஒரு சிறிய வீடானால், அதில் உள்ள ஒரு அமைதியான மூலையாகவோ இருக்கலாம். உன்னையே புதுப்பித்துக் கொள்ளும் செயல்பாடுகளுக்கென ஒரு தனியிடத்தை ஒதுக்கி வைக்க வேண்டும் என்பது தான் இங்குக் கவனிக்கப்படவேண்டிய ஒன்று. நீ வரும் வரையில் அமைதியாக உனக்கெனக் காத்திருக்கும் ஓர் இடம்.”

“ஆகா, இந்தக் கருத்து எனக்கு மிகவும் பிடித்துள்ளது. வேலையிலிருந்து திரும்பும்போது, நான் போகக் கூடிய ஒரு அமைதியான இடத்தைக் கொண்டிருப்பது நிச்சயமாக எனக்கு ஒரு பெரும் மாற்றத்தைத் தரும். அந்த நாளின் இறுக்கங்களை விலக்கிவிடவும், என்னையே கொஞ்சநேரம் தளர்த்திக் கொள்ளவும் செய்ய முடியும். ஒருவேளை அது என்னை ஒரு மேலும் இனிமையான நபராக ஆக்கக் கூடும்.”

“இது மற்றொரு முக்கிய விஷயத்தை நமது கவனத்திற்குக் கொண்டு வருகிறது. தனிமைக்கான சடங்கு, ஒவ்வொரு நாளும் அதே நேரத்தில் செய்யப்படும்போது தான் மிகச் சிறப்பான பலன்களைத் தருகிறது.”

“ஏன்?”

“ஏனெனில் அது ஒரு சடங்காக உனது அன்றாட நடவடிக்கைகளுக்குள் பொருந்தி அமைந்து விடுகிறது. ஒவ்வொரு நாளும் ஒரே சமயத்தில் அதைப் பயிற்சி செய்வதன் மூலம், ஒரு தினசரி அமைதியானது ஒரு பழக்கமாகிவிடுகிறது. அதை நீ ஒருபோதும் அலட்சியம் செய்யமாட்டாய். மேலும், நேர்மறையான வாழ்க்கைப் பழக்கங்கள் உன்னை உனது தலைவிதியான இலக்குக்குக் கொண்டு செல்லும்.”

“வேறு ஏதேனும் உள்ளதா?”

“ஆம், முடிந்த அளவு, தினந்தோறும் இயற்கையுடன் நெருங்கிய தொடர்பு கொள். அருகில் உள்ள காட்டின் ஊடே நடந்து செல்லுதல், அல்லது வீட்டின் பின்புறமுள்ள இடத்தில் ஒரு தக்காளித் தோட்டத்தை வளர்ப்பதில் சில நிமிடங்களைச்

செலவிடுவது போன்ற செயல்கள் உனக்குள் உறங்கிக் கொண்டுள்ள அமைதியின் ஊற்றுடன் உன்னைத் தொடர்பு கொள்ள வைக்கும்.''

''இயற்கையோடு இணைந்து இருப்பதால், உனது உயர் உருவின் எல்லையற்ற ஞானத்துடன் உனக்குத் தொடர்பு கிடைக்கும். இந்த சுய அறிவானது உனது சொந்த சக்தியின் இதுவரையிலும் கண்டறியப்படாத பரிமாணங்களுக்குள் உன்னை அழைத்துச் செல்லும். இதை ஒருபோதும் மறக்காதே,'' என்றார் ஜூலியன். அவரது குரல், உணர்ச்சிப் பெருக்கால் உரத்து ஒலித்தது.

''இந்தச் சடங்கு உங்களுக்கு நல்ல பயனளித்துள்ளதா, ஜூலியன்?''

''முழுமையாக. நான் சூரியனுடன் விழித்தெழுகிறேன். எழுந்தவுடன் நான் செய்யும் முதல் காரியம் எனது இரகசியச் சரணாலயத்திற்குச் சொல்வது தான். அங்கே, ரோஜாவின் இதயத்தை, எவ்வளவு நேரம் தேவையோ அவ்வளவு நேரம் நான் கவனிக்கிறேன். சில தினங்கள், பல மணி நேரம் மௌனமான தியானத்தில் நான் ஈடுபடுகிறேன். வேறு சில தினங்களில், வெறும் பத்து நிமிடம் மட்டுமே அங்குக் கழிக்கிறேன். விளைவு என்னவோ, ஏறத்தாழ ஒன்றுதான். ஒரு ஆழமான உள்ளார்ந்த இணக்க உணர்வு, மற்றும் மிகவும் அபரிமிதமான உடல் சக்தி. இது என்னை இப்போது இரண்டாவது சடங்கிற்குக் கொண்டு வருகிறது. இதுதான். **உடல் ரீதியான சடங்கு.**''

''இது சுவாரஸ்யமாகத் தோன்றுகிறது. இது எதைப் பற்றி?''

''உடலின் கவனிப்பின் சக்தி பற்றியது.''

''உம்?''

''இது மிக எளிமையானது. உடல்சார்ந்த தன்மை பற்றிய சடங்கானது, கீழ்க்காணும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதாவது உனது உடலை நீ எவ்விதமாகப் பேணுகிறாயோ, அவ்விதமாகத் தான் உனது மனதையும் பேணுகிறாய். உனது உடலை எவ்விதமாகத் தயார் படுத்துகிறாயோ, அவ்விதமாகத் தான் உனது மனதையும் தயார் படுத்துகிறாய். உனது உடலை எவ்விதமாகப் பயிற்றுவிக்கிறாயோ அவ்விதமாகத் தான் உனது மனதையும் பயிற்றுவிக்கிறாய்... உனது உடல் எனும் கோவிலை வலுவான பயிற்சிகளால் வளப்படுத்துவதற்கென, ஒவ்வொரு நாளும் கொஞ்ச நேரம் எடுத்துக் கொள். உனது இரத்தத்தை உடலெங்கும் ஓடச் செய்து, உனது உடலை அசையச் செய். ஒரு வாரத்தில் மொத்தம் 168 மணிகள் உள்ளன என்பதை நீ அறிவாயா?''

''இல்லை. எனக்குத் தெரியாது.''

''இது உண்மை. இவற்றுள் குறைந்தபட்சம் ஐந்து மணி நேரமாவது, ஏதேனும் ஒரு உடற்பயிற்சியில் ஈடுபடுத்தப்பட வேண்டும். சிவானாவின் முனிவர்கள், தமது

உடலின் பயன்படுத்தப்படாமல் மறைந்துள்ள சக்திகளை வெளிப்படுத்துவற்கும், வலிமையான ஊக்கமுள்ள வாழ்வை வாழ்வதற்கும் புராதனப் பயிற்சியான யோகாவைப் பயன்படுத்துகின்றனர். இந்த மகத்தான மனித உடலின் முன் மாதிரிகள், வாழ்க்கையை முதுமையின் பிடிக்குள் சிக்காமல் தப்ப வைத்துக் கொண்டுள்ளவர்கள். தமது கிராமத்தின் நடுவிடத்திலே தலைமீது நிற்கும் காட்சி காணக் கிடையாத ஒன்று!''

''நீங்கள் யோகாவைப் பயின்றதுண்டா, ஜூலியன்? சென்ற கோடையில் ஜென்னி அதைப் பயிலத் தொடங்கினாள். தனது வாழ்நாளில் ஐந்து ஆண்டுகளை அது அதிகப்படுத்தியுள்ளதாக அவள் கூறுகிறாள்.''

''ஜான், உனது வாழ்வை மந்திரம் போட்டது போல மாற்றியமைக்கவல்ல செய்முறை என்று ஒன்று கிடையாது. இதை உனக்குச் சொல்கிற முதல் நபர் நானாகவே இருக்கட்டும். நிரந்தரமான, தீர்க்கமான மாற்றங்கள் நான் உன்னுடன் பகிர்ந்து கொண்டுள்ள பல்வேறு செய்முறைகளை விடாமல் தொடர்ந்து பயன்படுத்துவதால் மட்டுமே ஏற்படக் கூடியவையாகும். ஆனால், உனக்குள் சேமித்து வைக்கப்பட்டுள்ள சக்தியை வெளிக்கொண்டு வருவதற்கு யோகா ஒரு மிகவும் திறமை வாய்ந்த முறையாகும். நான் எனது யோகாப்பியாசத்தை தினமும் காலையில் செய்கிறேன். எனக்காக நான் செய்து கொள்ளும் மிகச் சிறப்பான விஷயங்களில் அதுவும் ஒன்று. அது எனது உடலைப் புத்துருவாக்குவது மட்டுமல்லாமல் எனது மனதையும் முழுமையாக ஒரு நிலைப்படுத்துகிறது. எனது புதிதாய் உருவாக்கும் திறனைக் கூட அது வெளியே கொண்டுவந்துள்ளது. அது ஒரு அற்புதமான ஒழுங்கமைப்பு ஆகும்.''

''முனிவர்கள் தமது உடல்களைப் பேணுவதற்கு வேறு ஏதேனும் செய்தார்களா?''

''இயற்கைச் சூழலில் வேகமாக நடத்தல் - அது மலைகளின் உயரங்களிலாயினும், அடர்ந்த காடுகளின் ஆழங்களிலாயினும், உடலின் களைப்பைப் போக்கி, அதைத் தனது இயல்பான துடிப்பிற்குத் திரும்பக் கொண்டு வருவதற்கு அற்புதமான வகையில் செயலாற்றுகிறது என்று யோகி இராமனும் அவரது சகோதர, சகோதரிகளும் நம்பினார்கள். நடப்பதற்கு தட்பவெப்ப நிலை ஏற்புடையதாக இல்லாத பட்சத்தில், தமது குடில்களின் உள்ளே பாதுகாப்பான முறையில் அவர்கள் உடற்பயிற்சி செய்தனர். உணவு உட்கொள்ளத் தவறினாலும், அவர்கள் தமது தினசரி உடற்பயிற்சியை செய்ய ஒரு போதும் தவறுவதில்லை.''

''தமது குடில்களில் அவர்கள் என்ன வைத்திருந்தார்கள் நார்டிக் ட்ராக் மெஷின்களையா?'' என்றேன் நான், சற்றே கேலியாக.

''இல்லை - சில சமயங்களில் அவர்கள் யோகாசனங்களைச் செய்வார்கள். வேறு சில சமயங்களில் தண்டால், பஸ்கி இவற்றைச் செய்வதை நான் பார்த்ததுண்டு. தமது உடல்களை அசைத்து, அந்த பிரமிப்பூட்டும் சுற்றுப்புறத்தின் சுத்தமான காற்றைச்

சுவாசித்தால் போதும், தாம் வேறு என்ன செய்கிறோம் என்பது பற்றி அவர்கள் அதிகம் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.''

"சுத்தமான காற்றைச் சுவாசிப்பது எவ்வாறு முக்கியமானதாகிறது?"

''உனது கேள்விக்கு, யோகி இராமனின் வார்த்தைகளாலேயே பதிலளிக்கிறேன் – 'சரியாகச் சுவாசிப்பது என்றாலே சரியாக வாழ்வது ஆகும்'.

"சுவாசித்தல் என்பது அத்தனை முக்கியமானதா?" *என்றேன் நான் வியப்புடன்.*

''சிவானாவிற்கு நான் சென்று சேர்ந்த துவக்கத்திலேயே, எனது சக்தியை இருமடங்கு அல்லது மும்மடங்காக்குவதற்கான வெகு வேகமான வழி, திறம்பட சுவாசிக்கும் கலையைக் கற்றுக் கொள்வது தான்.''

''ஆனால், நாம் எல்லோருமே, புதியதாகப் பிறந்த குழந்தை உள்பட, எவ்வாறு சுவாசிப்பது என்று தெரிந்தவர்கள் தாமே.''

''அது உண்மையல்ல, ஜான். உயிர் பிழைத்திருப்பதற்காக எவ்வாறு சுவாசிப்பது என்பதை நம்மில் பெரும்பாலோரும் அறிந்துள்ள போதிலும், நன்றாக உயிர் வாழ்ந்து செழிக்க சுவாசிப்பது எப்படி என்று நாம் கற்றுக் கொள்ளவே இல்லை. நம்மில் பலரும் மிகவும் மேலோட்டமாகத் தான் சுவாசிக்கிறோம். அவ்வாறு சுவாசிப்பதன் மூலமாக, உடலைத் தனது உயர்மட்டத்தில் செலுத்துவதற்குத் தேவையான பிராணவாயுவை உட்கொள்ளத் தவறிவிடுகிறோம்.''

''சரியாகச் சுவாசித்தலில் நிறைய அறிவியல் அறிவு ஈடுபட்டுள்ளது போலத் தெரிகிறதே.''

''அப்படித்தான். முனிவர்களும் அதை அவ்வாறே எடுத்துக் கொண்டனர். அவர்களது தத்துவம் வெகு எளிமையானது, திறமையாகச் சுவாசிப்பதன் வாயிலாக, அதிகப் பிராணவாயுவை உள்ளே எடுத்துக் கொள்வதால், ஒருவரது சக்தி சேமிப்புகளையும், இயல்பு நிலையில் உள்ள உயிர்ச்சசக்தியையும் அவரால் விடுவித்து வெளிக் கொணர முடியும்.''

''சரி, நான் இதை எங்குத் தொடங்குவது?''

''அது மிகவும் சுலபமானது. ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று முறை, ஒன்றிரண்டு நிமிடங்கள் ஆழமாகவும், திறமையாகவும் சுவாசிப்பது பற்றிச் சிந்திக்கவென ஒதுக்கு.''

"நான் திறமையாகச் சுவாசித்துக் கொண்டிருக்கிறேனா என்று எவ்வாறு அறிவது?"

“உனது வயிறு சற்றே வெளிப்புறமாக அசைய வேண்டும். இது, நீ உனது வயிற்றின் மூலமாகச் சுவாசித்துக் கொண்டிருக்கிறாய் என்பதைக் காட்டுகிறது. இது நல்லது. எனக்கு யோகி இராமன் கற்றுக் கொடுத்த ஒரு வித்தை, எனது கரங்களை என் வயிற்றின் மீது குவித்து வைப்பதாகும். நான் உட்சுவாசம் செய்தபோது அவை வெளிப்புறமாக அசைந்தால், எனது சுவாசிக்கும் முறை சரியானது என்று பொருள்.”

“இது மிகவும் சுவாரஸ்யமாக உள்ளது.”

“உயிருள்ள உணவின் சடங்கு பற்றி நான் உன்னை நம்பவைத்து விட்டேன் என்றால், இந்த நான்காவது சடங்கை நீ நிச்சயம் விரும்புவாய்.”

“உங்களது மாணவன் இன்னமும் தனது காலிக் கோப்பையை ஏந்திய வண்ணமே இருக்கிறான்.”

“நான்காவது சடங்கானது, வெகு மிகுதியான அறிவின் சடங்கு. உனது சொந்த நலனுக்காகவும், உன்னைச் சுற்றியுள்ள அனைவரின் நலனுக்காகவும், வாழ்நாள் முழுவதும் கற்றல் மற்றும் உனது அறிவின் ஆதாரத்தை விரிவாக்கிக் கொள்ளல் என்ற கருத்தை மையம் கொண்டு இது அமைந்துள்ளது.”

“அறிவே சக்தி என்ற பழைய கருத்தா?”

“இது அதையும் விட அதிகமான அர்த்தத்தை உள்ளடக்கியுள்ளது ஜான். அறிவு என்பது இன்னமும் பயன்படுத்தப்படாமல் மறைந்து கிடக்கும் சக்தி மட்டுமே. அச்சக்தி வெளிப்படுத்தப்பட வேண்டுமானால், அது செயல்முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்திலோ, அவர்களது வாழ்க்கையிலோ, தாங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பெரும்பாலான மனிதர்கள் அறிந்துள்ளனர். இதில் பிரச்சினை என்னவென்றால், அந்த அறிவைப் பயன்படுத்தி தமது கனவுகளை நனவாக்கிக் கொள்ளத் தேவையான அன்றாட, இடைவிடாத செயல்களை அவர்கள் செய்வதில்லை.

“மிகுதியான அறிவின் சடங்கு என்பது, வாழ்வின் மாணவனாக ஆவது பற்றியதாகும். அதையும் விட முக்கியமான விஷயம், உனது உயிர்வாழ்தலின் வகுப்பறையில் கற்றுள்ளவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்பது தான்.”

“இந்தச் சடங்கைத் தமது வாழ்க்கையாக அமைத்துக் கொள்ள வேண்டி யோகி இராமனும் பிற முனிவர்களும் என்ன செய்தார்கள்?”

“மிகுதியான அறிவின் சடங்கிற்கு மதிப்புக் கொடுக்கும் வகையில் பல சிறு சிறு உப சடங்குகளை அவர்கள் தமது தினசரி வழக்கமாகக் கொண்டிருந்தார்கள். அவற்றுள் மிக முக்கியமான ஒன்று, மிகவும் சுலபமான ஒன்றாகவும் இருந்தது. அதை நீ இன்றே கூடச் செய்யத் தொடங்கலாம்.”

“அதைச் செய்வதற்கு அதிக நேரம் எடுக்காது, இல்லையா?”

ஜூலியன் புன்னகை செய்தார். “நான் உன்னோடு பகிர்ந்து கொள்ளும் இந்த செய்முறைகள், கருவிகள் மற்றும் துணுக்குத் தகவல்கள் எல்லாமே நீ முன்னர் எப்போதுமே இருந்ததை விடவும் மிக அதிகமான உருவாக்கும் திறனுடன் உன்னைச் செயல்படச் செய்யும். எனவே, நீ பைசாக்கணக்குப் பார்த்துக் கொண்டு, ரூபாய்களைக் கோட்டைவிட்டு விடாதே!

“தமது கம்ப்யூட்டர்களில் மும்முரமாக வேலை செய்து கொண்டிருந்ததால், அதில் உள்ள தகவல்களை நகலெடுத்து வைக்க நேரமில்லை என்று சொல்பவர்களைப் பற்றி யோசி. அந்த எந்திரங்கள் தடாலென்று சரியும் போது, பல மாதங்களாகச் செய்து வந்த வேலை காணாமல் போகும்போது, ஒரு சில நிமிடங்கள் செலவு செய்து அதைக் காப்பாற்றாமல் போனோமே என்று அவர்கள் வருத்தம் கொள்கிறார்கள். எனது கருத்து உனக்குப் புரிகிறதா?”

“எனக்கு முக்கியமானவை எவை என்று நான் தெளிவுபடுத்திக் கொள்ள வேண்டுமா?”

“மிகவும் சரி! உனது வேலைத் திட்டத்தால் கட்டுப்படுத்தப்பட்டதாக உள்ள ஒரு வாழ்க்கையை வாழாமல் இருக்க முயற்சி செய். மாறாக, உனது மனச்சாட்சியும் இதயமும் உன்னைச் செய்யச் சொல்லும் விஷயங்களில் கவனம் செலுத்து. உனது மனம், உடல் மற்றும் குணாதிசயங்களை மேம்படுத்திக் கொள்வதில் முனைந்து அதற்காக நேரத்தையும், முயற்சியையும் ஈடுபடுத்தும் போது, உனக்குள் ஒரு தனிப்பட்ட வழிகாட்டி இருந்து கொண்டு, மகத்தான, வெகு அதிகமான பலன்களைப் பெற நீ என்ன செய்ய வேண்டும் என்று சொல்லிக் கொண்டிருப்பது போல நீ உணர்வாய். கடிகாரத்தைப் பற்றிக் கவலைப்படுவதை நிறுத்திவிட்டு, வாழ்க்கையை வாழத் தொடங்குவாய்.”

“சரியான கருத்து தான், அதை நான் ஏற்றுக் கொள்கிறேன். நீங்கள் எனக்குக் கற்றுக் கொடுக்கவிருந்த உபச் சடங்கு என்ன?”

“வாசிப்பதை ஒழுங்கான பழக்கமாக்கிக் கொள். ஒவ்வொரு நாளும் அரைமணி நேரம் வாசிப்பதால், உன்னுள் அற்புதங்கள் விளையும். ஆனால், நான் உன்னை எச்சரிக்க வேண்டும். எதை வேண்டுமானாலும் வாசிக்காதே. உனது மனமென்னும் செழிப்பான தோட்டத்திற்கு நீ என்ன உரம் போடுகிறாய் என்பது பற்றி நீ வெகு கவனமாகத் தேர்ந்தெடுத்த வண்ணம் இருக்க வேண்டும். அது மிகவும் சத்தூட்டுவதாக இருக்க வேண்டும். உன்னையும், உனது வாழ்வின் தரத்தையும் மேம்படுத்துவதாக அது இருப்பதைக் கவனித்துக் கொள்.”

“முனிவர்கள் என்ன வாசித்தார்கள்?”

“தாம் விழித்திருக்கும் நேரத்தில் பெருமளவுப் பொழுதைத் தமது முன்னோர்களின் பண்டைய போதனைகளை வாசிப்பதிலும், மறுபடி வாசிப்பதிலும் செலவிட்டார்கள். இந்தத் தத்துவ எழுத்தாக்கங்களை அவர்கள் விழுங்கிய வண்ணம் இருந்தார்கள். சிறிய மூங்கில் இருக்கைகளில் அமர்ந்தவண்ணம், தமது வினோதமாகக் கட்டி வைக்கப்பட்டுள்ள புத்தகங்களை இதழ்களில் விரியும் மெல்லிய புன்னகையுடன் அவர்கள் வாசிக்கும் காட்சி இன்னமும் எனது மனக்கண்ணில் நிழலாடிய வண்ணம் உள்ளது. நூலின் சக்தியைப் பற்றியும், ஞானிகளின் மிக நல்ல நண்பன் ஒரு நூல் தான் என்பதையும் நான் சிவானாவில் தான் உண்மையில் அறிந்து கொண்டேன்.”

“ஆக, நான் என் கைக்குக் கிடைக்கும் எல்லா நல்ல நூல்களையும் வாசிக்கத் தொடங்க வேண்டுமா?”

“ஆம், இல்லை என்று வந்தது பதில்,” “உன்னால் முடிந்த அளவு புத்தகங்களை வாசி என்று தான் நான் சொல்வேன். ஆனால், சில புத்தகங்கள் சும்மா ருசி பார்க்கப்படவேண்டியவை. வேறு சில, கடித்து, சுவைத்துப் பார்க்கப்பட வேண்டியவை, இன்னும் சிலவோ, முழுமையாக விழுங்கப்படவேண்டியவை என்பதைக் கருத்தில் கொள். இது என்னை மற்றொரு விஷயத்துக்குக் கொண்டு வருகிறது.”

“என்ன, இப்போது உங்களுக்குப் பசியெடுத்துவிட்டதா?”

“இல்லையில்லை, ஜான்” என்று ஜூலியன் சிரித்தார்.

“ஒரு மகத்தான நூலின் முழுப் பயனையும் பெற வேண்டுமானால், நீ அதை வெறுமனே வாசித்தால் மட்டும் போதாது. ஆழமாக ஆராய்ந்து படிக்க வேண்டும். உனது சட்டக் கருத்துக்காக, முக்கியமான வாடிக்கையாளர்கள் உன்னிடம் தரும் ஒப்பந்தங்களை வாசிப்பது போல் நுணுக்கமாகப் படித்தறிய வேண்டும். அதை ஊன்றிக் கவனிக்க வேண்டும். அதனுடன் இணைந்து செயல்பட வேண்டும். அதனுடன் ஒன்றிப் போக வேண்டும். தமது பிரம்மாண்டமான நூலகத்தில் இருக்கும் அறிவு நூல்களை முனிவர்கள் பத்து அல்லது பதினைந்து முறை படிப்பதுண்டு. மகத்தான நூல்களை வேத நூல்களாக, தெய்வீகத்திலிருந்து புறப்பட்டு வந்த புனிதப் புத்தகங்களாக அவர்கள் கருதினார்கள்.”

“ஓ, வாசிப்பது என்பது அவ்வளவு முக்கியமானதா?”

“ஒரு தினத்திற்கு முப்பது நிமிடங்கள் வாசித்தால், உனது வாழ்வில் இனிமையான மாற்றங்கள் ஏற்படும். ஏனெனில், உனது பயன்பாட்டுக்கென கிடைக்கக் கூட்டிய மாபெரும் அறிவுச் சேமிப்புகளை நீ விரைவில் கண்டு கொள்ளத் தொடங்குவாய். நீ இதுவரை எதிர்கொண்டுள்ள ஒவ்வொரு பிரச்சினைக்குமான தீர்வு ஒவ்வொன்றும் நூல்களில் ஏற்கனவே அச்சாகியுள்ளது. ஒரு மேலான வழக்குரைஞராகவோ, தந்தையாகவோ, நண்பனாகவோ, காதலனாகவோ, நீ ஆக விரும்பினால், அந்த இலக்குகளை நோக்கி உன்னை உந்தித் தள்ளக் கூடிய புத்தகங்கள் உலகில் இருக்கின்றன. **வாழ்வில் நீ செய்யக் கூடிய தவறுகள்**

அனைத்துமே உனக்கு முன்னால் நடந்து சென்றவர்களால் ஏற்கனவே செய்யப்பட்டுவிட்டன. இப்போது எதிர் கொண்டுள்ள சவால்கள் உனக்கு மட்டுமே உரியன என்று நீ உண்மையாகவே எண்ணுகிறாயா?''

''ஜூலியன், நான் இதைப்பற்றி எண்ணிப் பார்த்ததேயில்லை. ஆனால், நீங்கள் கூறுவதை என்னால் புரிந்து கொள்ள முடிகிறது. மேலும் நீங்கள் கூறுவது சரி என்றும் எனக்குத் தெரிகிறது.''

''எவரும் எதிர்கொண்டுள்ள பிரச்சனைகள் எல்லாமே, ஏன், இனி தமது வாழ்வில் பின்னர் எதிர்கொள்ளவுள்ளவை எல்லாமே, ஏற்கனவே, சந்திக்கப்பட்டுவிட்டன'' என்று ஜூலியன் உறுதியாகச் சொன்னார்.

''அதை விடவும் முக்கியமாக, அவற்றுக்கான பதில்களும், தீர்வுகளும், புத்தகங்களின் பக்கங்களிலே பொறிக்கப்பட்டுள்ளன. சரியான நூல்களை வாசி. உனக்கு முன்னால் வாழ்ந்தவர்கள், நீ இப்போது எதிர் கொண்டுள்ள சவால்களை எவ்வாறு கையாண்டுள்ளார்கள் என்று கற்றுக் கொள். வெற்றிக்கான அவர்களது வழிமுறைகளைப் பயன்படுத்து, உன் வாழ்வில் காணும் மேம்பாடுகளைக் கண்டு, வியப்படைவாய்.''

''சரியான நூல்கள் என்பன யாவை?'' ஜூலியனின் கருத்து மிகவும் சிறப்பான ஒன்று என்பதை என்னால் வெகு விரைவில் உணர்ந்து கொள்ள முடிந்தது.

''அதை உனது முடிவுக்கே விட்டு விடுகிறேன். நண்பா! தனிப்பட்ட முறையில், நான் கீழை நாடுகளிலிருந்து திரும்ப வந்துள்ளதால், நான் வெகுவாகப் போற்றி மதிக்கும் மனிதர்களின் சுயசரிதைகளையும் அதிகமான அளவில் ஞான நூல்களையும் வாசிப்பதில் எனது நேரத்தைச் செலவிடுகிறேன்.''

''என் போன்ற ஆர்வமுள்ள ஒரு இளைஞனுக்கு நீங்கள் சிபாரிசு செய்யும் நூல்கள் ஏதேனும் உள்ளனவா?'' என்றேன் நான் சிரிப்புடன்.

''நிச்சயமாக, ஒரு மாமனிதனாகிய, அமெரிக்கர், பெஞ்சமின் ஃபிராங்கிளினுடைய சரிதையை நீ விரும்பி வாசிப்பாய். மேலும், மகாத்மா காந்தியின் சுய சரிதையாகிய 'சத்திய சோதனை' கூட உனக்கு நல்ல வளர்ச்சியைத் தரக்கூடியதாகும். மேலும், ஹெர்மன் ஹெஸ்லின் 'சித்தார்த்தா' மார்க்கஸ் ஆரிலியலின் நடைமுறைக்கு மிகவும் ஏற்ற தத்துவம், மற்றும் செனெகாவின் சில நூல்கள் ஆகியவற்றையும் நீ வாசிக்கலாம். நெப்போலியன் ஹில் எழுதிய 'சிந்தனையின் மூலம் செல்வந்தராகுங்கள்' என்ற புத்தகமும் சிறந்தது. அதை நான் சென்ற வாரம் வாசித்தேன்; வெகு ஆழமானது என்று எண்ணினேன்.''

''சிந்தனையின் மூலம் செல்வந்தராகுங்கள்!?!'' என்று கூவினேன் நான். ''ஆனால், உங்களது இதய நோய்க்குப்பின் அதையெல்லாம் விட்டுவிட்டீர்கள் என்றல்லவா நினைத்தேன்! பலவீனமானவர்கள் மீது குறிவைக்கும் 'பாம்பு எண்ணெய்'

வியாபாரிகளால் விற்பனை செய்யப்படுகிற 'வேகமாகப் பணம் பண்ணுங்கள்' கையேடுகள் எனக்கு வெறுப்பூட்டுகின்றன.''

''கவனம் பெரியவரே! மெல்ல, மெல்ல பார்த்து! நீ கூறுவதை முழுமையாக ஒப்புக் கொள்கிறேன்'' என்றார் ஜூலியன். ஒரு அறிவு நிரம்பிய, அன்பு கொண்ட தாத்தாவின் பொறுமையுடன், ''நானும் நமது சமுதாயத்தினுள் நேர்மை, நாணயம் ஆகிய நன்னெறிக் குணங்களை மறுபடியும் நிலை நாட்ட விரும்புகிறேன். அந்தச் சிறிய புத்தகம் நிறையப் பணம் பண்ணுவதைப் பற்றியதல்ல. வாழ்க்கையை நிறைவு பண்ணுவதைப் பற்றியது. மாறாக, செல்வந்தனாக இருப்பதற்கும் செழுமையுடன் இருப்பதற்கும் நிறைய வேறுபாடுகள் உள்ளன என்பதை உனக்கு முதலில் சொல்பவன் நானாகத் தான் இருக்க முடியும். பணத்தை விரட்டிக் கொண்டு செல்லும் வாழ்க்கையை நான் வாழ்ந்திருக்கிறேன். அதன் வேதனையை உணர்ந்திருக்கிறேன். **'சிந்தனை மூலம் செல்வந்தனாகுங்கள்'** என்ற புத்தகம் அபரிமிதத்தை, மிகுதியைப் பற்றியது - அதில் ஆன்மீகச் செழுமையும் உள்ளடங்கியுள்ளது. மேலும் நல்லனவற்றை வாழ்விற்குள் எவ்வாறு கவர்வது என்பது பற்றியது. அதை நீ வாசிப்பது உனக்கு நலனளிக்கும். ஆனால், நான் உன்னை வற்புறுத்தமாட்டேன்.''

''ஜூலியன், என்னை மன்னித்து விடுங்கள். ஒரு போர்க்குணம் கொண்ட வழக்கறிஞர் போலப் பேச நான் நினைக்கவில்லை,'' என்றேன் நான். மன்னிப்புக் கோரும் பாவனையில், ''சில சமயங்களில் என் கோபம் எனது கட்டுக்கடங்காமல் போய்விடுகிறது என்று நினைக்கிறேன். நான் சரி செய்ய வேண்டிய விஷயங்களில் இதுவும் ஒன்று. நீங்கள் என்னுடன் பகிர்ந்து கொள்ளும் எல்லாவற்றுக்கும் நான் உண்மையிலேயே நன்றியுடன் இருக்கிறேன்.''

''பரவாயில்லை, போனால் போகட்டும். நான் கூறுவது என்னவென்றால், வாசி, தொடர்ந்து வாசித்த வண்ணம் இரு, மற்றுமொரு சுவாரஸ்யமான விஷயத்தைத் தெரிந்து கொள்ள விரும்புகிறாயா?''

''என்ன அது?''

''நூல்களிலிருந்து நீ என்ன பெறுகிறாய் என்பதல்ல விஷயம் - மாறாக, அந்த நூல்கள் உன்னிடமிருந்து எதை வெளிக் கொண்டு வருகின்றன என்பது தான் இங்கு விஷயம் - இது தான் இறுதியில் உனது வாழ்வை மாற்றியமைக்கக் கூடியது. இதோ பார் ஜான். புத்தகங்கள் உண்மையில் உனக்குப் புதிதாக எதையும் கற்றுத் தருவதில்லை.''

''உண்மையாகவா?''

''உண்மையாகத் தான். **நூல்கள், உனக்குள் ஏற்கனவே இருப்பதைப் பார்ப்பதற்குத் தான் உனக்கு உதவுகின்றன. அது தான் ஞானம் பெறுவது என்பது.** எனது பயணங்கள், மற்றும் தேடுதல்கள் இவை எல்லாவற்றுக்கும் பின்னர், நான்

உண்மையில் ஒரு முழு வட்டமடித்து, ஒரு இளம் சிறுவனாக எங்கே தொடங்கினேனோ அங்கேயே வந்த நின்றுவிட்டேன் என்பதைத் தான் கண்டு கொண்டேன். ஆனால், இப்போது நான் என்னையும், என்னவெல்லாமாக நான் இருக்க முடியும் என்பதையும் தெரிந்து கொண்டுள்ளேன்.''

''எனவே, மிகுதியான அறிவின் சடங்கு என்பது, நிறைய வாசித்தல் மற்றும் உலகில் உள்ள தகவல்களை கண்டறிதல் என்பது பற்றியதா?''

''ஓரளவு அது தான். இப்போதைக்கு, ஒரு நாளைக்கு முப்பது நிமிடம் வாசி, மீதமுள்ளது தானாக வரும்.'' என்றார் ஜூலியன் சற்றே மர்மமான தொனியில்.

''சரி, ஒளிவிடும் வாழ்வின் ஐந்தாவது சடங்கு என்ன?''

''அது **சொந்த சிந்தனையின் சடங்கு.** உள்ளார்ந்த சிந்தனையின் சக்தியில் முனிவர்கள் திடமான நம்பிக்கை கொண்டிருந்தனர். உன்னையே அறிந்து கொள்வதற்காக நேரமெடுத்துக் கொள்வதன் வாயிலாக, உன்னிடம் இருப்பதாக நீ ஒருபோதும் அறியாத ஒரு பரிமாணத்துடன் நீ தொடர்பு கொள்ள முடியும்.''

''விஷயம் வெகு ஆழமானது போலத் தெரிகிறதே''.

''உண்மையில் இது மிகவும் நடைமுறைக்கு ஏற்ற ஒரு கருத்து. நாம் எல்லோருமே, நமக்குள் உறங்கிக் கொண்டிருக்கும் பல திறமைகளைக் கொண்டிருக்கிறோம். அவற்றைத் தெரிந்து கொள்வதற்காக நேரமெடுத்துக் கொள்வதன் வாயிலாக, நாம் அவற்றைத் தூண்டி விடுகிறோம். எனினும், அமைதியாக நன்மைகளைப் பயக்கும் இப்பயிற்சி உன்னை மேலும் அதிக உறுதி கொண்டவனாகவும், மேலும் ஞானம் உள்ளவனாகவும் ஆக்கும். உனது மனதைப் பயன்படுத்தும் வழிகளில் மிகவும் நல்ல பலன்களை அளிப்பது இதுவாகும்.''

''இந்தக் கருத்தைப் பற்றி எனக்கு இன்னமும் சற்றுக் குழப்பமாகவே உள்ளது, ஜூலியன்.''

''நியாயம் தான். இதை முதலில் கேட்டபோது, எனக்கும் இது அன்னியமாகத் தான் தோன்றியது. மிகவும் அடிப்படையான வகையில் பார்த்தால், சொந்த சிந்தனை என்பது, சிந்திக்கும் பழக்கமின்றி வேறு எதுவும் இல்லை.''

''ஆனால், நாம் எல்லோருமே சிந்திப்பதில்லையா?

மனிதனாக இருப்பதன் ஒரு அங்கம் தானே அது?

''அது சரி தான். நம்மில் பெரும்பாலோர் நிச்சயமாகச் சிந்திக்கத் தான் செய்கிறோம். பிரச்சினை என்னவென்றால், பெரும்பாலான மனிதர்கள், உயிர் வாழ்வதற்குத் தேவையான அளவு மட்டுமே சிந்திக்கிறார்கள். நான் இந்தச் சடங்கைப் பற்றிக் கூறுவது என்னவென்றால், செழித்து வாழ்வதற்குத் தேவையான அளவு

சிந்திப்பதாகும். **பென் ஃபிராங்கிளின்** சரிதையை வாசிக்கும்போது, நான் சொல்வது என்னவென்று உனக்குப் புரியும். ஒவ்வொரு தினமும், ஒரு முழு நாளின் வேலைக்குப் பிறகு, தனது வீட்டின் ஒரு அமைதியான மூலையில் தனியாகச் சென்று அமர்ந்து தனது அன்றைய தினத்தைப் பற்றி அவர் ஆழமாக எண்ணமிடுவார். தனது செயல்பாடுகள் அனைத்தையும் பற்றி எண்ணிப் பார்த்து அவை நேர்மறையானவையா, உருவாக்குபவையா, அல்லது எதிர்மறையானவையா, சரி செய்யப்படவேண்டியவையா என்று அலசுவார். தனது நாட்களில் தான் செய்து கொண்டிருந்தவற்றைப் பற்றித் தெளிவாகத் தெரிந்து கொண்டு சுய ஆளுமைக்கான பாதையில் முன்னே சென்று தன்னையே மேம்படுத்திக் கொள்வதற்கான உடனடி நடவடிக்கைகளில் ஈடுபடுவார். முனிவர்களும் இதைத் தான் செய்தனர். ஒவ்வொரு நாளும், ரோஜா மலர்களின் நறுமணம் பொருந்திய இதழ்களால் வேயப்பட்ட தமது குடில்களுக்குச் சென்று ஆழமான சிந்தனையில் அமர்வார்கள். யோகி இராமன், தனது தினத்தின் செயல்பாடுகளை நிஜமாக எழுதிக் கணக்கெடுப்பார்.''

''என்ன விதமான விஷயங்களை அவர் எழுதுவார்?'' என்று நான் கேட்டேன்.

''முதலாவதாக, தனது செயல்பாடுகளை அவர் பட்டியலிடுவார் - காலை நேரத்து சுயகவனச் செயல்பாடுகளில் தொடங்கி பிற முனிவர்களுடனான உரையாடல்கள், கூட்டு செயல்பாடுகள், இன்னபிற. பின்னர், விறகு மற்றும் உணவு தேடி காட்டுக்குள் செல்லல் என, பலப்பல செயல்பாடுகளையும் பட்டியலிடுவார். இதில் மேலும் அதிக ஆர்வமூட்டுவதாக அந்தக் குறிப்பிட்ட தினத்தன்று தனது மனதில் ஓடிய எண்ணங்களையும் எழுதி வைப்பார்.''

''அது செய்வதற்குச் சிரமமான செயல் அல்லவா? பனிரெண்டு மணி நேரத்துக்கு முன்னால் என்ன, ஐந்து நிமிடத்துக்கு முன்னால் கூட நான் என்ன நினைத்தேன் என்பது எனக்கு நினைவில் இருப்பதில்லை.''

''இந்தச் சடங்கைத் தினமும் பின்பற்றினால் உனக்கு அது மறக்காது. இதோ பார், நான் எட்டியுள்ள இதே பயன்களை எவராலும் எட்ட முடியும். எவராலும்! இங்கு நிஜமான பிரச்சினை என்னவென்றால், சாக்குப் போக்குச் சொல்வது என்ற மோசமான நோயினால் நிறையப் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.''

''நானும் கூட கடந்த காலத்தில் அதனால் பீடிக்கப்பட்டிருக்கலாம் என்று நினைக்கிறேன்,'' என்றேன் நான். எனது நண்பர் சொன்னதை முற்றிலும் நன்கு உணர்ந்தவனாக.

''சாக்குப் போக்குச் சொல்வதை நிறுத்திவிட்டு, சும்மா அதைச் செய்,'' என்று ஜூலியன் கூவினார். அவரது குரல், திட நம்பிக்கையின் உறுதியோடு உரத்து ஒலித்தது.

''எதைச் செய்வது?''

“சிந்திப்பதற்கு நேரம் எடுத்துக் கொள். ஒரு வழக்கமான, தனிப்பட்ட உள்ளாய்வு செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள். யோகி இராமன் தான் அன்றைய தினம் செய்திருந்த செயல்களையெல்லாம் ஒரு பத்தியில் எழுதிய பின்னர், அடுத்த பத்தியில் அதைப் பற்றிய மதிப்பீட்டைச் செய்வார். தனது செயல்கள் மற்றும் சிந்தனைகளின் எழுதப்பட்ட வடிவத்தை எதிர் கொள்ளும் போது அவை நேர்மறையானவையா என்று அவர் தன்னைத் தானே கேட்டுக் கொள்வார். அவை அவ்வாறு சரியானவையாக இருந்தால், தனது அரிய சக்தியைத் தொடர்ந்து அவற்றுக்குத் தருவது என்று தீர்மானிப்பார். ஏனெனில் அவை பின்வரும் காலத்தில் மிகப் பெரிய பலன்களை விளைவிக்கும் என்பது உறுதி.”

“அவை எதிர்மறையானவை இருந்தால்?”

“அவ்வாறு இருந்தால், அவற்றை விலக்கி ஒழித்து விடுவதற்கான ஒரு தெளிவான செயல்திட்டத்தை அவர் உருவாக்குவார்.”

“இதுபற்றி ஒரு எடுத்துக்காட்டு எனக்கு உதவும் என்று நினைக்கிறேன்.”

“அது சொந்த விஷயம் பற்றியதாக இருக்கலாமா?”

“நிச்சயமாக! உங்களது உள்மன எண்ணங்கள் சிலவற்றைப் பற்றி அறிய நான் பெரிதும் விரும்புவேன்.” என்றேன் நான்.

“உண்மையில், நான் உனது உள்மன எண்ணங்கள் பற்றி நினைத்துக் கொண்டிருந்தேன்.”

இரண்டு பள்ளிப் பிள்ளைகள் போல, நாங்கள் இருவரும் கிளுகிளுவெனச் சிரிக்கத் தொடங்கிவிட்டோம்.

“சரி சரி, எப்போதுமே நீங்கள் தான் ஜெயிக்கிறீர்கள்.”

“சரி, இன்று நீ செய்தவற்றுள் சிலவற்றைப் பார்ப்போம். இந்த மேசைமீது உள்ள அந்தக் காகிதத்தில் அவற்றை எழுது,” என்று ஜூலியன் உத்தரவிட்டார்.

மிக முக்கியமான ஏதோ ஒன்று நிகழவுள்ளது என்பதை நான் உணரத் துவங்கினேன். நான் செய்து கொண்டிருந்த செயல்கள், எண்ணிக் கொண்டிருந்த எண்ணங்கள் பற்றி சிந்திப்பதற்காக நேரம் ஒதுக்குவது உண்மையில் இது தான் முதல் தடவை - பல ஆண்டுகளில். இது எல்லாமே வெகு வினோதமாகவும், அதே சமயத்தில் வெகு புத்திசாலித்தனமாகவும் இருந்தது. ஏனெனில், என்ன இருந்தாலும், எதை மேம்படுத்தவது என்பது பற்றி முடிவெடுக்கவென நேரம் கூட எடுத்துக் கொள்ளாமல், என்னையும், எனது வாழ்க்கையும் எவ்வாறு நான் மேம்படுத்த முடியும்?

“எங்கே தொடங்குவது?” என்றேன் நான்.

“இன்று காலை என்ன செய்தாய் என்பதில் தொடங்கி, உனது தினத்தில் முன்னேறிச் செல். ஒரு சில முக்கிய நிகழ்ச்சிகளைக் கண்டுபிடி. மேலும் நிறைய விஷயங்களை நாம் கவனித்தாக வேண்டும். தவிரவும், ஒரு சில நிமிடங்களில், யோகி இராமனின் கதைக்குத் திரும்பச் செல்ல நான் விரும்புகிறேன்.”

“நல்லது. எனது மின்சாரச் சேவலின் குரலால், காலை ஆறு முப்பதுக்கு நான் கண்விழித்தேன்” என்றேன் நான் விளையாட்டாக.

“உம், விளையாடாமல் மேலே செல்,” என்றார் ஜூலியன் சற்றே கடுமையாக.

“சரி அதற்குப் பின் குளித்து, சவரம் செய்து கொண்டு ஒரு ரொட்டித் துண்டை விழுங்கிவிட்டு வேலைக்குச் சென்றுவிட்டேன்.”

“உனது குடும்பத்தினர் என்ன செய்து கொண்டிருந்தனர்?”

“அவர்கள் எல்லோரும் உறங்கிக் கொண்டிருந்தனர். அலுவலகத்துக்குச் சென்றவுடன், ஏழரை மணிக்கு நான் சந்திக்க வேண்டிய நபர், ஏழு மணியிலிருந்தே அங்கு காத்துக் கொண்டிருந்தார் என்பதைக் கண்டேன். அடடா, அவர்தான் எவ்வளவு கொதித்துப் போயிருந்தார்!”

“உனது பதில் செயல் என்னவாக இருந்தது?”

“நானும் பதிலுக்குக் கோபம் காட்டினேன். என்ன செய்திருக்க வேண்டும்? அவன் என்னை அடக்கியாள அனுமதிப்பதா?”

“உம்... சரி, பின்னர் என்ன நடந்தது?”

“விஷயங்கள் மோசமாயின. நீதி மன்றத்திலிருந்து தொலைபேசி அழைப்பு வந்தது. நீதிபதி வைல்டாபெஸ்ட் தனது அறையில் என்னைக் காண விரும்பியதாகவும், அடுத்த பத்து நிமிடங்களில் நான் அங்குப் போகாவிட்டால், தலைகள் உருளும் என்பதும் தான் அச்செய்தி. அவரை உங்களுக்கு நினைவிருக்கிறதா? அவருக்கு ‘நீதிபதி காட்டு விலங்கு’ என்று செல்லப் பெயர் வைத்ததே நீங்கள் தானே! உங்கள் ஃபெராரியை அவரது கார் நிறுத்துமிடத்தில் நிறுத்தியதற்காக அவர் உங்களைத் தண்டித்து விட்டதால் நீங்கள் அவருக்கு அப்பெயரை வைத்தீர்கள்,” என்று நான் சிரித்தபடி நினைவு கூர்ந்தேன்.

“அதையெல்லாம் நீ நினைவுபடுத்தியாக வேண்டும். இல்லையா?” என்றார் ஜூலியன். அவரது கண்களில், முன்னர் அவரைப் பிரபலமாக்கிய குறும்புத் தனமான ஒளி மின்னியது.

“எனவே, நான் நீதிமன்றத்துக்கு விரைந்து சென்று அங்கிருந்த எழுத்தர்களில் ஒருவருடன் மற்றொரு சர்ச்சையில் இறங்கினேன். மறுபடியும் அலுவலகத்திற்குத் திரும்புவதற்குள், இருபத்தியேழு தொலைபேசிச் செய்திகள் எனக்காக காத்துக்

கொண்டிருந்தன. எல்லாமே 'அவசரம்' என்ற குறிப்புடன். இன்னும் சொல்லத் தேவையா?"

"தயவு செய்து சொல்."

"வீட்டிற்குப் போகும் வழியில், ஜென்னி என்னை அழைத்து எனது மாமியாரின் வெகு பிரசித்திமான "பை" (Pie) சிற்றுண்டி ஒன்றை எடுத்துக் கொண்டு வரும்படிக் கூறினாள். பிரச்சினை என்னவென்றால், அவர் வீட்டிற்குச் செல்லுவதற்கான சாலையில் நான் திரும்பியபோது, மிகமிக மோசமான போக்குவரத்து நெரிசலில் நான் சிக்கிக் கொண்டேன். ஆக, நெருக்கடி நிறைந்த சாலையில், 95 டிகிரி வெப்பத்தில், மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டவனாய், காலம் கைநழுவிப் போய்க் கொண்டிருக்கிறது என்ற உணர்வில் நான் அமிழ்ந்து போனேன்."

"இதில் உனது பதில் செயல், உணர்வு என்ன?"

"போக்குவரத்தைச் சபித்தேன்," என்றேன் நான். முற்றிலும் உண்மையுடன். "எனது காருக்குள் இருந்தவாறு உரக்கச் சத்தமிட்டுக் கத்திக் கொண்டிருந்தேன். நான் என்ன சொன்னேன் என்று தெரிந்து கொள்ள விரும்புகிறீர்களா?"

"எனது மனமெனும் செழிப்பான தோட்டத்திற்கு அது நல்ல ஊட்டமளிக்கும் என்று எனக்குத் தோன்றவில்லை," என்றார் ஜூலியன், புன்னகையுடன்.

"ஆனால், அது ஒரு நல்ல கழிவு உரமாகக் கூடும்."

"வேண்டாம், நன்றி. நாம் இதோடு நிறுத்திக் கொள்ளலாம். ஒரு கணம் உனது தினத்தைப் பார். இவ்வாறு மறுபார்வை செய்யும்போது, மறுபடி உனக்கு ஒரு வாய்ப்பு கிடைத்தால் ஒரு வேளை, வேறு விதமாகச் செய்திருக்கலாம் என்று எண்ணக் கூடியவை சில இருக்கும்.

"கண்டிப்பாக."

"அவை என்ன?"

"உம்ம்... முதலாவதாக, மிகவும் சரியாக, சிறப்பாக உள்ள உலகில், நான் இன்னும் சற்று சீக்கிரம் விழித்தெழுவேன். இவ்வாறு ஓடிக் கொண்டிப்பது எனக்கே நல்லதல்ல என்று தான் நான் நினைக்கிறேன். காலையில் சற்று அதிகமான நிம்மதியுடன், அன்றைய தினத்தின் வேலைக்குள் சுலபமாக நுழைவதை நான் விரும்புகிறேன். நீங்கள் முன்னர் எனக்குச் சொன்ன ரோஜாவின் இதயம் செய்முறை நன்றாக இருக்கும் என்று தோன்றுகிறது. மேலும், காலை உணவின் போது, எனது குடும்பத்தினரும் என்னுடன் இருக்க வேண்டும் என்று தான் நான் விரும்புகிறேன் - சாப்பிடுவது ஒரு கோப்பை கஞ்சியாக இருந்தாலும்! அது எனக்கு ஒரு கூடுதலாக சமநிலையைக் கொடுக்கும். ஜென்னியுடனும் குழந்தைகளுடனும் போதுமான அளவு நேரம் செலவிடுவதில்லை என்று தான் நான் எப்போதும் உணர்கிறேன்."

“ஆனால், இது ஒரு மிகச் சரியான உலகம், நீ ஒரு சரியான வாழ்வைக் கொண்டுள்ளாய். உனது தினத்தைக் கட்டுப்படுத்திச் சீரமைக்கும் சக்தி உன்னிடம் கண்டிப்பாக உள்ளது. நல்ல எண்ணங்களை எண்ணுவதற்கான சக்தியும் உன்னிடம் உள்ளது. உனது கனவுகளை நனவாக்கி வாழ்வதற்கான சக்தியும் உன்னிடம் நிச்சயம் உள்ளது.” என்றார் ஜூலியன். அவரது குரல் உரத்து ஒலித்தது.

“அதை நான் உணர்ந்து கொண்டுள்ளேன். என்னால் மாற முடியும் என்று உண்மையிலேயே உணரத் தொடங்கியுள்ளேன்.”

“பிரமாதம். உனது தினத்தைப் பற்றித் தொடர்ந்து சிந்தனை செய்,” என்று உத்தரவிட்டார் அவர்.

“நல்லது. எனது கட்சிக்காரரிடம் கூச்சல் போட்டிருக்க வேண்டாம் என்று நினைக்கிறேன். நீதிமன்றத்து எழுத்தர்களிடம் விவாதம் பண்ணியிருக்கத் தேவையில்லை. போக்குவரத்தைக் கண்டு சுத்தியிருக்கவும் வேண்டாமே என்று எண்ணுகிறேன்.”

“போக்குவரத்து உன்னைப் பற்றிக் கவலைப்படவில்லை, இல்லையா?”

“அது தொடர்ந்து போக்குவரத்தாகத் தான் இருக்கிறது.”

“சொந்தச் சிந்தனைச் சடங்கின் சக்தியை நீ இப்போது பார்க்கிறாய் என்று நான் நினைக்கிறேன். நீ செய்து கொண்டிருப்பதையும், உனது நாளை எவ்வாறு கழிக்கிறாய், என்ன எண்ணங்களை எண்ணுகிறாய் என்பதையும் பார்க்கும் வாயிலாக, மேம்பாட்டை அளவிடுவதற்கான ஒரு அளவுகோலை உனக்கே கொடுத்துக் கொள்கிறாய். நாளைய தினத்தை மேம்படுத்துவதற்கான ஒரே வழி, இன்று என்ன தவறாகச் செய்தோம் என்று பார்ப்பது தான்.”

“பின்னர், அது மீண்டும் நடக்காதபடி பார்த்துக் கொள்வதற்கான, ஒரு தெளிவான திட்டத்தை ஏற்படுத்துதல் இல்லையா?” என்றேன் நான்.

“மிகவும் சரி. தவறுகள் செய்வதில் எந்தத் தவறும் கிடையாது. தவறுகள் வாழ்க்கையின் ஒரு பகுதி. அவை வளர்ச்சிக்கு அத்தியாவசியமானவை. ‘மகிழ்ச்சி என்பது நல்ல முடிவுகளை எடுப்பதிலிருந்து வருகிறது. நல்ல முடிவுகளை எடுப்பது அனுபவத்தினால் செய்ய முடிகிறது. அனுபவமோ, தவறான முடிவுகள் எடுப்பதால் கிடைக்கிறது’ என்ற பழமொழியைப் போல் தான் இதுவும்.

“செய்த தவறுகளையே மீண்டும், நாள்தோறும் ஆனால் திரும்பத் திரும்பச் செய்வதில் ஏதோ பெரிய கோளாறு உள்ளது. இது, முற்றிலும் சுய உணர்வு இன்றி இருப்பதைத் தான் காட்டுகிறது. இந்தச் சுய உணர்வு தான் மனிதர்களை விலங்குகளிலிருந்து வேறுபடுத்திச் காட்டுகிறது.”

“இதற்கு முன்னர் நான் இதைக் கேட்டதேயில்லை.”

“ஆனால் இதுதான் உண்மை. மனிதனால் மட்டுமே தனக்கு வெளியே வந்து நின்று, தான் செய்யும் செயல்களில் எது சரி, எது தவறு என்று ஆராய்ந்து பார்க்க முடியும். ஒரு நாயினால் இதைச் செய்ய முடியாது. ஒரு பறவையால் இதைச் செய்ய முடியாது. ஒரு குரங்கினால் கூட இதைச் செய்ய முடியாது. ஆனால் உன்னால் முடியும். சொந்தச் சிந்தனையின் சடங்கு என்பது முற்றிலும் இதைப் பற்றியது தான். உனது தினங்களிலும், வாழ்க்கையிலும், எது சரி, எது தவறு என்பதைக் கண்டுபிடி. பின்னர், உடனடியாக மேம்பாடுகளைச் செய்யத் தொடங்கு.”

“நிறையச் சிந்திக்க வேண்டியுள்ளது, ஜூலியன். நிறையச் சிந்திக்க வேண்டியுள்ளது,” என்றேன் நான். ஆழமாக எண்ணமிட்டபடியே.

“**ஒளிவிடும் வாழ்க்கையின் ஆறாவது சடங்காகிய, அதிகாலையின் கண்விழித்தல்** என்ற சடங்கைப் பற்றி எண்ணமிடலாமா?”

“ஆஹா! என்ன வந்து கொண்டிருக்கிறது என்று எனக்குத் தெரியும் என்று நினைக்கிறேன்,” என்றேன் நான்.

“தொலைதூரப் பாலைவன சோலையான சிவானாவில் நான் கற்றுக் கொண்ட அறிவுரைகளில் மிகச் சிறந்த ஒன்று, சூரியனோடு கண்விழித்து எழுந்து, இன்றைய தினத்தைச் சிறப்பாகத் தொடங்குவது தான். நம்மில் பலரும் நமக்குத் தேவையான அளவை விடவும் மிக அதிகமாகத் தூங்குகிறோம். சராசரி நபருக்கு ஆறுமணி நேர உறக்கம் போதுமானது. நல்ல ஆரோக்கியத்துடனும், விழிப்புணர்வுடனும் இருப்பதற்கு இது போதுமானது. தூக்கம் என்பது ஒரு வழக்கம் தான், எல்லா வழக்கத்தையும் போல நீ விரும்பும் விளைவைச் சாதிப்பதற்கு உன்னையே பயிற்றுவித்துக் கொள்ள முடியும். இதைப் பொறுத்தவரையில், குறைவாகத் துங்குவதே அது.”

“ஆனால், நான் வெகு சீக்கிரமாக எழுந்து விட்டால், உண்மையிலேயே, மிகவும் களைப்பாகத் தான் உணர்க்கிறேன்,” என்றேன் நான்.

“முதல் சில தினங்களுக்கு, நீ மிகவும் களைப்பாகத் தான் உணர்வாய். இதை நான் தாராளமாக ஒப்புக் கொள்கிறேன். சீக்கிரமாகக் கண்விழிக்கும் முதல் வாரம் முழுவதும் இவ்வாறு உணரக் கூடும். ஒரு நீண்டகால, கூடுதலான பயனுக்கான, குறுகியகால, குறைவான வேதனை இது என்று இதைப்பார். ஒரு புதிய பழக்கத்தை நிலைநிறுத்தும் போது ஒரு சிறிய அளவு அசௌகரியத்தை எப்போதும் உணர்வாய். ஒரு புதிய ஜோடி காலணிகளை அணிவது போலத் தான் இதுவும், முதலில் அவற்றை அணிந்து கொள்வது சற்றே கடினமாக இருக்கும். ஆனால், விரைவில் அவை பாதங்களோடு நன்கு பொருந்தி விடும். நான் உனக்கு முன்னரே சொன்னது போல, சொந்த வளர்ச்சியின் ஒரு முன்னோடி, வலியாகும். இதைக்கண்டு பயப்படாதே, பதிலுக்கு அதைத் தழுவி, ஏற்றுக் கொள்.”

“சரி, காலையில் முன்னதாக எழுவதற்கு என்னைப் பயிற்றுவித்துக் கொள்வதை நான் விரும்புகிறேன். முதலில், ‘முன்னதாக’ என்பதற்கு என்ன பொருள் என்று கூறுங்கள்?”

“மற்றொரு அருமையான கேள்வி. மிகச்சரியான நேரம் என்று எதுவும் இல்லை. உன்னுடன் இதுவரையில் நான் பகிர்ந்து கொண்டுள்ள எல்லாவற்றையும் போலவே, உனக்கு எது ஏற்றதாக உள்ளதோ அதைச் செய், யோகி இராமனின் எச்சரிக்கையை நினைவில் வைத்துக் கொள். எதையுமே மிகுதியாகச் செய்யக் கூடாது. எல்லாவற்றையும் அளவுடன் செய்ய வேண்டும்.”

“சூரியனுடன் எழுவது என்பது மிக அதிகமாகத் தான் தோன்றுகிறது.”

“உண்மையில் அது அப்படியல்ல. ஒரு புதிய நாளின் முதல் கதிர்களின் எழிலுடன் கண்விழித்து எழுவதைக் காட்டிலும் இயல்பான, இயற்கையான செயல்கள் மிகக் குறைவு. சூரிய ஒளி, சுவர்க்கத்தின் பரிசு என்று முனிவர்கள் கருதினார்கள். சூரிய ஒளியில் அதிகநேரம் இருப்பதை அவர்கள் தவிர்த்த போதிலும், அதில் நனைவதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். அதிகாலைச் சூரிய ஒளியில் விளையாட்டாக அவர்கள் நடனமாடுவதை அடிக்கடி காணலாம். அசாதாரணமான அவர்களின் நீண்ட ஆயுளுக்கு இதுவும் மற்றொரு காரணம் என்று நான் திடமாக நம்புகிறேன்.”

“நீங்கள் சூரிய ஒளியில் நனைவதுண்டா?”

“கண்டிப்பாக! சூரியன் என்னைப் புதுப்பிக்கிறது. நான் களைப்படையும் போது, அது எனது மனநிலையைப் பிரகாசமாக வைக்கிறது. கீழை நாடுகளின் புராதனக் கலாசாரத்தின் படி, சூரியன், ஆன்மாவுடன் தொடர்பு கொண்டிருப்பதாகக் கருதப்பட்டது. மக்கள் அதை வழிபட்டார்கள். தமது ஆன்மாக்களோடு கூட, தமது பயிர் பச்சைகளையும் அது செழிப்படையச் செய்ததாக எண்ணிப் போற்றினார்கள். சூரியன், உனது சக்தியை வெளிப்படச் செய்து உனது உணர்வு மற்றும் உடல்ரீதியான உயிரோட்டத்தை மறுபடி நிலைபெறச் செய்யும். அளவோடு பயன்படுத்தப்பட்டால், அது ஒரு அற்புதமான மருத்துவன். அடடா நான் விஷயத்தைவிட்டு எங்கோ போய்க் கொண்டிருக்கிறேன். நான் சொல்ல வந்த கருத்து தினமும் அதிகாலையில் கண்விழித்து எழ வேண்டும் என்பது தான்.”

“ம்ம்ம்... இந்தச் சடங்கை நான் எப்படி எனது அன்றாட நடவடிக்கைகளுக்குள் புகுத்துவது?”

“இதோ சில துணுக்கு அறிவுரைகள். முதலாவதாக, உறக்கத்தின் அளவு இல்லை. தரமே முக்கியமானது என்பதை ஒருபோதும் மறந்து விடாதே, பத்து மணி நேரம், கலைந்த தூக்கத்தைக் காட்டிலும், ஆறுமணி நேர இடையூறு இல்லாத, ஆழமான உறக்கம் மேலானது. உனது உடலைத் தனது இயற்கையான ஆரோக்கிய நிலைக்குத் திரும்பக் கொண்டு வருவதற்காக அதன் குறைபாடுகளைச் சரி செய்வதகாக இயல்புச்

செயல்பாடுகள் நடைபெறுவதற்குத் தேவையான ஓய்வைத் தருவது தான் உறக்கம். அன்றாட வாழ்வின் இறுக்கங்களாலும், போராட்டங்களாலும், உடலின் இயற்கையான ஆரோக்கிய நிலை குறைந்து விடுகிறது. முனிவர்களின் பல பழக்கங்களும், ஒருவர் அதிக நேரம் உறங்க வேண்டும் என்பதற்கு மாறாக நல்ல தரமான ஓய்வைப் பெற வேண்டும் என்ற கொள்கையின் அடிப்படையில் அமைந்தவையே.''

''உதாரணமாக, யோகி இராமன், இரவு எட்டு மணிக்குப் பின்னர் உணவு எதையும் உட் கொள்ளவே மாட்டார். அவ்வாறு உண்பதன் மூலம் தொடங்கப்படுகிற சீரண இயக்கமானது தனது உறக்கத்தின் தரத்தைக் குறைத்து விடும் என்று அவர் கூறுவார். முனிவர்களின் மற்றொரு எடுத்துக்காட்டான பழக்கமாவது, உறங்கச் செல்வதற்கு முன்னதாக, மென்மையான யாழிசையின் பின்னணியுடன் தியானம் செய்வதாகும்.

''இதற்கான காரணம் என்ன?''

''ஜான், நான் உன்னை ஒன்று கேட்கட்டுமா? தினமும் இரவு உறங்கப் போவதற்கு முன்னால் நீ என்ன செய்வாய்?''

''எனக்குத் தெரிந்த பலரும் செய்வது போல, நான் ஜென்னியுடன் உட்கார்ந்து செய்தித் தொலைக்காட்சிளைப் பார்ப்பேன்.''

''நான் அவ்வாறு தான் நினைத்தேன்,'' என்றார் ஜூலியன். மர்மமாகத் தனது கண்களைச் சிமிட்டியபடி.

''எனக்கு ஒன்றும் புரியவில்லை. உறங்கப் போவதற்கு முன், கொஞ்சம் செய்தியைப் பார்த்தால் என்ன தவறு?''

''நீ உறங்கச் செல்வதற்கு முன்னும், பின்னும் உள்ள பத்து நிமிடங்கள், உனது ஆழ் மனதை வெகுவாகப் பாதிக்கக் கூடியவை ஆகும். அந்தச் சமயங்களில் மிக மிக உயர்வான, ஊக்க மூட்டுகின்ற, அமைதியூட்டுகின்ற எண்ணங்கள் மட்டுமே உன் மனதினுள் செலுத்தப்பட வேண்டும்.''

''மனம் என்னவோ ஒரு கம்ப்யூட்டர் என்பது போல் நீங்கள் பேசுகிறீர்கள்.''

''ஏறத்தாழ அதுதான் சரியான கண்ணோட்டம். நீ அதனுள் என்ன போடுகிறாயோ, அதையே தான் நீ அதிலிருந்து பெறுகிறாய். அதைவிடவும் மிக முக்கியமான உண்மை என்னவென்றால், உன் மனதைத் திட்டமிட்டு அமைப்பவன் நீ மட்டுமே, உள்ளே செல்லும் எண்ணங்களைத் தீர்மானிப்பதன் வாயிலாக அதிலிருந்து என்ன வெளியே வருகிறது என்பதையும் மிகச் சரியாக நீ தான் தீர்மானிக்கிறாய். எனவே, உறங்கச் செல்வதற்கு முன்னர், செய்திக்காட்சியைப் பார்க்காதே. யாருடனும் சர்ச்சை செய்யாதே. ஏன், அன்றைய நாளின் செயல்பாடுகளைக் கூட உனது

மனத்திரையில் ஓட விடாதே. மனதையும், உடலையும் தளர்வாக இருக்கச் செய். விரும்பினால் ஒரு கோப்பை மூலிகைத் தேநீர் அருந்து. ஏதேனும் மெல்லிய இசையைக் கேட்டவண்ணம், செழுமையான, நல்ல பயனளிக்க வல்ல உறக்கத்தினுள் மிதந்து செல்லத் தயார்படுத்திக் கொள்."

"இது பொருளுள்ளதாகத் தோன்றுகிறது. உறக்கம் நன்றாக இருந்தால், அந்த அளவுக்குக் குறைவான உறக்கமே எனக்குத் தேவைப்படும்."

"மிகவும் சரி, புராதன விதியாகிய இருபத்தி ஒன்றை நினைவில் கொள். எதையும் தொடர்ந்து இருபத்தியொரு தினங்கள் செய்வதால், அது ஒரு பழக்கமாக நிலை நிறுத்தப்பட்டுவிடும். எனவே அதிகாலையில் எழும் செயல் மிகவும் சிரமமாக இருக்கிறது என்பதால் அதைக் கைவிட்டு விடுவதற்கு முன்னர், சுமார் மூன்று வாரங்கள் அதை விடாமல் செய். அதற்குள் அது உன் வாழ்வின் ஒரு அங்கமாகிவிடும். வெகு விரைவில் உன்னால் 5.30 அல்லது 5.00 மணிக்கே எழுந்து விட முடியும். மற்றொரு மகத்தான நாளின் மகோன்னதத்தைச் சிறப்பை ரசித்து அனுபவிப்பதற்குத் தயாராக மிகச் சுலபமாக இதை உன்னால் செய்யமுடியும்."

"சரி, ஆக, நான் தினமும் காலை ஐந்தரை மணிக்கு எழுந்து விடுகிறேன் என்று வைத்துக் கொள்வோம். எழுந்தபின் நான் என்ன செய்வது?"

"உன் கேள்விகள், நீ சிந்திக்கிறாய் என்பதைக் காட்டுகின்றன. நண்பா, நான் அதைப் பாராட்டுகிறேன். ஒரு முறை படுக்கையை விட்டு எழுந்துவிட்டால், செய்யக் கூடியவை பல உள்ளன. மனதில் இருத்திக் கொள்ள வேண்டிய அடிப்படை விதியானது. உனது நாளை நன்றாகத் தொடங்க வேண்டியதன் முக்கியத்துவம் தான். நான் கூறியதுபோல, விழித்த முதல் பத்து நிமிடங்களில் நீ எண்ணுகிற எண்ணங்களும், செய்கிற செயல்களும், மீதமுள்ள உனது தினத்தின் மீது குறிப்பிடத்தக்க பாதிப்பை ஏற்படுத்துகின்றன."

"உண்மையாகவா?"

"முற்றிலும் தீவிரமாக, உண்மையாக! நேர்மறையான எண்ணங்களை எண்ணு. உன்னிடம் இருக்கின்ற அத்தனை விஷயங்களுக்காகவும், ஒரு நன்றியுள்ள பிரார்த்தனையைச் செய். உனது நன்றிக்கான பட்டியலைத் தயார் செய். இனிமையான இசையைக் கேள். சூரியன் உதயமாவதைப் பார் அல்லது இயற்கையான சுற்றுச்சூழலில் ஒரு உலாச் செல் உனக்கு விருப்பமானால், முனிவர்கள் தமக்குச் சிரிக்க வேண்டும்போல் தோன்றினாலும் தோன்றாவிட்டாலும், அதிகாலையில் மகிழ்ச்சிச்சாறு பொங்க வேண்டும் என்பதற்காக, தம்மைத்தாமே சிரிக்க வைத்துக் கொள்வார்கள்."

"ஜூலியன், எனது கோப்பையைக் காலியாக வைத்துக் கொள்ள நான் மிகச் சிரமப்பட்டு முயன்று வருகிறேன். ஒரு கத்துக்குட்டி என்ற அளவில் இதை நான் நன்றாகவே செய்துள்ளேன் என்று நீங்கள் ஒப்புக் கொள்வீர்கள் என்று

நினைக்கிறேன். ஆனால், இமயமலையின் உயரத்தில் வாழும் முனிவர்கள் கூட்டம் தான் என்றாலும் கூட இது என்னவோ வெகு வினோதமாகத் தான் உள்ளது.''

''ஆனால், அது அப்படியல்ல, ஒரு சராசரி நான்கு வயதுப் பிள்ளை ஒரு நாளில் சுமார் எத்தனை முறை சிரிக்கிறது என்று உத்தேசமாகச் சொல், பார்க்கலாம்.''

''ஐம்பது?''

''பதினைந்து என்று சொல்,'' என்றார் ஜூலியன். திருப்தியுடன் சிரித்த வண்ணம். ''நான் செல்வது புரிகிறதா? சிரிப்பு ஆன்மாவுக்கான மருந்து. உனக்கு சிரிக்க வேண்டும் என்று தோன்றா விட்டாலும் கூட, கண்ணாடியின் முன்னின்று ஓரிரு நிமிடங்கள் சிரி. உன்னால் நிச்சயமாக அற்புதமாக உணராமல் இருக்கவே முடியாது. **வில்லியம் ஜேம்ஸ்,** பின்வருமாறு கூறினார். 'நாம் மகிழ்ச்சியாக இருப்பதால் சிரிப்பதில்லை. சிரிப்பதால் மகிழ்ச்சியாக இருக்கிறோம்.' எனவே உனது தினத்தை வெகு உற்சாகமாக மகிழ்ச்சியுடன் தொடங்கு, சிரி, விளையாடு, உன்னிடம் உள்ள எல்லாவற்றுக்காகவும் நன்றி சொல். ஒவ்வொரு தினமும் அற்புதமாகப் பயன் தருவதாக இருக்கும்.''

''உங்களது தினத்தை நேர்மறையான மனநிலையில் தொடங்குவதற்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள்?''

''உண்மையில், நான் ஒரு வெகு நவீனமான **காலை நிகழ்ச்சி நிரலை** ஏற்படுத்தியுள்ளேன். அதில் ரோஜாவின் இதயம் தொடங்கி, புதிதாகப் பிழியப்பட்ட பழச்சாறை அருந்துவது வரையில் எல்லாமே அடங்கியுள்ளது. ஆனால் உன்னுடன் பகிர்ந்து கொள்ள விரும்பும் ஒரு குறிப்பிட்ட செய்முறை உள்ளது.''

''இது முக்கியமான விஷயம் போலத் தோன்றுகிறதே.''

''அப்படித்தான், கண்விழித்த சிறிது நேரத்திற்கெல்லாம், உனது தனியான மௌன இடத்திற்குப் போ. அசைவற்று மையம் கொண்டு இரு. பின்னர் உன்னையே இந்தக் கேள்வியைக் கேட்டுக் கொள், 'இன்றைய தினம் எனக்குக் கடைசியான தினமாக இருந்தால், இன்று நான் என்ன செய்வேன்?' இக்கேள்வியின் பொருளுக்குள், உண்மையிலேயே நுழைந்து பார்ப்பது தான் இங்கு முக்கியமான விஷயம். மனதுக்குள் நீ செய்யக் கூடிய செயல்கள், நீ சந்திக்கப் போகும் நபர்கள், ரசிக்கப் போகும் தருணங்கள், இவற்றையெல்லாம் பட்டியலிடு. இவற்றையெல்லாம் மிக அதிமான சக்தியுடன் நீ செய்வதாகக் கற்பனை செய்து மனக்கண்ணால் பார்த்துக் கொள். உனது குடும்பத்தினர் மற்றும் நண்பர்களை எவ்வாறு நடத்துவாய் என்று கற்பனை செய். இன்றைய தினம், இந்தப் பூமியிலே உனது இறுதி தினமாக இருந்தால், முற்றிலும் அறிமுகமற்ற நபர்களைக் கூட எப்படி நடத்துவாய் என்று எண்ணிப் பார். நான் உனக்கு முன்னரே சொல்லியுள்ள படி, ஒவ்வொரு நாளையும்

உனது இறுதி நாளைப் போல நீ வாழ்ந்தால், உனது வாழ்க்கை ஒரு அற்புதத் தன்மையைப் பெற்று விடும்.”

“இது என்னை ஒளிரும் வாழ்க்கையின் ஏழாவது சடங்கிற்குக் கொண்டுவருகிறது - அது தான் **இசையின் சடங்கு**”

“இது எனக்கு மிகவும் விருப்பமானதாக இருக்கும் என்று நினைக்கிறேன்” என்று நான் கூறினேன்.

“நிச்சயம் நீ விரும்புவாய். முனிவர்கள், தமது இசையை வெகுவாக விரும்பினர். சூரியன் கொடுத்த அதே ஆன்மிக ஊக்கத்தை அது அவர்களுக்குத் தந்தது. இசை இவர்களைச் சிரிக்க வைத்து, நடனமாட வைத்தது. கூடச் சேர்ந்து பாட வைத்தது. உனக்கும் இசை அதையே செய்யும் இசையின் சக்தியை ஒருபோதும் மறந்து விடாதே. அதனுடன் ஒவ்வொரு நாளும் கொஞ்ச நேரம் செலவிடு. அதை நீ வேலைக்குச் செல்லும் போது காரில் ஒரு ஒலிநாடாவை இசைத்துக் கூடக் கேட்கலாம். நீ சோர்வாகவோ களைப்பாகவோ உணர்ந்தால், ஏதேனும் இசையைக் கேள். எனக்குத் தெரிந்த மிகச் சிறந்த ஊக்கிகளில் இசையும் ஒன்று.”

“உங்களைத் தவிர என்று நான் வெகு ஆர்வத்துடன் கூறினேன். “நீங்கள் பேசுவதைக் கேட்கும் போதே நான் அற்புதமாக உணர்கிறேன். ஜூலியன் நீங்கள் உண்மையிலேயே மாறிவிட்டீர்கள். அதுவும், வெளியில் மட்டும் அல்ல. உங்களது கசப்பான அவநம்பிக்கை போய்விட்டது - உங்கள் முந்தைய எதிர்மறை உணர்வும் மறைந்தே விட்டது. உண்மையிலேயே நீங்கள் மிகவும் அமைதியாக ஆகி விட்டுள்ளீர்கள் இன்றிரவு எனது நெஞ்சைத் தொட்டுவிட்டீர்கள்”

“ஏய், இன்னமும் நிறைய விஷயம் உள்ளது,” என்று ஜூலியன் கூவினார். தனது முஷ்டியை உயர்த்தி அசைத்தபடி, “மேலே தொடர்ந்து போகலாம்.”

“சரி, **எட்டாவது சடங்கு, பேசப்பட்ட சொல்லின் சடங்காகும்**. காலை, மதியம், மற்றும் இரவு உச்சாடனம் செய்வதற்கென மந்திரங்கள் முனிவர்களிடம் இருந்தன. தம்மை மையம் கொண்டு வலிமையாவும், மகிழ்ச்சியாகவும் இருக்கச் செய்வதில் இப்பயிற்சி மிகவும் திறன் வாய்ந்ததாக உள்ளது என்று அவர்கள் என்னிடம் சொன்னார்கள்.”

“மந்திரம் என்பது என்ன?” மந்திரம் என்பது, நேர்மறையான விளைவை ஏற்படுத்த வல்ல, ஒரு வார்த்தைக் கோவையின்றி வேறு எதுவும் இல்லை. சமஸ்கிருத மொழியில், ‘மன் என்றால் மனம், ‘திரா’ என்றால் விடுவித்தல், எனவே மந்திரம் என்பது மனதை விடுவிக்கவென வடிவமைக்கப்பட்ட ஒரு சொற்கோர்வை. ஜான் என்னை நம்பு. மந்திரங்கள் இந்த நோக்கத்தை வெகு வலிமையாக நிறைவேற்றுகின்றன.”

“உங்களது அன்றாட செயல்களில் மந்திரங்களை நீங்கள் பயன்படுத்துகிறீர்களா?”

“நிச்சயமாகச் செய்கிறேன். எங்கு சென்றாலும் அவை எனது நம்பிக்கைக்குப் பாத்திரமான துணைவர்களாக இருக்கின்றன. நான் பேருந்தில் சென்று கொண்டிருந்தாலும் நூலகத்திற்கு நடந்த வண்ணம் உலகம் ஓடிக் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தாலும், இந்த மந்திரங்களின் மூலமாக, எனது உலகத்தில் எல்லாம் நன்றாக உள்ளது என்பதை இடைவிடாமல் நிலை நிறுத்திய வண்ணம் இருக்கிறேன்.”

“எனவே மந்திரங்கள். பேசப் படுபவனவா?” “

அவற்றை உச்சரிக்க வேண்டும் என்று அவசியமல்ல. எழுதப் படுகின்ற நம்பிக்கைச் சொற்றொடர்களும் மிகவும் திறன் வாய்ந்தவையே. ஆனால், ஒரு மந்திரத்தை உரக்கச் சொல்லி உச்சாடனம் செய்வது எனது உற்சாகத்திற்கு ஒரு அற்புதமான ஊக்கமாக இருப்பதை நான் கண்டுள்ளேன். ஊக்குவிக்கப் படவேண்டும் என்று நான் உணரும்போது, நான் ஊக்குவிக்கப்பட்டுள்ளேன், ஒழுங்கமைக்கப்பட்டுளேன், மற்றும் சக்தியூட்டப்பட்டுள்ளேன் என்று உரக்க இருநூறு அல்லது முன்னூறு முறை திரும்பத் திரும்பச் சொல்லக்கூடும். நான் வளர்த்துக் கொண்டுள்ள உயர்வான தன்னம்பிக்கையை நிலைநிறுத்திக் கொள்ள நான் வலிமையுடன் திறமையுடனும் சாந்தமாகவும் இருக்கிறேன். என்பதை திரும்பத் திரும்பச் சொல்லுவேன் என்னையே இளமையுடனும் உயிர்த் துடிப்புடனும் வைத்துக் கொள்ளவும் நான் மந்திரங்களைப் பயன்படுத்துகிறேன்” என்று ஜூலியன் ஒப்புக் கொண்டார்.

“ஒரு மந்திரம் எப்படி உங்களை இளமையாக வைத்திருக்க முடியும்?”

“வார்த்தைகள் மனதை வெகு அழுத்தமான முறையில் பாதிக்கின்றன. அவை பேசப்பட்டாலும் எழுதப் பட்டாலும் மிக சக்தி வாய்ந்த தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பிறரிடம் கூறுகின்றவை முக்கியமானதாக இருந்தாலும் உன்னிடமே என்ன சொல்லிக் கொள்கிறாய் என்பது அதைவிட முக்கியமானதாகும்.”

“சுய பேச்சு?”

“மிகச் சரியாக, நீ எதைப் பற்றி நாள் முழுதும் நினைத்துக் கொண்டிருக்கிறாயோ, அதுவாகவே தான் இருக்கிறாய். மேலும் நீ உன்னிடமே நாள் முழுவதும் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறாயோ அதுவாகவும் இருக்கிறாய். நீ வயதானவனாகவும், களைத்துப் போனவனாகவும் இருப்பதாகச் சொல்லிக் கொண்டிருந்தால், இந்த மந்திரம் உனது புற உண்மை நிலையாக வெளிப்படும். நீ பலவீனமாகவும், உற்சாகமற்றும் இருப்பதாகச் சொல்லிக் கொண்டிருந்தால், இதுவும் கூட உனது உலகின் இயல்பாகி விடும். ஆனால், ஆரோக்கியமாகவும், சக்தியுடனும் முழுமையான உயிர்த்துடிப்புடனும் இருப்பதாகச் சொல்லிக் கொண்டால், உனது

வாழ்க்கை முற்றிலுமாக மாற்றியமைக்கப்பட்டுவிடும். நீ உன்னிடமே சொல்லிக் கொள்ளும் சொற்கள் உனது சுய உருவத்தைப் பாதிக்கின்றன. உனது சுய உருவம், நீ செய்யும் செயல்களைப் பாதிக்கிறது.

உதாரணமாக, உனது சுய உருவமானது பயனுள்ள எதையும் செய்வதற்கான தன்னம்பிக்கையற்ற ஒரு நபரைப் பற்றியது என்றால், இந்தக் குணத்துடன் ஒத்துப் போகின்ற செயல்களைத் தான் உன்னால் செய்ய முடியும் மாறாக, உனது சுய உருவம் அச்சமற்ற ஒரு நபருடையதானால் உனது செயல்கள் எல்லாமே இந்தக் குணத்துடன் ஒத்துப் போகிறவையாகத் தான் இருக்கும். உனது சுய உருவம் என்பது தன்னைத் தானே நிறைவேற்றிக் கொள்கிற ஒரு தீர்க்க தரிசனம் எனலாம்."

"அது எப்படி?"

"உன்னால், ஒன்றைச் செய்ய முடியாது என்று நீ நம்பினால், உதாரணமாக, உனக்கு மிகச் சரியான வாழ்க்கைத் துணையைக் கண்டு கொள்வது அல்லது மன அழுத்தமற்ற வாழ்வை வாழ்வது என – உனது நம்பிக்கைகள் உன் சுய உருவத்தைப் பாதிக்கும். பின்னர் அந்தச் சரியான துணையைக் கண்டறியவோ அல்லது அமைதியான வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ளவோ தேவையான முயற்சிகளை எடுப்பதிலிருந்து உனது சுய உருவம் உன்னைத் தடை செய்து விடும் அந்தத் திசை நோக்கி நீ செய்யக் கூடிய எந்த முயற்சிகளையும் அது நாசம் செய்து விடும்."

"இது ஏன் இவ்வாறு உள்ளது?"

"மிகவும் சாதாரணமான விஷயம் இது உனது சுய உருவம் ஒரு விதத்தில் உனது ஆளுநராக உள்ளது. தன்னுடன் முரண்பாடான எந்த முறையிலும் அது உன்னைச் செயல்பட விடாது. இங்கு மகிழ்வூட்டும் விஷயம் என்னவென்றால், நீ உனது சுய உருவத்தை மாற்றிக் கொள்ள முடியும். உன் வாழ்வைத் தரமுள்ளதாகச் செய்ய உதவாத எதையும் உன்னால் எப்படி மாற்றிக் கொள்ள முடிகிறதோ அதேபோல, இதையும் உன்னால் மாற்றிக் கொள்ள முடியும்."

"இந்தக் குறிக்கோளை எட்டுவதற்கு மந்திரங்கள் மகத்தான வழியாகும்."

"எனது அக உலகை நான் மாற்றிக் கொள்ளும் பொழுது என் புற உலகையும் நான் மாற்றிக் கொள்கிறேன்" என்றேன் நான், கடமை தவறாமல்.

"ஆஹா எவ்வளவு விரைவாக நீ கற்றுக் கொள்கிறாய்" என்றார் ஜூலியன். தான் முன்னர் முன்னணி வழக்குரைஞராக இருந்தபோது அடிக்கடி பயன்படுத்திய கட்டை விரலை உயர்த்திய எல்லாம் நலமே என்ற சைகையைச் செய்தபடி.

"இது நம்மை ஒளிவிடும் வாழ்வின் ஒன்பதாவது சடங்கிற்கு இட்டுச் செல்கிறது. மிக அழகாக இது தான் இணக்கமான குணாதிசயத்தின் சடங்கு. நாம் இப்போது பேசிக் கொண்டிருந்த சுய உருவம் பற்றிய கருத்தின் ஒரு பக்க விளைவு என்று இதைச் சொல்லலாம் எளிமையாகச் சொல்வதானால் இந்தச் சடங்கு, உனது

குணாதிசயத்தை வளர்த்தெடுக்க, தினசரி கூடுதலாக வளர்த்தெடுக்கும் செயலைச் செய்வது தேவையென ஆக்குகிறது. உனது குணாதிசயத்தை உறுதி செய்வது உன்னையே நீ எவ்வாறு பார்க்கிறாயோ அதையும், நீ செய்கின்ற செயல்களையும் பாதிக்கிறது. நீ செய்கின்ற செயல்கள் உனது பழக்கங்களை உருவாக்குகின்றன. இது மிகவும் முக்கியமானது. ஏனெனில் உனது பழக்கங்கள், உன்னை உனது தலைவிதிக்கு இட்டுச் செல்கின்றன.''

ஒருவேளை யோகி இராமன் இதைப் பற்றிப் பின்வருமாறு கூறிய போது மிகச் சரியாகச் சொன்னார். ''நீ ஒரு எண்ணத்தை விதைத்து செயலை அறுவடை செய்கிறாய். செயலை விதைத்து, ஒரு பழக்கத்தை அறுவடை செய்கிறாய். ஒரு பழக்கத்தை விதைத்து ஒரு குணாதிசயத்தை அறுவடை செய்கிறாய். ஒரு குணாதிசயத்தை விதைத்து ஒரு தலைவிதியை அறுவடை செய்கிறாய்.''

''எனது குணாதிசயத்தை வளர்த்துக் கொள்ள நான் என்ன விதமான செயல்களை செய்ய வேண்டும்?''

''உனது நற்பண்புகளை வளர்த்தெடுக்க கூடிய எதையும் நீ செய்யலாம். 'நற்பண்பு' என்பதன் மூலம் நான் எதைக் குறிக்கிறேன் என்று நீ என்னைக் கேட்பதற்கு முன்னால், நான் அதை விளக்கி விடுகிறேன். இமயமலையில் வாழ்ந்து வந்த ஞானிகள், நன்னெறியுள்ள ஒரு வாழ்க்கை தான் அர்த்தமுள்ள வாழ்க்கை என்று திடமாக நம்பினார்கள். எனவே, தமது செயல்கள் முழுவதையும் காலத்தால் அழியாத கொள்கைகளால் அவர்கள் நிர்வகித்துக் கொள்கின்றனர்.''

''ஆனால், தமது நோக்கத்தால் தமது வாழ்க்கையை நிர்வகித்துக் கொள்கிறார்கள் என்று நீங்கள் முன்னர் சொன்னீர்களே?''

''ஆம், இதுவும் சரிதான். ஆனால், இந்தக் கொள்கைகளுக்கு ஏற்றவாறு வாழ்வது அவர்களது வாழ்க்கை முறையில் உள்ளடங்கியிருந்தது. இவை அவர்களது முன்னோர்களால் ஆயிரக்கணக்கான ஆண்டுகள், தமது இதயத்திற்கு மிக நெருக்கமாக வைத்துப் போற்றிக் காத்தவையாகும்.''

''இந்தக் கொள்கைகள் என்ன ஜுலியன்?'' என்று நான் கேட்டேன்.

''எளிமையாகச் சொல்வதானால், அவையாவன: **உழைப்பு, கருணை, பணிவு, பொறுமை, நேர்மை மற்றும் துணிவு** ஆகும். உனது செயல்கள யாவும் இந்தக் கொள்கைகளுடன் இணைந்து ஏற்றவாறு அமைந்துள்ளபோது, ஒரு ஆழமான உள்ளிணக்கம் மற்றும் அமைதி என்ற உணர்வை நீ அனுபவிப்பாய். இவ்வாறு வாழ்வதன் மூலம் ஆன்மீக வெற்றியை நீ நிச்சயம் எட்டுவாய். இது எவ்வாறு எனில், சரியானதை நீ செய்து கொண்டிருப்பாய். இயற்கையின் பிரபஞ்சத்தின் விதிகளுக்கு ஏற்ப செயல்பட்டுக் கொண்டிருப்பாய். அப்போது தான் மற்றொரு பரிமாணத்தின் சக்தியை நீ பயன்படுத்தத் தொடங்குவாய்.

"அதை ஒரு உயர்சக்தி என்று வேண்டுமானாலும் நீ அழைத்துக்கொள். இதே சமயத்தில்தான் உனது வாழ்க்கை சாதாரணம் என்ற நிலையிலிருந்து விலகி அசாதாரணம் என்ற ஒரு வட்டத்திற்குள் நுழைகிறது. நீயும் உனது உயிருருவின் புனிதத்தன்மையை உணரத் தொடங்குகிறாய். வாழ்நாள் முழுவதிலுமான ஞானத்தெளிவிற்கு இதுவே முதல் படி."

"இந்த அனுபவத்தை நீங்கள் ருசித்ததுண்டா?" என்று கேட்டேன்.

"ஆம் நான் ருசித்துள்ளேன். நீயும் ருசிப்பாய் என்று நான் நம்புகிறேன். சரியானவற்றை செய். உனது உண்மையான குணாதிசயத்திற்கு இணக்கமான வகையில் செயல்படு முழுமையான நன்னெறியுடன் நடந்துகொள். உனது இதயத்தால் வழி நடத்தப்பட்டு மீதமுள்ளது தன்னைத்தானே கவனித்துக் கொள்ளும். நீ ஒரு போதும் தனியாக இல்லை தெரியுமா?" என்றார் ஜுலியன்.

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?"

"ஒரு வேளை பின்னொரு சமயத்தில் இதை நான் விளக்கிச் சொல்வேன். இப்போதைக்கு உனது குணாதிசயத்தை வளர்த்தெடுத்துக் கொள்ள ஒவ்வொரு நாளும் சிறு சிறு செயல்களை நீ செய்ய வேண்டும் என்பதை மட்டும் மனதில் வைத்துக்கொள், எமர்சன் கூறியபடி குணாதிசயம் என்பது புத்திசாலித்தனத்தையும் விட உயர்வானது. ஒரு மகத்தான ஆன்ம வாழ்விற்கும் சரி சிந்திப்பதற்கும் சரி. வலிமையானதாக இருக்கும். நான் இப்பொழுது குறிப்பிட்ட கொள்கைகளுடன் ஒத்துப்போகும் வகையில் நீ செயல்படும் பொழுது உனது குணாதிசயம் வளர்த்தெடுக்கப்படுகிறது. நீ இதைச் செய்யத் தவறிவிட்டால் உண்மையான சந்தோஷம் உனது கைக்குக் கிட்டாமல் எப்பொழுதுமே நழுவிப்போகும்."

"அப்பொழுது, இறுதிச்சடங்கு?"

"இதுவே அதிமுக்கியமான எளிமையின் சடங்கு. இறுதிச்சடங்கின்படி நீ ஒரு எளிமையான வாழ்க்கையை வாழ வேண்டும். யோகி இராமன் கூறியபடி 'ஒருவர் விஷயங்களின் நெருக்கடியில் ஒருபோதும் வாழக்கூடாது'. உனக்கு பிரதானமானவற்றின் மீது மட்டுமே, உண்மையிலே பொருளுள்ள செயல்களில் மட்டுமே, கவனம் செலுத்து. உனது வாழ்க்கை அடைசல் இல்லாமல் பயன் தருவதாக அசாதாரணமான அமைதியுடன் இருக்கும். இந்த வாக்குறுதியை நான் உனக்கு அளிக்கிறேன்" என்றார்.

"அவர் சொன்னது சரிதான். தானியத்தை பதரிலிருந்து பிரிக்கத் தொடங்கியவுடனே எனது வாழ்க்கை நல்லிணக்கத்தால் நிறைந்தது. எனக்கு பழகிப் போயிருந்த அதீத அசுர வேகத்தில் வாழ்வதை நான் நிறுத்தினேன். சூறாவளியின் நடுமையத்தில் வாழ்வதை நிறுத்தினேன். அதற்கு பதிலாக நிறுத்தி நிதானித்து, பழமொழியில் குறிப்பிடப்பட்டுள்ள வழியில் இருக்கிற ரோஜாக்களை நுகர்வதற்கு நான் நேரம் எடுத்துக்கொள்ளத் தொடங்கினேன்."

"எளிமையை வளர்த்துக்கொள்ள வேண்டி நீங்கள் என்ன செய்தீர்கள்?"

"விலையுயர்ந்த ஆடைகளை உடுத்துவதை நிறுத்தினேன். ஒரு நாளைக்கு ஆறு செய்தித்தாள்களைப் படிக்கும் பழக்கத்தை விட்டொழித்தேன். எல்லோருக்குமே எப்பொழுதுமே நான் உதவத் தயாராக இருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தைத் தவிர்த்தேன். மரக்கறி உண்பவனாக மாறினேன். குறைவாக உண்ணத் தொடங்கினேன். அடிப்படையில் என் தேவைகளை குறைத்துக்கொண்டேன். இதோ பார், ஜான், உனது தேவைகளை குறைத்துக் கொள்ளாவிட்டால் நீ ஒருபோதும் முழுமையடைய மாட்டாய். லாஸ் வேகாசில் சுற்றுகின்ற சூதாட்டச் சக்கரத்தில் இன்னும் ஒரே ஒரு சுற்று என்று தனது அதிர்ஷ்ட எண் வரும் என்ற நம்பிக்கையில் ஒரு சூதாடி காத்துக் கொண்டிருப்பது போலத்தான் நீயும் இருப்பாய். உன்னிடம் இருப்பதை விடவும் அதிகமாக வேண்டும் என்று எப்பொழுதுமே விரும்பிக்கொண்டிருப்பாய். ஆக எவ்வாறு நீ சந்தோஷமாக இருக்க முடியும்?"

"ஆனால் முன்னதாக நீங்கள் மகிழ்ச்சி என்பது சாதிப்பதில் இருந்து வருகிறது என்று என்னிடம் சொன்னீர்கள் இப்பொழுது எனது தேவைகளை குறைத்துக் கொண்டு குறைவானவற்றுடன் திருப்திக் கொள்ளும்படி கூறுகிறீர்கள். இது முரண்பாடாகத் தெரியவில்லையா?"

"மிகச் சிறப்பான கேள்வி. ஜான் சொல்லப் போனால் வெகு புத்திசாலித்தனமானதும் கூட இது முரண்பாடானது போலத் தோன்றக் கூடும். ஆனால் அவ்வாறல்ல. உனது கனவுகளை நனவாக்கிக் கொள்ளக் கடுமையாக உழைப்பதன் வாயிலாக வாழ்நாள் முழுவதிலுமான இன்பம் வரத்தான் செய்கிறது. முன்னேறிச் சென்றுகொண்டுள்ள போது தான் நீ மிகச் சிறப்பாகச் செயல்படுகிறாய். வானவில்லின் முடிவில் உள்ள கைக்கெட்டாத அந்த, தங்கக்குடத்தை கண்டுபிடிப்பதுடன் உனது மகிழ்ச்சியை இணைக்காமல் இருப்பதுதான் இங்கு மையக்கருத்து. உதாரணமாக பல மில்லியன்களை சொந்தம் கொண்டிருந்தவனாக நான் இருந்தபோதும் கூட வெற்றி என்பது என்னைப் பொறுத்த வரையில் எனது வங்கிக் கணக்கில் முன்னூறு மில்லியன் டாலர்களை கொண்டிருப்பது தான் என்று எனக்கு நானே கூறிக் கொண்டிருந்தேன். அது அழிவிற்கான ஒரு செய்குறிப்பாகும்."

"முன்னூறு மில்லியனா?" என்றேன் நான், நம்பிக்கையின்றி.

"முன்னூறு மில்லியன் தான். எனவே என்னிடம் எவ்வளவு தான் இருந்தாலும் நான் திருப்தியடைவே இல்லை. எப்பொழுதும், துக்கத்துடன் இருந்தேன். அது பேராசையைத் தவிர வேறு எதுவுமில்லை. இப்பொழுது இதை என்னால் சுதந்திரமாக ஒப்புக்கொள்ள முடிகிறது. ***மைதாஸ் அரசனின்*** *கதையைப் போல அது இருந்தது. அந்தக் கதையை நீ கேட்டிருக்க வேண்டுமே."*

"கண்டிப்பாக! அவன் தங்கத்தை அளவுக்கதிகமாக நேசித்தான். எனவே தான் தொட்டதெல்லாம் பொன்னாக வேண்டுமென்று பிரார்த்தித்தான். அவனது

பிரார்த்தனை பலித்தபோது, அவன் பெருமகிழ்வுற்றான். ஆனால் அவனது மகிழ்ச்சி நெடுநேரம் நீடிக்கவில்லை. ஏனெனில் அவனால் எதையுமே சாப்பிட முடியவில்லை. அவன் தொட்டவுடனே உணவு தங்கமாக மாறிவிட்டது.''

''சரி, அதுபோல நான் பணத்தை விரட்டிக்கொண்டிருந்ததால், என்னிடமே இருந்தவற்றை என்னால் அனுபவித்து மகிழ முடியவில்லை. ஒரு சமயம் என்னால் ரொட்டியையும் தண்ணீரையும் தவிர வேறு எதையும் சாப்பிடமுடியவில்லை என்றால் பார்த்துக் கொள்ளேன்,'' என்றார் ஜூலியன். அவரது தோற்றம் ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கியிருந்ததுபோல இருந்தது.

''நீங்கள் உண்மையாகத்தான் சொல்கிறீர்களா? எப்பொழுதுமே மிகச்சிறந்த உணவு விடுதிகளில் உங்களது பிரபலமான நண்பர்கள் சூழ நீங்கள் உணவருந்தினீர்கள் என்றுதான் நான் எப்பொழுதும் நினைத்தேன்.''

''அது பழைய நாட்களில் இதைப்பற்றி நிறையப் பேருக்கு தெரியாது. ஆனால் கட்டுக் கடங்காமல் போயிருந்த எனது வாழ்க்கைமுறையின் பாரம், எனக்கு இரத்தம் கசியும் வயிற்றுப் புண்ணைக் கொடுத்திருந்தது. என்னால் ஒரு ஹாட் டாக்கை (இறைச்சி அடைத்த பன்ரொட்டி) கூடச் சாப்பிட முடியாமல் நான் நோயாளியாகிப் போனேன் என்ன ஒரு வாழ்க்கை! அத்தனை பணம் இருந்தும் நான் ரொட்டியையும், தண்ணீரையும் மட்டும் தான் சாப்பிட முடிந்தது. உண்மையில் எனது நிலை பரிதாபமாகத் தான் இருந்தது.'' ஜூலியன் சட்டென்று தன்னை கட்டுப் படுத்திக்கொண்டு நிறுத்தினார்.

''ஆனால் நான் ஒன்றும் இறந்த காலத்தில் வாழ்பவன் அல்ல. வாழ்க்கையின் மகத்தான பாடங்களில் அதுவும் ஒன்று. நான் முன்னரே கூறியுள்ளபடி, வேதனை என்பது ஒரு சக்திவாய்ந்த ஆசான். வேதனையைத் தாண்டி அப்பால் செல்ல வேண்டுமானால், நான் முதலில் அதை அனுபவித்து உணர வேண்டியிருந்தது. அது மட்டும் இல்லையென்றால் நான் இன்று இருக்கும் இடத்தில் இருக்கமாட்டேன்,'' என்றார் அவர் சகிப்புத்தன்மை நிறைந்தவராய்.

''எனது சொந்த வாழ்க்கையில், எளிமையின் சடங்கை எவ்வாறு கொண்டு வருவது என்பது பற்றி உங்களிடம் ஏதேனும் கருத்துக்கள் உள்ளனவா?'' என்று நான் கேட்டேன்.

''நீ செய்யக்கூடியவை நிறைய உள்ளன. சிறு சிறு விஷயங்கள் கூட ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும்.''

''எதைப் போல?''

''ஒவ்வொரு முறை தொலைபேசி ஒலிக்கும் பொழுதும், அதை எடுப்பதை நிறுத்து, குப்பையான அவசியமற்ற கடிதங்களை வாசிப்பதை நிறுத்து. வாரத்தில் மூன்று நாட்கள் வெளியில் சாப்பிடுவதை நிறுத்து, உனது கோல்ஃப் கிளப்பில்

உறுப்பினராக இருப்பதை நிறுத்தி விட்டுக் குழந்தைகளுடன் அதிக நேரம் செலவிடு. வாரத்தில் ஒரு நாளேனும், உனது கைகடிகாரம் இல்லாமல் செலவிடு. அவ்வப்பொழுது சூரியன் உதயமாவதை கவனித்துப்பார். உனது செல்போனை விற்றுவிடு, பேஜரை தூக்கி எறி. இன்னும் நான் தொடர்ந்து சொல்ல வேண்டுமா?'' என்றார் ஜூலியன்.

''எனக்குப் புரிகிறது. ஆனால், செல்போனை விற்றுவிடுவதா?'' என்றேன் கவலையுடன். தன் தொப்புள் கொடியை அறுத்துவிட வேண்டும் என்று மருத்துவர் கூறுவதை கேட்ட குழந்தை போல நான் உணர்ந்தேன்.

''நான் கூறியது போல, எனது பயணத்தின் வாயிலாக நான் கற்றுக்கொண்டுள்ள ஞானத்தை உன்னுடன் பகிர்ந்து கொள்வது எனது கடமையாகும். உனது வாழ்க்கையை சரிவர நடத்திச் செல்ல, எல்லா செய்முறைகளையும் நீ பயன்படுத்த வேண்டும் என்பது அவசியமில்லை. அவற்றை முயன்று பார்த்து, உனக்கு சரியென்று தோன்றுபவற்றை பயன்படுத்து.''

''எனக்கு தெரியும். எதுவுமே மிகுதியாக அல்ல. எல்லாமே அளவுடன்.''

''ரொம்ப சரி.''

''உங்களது செய்முறைகள் ஒவ்வொன்றும் வெகு மகத்தானவையாகத் தோன்றுகின்றன என்பதை நான் நிச்சயம் ஒப்புக் கொண்டாக வேண்டும். ஆனால் முப்பதே நாட்களில் அவை எனது வாழ்வில் ஆழமான, தீர்க்கமான மாற்றங்களை உண்மையிலே கொண்டு வருமா?''

''முப்பதே நாட்களை விடவும் குறைவான நாட்களும் ஆகலாம். அதிகமாகவும் ஆகலாம்," என்றார் ஜூலியன் தனக்கே உரிய குறும்புத் தனமான முகபாவத்துடன்.

''அடடா? தொடங்கியாயிற்றா? விளக்கிச் சொல்லுங்கள் ஓ ஞானியே!''

''என்னை ஜூலியன் என்று அழைத்தாலே போதுமானது. 'ஞானி' என்ற பெயர் எனது கடிதத்தாளில் பயங்கரமாகத் தோன்றும்'' என்று அவர் விளையாட்டாகச் சொன்னார். ''இதைச் செய்ய முப்பது தினங்களுக்கும் குறைவாகத்தான் எடுக்கும் நான் சொன்னதன் காரணம், உண்மையான வாழ்க்கை மாற்றம் தானாக உருவாகும் ஒன்றாகும்.''

''தானாக உருவாவதா?''

''ஆம், கண் சிமிட்டும் நேரத்தில் அது நிகழ்ந்து விடுகிறது. உனது உயிருருவின் அடி ஆழத்தில் உனது வாழ்க்கையை அதன் உயர்வான மட்டத்திற்கு நீ உயர்த்திச் செல்ல இருப்பதாக தீர்மானம் செய்த அந்தக் கணத்திலே அது ஏற்படுகிறது. அத்தருணத்திலே நீ ஒரு மாறிவிட்ட மனிதன் - தனது வாழ்வின் நிர்ணயிக்கப்பட்ட பாதையில் நுழைந்து விட்டவன்.''

“பின்னர் ஏன் முப்பது நாட்களுக்கும் அதிகமாக ஆகக்கூடும்?”

“மேற்காணும் செய்முறைகள் மற்றும் கருவிகளைப் பயன் படுத்துவதன் மூலம் இந்த வினாடியிலிருந்து ஆறு மாதத்திற்குள் நீ குறிப்பிடத்தக்க முன்னேற்றங்களை கட்டாயம் காண்பாய் என்று நான் உனக்கு உறுதியளிக்கிறேன். கூடுதல் சக்தியை நீ கொண்டிருப்பாய். அதிகமான உருவாக்கும் திறனுடன், குறைவான கவலைகளையும் கொண்டிருக்கக் காண்பாய். உன் வாழ்வின் ஒவ்வொரு அம்சத்திலும் குறைவான அழுத்தத்தை நீ உணர்வாய். இதை சொல்லிவிட்ட பின்னர், மற்றொன்றையும் நான் சொல்லத்தான் வேண்டும். முனிவர்களின் வழிமுறைகள் அதிரடி வைத்தியமல்ல. நாள்தோறும் உனது வருங்கால வாழ்நாள் முழுவதும் பயன்படுத்தப்பட வேண்டிய அழிவற்ற பாரம்பரியங்கள் அவை. அவற்றைப் பயன்படுத்துவதை நீ நிறுத்திவிட்டால், மெல்ல மெல்ல உனது பழைய பழக்க வழக்கங்களுக்குள் நழுவிச்சென்று விடுவதை நீ காண்பாய்.”

ஒளிவிடும் வாழ்வின் பத்துச் சடங்குகளைப் பற்றி விளக்கியதும், ஜூலியன் சற்று நிறுத்தினார். “நான் தொடர்ந்து பேசவேண்டுமென்று நீ விரும்புகிறாய் என்று எனக்கு தெரியும். எனவே நான் அவ்வாறே சொல்கிறேன். உன்னுடன் பகிர்ந்து கொள்ளும் விஷயங்களைப் பற்றி நான் தீவிரமாகப் பகிர்ந்து கொண்டிருப்பதால், இரவு முழுவதும் உன்னை விழித்திருக்கச் செய்வதிலும் எனக்கு தயக்கம் ஒன்றுமில்லை. ஒருவேளை இன்னும் கொஞ்சம் ஆழமாகச் சொல்வதற்கு இதுவே நல்ல சமயமாக இருக்கக்கூடும்.”

“நீங்கள் என்ன சொல்கிறீர்கள்? இன்றிரவு நான் கேட்டுள்ள எல்லாமுமே மிக ஆழமானவை என்று நான் நினைக்கிறேன்,” என்றேன் வியப்புடன்.

“நான் உனக்கு விளக்கியுள்ள இரகசியங்கள் நீயும், நீ தொடர்பு கொண்டுள்ள அனைவரும் நீங்கள் விரும்புகிற வாழ்க்கையை உருவாக்கிக்கொள்ள உங்களுக்கு உதவும். ஆனால் மேலோட்டமாகத் தெரிவதைக்காட்டிலும், சிவானா முனிவர்களின் தத்துவத்தில் அதிகமான விஷயங்கள் உள்ளன. நான் இதுவரை கற்றுக் கொடுத்துள்ளவை மிகவும் சுலபமாக நடைமுறைப் படுத்தவுள்ள நல்ல விஷயங்களாகும். ஆனால் நான் சுட்டிக் காட்டியுள்ள கொள்கைகளின் ஊடே ஓடிக்கொண்டிருக்கிற அடிப்படையான ஆன்மீக ஓட்டத்தைப்பற்றி உனக்குக் கொஞ்சம் தெரிந்திருக்க வேண்டும். இப்பொழுது நான் பேசிக்கொண்டிருக்கும் விஷயம் பற்றி உனக்கு புரியவில்லை என்றால் தற்சமயம் அதைப்பற்றி கவலைப்படாதே. சும்மா அதை உள்வாங்கிக் கொண்டு அசைப் போட்டுக் கொண்டிரு, பின்னர் அதை சீரணித்துக் கொள்ளலாம்.”

“மாணவன் தயாராக இருக்கும் போது, ஆசான் தோன்றுவாரா?”

“மிகச்சரியாக,” என்றார் ஜூலியன், இப்பொழுது புன்னகையுடன்.

“நீ எப்பொழுதும் சொல்வதை சட்டென்று புரிந்துகொள்பவன்தான்.”

“சரி. இப்பொழுது அந்த ஆன்மீக விஷயங்களைப் பற்றி கூறுங்கள்” என்றேன் உற்சாகத்துடன். அப்பொழுது மணி கிட்டத்தட்ட காலை இரண்டரை என்பதை நான் உணரவில்லை.

“இந்தப் பிரபஞ்சத்தின் சூரியன், சந்திரன், வானம் மற்றும் அனைத்து அற்புதங்களும் உனக்குள்ளே பொதிந்துள்ளன. இந்த அற்புதங்களை உருவாக்கிய அதே அறிவாற்றல் தான் உன்னையும் உருவாக்கியுள்ளது. உன்னைச் சுற்றிலும் உள்ள எல்லாமே அதே ஆதாரத்திலிருந்து தான் வருகிறது. நாம் எல்லோரும் ஒன்று.”

“எனக்குப் புரியவில்லை என்று நினைக்கிறேன்.”

“இந்த உலகத்தின் மீது உள்ள ஒவ்வொரு பொருளும் ஒவ்வொரு ஆன்மாவை கொண்டுள்ளது. அனைத்து ஆன்மாக்களும் ஒரு உருவாக பிரவகிக்கின்றன. இதுதான் பிரபஞ்சத்தின் ஆன்மாவாகும். ஜான், உனது மனதையும், உனது சொந்த உயிருருவையும், நீ ஊட்டமளித்துப் பேணும்பொழுது, உண்மையில், பிரபஞ்சத்தின் ஆன்மாவிற்கு நீ உணவூட்டிக் கொண்டுள்ளாய். உன்னையே நீ மேம்படுத்திக் கொள்ளும்போது, உன்னைச் சுற்றியுள்ள எல்லோருடைய வாழ்க்கையையும் நீ மேம்படுத்துகிறாய். உனது கனவுகளின் திசையில் தன்னம்பிக்கையுடன் முன்னேறிச் செல்வதற்கான துணிவு உன்னிடம் இருக்கும் பொழுது பிரபஞ்சத்தின் சக்தியை நீ கிரகித்துக்கொள்ளத் துவங்குகிறாய். நான் முன்னரே உன்னிடம் சொல்லியபடி, நீ எதைக் கேட்கிறாயோ அதை வாழ்வு உனக்கு தருகிறது. அது எப்பொழுதும் நீ சொல்வதை கேட்டுக்கொண்டிருக்கிறது.”

“எனவே சுய ஆளுமை மற்றும் கைஜென் எனக்கு நானே உதவிக்கொள்ள எனக்கு உதவுவதன் வாயிலாக, பிறருக்கு உதவ எனக்கு உதவுமா?”

“ஏறத்தாழ அதுபோலத்தான். உனது மனதுக்கு நீ செழுமையூட்டும் பொழுது, உனது உடல் மீது அக்கறை காட்டும் பொழுது உனது ஆன்மாவிற்கு ஊட்டமளிக்கும் பொழுது நான் என்ன சொல்கிறேன் என்பதை நீ சரியாகப் புரிந்துகொள்வாய்.”

“ஜூலியன், நீங்கள் எனக்கு நல்லது தான் சொல்கிறீர்கள் என்று எனக்கு தெரியும். ஆனால் ஒரு 215 பவுண்டுள்ள எடையுள்ள குடும்பஸ்தனுக்கு சுய ஆளுமை, சுய கட்டுப்பாடு இவையெல்லாம் மிக உயர்வான இலட்சியங்களாகும். இதுவரையில் வாடிக்கையாளர்களை வளர்த்துக் கொள்வதில் தான் அதிக நேரம் செலவழித்துள்ளேன். நான் இதில் தோல்வியுற்றால் என்னவாகும்?”

“தோல்வி என்பதே முயற்சி செய்வதற்கான துணிவு இல்லாமல் இருப்பதுதான். இதைத் தவிர அது வேறு ஒன்றுமில்லை. பெரும்பாலான மனிதர்களுக்கும், அவர்களது கனவுகளுக்கும் இடையில் இருப்பது தோல்வி பற்றிய பயமே.”

“எந்த ஒரு முயற்சியிலும் வெற்றி பெறுவதற்கு தோல்வி அத்தியாவசியமானதாக உள்ளது. தோல்வி நம்மை சோதித்துப் பார்த்துவளரச் செய்கிறது. ஞானம்

பெறுவதற்கான பாதையில் நம்மை வழிநடத்துவதுடன், பாடங்களையும் நமக்கு சொல்லித் தருகிறது. ஒவ்வொரு முறை சரியான இலக்கை எட்டுகிற அம்பானது நூறு முறை இலக்கை தவற விட்டுவிட்ட தோல்வியின் விளைவு என்று **கீழை நாட்டு ஆசான்கள்** கூறுகின்றனர். இழப்பின் வாயிலாக லாபம் பெறுவது என்பது இயற்கையின் ஒரு அடிப்படை விதியாகும். தோல்வியைக் கண்டு ஒரு போதும் அஞ்சாதே. தோல்வி உனது நண்பன்.''

“தோல்வியை வரவேற்று ஏற்றுக்கொள்வதா?” என்றேன் நான் அவ நம்பிக்கையுடன்.

“பிரபஞ்சமானது துணிவுள்ளவர்களுக்கு நலன் பயக்கிறது. உனது வாழ்க்கையை அதன் உச்சகட்டத்திற்கு உயர்த்துவது என்று நீ ஒரு முறை தீர்மானித்து விட்டால் போதும். உனது ஆன்மாவின் உறுதியே உனக்கு வழிகாட்டும். ஒவ்வொருவரது தலைவிதியும், அவரவர் பிறக்கும்போதே முடிவு செய்யப்பட்ட ஒன்று என்று யோகி இராமன் கருதினார். பாதையானது மகத்தான அரும்பொருள்களால் நிரப்பப்பட்டுள்ள ஒரு அற்புத தளத்திற்கு இட்டுச்செல்கிறது. அப்பாதையில் நடந்து செல்வதற்கான துணிவை வளர்த்துத் கொள்வது. அவரவர்களின் கையில் தான் உள்ளது.''

இன்னும் அவர் பகிர்ந்து கொண்ட கதை ஒன்றை நான் உன்னிடம் சொல்ல விரும்புகிறேன். பண்டைய இந்தியாவில் கடலை அடுத்து இருந்த மாளிகை ஒன்றுக்குக் சொந்தமான ஒரு கொடிய அரக்கன் இருந்தான். பல ஆண்டு காலம் அரக்கன் வெளியுலகில் போர்களில் ஈடுபட்டிருந்ததால் அவனில்லாத அக்காலத்தில் அருகிலிருந்த சிறிய கிராமத்தின் சிறுவர்கள் பலரும், தைரியமாக அவனது மாளிகையின் தோட்டத்திற்குள் புகுந்து அங்கு விளையாடுவதுண்டு. ஒரு நாள் அரக்கன் திரும்பி விட்டான். சிறுவர்களைக் கண்டதும் கடும்கோபம் கொண்டு அவர்களை தன் தோட்டத்திலிருந்து துரத்தி விட்டான். ‘ஒருபோதும் இங்கே திரும்ப வராதீர்கள்’. என்று கத்திவிட்டு, கதவையும் இழுத்து மூடிவிட்டான். பின்னர் சிறுவர்கள் உள்ளே நுழையாதிருக்கும் பொருட்டு தோட்டத்தைச் சுற்றி உயரமான பளிங்குச் சுவர் ஒன்றையும் எழுப்பிவிட்டான்.

பனிக்காலம் வந்தது. இந்தியாவின் வட பகுதியின் இயல்புப்படி பெருமளவு பனி பெய்து அதிக குளிராக அக்காலம் இருந்தது. அரக்கனோ குளிர் நீங்கி கோடையின் வெப்பம் உடனே வராதா என்று ஏங்கினான். வசந்த காலமும் வந்தது. மாளிகையின் கீழ்ப்பகுதியில் இருந்த கிராமத்தை சுற்றிலும் வண்ண மலர்களை அள்ளித் தெளித்தது. ஆனால் பனிக்காலத்தின் சில்லிடும் விரல்கள் அரக்கனது தோட்டத்தை மட்டும் விட்டு விலகவே இல்லை. பின்னர் ஒரு நாள் அரக்கன் தன் தோட்டத்திலேயும் வசந்தத்தின் நறுமணத்தையும், சூரிய ஒளியின் வெண்மையையும் உணர்ந்தான். வசந்தம் வந்துவிட்டது, வசந்தம் வந்துவிட்டது என்று பெரு மகிழ்வுடன் கூவியவனாய். தனது மாளிகையின் கதவுகளை திறந்து கொண்டு தோட்டத்திற்குள் விரைந்தான். அங்கு, அவன் கண்ட காட்சி அவன் சற்றும் எதிர்பாராத விதமாக இருந்தது. கிராமத்துச் சிறுவர்கள் எப்படியோ சுவரைக் கடந்து உள்ளே வந்து விளையாடிக்

கொண்டிருந்தனர். அவர்களது வருகையால் குளிரால் சில்லிட்டு போயிருந்த அத்தோட்டம் உயிர்பெற்று, மலர்களால் நிறைந்து காணப்பட்டது. எல்லாச் சிறுவர்களும் மகிழ்ச்சியுடன் விளையாடிச் சிரித்த வண்ணம் இருந்தனர். ஒரு சிறுவனைத் தவிர. அரக்கனும் ஓரக்கண்ணால் அவனைப் பார்த்துவிட்டான். இச்சிறுவன் பிற குழந்தைகளை விடவும் உருவத்தில் சிறியவனாகத் தோற்றமளித்தான். அவன் குள்ளமாக இருந்ததால், அவனால் உயரமான தோட்ட மதில் சுவரை தாண்டித் தோட்டத்திற்குள் நுழைய முடியவில்லை. அவனது கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து கொண்டிருந்தது. அரக்கனோ அச்சிறுவன் பால் இரக்கங்கொண்டவனாய் தனது வாழ்விலே முதன் முறையாக தனது கொடிய செயல்களுக்காக வருந்தினான். நான் அச்சிறுவனுக்கு உதவுவேன், என்று கூறிய வண்ணம் அவனை நோக்கிச் சென்றான். அரக்கன் வேகமாக வருவதை கண்ட அச்சிறுவர்கள் அனைவரும் உயிருக்கு அஞ்சியவர்களாய், தோட்டத்திலிருந்து ஓடிவிட்டனர். ஆனால் மெலிந்த சிறுவனோ, துணிவுடன் நின்றான். 'நான் இந்த அரக்கனைக் கொல்வேன். நமது விளையாடும் இடத்தையும் பாதுகாப்பேன்,' என்றான்.

"அரக்கன் சிறுவனின் அருகில் நெருங்கி தனது கரங்களை அகல விரித்து, 'நான் உனது நண்பன். இந்த மதிலை கடந்து தோட்டத்திற்குள் நுழைய, உனக்கு உதவ வந்துள்ளேன். இனி இது உங்களது தோட்டமாக இருக்கும்" என்றான். தனது தோழர்களின் மத்தியில் ஒரு வீரனாகிவிட்ட அச்சிறுவனும் பெரும் மகிழ்ச்சி கொண்டான். தனது கழுத்தில் அணிந்திருந்த தங்கமாலையைக் கழற்றி அரக்கனிடம் கொடுத்து, இது எனது அதிர்ஷ்ட மாலை. நீ இதை வைத்துக்கொள், என்றான்.

"அன்றைய தினம் தொடங்கி சிறுவர்கள் அந்த அற்புதத் தோட்டத்திலே அரக்கனுடன் விளையாடி வந்தனர். ஆனால் அந்த மெலிந்த சிறுவன் மட்டும் மறுபடி வரவே இல்லை. காலப்போக்கில் அரக்கன் நோய் வாய்ப்பட்டு உடல் நலிந்தான். சிறுவர்கள் தொடர்ந்து தோட்டத்தில் விளையாடி வந்தனர். ஆனால் அரக்கனால் அவர்களோடு விளையாட முடியவில்லை. தனது அமைதியான அந்த நாட்களில் அரக்கன் அந்தச் சிறுவனைப் பற்றியே அதிகம் எண்ணமிட்டான்."

"ஒரு நாள் கடுங்குளிராக இருந்த பனிக்காலத்தில் அரக்கன் தனது சன்னல் வழியே வெளியே பார்த்துக் கொண்டிருந்த போது, ஒரு அற்புதக் காட்சி ஒன்றைக் கண்டான். தோட்டம் முழுவதும் பனியால் போர்த்தப் பட்டிருந்த போதிலும் அதன் நடுவில் ஒரு பிரமாதமான ஒரு ரோஜாச் செடி, வண்ண மலர்கள் பூத்துக் குலுங்க காணப்பட்டது. அதன் அருகில் அரக்கனுக்கு மிகவும் பிடித்தமான சிறுவன் நின்று கொண்டு. அழகுறப் புன்னகைத்த வண்ணம் இருந்தான். அரக்கனோ மகிழ்ச்சியில் துள்ளி குதித்த வண்ணம் வெளியே ஓடிச்சென்று அவனைக் கட்டித் தழுவிக்கொண்டான்.

'இத்தனை நாட்கள் நீ எங்கே போயிருந்தாய் நண்பா? நான் உன்னை காணாமல் ஏங்கி விட்டேன்' என்று அரக்கன் அச்சிறுவனிடம் கேட்டான். சிறுவனும் சற்று நேரம் அமைதியாகச் சிந்தித்துவிட்டு பின்வருமாறு கூறினான். 'பல

ஆண்டுகளுக்கு அப்பால் நீ என்னை மதிலுக்கு அப்பால் தூக்கி விட்டு, உனது அழகிய தோட்டத்திற்குள் நுழைய விட்டாய். இப்பொழுது நான் உன்னை எனது தோட்டத்திற்கு அழைத்துப்போக வந்துள்ளேன்'.

"அரக்கனைக் காணவேண்டி பின்னர் வந்த சிறுவர்கள் அவனது உயிரற்ற உடல் தரைமீது கிடப்பதை கண்டனர். அவனது உடல் முழுவதும் தலையிலிருந்து கால் வரை ஆயிரக்கணக்கான ரோஜா மலர்களால் மூடப்பட்டிருந்தது."

"அச்சிறுவனைப் போல எப்பொழுதுமே துணிவுடன் இரு", ஜான் உனது நிலையில் திடமாக நின்று உனது கனவுகளை பின் தொடர்ந்து செல். அவை உனது விதிக்கு உன்னை இட்டுச் செல்லும். உனது தலைவிதியைப் பின்தொடர்ந்து சென்றால். பிரபஞ்சத்தின் அற்புதங்களுக்குள் அது உன்னை அழைத்துச் செல்லும். எப்பொழுதுமே பிரபஞ்சத்தின் அற்புதங்களைப் பின் தொடர்ந்து செல். ரோஜாக்கள் நிறைந்த ஒரு தனிச்சிறப்பு வாய்ந்த தோட்டத்திற்குள் அது உன்னைக் கொண்டு செல்லும்."

அவரது கதை என்னை வெகுவாக நெகிழச் செய்து என் நெஞ்சைத் தொட்டு விட்டது என்று சொல்வதற்காக நான் ஜூலியனைப் பார்த்த போது அதிர்ச்சியுற்றேன். ஏனெனில் கற்பாறை போன்று கடினமாக இறுகிவிட்டிருந்த அந்த சட்டப்புலி, வழக்குகளின் வீரன். வாழ்நாளின் பெருமளவு காலத்தை பிரபலமானவர்களையும், செல்வந்தர்களையும் பாதுகாக்கக் கழித்தவர். ஒரு சிறு பிள்ளையைப் போல அழத்தொடங்கியிருந்தார்.

அத்தியாயம் 9 - செயல்பாட்டுச் சுருக்கம்

இரத்தினச் சுருக்கமாக ஜூலியனின் ஞானம்

குறியீடு

சுமோ வீரன்

நற்பண்பு

- கைஜென்னைப் பயிற்சி செய்

ஞானம்

- சுய ஆளுமை என்பதுதான் வாழ்க்கையை ஆளுவதற்கான மரபணு.
- புறவெற்றியானது உள்ளே துவங்குகிறது.
- ஞானம் என்பது உனது மனம், உடல், ஆன்மா இவற்றை இடைவிடாமல் வளர்த்தெடுப்பதால் வருகிறது.

செய்முறைகள்

- நீ செய்யப் பயப்படுவனவற்றைச் செய்.
- ஒளிவிடும் வாழ்வின் பத்து புராதனச் சடங்குகள்

மேற்கோள்

பிரபஞ்சமானது, துணிவுள்ளவர்களுக்கு நலன் பயக்கிறது. உனது வாழ்க்கையை அதன் உச்ச கட்டத்திற்கு உயர்த்துவது என்று நீ தீர்மானித்து விட்டால், உனது ஆன்மாவின் உறுதியே, மகத்தான அரும்பொருள்கள் நிறைந்த ஒரு அற்புதமான இடத்திற்கு உனக்கு வழிகாட்டி அழைத்துச் செல்லும்.

10

ஒழுங்குமுறைக் கட்டுப்பாட்டின் சக்தி

இன்றைய தினம் நமது விதியின் தலைவர்களாக நாம் இருக்கின்றோம். அன்று நமக்கு முன்னே வைக்கப்பட்டுள்ள பணி நமது சக்திக்கு அப்பாற்பட்டதல்ல என்றும் அதன் கடின உழைப்பும் வேதனைகளும், எனது சகிப்புத் தன்மையை மீறியன அல்ல என்றும் நான் உறுதியாக நம்புகிறேன். நமது சொந்த இலட்சியத்தில் நம்பிக்கையும் வெற்றி பெற வேண்டும் என்ற, தோல்வியே காணாத மன உறுதியும் நம்மிடம் உள்ளவரை வெற்றி நமக்கு மறுக்கப்படாது.

- வின்ஸ்டன் சர்ச்சில்.

என்னுடன் பகிர்ந்து கொண்டிருந்த ஞானத்தின் மையக்கருவாக, யோகி இராமனின் கற்பனைக் கதையை ஜூலியன் தொடர்ந்து பயன்படுத்தினார். சக்தியையும், சாத்தியப்பாடுகளையும் உள்ளடக்கிக் கொண்டிருந்த எனது மனமெனும் தோட்டத்தைப் பற்றி நான் அறிந்து கொண்டேன். கலங்கரை விளக்கம் என்ற எடுத்துக்காட்டின் வாயிலாக வாழ்க்கையின் வரையறுக்கப்பட்ட ஒரு நோக்கத்தின் அதி முக்கியத்தைப் பற்றியும், இலக்கு நிர்ணயிப்பதன் திறன் பற்றியும் நான் உணர்ந்துகொண்டேன். ஒன்பதடி உயரமுள்ள தொண்ணூறு பவுண்டு எடையுள்ள ஜப்பானிய சுமோ மல் வீரனின் எடுத்துகாட்டின் வாயிலாக கெஜன் என்ற கருத்தைப் பற்றியும் சுய ஒற்றுமையினால் வரக்கூடிய அளப்பரிய நன்மைகள் பற்றியும் தெரிந்துகொண்டேன். ஆனால் எல்லாவற்றையும் விட சிறப்பான விஷயங்கள் இனிமேல்தான் வரவுள்ளன என்பதை நான் கொஞ்சமும் அறியவில்லை.

"நமது நண்பன் சுமோ வீரன் முழுவதும் நிர்வாணமாயிருந்தான் என்பது உனக்கு நினைவிருக்கலாம்."

"அவரது பிறப்புறுப்புகளை மறைத்துக்கொண்டிருந்த இளஞ்சிவப்பு வண்ண ஒயரையும் தான்....." என்றேன். நான் விளையாட்டாக.

"ரொம்ப சரி," என்று விளையாட்டாகக் கை தட்டினார் ஜூலியன். "இளஞ்சிவப்பு வண்ண கேபிள் ஒயர் செழிப்பான, மகிழ்ச்சியான, அதிகாரத் தெளிவு பெற்ற ஒரு வாழ்க்கையை ஏற்படுத்திக் கொள்வதில் தன்னடக்கம் மற்றும் ஒழுங்கு முறை கட்டுப்பாடு ஆகியவற்றின் சக்தி பற்றி உனக்கு நினைவுறுத்தும். நான் சந்தித்துள்ள மனிதர்களிலேயே சிவானாவின் எனது ஆசான்கள் தான் சந்தேகமின்றி

மிகுந்த ஆரோக்கியமும், மனத்திருப்தியும் சாந்தமும் கொண்டவர்களாவர். அவர்கள்தான் மிகவும் ஒழுங்கு முறைக் கட்டுபாட்டுடன் இருந்தவர்களும் கூட. சுய கட்டுப்பாடு என்ற நற்குணமானது. ஒரு கேபிள் ஒயரைப்போன்றது என்று அவர்கள் எனக்கு கற்றுக்கொடுத்தனர். ஒரு கேபிள் ஒயரை எப்பொழுதாவது நன்கு கவனித்துப் பார்த்ததுண்டா, ஜான்?"

"இதுவரையில் அது எனக்கு ஒரு முக்கியமான வேலையாகத் தோன்றவில்லை." என்றேன் நான், கேலியாகச் சிரித்தபடி.

"உம் சரிதான். எப்போதாவது ஒன்றை எடுத்து உற்றுப்பார், அதில் சின்னஞ்சிறு மெல்லிய கம்பிகள் ஒன்றன்மீது ஒன்றாக வைத்து அடுக்கப்பட்டிருப்பதை காண்பாய். தனித்தனியே பார்த்தால் அவை வெகு பலவீனமானவை, எளிதில் உடையக் கூடியவை. ஆனால் ஒன்றாக பிணைக்கப் பட்டிருக்கும்போது அவற்றின் பலம் அவற்றின் தனித்தனிப் பகுதிகளின் கூட்டு அளவைக் காட்டிலும் அதிகமாகிறது. இதனால் கேபிள் இரும்பை விடவும் வலிமையானதாயிருக்கிறது. சுய கட்டுப்பாடு மற்றும் மன உறுதி ஆகியன இதற்கொப்பானவையாகும். எஃகை ஒத்த ஒரு மன உறுதியை வளர்த்தெடுப்பதற்கு, சுய ஒழுக்கம் கட்டுப்பாடு எனும் நன்னெறியை சிறு சிறு செயல்களை செய்வது அவசியமாகும். வழக்கமாகச் செய்யப்படும்போது, இச்சிறு சிறு செயல்கள் ஒன்றன் மீது ஒன்றாகப் படிந்து அமைந்து, வெகு அபரிமிதமான அளவிலான அகவலிமையை உருவாக்குகின்றன. 'சிலந்தி வலைகள் சேர்ந்திணைந்தால் சிங்கத்தைக் கூட அவை சிறைப்பிடிக்கும்' என்று ***ஒரு பழைய ஆப்பிரிக்க பழமொழி****, இதை வெகு சிறப்பாகச் சொல்லி விளக்குகிறது.*

உனது மன உறுதியை நீ விடுவிக்கும்போது உனது சொந்த உலகின் தலைவனாக நீ ஆகிறாய். சுய ஒழுங்குமுறையைத் தொடர்ந்து பயிற்சி செய்யும்போது, உன்னால் வெல்லப்பட முடியாதது என்று எதுவுமே இல்லாமல் போய்விடும். உன்னால் சமாளிக்க முடியாத சவால் என்று ஒன்றுமே இருக்காது. உன்னால் குளிரப் பண்ண முடியாத சூடான பிரச்சினை எதுவுமே இருக்காது. வாழ்க்கை தனது வளைபந்து ஒன்றை உன்னை நோக்கி வீசும்போது விடா முயற்சியுடன் தொடர்ந்து செயல்படுவதற்குத் தேவையான மனோசக்தியை. சுய கட்டுப்பாடு உனக்கு கொடுக்கும்.

"மேலும் மன உறுதியில்லாயல் இருப்பது ஒரு வியாதி என்று நான் உன்னை எச்சரித்தாக வேண்டும்," *என்று ஜூலியன் தொடர்ந்து கூறினார். இச்செய்தி எனக்கு வியப்பூட்டுவதாக இருந்தது. "இந்த பலவீனத்தால் நீ பாதிக்கப்பட்டிருந்தால் விரைவில் அதை ஒழித்துக் கட்டுவதை உன் முதல் வேலையாக எடுத்துக்கொள். வலிமையான குணாதிசயங்களுடன் ஒரு அருமையான வாழ்க்கையை வாழ்ந்து கொண்டிருப்பவர்களின் முக்கிய குணங்களாக அதிகமான மன உறுதியும் கட்டுப்பாடும் உள்ளன. நீ செய்வதாகச் சொன்னதைச் சொன்னபடி, சொன்ன சமயத்தில் செய்வதற்கு மன உறுதி உனக்கு உதவுகிறது. தியானத்தின் வாயிலாக உன் மனதை பண் படுத்துவதற்கென காலையில் ஐந்து மணிக்கு அது உன்னை எழுப்பி விடுகிறது.*

குளிரான பனிக்காலத்தில் ஒரு சுகமான படுக்கை உன்னை அழைக்கும்போது, காட்டிலே நடக்கச் செல்வதற்கு அது உன்னை உந்தி தள்ளுகிறது. உன்னை விடவும் வளர்ச்சியில் குறைவாக உள்ள ஒருவர் உன்னை அவமதிக்கும் போதோ அல்லது உன்னால் ஏற்றுக்கொள்ள முடியாத எதையேனும் செய்யும் பொழுதோ மன உறுதி தான் உனது நாவை அடக்கி வைக்கிறது. உனக்கு எதிரான தடைகள், தாண்ட முடியாத அளவு மலை போல எழும்போது மன உறுதிதான் உனது கனவுகளை முன்னோக்கி தள்ளுகிறது. பிறருக்கு, அதைவிடவும் முக்கியமாக, உனக்கும் கூட நீ செய்ய வேண்டிய கடமைகளைத் தவறாமல் செய்து முடிப்பதற்குத் தேவைப்படும் அகவலிமையை மன உறுதி தான் உனக்கு தருகிறது.''

''அது உண்மையில் அவ்வளவு முக்கியமானதா?''

''மிகவும் கண்டிப்பாக, நண்பா! மிகவும் அதிகமான பேரார்வம், சாத்தியப்பாடுகள் மற்றும் அமைதி இவற்றால் செழிப்புற்று உள்ள ஒரு வாழ்க்கையை உருவாக்கியுள்ள ஒவ்வொரு நபரின் முக்கிய நன்னெறியாக அது உள்ளது.''

பின்னர் ஜூலியன் தனது அங்கியினுள் கையை விட்டு பளபளவென்ற ஒரு வெள்ளிப் பதக்கத்தைக் கையில் எடுத்தார். புராதன எகிப்தின் அரும்பொருட்கள் நிறைந்த ஒரு காட்சியகத்தில் இருக்கக்கூடிய ஒரு பண்டைய சின்னம் போல அது இருந்தது.

''இதை நீங்கள் திருடியிருக்கக் கூடாது,'' என்றேன் நான் விளையாட்டாக.

''நான் அவர்களுடன் கழித்த இறுதி இரவில், சிவானா முனிவர்கள் இதை எனக்கு கொடுத்தார்கள். வாழ்க்கையை முழுமையாக வாழ்ந்து கொண்டிருந்த ஒரு குடும்பத்தின் அங்கத்தினர்களிடையே ஆன ஒரு மகிழ்ச்சிகரமான அன்பு நிறைந்த கொண்டாட்டமாக அது இருந்தது. எனது வாழ்விலே மகத்தான ஆனால், அதே சமயத்தில், துக்கமான இரவுகளில் ஒன்றாக அது இருந்தது. இவ்வுலகில் நல்லது என்று நான் கண்டுகொண்ட அனைத்தையும் கொண்டிருந்த ஒரு பாலைவனச் சோலையாக, எனது புகலிடமாக அது இருந்தது. முனிவர்கள் எனது ஆன்மீக உடன்பிறப்புகளாகவே ஆகிவிட்டிருந்தனர். என்னில் ஒரு பகுதியை அன்று மாலை இமயமலையின் உயரத்திலேயே விட்டுவிட்டு நான் வந்துவிட்டேன்,'' என்றார் ஜூலியன்.

அவரது குரல் மென்மையாக ஒலித்தது. ''அந்தப் பதக்கத்தில் பொறிக்கப்பட்டுள்ள சொற்கள் என்ன?''

''இதோ நான் அதை வாசித்துக் காட்டுகிறேன் ஜான். இதை ஒருபோதும் மறக்காதே. காலம் கடுமையானதாக, நெருக்கடிகள் நிறைந்ததாக இருந்த பொழுது எல்லாம் அவை எனக்கு உண்மையில் நன்கு உதவியுள்ளன. உனக்கும் அதே போல் அவை சுகத்தை வாரியிறைக்கும் என்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.''

இதோ அவ்வாக்கியம் :

“எஃகு போன்ற நல்லொழுக்கத்தினால் துணிவும் அமைதியும் நிறைந்துள்ள ஒரு குணாதிசயத்தை நீ வடிவமைப்பாய். மனஉறுதியெனும் நற்குணத்தின் மூலம் உலகில் மிக உயர்வான இலட்சியத்திற்கு நீ உயர்வதற்கு உனக்கு விதிக்கப்பட்டுள்ளது. நலமானவையும், மகிழ்ச்சியானவையும், உயிரோட்டமாயுள்ளதுமான விஷயங்களால் நிறைக்கப்பட்டுள்ள ஒரு சொர்க்கத்தின் சொப்பனபுரியில் நீ வாழ்வாய். இவை இல்லாவிட்டால், ஒரு திசைகாட்டி இல்லாததால் தனது கப்பலுடனே மூழ்கி இறந்து போகின்ற மாலுமியைப் போல் நீ தடுமாறிப் போவாய்.”

பல நேரங்களில் என்னிடம் இன்னும் கொஞ்சம் ஒழுங்கு முறைக்கட்டுப்பாடு இருக்கக்கூடாதா? என்று நான் விரும்பியிருந்த போதும் சுய கட்டுப்பாட்டின் முக்கியத்துவத்தை பற்றி நான் உண்மையில் நான் அதிகம் சிந்தித்ததில்லை என்று நான் ஒப்புக்கொண்டேன். “எனது இளம்பருவ மகன் அருகில் உள்ள பயிற்சி கூடத்தில் தனது கைத்தசைகளை வலுவூட்டிக் கொள்வதுபோல என்னால் உண்மையிலேயே ஒழுங்கு முறை கட்டுப்பாட்டை வளர்த்தமைத்துக் கொள்ள இயலும் என்றா சொல்கிறீர்கள்?”

“இந்த ஒப்புவமை மிகப் பொருத்தமானது. உனது மகன் பயிற்சிக் கூடத்தில் தனது உடலைப் பக்குவப்படுத்துவது போலவே நீயும் உனது மன உறுதியைப் பக்குவப்படுத்துகிறாய். இப்பொழுது ஒருவர் எவ்வளவு பலவீனமாகவும், மந்தமாகவும் இருந்தபோதிலும், வெகு குறைவான கால கட்டத்தில் அவரால் ஒழுங்குமுறைக் கட்டுப்பாடு உள்ளவராக மாற முடியும். இதற்கு மகாத்மா காந்தி ஒரு நல்ல உதாரணம். பலரும் இந்த நவீன புனிதரைப் பற்றி எண்ணும்போது தனது இலட்சியத்திற்காகப் பலவார காலம் உணவின்றி இருக்கவும், தனது கொள்கைளுக்காக மாபெரும் வேதனைகளைப் பொறுத்துக்கொள்ளவும் இயன்ற ஒரு மாமனிதராகத் தான் அவரை காண்கிறார்கள். ஆனால் காந்தியின் வாழ்க்கை பற்றி நீ அலசி ஆராயும் போது அவர் சுயக் கட்டுப்பாட்டின் வித்தகராக எப்பொழுதுமே இருந்ததில்லை என்பதைத் தான் நீ காண்பாய்.”

“காந்தி உங்களைப்போல சாக்லேட்டுக்கு அடிமையானவர் என்று சொல்லப் போகிறீர்களா என்ன?”

“அப்படியல்ல, தென்னாப்பிரிக்காவில் ஒரு இளம் வக்கீலாக இருந்த பொழுது அவர் வெகு விரைவில் கோபப்படுவதுண்டு. விரதம் இருத்தல், தியானம் செய்தல் போன்ற விஷயங்கள் அவருக்கு வெகு அன்னியமாகவே இருந்தன. பின்னாட்களில் அவரது அடையாளச் சின்னமாக மாறிவிட்டிருந்த வெண்ணிற அரையாடையையும் கூட அப்பொழுது அவர் அறிந்திருக்கவில்லை.”

“சரியான பயிற்சி மற்றும் தயார் படுத்தலின் மூலம் என்னால் கூட மகாத்மா காந்தியின் மன உறுதியைப்பெற முடியும் என்றா கூறுகிறீர்கள்?”

“ஒவ்வொருவரும் தனித்தன்மை கொண்டவர்கள். யோகி இராமன் எனக்குக் கற்றுத் தந்த அடிப்படைக் கொள்கைகளில் ஒன்று உண்மையிலே ஞானம் பெற்றவர்கள் பிறரைப் போல இருக்க வேண்டும் என்று ஒரு போதும் விரும்புவதில்லை. அதைக்காட்டிலும் தாங்கள் முன்னர் இருந்ததை விடவும், மேலானவர்களாக ஆவதையே அவர்கள் நாடுகிறார்கள். **பிறருடன் போட்டி போட்டு ஓடாதே, உன்னுடனே போட்டி போடு**,” என்றார் ஜூலியன்.

மேலும் அவர் கூறியதாவது, “உன்னிடம் சுய கட்டுப்பாடு இருக்கும் பொழுது நீ செய்ய வேண்டும் என்று விரும்பியவற்றை செய்வதற்கான மன உறுதி உன்னிடம் இருக்கும். உன்னைப் பொருத்த வரையில் அது ஒரு நீண்ட நெடும் ஓட்டப் பந்தயத்திற்காகப் பயிற்சி பெறுவதோ, அதிவேகக் காட்டாற்றில் படகு விடுவதற்கு கற்றுக் கொள்வதோ அல்லது வக்கீல் தொழிலை விட்டு விட்டு ஓவியனாவதோ, எதுவாகவும் இருக்கலாம். நீ எதைப் பற்றி கனவுக் கண்டு கொண்டிருக்கிறாயோ, அது பொருள் சார்ந்த செல்வமோ, அருள் சார்ந்த செல்வமோ அது பற்றி முடிவெடுக்க நான் உனக்கு நீதிபதியாக மாட்டேன். உனக்குள் உறங்கிக் கிடக்கும் சக்திச் சேமிப்புகளை நீ வளர்த்துக் கொள்ளும்போது இவை எல்லாமே உனது கைப்பிடிக்குள் இருக்கும் என்று மட்டுமே நான் உனக்கு சொல்கிறேன்.

“உனது வாழ்க்கை முறையினுள் சுயகட்டுப்பாடு மற்றும் ஒழுங்குமுறையை வளர்த்துக் கொள்வதால் உனக்கு மகத்தான சுதந்திர உணர்வும் கிடைக்கும். இது ஒன்று மட்டுமே மீதி எல்லாவற்றையும் மாற்றியமைத்து விடும்.”

“நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?”

“பெரும்பாலான மனிதர்கள் சுதந்திரமாக இருக்கிறார்கள். அவர்களல் எங்கு வேண்டுமானாலும் போக முடியும், தாம் செய்ய நினைக்கும் செயல்களை செய்ய முடியும். ஆனால் மிக அதிகமானோர் தமது உடனடி உந்துதல்களுக்கு, விழைவுகளுக்கு அடிமையாக உள்ளனர். ஒரு அலையடிக்கும் கடலில் ஆடிச்செல்லும் நுரைக் குவியல் போல பாறைகளில் இங்குமங்கும் மோதிச் சிதறுகின்றனர். பதில் செயல் புரிவதற்கு மாறாக அவர்கள் எதிர்ச்செயல்களில் ஈடுபடுகின்றனர். தமது குடும்பங்களுடன் நேரம் கழித்துக் கொண்டிருக்கும்போது யாராவது பணியில் ‘பிரச்சினை’ என்று அழைத்தால் தடாலென்று விழுந்து விடுகிறார்கள். அந்த பிரச்சினையில் இறங்கிவிடுகிறார்கள். தனது ஒட்டுமொத்த நலனுக்கும் வாழ்வின் நோக்கத்திற்கும் எந்தச் செயல்பாடு மேலும் அதிக அர்த்தமுள்ளதாக இருக்கிறது. என்பதை நின்று நிறுத்தி எண்ணிப் பார்ப்பது கூட இல்லை. எனவே எனது வாழ்வில் நான் கவனித்துப் பார்த்ததையெல்லாம் வைத்துப் பார்த்தால், மேலை மற்றும் கீழை நாடுகளில் உள்ள மனிதர்களிடம் விடுதலை உள்ளது ஆனால் அவர்கள் சுதந்திரமாக இல்லை என்றுதான் நான் சொல்லுவேன். ஒரு அர்த்தமுள்ள ஞானத் தெளிவுடன் கூடிய வாழ்க்கைக்கான மைய அம்சத்தை அவர்கள் பெற்றிருப்பதில்லை. மரங்களுக்கு அப்பால் உள்ள காட்டைக் காண்பதற்கான சுதந்திரம், தம்மை நெருக்குகின்ற ஒன்றிலிருந்து சரியானதை வேறுபடுத்தித் தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் அவர்களிடம் இல்லை.”

என்னால் ஜூலியனின் கருத்தை ஏற்றுக்கொள்ளாமல் இருக்க முடியவில்லை. குறைபட்டுக் கொள்ளுமளவுக்கு எனக்கு ஒன்றுமில்லை. ஒரு சிறப்பான குடும்பம், சுகமான வீடு மற்றும் மும்முரமான சட்டத்தொழில் ஆகியன என்னிடம் இருந்தன. ஆனால் உண்மையில் என்னிடம் சுதந்திரம் இருந்ததா, என்று என்னால் கூற முடியவில்லை. எனது பேஜர் எனது வலது கரத்தைப் போலவே என்னுடலின் மற்றொரு உறுப்பாகிவிட்டது. நான் எப்பொழுதுமே ஓடிக்கொண்டிருந்தேன். ஜென்னியுடன் நன்கு பேசுவதற்கு கூட எனக்கு பொழுதிருப்பதில்லை. கூடிய விரைவில் எனக்கே என்னுடன் கொஞ்சம் அமைதியான நேரம் கிடைக்குமா என்பது, போஸ்டன் நெடுந்தூரப் போட்டியில் நான் வெற்றிபெறும் சாத்தியங்களைப் போலவே கைக்கெட்டாததாக இருந்தது. எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக நான் அதைப்பற்றி சிந்தித்தேனோ, அவ்வளவு நிச்சயமாக உண்மையான எல்லையற்ற சுதந்திரம் எனும் அமுதத்தின் சுவையை நான் உணரவேயில்லை என்று தான் தெரிந்துகொண்டேன். எனது பலவீனமான உந்துதல்களுக்கு ஒரு அடிமையாகத்தான் இருந்தேன் போலும். நான் என்ன செய்ய வேண்டும் என்று எல்லோரும் சொன்னதைத்தான் எப்போதும் செய்துகொண்டிருந்தேன்.

“மன உறுதியை வளர்ப்பதால் எனக்குக் கூடுதல் சுதந்திரம் கிடைக்குமா?”

“சுதந்திரம் என்பது ஒரு வீட்டைப் போன்றது. செங்கல் மேல் செங்கல்லாக அதை கட்டுகிறாய். இங்கு வைத்துக் கட்டப்பட வேண்டிய முதல் செங்கல் மன உறுதியாகும். ஒவ்வொரு தருணத்திலும் செய்யப்பட வேண்டிய சரியான பணியைச் செய்வதற்கு இத்தன்மை உன்னை ஊக்குவிக்கிறது. துணிவுடன் செயல்படுவதற்கான சக்தியை அது உனக்கு தருகிறது. உனக்குள்ள வாழ்க்கையைப் பணிந்து ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக, நீ கற்பனை செய்துள்ள வாழ்வை வாழ்வதற்கான விசையை அது உனக்கு கொடுக்கிறது.”

ஒழுங்குமுறைக் கட்டுப்பாடு ஏற்படுத்தக்கூடிய பல நடைமுறை நன்மைகளை ஜூலியன் குறிப்பிட்டார்.

“நீ இதை நம்பினால் நம்பு. நம்பாவிட்டால் போ. உனது மன உறுதியை வளர்த்துக் கொள்வதால் கவலைப்படும் பழக்கத்தை ஒழித்துவிடலாம். உன்னை நல்ல உடல் நலனுடன் வைத்துக்கொள்ளலாம். முன்னெப்போதும் உன்னிடம் இராத உடல், மனோசக்தியை பெறலாம். சுய கட்டுப்பாடு என்பது, மனக்கட்டுப்பாடு என்பது தவிர வெறொன்றுமில்லை, ஜான். மன உறுதி என்பதுதான் மனோ சக்திகளின் அரசன். உனது மனதை நீ வென்று விட்டால். உனது வாழ்க்கையை நீ வென்று விடுகிறாய். மனதை ஆள்வது என்பது, நீ எண்ணுகிற ஒவ்வொரு எண்ணத்தையும் கட்டுப்படுத்துகிற திறனைக் கொண்டிருப்பதாகும். அனைத்து வலுவிழுந்த எண்ணங்களையும் வெளியே எறிந்து விட்டு, நேர்மறையான நல்ல எண்ணங்களின் மீது கவனத்தை செலுத்தினால் அவற்றைத் தொடர்ந்து நேர்மறையான நல்ல செயல்கள்தான் வரும். விரைவில், உனது வாழ்வினுள் நேர்மறையான நல்ல விஷயங்களை நீ கவர்ந்து இழுக்க தொடங்குவாய்.

“இதோ ஒரு எடுத்துகாட்டு. உனது தனிப்பட்ட வளர்ச்சிக்குக் குறிக்கோள். காலையில் ஆறு மணிக்கு எழுந்து உனது வீட்டிற்குப் பின்னால் உள்ள பூங்காவில் ஓடுவது, என்று வைத்துக்கொள்வோம். இது பனிக்காலம். உனது அலாரம் ஆழமான உறக்கத்திலிருந்து உன்னை எழுப்புகிறது. உனது முதல் எண்ணம் அதை தலையில் தட்டி நிறுத்திவிட்டு மறுபடி உறங்கச் செல்வதாகத்தான் இருக்கும். ஒருக்கால் நாளைக்கு ஓடிக்கொள்ளலாம் என்று நீ தீர்மானிக்கலாம். அதேபோல மறுநாள் ஓடக்கூடும். இவ்வாறு ஒருநாள் விட்டு ஒருநாள் செய்வதற்கான பழக்கமானது ஒரு சில நாட்களுக்குத் தொடரும். பின்னர் உனது பழக்கங்களை உன்னால் மாற்றிக்கொள்ள முடியாது. ஏனெனில் உனக்கு அதிக வயதாகிவிட்டது என்றும் உடல் நலன் பற்றிய இலக்கு உண்மையில் நடைமுறைக்கு ஒவ்வாதது என்றும் நீ தீர்மானித்து விடுவாய்.”

“என்னை நன்றாகத் தெரிந்து வைத்துக் கொண்டிருக்கிறீர்கள்” என்றேன் நான் வெகு உண்மையாக.

“இப்பொழுது அதற்கான மாற்றுக் காட்சியைக் காணலாம். இப்போது கூட நடுங்கும் குளிர்காலம்தான். அலாரம் ஒலிக்கிறது. நீயும் தொடர்ந்து உறங்கலாம் என்று எண்ணத் தொடங்குகிறாய். ஆனால் உனது பழக்கத்திற்கு அடிமையாக இருப்பதற்கு பதிலாக மேலும் வலிமையான எண்ணங்களால் அதற்கு சவால் விடுகிறாய். மிகவும் நல்ல உடல் நலனுடன் இருக்கும் போது நீ எவ்வாறு தோற்றமளிப்பாய், உணர்வாய், எப்படி நடந்துகொள்வாய் என்பதைக் கற்பனை செய்து பார்க்கிறாய். கட்டான உடலமைப்புடன் நீ அவர்களைக் கடந்து செல்லும்போது அலுவலகத்தில் உள்ளவர்கள் உன்னைப் பாராட்டுவதைக் கேட்கிறாய். ஒரு ஒழுங்கான உடற்பயிற்சித் திட்டத்தால் விளையக்கூடிய பலன்களையெல்லாம் கூடுதல் சக்தி, அதனால் நீ சாதிக்கப்போகும் சாதனைகள் என எல்லாவற்றையும் பற்றி நீ எண்ணிப் பார்க்கிறாய். நீதிமன்றத்தில் ஒரு நீண்ட நாளைக் கழித்த பின்னர் வேறு எதுவும் செய்வதற்கு போதுமான சக்தியின்றி. அதிகக் களைப்புடன் தொலைக்காட்சிப் பெட்டியின் முன்னர் உட்கார்ந்திருக்க வேண்டிய இரவுகள் இனிமேல் கிடையாது. உனது நாட்கள் சக்தியாலும், உற்சாகத்தாலும் நிரம்பி அர்த்தமுள்ளவையாக இருக்கின்றன.”

“ஆனால் இதைச்செய்த பின்னரும், ஓடச்செல்வதற்கு பதிலாக மறுபடி உறங்கச் செல்ல வேண்டும் போல எனக்கு தோன்றினால். என்ன செய்வது?”

“தொடக்கத்தில் முதல் சில நாட்களுக்கு அது சற்றே சிரமமாக இருக்கும். மறுபடியும் பழைய பழக்க வழக்கங்களுக்கு திரும்பச் செல்ல வேண்டும் போல உனக்குத் தோன்றும். ஆனால், குறிப்பாக ஒரு இறவாக் கொள்கையைப் பற்றி யோகி இராமன் மிக உறுதியாக நம்பினார். நேர்மறை எப்பொழுதுமே எதிர்மறையை வெற்றி கொண்டுவிடும் என்பதுதான் அது. எனவே கடந்த பல ஆண்டு காலமாக உனது மனமெனும் மாளிகைக்குள்ளே ஓசையின்றிப் புகுந்துவிட்ட பலவீனமான எண்ணங்களுக்கு எதிராகத் தொடர்ந்து போராடினாயானால் காலப்போக்கில் அவை

தாம் விரும்பத்தகாதவை என்று உணர்ந்து கொண்டு வரவேற்பில்லாத விருந்தாளிகள்போல வந்த வழியே சென்றுவிடும்.''

"எண்ணங்கள் உருவமுள்ள விஷயங்கள் என்றா நீங்கள் சொல்கிறீர்கள்?"

"ஆம் அவை முற்றிலும் உனது கட்டுப்பாட்டுக்குள் உள்ளன. எதிர்மறை எண்ணங்களை எண்ணுவது எத்தனை எளிதோ நேர்மறை எண்ணங்களை எண்ணுவதும் சுலபமானதே!''

"அப்படியென்றால் ஏன் இத்தனை பேர் கவலைப்பட்டுக் கொண்டும், நமது உலகில் உள்ள எதிர்மறை தகவல்கள் மீது கவனம் செலுத்தியவாறும் இருக்கின்றார்கள்?''

"ஏனெனில் சுய கட்டுப்பாடு மற்றும் ஒழுங்குமுறைக் கட்டுப்பாடான சிந்தனை எனும் கலையை அவர்கள் கற்றுக்கொள்வில்லை. நான் இதுவரை சந்தித்து உரையாடியவர்களில் பெரும்பாலோரும் ஒவ்வொரு நாளின் ஒவ்வொரு நிமிடத்தின், ஒவ்வொரு கணத்திலும் தாம் சிந்தித்துக் கொண்டுள்ள ஒவ்வொரு எண்ணத்தையும் கட்டுப்படுத்தும் சக்தி தமக்கு உள்ளது என்பதைக் கொஞ்சமும் அறியவில்லை. எண்ணங்கள் தாமாக ஏற்படுகின்றன என்று அவர்கள் கருதினார்கள். ஒருவர் தனது எண்ணங்களை கட்டுப் படுத்துவதற்கென நேரம் செலவழிக்கவில்லையெனில் அவை அவரைக் கட்டுப்படுத்தும் என்பதை அவர்கள் உணரவேயில்லை. நல்ல எண்ணங்களை மட்டுமே எண்ணுவது என்று தீர்மானித்து அவற்றின் மேலே கவனம் செலுத்தத் தொடங்கினால் வெறும் மன உறுதியின் உதவியாலேயே மோசமான எண்ணங்களை எண்ண மறுத்துவிட்டால் அவை விரைவில் சுருங்கிப் போய்விடும் என்று நான் உனக்கு உறுதியளிக்கிறேன்.''

"ஆக, காலையில் விரைவில் கண் விழித்து எழவும். குறைவாகச் சாப்பிடவும், நிறைய வாசிக்கவும், குறைவாகக் கவலைப்படவும், அதிகப் பொறுமையுடன் இருக்கவும் அல்லது அதிகமான அன்பு செலுத்தவும் அக சக்தி எனக்கு வேண்டும் என்றால் நான் செய்யவேண்டியதெல்லாம், எனது மன உறுதியை பயன்படுத்தி எனது எண்ணங்களை சுத்தம் செய்வது மட்டும்தானா?''

"உனது எண்ணங்களை நீ அடக்கியாளும்பொழுது, உனது மனதை நீ அடக்கி ஆள்கிறாய். உனது மனதை அடக்கியாளும் பொழுது, உனது வாழ்க்கையை உனது கட்டுக்குள் வைத்திருக்கிறாய். உனது வாழ்க்கையின் முழு கட்டுப்பாடும். உனது கைக்குள் வந்தவுடன், உனது தலையெழுத்தை நிர்ணயிக்கும் தலைவனாக நீ ஆகிவிடுகிறாய்.''

நான் இதைக் கேட்டாக வேண்டியிருந்தது. இந்த வினோதமான ஆனால் ஊக்கமூட்டும் மாலைப்பொழுது கடந்து இரவாகிச் சென்று கொண்டிருந்த அந்த காலகட்டத்தில். நான் பல மன நிலைகளைத் தாண்டி வந்திருந்தேன். ஒரு துடிப்பான லாயர், இன்று யோகியானவர், கூறியதைச் சற்றே சந்தேகத்துடன் கேட்டுக்

கொண்டிருந்த நம்பிக்கையற்ற ஒரு வழக்கறிஞர் என்ற மனநிலையிலிருந்து இப்பொழுது பல ஆண்டுகளுக்கு பின்னர் முதல் முறையாகத் தனது கண்கள் திறக்கப்பட்டு முழுமையாக நம்புகிற மனநிலை வரையில் பல மனநிலைகள் எனக்குள் மாறி மாறி நிழலாடின என்பது நிஜம். இதையெல்லாம் எனது மனைவி ஜென்னியும் கேட்டுக் கொண்டிருக்க கூடாதா என்று ஏங்கினேன். உண்மையில் எனது குழந்தைகள் கூட இந்த அறிவைப் பெறவேண்டுமென்று விரும்பினேன். என்னைப் பாதித்துள்ளது போலவே அவர்களையும் இது பாதிக்கும் என்பது எனக்கு தெரியும். நல்ல குடும்ப தலைவனாக இருந்து, மேலும் முழுமையான வாழ்க்கை வாழவேண்டும். என்பது எனது திட்டமாக இருந்து வந்துள்ளது. ஆனால் வாழ்க்கையின் நெருக்கடி நிலைகளான சின்னச் சின்ன பிரச்சினைகளைத் தீர்ப்பதிலேயே எனது நேரம் செலவழிந்துக் கொண்டிருந்ததையும் நான் கண்டுகொண்டேன். ஒருவேளை இதுவும் கூட பலவீனமாக இருக்கலாம். சுய கட்டுப்பாடு இன்மையாக இருக்கலாம். மரங்களைப் பார்த்துக் கொண்டிருப்பதால், காட்டைப் பார்க்க முடியாமல் போவதாக இருக்கலாம்.

வாழ்க்கை வெகு வேகமாக சென்று கொண்டிருந்தது. இதோ நேற்றுத்தான் நான் ஒரு சட்டக்கல்லூரி மாணவனாக, உற்சாகமும், ஊக்கமும் நிறைந்தவனாக இருந்தது போல் இருந்தது. ஒரு அரசியல் தலைவனாகவோ அல்லது தலைமை நீதிமன்ற நீதிபதியாகவோ ஆக நான் அப்பொழுது விரும்பினேன். ஆனால் காலம் செல்ல செல்ல ஒரு வழக்கமான தடத்தில் இறங்கிவிட்டேன். ஒரு துடுக்கான வக்கீலாக இருந்த பொழுது கூட. 'மெத்தனப்போக்கு ஒருவரை செத்தவனாக்கி விடும்' என்று ஜூலியன் என்னிடம் கூறியதுண்டு. அதைப்பற்றிச் சிந்திக்கச் சிந்திக்க எனது பசியை, தாகத்தை நான் இழந்து விட்டேன் என்றே எனக்கு தோன்றியது. இது ஒன்றும் ஏதோ ஒரு பெரிய வீடு அல்லது அதிக வேகமுள்ள கார் இவற்றுக்கான தாகம் அல்ல. இது ஒரு மிக மிக ஆழமான பசி, அழுத்தமான தாகம். ஒரு அர்த்தமுள்ள வாழ்வுக்கான பசி. அதிகக் குதூகலமும், கூடுதல் திருப்தியும் கொண்ட ஒரு வாழ்வுக்கான தாகம்.

ஜூலியன் தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கையிலே நான் கற்பனை உலகில் சஞ்சரிக்கத் தொடங்கி விட்டேன். அவர் இப்பொழுது என்ன பேசிக் கொண்டிருக்கிறார் என்பதை சற்றும் உணராதவனாய், என்னையே ஒரு ஐம்பது வயதுக்காரனாக பின்னர் ஒரு அறுபது வயதுக்காரனாக நான் பார்க்கத் தொடங்கினேன். அந்தச் சமயத்திலும் இதே வேலையில் இதே மனிதர்களுடன் இதே பிரச்சினைகளை எதிர்கொண்டு நான் மாட்டிக் கொண்டிருப்பேனா? அதை எண்ணும் போது எனக்குள் ஒரு நடுக்கம் ஏற்பட்டது இந்த உலகத்திற்கு ஏதேனும் ஒரு வகையில் பங்காற்ற வேண்டும். என்று நான் எப்பொழுதுமே விரும்பியதுண்டு. இப்பொழுது அதை நான் செய்து கொண்டிருக்க வில்லை என்பது மட்டும் எனக்கு நிச்சயமாகத் தெரிந்தது. அந்த வியர்வை நசநசக்கும் ஜூலை மாதத்து இரவில் எனது வீட்டு முன்னறையின் தரையில் ஜூலியன் எனக்கருகில் அமர்ந்து கொண்டிருந்த அந்தத் தருணத்தில் தான் நான் மாறிப்போனேன் என்று நான் நினைக்கிறேன். **ஜப்பானியர்கள் அதை சடோரி** என்று அழைக்கின்றனர். அதற்கு **'உடனடி**

விழித்தெழுதல்' என்று பொருள். இதுதான் எனக்கு நிகழ்ந்தது. எனது கனவுகளை நிறைவேற்றவும், எனது வாழ்வை முன்னெப்போதும் இராத அளவு மேம்படுத்தவும் நான் தீர்மானித்தேன். அப்போதுதான் நான் விடுதலையின் முதல் சுவையை ருசித்தேன். நம் வாழ்க்கையையும் அதனுடன் தொடர்புள்ள அனைத்து அம்சங்களையும் நமது பொறுப்பில் எடுத்துக் கொள்வதென்று தீர்மானித்து விடுகிறபோது வருகின்ற விடுதலை உணர்வு அது.

நான் அப்போது அனுபவித்த உள் மாற்றத்தைப் பற்றி ஏதும் அறியாதவராய், "மன உறுதியை வளர்த்துக் கொள்வதற்கு நான் உனக்கு ஒரு வழிமுறை தருகிறேன். பயன் படுத்துவதற்கான கருவிகள் ஏதும் இல்லாமல் கிடைக்கும் ஒரு அறிவானது, அறிவே கிடையாது," என்றார். மேலும் தொடர்ந்து,

"ஒவ்வொரு நாளும் வேலைக்கு செல்லும் வழியில் ஒரு சில எளிய சொற்களை நீ உச்சாடனம் செய்யவேண்டும்."

"முன்னர் நீங்கள் குறிப்பிடப்பட்ட மந்திரங்களில் இதுவும் ஒன்றா?" என்று நான் கேட்டேன்.

"ஆம், ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக அது இருந்து வந்துள்ளது. ஆனால் சிவானாவின் முனிவர்களுக்கு மட்டுமே அது தெரிந்துள்ளது. அதை மறுபடி மறுபடி சொல்வதால், வெகு குறுகிய காலத்திலேயே சுய கட்டுப்பாடு மற்றும் வளையாத மன உறுதி ஆகியவற்றை என்னால் வளர்த்துக்கொள்ள முடியும் என்று அவர் கூறினார். சொற்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்த வல்லவை என்பதை நினைவில் வைத்துக்கொள். வார்த்தைகள் சக்தியின் வடிவங்களாகும். உனது மனதை நம்பிக்கை வாய்ந்த சொற்களால் நிரப்புவதன் மூலம் நீ நம்பிக்கையுள்ளவனாகிறாய். உனது மனதை, இரக்கம், கருணை உள்ள சொற்களால் நிறைப்பதன் மூலம் நீ இரக்கமுள்ளவனாகிறாய். உனது மனதைத் துணிவு தொடர்புள்ள சொற்களால் நிரப்புவதன் மூலம் நீ துணிவு கொள்கிறாய். சொற்கள் வலிமை படைத்தவை," என்று ஜூலியன் கூறினார்.

"சரி அதைப்பற்றி கேட்க நான் மிக ஆவலுடன் இருக்கிறேன்."

"ஒவ்வொரு நாளும் குறைந்த பட்சம் முப்பது முறையேனும் இந்த மந்திரத்தை திரும்பத் திரும்பச் சொல்! 'நான், தோன்றுவதைக் காட்டிலும், கூடுதல் திறனுள்ளவன் உலகில் எல்லா வலிமையும் சக்தியையும் என்னுள் உறைந்துள்ளன'. இது உனது வாழ்வில் ஆழமான, தீர்க்கமான மாற்றங்களை வெளிப்படுத்தும். மேலும் விரைவாக விளைவுகளை ஏற்படுத்த வேண்டுமானால் இந்த மந்திரத்தை உச்சரிப்பதுடன், நான் முன்னர் குறிப்பிட்ட மந்திரக் காட்சியை உருவாக்கம் செய்வதையும் இணைத்துக்கொள். அதாவது ஒரு அமைதியான இடத்துக்குச் செல். உனது கண்களை மூடிக்கொண்டு உட்கார். மனதை இங்கும் மங்கும் அலைய விடாதே. உடலை அசைவற்று வைத்துக்கொள். ஒரு பலவீனமான மனதின் நிச்சயமான அடையாளம்,

அமைதியாக இருக்க முடியாத உடல் ஆகும். இப்போது இந்த மந்திரத்தை உரக்கச் சொல். திரும்பத் திரும்பச் சொல். அவ்வாறு சொல்லும்போது உன்னையே ஒரு கட்டுப்பாடான, திடமான, நபராக உனது மனம், உடல், ஆன்மா இவற்றை முற்றிலும் உனது கட்டுக்குள் வைத்திருப்பவராகக் கற்பனை செய்து பார். காந்தியோ, அல்லது அன்னை தெரசாவோ ஒரு சவால் விடும் சூழ்நிலையில் எவ்வாறு நடந்து கொள்வார்களோ அவ்வாறு நடந்து கொள்வதாக கற்பனை செய்துகொள். வியத்தகு விளைவுகள் கண்டிப்பாக உன்னைத்தேடி வரும்.''

''இவ்வளவுதானா!'' என்றேன் நான். அந்த மந்திரத்தின் எளிமையைக் கண்டு பெரிதும் வியப்புற்றவனாய். **இந்தச் சாதாரணப் பயிற்சியின் மூலம் எனது மன உறுதியின் மொத்த சக்தியையும் என்னால் பெற முடியுமா?''**

''இந்தப் பயிற்சி, கீழை நாட்டின் ஆன்மீக ஆசான்களால் பல நூற்றாண்டுகளாக கற்பிக்கப்பட்டு வந்துள்ளது. இன்றளவும் இது நிலவி வருகிறது என்றால் அதற்கு ஒரே ஒரு காரணம்தான் உள்ளது. ஏனெனில் அது வேலை செய்கிறது. எப்பொழுதுமே, எதையும் அது உருவாக்கும் விளைவுகளைக் கொண்டே மதிப்பிடு. உனக்கு ஆர்வமுள்ளதானால் மன உறுதியின் வலிமையை வெளிப்படுத்தவும், அக ஒழுங்குமுறையை வளர்க்கவும், வேறு சில பயிற்சிகளை என்னால் உனக்குத் தர முடியும். ஆனால் முதலில் நான் உன்னை எச்சரிக்க வேண்டும். தொடக்கத்தில் அவை வினோதமாகத் தோன்றக்கூடும்.''

''ஓ ஜூலியன் நீங்கள் சொல்வதைக் கேட்டு நான் முற்றிலும் கவரப்பட்டுள்ளேன். நீங்கள் தொடர்ந்து பேசுங்கள், இப்பொழுது நிறுத்தாதீர்கள்.''

''சரி, முதல் விஷயம் என்னவென்றால் உனக்கு செய்யப் பிடிக்காதவற்றைச் செய்யத் தொடங்குவதாகும். உன்னைப் பொருத்தவரையில் அது காலையில் படுக்கையை ஒழுங்குபடுத்துவதோ அல்லது பணிக்குச் செல்லும்போது காரில் செல்லுவதற்கு பதிலாக நடந்து செல்வதோ என இருக்கலாம். உனது மனது உறுதியைப் பயன்படுத்தும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதன் மூலம் உனது பலவீனமான உந்துதல்களுக்கு ஒரு அடிமையாக இருப்பதை நீ நிறுத்திவிடுவாய்.''

''பயன்படுத்து அல்லது இழந்துவிடு?''

''மிகச்சரியாக சொன்னாய். மன உறுதியையும் அகவலிமையும் வளர்ப்பதற்கு நீ முதலில் அதைப்பயன் படுத்தியாக வேண்டும். சுய ஒழுங்குமுறைக் கட்டுப்பாடு என்ற கருவை நீ எவ்வளவு தூரம் பயன்படுத்தி, ஊக்குவிக்கிறாயோ, அந்த அளவுக்கு வேகமாக வளர்ந்து நீ விரும்பும் விளைவுகளை அது உனக்கு தரும், இரண்டாவது பயிற்சி யோகி இராமனுக்கு மிகவும் விருப்பமான ஒன்றாகும். ஒரு நாள் முழுவதும் அவர் வாய் பேசாமல் இருப்பார். நேரடியாக ஏதும் கேட்கப் பட்டால் ஒழிய.''

''மௌன விரதமா?''

“உண்மையில் அதுதான் இது, ஜான். இந்த பயிற்சியை பிரபலப்படுத்திய திபெத்திய துறவிகள் அதிக நேரம் தொடர்ந்து பேசாமல் இருப்பதால் ஒருவரது ஒழுங்கு முறைக்கட்டுப்பாடு மேன்மையுறும் என்று கருதினார்கள்.”

“அது எவ்வாறு?”

“அடிப்படையில், ஒரு நாள் மௌனமாக இருப்பதன் வாயிலாக, உனது மனதை நீ என்ன உத்தரவிடுகிறாயோ அதைச் செய்யுமாறு பக்குவப் படுத்துகிறாய். ஒவ்வொரு முறையும் பேச வேண்டும் என்ற உந்துதல் எழும்போதெல்லாம் அதை ஆக்கத்துடன் கட்டுப்படுத்தி அமைதியாக இருக்கிறாய். உனது மனதுக்கு தனக்கென்று ஒரு தனியான சொந்தமான சிந்தை கிடையாது. தனக்கு உத்திரவிடப்படுவதற்காக அது காத்துக் கொண்டிருக்கிறது. அதன் மீது நீ எவ்வளவு தூரம் கட்டுப்பாட்டை விதிக்கிறாயோ அந்தளவு அதிகமான வலிமையை அது பெறுகிறது, பிரச்சினை என்னவென்றால் பெரும்பாலான மனிதர்கள் தம் மன உறுதியை பயன்படுத்துவதேயில்லை.”

“ஏன் அது?” என்று நான் கேட்டேன்.

“ஒரு வேளை தமக்கு மன உறுதி இல்லை என்று அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கலாம். இந்தப் பலவீனத்திற்கு அவர்கள் தம்மை தவிர வேறு எல்லோரையும், எல்லாவற்றையும் குற்றம் சாட்டிய வண்ணம் இருக்கிறார்கள். கடுங்கோபம் கொள்ளும் குணம் கொண்டவர்கள், என்னால் இது பற்றி எதுவும் செய்ய முடியாது. எனது தந்தை இதே போலத்தான் இருந்தார் என்று சொல்கின்றனர். எப்போதுமே அதிகமாக கவலைப்பட்டு கொண்டிருப்பவர்கள். அது என் தவறு கிடையாது. என் வேலை அவ்வாறு மன உளைச்சலை ஏற்படுத்துவதாக உள்ளது என்பார்கள். மிக அதிகமான நேரம் உறங்குபவர்கள். ‘நான் என்ன செய்வது? எனது உடலுக்கு ஒரு நாளைக்கு பத்துமணி நேரம் உறக்கம் தேவையாக இருக்கிறது’ என்று கூறுவார்கள். எப்போது வேண்டுமானாலும் உசுப்பி விடுவதற்கு தயாராக ஒரு பெரும் சக்தி நமக்குள் ஆழப் புதைந்து கிடக்கிறது என்று உணர்ந்திருப்பதன் வாயிலாக வரக்கூடிய சுய பொறுப்புணர்வு இவர்களிடம் இருப்பதில்லை. இயற்கையின் காலக்கணக்கற்ற விதிகளைப் பற்றி நீ தெரிந்துகொள்ளும் பொழுது இந்த பிரபஞ்சத்தையும் அதில் உள்ள எல்லாவற்றையும் நிர்வகிக்கின்ற விதிகளை புரிந்து கொள்ளும் பொழுது உன்னால் என்னவாக இருக்க முடியுமோ, அதுவாக இருப்பது உனது பிறப்புரிமை என்பதையும் நீ அறிவாய். உனது சுற்றுச் சூழலுக்கு அப்பாலும் வளர்வதற்கான சக்தி உன்னிடம் உள்ளது. அதே போல உனது கடந்த காலத்தின் கைதியாக இல்லாமல் இருப்பதற்கான திறனும் உன்னிடம் உள்ளது. இதைச் செய்ய வேண்டுமானால் நீ உன் மனதை வெற்றி கொள்ள வேண்டும்.”

“மிகவும் கடினமான வேலை போல தெரிகிறது.”

''உண்மையில் இது மிக எளிதில் நடைமுறைப் படுத்தக்கூடிய ஒரு கருத்து. இப்போது உன்னிடம் உள்ள ஒரு மன உறுதியின் அளவை இரட்டிப்பாகவோ அல்லது மும்மடங்காகவோ செய்வதால் உன்னால் என்னவெல்லாம் சாதிக்க முடியும் என்பதைப் பற்றி எண்ணிப்பார். நீ தொடங்க வேண்டும் என்ற உடற்பயிற்சித் திட்டத்தை நீ மேற்கொள்ளலாம். உனது நேரத்தையும் மிகத்திறம்பட பயன்படுத்தலாம். கவலைப்படும் பழக்கத்தை ஒரேயடியாக விட்டொழித்து விடலாம். அல்லது ஒரு இலட்சியக் கணவனாக நீ திகழலாம். உனது மன உறுதியை பயன்படுத்துவதால், இப்பொழுது நீ இழந்துவிட்டதாக கூறிக்கொள்ளுகின்ற, வாழ்வதற்கான வேகம் மற்றும் சக்தி ஆகியவற்றை மீண்டும் தூண்டி ஒளிரச் செய்யலாம். கவனம் செலுத்தத் தேவையான ஒரு மிக முக்கியமான பகுதி இதுவாகும்.''

''ஆக எனது மன உறுதியை திட்டமிடப்பட்ட முறையில் தினசரி பயன்படுத்தத் தொடங்குவது தான் இங்கு அடிப்படையான விஷயமா?''

''ஆம், வெகு சுலபமாக விட்டுக் கொடுக்கும் வழியைப் பின்பற்றுவதை விட நீ செய்யவேண்டியவை என்று கருதும் பணிகளைச் செய்யத் தீர்மானித்துக்கொள். உனது கெட்ட பழக்கங்கள் மற்றும் பலவீனமான உந்துதல்கள், இவற்றின் கீழ்நோக்கி இழுக்கும் விசைக்கு எதிராகப்போராடத் துவங்கு. ஒரு விண்கலமானது எவ்வாறு புவி ஈர்ப்பு விசைக்கு எதிராகக் கிளம்பி மேலே சென்று வான மண்டலத்தை எட்டுகிறதோ அதேபோல முயற்சிசெய். உன்னையே வருத்தி முன் செல்லுமாறு தள்ளு. ஓரிரு வாரங்களுக்குள் என்ன நடக்கின்றது என்று கவனி.''

''இதற்கு மந்திரம் உதவுமா?''

''ஆம், நான் உனக்குக் கொடுத்த மந்திரத்தை உச்சரிப்பதும், நீ எவ்வாறு இருக்கவேண்டுமென்று விரும்புகிறாயோ அதுபோல இருப்பதாகவும் நீ உன்னையே உன் மனக்கண்ணில் பார்த்துக்கொள்வதும் உனக்கு வெகுவாக உதவும். உனது கனவுகளுடன் இணைக்கவல்ல ஒழுங்கான, கொள்கை ரீதியான வாழ்க்கையை இதனால் உன்னால் உருவாக்க முடியும். மேலும், இதற்காக உன் உலகை நீ ஒரே நாளில் மாற்றியமைக்க வேண்டும் என்பதல்ல பொருள். சின்னதாக தொடங்கு. ஓராயிரம் மைல் தொலைவிலான பயணம், ஒரு முதல் அடியை எடுத்து வைப்பதால் தொடங்குகிறது. மெல்ல மெல்லத்தான் நாம் மகத்தானவர்களாக முடியும். தினந்தோறும் ஒரு மணி நேரம் முன்னதாக கண்விழித்து எழுவதற்கு உன்னை பழக்கிக் கொள்வதும் இந்த அருமையான பழக்கத்தை விடாமல் கடைப்பிடிப்பதும் கூட உனது தன்னம்பிக்கையை வெகுவாக அதிகரிக்கும். இதனால் நீ அதிக உயரங்களை எட்ட இயலும்!''

''இவற்றுக் கிடையே உள்ள தொடர்பை என்னால் பார்க்க முடியவில்லை,'' என்று நான் ஒப்புக்கொண்டேன்.

“சிறிய வெற்றிகள், பெரிய வெற்றிகளுக்கு இட்டுச்செல்கின்றன. பெரிய சாதனைகளைச் சாதிக்க வேண்டுமானால் சிறிய சாதனைகளின் மேல்தான் அவற்றைக் கட்டி எழுப்ப முடியும். ஒவ்வொரு நாளும் முன்னதாகக் கண்விழிக்க வேண்டுமென்ற தீர்மானத்தைப் பின்பற்றுவதன் மூலம், அச்சிறிய செயலின் வெற்றி கொண்டு வரும் திருப்தியின் இன்பத்தை நீ உணர்வாய். ஒரு இலக்கை நிர்ணயித்து அதை நீ எட்டியுள்ளாய். இது ஒரு நல்ல உணர்வை ஏற்படுத்துகிறது. இடைவிடாமல் உனது தரத்தை தொடர்ந்து உயர்த்திக் கொள்வதற்காக, இலக்கை மேலும் மேலும் உயர்த்திக்கொண்டே போவதுதான் இங்கு செய்ய வேண்டிய செயல். உன்னிடம் அடங்கியுள்ள அளவற்ற சக்தியை மேலும் தேடிக் கண்டடைய உன்னை ஊக்குவிக்கின்ற ஊந்து விசையெனும் மந்திரத்தன்மையை இவ்வெற்றி விடுவித்து வெளிவரச் செய்யும். உனக்கு பனிச்சறுக்கு செய்ய பிடிக்குமா?” என்றார் ஜூலியன் சட்டென்று கவனம் திசை திரும்பியதுபோல.

“எனக்கு பனிச்சறுக்கு விளையாட்டு மிக மிகப் பிடிக்கும். எங்களால் முடிந்த போதெல்லாம் ஜென்னியும், நானும் குழந்தைகளை மலைகளின் உயரப் பகுதிகளுக்கு கொண்டு செல்வதுண்டு. இது அடிக்கடி நிகழ்வதில்லை. என்பதுதான் ஜென்னியின் வருத்தம்.”

“சரி, ஒரு பனிச்சறுக்கு மலையின் உச்சியிலிருந்து நீ சரிந்து வரும்போது எவ்வாறு உள்ளது? முதலில் நீ மெதுவாகத் தொடங்குகிறாய், ஆனால் ஒரு நிமிட நேரத்திற்குள் நாளை என்ற ஒன்று இல்லவே இல்லை என்பதுபோல நீ மலையிலிருந்து கீழே பறந்து வருகிறாய், இல்லையா?”

“என்னை ‘நிஞ்சா ஸ்கியர்’ என்று அழையுங்கள்! அந்த அதிவேகம் எனக்கு மிகவும் பிடிக்கும்.”

“உன்னை அத்தனை வேக வேகமாகப் போக வைப்பது எது?”

“எனது காற்றை துளைத்துக் கொண்டு செல்லும் மெல்லிய உடல்,” என்றேன் நான் வேடிக்கையாக.

“நல்ல கதை!” என்று சிரித்தார் ஜூலியன்.

“வேகம் என்ற பதிலைத்தான் நான் தேடிக் கொண்டிருக்கிறேன் வேகம் என்பதுதான் சுய ஒழுங்கு முறையை வளர்ப்பதற்கான ரகசிய உட்பொருள். நான் கூறியதுபோல நீ சிறிய விஷயங்களில் தான் துவங்குகிறாய். காலையில் முன்னதாக எழுவதைப் போல அல்லது சற்று நேரம் நடப்பதைப் போல அல்லது போதுமான நேரம் தொலைக்காட்சியை பார்த்தபின் அதை நிறுத்தி விடுவது போல இந்தச் சிறிய வெற்றிகள் ஒரு வேகத்தை உருவாக்கி உனது உயர்வான உயிருருவிற்குச் செல்லும் பாதையில் பெரிய காலடிகளை எடுத்து வைக்கும்படி உனக்கு ஆர்வமூட்டுகின்றன. விரைவில் உன்னால் செய்ய முடியும் என்று உனக்கே தெரிந்திராத செயல்களை நீ

வேகத்துடனும் சக்தியுடனும் செய்கிறாய். ஜான், இது ஒரு அற்புதமான செயல்முறை, உண்மையாகத்தான்.

“யோகி ராமனின் கதையில் வரும் இளஞ்சிவப்பு ஒயர் கேபிள் உனது மன உறுதியின் வலிமை பற்றி உனக்கு நினைவூட்டிய வண்ணம் இருக்கும்.”

ஒழுங்குமுறைக் கட்டுப்பாடு பற்றிய தனது எண்ணங்களை ஜூலியன் வெளிப்படுத்திக் கொண்டிருந்த போது அறையினுள் சூரியனின் முதல் ஒளிக்கதிர்கள் மெல்ல நுழைவதைக் கண்டேன். உறங்கி முடிந்த குழந்தை தனது தேவையற்ற போர்வையை விலக்கி தள்ளுவது போல, அது அறையில் படர்ந்திருந்த இருளை விலக்கியது. இன்றைய நாள் மகத்தான ஒன்றாக இருக்க போகிறது என்று நான் எண்ணமிட்டேன்.

‘எனது வரவிருக்கும் வாழ்நாட்களின் முதல் தினம்.’

அத்தியாயம் 10 - செயல்பாட்டுச் சுருக்கம்
இரத்தினச் சுருக்கமாக ஜூலியனின் ஞானம்

குறியீடு

இளஞ்சிவப்ப ஒயர் கேபிள்

நற்பண்பு

❖ *ஒழுங்குமுறைக் கட்டுப்பாட்டுடன் வாழ்.*

ஞானம்

❖ *துணிவான சிறிய செயல்களை இடைவிடாமல் செய்வதால் ஒழுங்குமுறைக் கட்டுப்பாடு வளர்த்தெடுக்கப்படுகிறது.*

❖ *சுய கட்டுப்பாட்டின் கருவை எவ்வளவு அதிகமாகப் பேணுகிறாயோ, அவ்வளவு அதிகமாக அது முதிர்ச்சி பெறும்.*

❖ *ஒரு முழுமையாக நிறைவாக்கப்பட்ட வாழ்விற்கு மன உறுதி அத்தியாவசியமான பண்பு ஆகும்.*

செய்முறைகள்

❖ *மந்திரங்கள்! மனக்கண்ணில் உருவாக்கிப் பார்த்தல்.*

❖ *மௌன விரதம்.*

மேற்கோள்

உனது மனமெனும் மாளிகைக்குள் புகுந்துவிட்ட பலவீனமான எண்ணங்களைத் தாக்கிப் போரிடு. அவை, தாம் இங்கு விரும்பப்படவில்லை என்பதைக் கண்டு கொண்டு அழையா விருந்தினர் போல விலகிச் சென்றுவிடும்.

11

உனது மிக அரிய கைப்பொருள்

“நன்றாக ஒழுங்கமைக்கப்பட்ட நேரம் என்பது, நன்றாக ஒழுங்கமைக் கப்பட்ட ஒரு மனதின் நிச்சயமான அடையாளமாகும்”

- சர் ஐசக் பிட்மென்.

“வாழ்க்கையைப் பற்றி, மிகவும் வேடிக்கையான ஒரு விஷயம் என்ன தெரியுமா?” என்று ஜூலியன் என்னை கேட்டார்.

“நீங்கள் கூறுங்கள்,” என்றேன் நான்.

“தமக்கு உண்மையில் என்ன வேண்டும் என்பதையும், அதை எவ்வாறு பெறுவது என்பதையும் பற்றி மக்கள் உணர்ந்து கொள்வதற்குள் பெரும்பாலும் நிறைய காலதாமதம் ஆகிவிடுகிறது. ‘இளமைக்கு மட்டும் தெரிந்திருந்தால், முதுமைக்கு மட்டும் முடிந்திருந்தால்’ என்ற முதுமொழி மிக மிக உண்மையானது.”

“யோகி இராமனின் கதையில் வரும் நிறுத்து கடிகாரம் அதைத்தான் குறிக்கின்றதா?”

“ஆம்! ஒன்பதடி உயரமும், தொண்ணூறு பவுண்டு எடையும் உள்ள நிர்வாணமான, இளஞ்சிவப்பு ஒயர்கேபிளால் தனது பிறப்புறுப்புக்களை மறைத்துக் கொண்டுள்ள, சுமோ மல்யுத்த வீரன் அந்த அழகிய தோட்டத்தில் யாரோ விட்டுச் சென்றுள்ள பளிச்சிடும் தங்கநிற நிறுத்து கடிகாரத்தை எடுத்து அணிந்து கொள்கிறான்.” என்று ஜூலியன் எனக்கு நினைவூட்டினார்.

“என்னால் எப்படி மறக்கமுடியும்?” என்றேன் நான் பெரிதாகப் புன்னகைத்தபடி.

யோகி இராமனின் கதை அவரது ஞானம் பெற்ற வாழ்க்கைக்கான புராதனத் தத்துவத்தை ஜூலியனுக்கு கற்றுக் கொடுத்து அதை அவரது நினைவில் நிறுத்துவதற்கான நினைவுச் சின்னங்களால் நிரம்பியது என்பதை நான் இதற்குள் புரிந்து கொண்டுவிட்டேன். எனது கண்டுபிடிப்பை நான் அவரிடம் சொன்னேன்.

“ஆகா! ஒரு வக்கீலுக்கே உரிய ஆறாவது அறிவு! நீ கண்டு கொண்டது மிகவும் சரி. முதலில் எனது அறிவு நிறைந்த ஆசானின் வழிமுறைகள் எனக்கும் மிகவும்

வினோதமாக தென்பட்டன. நான் முதலில் பேசத் துவங்கியபோது நீ எவ்வாறு இதைப்பற்றி குழப்பத்தில் ஆழ்ந்தாயோ அதேபோல நானும் இதைப் புரிந்து கொள்ள மிகவும் சிரமப்பட்டேன் ஆனால் இதை நான் உன்னிடம் சொல்லியாக வேண்டும். கதையின் ஏழு அம்சங்களும் – தோட்டம் மற்றும் சுமோ வீரனில் தொடங்கி, மஞ்சள் நிற ரோஜாக்கள் மற்றும் வைரங்கள் சிதறியுள்ள பாதை வரையில் – நான் சிவானாவின் கற்று கொண்டவற்றின் வலிமையான நினைவுச் சின்னங்களாக இருக்கின்றன. தோட்டம் என்னை ஊக்குவிக்கும் எண்ணங்களை கவனத்தில் வைத்துக்கொள்ள உதவுகிறது. கலங்கரை விளக்கமோ, 'வாழ்க்கையின் குறிக்கோள்.' ஒரு குறிக்கோள் உள்ள வாழ்க்கை என்பதை நினைவூட்டுகிறது. சுமோ மல்வீரன் தொடர்ந்த சுய கண்டுபிடிப்பில் கருத்தை மையம் கொள்ள வைக்கிறான். இளஞ்சிவப்பு ஒயர்கேபிள் மன உறுதியின் அற்புதங்களுடன் என்னைத் தொடர்பு கொள்ள வைக்கிறது. இந்தக் கதையைப்பற்றி எண்ணாமலும், யோகி இராமன் எனக்கு கற்பித்த கொள்கைகள் பற்றி சிந்திக்காமலும் என்னால் ஒரு நாள் கூட இருக்க முடிவதில்லை.''

"ஒளிவிடும் தங்க நிறுத்து கடிகாரம் எதைக் குறிக்கிறது?"

''நமது மிக மிக முக்கியமான கைப்பொருளாகிய நேரத்தைக் குறிக்கிறது. நேர்மறைச் சிந்தனை, இலக்கு நிர்ணயித்தல் போன்றவை மற்றும் சுய ஆளுமையெல்லாம்?''

''அவை யெல்லாமே நேரத்துடன் தொடர்பு கொள்ளவில்லை என்றால் ஒரு பயனும் தரமாட்டா! சிவானாவில் நான் ஆறு மாதங்கள் கழித்த பின்னர் எனது ரோஜாக் குடிலுக்கு ஒரு பெண் துறவி வந்தார். நான் அப்பொழுது படித்துக் கொண்டிருந்தேன். அவர் பெயர் திவ்யா. கரு நிற கூந்தல் கொண்ட அழகிய பெண். இந்த இரகசிய மலை வாசஸ்தலத்திலே வசித்து வந்த முனிவர்களுள் தான் மிகவும் இளையவள் என்று அவர் என்னிடம் கூறினார், யோகி இராமனின் உத்தரவின் பேரில் எனது குடிலுக்கு வந்ததாகவும் அவர் கூறினார். மேலும் யோகி இராமனின் மாணவர்களிலே நான் தான் மிகச் சிறந்தவன் என்று அவர் கூறியதாகவும் அவர் என்னிடம் சொன்னார்.

'ஒருவேளை உங்கள் முந்தைய வாழ்வில் நீங்கள் அனுபவித்த வேதனைகள் எல்லாம் உங்களைத் திறந்த மனதுடையவராக்கி, இந்த ஞானத்தை ஏற்றுக்கொள்ள வைத்துள்ளது போலும்' என்று அவர் கூறினார். 'இச்சமூகத்திலேயே மிகவும் சிறிய வயதினளாக இருப்பதால், உங்களுக்கு ஒரு பரிசைக் கொண்டு வந்து தருமாறு நான் பணிக்கப்பட்டுள்ளேன். இது நாங்கள் அனைவரும் உங்களுக்கு தருவதாகும். இத்தனை தொலைவு பயணித்து வந்து எங்களது வழிமுறைகளைப் பற்றிக் கற்றுக்கொள்ள வந்துள்ளீர்கள். உங்கள் பால் உள்ள மரியாதையின் அடையாளமாக இதை உங்களுக்கு அளிக்கிறோம். ஒருமுறை கூட நீங்கள் எங்களைப் பற்றிக் கணிப்பு ஏதும் உருவாக்கியதில்லை. எங்களது பாரம்பரியங்களைக் கேலி செய்ததில்லை, எனவே ஒன்றிரண்டு வாரங்களில் நீங்கள் எங்களை விட்டுப் போவதாக முடிவு செய்துள்ள

போதிலும் உங்களை நாங்கள் எங்களில் ஒருவராகத்தான் கருதுகிறோம். நான் உங்களுக்குத் தரப்போவதை வெளியார் எவரும் இதுவரை பெற்றதே இல்லை.'

"என்ன பரிசு அது?" என நான் பொறுமையுடன் கேட்டேன்.

"தனது பருத்திப் பையிலிருந்து ஒரு பொருளை திவ்யா வெளியே எடுத்து என்னிடம் கொடுத்தார். ஒரு துண்டுக் காகிதத்தில் சுற்றப்பட்டிருந்தது அது. அத்தகைய ஒரு பொருளை நான் பார்ப்பேன் என்று கனவில் கூட நான் கருதியதில்லை. கண்ணாடியால் செய்யப்பட்டு சிறிய சந்தனக்கட்டையில் பொருத்தப்பட்டிருந்த அது ஒரு காலம் காட்டும் மணல் கடிகாரம். எனது முக பாவத்தை பார்த்துவிட்டு, அங்கிருந்த முனிவர்கள் ஒவ்வொருவரும் அத்தகையதொரு மணல் கடிகாரத்தைத் தமது சிறு வயதில் பெற்றனர்" என்று திவ்யா விளக்கினார்.

'எங்களிடம் உடமைகள் ஏதும் இருப்பதில்லை. வெகு தூய்மையான எளிமையான வாழ்க்கையைத்தான் நாங்கள் வாழ்கிறோம். இருந்தும் காலத்தை நாங்கள் மதிக்கிறோம். அது கடந்து செல்வதைக் கவனிக்கிறோம். இந்தச் சின்னஞ் சிறு மணல் கடிகாரங்கள், மரணமடையக் கூடிய நமது மனிதத் தன்மையைப்பற்றி நமக்கு தினசரி நினைவூட்டுபவையாக இருக்கின்றன. மேலும் நமது நோக்கங்களை முன்னெடுத்துச் சென்றுள்ளவாறு முழுமையான உருவாக்குதலைக் கொண்ட நாள்களை வாழ்வதற்கான முக்கியத்துவத்தையும் அவை நமக்கு நினைவூட்டுகின்றன.' என்று திவ்யா சொன்னார்.

"இமயமலையின் உயரப்பகுதியில் உள்ள இந்தத் துறவிகள் கூடவா நேரத்தைக் கணக்கிட்டனர்?"

"அவர்களில் ஒவ்வொருவரும் நேரத்தின் முக்கியத்துவத்தைப் புரிந்து கொண்டிருந்தனர். **'நேர உணர்வு'** என்று நான் அழைக்கும் ஒன்றை அவர்கள் ஒவ்வொருவரும் வளர்த்துக் கொண்டிருந்தனர். நேரம் மணலைப் போல நமது விரல்களினூடே நழுவிச்சென்று விடுகிறது. ஒருபோதும் அது திரும்ப வருவதில்லை என்று நான் அறிந்துள்ளேன். இளம் வயதிலிருந்து நேரத்தை புத்திசாலித்தனமாக புரிந்து பயன்படுத்துபவர்களுக்கு செழுமையான, உருவாக்குதல் நிறைந்த, திருப்தி தரும் வாழ்க்கை பரிசாக கிடைக்கிறது. நேர நிர்வாகம் என்பது வாழ்க்கையின் நிர்வாகம் என்ற கருத்தைத் தெரிந்து கொள்ளாமல் இருப்பவர்களால் தமது பிரமாண்டமான மனித சக்தியைப் புரிந்து கொள்ளவே முடியாது, காலம் எல்லாவற்றையும் சமன் செய்து விடக் கூடியதாகும். நாம் நல் வாய்ப்புகளை பெற்றிருந்தாலும், இல்லாவிட்டாலும், டெக்ஸாஸில் இருந்தாலும், டோக்கியோவில் இருந்தாலும் நம் அனைவருக்குமே 24 மணி நேரத்தைக் கொண்ட நாட்கள் தான் தரப்பட்டுள்ளன. ஏதோ வாழ்ந்தார்கள் என்பவர்களிடமிருந்து அசாதாரணமான வாழ்க்கையை உருவாக்கியுள்ளவர்களைப் பிரித்துக் காட்டுவது அவர்கள் இந்த நேரத்தை பயன்படுத்தும் விதம் மட்டுமே."

“மிகவும் மும்முரமாக வேலை செய்து கொண்டிருப்பவர்களால் தான் எதற்கும் நேரத்தை ஒதுக்க முடியும் என்று எனது தந்தை கூறக் கேட்டிருக்கிறேன். அதிலிருந்து நீங்கள் என்ன புரிந்துகொண்டிருக்கிறீர்கள்?”

“அதை நான் ஒப்புக்கொள்கிறேன். வேலை நிறையச் செய்து கொண்டும், நிறைய உருவாக்கிக் கொண்டும் இருப்பவர்கள் தான் தமது நேரத்தை வெகு திறம்படப் பயன்படுத்திக் கொண்டு இருப்பவர்களாவர். அவர்கள் தப்பிப்பிழைக்க வேண்டுமானால் அவ்வாறு தான் இருந்தாக வேண்டும். ஒரு மிகச் சிறந்த நேர நிர்வாகியாக இருக்க வேண்டுமானால் ஒருவர் வேலைக்கு அடிமையாக இருக்கவேண்டும் என்பதில்லை. அதற்கு மாறாக நேரத்தை நன்கு நிர்வகிப்பதால் நீ செய்ய விரும்பும் விஷயங்களை செய்வதற்கான நேரம் உனக்கு நிறைய கிடைக்கிறது. அவை உனக்கு உண்மையில் அர்த்தமுள்ளவையாக இருக்கும். நேரத்தை ஆள்வதால் வாழ்க்கையை ஆள முடிகிறது. நேரத்தை நன்றாகப் பாதுகாத்துக்கொள். அது ஒரு புதுப்பித்துக் கொள்ள முடியாத பொருள் என்பதை நினைவில் வைத்துக்கொள்.

“உனக்கு ஒரு எடுத்துக்காட்டைக் கூறுகிறேன்,” என்று ஜூலியன் முன்வந்தார். “அது ஒரு திங்கட்கிழமை காலை. உனது செயல் திட்டம் கூட்டங்களாலும், சந்திப்புகளாலும், நீதிமன்ற தோற்றங்களினாலும் நிரம்பி வழிந்து கொண்டு உள்ளது. வழக்கம் போல ஆறரை மணிக்கு எழுந்து காலை உணவை விழுங்கி விட்டு வேலைக்கு ஓடிச்சென்று பணிகளை விரட்டிப் பிடிக்கின்ற ஒரு இறுக்கமான நாளை செலவழிப்பதைக் காட்டிலும் முதல் நாளிரவு ஒரு பதினைந்து நிமிடங்களை உனது வேலையைத் திட்டமிடுவதற்காக செலவிடுகிறாய் என்று வைத்துக்கொள்வோம். அல்லது மேலும் திறமையாக செயல்படுவதானால், அமைதியான ஒரு ஞாயிற்றுக்கிழமைக் காலையில் உனது வாரம் முழுவதையும் ஒழுங்காகத் திட்டமிட ஒரு மணி நேரம் எடுத்துக்கொள்கிறாய் என்று வைத்துக்கொள்வோம். உனது அன்றாட பணித்திட்டத்தில் எப்பொழுது உனது வாடிக்கையாளர்களைச் சந்திக்க விரும்புகிறாய், எப்பொழுது சட்ட நுணுக்கங்களை ஆராயவுள்ளாய், மற்றும் எப்பொழுது தொலைபேசி அழைப்புகளுக்கு பதில் கூறவுள்ளாய், என்றெல்லாம் எழுதி வைக்கிறாய். மிகவும் முக்கியமாக அந்த வாரத்திற்கான சொந்த சமூக மற்றும் ஆன்மீக இலக்குகளும் கூட உனது திட்டப் புத்தகத்தின் உள்ளே செல்லும். இந்த மிகச் சாதாரணமான செயல்தான் ஒரு சமநிலையிலுள்ள வாழ்வின் இரகசியமாகும். உன் வாழ்வின் மிக முக்கியமான அம்சங்களையெல்லாம் உனது அன்றாடச் செயல்திட்டத்தில் நங்கூரமிட்டு நிறுத்துவதால், உனது வாரமும், உனது வாழ்க்கையும், பொருளுள்ளதாகவும், அமைதியுள்ளதாகவும் இருப்பதை நீ உறுதிப்படுத்திக் கொள்கிறாய்.”

“எனது மிகவும் மும்முரமான வேலை நாளின் நடுவில் பூங்காவில் நடப்பதற்கோ, தியானம் செய்வதற்கோ, நேரம் ஒதுக்க வேண்டும் என்றா சொல்கிறீர்கள்?”

“நிச்சயமாகச் சொல்கிறேன்,

நீ ஏன் இத்தனை திடமாக வழக்கத்திற்கு அடிமையாக கட்டுண்டு இருக்கிறாய்?

வேறு எல்லோரும் செய்து கொண்டிருப்பது போலவே நீயும் செய்யவேண்டும் என்று ஏன் நினைக்கிறாய்?

உனது சொந்தப் பந்தயத்தை ஓட்டு. உனது அலுவலகத்திற்கு எதிரில் உள்ள அழகிய பூங்காவில் சற்று உலாச் செல்வதற்காக நீ ஏன் காலையில் ஒரு மணி நேரம் முன்னதாகப் பணிக்கு செல்லக்கூடாது?

அல்லது வாரத்தின் துவக்கத்தில் ஒன்றிரண்டு மணி நேரம் கூடுதல் வேலை செய்துவிட்டு வெள்ளிக்கிழமை வேலையை விரைவாக முடித்துக்கொண்டு உன் குழந்தைகளை ஏன் விலங்குச் காட்சிச் சாலைக்கு அழைத்துச் செல்லக்கூடாது?

அல்லது உனது குடும்பத்தினருடன் இருப்பதற்காக ஏன் வாரத்தில் இரண்டு நாள் வீட்டிலேயே உன் வேலையை செய்யக்கூடாது, நான் சொல்வதெல்லாம், உனது வாரத்தைத் திட்டமிடு, நேரத்தைப் புது விதமாகப் பயன்படுத்து என்பதுதான். உனது பிரதான வேலைகளை சுற்றிலும், உனது நேரத்தை மையம் கொண்டிருக்குமாறு ஒரு ஒழுங்கை ஏற்படுத்திக்கொள். மிகவும் குறைவான முக்கியத்துவம் கொண்டவற்றுக்காக, மிகவும் முக்கியமான விஷயங்களைத் தியாகம் செய்யக்கூடாது. திட்டமிடத் தவறுவது என்பது, தவறுவதற்கும் தோல்வியடைவதற்குத் திட்டமிடலாகும் என்பதை மறந்துவிடாதே. பிறருடன் உனக்குள்ள சந்திப்புகளை மட்டும் எழுதி வைக்காமல், உன்னுடனே உனக்குள்ள பணிகளையும் கூட - வாசிக்க, ஓய்வெடுக்க, அல்லது உன் மனைவிக்கு ஒரு காதல் கடிதம் எழுத என - எழுதி வைத்துக் கொண்டால் - உனது நேரத்தை உன்னால் மிகவும் சிறப்பாக பயன்படுத்த முடியும். நீ சும்மா இருக்கும் நேரத்தைச் செழுமையாக்குதல் என்பது ஒருபோதும் வீணான செயல் அல்ல என்பதை மறந்துவிடாதே. உனது பணிபுரியும் காலத்தில் நீ மிகவும் திறமையுடன் இருப்பதை அது உறுதி செய்கிறது. உனது வாழ்க்கையை சிறு சிறு பெட்டிகளுக்குள் வாழ்வதை நிறுத்து. நீ செய்வது எல்லாமே பிரிக்கமுடியாத ஒரு முழுமையாக உருவாகிறது என்பதைப் புரிந்து கொள். நீ வீட்டில் எவ்விதமாக நடந்துகொள்கிறாயோ அது அலுவலகத்தில் நடந்து கொள்வதைப் பாதிக்கிறது. அலுவலகத்தில் நீ பிறரை எவ்வாறு நடத்துகிறாயோ அது உனது குடும்பத்தினரையும், நண்பர்களையும் நடத்துகிற விதத்தில் தாக்கங்களை ஏற்படுத்துகிறது.''

''ஜூலியன், நான் இதை ஒப்புக்கொள்கிறேன். ஆனால் எனது நாளின் நடுவில் இடைவேளைகளை எடுத்துக்கொள்வதற்கான அவகாசம் எனக்கு உண்மையில் கிடையாது. இப்போதே, பெரும்பாலான மாலை நேரங்களில் நான் வேலை செய்து கொண்டு தான் இருக்கிறேன். என் வேலைத் திட்டம் இப்போதெல்லாம் என்னை நசுக்குவதாக உள்ளது.''

இவ்வாறு நான் சொல்லிக் கொண்டிருக்கும் போதே என்னை எதிர்கொண்டுள்ள மலை போன்ற வேலையை எண்ணி எனது வயிறு கலங்கியது.

"வேலை அதிகம் என்று சொல்லுவது ஒரு சரியான காரணமே இல்லை. இங்கு உண்மையான கேள்வி என்னவென்றால் என்ன செய்வதில் அத்தனை மும்முரமாக இருக்கின்றாய் என்பது தான். அந்த அறிவார்ந்த முதிய முனிவரிடமிருந்து நான் கற்றுக்கொண்ட மகத்தான விதிகளில் ஒன்று உனது வாழ்வில் நீ சாதிக்கின்ற விளைவுகளில் 80 சதவிகிதம், உனது நேரத்தை எடுத்துக் கொள்ளும் செயல்பாடுகளில் 20 சதவிகிதத்திலிருந்து ஏற்படுகின்றன என்பதுதான். யோகி இராமன் இதை **'புராதன இருபதின் விதி'** என்று குறிப்பிட்டார் என்பது தான்."

"எனக்கு நீங்கள் சொல்வது புரியவில்லை."

"சரி, உனது மும்முரமான திங்கட்கிழமைக்கு போவோம். காலையிலிருந்து இரவுவரை உனது வாடிக்கையாளர்களுடன் பேசுவதிலும், சட்ட விஷயங்களை எழுதுவதிலும் உனது சிறு குழந்தைக்கு உறங்கச் செல்லுமுன் கதை வாசித்துச் காட்டுவதிலும், உனது மனைவியுடன் செஸ் விளையாடுவதிலும் நீ நேரத்தை செலவிடுகிறாய். சரிதானே?"

"சரிதான்."

"ஆனால் நீ செய்கின்ற நூற்றுக்கணக்கான செயல்பாடுகளிலும், இருபது சதவிகிதம் மட்டுமே உண்மையான நிரந்தரமான, விளைவுகளை ஏற்படுத்தும். நீ செய்வதில் இருபது சதவிகிதம் மட்டுமே உனது வாழ்க்கையின் தரத்தின் மீது ஒரு தாக்கத்தை ஏற்படுத்தும். இவையே உனது **'உயர்தாக்கச் செயல்பாடுகள்'.** உதாரணமாக இன்றிலிருந்து பத்து ஆண்டுகள் சென்ற பின்னர், தண்ணீர் கூலர் அருகே நின்றபடியோ, அல்லது சிகரெட் புகை மண்டிய மதிய உணவுக்கூடத்தில் அமர்ந்த படியோ வம்பு பேசுவதிலும் அல்லது தொலைக் காட்சி நிகழ்ச்சிகளை பார்ப்பதிலும் செலவிட்ட நேரம் முழுவதும் ஏதேனும் பயனுள்ளதாக இருக்கும் என்று உண்மையிலேயே நினைக்கிறாயா?"

"இல்லை, உண்மையில் இல்லை."

"சரி, எனவே பயனுள்ள செயல்களும் பல உள்ளன என்பதையும் நீ ஒப்புக்கொள்வாய் என்று நினைக்கிறேன்."

"அதாவது எனது சட்ட அறிவை மேம்படுத்திக் கொள்வதில் செலவிடும் நேரம் எனது வாடிக்கையாளர்களுடனான எனது உறவை மேம்படுத்திக் கொள்வதில் செலவிடும் நேரம், மற்றும் ஒரு அதிகத் திறமையான வக்கீலாவதற்கு செலவிடும் நேரம், என்பவற்றை குறிக்கிறீர்களா?"

"ஆம், மேலும் ஜென்னியுடனும், குழந்தைகளுடனுமான உனது உறவை மேம்படுத்திக் கொள்வதற்காக செலவிடும் நேரமும் கூட, இயற்கையுடன் தொடர்பு கொள்ளவும் உன்னிடம் இருப்பவனவற்றுக் கெல்லாம் நன்றியுணர்வைக் காட்டவும். உனது மனம் உடல் மற்றும் ஆன்மாவைப் புதுப்பித்துக் கொள்ளவுமான நேரம்

ஆகியன உனக்குத் தகுதியான வாழ்வை வடிவமைத்துக் கொள்ளச் செய்யும். உயர்தாக்கச் செயல்பாடுகளில் இவை ஒரு சிலவாகும். எனவே பயனுள்ளவையும் முக்கியமானவையுமான செயல்பாடுகளில் உனது நேரம் முழுவதையும் செலவிடு. ஞானத்தெளிவு பெற்ற நபர்கள் முதன்மையின் பால் பற்றுக் கொண்டவர்கள், முதன்மையானவற்றால் உந்தப்படுபவர்கள். இதுதான் நேர நிர்வாகம், நேர ஆளுமையின் இரகசியம்."

"ஆகா! யோகி இராமன் இதையெல்லாம் உங்களுக்கு கற்றுத் தந்தாரா?"

"நான் வாழ்க்கையின் மாணவனாக ஆகியுள்ளேன் ஜான். யோகி இராமன் ஒரு அற்புதமான உற்சாகமூட்டும் ஆசான் என்பது உண்மை. அவரை நான் ஒருகாலும் மறக்கமாட்டேன். ஆனால் எனது பல்வேறு அனுபவங்களிலிருந்து நான் கற்றுக்கொண்ட பாடங்கள் எல்லாம் இப்போது பெரிய புதிரின் பல துண்டுகள் போல ஒன்று சேர்ந்து ஒரு மேலான வாழ்வுக்கான வழியை எனக்கு காட்டியுள்ளன."

ஜூலியன் மேலும் கூறினார். "எனது முந்தையத் தவறுகளிலிருந்து நீயும் கற்றுக்கொள்வாய் என்று நான் நம்புகிறேன். சிலர் பிறரது தவறுகளிலிருந்து கற்றுக்கொள்கிறார்கள். அவர்களே புத்திசாலிகள். பிறரோ உண்மையான அறிவு என்பது சொந்த அனுபவத்திலிருந்து மட்டுமே வருகிறது என்று கருதுகிறார்கள். இத்தகைய நபர்கள் தேவையற்ற வேதனைகளையும் வருத்தத்தையும் தமது வாழ்நாளில் சந்தித்து தாங்கிக் கொள்கிறார்கள்."

ஒரு வழக்கறிஞர் என்ற முறையில் நேர நிர்வாகம் பற்றிய பல கருத்தரங்குகளில் நான் கலந்து கொண்டுள்ளேன். எனினும் ஜூலியன் இப்பொழுது என்னுடன் பகிர்ந்துகொண்ட நேர ஆளுமை தத்துவத்தைப் பற்றி நான் கேட்டதேயில்லை. நேர நிர்வாகம் என்பது அலுவலகத்தில் மட்டும் பயன்படுத்தி விட்டு பின்னர் வேலை முடியும்போது வீசியெறியப்பட வேண்டிய ஒன்றல்ல. சரியாகப் பயன்படுத்தினால் எனது வாழ்வின் அனைத்து பகுதிகளையும் மேலும் அதிக சம நிலையினும் அதிக நிறைவளிப்பதாகவும் செய்வதற்கான ஒரு முழுமையான அமைப்பு அதுவாகும். எனது நாட்களைத் திட்டமிடுவதன் வாயிலாகவும், எனது நேரத்தைப் பயன்படுத்துவதில் நான் சமநிலையில் இருப்பதை உறுதி செய்ய நேரம் எடுத்துக் கொள்வதன் மூலமும், நான் மிக அதிகமான பலன்களை விளைவிப்பது மட்டுமல்லாது அதிக மகிழ்ச்சியுடன் இருப்பேன்.

"ஆக, வாழ்க்கை என்பது ஒரு இறைச்சித் துண்டை போன்றது," என்றேன் நான். "உங்களது நேரத்தை வென்று ஆள வேண்டுமானால், இறைச்சியிலிருந்து கொழுப்பைப் பிரித்தெடுக்க வேண்டும்."

"மிகவும் நன்று. இப்பொழுது நீ அதை நன்கு புரிந்து கொண்டு விட்டாய். நான் மரக்கறி உண்பதால் இந்த உதாரணத்தை நான் வேறுவிதமாக எடுத்துக் கொள்வேன். இருந்தாலும் இது மிகச்சரியாகப் பொருந்தி விஷயத்தைப் பட்டென்று விளக்குவதால்

எனக்கு பிடித்திருக்கிறது. உனது நேரத்தையும் விலைமதிப்பற்ற மனோசக்தியையும் இறைச்சியின் மீது செலுத்துவதால் கொழுப்பின் மீது வீணடிப்பதற்கு உனக்கு நேரம் இருக்காது. இந்தப் புள்ளியில்தான் உனது வாழ்க்கை **'சாதாரணம்'** என்ற பரிமாணத்திலிருந்து **'அசாதாரணத்தின்'** அதியற்புதத்திற்குள் நுழையத் தொடங்குகிறது. இப்பொழுதுதான் நிறைய விஷயங்களை உருவாக்கத் தொடங்குகிறாய். ஞானத்தின் கோவில் கதவுகள் சட்டென்று திறந்து கொள்கின்றன," என்று முடித்தார் ஜூலியன். பின்னர் தொடர்ந்து அவர் கூறியதாவது.

"இது என்னை மற்றொரு விஷயத்திற்குக் கொண்டு வருகிறது. பிறர் உனது நேரத்தை திருட அனுமதிக்காதே. நேரம் திருடுபவர்கள் பற்றி எச்சரிக்கையாக இரு. குழந்தைகளை உறங்கச் செய்துவிட்டு நீ நிறையக் கேள்விப்பட்டு, வாசிக்க வேண்டும். என்று காத்துக் கொண்டிருந்த நவீனத்தை வாசிக்கலாம் என்று உட்காரும்போது தொலைபேசியில் அழைப்பவர்கள் இவர்கள். நெருக்கும் பணிகளுக்கிடையில் மூச்சு விடுவதற்குச் சற்றே இடைவெளி கிடைக்கும் சமயத்தில் உனது அறைக்குள் நுழைபவர்கள் இவர்கள். இது உனக்குப் பழக்கமானதாகத் தெரிகிறதா?"

"வழக்கம்போல நீங்கள் சொல்வது சரி. என் கதவை மூடிவைத்துக் கொள்ளவோ, அவர்களைப் போய்விடுமாறு சொல்லவோ முடியாத அளவுக்கு அதிகக் கண்ணியத்துடன் நான் நடந்து கொண்டிருக்கிறேன் என்று நினைக்கிறேன்" என்று நான் உண்மையைச் சொன்னேன்.

"உனது நேரத்தைப் பொறுத்த அளவில் நீ வெகு கடுமையாக நடந்துகொள்ள வேண்டும். 'முடியாது' 'இல்லை' என்று சொல்லக் கற்றுக்கொள். சிறு சிறு விஷயங்களுக்கு இல்லை என்று சொல்வதற்கான துணிவைக் கொண்டிருப்பதால் பெரிய விஷயங்களுக்கு 'ஆம்' 'சரி' என்று சொல்வதற்கான சக்தி உனக்குக் கிடைக்கும். ஒரு பெரிய வழக்கு பற்றி வேலை செய்ய வேண்டியுள்ளபோது உனது அலுவலக அறையின் கதவை மூடிவிடு. நான் சொன்னதை நினைவில் வைத்துக்கொள். ஒவ்வொரு முறை தொலைபேசி மணி ஒலிக்கும்போதும் அதை எடுக்காதே. அது உனது வசதிக்காக உள்ளது. பிறரது வசதிக்காக அல்ல. தனது நேரத்தை மதிக்கும் நபர் நீ என்று கண்டு கொள்ளும் போது மக்கள் உன்னை மேலும் மதிப்பார்கள். உனது நேரம் மேலும் மதிப்பற்றது என்று உணர்ந்து கொண்டு அதை அவர்கள் மதிப்பார்கள்."

"**தள்ளிப்போடும் வழக்கத்தை என்ன செய்வது?** மிகவும் அடிக்கடி எனக்கு செய்யப் பிடிக்காதவற்றை நான் தள்ளிப்போட்டு விடுகிறேன். அதற்குபதிலாக குப்பை கடிதங்களை வாசிப்பதிலும், சட்டப் பத்திரிகைககளை சும்மா புரட்டிக் கொண்டிருப்பதிலும் நேரத்தைச் செலவிடுகிறேன். ஒரு வேளை இதனால் நான் நேரத்தை வீணடித்துக் கொண்டுள்ளேனா?"

"நேரத்தைக் கொன்று கொண்டிருப்பது என்பது இங்குப் பொருத்தமான அடைமொழி. மனித இயல்பு என்பது இனிமையாக உள்ள செயல்களை செய்வதும்,

கசப்பாக உள்ளவற்றைத் தவிர்ப்பதுமே. ஆனால், உலகில் மிக அதிகமாக உருவாக்குபவர்களோ, குறைவாக உருவாக்குபவர்கள், பொதுவாகச் செய்ய விரும்பாத செயல்களையும் - தாங்களும் அவற்றை செய்ய விரும்பாமல் இருந்த போதிலும் செய்கின்ற பழக்கத்தை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள் தான்.''

இப்போது கேட்ட தத்துவத்தை பற்றி நான் நின்று நிதானமாகவும், ஆழமாகவும் சிந்திந்தேன். ஒருகால் தள்ளிப்போடுவது என்பது எனது பிரச்னை அல்ல போலும், ஒருகால் எனது வாழ்க்கை மிகவும் சிக்கலாகிப் போயிருக்கக்கூடும். ஜூலியன் எனது கவலையை புரிந்து கொண்டார்.

''தமது நேரத்தை ஆளத் தெரிந்தவர்கள், எளிமையான வாழ்க்கையை வாழ்ந்தார்கள் என்று யோகி இராமன் என்னிடம் கூறியுள்ளார். ஒரு அவசர கதியிலான அசுர வேகம் இயற்கையின் கருத்தில் உருவானதல்ல. தமக்கெனக் தெளிவாக வரையறுக்கப்பட்ட இலக்குகளை நிர்ணயித்துக் கொண்டு திறம்படச் செயல்படுவர்களால் தான் நிலையான மகிழ்ச்சியை பெற முடியும் என்று அவர் திடமாக நம்பினார். இருந்தபோதிலும் சாதனைகளாலும், பங்களிப்புகளாலும் நிறைந்து செழித்துள்ள ஒரு வாழ்க்கையானது, மன அமைதியை தியாகம் செய்து பெற வேண்டிய ஒன்றல்ல என்பதும் அவரது கருத்து. நான் கேட்டுக்கொண்டிருந்த ஞானத்தைப் பொறுத்த அளவில் இதுதான் என்னைப் பெரிதும் கவர்ந்திருந்தது. இது என்னை நன்றாக வேலை செய்து நிறைய உருவாக்கச் செய்தது மட்டுமன்றி எனது ஆன்மீக ஏக்கங்களையும் நிறைவேற்ற வைத்தது.''

நான் மேலும் அதிகமாக எனது மனதைத் திறந்து ஜூலியனிடம் பேசலானேன். ''நீங்கள் எப்பொழுதுமே என்னிடம் வெளிப்படையாகவும், உண்மையாகவும் இருந்து வந்துள்ளீர்கள். எனவே நானும் உங்களிடம் அவ்வாறே இருப்பேன். மேலும் அதிக மகிழ்ச்சியுடனும், திருப்தியுடனும் இருப்பதற்காக எனது சட்டத் தொழிலையும் வீட்டையும், காரையும் விட்டுவிட நான் விரும்பவில்லை. நான் சம்பாதித்துள்ள விளையாட்டுப் பொருள்கள் மற்றும் பிற உபயோகப் பொருள்களை நான் விரும்புகிறேன். நான் சந்தித்ததிலிருந்து இன்று வரை இத்தனை ஆண்டுகளாகப் பல மணிநேரம் உழைத்ததால் தான் எனக்குக் கிடைத்துள்ள பலன்கள் இவை. ஆனால் நான் காலியாக உணர்கிறேன். உண்மையிலே நான் சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது நான் கொண்டிருந்த கனவுகள் பற்றி நான் உங்களுக்குச் சொல்லியிருக்கிறேன். எனது வாழ்க்கையில் நான் செய்யக்கூடியது இன்னும் எவ்வளவோ உள்ளது. எனக்கு கிட்டதட்ட நாற்பது வயதாகி விட்டது. இன்னும் நான் கிராண்ட் கான்யன் பள்ளத்தாக்கையோ ஈஃபில் டவரையோ பார்த்ததில்லை. ஒரு பாலைவனத்தில் நடந்து சென்றதில்லை. ஒரு பிரமாதமான இளவேனில் நாளில் அமைதியான ஏரியில் படகு விட்டதில்லை. எனது காலணிகளை கழற்றி விட்டு வெறுங்காலுடன் பூங்காவில் நடந்து சென்றதில்லை. சிறுவர்களின் சிரிப்பையும், நாய்களின் குரைப்புச் சத்தத்தையும் கேட்டதில்லை. கடைசியாக எப்பொழுது ஒரு

பனிப்பொழிவிற்கு பின்னால் ஒரு நெடிய அமைதியான உலாப் போனேன் என்பது கூட எனக்கு நினைவு இல்லை.''

''அப்படியென்றால் உனது வாழ்க்கையை எளிமையாக்கிக் கொள்,'' என்றார் ஜூலியன் ஆறுதலாக. ''உனது உலகின் ஒவ்வாரு அம்சத்திற்கும் புராதன எளிமையின் சடங்கைப் பயன்படுத்து. அவ்வாறு செய்வதன் மூலம் இந்த எழிலான அற்புதங்களை ரசித்து அனுபவிப்பதற்குப் போதுமான நேரம் உனக்குக் கிடைக்கும். நம்மில் எவரும் செய்யக்கூடிய மிகவும் சோகமான விஷயங்களில் ஒன்று வாழ்வதை தள்ளிப் போடுவதுதான். நிறையப்பேர் தமது விட்டிற்குப் பின்னால் உள்ள ரோஜாத் தோட்டத்தை ரசிப்பதை விட்டுவிட்டு தொலைதூரத் தொடுவானத்தில் உள்ள ஏதோ ஒரு தோட்டத்தை பற்றிக் கனவு கண்டு கொண்டிருக்கின்றனர். என்ன ஒரு துரதிர்ஷ்டம்''.

''இதைத் தவிர்க்க ஏதேனும் செய்ய முடியுமா?''

''அதை நான் உனது சொந்தக் கற்பனைக்கே விட்டுவிடுகிறேன். முனிவர்களிடமிருந்து நான் கற்றுக்கொண்டுள்ள செய்முறைகளில் பலவற்றை நான் உன்னுடன் பகிர்ந்து கொண்டுள்ளேன். அவற்றைப் பயன்படுத்துவதற்கான துணிவு மட்டும் உன்னிடம் இருக்குமானால் அவை உனக்கு அற்புதங்களை நிகழ்த்திக் காட்டும். ஓ. இது எனது வாழ்வை அமைதியாகவும், எளிமையாகவும் வைத்துக் கொள்வதற்காக நான் செய்யும் மற்றொரு விஷயத்தை எனது நினைவுக்கு கொண்டு வருகிறது.''

''என்ன அது?''

''மதியம் ஒரு சிறிய குட்டித்தூக்கம் போடுவது எனக்கு விருப்பம். அது என்னைச் சக்தியுடனும், புத்துணர்வுடனும், இளமையுடனும் இருக்கச் செய்கிறது. எனது அழகுத் தூக்கம் எனக்கு தேவை என்று சொல்லலாம், என்று நினைக்கிறேன்.''

''அழகு ஒன்றும் உங்களது வலுவான அம்சம் இல்லை. ஜூலியன்.''

''நகைச்சுவை உணர்வு எப்போதுமே உனது வலுவான அம்சமாக இருந்து வந்துள்ளது. அதற்காக நான் உன்னைப் பாராட்டுகிறேன். சிரிப்பின் சக்தியை எப்பொழுதுமே வைத்துக்கொள். இசையைப் போலவே அதுவும் வாழ்வின் இறுக்கங்களுக்கும் அழுத்தங்களுக்கும் டானிக் ஆகும். 'சிரிப்பு உனது இதயத்தை திறந்து ஆன்மாவிற்கு ஆறுதலளிக்கின்றது. தம்மையே பார்த்து சிரிப்பது கூட மறந்து போகுமளவு யாரும் வாழ்கையை அத்தனைதீவிரமாக எடுத்துக் கொள்ளக்கூடாது' என்று யோகி இராமன் சொன்னது மிகவும் சரி.''

நேரத்தை பற்றிப் பேசுவதற்கு ஜூலியன் ஒரு கடைசிக் கருத்தையும் வைத்திருந்தார். ''ஜான், மிகவும் முக்கியமான ஒரு விஷயம் என்னவென்றால் உனக்கு வாழ்வதற்கு ஐந்நூறு ஆண்டுகள் இருப்பது போல நடந்து கொள்வதை நிறுத்து. இந்த

சின்னஞ்சிறு மணல் கடிகாரத்தை திவ்யா கொண்டு வந்தபோது என்னால் ஒரு போதும் மறக்க முடியாத ஒரு அறிவுரையை அவர் எனக்கு சொன்னார்.''

''அவர் சொன்னது என்ன?''

''ஒரு மரத்தை நடுவதற்கு மிகச்சிறந்த நேரம் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் என்று சொன்னார். அடுத்த மிகச்சிறந்த நேரம் இன்று. உனது நாளின் ஒரு கணத்தை கூட வீணடிக்காதே. ஒரு மரணப்படுக்கை மன நிலையை உருவாக்கிக் கொள்.''

''என்னது?'' என்றேன் நான் அவரது பயங்கரமான வர்ணிப்பால் அதிர்ந்து போனவனாக.

''மரணப்படுக்கை மன நிலை என்பது என்ன?''

''உனது வாழ்க்கையைப் பார்ப்பதற்கான ஒரு புதிய வழி அது. மேலும், அதிக விளக்கத்தை தரக்கூடியது என்று வைத்துக்கொள்ளலாம். இன்றைய தினம் உனது இறுதி நாளாக இருக்கலாம் என்று அது உனக்கு நினைவூட்டுகிறது. எனவே அதை முழுவதுமாக ரசித்து அனுபவிக்குமாறு தூண்டுகிறது.''

''ஆனால், இது சற்றே பயங்கரமான சிந்தனை போலத் தோன்றுகிறது என்பேன். இது என்னை சாவைப் பற்றி எண்ணச் செய்கிறது.''

''உண்மையில் இது வாழ்வைப் பற்றிய ஒரு தத்துவம் ஆகும். மரணப்படுக்கை மனநிலையை நீ ஏற்றுக் கொள்ளும்போது, உனது ஒவ்வொரு நாளையும் அதுவே உனது இறுதி நாள் என்பது போல நீ வாழ்கிறாய். ஒவ்வொரு நாளும் கண்விழித்து எழும்போது இந்த எளிய கேள்வியை உன்னையே கேட்டுக் கொண்டால் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பார், 'இன்றைய தினம் எனது இறுதி ஒன்றாக இருந்தால், இன்று நான் என்ன செய்வேன்?' பின்னர், உனது குடும்பத்தினரை, சக பணியாளர்களை, ஏன், முற்றிலும் அறிமுகமில்லாதவர்களையும் கூட, நீ எவ்வாறு நடத்துவாய் என்பதைப் பற்றி எண்ணிப் பார். ஒவ்வொரு தருணத்தையும் முழுமையாக வாழ்வதற்கு எவ்வளவு உற்சாகமாக இருப்பாய் என்று யோசி. மரணப் படுக்கை விஷயம் உனது வாழ்வை மாற்றியமைக்கும் சக்தியைக் கொண்டுள்ளது. உனது நாட்களுக்கு அது சக்தியூட்டி, நீ செய்கிற எல்லாச் செயல்களுக்கும் ஒரு உத்வேகத்தைத் தருகிறது. நீ தள்ளிப் போட்டுக் கொண்டிருந்த முக்கியமானவை எல்லாவற்றையும் கவனிக்கத் தொடங்குவாய். குழப்பத்திற்குள்ளும் நெருக்கடிக்குள்ளும் உன்னை இதுவரையில் இழுத்துக் கீழே தள்ளிக் கொண்டிருந்த அற்ப விஷயங்களுக்காக நேரத்தை வீணடிப்பதை நிறுத்திவிடுவாய்''.

ஜூலியன் மேலும் தொடர்ந்தார். ''இன்னும் நிறையச் செய்யவும், அதிகம் அனுபவிக்கவும் உன்னை வற்புறுத்திக் கொள். உனது கனவுகளை விரிவடையச் செய்வதற்கென உன் சக்தியைச் சேமித்து வை. ஆம், உனது கனவுகளை விரிவாக்கு. உனது மனம் என்னும் கோட்டையினுள், அளவற்ற ஆக்க சக்தியை வைத்துக்

கொண்டுள்ளபோது ஒரு சாமான்யமான, சராசரி வாழ்க்கையை ஏற்றுக் கொள்ளாதே. உனது மகத்துவத்தைத் திறந்து விடத் துணிவு கொள். அது உனது பிறப்புரிமை.''

''வெகு சக்தி வாய்ந்த செய்தி.''

''இதோ இன்னும் உள்ளது. **பல பேரையும் பிடித்துள்ள அதிருப்தி எனும் மனநோயை விரட்டியடிக்க ஒரு எளிமையான மருந்து உள்ளது.**''

''எனது கோப்பை இன்னும் காலியாகத் தான் உள்ளது'' என்றேன் நான் மென்மையான குரலில்.

''தோல்வி என்பதே நிகழமுடியாத ஒன்று என்பது போல நடந்து கொள் - உனது வெற்றி உறுதிப்படும். உனது குறிக்கோள்களைச் சாதிக்க முடியாது என்ற ஒவ்வொரு எண்ணத்தையும் அழித்துவிடு. அவை பொருள் சார்ந்தவையாக இருப்பினும் சரி, அருள் சார்ந்தவையாக இருப்பினும் சரி. துணிவுடன் இரு, உனது கற்பனைகளுக்கு எல்லைகள் எதையும் விதிக்காதே. உனது இறந்த காலத்தின் கைதியாக ஒருபோதும் இருக்காதே. உனது எதிர்காலத்தை நிர்மாணிக்கும் கட்டடக் கலைஞனாக இரு. அதன் பின்னர் நீ ஒரு போதும் பழைய மாதிரி இருக்கமாட்டாய்.''

நகரம் விழித்துக் கொள்ளத் தொடங்கியது. காலைப் பொழுது முழுமையாக மலர்ந்தது. ஒரு நாள் இரவு முழுவதும் தனது அறிவை இந்த ஆர்வமுள்ள மாணவனுடன் பகிர்ந்து கொண்ட பின்னர், எனது வயதற்ற நண்பர் இப்போது தான் சற்றே களைப்புடன் தோன்றலானார். ஜூலியனின் உடல் வலிமை, எல்லையற்ற சக்தி மற்றும் முடிவற்ற உற்சாகத்தைக் கண்டு நான் பெரு வியப்படைந்தேன். அவர் சும்மா பேசமட்டும் செய்யவில்லை, தான் பேசியதையே நடத்தியும் காட்டினார்.

''யோகி இராமனின் மந்திரக் கதையின் இறுதிப் பகுதிக்கு நாம் வந்துள்ளோம். நான் உன்னைப் பிரிந்து செல்லும் நேரம் வந்துவிட்டது. எனக்கு நிறைய வேலை உள்ளது. இன்னும் பலரை நான் சந்தித்தாக வேண்டும்'' என்றார் ஜூலியன்.

''நீங்கள் மறுபடி வந்து விட்டீர்கள் என்று உங்கள் நிறுவனக் கூட்டாளிகளிடம் சொல்லப் போகிறீர்களா?'' என்றேன் நான், தெரிந்து கொள்ளும் ஆர்வத்துடன்.

''பெரும்பாலும் மாட்டேன். அவர்கள் அறிந்திருந்த ஜூலியன் மான்டிலிலிருந்து நான் பெரிதும் வேறுபட்டுள்ளேன். அதே எண்ணங்களை நான் எண்ணுவதில்லை. அதே உடைகளை நான் அணிவதில்லை. அதே செயல்களைச் செய்வதில்லை. அடிப்படையிலே மாறிவிட்டுள்ள ஒருவனாக நான் இருக்கிறேன். அவர்கள் என்னை அடையாளம் கண்டு கொள்ளமாட்டார்கள்.''

''உண்மையிலேயே நீங்கள் ஒரு புதிய மனிதர் தான்,'' என்றேன் நான். சிவானாவின் பாரம்பரிய அங்கியை அணிந்து கொண்டு தனது முந்தைய வாழ்வின்

சிவப்பு நிற ஃபெராரிக்குள் அவர் உட்கார்ந்து செல்வதை மனக்கண்ணால் பார்த்த நான் உள்ளுக்குள் சிரித்துக் கொண்டேன்.

“ஒரு புதிய உயிருரு என்பது தான் அதை விடவும் சரியாக இருக்கும்.”

“என்னால் இதிலுள்ள வேறுபாட்டை பார்க்க முடியவில்லை,” என்று நான் ஒப்புக் கொண்டேன்.

“**இந்தியாவில் ஒரு பண்டைய முதுமொழி** உள்ளது. ‘நாம், ஆன்மீக அனுபவத்திற்கு உள்ளாகிக் கொண்டுள்ள மனித உயிர்கள் அல்ல. மாறாக, மனித அனுபவத்திற்கு உள்ளாகிக் கொண்டுள்ள ஆன்ம உயிர்கள்.’ இப்போது பிரபஞ்சத்தில் எனது பங்கை நான் உணர்ந்து கொண்டுள்ளேன். நான் என்னவாக இருக்கிறேன் என்பதைக் கண்டு கொண்டுள்ளேன். நான் இன்று இந்த உலகத்தில் இல்லை. இந்த உலகம் எனக்குள் இருக்கிறது.”

“அதை நான் சற்று நேரம் அசை போட்டாக வேண்டும்” என்று ஜூலியன் கூறுவது என்ன என்பதைப் புரிந்து கொள்ளாதவனாகக் கூறினேன்.

“எனக்குப் புரிகிறது, நண்பா. நான் கூறுவது பற்றி நீ தெளிவடையும் காலம் ஒன்று வரும். உனக்கு வெளிப்படுத்தியுள்ள கொள்கைகளை நீ பின்பற்றினால், ஞானத் தெளிவு பெறுவதற்கான பாதையில் நீ முன்செல்வது நிச்சயம். சுயநிர்வாகம் என்ற கலையை நீ கற்றுத் தேர்ந்து விடுவாய். வாழ்க்கை என்பது உண்மையில் என்ன என்பதை நீ உணர்ந்து கொள்வாய். எல்லையற்ற காலம் என்ற வண்ணத் திரையில் மின்னி மறையும் ஒரு சின்னஞ்சிறு புள்ளியாகத் தான் உனது வாழ்க்கை உள்ளது. நீ யார் என்பதையும் உனது வாழ்வின் இறுதிக் குறிக்கோள் என்ன என்பதையும் நீ தெளிவாகக் கண்டு கொள்வாய்.”

“அதாவது?”

“அது தான் சேவை செய்வதாகும். எத்தனை பெரிய வீட்டில் வசித்தாலும் எவ்வளவு நவீனமான காரை ஓட்டிச் சென்றாலும், உனது வாழ்வின் இறுதியில் நீ உன்னுடன் எடுத்துச் செல்லப் போவது உனது மனச்சாட்சி மட்டுமே. அதன் குரலைக் கேள். அது உனக்கு வழிகாட்ட அனுமதி. எது சரி என்று அதற்குத் தெரியும். வாழ்க்கையில் உனது இலட்சியமானது, இறுதியில் ஏதேனும் ஒரு வகையில் பிறருக்கான பலன் எதிர்பாராத சேவை தான் என்று அது உன்னிடம் சொல்லும். எனது சொந்த நெடும் பயணம் இதைத்தான் எனக்குக் கற்றுக் கொடுத்துள்ளது. இப்போது, சந்திப்பதற்கும், சேவை செய்வதற்கும், குணப்படுத்துவதற்கும் பல பேர் உள்ளனர். எனது வாழ்க்கைப் பணியானது, சிவானா முனிவர்களின் புராதன ஞானத்தை, அதைப் பெற்றுக் கொள்ள வேண்டிய அவசியம் உள்ள அனைவருக்கும் பரப்பி, அவர்கள் அதைப் பெறச் செய்வது தான். இது தான் எனது குறிக்கோள்.”

அறிவின் தீ. ஜூலியனுக்குள் அவரது பேரார்வத்தைத் தூண்டிவிட்டுள்ளது. என்னைப் போன்ற, அஞ்ஞானம் நிறைந்த ஒரு ஆன்மாவிற்குக் கூட, இது தெள்ளத் தெளிவாகத் தெரிந்தது. அவர் சொல்லிக் கொண்டிருந்தவற்றைப் பற்றி அவர் வெகு உணர்ச்சி வசப்பட்டிருந்தார். அதன் பால் அதீத ஈடுபாடு கொண்டவராகவும், தீவிர வேட்கை கொண்டவராகவும் இருந்தார். இதனால், அவரது உடல் தோற்றத்தில் கூட மாற்றம் தென்பட்டது. ஒரு வயதான, பலவீனமான வழக்கறிஞரின் தோற்றம் மறைந்து, உயிர்த்துடிப்பும், இளமை அழகும் கொண்ட ஒரு ஆணழகனாக அவர் தோன்றினார். இந்த மாற்றம் வெறும் அன்றாட உணவுப் பழக்கத்தின் மாற்றத்தினாலோ அல்லது, விரைவில் பலனளிக்க வல்ல உடற்பயிற்சித் திட்டத்தாலோ ஏற்படக் கூடியது அல்ல. கம்பீரமான அந்த மலைப்பகுதியின் உயரங்களிலே ஜூலியன் தற்செயலாகக் கண்டு கொண்ட இந்த விவரம் ஒரு மிக ஆழமான நிவாரணி ஆகும். காலங்காலமாக மனிதர்கள் தேடிக் கொண்டிருந்த இரகசியத்தை அவர் கண்டுபிடித்துவிட்டார். இளமை, மனநிறைவு மற்றும் மகிழ்ச்சிக்கான இரகசியத்தை விடவும் கூடுதல் மதிப்புள்ளது அது. ஜூலியன், ‘தான்’ என்பதன் இரகசியத்தைக் கண்டுபிடித்து விட்டிருந்தார்.

அத்தியாயம் 11 - செயல்பாட்டுச் சுருக்கம்

இரத்தினச் சுருக்கமாக ஜூலியனின் ஞானம்

குறியீடு

நற்பண்பு

❖ *உனது நேரத்தை மதி*

ஞானம்

❖ *நேரம், உனது மிகவும் அரிய கைப்பொருளாகும்.*

❖ *அதைப் புதுப்பித்துக் கொள்ள முடியாது.*

❖ *உனது பிரதான அம்சங்கள் மீது மையம் கொண்டு சமநிலையை நிலைநிறுத்து. உனது வாழ்வை எளிமையாக்கு.*

செய்முறைகள்

❖ *20 ன் புராதன விதிமுறை*

❖ *'முடியாது' என்று சொல்வதற்கான துணிவைக் கொள்.*

❖ *மரணப் படுக்கை மனோநிலை*

மேற்கோள்

மணலின் துகளைப் போல நேரம் நமது கையை விட்டு நழுவிச் சென்று விடுகிறது. அது ஒரு போதும் திரும்ப வருவதே இல்லை. மிக இளமைப் பருவத்திலிருந்து தமது நேரத்தை அறிவுடன் பயன்படுத்துபவர்கள், செழிப்பான, உருவாக்கவல்ல, நிறைவுதரும் வாழ்வைப் பெறுகிறார்கள்.

12

வாழ்வின் இறுதி இலட்சியம்

“உயிர் வாழ்வன ஒவ்வொன்றும், தனியாக வாழ்வதில்லை, தனக்கென்றும் வாழ்வதில்லை.”

“சிவானாவின் முனிவர்கள், நான் இதுவரையில் சந்தித்துள்ள மனிதர்களிலேயே மிகவும் இளமையானவர்கள் மட்டுமல்ல, சந்தேகமின்றி, மிகவும் கருணையுள்ளவர்களும் கூட. தான் ஒரு சிறுவனாக இருந்தபோது, உறங்கச் செல்வதற்கு முன்னர் அவரது தந்தை அவரிடம் வந்து, அவர் அன்றைய நாளில் செய்த நற்பணிகள் என்னென்ன என்று கேட்பது வழக்கம் என்று யோகி இராமன் என்னிடம் கூறினார். அன்றைய தினம் அவர் நற்பணி எதையும் செய்யவில்லை என்றால், அவரைப் போய் ஏதேனும் ஒரு கருணையான, தன்னலமற்ற பணி ஒன்றைச் செய்துவிட்டு வருமாறு பணிப்பார் என்றும், அதற்குப் பின்னரே அவர் உறங்கச் செல்ல அனுமதிக்கப்படுவார் என்றும் அவர் கூறினார்.”

இதைச் சொன்ன ஜூலியன், மேலும் தொடர்ந்து சொன்னதாவது, “ஞானம் பெற்ற வாழ்வின் மேன்மை நற்குணங்களிலே மிகவும் முக்கியமான ஒன்றை என்னால் உன்னுடன் பகிர்ந்து கொள்ள முடியும் என்றால் ஜான், அது இது தான்! எல்லா விஷயங்களும் முடிவுற்ற பின்னர், நீ என்ன தான் சாதித்திருந்த போதிலும், எத்தனை வீடுகள் உனக்குச் சொந்தமானவையாக இருப்பினும், உனது விட்டின் முன்னால் எத்தனை கார்கள் நின்று கொண்டிருந்த போதிலும், உனது வாழ்க்கையின் தரம் என்பது உனது பங்களிப்பின் தரத்தோடு பொருந்தியதாகத் தான் இருக்கும்.”

“யோகி இராமனின் கதையில் உள்ள புத்திளம் மஞ்சள் ரோஜா மலர்கள் இக்கருத்தை ஒட்டியுள்ளனவா?”

*“நிச்சயமாக, அந்தப் பூக்கள். **புராதன சீனப் பழமொழியாகிய**, ‘உனக்கு ரோஜாக்களைத் தருகின்ற கரங்களில் அவற்றின் மணம் கொஞ்சம் எப்போதுமே ஒட்டிக் கொண்டிருக்கும் என்ற கருத்தைக் குறிப்பவையாகும். இதன் பொருள் தெளிவாக உள்ளது. பிறரது வாழ்வை மேம்படுத்த நீ உழைத்தால், அந்தச் செயல்பாட்டின் போது உனது சொந்த வாழ்வையும் நீ மறைமுகமாக உயர்த்திக் கொள்கிறாய். ஒவ்வொரு நாளும், அவ்வப்பொழுது கனிவான செயல்களைச் செய்யும் பொழுது உனது வாழ்வும் அதிகச் செழுமையுள்ளதாகவும், கூடுதல்*

பொருளுள்ளதாகவும் அமைகிறது. ஒவ்வொரு நாளின் புனிதத் தன்மையை வளர்த்துக் கொள்ள வேண்டுமானால், ஏதேனும் ஒரு விதத்தில் பிறருக்குச் சேவை செய்."

"ஏதேனும் ஒரு தன்னார்வத் தொண்டுப் பணியில் நான் ஈடுபட வேண்டும் என்று சொல்கிறீர்களா?"

"அது ஒரு நல்ல துவக்கமாக இருக்கும். ஆனால், நான் கூறுவது அதையும் விட மேலும் தத்துவரீதியானது. இந்த பூமியில் உனது பங்கை ஆற்றுவதற்கு **ஒரு புதிய அணுகுமுறையை ஏற்றுக் கொள்** என்று நான் சொல்கிறேன்."

"எனக்கு புரியவில்லை. அணுகுமுறை என்ற சொல்லுக்கு சரியான விளக்கம் சொல்லுங்கள் - எனக்கு அச்சொல் உண்மையில் புரியவில்லை."

"ஒரு அணுகுமுறை என்பது ஒரு சந்தர்ப்பத்தையோ, அல்லது வாழ்க்கையையோ பார்ப்பதற்கான ஒரு புதிய விதமாகும். சிலர், வாழ்க்கையின் குவளையை, அது பாதி காலியாக இருப்பதாகப் பார்க்கிறார்கள். எதிலும் நல்லதையே காண்பவர்கள். அது பாதி நிரம்பியுள்ளதாகப் பார்க்கிறார்கள். ஒரே சந்தர்ப்பத்தை இவர்கள் இருவரும் வேறு வேறு விதமாகப் பார்க்கிறார்கள். ஏனெனில் அவர்கள் ஒரு வித்தியாசமான அணுகுமுறை மனதில் ஏற்றுக் கொண்டுள்ளார்கள். எனவே, ஒரு அணுகுமுறையை என்பது, உனது வாழ்வின் நிகழ்வுகளை அவை வெளியில் இருந்தாலும். உள்ளே இருந்தாலும், நீ எந்தக் கண்ணாடி வழியாகக் காண்கிறாய் என்பது தான்."

"எனவே. எனது குறிக்கோளுக்கு ஒரு புதிய அணுகுமுறையை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நீங்கள் சொல்லும்போது, எனது கண்ணோட்டத்தை நான் மாற்றிக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறீர்களா?"

"கிட்டத்தட்ட அது மாதிரி தான். உனது வாழ்க்கையின் தரத்தை நீ அதிரடியாக மாற்ற வேண்டுமானால், இந்த உலகில் நீ ஏன் இருக்கிறாய் என்பதற்கு ஒரு புதிய கண்ணோட்டத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இந்த உலகில் நுழையும்போது உன்னுடன் எதையும் கொண்டு வரவில்லை. அதேபோல, போகும் போதும் எதையும் எடுத்துக் கொண்டு போவதில்லை என்பதை நீ உணர வேண்டும். நிலைமை இவ்வாறு இருக்கையில், நீ இங்கு இருப்பதற்கு ஒரே ஒரு உண்மையான காரணம் தான் இருக்க முடியும்."

"அது என்ன?"

"உன்னையே பிறருக்குத் தருவதற்காக, ஒரு அர்த்தமுள்ள முறையில் பங்களிப்பைத் தருவதற்கு," என்றார் ஜூலியன். "உனக்குப் பிடித்தமான பொருள்களை நீ வைத்துக் கொள்ளக் கூடாது என்றோ அல்லது உனது வக்கீல் தொழிலை விட்டுவிட்டு, வறியவர்களுக்கு உனது வாழ்க்கையை அர்ப்பணிக்க வேண்டும் என்றோ நான் சொல்லவில்லை. ஆனால், இதே வழியை வெகு திருப்தியுடன் பின்பற்றியுள்ள சிலரை நான் சமீபத்தில் சந்தித்துள்ளேன். நமது உலகம்

பெரும் மாற்றத்தின் இடையில் உள்ளது. மக்கள், பணத்திற்குப் பதிலாக, 'அர்த்தம்' என்பதை ஒரு மாற்றாகத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். மனிதர்களை அவர்களது பணத்தை வைத்து எடைபோட்டுக் கொண்டிருந்த வழக்கறிஞர்கள். இப்போது, பிறர்பால் அவர்கள் கொண்டுள்ள ஈடுபாடு மற்றும் அவர்களது இதயத்தின் அளவைக் கொண்டு எடைபோட்டுக் கொண்டுள்ளனர். ஆசிரியர்கள் தமது பாதுகாப்பான வேலைகளை விட்டுவிட்டு, வறிய பகுதிகளில் வாழும், தேவையில் உள்ள சிறுவர்களின் அறிவு வளர்ச்சியை ஊக்குவிக்கத் தொடங்கியுள்ளனர். மாற்றத்திற்கான தெளிவான அறைகூவலை மனிதர்கள் கேட்டுவிட்டுள்ளனர். தாம் இங்கே ஒரு குறிக்கோளுக்காக இருக்கிறோம் என்பதையும், அதை நிறைவேற்ற உதவும் சிறப்பான திறமைகள் தமக்குத் தரப்பட்டுள்ளன என்பதையும் மக்கள் உணர்ந்து வருகின்றனர்."

"என்ன விதமான சிறப்பான திறமைகள்?"

"இன்று மாலை முழுவதும் நான் உன்னிடம் சொல்லி வந்துள்ள திறமைகள் தான் அவை. ஒரு அபரிமிதமான மூளைத்திறன், அளவற்ற சக்தி, எல்லையற்ற உருவாக்கும் திறன். ஒழுங்குமுறைக் கட்டுப்பாடு மற்றும் ஒரு வற்றாத ஊற்றான அமைதிநிலை. இந்தச் செல்வங்களையெல்லாம் கட்டவிழச் செய்து அவற்றைப் பொது நலனுக்குப் பயன்படுத்துவது தான் இங்குச் செய்யப்பட வேண்டிய செயலாகும்."

"நான் எவ்வாறு நல்லது செய்ய முடியும்?"

"உனது உலகம் பற்றிய பார்வையை மாற்றிக் கொள்வதை ஓர் பிரதான செயலாக எடுத்துக் கொள்ள வேண்டும் என்று தான் நான் சொல்கிறேன். உன்னை ஒரு தனி நபராகக் காண்பதை விட்டுவிட்டு, பொதுவின் ஒரு அங்கமாக நீ உன்னைக் காண வேண்டும்."

"ஆக, **நான் மேலும் கனிவும், மென்மையும் கொண்டவனாக ஆக வேண்டுமா?**"

"நீ செய்யக் கூடிய மிகவும் மேன்மையான, சிறப்பான செயல் என்பது பிறருக்குத் தருவது தான் என்பதை உணர்ந்து கொள். கீழை நாட்டின் மகான்கள் இதை, 'தான்' என்பதன் தளைகளை தள்ளித் தவிர்த்து விடுவது என்று கூறுகிறார்கள். உனது சுய - உணர்வுநிலையை இழந்து விட்டு, ஒரு உயர்வான நோக்கத்தின் மீது மையம் கொள்வதாகும். உன்னைச் சுற்றியுள்ளவர்களுக்கு மேலும் அதிகமாகத் தருவதாக இது இருக்கலாம். நீ தரப்போவது நேரமாகவோ, அல்லது சக்தியாகவோ இருக்கலாம். இவை இரண்டும் தான் உனது மிகவும் அதிக மதிப்பு வாய்ந்த ஆதாரங்கள். ஒரு ஆண்டு வேலையிலிருந்து விடுப்பு எடுத்துக் கொண்டு ஏழை மக்களுக்காக வேலை செய்வது போன்ற பெரிய வேலையாக இது இருக்கலாம். அல்லது, நெருக்கடியான போக்குவரத்து நேரத்தில் உன்னைத் தாண்டி ஒன்றிரண்டு கார்களைச் செல்ல அனுமதிப்பதான வெகு சிறிய வேலையாக இது இருக்கலாம். இது ஏதோ வெறும் இலட்சியவாதமான பிதற்றல் போலத் தோன்றலாம். ஆனால், உலகை ஒரு மேலான இடமாகச் செய்வதற்கு நீ முயலும் போது உனது வாழ்க்கை ஒரு

அற்புதமான பரிமாணத்திற்குள் நுழைந்து விடுகிறது என்பது நான் கற்றுக் கொண்டுள்ள ஒரு முக்கிய விஷயமாகும். நாம் பிறக்கும் பொழுது உலகம் மகிழ்ச்சி கொள்கிறது. ஆனால், நாம் அழுது கொண்டிருக்கிறோம். ஆனால், இறக்கும்பொழுது, நாம் மகிழ்ச்சி கொண்டும். உலகம் அழுது கொண்டும் இருக்குமாறு இறக்க வேண்டும் என்று யோகி இராமன் கூறினார்.''

அவர் கூறியதில் உண்மை இருந்தது எனக்குத் தெரிந்தது. சட்டத் தொழிலைச் செய்வதில், என்னைச் சற்றே சங்கடப்படுத்தத் தொடங்கிக் கொண்டிருந்த விஷயம் என்னவென்றால், என்னால் இயலும் என்று நானறிந்துள்ள வகையிலான பங்களிப்பை நான் செய்து கொண்டிருக்கவில்லை என்பது தான். பல நல்ல நோக்கங்களை முன்னே எடுத்துச் சென்ற, முன்னுதாரணங்களான வழக்குகளைக் கையாளும் பேறு எனக்குக் கிடைத்திருந்தது என்பது உண்மை தான். ஆனால், சட்டம், எனக்கு ஒரு அன்பின் பணியாக இருக்காமல், தொழிலாக மாறிவிட்டிருந்தது. சட்டக் கல்லூரியில், எனது சக மாணவர்கள் பலரையும் போல, நானும் ஒரு இலட்சியவாதியாக இருந்தேன். எங்களது விடுதி அறைகளில், பீட்சாவும் காயியும் சாப்பிட்டபடி, உலகத்தை மாற்றியமைக்கத் திட்டமிட்டோம் நாங்கள். அன்றிலிருந்து இன்றுவரை கிட்டத்தட்ட இருபதாண்டுகள் கடந்து சென்று விட்டன. மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான எனது பற்றியெரியும் ஆசை, இன்று எனது வீட்டிற்கான தவணைகளைச் செலுத்தவும், எனது ஓய்வுக்காலத்திற்கான சேமிப்பை உருவாக்கவுமான ஒரு பற்றியெரியும் ஆசையாக மாறிவிட்டிருந்தது. வெகு காலத்துக்குப் பின் முதல் முறையாக, என்னையே நான் ஒரு நடுத்தர வர்க்கக் கூட்டுக்குள் போட்டுக் கொண்டுவிட்டேன் என்பதைப் புரிந்து கொண்டேன். அந்தக் கூடு, என்னைப் பொதுவான சமுதாயத்திலிருந்து பாதுகாத்தது, மேலும் அது எனக்கு நன்றாகப் பழகியும் விட்டது.

''எனது கருத்தை வலியுறுத்துவதற்கென, ஒரு பழைய கதையை உனக்குச் சொல்கிறேன்'' என்று ஜூலியன் தொடர்ந்தார். ''ஒரு முதாட்டியின் கணவர் இறந்துவிட்டபின், அவள் தனது மகன், மருமகள் மற்றும் பேத்தியுடன் வசிக்கச் சென்றாள். காலம் செல்லச் செல்ல, முதியவளின் கண் பார்வை மங்கியது, கரங்களும் தளர்ந்துவிட்டன. காதும் சரியாகக் கேட்கவில்லை. சில நாட்கள், தனது தட்டிலிருந்த உணவை அவள் தவறிக் கீழே போட்டுவிட நேர்ந்தது. அவளது மகனும், மருமகளும் இதனால் பெரிதும் எரிச்சலுற்றனர். ஒரு நாள், போதும் போதுமென்று சொல்லி, துடைப்பங்கள் வைக்கும் இடத்திற்கு அருகில், முதியவளுக்குத் தனியாக ஒரு மேசையை வைத்து, அவளது உணவை, அவள் தனியாக அங்கே உண்ணுமாறு ஏற்பாடு செய்தனர். அங்கு அமர்ந்தபடி அவள் அவர்கள் உண்ணுவதைக் கண்ணீருடன் பார்ப்பாள். அவர்களோ அவளுடன் பேசுவது கூட இல்லை. ஒருவேளை ஒரு கரண்டியையோ முள் கரண்டியையோ கீழே போட்டுவிட்டால் அவளைத் திட்டவும் செய்தார்கள்.

''ஒரு நாள், இரவு உணவுக்கு முன்னால், பேத்தி தரையில் அமர்ந்து விளையாடிக் கொண்டிருந்தாள். 'என்ன செய்து கொண்டிருக்கிறாய்?' என்று அவளது

தந்தை கேட்டார். சிறுமியும், தனது கட்டைகளை அடுக்கியபடி, 'உனக்கும், அம்மாவுக்கும் நான் ஒரு சிறிய மேசையைச் செய்து கொண்டிருக்கிறேன். நான் பெரியவளானதும், நீங்கள் இருவரும் அங்கு உட்கார்ந்து சாப்பிடலாம்,' என்றாள். தந்தையும் தாயும் இதைக் கேட்டு வெகுநேரம் மௌனத்தில் உறைந்து போய்விட்டனர். பின்னர் அவர்கள் அழத் தொடங்கிவிட்டனர். தமது செயல்களின் கொடுந்தன்மையை உணர்ந்தவர்களாய், தாய்க்குத் தாம் உண்டாக்கிய சோகத்தையும் புரிந்து கொண்டனர். அன்றிரவு உணவின்போது, முதிய தாயை தமது பெரிய மேசையில் பழையபடி அவளுக்கு உரிய இடத்தில் அமரச் செய்தனர். அன்றிலிருந்து, அவளது எல்லா உணவுகளையும் அங்கேயே, தம் கூடவே, உண்ணச் செய்தனர். ஒரு சிறிய துண்டு உணவோ அல்லது கரண்டியோ கீழே விழுந்தாலும், அவர்கள் அதைப் பொருட்படுத்தவில்லை.

"இந்தக் கதையில், பெற்றோர் கெட்டவர்களல்ல. தமது கருணையெனும் விளக்கை ஏற்றுவதற்கான ஒரு சுடர் - தெரி உணர்வு - மட்டுமே அவர்களுக்குத் தேவைப்பட்டது. கருணையும், அன்றாடம் நிகழும் கனிவான செயல்களும் வாழ்வை மேலும் செழுமையாக்குகின்றன. அன்றைய தினம் நீ பிறருக்குச் செய்யக் கூடிய நல்ல செயல்களைப் பற்றி ஒவ்வொரு நாள் காலையிலும் தியானம் செய்ய நேரம் ஒதுக்கு. கொஞ்சமும் எதிர்பார்க்காத வேளையில் சொல்லப்படும் பாராட்டு மொழிகள். தேவையில் இருக்கும் நண்பர்களுக்குத் தரப்படும் அன்பான உதவிகள், காரணமே இல்லாமல் உன் குடும்பத்தினருக்குக் கொடுக்கும் சிறிய பரிசுப் பொருள்கள் ஆகியன ஒரு அற்புதமான வாழ்வை உருவாக்குபவையாகும். நட்புகளைப் பற்றிச் சொல்ல வேண்டுமானால், அவற்றை எப்போதுமே நல்ல நிலையில் வைத்திரு. மூன்று வலுவான நண்பர்களைக் கொண்டுள்ள ஒருவன் உண்மையிலேயே செல்வந்தனாவான்."

நான் தலையை ஆட்டி அதை ஒப்புக் கொண்டேன்.

"நண்பர்கள் வாழ்க்கைக்கு நகைச்சுவை, அழகு, கவர்ச்சி ஆகியவற்றைச் சேர்க்கிறார்கள். ஒரு பழைய நண்பனுடன் வயிறு குலுங்கச் சிரிப்பதைக் காட்டிலும் அதிகம் புத்துணர்வளிக்கும் விஷயம் எதுவுமில்லை. நீ மிகவும் தலைகனம் கொண்டு இருக்கும்போது நண்பர்கள் உன்னைத் தட்டிக் கீழே இறக்கி விடுகிறார்கள். நீ மிகவும் தீவிரமாக இருக்கும்போது உன்னை லேசாக்கிப் புன்முறுவல் பூக்க வைக்கிறார்கள். வாழ்க்கை உன்னைச் சோதனைகளில் ஆழத்தும் போதும், நிலைமை உண்மையில் இருப்பதை விடவும் மோசமாகத் தோன்றும் போதும், நல்ல நண்பர்கள் தான் உதவிக்கு வருகிறார்கள். நான் ஒரு வழக்கறிஞராக இருந்தபோது நண்பர்களுடன் செலவிட எனக்கு நேரம் கிடைக்கவில்லை. இப்போது உன்னைத் தவிர நான் தனியாக இருக்கிறேன். எல்லோரும் நன்றாக உறங்கிக் கொண்டு இருக்கும்பொழுது, காட்டில் உலாச் செல்வதற்கு உடன் வர எனக்கு யாருமே இல்லை. என்னை வெகுவாகப் பாதித்துள்ள ஒரு புத்தகத்தை வாசித்து முடித்துக் கீழே வைக்கும் பொழுது எனது கருத்துகளைப் பகிர்ந்து கொள்ள என்னுடன் எவருமே இல்லை. ஒரு அற்புதமான இலையுதிர்காலப் பகல்பொழுது எனது இதயத்துக்குச் சூடேற்றி என்னை

மகிழ்ச்சியால் நிரப்பும் பொழுது எனது இதயத்தைத் திறந்து காட்டுவதற்கு எனக்கு ஒருவரும் இல்லை.''

ஜூலியன், சட்டென்று தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டார். ''சரி, சரி, கடந்த காலத்திற்காக வருந்துவதற்கு எனக்கு நேரமில்லை. எனது சிவானா ஆசான்களிடமிருந்து, 'ஞானத் தெளிவு பெற்றுள்ள ஒருவனுக்கு ஒவ்வொரு விடியலும் ஒரு புதிய தினம் என்று நான் கற்றுள்ளேன்.''

''ஜூலியனை, எப்போதுமே ஒரு மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்ட சக்தி படைத்த சட்டத் தொழில் வீரராகத் தான் பார்த்துள்ளேன். ஒரு கராத்தே வீரர். அடுக்கி வைக்கப்பட்ட பலகைகளை வெறுங்கையாலேயே நொறுக்கித் தள்ளுவது போல. எதிர்க்கட்சி வக்கீலின் வாதங்களை நொறுக்கித் தள்ளுபவர் அவர். ஆனால், பல ஆண்டுகளுக்கு முன்னால் நான் பார்த்திருந்த மனிதர் இன்று முற்றிலும் மாறுபட்ட குணாம்சம் கொண்டவராக மாறிவிட்டிருந்தார். இன்று என் முன் நின்று கொண்டிருந்தவர் மென்மையாகவும், கனிவுள்ளவராகவும், அமைதியே உருவானவராகவும் இருந்தார். தான் யாராக இருந்தாரோ அவராக இருப்பதிலும், வாழ்க்கையெனும் நாடக மேடையில் தனது பாத்திரம் பற்றியும் வெகு தெளிவாக இருப்பது போலத் தோன்றினார்.

தனது கடந்த காலத்தின் வேதனையை ஒரு அறிவு நிரம்பிய முதிய ஆசானாகப் பார்த்தார். அதே சமயத்தில், அதுவரை நடந்து முடிந்திருந்த நிகழ்வுகளின் ஒட்டுமொத்தக் கூட்டை விடவும் தனது வாழ்க்கை அதிக மதிப்பு வாய்ந்தது என்பதையும் அவர் உணர்ந்திருந்தார்.

இனி வரப்போகும் நிகழ்ச்சிகள் பற்றிய எதிர்பார்ப்பில் ஜூலியனின் கண்கள் மின்னின. இந்த உலகின் அற்புதங்களின் எழில் பற்றிய அவரது மகிழ்ச்சியில் நானும் நுழைந்து, வாழ்வதற்கான கட்டுக்கடங்காத உற்சாகத்தில் சிக்கிக் கொண்டேன். செல்வந்தர்களின் வழக்கறிஞராக, நெத்தியடி கொடுத்து எலும்புகளை நொறுக்குபவராக இருந்த ஜூலியன் மான்டில். எவரைப் பற்றியும் கவலைப் படாதவராக இருந்தவர் இன்று பிறரைப் பற்றி மட்டுமே அக்கறை கொண்டுள்ள ஆன்மீக வாதியாக ஆகிவிட்டார். ஒருவேளை நானும் இப்போது நடக்கவுள்ள பாதையும் இது தான் போலும்!

அத்தியாயம் 12 - செயல்பாட்டுச் சுருக்கம்

இரத்தினச் சுருக்கமாக ஜூலியனின் ஞானம்

குறியீடு

நறுமணமுள்ள ரோஜா

நற்பண்பு

- *தன்னலமின்றிப் பிறருக்குச் சேவை செய்*

ஞானம்

- *உனது வாழ்வின் தரம். இறுதியில் உனது பங்களிப்பின் தரத்தை அடிப்படையாகக் கொண்டுள்ளது.*
- *ஒவ்வொரு நாளின் புனிதத்துவத்தை வளர்த்துக் கொள்ள, தருவதற்காக வாழு.*
- *பிறரது வாழ்வை மேம்படுத்துவதன் வாயிலாக, உனது வாழ்வு அதன் உச்ச கட்டப் பரிமாணங்களை எடுக்கிறது.*

செய்முறைகள்

- *அன்றாட கருணைச் செயல்களைச் செய்*
- *கேட்பவர்களுக்குக் கொடு*
- *மேலும் செழுமையான உறவுகளை வளர்த்துக் கொள்*

மேற்கோள்

நீ செய்யக்கூடிய மிக மிக மேன்மையான செயல் பிறருக்குத் தருவதாகும். உனது உயர் குறிக்கோளின் மீது கவனத்தை ஒருங்கிணையச் செய்.

13

வாழ்நாள் முழுதும் நிலைக்கும் மகிழ்ச்சிக்கான ஒரு இறவா இரகசியம்.

ஒரு சூரிய அஸ்தமனத்தின் அற்புதத்தையோ, நிலவின் எழிலையோ நான் ரசித்து அனுபவிக்கும் போது, எனது ஆன்மா படைத்தோனின் வழிபாட்டில் விரிகிறது.

- மகாத்மா காந்தி

ஜூலியன் சிவானாவில் தான் சேகரித்த அறிவை என்னுடன் பகிர்ந்து கொள்வதற்கென்று சென்ற இரவு என் வீட்டிற்கு வந்ததிலிருந்து இப்போது பனிரெண்டு மணி நேரத்திற்கு மேல் ஆகிவிட்டிருந்தது. அந்தப் பனிரெண்டு மணி நேரமும், ஒரு சந்தேகமும் இன்றி எனது வாழ்விலேயே மிகவும் முக்கியமானவை ஆகும். ஒரே சமயத்தில், கிளர்ச்சியுற்றும், ஊக்குவிக்கப்பட்டும், ஏன் விடுதலை பெற்றும் நான் உணர்ந்தேன். யோகி இராமனின் கதை மற்றும் அது குறிப்பிட்ட இறவாத மேன்மைக் குணங்கள் ஆகியவற்றால் வாழ்க்கை பற்றிய எனது கண்ணோட்டத்தை ஜூலியன் முற்றிலுமாக மாற்றிவிட்டார். எனது மனித உள் ஆக்க சக்திகளின் வெளி விளிம்பைக் கூட நான் இன்னும் கண்டு கொள்ளத் தொடங்கவில்லை என்பதை நான் உணர்ந்து கொண்டேன். வாழ்க்கை எனக்குக் கொடுத்திருந்த அன்றாடப் பரிசுகளை நான் வீணடித்துக் கொண்டிருந்தேன். களிப்பு, சக்தி மற்றும் நிறைவுடன் வாழ்வதிலிருந்து என்னைத் தடைசெய்து காயங்களைச் சமாளிப்பதற்கான வாய்ப்பை ஜூலியனின் ஞானம் எனக்குக் கொடுத்திருந்தது. நான் வெகுவாக நெகிழ்ந்து போயிருந்தேன்.

"நான் விரைவில் விடைபெற்றுக் கொள்ள வேண்டும். உனக்கும் கடமைகள் உள்ளன, எனக்கும் கவனிக்க எனது சொந்த வேலை உள்ளது" என்றார் ஜூலியன் மன்னிப்புக் கோரும் பாவனையில்...

"எனது வேலை இருக்கட்டும்."

"துரதிருஷ்ட வசமாக, என்னுடையது காத்திருக்காது," என்றார் அவர் புன்னகையுடன். "ஆனால், நான் செல்வதற்கு முன்னால் யோகி இராமனின் மந்திரக் கதையின் இறுதி அம்சத்தையும் வெளிப்படுத்தி விடவேண்டும். தோட்டத்தின் நடுவில் இருந்த கலங்கரை விளக்கத்தை நோக்கி நடந்த சுமோ வீரன். ஒரு இளஞ்சிவப்பு ஒயர் கேபிளாகிய இடையணி மட்டும் அணிந்து கொண்டிருந்தவர், தங்க நிற ஒளிவிடும் நிறுத்து கடிகாரத்தை எடுத்து அணிந்து கொண்டு, மயங்கி விழுந்தார் என்பது உனக்கு நினைவிருக்கக் கூடும். வெகு நேரத்திற்குப் பின்னால், அழகிய மஞ்சள்

ரோஜாக்களின் மணத்தை நுகர்ந்தபோது தன்னினைவு திரும்பினார். பின்னர், மகிழ்ச்சியுடன் துள்ளிக் குதித்தெழுந்தவர், அருகில் வைரங்கள் பதித்த ஒரு வளைந்து, நெளிந்து சென்ற நெடிய பாதை ஒன்றைக் கண்டு வியப்படைந்தார். பின்னர், நமது நண்பர் அப்பாதையில் நுழைந்து நடந்தார். அவ்வாறு செய்ததால் பின்னர் மகிழ்ச்சியுடன் வாழ்ந்தார்.''

''நடக்கக் கூடியதாகத் தான் தோன்றுகிறது'' என்று நான் சிரித்தபடி கூறினேன்.

''யோகி இராமன் நல்ல வளமான கற்பனையைக் கொண்டிருந்தார் என்று நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால், அவரது கதையில் ஒரு குறிக்கோள் உள்ளது. அதில் காணப்படும் கோட்பாடுகள் சக்தி வாய்ந்தவை மட்டுமல்ல, மிகவும் நன்றாக நடைமுறைப்படுத்தப்படக் கூடியவையும் ஆகும்.''

''உண்மை'' என்று நான் தயக்கமின்றி ஒப்புக் கொண்டேன்.

''வைரங்கள் நிறைந்த பாதையானது, ஞானத் தெளிவு பெற்ற வாழ்வின் இறுதி மேன்மைக் குணத்தை உனக்கு நினைவூட்டும். இக்கோட்பாட்டை உனது அன்றாட அலுவல்களில் நீ எடுத்துச் சென்றால், என்னால் விளக்கிக் கூறவியலாத வகையில் உனது வாழ்வை நீ செழுமையடையச் செய்வாய். வெகு சாதாரணமான விஷயங்களிலும் எழிலான அற்புதங்களை நீ காணத் தொடங்குவாய். உனக்குத் தகுதியான இன்பப் பெருக்கில் வாழ்வாய். எனக்கு நீ அளித்துள்ள வாக்குறுதியைப் பின்பற்றி, பிறருடன் இதை நீ பகிர்ந்து கொள்வதன் மூலம், அவர்களது வாழ்வையும் சாதாரணத்திலிருந்து அசாதாரணத்திற்கு மாற்றிக் கொள்ள உதவுவாய்.''

''இதைக் கற்றுக் கொள்வதற்கு எனக்குக் கொஞ்ச காலம் எடுக்குமா?''

''கொள்கை என்ற மட்டில், இது புரிந்து கொள்வதற்கு எளிமையானது தான். ஆனால், உனது விழித்திருக்கும் தருணங்களில் எல்லாம் இதைத் திறம்படப் பயன்படுத்துவதற்கு ஓரிரு வாரப் பயிற்சி தேவைப்படும்.''

''சரி, மேற்கொண்டு கேட்க நான் வெகு ஆவலாகத் துடித்துக் கொண்டிருக்கிறேன்.''

''இந்த ஏழாவது மற்றும் இறுதி மேன்மைக் குணமானது வாழ்வதைப் பற்றியது. உண்மையிலேயே மகிழ்ச்சி நிரம்பிய, நிறைவான பலன்தரும் வாழ்வானது, **'நிகழ் காலத்தில் வாழ்தல்'** என்ற ஒரு செயல்பாட்டின் வாயிலாக மட்டுமே வருவது என்று சிவானாவின் முனிவர்கள் கருதினர். கடந்த காலம் என்பது பாலத்துக்கு அடியில் ஓடிச் சென்று விட்ட வெள்ளம் போல என்பதையும், எதிர்காலம் என்பது உனது கற்பனையின் தொடுவானத்தில் தெரியும் சூரியன் போல என்பதையும் இந்த முனிவர்கள் அறிந்திருந்தனர். மிக மிக முக்கியமான காலம் 'இப்போது' என்பதாகும். அதில் வாழக் கற்றுக் கொள், அதை முழுவதுமாக ரசித்து அனுபவிக்கக் கற்றுக் கொள்.''

“நீங்கள் சொல்வதை என்னால் மிகச் சரியாகப் புரிந்து கொள்ள முடிகிறது. ஜூலியன், எனது நாளின் பெரும் பகுதியை என்னால் மாற்ற முடியாத கடந்த காலச் சம்பவங்களைப் பற்றி வருத்தப்படுவதிலோ அல்லது வரப்போவதைப் பற்றிக் கவலைப்படுவதிலோ தான் நான் செலவழிக்கிறேன். எனது மனதில், ஒரு கோடி எண்ணங்கள் என்னை ஒரு கோடித் திசைகளில் இழுத்துச் சென்ற வண்ணம் உள்ளன. இது மிகவும் எரிச்சலூட்டுவதாக, வெறுப்பூட்டுவதாக உள்ளது.”

“ஏன்?”

“இதனால் நான் களைத்துப் போகிறேன். மன நிம்மதி என்பதே இல்லாமல் போகிறது. இருந்த போதிலும் எனக்கு முன்னால் உள்ள ஒரு பணியே என் மனது முழுவதையும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்த அனுபவங்களும் எனக்கு உண்டு. பெரும்பாலும், ஒரு சட்ட ஆவணத்தைத் தயார் செய்ய வேண்டிய நெருக்கடியில் நான் இருந்தபோதும், வேறு எதையும் பற்றி எண்ணிப் பார்க்கக் கூட எனக்கு அவகாசம் இல்லாத போதும் இது ஏற்பட்டுள்ளது. மேலும், ‘நிச்சயம் வென்றாக வேண்டும்’ என்ற விருப்பத்துடன் நான் கால்பந்தாடிக் கொண்டிருந்த சமயங்களிலும் இதே உணர்வு ஏற்பட்டுள்ளது. அப்போது ஒரு சில நிமிடங்களிலே பல மணி நேரங்கள் கடந்து சென்று விடும். மிகவும் மையம் கொண்டு இருந்தது போன்ற உணர்வும் ஏற்படும். அப்போது நான் செய்து கொண்டிருந்த செயல் மட்டுமே முக்கியத்துவம் கொண்டிருந்த ஒரே விஷயம் என்பது போலத் தோன்றும். பிற எல்லாமே, கவலைகள், கடன் பாக்கிகள், சட்டத் தொழில் - எல்லாமே ஒரு பொருட்டல்ல. இதைப் பற்றி இப்போது யோசிப்பதானால், அந்தச் சமயங்களில் தான் நான் வெகு அமைதியாகவும் உணர்ந்துள்ளேன்.”

“உனக்கு உண்மையிலே சவால் விடும் ஒரு செயலில் ஈடுபடுவது தான் தனிப்பட்ட சொந்த திருப்திக்கான வெகு நிச்சயமான வழி. ஆனால், இங்கு உண்மையில் நினைவில் கொள்ளப்படவேண்டிய விஷயம் என்னவென்றால், ***மகிழ்ச்சி என்பது ஒரு பயணம், சென்றடைய வேண்டிய இடம் அல்ல.*** இன்றைக்காக வாழ். இதைப் போன்ற மற்றொரு நாள் திரும்ப வரப்போவதில்லை,” என்றார் ஜூலியன் தனது இருகரங்களையும் ஒன்று சேர்த்துக் குவித்தபடி. தான் இப்போது சொன்ன தகவலைத் தெரிந்து வைத்திருப்பதற்காக நன்றியுடன் இருப்பது போல அவரது தோற்றம் இருந்தது.

“யோகி இராமனின் கதையில் வரும் வைரங்கள் நிறைந்த பாதை குறிப்பிடும் கொள்கை இது தானா?”

“ஆம், வைரங்களின் பாதையில் நடந்து சென்றதன் மூலம் சுமோ வீரன் நிரந்தரமான மனநிறைவைப் பெற்றது போலவே, நீ இப்போது நடந்து செல்லும் பாதை வைரங்களும் பிற விலை மதிப்பற்ற செல்வங்களும் நிறைந்துள்ளது என்பதைப் புரிந்து கொள்ளத் தொடங்கியவுடனேயே, உனக்குத் தகுதியான வாழ்வை நீ பெறலாம். வாழ்வின் சிறிய இன்பங்களை அலட்சியம் செய்து விட்டு பெரிய

இன்பங்களைத் துரத்திக் கொண்டு போவதில் அதிகமான நேரத்தைச் செலவிடுவதை நிறுத்து. உன் ஓட்டத்தை நிதானப்படுத்து. உன்னைச் சுற்றியுள்ளவற்றின் எழிலையும் புனிதத் தன்மையையும் ரசித்து மகிழ்ச்சி கொள். இதைச் செய்வதற்கு உனக்கு நீயே கடமைப்பட்டிருக்கிறாய்."

"இதனால் **நான் எனது எதிர்காலத்திற்காகப் பெரிய இலக்குகளை அமைப்பதை நிறுத்திவிட்டு, இன்றையப் பொழுதின் மீது மனதைச் செலுத்த வேண்டும் என்று பொருள் கொள்ளலாமா?**"

"இல்லை," என்றார் ஜூலியன், திடமாக "நான் முன்பே கூறியபடி, ஒவ்வொரு உண்மையிலேயே வெற்றிகரமான வாழ்க்கைக்கும், எதிர்காலத்திற்கான இலக்குகளும், கனவுகளும் மிகவும் அத்தியாவசியமானவை. உனது எதிர்காலத்தில் தோன்றக் கூடியவை பற்றிய நம்பிக்கை தான் உன்னைக் காலையில் படுக்கையை விட்டு எழச் செய்கிறது. தொடர்ந்து வரும் நாட்களில் உற்சாக மூட்டுகிறது. இலக்குகள் வாழ்விற்கு சக்தியூட்டுகின்றன. எனது கருத்து இது தான். சாதனைகளுக்காக, சந்தோஷத்தைத் தள்ளிப் போடாதே. உனது நலன் மற்றும் திருப்திக்கு முக்கியமாக உள்ள விஷயங்களை, பின்னொரு சமயத்தில் செய்து கொள்ளலாம் என்று தள்ளிப் போட்டுவிடாதே. முழுமையாக வாழ்வதற்கான நாள் இன்று தான். நீ லாட்டரியில் வெற்றி பெறும் போதோ அல்லது ஓய்வு பெறும் போதோ அல்ல. வாழ்வதை ஒருபோதும் தள்ளிப்போடாதே."

ஒரு அனுபவம் வாய்ந்த வழக்கறிஞர், ஒரு வழக்கின் இறுதி வாதங்களைப் பேசும்போது உணர்ச்சி வசப்பட்டுத் தோன்றுவதைப் போல, ஜூலியன், அந்த அறையின் குறுக்கு நெடுக்காக நடைபோட்டார். "உனது நிறுவனம், வேலைப் பளுவைக் குறைப்பதற்காக இன்னும் சில இளம் வக்கீல்களை வேலைக்கமர்த்தும் போது தான் நீ ஒரு மேலான அன்பான, தாராளமான கணவனாக இருக்கப் போகிறாய் என்று எண்ணி உன்னையே ஏமாற்றிக் கொள்ளாதே. உனது வங்கிக் கணக்கு அதிகமாகும் பொழுது, உனக்கு இன்னும் அதிக ஓய்வு நேரம் கிடைக்கும் போது, உனது மனதை வளப்படுத்தி, உடலுக்குக் கவனம் செலுத்தி ஆன்மாவிற்கு ஊட்டம் தரத் தொடங்கலாம் என்று எண்ணிக் கொள்ளாதே. உனது முயற்சிகளின் பலனை ரசித்து அனுபவிப்பதற்கான நாள் இன்று தான். இந்தத் தருணத்தைப் பற்றிப் பிடித்துக் கொண்டு, உயரப் பறக்கும் வாழ்க்கையை வாழ்வதற்கான நாள் இன்று தான். உனது கற்பனைகளின் அடிப்படையில் வாழ்வதற்கும், உனது கனவுகளை அறுவடை செய்வதற்குமான தினம் இன்று தான். மேலும், ஒருபோதும், தயவு செய்து குடும்பம் என்னும் பரிசை மறக்காதே!"

"நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்று எனக்குச் சரியாகத் தெரியவில்லை, ஜூலியன்!"

"உனது குழந்தைகளின் பிள்ளைப் பருவத்தை வாழு," என்று வந்தது அவரின் பதில்.

“உம்?” என்றேன் நான் இந்த முரண்பாட்டைக் கேட்டுக் குழப்பமுற்றவனாய்.

“உனது குழந்தைகளின் பிள்ளைப் பருவத்தில் ஒரு அங்கமாக இருப்பதைக் காட்டிலும் அதிக அர்த்தமுள்ள விஷயங்கள் நிறைய இல்லை. உனது சொந்தப் பிள்ளைகளின் முதல் காலடியைப் பார்க்காமல் தவற விட்டுவிட்டு, வெற்றியின் படிகளிலே ஏறிச் செல்வதால் என்ன பயன்? ஒரு இனிமையான இல்லத்தை உருவாக்க நேரம் எடுத்துக் கொள்ளாமல் உனது பகுதியிலேயே மிகப் பெரிய வீட்டை வைத்துக் கொண்டிருப்பதால் என்ன பயன்? வெளி உலகில், நாடெங்கிலும் ஒரு சிறந்த வக்கீல் என்ற பெருமையைப் பெற்றும், உனது பிள்ளைகளுக்கு அவர்களது தந்தையைத் தெரியாது என்றிருந்தால் அதில் என்ன நலன்?” என்றார் ஜூலியன். “நான் என்ன சொல்லிக் கொண்டிருக்கிறேன் என்பது எனக்கு நன்றாகவே தெரியும்!” என்று உணர்ச்சி மிகுதியில் குரல் நடுநடுங்கக் கூறி முடித்தார்.

இந்த இறுதி உரை என்னைத் தரையில் தலைகுப்புற வீழ்த்திவிட்டது. எனக்கு ஜூலியனைப் பற்றித் தெரிந்ததெல்லாம், பிரபலங்களுடனும், செல்வந்தர்களுடனும் சுற்றித் திரிந்து கொண்டிருந்த ஒரு சூப்பர் ஸ்டார் வக்கீல் அவர் என்பது தான். அவரது நீதிமன்றத்துத் திறமைகளைப் போலவே, அழகிய இளமையான கவர்ச்சிக் கன்னிகளுடனான அவரது லீலைகளும் காவியம் போன்றவை தான். இந்த முந்நாள் கோடீஸ்வர மன்மதனுக்கு ஒரு தந்தையாக இருப்பது பற்றி என்ன தெரியும்? எல்லோருக்கும், எல்லாமாக இருந்து பிறர் அனைவரையும் திருப்திப்படுத்துவதற்குச் செய்யும் முயற்சியில் - ஒரு மகத்தான தந்தை, மற்றும் ஒரு வெற்றிகரமான வக்கீல் என, - நான் எதிர்கொள்ளும் அன்றாடப் போராட்டங்கள் பற்றி இவருக்கு என்ன தெரியும்? ஆனால், ஜூலியனின் ஆறாவது அறிவு எனது ஓடும் எண்ணங்களை எட்டிப் பிடித்துவிட்டது.

“நாம் ‘பிள்ளைகள்’ என்று அழைக்கும் பேறுகள் பற்றி எனக்கும் ஏதோ கொஞ்சம் தெரியும்,” என்றார் அவர் மிக மென்மையாக.

“நீங்கள் தோல்வியை ஒப்புக் கொண்டு சட்டத் தொழிலை விட்டு விலகுவதற்கு முன், நகரத்தின் மிகவும் தேடப்பட்ட தகுதி வாய்ந்த பிரம்மச்சாரி நீங்கள் என்று தான் நான் எப்போதும் நினைத்திருந்தேன்.”

“இந்த வேகமான, ஆவேசமான வாழ்க்கை முறை என்னைத் துரத்திப் பிடிப்பதற்கு முன்னால் எனக்குத் திருமணம் ஆகியிருந்தது என்று நீ அறிவாய்.”

“ஆம்.” ஒரு இரகசியத்தைத் தனது நெருங்கிய நண்பனிடம் சொல்வதற்கு முன் ஒரு சிறுவன் தயங்குவது போல, ஜூலியன் சற்றே தாமதித்தார்.

“உனக்கு தெரியாத ஒரு விஷயம் எனக்கு ஒரு மகள் இருந்தாள் என்பது தான்.”

“எனது வாழ்விலேயே நான் எப்போதும் கண்டிராத அத்தனை இனிமையான, மென்மையானவளாக அவள் இருந்தாள். அப்போதெல்லாம், நாம் முதல் முறை

சந்தித்தபோது, நீ எவ்வாறு இருந்தாயோ அதே போலத் தான் நானும் இருந்தேன் துடுக்காக, நிறைய இலட்சியங்களும், நிறைய நம்பிக்கையுடனும் - எவரும் விரும்பக்கூடிய எல்லாமே என்னிடம் இருந்தன. எனக்கு ஒரு பிரகாசமான எதிர்காலம், பிரமிப்பூட்டும் அழகுள்ள மனைவி மற்றும் அருமையான மகள் எல்லாமே என்னிடம் இருந்தன என்று பிறர் கூறினார்கள். இருந்தும், எனது வாழ்க்கை மிகச் சரியாக, சிறப்பாக இருந்தபொழுது, கணப்பொழுதில் அவையெல்லாமே என்னிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டுவிட்டன.''

திரும்பி வந்ததிலிருந்து முதல் முறையாக, ஜூலியனின் மகிழ்ச்சி ததும்பும் முகத்தை கவலையிருள் கப்பியது. ஒரு துளிக் கண்ணீர் அவரது செதுக்கிய வெண்கலம் போன்ற கன்னத்தில் உருண்டு சரிந்து அவரது ஆழ்ந்த சிவப்பு நிற அங்கியில் தெறித்தது. எனது நீண்ட கால நண்பனை மனம் திறந்து கண்டபோது பேச்சற்று நின்றேன் நான்.

''இதற்கு மேலும், நீங்கள் எதுவும் சொல்லத் தேவையில்லை, ஜூலியன்,'' என்றேன் நான், ஆறுதலளிக்குமாறு அவரது தோளை அணைத்தபடி.

''ஆனால், நான் சொல்லியாக வேண்டும் ஜான். எனக்கு முன்னர் தெரிந்த அத்தனை பேருக்குள்ளும் நீதான் மிகச் சிறந்த எதிர்காலத்தைக் கொண்டிருப்பவனாகத் தென்பட்டாய். நான் கூறியபடி, நான் இளமைக் காலத்தில் எவ்வாறு இருந்தேனோ, அதை நீ எனக்கு நினைவூட்டினாய். இப்போது கூட, உனது வாழ்க்கை மிக நன்றாக ஓடிக் கொண்டிருக்கிறது. ஆனால், நீ இப்போது வாழ்ந்து கொண்டிருப்பதைப் போலவே தொடர்ந்து வாழப் போகிறாய் என்றால் நீ பேராபத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறாய் என்பது உறுதி. எத்தனையோ அற்புதங்கள் கண்டு பிடிப்பதற்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன. எத்தனையோ நல்ல தருணங்கள் ரசித்து அனுபவிப்பதற்காக இன்னும் இருக்கின்றன என்று உனக்கு காட்டுவதற்காகத் தான் நான் இந்த இடத்திற்குத் திரும்பி வந்தேன்.''

''ஒரு குடிகாரன் தனது காரைத் தாறுமாறாக ஓட்டி என் மகளின் வாழ்க்கையை மட்டுமல்ல, இரண்டு வாழ்க்கைகளை அழித்துவிட்டான். ஒரு வெயில் காயும் அக்டோபர் மாதத்து மதிய வேளையில் அந்த விபத்து நிகழ்ந்தது. எனவே, மகளின் மறைவுக்குப் பின் என் வாழ்க்கையும் சிதையத் தொடங்கியது. விழித்திருந்த ஒவ்வொரு கணமும் நான் அலுவலகத்திலே செலவிடத் தொடங்கினேன். எனது உடைந்து போன இதயத்தின் வேதனைக்குச் சட்டத் தொழில் ஒரு மருந்தாக அமையும் என்று முட்டாள் தனமாக நம்பினேன். வீட்டிற்குத் திரும்புவதை எண்ணி அஞ்சி, அந்த இனிய நினைவுகளை மறுபடி தூண்டுவதற்கு அஞ்சிப் பல இரவுகள் அலுவலகத்திலேயே உறங்கினேன். எனது வேலை நன்கு முன்னேறினாலும் வீட்டு வாழ்க்கை குழப்பத்திலிருந்தது. சட்டக் கல்லூரியில் இருந்து எனது இணை பிரியாத துணையாக இருந்து வந்த என் மனைவி, வேலை மீது நான் காட்டிய வெறித்தனமான ஈடுபாட்டைக் காரணம் காட்டி என்னை விட்டுப் பிரிந்தாள். ஒட்டகத்தின் முதுகை ஒடித்த கடைசித் துண்டு வைக்கோலாக இது இருந்தது. எனது

உடல் நலன் சீர் கெட்டது. நாம் முதலில் சந்தித்தபோது இருந்த அந்த அவல வாழ்க்கைக்குள் நான் மேலும், மேலும் அதிகமாக அமிழ்ந்து புதைந்து போனேன். பணத்தால் வாங்கக் கூடிய எல்லாமே என்னிடம் இருந்தது. இது உண்மை. ஆனால், இதற்காக நான் எனது ஆன்மாவை விற்றுவிட்டேன். உண்மையிலேயே அதைத் தான் செய்தேன்,'' என்று உணர்ச்சி வெள்ளத்தால் குரல் தடுமாற ஜூலியன் பேசி முடித்தார்.

''ஆக 'உனது பிள்ளைகளின் பிள்ளைப் பருவத்தை வாழு' என்று சொல்லும்போது, அவர்கள் வளர்வதைக் கவனிக்க நேரம் ஒதுக்கும்படிச் சொல்கிறீர்கள் - அப்படித் தானே?''

''என் மகள், தனது தோழியின் பிறந்த நாள் விழாவிற்குக் காரில் சென்று கொண்டிருந்தபோது ஏற்பட்ட விபத்தில் மறைந்தாள் - இது நிகழ்ந்து இருபத்தியேழு ஆண்டுகள் சென்ற பின்னரும் கூட, எனது மகளின் சிரிப்பொலியைக் கேட்க, அவளுடன் தோட்டத்தில் ஓடிப் பிடித்து கண்ணா மூச்சி விளையாட, எனது கரங்களில் அவளை வாரியணைத்து, மென்மையான அவளது தங்க நிறக் கூந்தலை வருட, நான் என்ன விலையேனும் கொடுக்கத் தயார். அவள் போனபோது எனது இதயத்தில் ஒரு துண்டையும் தன்னுடன் எடுத்துச் சென்றுவிட்டாள். சிவானாவில், ஞானத்திற்கும், சுய தலைமைத்துவத்துக்குமான பாதையை நான் கண்டு கொண்ட பின்னர் எனது வாழ்க்கை ஒரு புதிய அர்த்தத்தால் ஊக்குவிக்கப்பட்டுள்ளது. இருந்தாலும், எனது மனத்திரையில் என் மகளின் ரோஜா நிற முகம் நிழலாடத் தான் செய்கிறது. மரங்களைப் பார்த்துக் கொண்டு, காட்டைக் காணத் தவறிவிடாதே ஜான். உன் குழந்தைகள் அற்புதமானவர்கள். அவர்களுக்கு நீ தரக் கூடிய மிகச் சிறப்பான பரிசு உனது அன்பு தான். அவர்களை மீண்டும் தெரிந்து கொள். உனது தொழிலின் தற்காலிக வெற்றிகளை விடவும் அவர்கள் தான் உனக்கு முக்கியம் என்று அவர்களுக்குத் தெரியப்படுத்து, வெகு விரைவில், தமது சொந்த வாழ்க்கைகளையும், குடும்பங்களையும் கட்டி வளர்த்துக் கொண்டு அவர்கள் போய்விடுவார்கள், அப்போது மிகத் தாமதமாகிவிடும், காலம் கடந்து விடும்.''

ஜூலியன் எனக்குள்ளே வெகு ஆழமாகச் சென்று தொட்டுவிட்டார். எனது வேலை மீது நான் கொண்டிருந்த ஈடுபாடும், வேகமும், எனது குடும்பத் தளைகளை மெல்ல மெல்லத் தளர்த்திக் கொண்டு வந்துள்ளதை நானும் கொஞ்ச காலமாகக் கவனித்து வந்துள்ளேன். ஆனால், அது ஒரு நீறு பூத்த நெருப்பாக கனன்று கொண்டிருந்தது. இப்போதைக்கு மெதுவாக எரிந்து கொண்டிருந்தாலும், தனது அழிக்கும் சக்தியை விரைவில் வெளிப்படுத்துவதற்கான சக்தியைத் திரட்டிக் கொண்டிருந்தது. எனது குழந்தைகளுக்கு நான் வேண்டியிருந்தேன் என்பது எனக்குத் தெரியும் - அவர்கள் இதை என்னிடம் சொல்லா விட்டாலும் கூட! ஆனால், ஜூலியன் வந்து இதை என்னிடம் சொல்வது எனக்கு வேண்டியிருந்தது. காலம் கைநழுவிச் சென்று கொண்டே இருந்தது. அவர்கள் வெகு வேமாக வளர்ந்து கொண்டிருந்தார்கள். எனது மகன் ஆன்டியும் நானும் கடைசியாக எப்போது

மீன்பிடிக்கச் சென்றோம் என்பது எனக்கு நினைவிலேயே இல்லை. அந்த மீன் பிடிக்கும் இடம் அவனது தாத்தாவிற்கு மிகவும் பிடித்தமான ஒன்று. சனிக்கிழமை காலைகளில் நாங்கள் அங்குச் செல்வது வழக்கமாக இருந்தது. இன்று அது வேறு யாரோ ஒருவரது நினைவுபோல மங்கித் தோன்றியது.

அதைப் பற்றி சிந்திக்கச் சிந்திக்க, அந்த எண்ணம் என்னைப் பலமாகத் தாக்கியது. எனது தொழில் முன்னேற்றத்துக்காக, கிறிஸ்துமஸ் நாடகங்கள், லிட்டில் - லீக் சாம்பியன் போட்டிகள், எல்லாமே விலை போய்விட்டன.

'நான் என்னதான் செய்து கொண்டிருக்கிறேன்?' என்று நான் சிந்தித்தேன். ஜூலியன் வர்ணித்த வழுக்குக் கயிற்றில் உண்மையிலேயே நான் வழுக்கிச் சென்று கொண்டிருந்தேன். அப்போதே, உடனேயே மாறுவதென்று நான் தீர்மானித்தேன்.

"**மகிழ்ச்சி என்பது ஒரு பயணம்**," என்று ஜூலியன் தொடர்ந்து பேசலானார். அவரது குரல் உரத்து ஒலித்தது. "மேலும் நீ செய்கின்ற தேர்வு அதுவாகும். செல்கின்ற பாதையில் உள்ள வைரங்களை ரசிக்கலாம் அல்லது உனது காலம் முழுவதும், வானவில்லின் முடிவில் உள்ள தங்கக் குடத்தை நோக்கி ஓடிக் கொண்டிருக்கலாம். ஆனால், இறுதியில் அந்தக் குடம் காலியாக இருப்பதைத் தான் காண்பாய். ஒவ்வொரு நாளும் உன் முன்னால் வருகின்ற சிறப்பான தருணங்களை அனுபவித்து மகிழ். ஏனென்றால், இன்று இந்த நாள் மட்டும் தான் உனக்குக் கிடைத்துள்ள நாளாகும்."

"இப்போதைய பொழுதில் வாழ்வதை எவராலும் கற்றுக் கொள்ள இயலுமா?"

"கண்டிப்பாக! உனது நடப்புச் சூழல் எதுவாக இருந்த போதிலும், உனது வாழ்வின் பலன்களை அனுபவிக்கவும். உனது வாழ்வை அன்றாட அருமணிகளால் நிரப்பிக் கொள்ளவும் உன்னைப் பயிற்றுவித்துக் கொள்ளலாம்."

"அது சற்றே அதிகமாக, 'என்றும் நல்லதை எதிர்பார்க்கும் மனோபாவம் போல இல்லையா? ஒரு மோசமான தொழில் முயற்சியால் தன்னிடம் இருந்த எல்லாவற்றையும் இழந்துவிட்ட ஒருவரின் கதி என்ன? அவர்கள் நிதி நிலைமையில் மட்டுமல்லாது மனநிலையிலும் முற்றிலும் உடைந்து போனவர்களாய் ஒன்றுமில்லாமல் நிற்கிறார்கள் என்று வைத்துக் கொள்வோம்".

"வாழ்க்கையை மகிழ்ச்சியாக, அற்புதத்தை உணரும் தன்மையுடன் வாழ்வதற்கும், உனது வங்கி கணக்கில் உள்ள தொகை அல்லது உனது வீட்டின் அளவு இவற்றுக்கும் தொடர்பே கிடையாது. இந்த உலகம் மகிழ்ச்சியற்று இருக்கும் கோடீஸ்வரர்களால் நிறைந்து உள்ளது. சிவானாவில் நான் சந்தித்த துறவிகள், ஒரு நல்ல நிதி நிலையை வைத்திருப்பதிலோ, அல்லது பிரான்சு நாட்டில் ஒரு கோடை வாசஸ்தலத்தை வாங்குவதிலோ, அக்கறை கொண்டிருந்தார்கள் என்றா எண்ணுகிறாய்?" என்று ஜூலியன் குறும்புடன் கேட்டார்.

“சரி, உங்கள் கருத்து எனக்குப் புரிகிறது.”

“நிறையப் பணம் பண்ணுவதற்கும், நிறைவான வாழ்க்கையைப் பண்ணுவதற்கும் இடையில் ஒரு மிகப் பெரிய வேறுபாடு உள்ளது. ஒரு நாளைக்கு ஐந்து நிமிடங்களேனும் நன்றியுடன் இருப்பதான கலையைப் பயிற்சி செய்வதில் செலவிடத் தொடங்கும்போது நீ தேடிக் கொண்டிருக்கிற செழுமையை வளர்த்துக் கொள்வாய். மிகவும் பின்தங்கிய நிதி நிலைமையில் இருப்பதாக நீ உதாரணம் காட்டுபவர் கூட, நன்றியுடன் இருப்பதற்குப் பலப்பல விஷயங்களைக் கண்டு கொள்ளலாம். அவரிடம் அவரது உடல் நலன், அன்பான குடும்பம் மற்றும் சமூகத்தில் நற்பெயர் ஆகியவை இன்னமும் உள்ளனவா என்று கேள். இந்த மகத்தான நாட்டின் குடிமகனாக இருப்பதில் மகிழ்ச்சி கொண்டுள்ளாரா என்று கேள். அவரது தலைக்கு மேல் ஒரு கூரை உள்ளதா என்று கேள். கடினமாக உழைப்பதற்கும், பெரிய கனவுகளைக் காண்பதற்குமான திறனைத் தவிர வேறு ஏதேனும் சொத்துகள் அவரிடம் இல்லாமல் போகலாம். இருந்த போதிலும், அவர் நன்றியாக உணர்வதற்கான சொத்துகள் மேற்சொன்னவை தான். நாம் எல்லோருமே நன்றியுடன் உணர்வதற்கான பல விஷயங்களைக் கொண்டுள்ளோம். இந்த அற்புதமான வேனிற்காலத்தில் ஜன்னலுக்கு வெளியே பாடிக் கொண்டுள்ள பறவைகள் கூட ஞானம் பெற்ற ஒருவருக்கு மகத்தான பரிசுகளாகத் தோன்றக் கூடும். ஜான், வாழ்க்கை நீ கேட்பதை எல்லாச் சமயங்களிலும் தருவதில்லை. ஆனால் உனக்கு தேவையானதை அது எப்போதுமே தருகிறது.”

“எனவே, எனது சொத்துக்களுக்காக, அவை பொருள் சார்ந்தவையாக இருந்தாலும், அருள் சார்ந்தவையாக இருந்தாலும், நான் இத்தருணத்தில் வாழும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்ளவேண்டுமா?”

“ஆம், உனது வாழ்வில் அதிகமான வாழ்தலைச் சேர்ப்பதற்கான சிறந்த வழி இது தான். ‘இப்போது என்பதை நீ ரசிக்கும் பொழுது, உனது விதியை வளர்த்தெடுக்கும் வாழ்வுச் சுடரை நீ தூண்டிவிடுகிறாய்.”

“எனது விதியை வளர்ப்பதா?”

“ஆம், நம் அனைவருக்கும் சில திறமைகள் தரப்பட்டுள்ளன என்று நான் முன்னர் கூறியுள்ளேன். இப்பூமியில் உள்ள ஒவ்வொரு நபரும் ஒரு மேதாவியாவார்.”

“என்னுடன் வேலை செய்யும் சில வக்கீல்களை நீங்கள் அறியமாட்டீர்கள்,” என்றேன் நான் கேலியாக.

“ஒவ்வொருவரும்!” என்று ஜூலியன் திடமாகச் சொன்னார். “நாம் செய்ய வேண்டிய வேலை என்று ஒன்று எல்லோருக்கும் உண்டு. அந்த உயர் பணியை, நோக்கத்தை, நீ கண்டு கொண்டு விட்ட அந்தத் தருணத்தில், உனது மேதைமை ஒளிவிடும், மகிழ்ச்சி உனது வாழ்வை நிரப்பும். அதை அவ்வாறு கண்டுகொண்டவுடன், உனது சக்தி அனைத்தையும் அதன் பால் செலுத்து. அந்த வாழ்க்கைக் குறிக்கோளுடன் நீ தொடர்பு கொண்டுவிட்டால், அது ஒரு ஆசானாக இருப்பதாக இருக்கலாம்

அல்லது ஒரு ஓவியனாக இருப்பதாக இருக்கலாம். உனது ஆசைகள் எல்லாம் சிரமம் எதுவுமின்றி நிறைவேற்றப்படும். அதற்காக நீ முயற்சி கூடச் செய்ய வேண்டியிருக்காது. இன்னும் உண்மையைச் சொல்வதானால், எவ்வளவு அதிகமாக நீ முயற்சி செய்கிறாயோ, உனது இலக்கை எட்டுவது அவ்வளவு கடினமான செயலாக ஆகிவிடும். மாறாக, நீ எதிர்பார்க்கும் செழிப்பு முழுமையாக வரும் என்ற நம்பிக்கையுடன் உனது கனவுகளின் பாதையைப் பின்பற்று. இது உன்னை உனது தெய்வீக இலக்குக்குக் கொண்டு சேர்க்கும். உனது விதியை வளர்ப்பது என்று நான் குறிப்பிடுவது இதைத் தான்.''

''நான் ஒரு சிறுவனாக இருந்தபோது எனது தந்தை ஒரு தேவதைக் கதையை எனக்கு விருப்பமுடன் வாசித்துக் காட்டுவார். அதன் பெயர், **'பீட்டரும் மந்திரக் கயிறும்'** என்பதாகும். பீட்டர் ஒரு துடுக்கான சிறுவன். எல்லோரும் அவரை விரும்பினார்கள் - அவனது குடும்பத்தினர், ஆசிரியர்கள், மற்றும் நண்பர்கள் அனைவருமே. ஆனால், அவனிடம் ஒரு சிறு குறை இருந்தது.''

''என்ன அது?''

''பீட்டரால் ஒரு போதும் தான் இருக்கும் அந்தக் குறிப்பிட்ட தருணத்தில் வாழ முடிந்ததில்லை. வாழ்க்கையின் ஓட்டத்தை ரசிக்க அவன் கற்றுக் கொள்ளவில்லை. அவன் பள்ளியில் இருந்தபோது, வெளியில் விளையாடுவது பற்றிக் கனவு கண்டான். வெளியில் விளையாடிக் கொண்டிருக்கும்போது, தனது கோடை விடுமுறையைப் பற்றி எண்ணமிடுவான். பீட்டர் இடைவிடாமல் பகல் கனவில் ஆழ்ந்திருந்தான். தனது நாட்களை நிரப்பிய சிறப்பான தருணங்களை ரசிப்பதற்கென அவன் நேரம் ஒதுக்குவதேயில்லை. ஒருநாள், தனது வீட்டிற்கு அருகில் இருந்த காட்டில் அவன் நடந்து சென்று கொண்டிருந்தான். களைப்புற்றவனாக ஒரு புல் தரையில் அமர்ந்தான். விரைவில் உறக்கத்தில் ஆழ்ந்தான். ஒருசில நிமிடங்கள் நன்கு உறங்கிய பின், யாரோ தனது பெயரைச் சொல்லி அழைப்பதைக் கேட்டான். அவனது தலைக்கு மேலிருந்து ஒரு கீச்சுக் குரல், 'பீட்டர்! பீட்டர்!' என்று கூவியது. மெதுவாகக் கண்களைத் திறந்து பார்த்தபொழுது அங்கு ஒரு பெண்மணி நின்று கொண்டிருந்ததைக் கண்டான். அவளுக்கு நூறு வயதுக்கு மேல் இருக்கும். தூய வெண்ணிறக் கூந்தல் ஒரு கம்பளியைப் போலத் தோள்வரையில் தொங்கிக் கொண்டிருந்தது. தனது சுருங்கிப் போன விரல்களில் அவள் ஒரு சிறிய பந்தை வைத்திருந்தாள். அந்தப் பந்தின் மீது ஒரு துளை இருந்தது. அதன் வழியே ஒரு தங்க நிறக்கயிறு தொங்கிக் கொண்டிருந்தது.

'பீட்டர்' என்றழைத்த அவள், 'இது தான்' உனது வாழ்க்கையின் கயிறு. இதை நீ கொஞ்சம் இழுத்தால், ஒரு சில கணங்களில் ஒரு மணிநேரம் ஓடிவிடும். இன்னும் கொஞ்சம் வேகமாக இழுத்தால், ஒரு சில நிமிடங்களில் முழு தினங்களே கடந்து சென்றுவிடும். உனது பலம் முழுவதையும் கொண்டு இழுத்தால், மாதங்கள், வருடங்கள் கூட, ஒரு சில தினங்களில் ஓடிச் சென்றுவிடும் என்றாள். இதைக் கேட்டு பீட்டர் மிகவும் உற்சாகம் கொண்டான். 'இதை நான் வைத்துக் கொள்ளலாமா?'

என்று கேட்டான். முதியவளும் குனிந்து மந்திரக்கயிறைக் கொண்ட பந்தை சிறுவனிடம் தந்தாள்.'

"மறுநாள், பீட்டர் தனது வகுப்பறையில் உட்கார்ந்திருந்தான். சலிப்புடன், மந்தமாக உணர்ந்த அவன், சட்டென்று தனது புதிய விளையாட்டுப் பொருளை நினைவு கூர்ந்தான். அதை எடுத்து தங்க நிறக் கயிறை நூலைக் கொஞ்சம் இழுத்தவுடன், தான் தனது வீட்டின் தோட்டத்தில் விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டான். மந்திரக் கயிறின் சக்தியை உணர்ந்து கொண்டவனாய் பீட்டர் வெறும் பள்ளிச் சிறுவனாக இருப்பது சலிப்பூட்டுவது என்று எண்ணி, ஒரு இளைஞனாக இருக்க விரும்பினான். எனவே, மீண்டும் பந்தை எடுத்து கயிறை வேகமாக இழுத்தான்.

திடீரென்று அவன் ஒரு இளைஞனாக ஆனான். அவனுக்கு ஒரு அழகான காதலி இருந்தாள். எல்சி என்பது அவள் பெயர். பீட்டருக்கு அப்போதும் திருப்தியில்லை. இருக்கின்ற பொழுதை ரசிக்கவும், தனது வாழ்வின் ஒவ்வொரு கட்டத்தின் எளிய இனிமைகளைக் கண்டு கொள்ளவும் அவன் கற்றுக் கொள்ளவே இல்லை. அதற்கு மாறாக, ஒரு வயது வந்த பெரியவனாக இருப்பது பற்றிக் கனவு கண்டான். எனவே, மீண்டும், கயிறை இழுத்தான் - பல ஆண்டுகள் ஒரு நொடிப் பொழுதில் கடந்து சென்றன. இப்போது, அவன் ஒரு நடுத்தர வயதுடைய மனிதனாக ஆகியிருந்தான். எல்சி அவனது மனைவியாக இருந்தாள். வீடு நிறையக் குழந்தைகள். ஆனால், பீட்டர் மற்றொன்றையும் கவனித்தான். அவனது கருநிற முடி வெளுக்கத் தொடங்கியிருந்தது. இளமை ததும்பிய அவனது அன்பான அன்னை இப்போது வயதாகித் தளர்ந்து போயிருந்தாள். இருந்தும் பீட்டரால் அந்தத் தருணத்திலும் வாழ முடியவில்லை. 'இப்போது' என்ற பொழுதில் வாழ, அவன் கற்றுக் கொள்ளவேயில்லை. எனவே, மறுபடியும் ஒருமுறை மந்திரக் கயிறைப் பிடித்து இழுத்துவிட்டு, மாற்றங்கள் ஏற்படுவதற்காகக் காத்திருந்தான்.

"இப்போது, பீட்டர் ஒரு தொண்ணூறு வயதுக்கிழவனாக ஆகிவிட்டிருந்தான். அவனது முடி இப்போது முழுவதும் நரைத்துப் பணிபோல வெண்மையாகியிருந்தது. அவனது அழகிய இளம் மனைவி எல்சி வயதாகிச் சில ஆண்டுகளுக்கு முன் மறைந்து விட்டிருந்தாள். அவனது அருமையான குழந்தைகள் வளர்ந்து தமது சொந்த வாழ்கையைத் தொடர வேறிடங்களுக்குச் சென்றுவிட்டனர். தன் வாழ்விலேயே முதல் முறையாக, வாழ்வின் அற்புதங்களை ஏற்று ரசிக்கத் தான் நேரம் எடுத்துக் கொள்ளவேயில்லை என்ற உண்மையைப் பீட்டர் உணர்ந்தான். தனது பிள்ளைகளுடன் அவன் ஒரு நாளும் மீன் பிடிக்கச் சென்றதில்லை. எல்சியுடன் நிலாவில் உலாச் சென்றதில்லை. ஒரு தோட்டத்தை உருவாக்கியதில்லை. அவனது தாயார் விரும்பி வாசித்த புத்தகங்களை வாசித்ததில்லை. இவற்றையெல்லாம் செய்வதற்குப் பதிலாக, வாழ்க்கையின் வழியாக வேக வேகமாய் ஓடினான். வழியில் நல்லதையெல்லாம் கவனிக்க நின்று நிதானிக்கவேயில்லை.

“இந்த விஷயத்தை உணர்ந்து கொண்டதும், பீட்டர் மிகவும் சோகமுற்றான். தான் சிறுவனாக இருந்தபோது நடந்து சென்ற காட்டுக்குள் சென்றான். அங்கு, அவன் சிறுவனாக இருந்தபோது சிறிய செடிகளாக இருந்தவை இன்று பிரம்மாண்டமான ஓக் மரங்களாக வளர்ந்து விட்டதைக் கண்டான். காடு, இயற்கை எழில் கொஞ்சும் சுவர்க்கமாக உருவெடுத்திருந்தது. ஒரு சிறிய புல் தரையில் படுத்த பீட்டர், அங்கேயே உறங்கிவிட்டான். ஒருசில நிமிடங்களில், தன்னை எவரோ, ‘பீட்டர், பீட்டர்’ என்று அழைப்பதைக் கேட்டான். சட்டென்று கண்விழித்து நிமிர்ந்தால், எதிரில் முன்னர் அவனிடம் மந்திரப் பந்தைக் கொடுத்த முதியவள், நின்றிருக்கக் கண்டான்.

‘எனது பரிசை நீ நன்றாக ரசித்து அனுபவித்தாயா?’ என்றாள் அவள்.

பீட்டர் இதற்கு நேரடியாகப் பதிலளித்தான்.

‘முதலில், அது வேடிக்கையாகத் தான் இருந்தது. ஆனால், இப்போது நான் அதை வெறுக்கிறேன். எனது முழு வாழ்க்கையும், அதை ரசித்து மகிழ வாய்ப்பளிக்காமல், எனது கண்முன்னே வேகமாக ஓடி முடிந்துவிட்டது. நிச்சயமாக அதில் சோகமான தருணங்களும், மகிழ்ச்சி நிறைந்த தருணங்களும் இருந்திருக்கும். ஆனால், இரண்டையும் அனுபவித்து உணர எனக்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டது. நான் எனக்குள்ளே மிகவும் காலியாக இருப்பது போல் உணர்கிறேன். வாழ்க்கை எனும் பரிசை நான் தவற விட்டுவிட்டேன்.’

‘நீ மிகவும் நன்றியற்றவன்,’ என்றாள் முதியவள். ‘இருந்தாலும், நான் உனக்கு ஒரு கடைசி வரத்தைத் தருகிறேன் கேள்.’

“பீட்டர் சற்று யோசித்துவிட்டு, அவசரமாகச் சொன்னான். ‘நான் மறுபடியும் பள்ளிச் சிறுவனாக மாறி எனது வாழ்க்கையை மீண்டும் வாழ விரும்புகிறேன்.’ இவ்வாறு கூறியதும் அவன் திரும்பவும் உறக்கத்தில் ஆழ்ந்தான்.

“இப்போது மற்றுமொரு முறை யாரோ அவனை அழைப்பதை உணர்ந்து ‘யாராக இருக்கும்?’ என்று எண்ணிக் கொண்டே கண்களைத் திறந்தான். இப்போது தனது அன்னை, தன் படுக்கைக்கருகில் நிற்பதைக் கண்டான். அவள் இளமை அழகுடன் பளிச்சென்றிருந்தாள். காட்டில் தான் சந்தித்த முதியவள் உண்மையிலேயே தனது இரண்டாவது விருப்பத்தைப் பூர்த்தி செய்துவிட்டாள் என்பதையும் தான் தனது பழைய வாழ்க்கைக்குத் திரும்பிவிட்டோம் என்பதையும் அவன் புரிந்து கொண்டான்.

“பீட்டர், சீக்கிரம் எழுந்திரு. நீ நிறையத் துங்குகிறாய். உனது கனவுகளால் நீ பள்ளிக்குத் தாமதமாகச் செல்லப் போகிறாய் – இந்த நிமிடம் நீ படுக்கையை விட்டு எழுந்தாக வேண்டும்” என்று அவனது அன்னை கடுமையாகப் பேசினாள். அவனும் துள்ளியெழுந்து, தான் விரும்பியவாறே வாழ்க்கையை வாழத் தலைப்பட்டான். ஒரு முழுமையான வாழ்வை, பெருமளவு மகிழ்ச்சியும், வெற்றிகளும், இன்பமான அனுபவங்களும் நிறைந்த வாழ்வை அவன் வாழ்ந்தான். ஆனால், இதெல்லாமே, அவன்

எதிர்காலத்தின் கனவில் நிகழ்காலத்தைத் தியாகம் செய்வதை நிறுத்திவிட்டு, ‘இப்போது’ என்ற தருணத்தில் வாழத் தொடங்கியதால் தான் சாத்தியமாயிற்று.”

“மலைக்க வைக்கும் கதை,” என்றேன் நான் மெல்லிய குரலில்.

“துரதிருஷ்டவசமாக, ஜான் ‘பீட்டரும் மந்திரக் கயிறும் என்ற கதை, வெறும் கதை தான். நிஜவுலகில் இருக்கும் நமக்கு, நமது வாழ்க்கையை முழுமையாக வாழ்வதற்கான மற்றொரு வாய்ப்பு நிச்சயமாகக் கிடைக்காது. வாழ்க்கையின் பலன்கள் பற்றிய விழிப்புணர்வு அடைவதற்கு இன்று உனது வாய்ப்பு - மிகவும் தாமதமாவதற்கு முன் அதைச் செய். நேரம் உண்மையில் மணல் துகளைப் போல உனது கைவிரலிடுக்கில் நழுவிச் சென்றுவிடும். இந்தப் புதிய நாள், உனது வாழ்வை வரையறுக்கும் தருணமாக இருக்கட்டும். உனக்கு உண்மையிலேயே என்ன முக்கியமாக உள்ளதோ அதில் உனது கவனத்தைச் செலுத்துவது என்ற முடிவை ஒரேயடியாக எடுக்கும் நாளாக இது இருக்கட்டும். உனது வாழ்வை அர்த்தமுள்ளதாக ஆக்குபவர்களுடன் அதிக நேரம் செலவிடுவது என்று தீர்மானித்துக் கொள். சிறப்பான தருணங்களை மதி, அவற்றின் சக்தியில் களியாட்டம் போடு. நீ எப்போதுமே செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டவற்றைச் செய். எப்போதும், ஏற வேண்டுமென்று ஆசைப்பட்ட மலையில் ஏறு அல்லது ட்ரம்பெட்டை வாசிக்கக் கற்றுக் கொள். மழையில் நடனமாடு, ஒரு புதிய தொழிலைக் கட்டியெழுப்பு, இசையை ரசிக்கக் கற்றுக் கொள். ஒரு புதிய மொழியைக் கற்றுக் கொள். உனது பிள்ளைப் பருவத்தின் களிப்பை மறுபடித் தூண்டிவிடு. சாதிப்பதற்காக, உனது சந்தோஷத்தைத் தள்ளிப் போடுவதை நிறுத்து. அதற்குப் பதிலாக, சாதிப்பதன் செயல்முறையை ஏன் ரசித்து மகிழக் கூடாது? உனது பழைய உயிர்த் துடிப்பை, துள்ளலை மறுபடி விழித்தெழச் செய். உனது ஆன்மாவைக் கவனித்துப் பேணத் தொடங்கு. இது தான் நிர்வனாவிற்கான பாதை.”

“நிர்வாணா?”

“அனைத்து உண்மையான ஞானம் பெற்ற ஆன்மாக்களின் இறுதிப் புகலிடம், ‘நிர்வானா’ என்று அழைக்கப்பட்ட ஒரு இடம் என்று சிவானா முனிவர்கள் கருதினார்கள். உண்மையில், இது ஒரு இடம் என்பதற்கும் மேலாக, நிர்வாணா என்பது ஒரு நிலை என்று முனிவர்கள் கருதினார்கள். தாம் அறிந்திருந்த எதையும் தாண்டி அப்பால் சென்றுவிட்ட ஒரு நிலை அது என்று உணர்ந்தார்கள். நிர்வானாவில் எல்லா விஷயங்களும் சாத்தியமே. அங்கே துன்பம் என்பதே கிடையாது. வாழ்வின் நடனம், தெய்வீக வடிவமைப்பில் மிகச் சரியாக நடத்தப்பட்டது. நிர்வாணாவை எட்டியவுடன், தாம் பூவுலகிலேயே சொர்க்கத்துக்குள் நுழைந்து விடுவோம் என்று அவர்கள் நம்பினார்கள். இதுவே அவர்களது இறுதிக் குறிக்கோளாக, இலக்காக, இருந்தது” என்று ஜூலியன் விளக்கினார். அவரது முகம் தெய்வீகக் களையுடன், சாந்தமுடன், ஒளிர்ந்தது.

“ஒரு தனிச்சிறப்பான காரணத்திற்காக நாம் இங்கே இருக்கிறோம்,” என்று அவர் ஒரு தீர்க்க தரிசியைப் போலக் கூறினார். “உனது வாழ்க்கைப் பணி என்ன என்பது பற்றித் தீவிரமாகச் சிந்தித்துப் பார். உன்னையே எவ்வாறு பிறருக்குக் கொடுக்கலாம் என்று யோசி. புவியீர்ப்பு விசையின் கைதியாக இருப்பதை நிறுத்து. இன்றைய தினம், உனது வாழ்வின் சுடரை ஏற்று, அது பெரும்பிழம்பாக ஒளிரட்டும். நான் உன்னுடன் பகிர்ந்து கொண்டுள்ள கொள்கைகளையும், செய்முறைகளையும் பயன்படுத்தத் தொடங்கு. என்னவாகவெல்லாம் இருக்க முடியுமோ அதுவாக இரு. நிர்வானா என்று அழைக்கப்படும் அந்த இடத்தின் கனிகளை நீயும் சுவைக்கும் காலம் வரும்.”

“இந்த ஞானம் பெற்ற நிலையை நான் எட்டிவிட்டேன் என்று நான் எப்படித் தெரிந்து கொள்வது?”

“அதில் நீ நுழைவதை உறுதி செய்ய சின்னஞ்சிறு அறிகுறிகள் தென்படும். உன்னைச் சுற்றியுள்ளவற்றில் ஒரு புனிதத் தன்மையைக் காண்பாய். ஒரு நிலாக்கற்றையின் தெய்வீகம், சுட்டெரிக்கும் கோடை நாளில் ஒளிரும் நீலவானத்தின் கவர்ச்சி, ஒரு டெய்சி மலரின் நறுமணம் அல்லது ஒரு குறும்புக்காரக் குழந்தையின் சிரிப்பு.”

“ஜூலியன், நீங்கள் என்னுடன் செலவிட்டுள்ள நேரம் வீணாகாது என்று நான் உங்களுக்கு உறுதியளிக்கிறேன். சிவானா முனிவர்களின் ஞானத்தின்படி வாழ்வதற்கு என்னை அர்ப்பணித்துக் கொள்வேன். மேலும், நான் கற்றுள்ள அனைத்தையும், உங்களது செய்தியால் பயன் அடையக் கூடியவர்களிடம் பகிர்ந்து கொள்வேன் என்ற எனது உறுதி மொழியைக் காப்பாற்றுவேன். எனது இதயத்திலிருந்து நான் பேசுகிறேன். உங்களுக்கு உறுதியளிக்கிறேன்,” என்றேன் நான் நிஜமாகவே எனக்குள் உணர்ச்சிப் பெருக்கு பொங்கத் துவங்குவதை உணர்ந்தபடி.

“முனிவர்களின் செழுமையான பரம்பரைச் சொத்தை உன்னைச் சுற்றிலும் உள்ள அனைவருக்கும் பரப்பு. இந்த அறிவினால் அவர்கள் விரைவில் பலன் பெறுவார்கள். நீ உனது வாழ்வின் தரத்தை மேம்படுத்திக் கொள்ளப் போவது போலவே அவர்களும் இதன் வாயிலாகத் தமது வாழ்வின் தரத்தை மேம்படுத்திக் கொள்வார்கள். மேலும், இதையும் நினைவில் வைத்துக் கொள் - பயணம் என்பது ரசித்து அனுபவிக்கப்பட வேண்டும். பாதையின் முடிவைப் போலவே பாதையும் நல்லதே!”

நான் அவரைத் தொடர்ந்து பேசவிட்டேன். “யோகி இராமன் ஒரு மகத்தான கதை சொல்பவர். ஆனால், அவர் என்னிடம் கூறிய ஒரு கதை மற்ற எல்லாவற்றையும் விட சிறப்பாக இருந்தது. அதை உன்னிடம் சொல்லட்டுமா?”

“கட்டாயம் சொல்லுங்கள்!”

“பல ஆண்டுகளுக்கு முன்னர், பண்டைய இந்தியாவின் ஒரு மாமன்னன் தனது மனைவியின் பால் கொண்டிருந்த ஆழமான காதல் மற்றும் நேசத்தின் அடையாளமாக ஒரு கட்டடத்தைக் கட்ட விரும்பினான். இதுவரையில் உலகம் கண்டிராத ஒரு கட்டடத்தை, நிலவு வீசும் வானில் தனித்து ஒளிரும் ஒரு கோபுரத்தை, பின்னர் பல நூற்றாண்டுகளுக்கும் மனிதர்கள் கண்டு வியப்புறும் வகையில் எழுப்பத் தீர்மானித்தான். எனவே, ஒவ்வொரு நாளும், அவனது பணியாளர்கள் கொளுத்தும் வெயிலில் கடுமையாக உழைத்து, கல் மீது கல்வைத்துக் கட்டடத்தை எழுப்பினார்கள். ஒவ்வொரு நாளாகக் கட்டடம் வடிவெடுக்கலாயிற்று. கொஞ்சம் கொஞ்சமாய், ஒரு நினைவுச் சின்னமாக, காதலில் கலங்கரை விளக்கமாக, ஆழ்ந்த நீலவானில் மேலெழும்பலாயிற்று. இறுதியில் இருபத்தியிரண்டு ஆண்டு கால கடும் உழைப்பால், இந்தத் தூய வெண்பளிங்கு மாளிகை முடிவுற்றது. நான் எதைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறேன் என்று யூகிக்க முடிகிறதா?”

“எனக்குத் தெரியவில்லையே!”

“தாஜ்மகால், உலகின் ஏழு அற்புதங்களில் ஒன்று,” என்றார் ஜூலியன். “எனது கருத்து எளிமையானது தான். இவ்வுலகில் உள்ள ஒவ்வொருவரும் இவ்வுலகின் அற்புதம். நம்மில் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு விதத்தில், நாயக, நாயகிகளாக இருக்கிறோம். நம்மில் ஒவ்வொருவருக்குள்ளேயும் அசாதாரணமான சாதனைகள் படைப்பதற்கான, இன்னமும் வெளிவராத சக்தியின் ஊற்று மறைந்து கிடக்கிறது. எல்லோருக்கும் அற்புதமான மகிழ்ச்சியும், நிலையான மனநிறைவும் கிடைக்கும் சாத்தியப்பாடுகள் உள்ளன. இங்கு செய்யப்பட வேண்டியவை எல்லாம், நமது கனவுகள் இருக்கும் திசை நோக்கி எடுத்து வைக்கப்பட வேண்டிய சின்னஞ்சிறு அடிகள் மட்டுமே. தாஜ்மகாலைப் போல அற்புதங்கள் நிறைந்து வழியும் ஒரு வாழ்க்கையானது. ஒவ்வொரு நாளும் கல் மீது கல்லாக மெல்ல மெல்லக் கட்டப்பட வேண்டிய ஒன்றாகும். சிறிய வெற்றிகள், பெரிய வெற்றிகளுக்கு வழிகோலுகின்றன. சின்னஞ்சிறிய ஆனால், ஒன்றன் மீது ஒன்றாக அமையும் மாற்றங்களும், மேம்படுத்துதல்களும், நேர்மறையான பழக்கங்களை உருவாக்கும். நேர்மறையான பழக்கங்கள் விளைவுகளை உருவாக்கும். நல்ல அந்த விளைவுகள் மேலும் அதிகமான சொந்த மாற்றத்தை நோக்கி உன்னை ஊக்குவிக்கும். ஒவ்வொரு நாளையும் அதுவே உனது இறுதி நாள் என்பது போல வாழத் தொடங்கு. இன்று தொடங்கி, அதிகமாகக் கற்றுக் கொள். அதிகமாகச் சிரி, நீ உண்மையில் எதைச் செய்ய விரும்புகிறாயோ அதைச் செய். உனது விதி உனக்கு மறுக்கப்படுமாறு செய்து கொள்ளதே. உனக்கு உள்ளே இருப்பதுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் உனக்குப் பின்னால் உள்ளதும், முன்னால் உள்ளதும் ஒரு பொருட்டே அல்ல.”

அடுத்து ஒரு வார்த்தை கூடப் பேசாமல், ஜூலியன் மான்டில், ஞானத் தெளிவு பெற்ற துறவியாக மாறிவிட்டிருந்த கோடீஸ்வர வழக்கறிஞர், எழுந்து நின்று என்னைத் தன் உடன் பிறவாச் சகோதரனைத் தழுவுவது போலத் தழுவிவிட்டு எனது முன்னறையை விட்டு வெளியேறினார். வெளியில் கோடை நாளின் தகிக்கும் வெயில்

கனமாகத் தாக்கிக் கொண்டிருந்தது. தனியாக அமர்ந்து எனது எண்ணங்களைச் சேர்த்து ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த நான், அவர் வந்து சென்றதற்கான ஒரே அடையாளத்தை வெறித்துப் பார்த்தேன். அந்த துறவித் தூதுவரின் வருகைக்கான சின்னம் எனக்கு முன்னால் இருந்த காப்பி மேசையின் மீது மௌனமாக உட்கார்ந்திருந்தது. அது அவரது காலியான கோப்பை.

அத்தியாயம் 13 - செயல்பாட்டுச் சுருக்கம்
இரத்தினச் சுருக்கமாக ஜூலியனின் ஞானம்

குறியீடு

வைரங்களின் பாதை

நற்பண்பு

❖ நிகழ்காலத்தை ஏற்றுக் கொள்

ஞானம்

❖ 'இப்போது' என்ற தருணத்தில் வாழு. நிகழ்காலத்தின் பரிசை ரசித்து அனுபவி.

❖ சாதனைக்காகத் திருப்தியை ஒருபோதும் தியாகம் செய்யாதே.

❖ பயணத்தை ரசித்த வண்ணம், ஒவ்வொரு நாளையும் உனது இறுதிநாள் போல வாழு.

செய்முறைகள்

❖ உனது குழந்தைகளின் குழந்தைப் பருவத்தை வாழு.

❖ நன்றியறிதலைப் பயிற்சி செய். உனது தலைவிதியை வளர்த்துக் கொள்.

மேற்கோள்

ஏதோ ஒரு தனிச் சிறப்பான காரணத்திற்காக நாம் இங்கே இருக்கிறோம். உனது கடந்த காலத்தின் கைதியாக இருப்பதை நிறுத்து உனது எதிர்காலத்தை நிர்மாணிப்பவனாக மாறு.

ஞானம் பெற்ற வாழ்வின் 7 இறவா நற்பண்புகள்

நற்பண்பு	குறியீடு
1. உனது மனதை வெற்றிகொள்	
2. உன் நோக்கத்தைப் பின் தொடர்ந்து செல்	கம்பீரமான கலங்கரை விளக்கம்
3. கைஜென்னைப் பயிற்சி செய்	சுமோ வீரன்
4. ஒழுங்குமுறைக் கட்டுப்பாட்டுடன் வாழ்	இளஞ்சிவப்ப ஒயர் கேபிள்
5. உனது நேரத்தை மதி	தங்க நிறத்து கடிகாரம்
6. தன்னலமின்றிப் பிறருக்குச் சேவை செய்	நறுமணமுள்ள ரோஜா
7. நிகழ்காலத்தை ஏற்றுக் கொள்	வைரங்களின் பாதை